இளங்கோ வாசகம்

[முதற் புத்தகம் - முதற் படிவம்]

முதற் பிரிவு

பேராசிரியர் ப. முருகன், M. A.
மாநிலக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை

முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புக்கள்: மே 1954, ஜூன், 1955

Approved by the Madras Text Book Committee for class use Vide Page 11 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19[illegible]-'54

சாந்தி பிரஸ், சென்னை - 1.

முன்னுரை

'இளங்கோ வாசகம்' என்னும் இந்நூல்வரிசை உரிமைபெற்ற நம் மாநில மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

'புதிய கல்விமுறைக்கேற்ற புதிய புத்தகம் வேண்டும்' என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத்தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு மேலும் கொடுக்கப்பெற்றுள்ளன. மாணவர்தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தினருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் காணிக்கையாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட்டக் கல்வி ஆணையாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

எண் ப

I. கடவுள் வாழ்த்து ...

II. நீதிப் பகுதி

1. நல்வழி ...
2. நன்னெறி ...
3. திருக்குறள் ...

III. வரலாற்றுப் பகுதி

தேசிங்கு மன்னன் நவாபுக்கு ஓலை அனுப்புதல் ...

IV. கதைப் பகுதி

தகாத ஆசை ...

V. வருணனைப் பகுதி

ஆலமரம் ...

VI. பலவகைப் பாடல்கள் ...

உரைநடைப் பகுதி

1. அன்புநெறி காத்த அண்ணல் ...
2. மைனாவும் முயலும் ...
3. கோபாலனும் கிராமவாசியும் ...
4. கொலம்பஸ் ...
5. பாட்டுக்கொரு புலவன் ...
6. சிறிய உயிர்களின் அரிய செயல்கள் ...
7. கப்பல் ஓட்டிய தமிழன் ...
8. தம்பி செய்த தந்திரம் ...
9. காய்கறித் தோட்டம் அமைத்தல் ...
10. நான் சிறுவனாக இருந்தபோது ...
11. இளங்கோவடிகள் ...

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

— சேக்கிழார்

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளும் களிப்பே,
காணார்க்கும் கண்டவர்க்கும்
கண்ணளிக்கும் கண்ணே,
வல்லார்க்கும் மாட்டார்க்கும்
வரமளிக்கும் வரமே,
மதியார்க்கும் மதிப்பவர்க்கும்
மதிகொடுக்கும் மதியே,
நல்லார்க்கும் பொல்லார்க்கும்
நடுநின்ற நடுவே,
நரர்களுக்கும் சுரர்களுக்கும்
நலங்கொடுக்கும் நலமே,
எல்லார்க்கும் பொதுவில்நட
மிடுகின்ற சிவமே,
என்னரசே, யான்புகலும்
இசையுமணிந் தருளே! 2

— இராமலிங்க சுவாமிகள்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தங் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே! 3

— தொண்டரடிப்பொடி ஆழ்வார்

கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்,
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே.

நாடீர் நாடோறும்
வாடா மலர்கொண்டு
பாடீர் அவன்நாமம்
வீடே பெறலாமே. 5

— நம்மாழ்வார்

ஆதியாய் அனாதியாகி அரும்பொருள் அனைத்துமாகிச்
சோதியாய்ச் சொரூப ஞானச் சுடரொளித் தீபமாகி
நீதியாய்த் திறமை யாகி நித்தியா நந்த மாகி
மாதிரப் புயமு மான மகம்மதே! வருகுவீரே! 6

— மஸ்தான் சாகிப்

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதஞ் சிந்தித் தேத்துவாம். 7

— கிருஷ்ணப் பிள்ளை

குறிப்புரை

1. சேக்கிழார் பெரிய புராணம் என்னும் ஓர் அரிய நூலை இயற்றியுள்ளார். இவர் குன்றத்தூர் என்னும் ஊரில் பிறந்தவர். நாயன்மார்களின் அரும்பெருஞ் செயல்கள் பெரிய புராணத்துள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஓதற்கு—சொல்லுதற்கு, வேணியன்—சடையை உடையவன். அலகில்—அளவில்லாத. நிலவு—சந்திரன். நீர்—கங்கை. அம்பலம்—வெட்டவெளி, ஞானசபை.

சந்திரனும் கங்கையும் சிவபெருமானின் திருமுடியில் உள்ளன என்பது குறிப்பிடப்பட்டது.

2. இராமலிங்க சுவாமிகள் சீர்திருத்தப் பாடல்கள் பாடுவதில் முதன்மையானவர். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடல்களின் தொகுப்புக்குத் திரு அருட்பா என்று பெயர்.

களிப்பு—இன்பம். மதி—அறிவு. நரர்—மனிதர். சுரர்—தேவர். பொதுவில்—ஞானசபையில். புகலும்—சொல்லும். இசை—புகழ். அணிந்தருள்—ஏற்றருள்க.

3. தொண்டரடிப்பொடி ஆழ்வார் ஒரு விஷ்ணு பக்தர். இவர் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர். இவர் பாடிய திருமாலை, திருபள்ளியெழுச்சி போன்ற பாக்களை நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் காணலாம்.

கமலம்—தாமரை. ஏறு—தலைவன். அச்சுதன்-அழிவே இல்லாதவன், திருமால். ஆயர்—இடையர்.

4. கழல் இணை—வீரக்கழல் அணிந்த இரு பாதங்கள். நண்ணும்—நெருங்கும். திண்ணம்—உறுதி.

5. வாடா—வாடாத. நாமம்—திருப்பெயர். வீடு—மோட்சம்.

6. மஸ்தான் சாகிப் ஒரு தமிழ்ப் புலவர், இது முகம்மதிய மதத்தை ஏற்படுத்திய நபிநாயகத்தின் மீது பாடப்பெற்ற பாடல் ஆகும்.

ஆதி—முதல். அநாதி—இறுதி. சொரூபம்—அழகு. ஞானம்—அறிவு. நித்தியம்—அழியாதது. புயம்—தோள்.

7. இது கிருஷ்ணப் பிள்ளை அவர்கள் இயற்றிய இரக்ஷணிய யாத்திரிகம் என்னும் நூலில் வரும் ஏசுநாதர் துதிப்பாடலாகும்.

நனி—மிக. ஊனம்—குறைவு. தீன ரட்சகன்—ஏழைகளைப் பாதுகாப்பவன், ஏசுநாதர். சித்தித்து—நினைந்து.

வினாக்கள்

1. சிவபெருமான் எப்படிப்பட்டவர் ?
2. இராமலிங்க சுவாமிகள் இறைவன் தன்மைகளை பற்றி என்னென்ன கூறுகின்றார் ?
3. 'அச்சுவை பெறினும் வேண்டேன்'—என்று கூ பவர் யார் ? அவர் எச்சுவை வேண்டாமென்கிறார் ? எ சுவையை விரும்புகிறார் ?
4. கண்ணனை எங்ஙனம் வழிபடுதல் வேண்டும் ?
5. மகம்மது நபியின் அருள் திறத்தைப் பற்றி ஆசி யர் என்ன கூறுகிறார் ?
6. ஏசுநாதர் யார் ? அவர் பெருமைகள் யாவை ?

பயிற்சி

1. சிலம்படி, அணிந்தருள், நகருளானே, மு முடையீர்,—இவற்றைப் பதம் பிரித்துக் காட்டுக.
2. களிப்பு+அருளும், கண்+அளிக்கும், என் அரசு, நாள்+தோறும்—இவற்றைச் சேர்த்து எழுதுக.
3. இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் உனக் மிகவும் விருப்பமானது எது? ஏன்? அதன் பொருளை உ நடைப்படுத்தி எழுதுக.
4. நலங் கொடுக்கும், வாழ்த்தி, உலாவிய, பவ வாய், நாடோறும்—இவற்றை உன் சொந்த வாக்கி களில் பயன்படுத்தி எழுதுக.
5. 'கடவுள் வழிபாடு' என்னும் தலைப்பில் ஒரு சி கட்டுரை எழுதுக.

II. நீதிப் பகுதி

1. நல்வழி

பாவம் நீக்கிப் புண்ணியம் செய்க

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்
[ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 1

கொடுத்தோர் உயர்குலத்தினர் ; கொடாதவர் இழிகுலத்தினர்

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

இன்ப துன்பம் தாமே வருவன

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா ;
பொருந்துவன போமினென்றால்போகா;—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 3

உயர்ந்தோர் பண்பு

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந்நாளும் அவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 4

அழுவதால் பயனில்லை

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ? மாநிலத்தீர்,—வேண்டா
நமக்கும் அது வழியே நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

வயிற்றின் துன்பம்

ஒருநா ளுணவை யொழியென்றால் ஒழியாய்!
இருநாளைக் கேலென்றா லேலாய்!—ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூர் என்வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது.

உழவுத்தொழில் சிறந்தது

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

பெருமைக்குக் காரணம்

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி.

சான்றோர் செல்வம்

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்.

நாம் நினைப்பதுபோல் நடப்பதில்லை

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும் :
அன்றி யதுவரினும் வந்தெய்தும்:—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் :
எனையாளு மீசன் செயல். 10

—ஔவையார்

குறிப்புரை

இது மக்கள் நடக்க வேண்டிய நல்ல வழிகளைக் கூறுவது. அதனால் இதற்கு நல்வழி என்று பெயர். இதன் ஆசிரியர் ஔவையார்.

1. ஆம்—ஆக்குதற்குரியது. போம்—போக்குதற்குரியது. எண்ணுங்கால்—ஆராய்ந்து பார்த்தால். சமயம்—மதம். ஈது ஒழிய—இதனைத் தவிர.

2. சாற்றுங்கால்—சொல்லும்போது. நெறி—வழி. இட்டார்—யாசித்தவருக்கு வழங்கியவர். பட்டாங்கில்—உண்மை நூலில்.

3. வாராத வருந்தி அழைத்தாலும் வாரா எனக் கூட்டுக. பொருந்துவன—ஊழ்வினையால் வந்துசேரக் கூடியவை. ஏங்கி—வருந்தி. நெடுந்தூரம்—நீண்டநாள் அல்லது நீண்ட நேரம். துஞ்சுவது—இறப்பது. இன்பம் வந்தால் அது கருதி நாம் மகிழவும் கூடாது; துன்பம் வந்தால் அது கருதி நாம் வருந்தவும் கூடாது.

4. பெருக்கு—வெள்ளம். அற்று—வற்றிப்போய். நல்கூர்ந்தார்—வறுமையுடையவர். ஏற்றவர்க்கு—யாசித்தவர்க்கு. இசைந்து—விரும்பி. இசைந்து இல்லை என மாட்டார் எனக் கூட்டுக.

5. மா—பெரிய. நமக்கும் அதுவழியே—நமக்கும் அம்மரணமே வழியாகும்.

6. ஏல்—ஏற்றுக்கொள். நோ—துன்பம்.

7. விழும் அன்றே—அழிந்து விடுமல்லவா? ஒப்பு—சமம். பணி—தொழில். பழுது—குற்றம். கண்டீர்—முன்னிலை யசை.

8. நீர்மை—தன்மை. மாறா—நீங்காத. வையகம்—உலகம்.

9. கற்று+ஆ—கற்ரு. கரவாது—ஒளியாது.
10. எய்தும்—வந்து சேரும்.

வினுக்கள்

1. நல்வழி—இதன் பெயர்க் காரணம் கூறுக. இதன் ஆசிரியர் யார்?
2. உயர்ந்த குலத்தோர் யார்? இழி குலத்தோர் யார்?
3. மாந்தர் தொழில் யாது?
4. நல்ல குடியில் பிறந்தவர் இயல்பு யாது?
5. வயிற்றின் கொடுமைகள் யாவை?
6. உழவுத் தொழில் எவ்வாறு சிறந்ததாகும்?
7. எவை எவை எவ்வெவற்றுக்கு இன்றியமையாதவை?
8. கற்ருரைப் போன்றவர் யார்?
9. ஈசன் செயல்கள் யாவை?

பயிற்சி

1. ஈதொழிய, தீதொழிய, வேறில்லை, உலகூட்டும், விழுமன்றே—இவற்றைப் பிரித்துக் காட்டுக.
2. ஐந்தாவது செய்யுளின் ஈற்றடியைப் பதம் பிரித்துக் காட்டுக.
3. ஆண்டாண்டு தோறும், அழுது புரண்டாலும், இரந்தழைப்பார், போமின், சாற்றுங்கால்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. நன்னெறி

அன்பே அனைத்தினும் சிறந்தது

இல்லானுக் கன்பிங்(கு) இடம்பொருள் ஏவல்மற்(று)
எல்லா மிருந்துமவற்(கு) என்செய்யும்?—நல்லாய்,
மொழியிலார்க் கேது முதுநூல்? தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு? 1

இன்சொல்லின் சிறப்பு

இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
ததிர்வளையாய்! பொங்கா(து) அழற்கதிரால் தண்
கதிர்வரவால் பொங்குங் கடல். [ணென் 2

தக்கார்க்குக் கொடுத்திடுக

தக்கார்க்கே ஈவர்; தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக்(கு) இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளிப்
புல்லுக்(கு) இறைப்பரோ போய்? 3

சினத்தை நீக்கவேண்டும்

உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரை தான்பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு. 4

கல்விச் செருக்கு வேண்டாம்

கடலே அனையம்யாம் கல்வியா லென்னும்
அடலே றனைய செருக்காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 5

—சிவப்பிரகாச சுவாமிகள்

குறிப்புரை

நன்மை+நெறி=நன்னெறி; மக்கள் நடக்கவேண்டிய நல்ல வழிகளைத் தெரிவிப்பது. இதன் ஆசிரியர் சிவப் பிரகாச சுவாமிகள். இவர் உதாரணங்களை அமைத்துச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர். இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு ஆகும்.

1. அன்பு இங்கு இல்லானுக்கு எனக் கூட்டுக.

மொழி—பேச்சு. மொழியிலார்—ஊமைகள். விழியிலார்க்கு—குருடர்க்கு. ஊமைகளுக்கு மூதுநூல் பயன் படாது; குருடர்களுக்கு விளக்குப் பயன்படாது. மற்று—அசை.

2. இருநீர்—மிக்க நீரையுடைய கடல். வியனுலகம்—அகன்ற உலகம். வன்சொல்—அன்பு இல்லாத கடுஞ்சொல்லால். அதிர்வளையாய்—ஒலிக்கின்ற வளையலை யணிந்த பெண்ணே! அழல்—நெருப்பு. கதிர்—கிரணங்கள். தண்மை—குளிர்ச்சி. கடல் சூரியனின் வெம்மை மிக்கக் கிரணங்களால் பொங்காது; ஆனால் குளிர்ச்சி மிக்க சந்திரனின் கிரணங்களால் பொங்கும்.

3. தக்கார்—மேன்மை பொருந்தியவர், உத்தமர்.

4. உள்ளம்—மனம். தடங்கரை—விசாலமான கரை.

5. அடல்—வலிமை. ஏறு—ஆண் சிங்கம். முனிக்கு அரசு—முனிவர்களுக்கெல்லாம் அரசராகிய அகத்திய முனிவர். முழங்கும்—ஒலிக்கும். பனிக்கடல்—குளிர்ச்சி மிக்கக் கடல்.

வினாக்கள்

1. அன்பு எப்படி இன்றியமையாததாகும்? இதற்குக் காட்டப்பட்ட உவமையை விளக்கி எழுதுக.
2. இன்சொல்லின் சிறப்பு யாது?
3. விழுமியோர் யாருக்கு உதவுவர்? எதுபோல?
4. சிறந்த குணமாவது யாது?
5. முனிக்கரசு யார்? அவரால் உணர்த்தப்படும் நீதி யாது?

பயிற்சி

1. கீழ்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

அழல், தண்மை, வியனுலகம், முது நூல்.

2. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களைக் கொண்டு நிரப்புக.

(அ) ——— இல்லானுக்கு என்ன இருந்தாலும் பயனில்லை.

(ஆ) உலகத்தவர் ——— அன்றி ——— என்றும் மகிழமாட்டார்கள்.

(இ) சந்திரன் கிரணங்களால் ——— பொங்கும்.

(ஈ) ——— கடலையும் குடித்தார்.

3. முதற் செய்யுளில் உள்ள உவமான உவமேயங்களைத் தனித்தனியே எடுத்து எழுதுக.

3. திருக்குறள்

(அரசியலாரால் குறிப்பிடப் பெற்றவை)

அகர முதல எழுத்தெல்லாம் : ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

அறத்தினூங்(கு) ஆக்கமும் இல்லை ; அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 2

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல். 3

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 4

விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று. 5

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம். 6

நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 7

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போ லமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 8

அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 9

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 10

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 11

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்(து)
அழுக்கா றிலாத இயல்பு. 12

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு ? 13

தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 14

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 15

நல்லா(று) எனினும் கொளல் தீது : மேல்உலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 16

தோன்றிற் புகழொடு தோன்றுக : அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 17

புறந்தூய்மை நீரான் அமையும் ; அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். 18

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க ; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 19

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 20

கற்க கசடறக் கற்பவை : கற்றபின்
நிற்க அதற்குத் தக. 21

எண்ணென்ப ; ஏனை எழுத்தென்ப : இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 22

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் : அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 23

அறிவுடையார் எல்லாம் உடையர் : அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 24

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 25

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் : மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. 26

வெள்ளத் தனைய மலர்நீட்டம் : மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு. 27

நெடுநீர், மறவி, மடி, துயில் நான்கும்
கெடு நீரார் காமக் கலன். 28

முயற்சி திருவினை ஆக்கும் : முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 29

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 30

கருவியும், காலமும், செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட(து) அமைச்சு. 31

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 32

பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 33

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 34

குணமும், குடிமையும், குற்றமும், குன்ரு
இனனும் அறிந்தியாக்க நட்பு. 35

கனவினும் இன்ஞது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 36

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் ; காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 37

தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 38

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 39

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 40

— திருவள்ளுவர்

குறிப்புரை

திருவள்ளுவர் இரண்டடிப் பாக்களால் அரிய செய்திகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். திருக்குறளைத் தமிழ் வேதம் என்றும் கூறுவர். திருக்குறளிற் கூறப்பட்டுள்ள நீதிகள் எல்லாக் காலத்துக்கும் எல்லாத் தேசத்தினருக்கும் பொருத்தமானவை. திருவள்ளுவர் ஏறக்குறைய 1,800 ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர்.

1. அகர முதல—'அ' என்னும் எழுத்தை முதலாக உடையவை. முதற்று—முதலாக உடையது.

2. அறத்தின் ஊங்கு—தருமத்தைவிட. ஆக்கம்—உயர்வு.

3. என் கோற்ருன் கொல்?—என்ன தவம் செய்தானே?

4. என்பும்—எலும்பாகிய உடம்பும். உரியர்—(உதவி புரிவதற்கு) சொந்தமாக்கிக் கொள்வர்.

5. விருந்து—விருந்தினர். புறத்தது ஆ—(தன் வீட்டின்) வெளியில் இருக்க. சாவா மருந்து—அமுதம்.

6. அமர்ந்து—விரும்பி. அகத்தான் ஆம்—உள்ளத்தோடு பொருந்திய.

7. நன்றி—பிறர் செய்த உபகாரம். நன்று அல்லது—தீமை.

8. சமன் செய்து—சமப்படுத்தி. சீர் தூக்கும்—எடையைக் காட்டும். கோல்—தராசு. அமைந்து—நடுவு நிலைமையில் பொருந்தி. ஒருபால்—ஒரு பக்கத்தில். கோடாமை—மாறுபாடு கொள்ளாமை. சான்றோர்—கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்.

9. உய்க்கும்—கொண்டு சேர்க்கும். ஆர் இருள்—நிறைந்த இருளாகிய நகரம்.

10. விழுப்பம்—மேன்மை. ஓம்பப்படும்—பாதுகாக்கப்படும்.

11. அகழ்வாரை—தன்னைத் தோண்டுபவரை. தலை—முதன்மையான தருமம்.

12. ஒழுக்காறு—ஒழுக்க நெறி. அழுக்காறு—பொறாமை.

13. ஏதிலார்—அயலாருடைய. காண்கிற்பின்—ஆராய்ந்தால். மன்னும்—நிலைபெற்ற.

14. தீய பயத்தலான்—துன்பம் உண்டாக்குவதால்,

15. ஊருணி—ஊரில் உள்ளார் தண்ணீர் உண்ணும் குளம். உலகு—உலகநடை. திரு—செல்வம்.

16. நல்லாறு—நல்ல வழி. (நன்மை+ஆறு.) கொளல்—கொள்ளுதல்.

17. தோன்றின்—பிறந்தால். புகழொடு—புகழுக்குக் காரணமாகிய குணத்தோடு.

18. புறந்தூய்மை—உடல் சுத்தம். அகந்தூய்மை—மனச் சுத்தம்.

19. சினம்—கோபம். காவாக்கால்—காவாவிடில்.

20. ஈனும்—தரும். கோள்—துணிவு, கொள்கை.

21. கசடு—குற்றம். அதற்குத் தக—அந்நூல்கள் கூறும் நெறிக்குத் தக்கபடி.

22. எண்—கணக்கு. என்ப—என்று கூறப்படுவன. எழுத்து இலக்கணம். என்ப—எனக் கூறுவர்.

23. செவிச் செல்வம்—கேள்விச் செல்வமாகிய அறிவு. தலை—முதன்மையானது.

24. எல்லாம்—எல்லாச் செல்வமும். இவர்—இல்லாத வறியர்.

25. எரி—நெருப்பு. வைத்தூறுபோல—வைக்கோல் போர் போல.

26. திரிந்து—வேறுபட்டு. அற்று ஆகும்—அத் தன்மையை உடையதாகும். இனம்—தான் சேரும் கூட்டம். அது ஆகும்— அக்கூட்டத்தின் குணமாகும்.

27. நீட்டம்—நீர்ப்பூங் கொடியின் நீளம்.

28. நெடுநீர்—காலம் தாழ்க்கும் தன்மை. மறவி—மறத்தல். மடி—சோம்பல். துயில்—தூக்கம், கெடுநீரார்—அழியும் குணம் உள்ளவர், காமக்கலன்—விரும்பி ஏறும் மரக்கலம்.

29. திருவினை—செல்வத்தை. முயற்று இன்மை—முயற்சி இல்லாமை (சோம்பல்). இன்மை—ஏழ்மை.

30. இடும்பை—துன்பம். உள்ள—நினைக்க.

31. வினை—காரியம். மாண்டது—சிறப்பாகப் பெற்றவன்.

32. ஈன்றாள்—தாயினுடைய. காண்பானாயினும்—தன் ஏழ்மை காரணமாகப் பார்த்து வருந்துபவனாயினும். பழிக்கும் வினை—அவமதிக்கும் தொழில்.

33. பிணி—நோய். ஏமம்—காவல். அணி—அழகு.

34. உடுக்கை—ஆடை. இடுக்கண்—துன்பம்—. களைவது—நீக்குவது.

35. குடிமை—குடிப்பிறப்பு. குன்றா இனனும்—குறைவில்லாத சுற்றமும், நட்புயாக்க—நட்புச் செய்க.

36. வினை வேறு சொல் வேறு பட்டார்—தொழிலும் சொல்லும் வேறு வேறாக இருப்பவர். கனவினும் இன்னாது-கனவிலும் துன்பம் செய்யும்.

37. கிடந்தமை—செழுமை. கால்—முளை. குலம்—நற்குடி.

38. இழிந்தக் கடை—தாழ்ந்த நிலைமை அடைந்தால். இழிந்த—கீழே விழுந்து கிடந்த.

40. வாழ்வார்—மேலாக வாழ்பவர். தொழுது—பிறரை வணங்கி. பின்செல்பவர்—அவர் பின்னே செல்பவர்.

III. வரலாற்றுப் பகுதி

தேசிங்கு மன்னன் நவாபுக்கு ஓலை அனுப்புதல்

[தேசிங்கு செஞ்சியை ஆண்ட ஒரு சிற்றரசன். அவன் தோன்ற மல்லனிடம் செஞ்சிக்கோட்டை மன்னர்கள் தமக்குக் கப்பம்கட்ட வேண்டியதில்லை என டில்லிபாதுஷா உறுதி அளித்திருக்கிறார் என்று கூறி ஆர்க்காட்டுநவாபுக்குப் பணம் கொடுக்க மறுத்து ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.]

அங்கே போட்ட நகாரு சத்தம்
நவாபு கேட்டானும்.
'அண்ணு வாடா, தம்பி வாடா,
பங்காரு நாய்க்க! நீ
சல்-செஞ்சிக் கோட்டை பணமும் வந்தது
பங்காரு நாய்க்கனே!
சதுரு சமுக்காளம் போடச் சொன்னான்
நவாபு சைதுல்லா!
சராப்புப் பெட்டியை அழைக்கச் சொன்னான்
நவாபு சைதுல்லா!
தூங்கா விளக்கை வைக்கச் சொன்னான்
நவாபு சைதுல்லா!
நவாபு மாளிகையில் வந்தான் ஐயா
தோன்ற மல்லனும்.
கொள்ளுக் குற்றின உலக்கைபோல
முன்னே நின்றானும்.
தோன்ற மல்லனைக் கண்ணாலே கண்டான்
நவாபு சைதுல்லா.

" அடா-என்ன காரியம் பண்ணிஞயடா
தோன்ற மல்லண்ணு ?
பணமுமெங்கே காசுமெங்கே,
தோன்றமல்லண்ணு ?"
" நூற்றெழுபத்திரண்டு பாளையப் பட்டுக்கு
நானே போயிருக்க
இத்தனை நாளும் இவனைப்போல
நானும் பார்த்ததில்லை !"

" வாயினுலே சொல்ல மாட்டேன்.
நவாபு சைதுல்லா !
செஞ்சிக்கோட்டையான் ஓலை எழுதினன்
நவாபு சைதுல்லா !

ஓலை முகத்தைக்கண்ணாலே பாரும்
நவாபு சைதுல்லா !"
ஓலையெடுத்து எதிரிலே வைத்தான்
தோன்ற மல்லனும்.
"ஆயிரங் கணக்குப் பிள்ளைக்குப் பெரிய
கணக்குப் பிள்ளைவாரும்
வாசித்துப் பார்த்துச் சேதி சொல்லும்
ரங்கநாத பிள்ளை"
அந்த வேளையில் என்ன சொல்லுகிறான்
ரங்கநாத பிள்ளை ?
"நாளைக்கு வருகிற நவாபு சாயபை
இன்றைக்கு வரச்சொல்லும் ;
மீசை முளைத்த ஆண்பிள்ளையானால்
சண்டைக்கு வரச்சொல்லும் ;
கத்தி முனையில் பணமும் தருகிறேன்
நவாபுக் கானாலும்
போன வருஷத்துக் கிந்த வருஷம்
வரகு மெத்த விளைவாம்
வரகு வைக்கோல் மெத்தக் கிடைக்கும்
வாரிப் போகச் சொல்லும் ;
கோட்டையின் மேலே கல்லுக் கிடைக்கும்
வாரிப் போகச் சொல்லும் ;
கோட்டையின் வெளியே மணல் கிடைக்குமே
கொண்டு போகச் சொல்லும் ;
இத்தனை சமர்த்தும் இருந்ததே யானால்
இங்கே வரச் சொல்லும் ;
திராணியில்லாத பெண்பிளளையானால்
அங்கே நிற்கச் சொல்லும் ;

இந்தப்படியாய் எழுதியிருக்குது
நவாபு சைதுல்லா !"
இந்தச் சேதியைக் காதிலே கேட்டான்
நவாபு சைதுல்லா !
கேட்டவுடனே கொதித்தெழுந்தான்
நவாபு சைதுல்லா !
நீல விழிக்கண்கள் நெளிந்தனவையா
நவாபுக் காளுலும் !
மீசை-பட பட வென்று துடித்ததையா
நவாபுக்-காளுலும் !
சல்-பட்டா உருவிக் கையிலேபிடித்தான்
நவாபு சைதுல்லா !

குறிப்புரை

இப் பகுதி தேசிங்கு ராஜன் கதை என்னும் நாட்டுப் பாடல் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

நகார்—முரசு. சராப்புப் பெட்டி—பணப் பெட்டி. சேதி—செய்தி. வரகு—ஒருவகைப் புன்செய்த் தானியம். கல்லு—கல். சமர்த்து—திறமை. இருக்குது—இருக்கிறது. பட்டா—பட்டாக்கத்தி.

விளுக்கள்

1. தோன்றமல்லன் நவாபுக்கு எதிரில் எப்படி நின்றுன்? நவாபு அவனைப் பார்த்து என்ன சொன்னுன்?

2. தேசிங்கு ராஜன் ஓலையில் என்ன எழுதப்பட்டிருந்தது?

3. தேசிங்கு ராஜனின் செய்தியை அறிந்த நவாபு எவ்வாறு கோபம் கொண்டான்?

4. "ஆயிரங் கணக்குப் பிள்ளைக்குப் பெரிய கணக்குப் பிள்ளை வாரும்!"—இதனைச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

IV. கதைப் பகுதி

தகாத ஆசை

சிந்தையில் சுவர்ண சித்தி
நிகழ்த்திய கதையைக் கேட்டே
" இந்தநற் கதைகேள் " என்றே
இயம்புஞ்சக் கரத ரன்றான் :
" நந்துறு தடங்கள் சூழும்
நாரண புரத்தில் வாழும்
மந்தர நாமன் தந்து
வாயன் வத்திரங்கள் நெய்வோன். 1

தறிமரம் முறித லாலே
தக்கநன் மரம்வெட் டற்குச்
செறிவனந் தன்னிற் சென்று
திரிந்தொரு வாகை கண்டு
முறிபட வெட்டு தற்கு
முயலும்போ ததன்மேல் நின்ற
அறிவுறும் இயக்கன் நோக்கி
அவனொடு மொன்று சொல்வான் : 2

" இந்தவென் னிடத்தை வெட்டா
யென்னில் நீ இச்சை கொண்டு
வந்தநல் வரம்ஈ வேனன் "
என்றனன் ; மகிழ்ந்து மீண்டு
நந்தலில் நட்பா யுள்ள
நாவிதன் தன்னைக் கேட்க,
" மந்திரி யாவேன் நான் ; நீ
மன்னனும் வரங்கேள்," என்றான். 3

மனைவியோ டிதை யுரைக்க,
மற்றவள், " அரசு பெற்ருல்
கனவிடை யூறு மேவும்;
ஆதலாற் காதலா! நீ
இனமொரு தலையுங் கைகள்
இரண்டையும் பெற்ரு யாளுல்
தினமிரு தறி விரித்துச்
செய்யலாம் வேலை," என்ருள். 4

மாலையங் குழலாள் சொன்ன
வார்த்தையே நல்லதென்று
சாலியன் சென்று பெற்றுத்
தன்னக ருற்ருன்; கண்டோர்

ஆலம்னோர் அரக்க னுமென்(று)
ஆளுக்கோர் கல்லைக் கொண்டு
மேலுற எறிந்தார் ; செத்தான்
மெய்விகா ரங்கொண் டோனே. 5
— வீரமார்த்தாண்ட தேவர்

குறிப்புரை

இக்கதைப் பாடல் பஞ்சதந்திரப் பாடல்கள் என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது. நட்புப் பேறு, நட்புப் பிரித்தல், அடுத்துக் கெடுத்தல், நன்மைக்குத் தீமை, ஆராயாது செயல் ஆகிய இவை பஞ்சதந்திரங்கள் எனப்படும். நிகழ்த்திய—சொல்லிய. நந்தலில்—கெடாத. செறிவனம்—மரம் அடர்ந்த காடு. இயக்கன்—அரக்கன். கன இடையூறு—மிகுந்த துன்பம். இச்சை—விருப்பம். உற்ருன்—அடைந்தான். குழல்—கூந்தல்.

வினுக்கள்

1. மந்தரன் ஏன் காட்டிற்குச் சென்ருன்?
2. மாலையங் குழலாள் யார்? அவள் கூறியது யாது?
3. மந்தரன் பெற்ற தகாவரம் யாது?
4. மந்தரன் எவ்வாறு இறந்தான்?
5. இக்கதையால் நீ அறியும் நீதி யாது?

பயிற்சி

1. திரிந்து, இயம்பும், இடையூறு, எறிந்தார், விகாரம்—இவற்றை உன் சொந்த வாங்கியங்களில் அமைத்து எழுதுக.

2. இக்கதையை மந்தரன் கூறுவதுபோல உரைநடைப் படுத்திக் கூறுக.

3. இக்கதையை மந்தரன் மனைவி கூறுவதுபோல மாற்றி எழுதுக.

V. வருணனைப் பகுதி

ஆலமரம்

கிளையினிற் பாம்பு தொங்க
    விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
    வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக்
    கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
    உச்சிபோய்த் தன்வால் பார்க்கும். 1

ஆலினைக் காற்று மோதும்
    அசைவேனோ எனச்சி ரித்துக்
கோலத்துக் கிளைகு லுங்க
    அடிமரக் குன்று நிற்கும்!
தாலாட்ட ஆளில் லாமல்
    தவித்திட்ட கிளைப்புள் ளெல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
    காற்றுக்கு நன்றி கூறும்! 2

—பாரதிதாசனார்

குறிப்புரை

பாரதிதாசன் அவர்கள் சுப்பிரமணிய பாரதியாரின் மாணவர் ஆவர். இவர் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பதாகும். இவர் புதுவையில் வாழ்கிறார். இவர் பாடல்கள் இனிய எளிய நடையில் அமைந்தவை. சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்தவை. கிளைப்புள் (கிள்ளைப்புள்)—கிளியாகிய பறவைகள் (அ) கிளைகளில் வசிக்கும் பறவைகள்.

வினாக்கள்

1. ஆலம் விழுதுபோல் தொங்கியது எது?

2. "விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப்போல்........"

—இந்த உவமையுடன் தகுந்த வாக்கியத்தைச் சேர்த்து எழுதுக.

3. ஆலமரத்தின் அடிமரம் எது போன்று இருந்தது?

4. பறவைகள் காற்றுக்கு நன்றி கூறக் காரணம் என்ன?

பயிற்சி

1. வெடுக்கென, கிளைதோறும், மோதும், தவித்திட்ட—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. முதற் பாடலில் உள்ள எழுவாய், பயனிலையை எடுத்து எழுதுக.

3. ஆலமரத்தின் பயன்களைப் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுக

VI. பலவகைப் பாடல்கள்



பானைக்கும் யானைக்கும் சிலேடை

அங்குசவன் கைக்குருக்கொண் டாடும்: அரிசிகொளும்:
பொங்குதலைவெண்கோடு பூணுறுமால் ;—தங்குபுடைத்
தானையொடு வந்திறங்கும் : தாவுகரி யாமிவற்றால்
பானைக்கு நேர்யானை பார். 1

—கரந்தைக் கவியரசர் அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

பெரியோரும் சிறியோரும் கயவரும்

சொல்லாம லேபெரியர்; சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியும் செய்யார் கயவரே ;—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய், கூறுவமை நாடில்
பலாமாவைப் பாதிரியைப் பார். 2

—ஔவையார்

27

பூசணிக்காய் மகத்துவம்

மெய்வண்ண வீடுகட்ட உனைத்தொங்க விடுகிறார்கள் :
செய்வண்ண வேலை செய்து திருமாடம் முடிக்கின் றாய்நீ
பொய்வண்ணப் பூச ணிக்காய் ! கறியுனைச் செய்துண்
[டேன் உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன் ; கறிவண்ணம்
[இங்குக் கண்டேன். 3

—பாரதிதாசனார்

பாரதியார் பாட்டின் பெருமை

அச்சமெனும் பெரும்பேயை அடித்துப் போக்கும் :
அடிமைமன விலங்குகளை அறுத்துத் தள்ளும் :
துச்சமென வருதுயரம் எதையும் தாங்கிச்
சுதந்திரத்தை விட்டுவிடாத் துணிவு தோன்றும் :
கொச்சைமிகும் பிறநாட்டு மயகக மெல்லாம்
கூண்டோடு விட்டொழிக்கத் தெளிவும் கூட்டும் :
மெச்சிடும்நம் தாய்நாட்டின் நாக ரீகம்
மேன்மையெலாம் பாரதியார் பாட்டால் மேவும்.

—நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

மதியிலா மந்தி

மாலை ஒருநாள் வேலன் என்பான்
வேலை முடிந்து வெளியே செல்லக்
கண்ணாடி முன்னர்க் கனிவுடன் நின்றான்
தந்தச் சீப்பால் தலையை வாரினான்.
சுந்தர வடிவம் தோற்றிய பின்னர்
ஆடியும் சீப்பும் அறையில் வைத்தனன்.
வேலன் செயலை விருப்புடன் கண்ட
மந்தி யொன்று தந்திர மாக
அந்தப் புரம்செலும் அரசியைப் போன்றே
அவனறை சென்று ஆடியை எடுத்தது.
உள்ளே இருந்த உருவம் கண்டு
மற்றோர் குரங்கும் மருவிய தெனவே
உறுத்தது ; கீச்சென ஒலித்தது ; தலையை
அப்படி இப்படி அசைத்துப் பார்த்தது ;

சிப்பை ஆடியில் தேய்த்தது : முடிவில்
மதியிலா மந்தி மலர்க்கண் ணாடியை
எதிரியைத் தூக்கி இடுப்பொடிப் பவன்போல்
பொத்தெனக் கீழே போட்டுடைத் ததுவே !

—வித்துவான் தணிகை. உலகநாதன்

உடற்பயிற்சி

'சேவல் செருக்கினைக் காணீர்—அதன்
செல்வ நடைகண்டு நாணீர்—என்றும்
ஆவ லுடனுழைப் பீரேல்—மிக்க
ஆரோக்கி யம்பெறு வீரே. 1

கூனக் குரங்குகள் போல—உடல்
குன்றி இருந்திடல் ஆமோ?—அவ
மானமி தென்ன விடுப்பீர்—நிதம்
மார்பு நிமிர்ந்து நடப்பீர். 2

கட்டையும் வெட்டுதல் வேண்டும்—அதைக்
கட்டிச் சுமந்திடல் வேண்டும்—சிறு
பெட்டி எடுத்திடக் கெஞ்சும்—ஒரு
பேதையைக் கண்டுல கஞ்சும். 3

தோள்கள் பருத்திடல் வேண்டும்—உயர்
தூய்மைக் குணங்களும் வேண்டும்—பல
நாள்கள் கழித்திடல் நன்றோ?—நந்தம்
நாடு செழித்திடல் என்றோ?

அல்லும் பகலும் உழைத்தே—பச்சை
அப்பனை போலத் தழைத்தே—பல
நல்லறம் நாடிப் புரிவோம்—இந்த
நன்மதி யாவும் மறவோம்.

—பேராசிரியர் மயிலை. சிவ முத்து

குறிப்புரை

1. கரந்தைக் கவியரசர், வேங்கடாசலம் பிள்ளையவர்கள் பல்லாண்டுகளாகத் திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர், தொல்காப்பியம், அகநானூறு, சிலப்பதிகாரம் போன்ற சங்க நூல்களுக்கு இவர் அரிய உரைகள் இயற்றியுள்ளார். தற்காலத்தே கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழ்ப் பணி புரிந்துவருகிறார்.

இச்செய்யுள் இருபொருள்படப் பாடப்பட்ட சிலேடைச் செய்யுளாகும்.

அம் குசவன்—அழகிய குயவன். அங்குச வன்கை—அங்குசத்தையுடைய வலிய கை. உருக்கொண்டு ஆடும்—உருவத்தைப் பெறுவதற்குச் சுழலும்; பயந்து அடங்கி நடக்கும். தானை—துணி, படை.

2. ஒளவையார் என்னும் பெயருடன் இரண்டு மூன்று பெண்பாற் புலவர்கள் உண்டு. இவர் சங்க காலத்து ஒளவையாருக்குப் பிற்பட்டவர் ஆவர். இவரும் கம்பரும் சமகாலப் புலவர்கள் என்று சிலர் கூறுவர்.

குலாம்—விளங்குகின்ற. கூறு + உவமை = கூறுவமை,—சொல்லத் தகுந்த ஒப்பு. நாடில்—ஆராயின்.

3. வண்ணம்—திறமை, நிறம், உருவம் முதலிய பல பொருளில் வந்த ஒரு சொல்.

4. நாமக்கல் கவிஞர், இராமலிங்கம் பிள்ளை அவர்கள் மகாத்மா காந்தியடிகளாரிடம் மிக்க அன்புடையவர்; தமிழ்நாட்டு அரசவைக் கவிஞர் என்று பாராட்டப்பட்டவர். இவர் பாடிய தேசியப் பாடல்கள் படித்து இன்புறத்தக்கவை.

துச்சம்—அற்பம். கொச்சை மிகும்—இழிவு மிகுந்த; கூண்டோடு—அடியோடு.

5. உண்மை நிகழ்ச்சி ஒன்றை உளத்திற்கொண்டு ஆசிரியர் வித்துவான். தணிகை. உலகநாதன் அவர்கள் இதனைப் பாடியுள்ளார். இவர் சென்னை இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியும், மாணவர் மன்றத்தில் தமிழ்ப்பணியும் ஆற்றி வருகிறார்.

ஆடி—கண்ணாடி. உறுத்தது—கோபித்தது.

உடற்பயிற்சி என்னும் பாடல்களைப் பாடிய புலவர் மயிலை. சிவமுத்து அவர்கள் சென்னையில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழாசிரியர்கள் முன்னேற்றத்துக்காகவும் புரியும் தொண்டுகள் அளவில்லாதவை. மாணவர் மன்றம் என்னும் தமிழ்க் கழகத்தின் வாயிலாகப் பல துறையிலும் மாணவர்களுக்குத் தமிழ் உணர்ச்சியை ஊட்டி வருகிறார்.

செருக்கு—பெருமிதம். மேதினி—பூமி. கூனல்—வளைந்த. (அல்லும் பகலும்) அல்—இரவு. உலகு அஞ்சுதல்—இங்கு அஞ்சுதல் அறியாமை நோக்கி. உலகு—உலகில் உள்ள பெரியோர். நிதம்—தினந்தோறும். பேதை—அறிவிலி.

வினாக்கள்

1. சிறியவர், கயவர்—இவருக்குள்ள வேறுபாடு என்ன?

2. இரண்டாம் பாட்டில் உள்ள வேற்கண்ணும் என்பது என்ன முன்னிலை?

3. பானை எவ்வாறு யானையைப் போன்றதாகும்?

4. பூசணிக்காயின் பெருமைகள் யாவை?

5. பாரதியார் பாடல்களினால் உண்டாகும் நன்மைகள் யாவை?

6. நாம் எவ்வெவ் விதங்களில் பயிற்சி பெற வேண்டும்?

7. வித்யாசாகரர், பச்சையப்பர்—இவர்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

பயிற்சி

1. 'மதியிலா மந்தி' என்னும் நிகழ்ச்சியை வேலன் உன்னிடம் நேரில் கூறுவதுபோல் மாற்றி எழுதுக.

2. செல்வ நடை, கூனற் குரங்கு, அல்லும் பகலும்—இத்தொடர்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

3. கூனற் குரங்கு, மானமிதென்ன, நல்லறம், உலகஞ்சும்—இவற்றைப் பதம் பிரித்து எழுதுக.

5. வீரம், ஆரோக்கியம், நிமிர்ந்து, கெஞ்சும்—இவற்றின் எதிர்ப்பதங்கள் யாவை?

உரைநடைப் பகுதி

1. அன்புநெறி காத்த அண்ணல்

உலகில் மகாத்மா காந்தியடிகளை அறியாத மக்கள் யாருமே இருக்கமாட்டார்கள். பரம்பரை பரம்பரையாக அந்நியர் ஆதிக்கத்தில் சிக்கியிருந்த நம் தாய்நாட்டுக்கு அன்புநெறியால் விடுதலை வாங்கித்தந்த பெருமை நம் காந்தியடிகளுக்கே உரியதாகும். 'கத்தியின்றி ரத்தமின்றி' விடுதலைப் போரில் வெற்றி கண்ட வீரர் அவரே. அண்ணல் காந்தியின் வரலாற்றினை எல்லா மாணவர்களும் உணர்ந்து அவர்தம் அன்புநெறி நின்று நாட்டுக்குச் சேவை புரிதல் சாலச் சிறந்த கடமையாகும்.

மகாத்மா காந்தியடிகள் கி. பி. 1869-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள் கத்தியவார் தீபகற்பத்தில் போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தந்தையார் கபா. காந்தி என்பவராவர். அவர் தாயார் புத்திலிபாய் என்பவராவர். அவருக்கு மூத்த சகோதரர்கள் இருவரும் மூத்த சகோதரிகள் மூவரும் உண்டு.

நம் காந்தியடிகள் இளமைப் பருவத்திலேயே கற்பனவற்றைக் கசடறக் கற்றுச் சிறந்த ஒழுக்கத்துடன் விளங்கினார். சிறு வயதிலேயே தம்முடைய தாய்மொழியாகிய குஜராத்தியில் மிகவும் வல்லவரானார். அவர்தம் பதின்மூன்றாம் வயதில் அவருடைய பெற்றோர் கஸ்தூரி என்னும் பெண்மணியை அவருக்கு மணம் செய்வித்தனர். இளமையிலேயே அவர் மணம் புரிந்து கொண்டிருந்தாலும் கல்வியிலேயே கருத்தைச் செலுத்தினார். தம் பள்ளிப் படிப்பு முடிந்ததும் சட்டப் படிப்

புக்காக இலண்டனுக்குப் புறப்பட்டார். இலண்டனுக்குச் செல்லும்போது அவருடைய தாயார் அவரைப் பார்த்து, "என் செல்வக் குழந்தாய், இலண்டனுக்குச் சென்றால் அந்நாட்டு மக்களின் பழக்கமாகிய மது அருந்துதல், மாமிசம் தின்னுதல் போன்ற தீப்பழக்கங்களில் ஈடுபட வேண்டும்; எனவே நீ அங்குப் போதல் தகாது," என்று கூறினார். காந்தியடிகள் தம் அன்னையிடம் மது அருந்துவதில்லையென்றும், மாமிசம் தின்பதில்லையென்றும், பிறமாதர்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லையென்றும் உறுதி கூறி இலண்டன் மாநகருக்குப் புறப்பட்டார். இலண்டனில் வெள்ளையரின் போலி நாகரிக வாழ்க்கையைக் காந்தியடிகள் வெறுத்தார். தம் அன்னையாரிடம் அளித்த வாக்குறுதிகளில் ஒரு சிறிதும் தவருமல் தமது சட்டப்படிப்பில் தேர்ச்சியுற்று இந்தியாவுக்குத் திரும்பினார்.

காந்தியார் பம்பாய் நகரத்தில் தம் வழக்கறிஞர் தொழிலைத் திறம்பட நடத்தி வந்தார். அவர் பொய் வழக்குகளுக்காக நீதி மன்றங்களில் எப்போதும் வாதிட்டதில்லை. தென்னுப்பிரிக்காவில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவர் பெயர் அப்துல்லா சேட் என்பது. அவர் வழக்கு ஒன்றை நடத்துவதற்காகக் காந்தியடிகளை அழைத்திருந்தார். காந்தியடிகளாரும் அவர் வேண்டுகோளுக்கு இனங்கித் தென்னுப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அடிகள் தென்னுப்பிரிக்காவில் இருக்கும்போது, இந்தியாவிலிருந்து அங்குக் கூலியாட்களாகக் குடியேறி இருக்கும் மக்கள், பலவிதங்களில் கொடுமைப்படுத்தப் பட்ட நிலையைக்கண்டு வருந்தினர். ஆக்காலத்தில்

தென்னாப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்கள் உரிமை யுடன் வாழமுடியாது. அக்காலத்தில் அவர்கள் அங் குக் கூலியாட்களாகத்தான் இருக்கவேண்டும்; உணவு விடுதிகளில் வேலை செய்யவேண்டும் ; இல்லையேல் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும். எல்லோரையும் போல இந்தியர்கள் பொது இடங்களில் வாழலாகாது ; ஒதுக்கப்பட்ட தனி இடங்களிலேயே குடியிருக்கவேண் டும். செல்வம் சேர்த்தாலும் சொந்த நிலம் வாங்கிச் சுகமாக இருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். அரசி யலில் அவர்களுக்கு வாக்குரிமையொன்றும் கிடையாது. இரவில் ஒன்பது மணிக்குமேல் இந்தியர் வெளியே நடமாடக்கூடாது. உத்தரவு பெற்றவர்களுக்கே வெளியே உலாவுவதற்கு உரிமையுண்டு. இன்னோ ரன்ன கொடுமைகளைக் கண்ட நம் காந்தியடிகளார் மனம் அனலில் விழுந்த புழுப்போல் துடித்தது.

தென்னாப்பிரிக்காவில் ஒரு சமயம் அவர் இரவு ஒன்பது மணிக்குமேல் உலாவிக்கொண்டிருந்தார். அது கண்ட காவலன் ஒருவன் அவரைக் காலால் உதைத் துக் கீழே தள்ளினான். அதனைப் பார்த்த ஒரு செல்வர் அக்காவலன் செயல்பற்றி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும்படி காந்தியடிகளுக்குக் கூறினார். அதற்குக் காந்தியடிகள், "என குறைக்காக நான் ஒன்றும் வழக் குத் தொடரமாட்டேன். இந்தியர் யாவரும் படும் துன் பத்தையே நானும் அனுபவித்தேன்," என்று சொல்லி விட்டு ஒன்றும் செய்யாமல் போய்விட்டார்.

தென்னாப்பிரிக்காவில் பாலசுந்தரம் என்னும் தமிழ் நாட்டான் ஒருவன் வெள்ளை முதலாளியிடம் கூலியா ளாக அமர்ந்திருந்தான். அவன் ஒரு சமயம் முதலாளி

யால் தாக்கப்பட்டு முன்பல் உடைந்து இரத்தம் சிந்தக் காந்தியண்ணலிடம் தன் குறையை முறையிட்டான். அவன் துன்பத்தைப் பொறுமையுடன் கேட்டிருந்த மகாத்மா அவனுக்காக நீதி மன்றத்தில் வழக்காடி வென்று அவனை வேறு ஒருவரிடம் வேலைக்கு அமர்த்தி விட்டார். தன்னலம் பாராது பிறர் நலத்துக்குழைப்ப வர் காந்தியடிகள் என்பது இந்நிகழ்ச்சியால் விளங்கு கின்றதல்லவா ?

காந்தியார் ஒரு சமயம் பிரிடோரியா என்னும் ஊருக்கு ரெயிலில் முதல் வகுப்பு நுழைவுச்சீட்டு வாங் கிச்சென்றார். அதைக்கண்ட ஒருவெள்ளைக்கார அதிகாரி " இந்தியர்கள் முதல் வகுப்பில் பிரயாணம் செய்யக் கூடாது; வேறு வகுப்பில்தான் ஏறிச்செல்லவேண்டும்" என்று கூறினன். அதற்குக் காந்தியடிகள் தாம் முதல் வகுப்பு 'டிக்கட்டு' வாங்கி இருப்பதாகவும், அத ஞல் முதல் வகுப்பிலேதான் பிரயாணம் செய்யமுடியு மென்றும் கூறினர். அவர் பேச்சைக்கேட்டு ஆத்திரங் கொண்ட அவ் வெள்ளையன் அவரைத் தாறுமாருகத் திட்டி ஒரு காவலனைக்கொண்டு வெளியேற்றச் செய் தான். அவ்வெள்ளை அதிகாரியின் அறிவின்மையைக் கண்டு அண்ணல் காந்தியார் உள்ளம் உருகினரே யொழிய வேறொன்றும் செய்யவில்லை.

மகாத்மா தென்னுப்பிரிக்காவுக்குத் தாம் எவ்வழக் கினை நடத்துவதற்காகச் சென்ருரோ அதனை இருசாரா ரும் மனவருத்தம் கொள்ளாதிருக்கும் வகையில் சமா தானமாகவே தீர்த்து வைத்தார். தென்னுப்பிரிக்காவில் நிகழ்ந்த மற்றும் சில வழக்குகளையும் இங்ஙனமே சமா தான முறையில் தீர்த்து வைத்தார். எனவே, மகாத்மா

வின் அறிவுத் திறமையை வியவாதவர் அங்கு எவரும் இல்லை என்றே சொல்லலாம். தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகளார் இந்தியத் தொழிலாளரின் நிலைமையை உயர்த்தும் போராட்டத்திலும் ஓரளவுக்கு வெற்றிபெற்ருர். ஏறக்குறைய இருபது ஆண்டுகள் தென்னுப்பிரிக்காவிலேயே தங்கி வெள்ளையரின் கொடுமைகளை நீக்கினுர்.

இத்தகைய வெற்றிகளுடன் நம் காந்தியண்ணல் தம் தாய்நாட்டிற்குத் திரும்பினுர். இந்தியர் தம் சொந்த நாட்டிலேயே அந்நியர் ஆதிக்கத்தில் படும் அல்லல்களைக் கண்ணுற்ருர். இந்தியா பூரண விடுதலை பெற்ருல் ஒழிய மக்கள் நலமாக வாழ வழியில்லை என்பதை உணர்ந்தார். மெய் வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும், கண்துஞ்சாமலும், இந்திய விடுதலைக்காக அரும்பாடு பட்டார். கிராமந்தோறும் சென்று பிரசாரங்கள் புரிந்தார். அவர் அறவுரைகளைக் கேட்ட மக்கள் அவர் வழியைப் பின்பற்றி நாட்டுக்குத் தொண்டாற்ற முன்வந்தனர். நம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம் முதலிய அறப்போர்களை நடத்தியதன் பலனுகப் பலமுறை சிறைப்பட்டார்; தடியடிகளுக்கும் ஆளானுர். நாட்டு விடுதலையின் பொருட்டு அவர் செய்த தியாகங்களுக்கு அளவேயில்லை.

தீண்டாமையைப் போக்குவதற்கும் மதுவரக்கனை ஒழிப்பதற்கும் பெரிதும் உழைத்தார். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக இரவும் பகலும் பாடுபட்டார். கிழக்கு வங்காளத்தில் நிகழ்ந்த பெருங் குழப்பம் மகாத்மா காந்தியாரின் சேவையினுல் நீங்கிற்று. "எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓரினம்; எல்லோரும் இந்திய மக்

கள்" என்னும் உயர்ந்த கருத்தை நிலைநாட்டியவர் காந்தியடிகளே ஆவர். அவர்தம் அரிய தொண்டினால் 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாளில் நம் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத் திருநாளை மக்கள் நாடெங்கும் ஆடம்பரத்துடன் கொண்டாடினர்.

நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததும் மக்களுள் ஒற்றுமை காணப்படவில்லை. முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கு மிடையில் அடிக்கடி நேர்ந்த பூசல்களைக் கண்டு மகாத்மா மனம் புழுங்கினார். இருசாராரின் ஒற்றுமைக்காக உண்ணாவிரதம் பூண்டு நாட்டில் அமைதியை நிலைநாட்டினார்.

செயற்கரும் செயல்கள் பல புரிந்த தியாகியாகிய நம் காந்தியடிகள் 1948-ஆம் ஆண்டு ஜனவரி 30-ஆம் நாள் பிர்லா மாளிகையிலிருந்து பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்றார். செல்லும்போது நேரில் வணங்குவதுபோல் வந்த நயவஞ்சகன் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். ஆருயிர்கட்குழைத்த அண்ணலின் திருமேனி, 'இராமா' என்று கூறிக் கொண்டே மண்ணில் சாய்ந்தது. உலக மக்கள் எல்லோருமே துன்பக்கடலில் ஆழ்ந்தனர். அந்தோ! அறநெறித்தோன்றல் நம்மைவிட்டு அகன்றனரே!

காந்தியடிகளின் பூதவுடல் மறைந்தது. அவர் நமக்காகக் கூறிய அறவுரைகள் இன்னும் மறையவில்லை; அவை என்றும் மறையா! காந்தியடிகளின் நீதி உரைகளை நாம் பின்பற்றி நடப்போமாயின் அதுவே அவருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையும் கடமையும் ஆகும்.

காந்தியடிகளாரின் திருப்பெயர் வாழ்க!

பயிற்சி

பொருளறிக :

அன்புநெறி	சால	வாக்குறுதி
ஆதிக்கம்	பரம்பரை	
கசடற	பூதவுடல்	

கீழ்க்கண்ட தொடர்மொழிகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

கத்தியின்றி ரத்தமின்றி, சாலச்சிறந்த, கசடறக் கற்று, இன்னோரன்ன, அனலில் விழுந்த புழுப்போல, துடி துடித்து.

விடை கூறுக :

1. மகாத்மா காந்தியடிகள் எங்கே எப்போது பிறந்தார்?

2. அவர் இளமை நாட்களைப் பற்றி எழுதுக.

3. அவர் தாயாருக்குக் கொடுத்த வாக்குறுதி யாது?

4. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் செய்த தொண்டுகள் யாவை?

4. "அன்புநெறி காத்த அண்ணல் காந்தி"—என்பதனை எவ்வாறு அறியலாம்?

தெரிந்துகொள் :

ஒவ்வோராண்டிலும் ஆகஸ்டு 15-ஆம் நாளில் சுதந்திர விழாவும் அக்டோபர் 2-ஆம் நாள் காந்தி பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

இலக்கணப் பயிற்சி

1. காந்தி அண்ணல் இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்டார்.

2. நான் மாலை நான்கு மணிக்கு

முதல் தொகுதியில் சொற்றொடர்கள் ஒன்றோ டொன்று தொடர்ந்து ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக் கின்றன.

இரண்டாம் தொகுதியில் சொற்கள் தொடர்ந்து நிற் பினும் கருத்து முற்றுப் பெறவில்லை.

கருத்து முற்றுப்பெற்ற சொற்றொடரே வாக்கியம் எனப்படும்.

1. தென்னாப்பிரிக்காவில் இந்தியர் கூலிவேலை செய் தனர்.

2. காந்தியடிகள் இந்தியர் துன்பங்களை நீக்கினர்.

இங்ஙனம் குறைந்தது ஒரு எழுவாயும் ஒரு பயனிலை யும் கொண்ட வாக்கியங்கள் 'தனிநிலை வாக்கியங்கள்' எனப்படும்.

இப் பாடத்திலிருந்து ஐந்து தனிநிலை வாக்கியங்களை எடுத்து எழுதி அவற்றின் எழுவாய், பயனிலைகளைக் கண்டு பிடி.

2. மைனாவும் முயலும்

முன்னொரு காலத்தில் யமுனை நதிக்கு அருகில் ஒரு சோலை இருந்தது. அச் சோலையில் ஒரு மரப் பொந்து இருந்தது. அந்த மரப்பொந்தில் மைனா ஒன்று வசித்து வந்தது. ஒருநாள் அந்த மைனா வெளியே சென்றி ருக்கும்போது முயலொன்று வந்து அம் மரப்பொந்தில் குடியிருந்தது.

வெளியே சென்ற மைனா திரும்பி வந்தது. தன் பொந்தில் ஒரு முயல் தங்கி இருப்பதைப் பார்த்துச் சினம் கொண்டது. உடனே அப்பறவை முயலைப்

பார்த்து, "ஏ முயலே, இப்பொழுது நான் வாழும் வீடு ஆகும். நீ இங்கு வந்து தங்குவது அடாத காரியம்; போ வெளியே," என்று சொன்னது.

முயல்: உன் வீடாவது, என் வீடாவது. மரங்கள், நிழல், சாலைகள், குளங்கள், கிணறுகள் தண்ணீர்ப் பந்தல், சாவடி முதலிய இடங்கள் எல்லோருக்கும் பொதுவான இடங்களே யன்றித் தனிப்பட்ட ஒருவருக்கும் உரிமையாகா.

மைனா: முயலே! என் வீட்டில் நீ வலுவில் வந்து தங்கியது மல்லாமல் எனக்கே நீதி போதிக்கவும் ஆரம்பித்து விட்டாயே; மரியாதையாக வெளியே போய்விடு.

முயல்: என்ன சொன்னாலும் நான் போகவே மாட்டேன்.

இப்படியே இரண்டும் நெடுநேரம் சண்டை போட்டன. இறுதியில் தம் வழக்கை ஒரு நடுநிலையாளரிடம் சொல்லித் தீர்த்துக் கொள்ளலாம் என்னும் முடிவுக்கு ஒப்புக்கொண்டன.

மைனா முயலைப் பார்த்து, "நம் வழக்கை நன்கு விசாரித்து நல்ல தீர்ப்பு அளிக்க வல்ல உத்தமர் யார்?" என்று கேட்டது. அதற்கு முயல், "யமுனை யாற்றங் கரையில் கூர்ம்பல்லன் என்னும் பூனையார் தவம் செய்துகொண்டிருக்கிறார். அவரிடம் நாம் சென்றால் நம் வழக்கைப் பட்சாதாபம் இல்லாமல் தீர்த்து வைப்பார்" என்று கூறிற்று. மைனாவும் அதற்கு ஒப்புக் கொண்டு முயலுடன் கூர்ம்பல்லனைத் தேடிச் சென்றது. பூனையின் அருகே சென்றால் அது தம்மைக் கொன்று விடும் என்று அஞ்சித் தொலைவில் இருந்து

கொண்டே வழக்கைக் கூறுவதாக இரண்டும் முடிவு செய்தன.

அந்தப் பூனை யமுனை யாற்றங்கரையில் தவம்புரிந்து கொண்டிருந்தது. அஃது ஒரு கையில் ஜபமாலையும் மற்றொரு கையில் கமண்டலமும் கழுத்தில் உருத்திராக்க



மாலையும் தரித்து முனிவர் போலவே யோகத்தில் ஆழ்ந்திருப்பதாகப் பாவனை செய்தது. மைனாவும் முயலும் பூனையை வணங்கி நின்றன. பூனை யோகத்திலிருந்து நீங்கி மைனாவையும் முயலையும் பார்த்து, "நீங்கள் யார்? எம்மை எப்படி அறிந்தீர்கள்? இங்கு வந்த காரணம் என்ன?" என்று வினவிற்று. மைனாவும் முயலும் தம்முடைய பேரையும் வழக்கையும் அந்தப் போலித் துறவியான பூனையாரிடம் கூறின.

அவற்றின் பேச்சைக் கேட்ட பூனையார், "குழந்தைகாள்! நானோ தொண்டு கிழவன்: மூப்பினால் எம் காதுகளும் சரியாகக் கேட்பதில்லை; நீங்கள் என்ன

சொன்னாலும் எமக்கு அருகில் வந்து சொன்னால்தான் அதை யாம் கேட்க முடியும்,” என்று சொல்லிற்று. அதற்கு மைனாவும் முயலும், “பெரியீர்! நாங்கள் எப்படித் தங்கள் அருகில் வருவோம்; வந்தால் நீங்கள் எங்களைக் கொன்று விட்டால் என்ன செய்வோம்? தயவு செய்து தொலைவில் இருந்தே எம் வழக்கை விசாரித்து முடிவு கூறவேண்டும்,” என்று முறையிட்டன. உடனே கூர்ம்பல்லன், “சிவ, சிவ, என்ன சொன்னீர்கள்? உங்கள் பேச்சு எமக்குப் பாதி கேட்பதும் பாதி கேளாததுமாக இருக்கிறது. பட்சபாதமென்பதே எம்மிடம் இம்மியும் காணமுடியாது. ‘தருமம் தலைகாக்கும்,’ என்பது பழமொழியல்லவா? சத்தியம் தவறி நடப்பவர்கள் ஆண்டவனால் தண்டிக்கப் படுவார்கள். ஆகையால், யாம் எப்பொழுதும் மெய்யே பேசுவோமேயன்றி ஒருசிறிதும் பொய்யே பேசமாட்டோம். கொல்லா விரதம், பொய் சொல்லா விரதம் என்னுமிரண்டுமே எம்மால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களாகும். தூரத்திலிருந்து சொன்னால் ஒன்றும் கேளாது. நியாயம் வழங்க வேண்டுமானால் எம் அருகே வந்து உங்கள் வழக்கைக் கூறுங்கள். உங்களுக்கு ஒரு துன்பமும் செய்யமாட்டோம். சிவ! சிவ!” என்று நயமாகக் கூறிற்று. பூனையின் பேச்சை மெய் என்று நம்பிய அந்த மூடப் பறவையும் முயலும் அதன் அருகே சென்று நின்றன. உடனே கூர்ம்பல்லன் அவற்றை இறுகப் பிடித்துக் கடித்துக் கொன்று தின்றது.

செல்வச் சிறுவர் சிறுமியரே! இக் கதையினால் நீங்கள் என்ன தெரிந்து கொள்கிறீர்கள்? உத்தமர்போலப் பாசாங்கு செய்யும் பகைவர்களை நம்பி ஒருபோதும்

அவர்களுடன் உறவாடக்கூடாது. பகைவர்கள், சந்நி யாசிகளைப் போலவும், சுற்றத்தினரைப் போலவும் நம் முடன் பழகினாலும் அவர்கள் தன்மைகளை நன்கு ஆராய்ந்து அவர்கள் தொடர்பிலிருந்து நீங்குவதே நல்ல நெறியாகும்.

'தீயாரைக் காண்பதுவும் தீதே: திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவும் தீதே: தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது.

பயிற்சி

பொருளறிக :

அனுட்டித்தல்	நடுநிலையாளரிடம்
இணங்கி	பட்சபாதம்
திருவற்ற	மூப்பு
தீர்ப்பு	வழக்கு

விடை தருக :

1. மைனாவுக்கும் முயலுக்கும் ஏற்பட்ட வழக்கு என்ன ?

2. அந்த வழக்கைத் தீர்த்துக்கொள்ள அவை யாரிடம் சென்றன ?

3. வழக்கின் தீர்ப்பு என்ன ஆயிற்று ?

4. இக் கதையிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளும் நீதி என்ன ?

தெரிந்துகொள் :

இக் கதை பஞ்ச தந்திரப் பாடலைத் தழுவி எழுதப்பட்டது. பஞ்ச தந்திரப் பாடல் வீரமார்த்தாண்ட தேவ

ரால் எழுதப்பட்டது. உரைநடை, வித்துவான் தாண்டவ ராய முதலியரால் எழுதப்பட்டது.

இலக்கணப் பயிற்சி

1. கந்தனும் நந்தனும் சந்தைக்குப் போனார்கள்.

2. நான் கூப்பிட்டேன்; ஆனால் உனக்குக் கேட்கவில்லை.

இங்ஙனம் பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டும் ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டும் வரும் வாக்கியங்கள் தொடர் வாக்கியங்கள் எனப்படும்.

1. நெருக்கமாக வந்து சொன்னால்தான், எம் காதுகள் கேட்கும்.

2. மைனா வெளியே சென்றபோது, முயல் மரப் பொந்தில் தங்கிற்று.

இங்ஙனம் ஒரு முக்கியமான வாக்கியத்தையும் ஒன்று அல்லது பல சார்பு வாக்கியங்களையும் பெற்றுவரும் வாக்கியம் கலவை வாக்கியம் எனப்படும்.

மேலே தரப்பட்ட உதாரணங்களைக் கவனித்து இப் பாடத்திலிருந்து தொடர்நிலை வாக்கியங்களுக்கும், கலவை வாக்கியங்களுக்கும் இரண்டிரண்டு உதாரணங்களை எடுத்து எழுதுக.

3. கோபாலனும் கிராமவாசியும்

(ஓர் உரையாடல்)

கிராமவாசி: தம்பி, உன்னைப் பார்த்தால் பட்டணத்துப் பிள்ளை போலிருக்கிருயே! உன் சொந்த ஊர் இந்த ஊர் தாஞ?

கோபாலன்: இல்லை, பக்கத்து ஊரில் என் மாமா இருக்கிருர். நான் பிறந்ததும் வளர்ந்ததும் பட்டணந் தான். என் தகப்பஞர் அங்கே உத்தியோகத்தில் இருக்கிருர். விடுமுறையாகையால் நான் இந்தக் கிராமத்தைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

கிராமவாசி: பட்டணத்திலே நலமாக வாழும் உங்களைப் போன்ற செல்வச் சிறுவர்கள் கிராமங்களைப் பார்க்க வருவது வியப்பாகவே இருக்கிறது!

கோபாலன்: ஏன் தாத்தா! நாங்கள் கிராமங்களைப் பார்க்கக் கூடாதோ! நான் இதுவரையில் கிராமங்களை வந்து பார்த்ததில்லை. கிராமங்களின் நிலைமையைப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். நேரில் பார்க்கவே இப்பொழுது வந்தேன்.

கிராமவாசி: தம்பி! மிகவும் சந்தோஷம். உங்களைப்போன்ற இளைஞர்கள் கிராமங்களைப் பார்வையிடுவதுதான் நல்லது. அப்பொழுதுதான் இங்குள்ள குறைகளை நீக்கி எங்களுக்கு ஒத்தாசை புரிய நகரத்தாருக்கு ஆர்வம் உண்டாகும்.

கோபாலன்: கிராமங்களே நகரத்தாரின் உயிர் நாடி. நீங்கள் இங்குத் தொழில் செய்யாவிடில் எங்களுக்கு உணவு ஏது? உடை ஏது? உறைவிடம் ஏது?

கிராமவாசி : குழந்தாய்! நீ மிகவும் அறிவாளி. கிராமத்தைப்பற்றி உயர்வாகவே மதிக்கிருய் என்பதைக் காண நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மெதுவாக என்னுடன் வா. இந்தக் கிராமத்தைச் சுற்றிக் காட்டுகிறேன்.

கோபாலன் : நல்லது. அப்படியே செய்யலாம்.

கிராமவாசி : இதோ, பார் தம்பி. இந்தக் குடிசைகளில் தான் நாங்கள் வசிக்கிறோம். அதோ சற்றுப் பெரிதாக ஒரு வீடு தெரிகிறதே, அதுதான் கிராமத் தலைவரின் வீடு.

கோபாலன் : கிராமவாசிகளாகிய நீங்கள் இப்படிக் குடிசைகளில் தங்கித் துன்பப்படுகிறீர்கள். பட்டணங்களிலோ மக்கள் மாட மாளிகையில் தங்கி மகிழ்கின்றனர்.

கிராமவாசி : உங்களைப்போல் நாங்கள் பட்டணங்களில் நெருக்கமான வீடுகளில் இருந்து புழுங்கி வருந்தாமல் இங்கே காற்றேட்டமான அகன்ற வெளிகளில் வாழ்வதுதான் எங்களுக்கு இன்பமான வாழ்க்கையாக இருககிறது.

கோபாலன் : இருந்தாலும் தெருவெல்லாம் இப்படிக் கோணலாகவும் மேடுபள்ளமாகவும் குறுக்கும் நெடுக்குமாகவும் இருக்கின்றனவே! இந்த இடங்களில் வண்டிகள் எப்படிச் செல்லுமோ?

கிராமவாசி : ஏன் செல்வதில்லை? அடிக்கடி மாட்டு வண்டிகள் சென்று இதோ தேய்ந்திருககும் இடங்களை நீ பார்க்கவில்லையா?

கோபாலன் : பார்த்தேன். இவ்வளவு குறுகலான பாதைகளில் வண்டிகள வந்தால் எதிரில் வரும் மனிதர் கதி என்னுவது? வழியில் மாட்டுச் சாணமும்

சேற்று நீரும் தீ நாற்றமடிக்கின்றனவே! இப்படி இருந்தால் தொற்று நோய்கள் பரவ ஏதுவாகுமே! இவற்றை நீங்கள் கவனிப்பதில்லையா?

கிராமவாசி: வண்டிகள் வந்தால் ஏதாவது வீட்டின் வாயிற்படியில் ஏறி ஒதுங்கிக்கொள்ளவேண்டியது தான், என்ன செய்வது? கிராமத்தின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. எங்களால் ஆனவரையில் சீர்திருத்தம் செய்துகொண்டுதான் வருகிறோம்.

கோபாலன்: தாத்தா, அதோ தெரிகிறதே! அந்தக் கட்டடம் என்ன கட்டடம்?

கிராமவாசி: அதுதான் இந்தக் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடம். பள்ளிக்கூடம் என்ற பேரே ஒழியப் பிள்ளைகள் சரியாகப் போவதில்லை.

கோபாலன்: ஏன் அப்படி? பிள்ளைகள் சரியாகப் பள்ளிக்குப் போகாவிட்டால் இங்குப் பள்ளிக்கூடம் இருந்து என்ன பயன்? அறியாமையைப் போக்குவதற்குக் கல்வியறிவு அவசியமல்லவா?

கிராமவாசி: என்ன செய்வது? சிலர் தம் ஜீவனத்துக்குத் துணையாக இருக்கவேண்டுமென்று தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. சிலர் படிப்பின் அருமையையும் உணருவதில்லை.

கோபாலன்: அப்படிச் செய்வது மிகவும் தவறான காரியமாகும். அதனால்தான் கிராமத்தினர் முன்னேற்றமடைவதில்லை. நமது தேசத்தின் சிறப்பு கிராமத்தைத் தான் பொறுத்துள்ளது. ஒவ்வொரு பெற்றோரும் தம் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்புவது நலம். பெரியவரே! அதோ பச்சைப் பசேலென்று தெரிகின்றனவே, அவை என்ன?

கிராமவாசி : தம்பி, அவை கிராமத்தின் வயல்கள். வா போய்ப் பார்க்கலாம்.

கோபாலன் : ஆ! என்ன அழகான காட்சி! பச்சைக் கம்பளத்தைப்போன்ற இந்தப் புற்றரையில் படுத்துத் தூங்கலாம் போலிருக்கிறது! ஆ! என்ன காற்று! இப்படிப்பட்ட குளிர்ந்த காற்றை நான் அனுபவித்ததே இல்லை! இதோ இந்தக் கிணற்றுத் தண்ணீர் குடிக்கப் பயன்படுமா?

கிராமவாசி : நன்ருகக் குடிக்கலாம். இதோ இருக்கும் தென்னந்தோப்பு என்னுடையதுதான். சில பனை மரங்களும் இருக்கின்றன. வேண்டியமட்டும் நீ இளநீர் குடிக்கலாம். பனங்காய்களும் வெட்டித் தருகிறேன்.

கோபாலன் : பெரியவரே, முதலில் இந்தக் கிணற்றில் இறங்கிக் கைகால்களைக் கழுவிக்கொள்வோம். பிறகு இளநீர் குடிக்கலாம்.

கிராமவாசி : சரி. அப்படியே செய்யலாம்.

கோபாலன் : ஆ! என்ன தெளிவான தண்ணீர்! கண்ணுடியைப்போல் இருக்கிறதே! குடிப்பதற்கு மிகவும் இனிப்பாக இருக்கிறதே! எங்கள் பட்டணத்துக் குழாய் நீர் இந்தக் கிணற்று நீருக்கு ஒரு சிறிதும் ஒப்பாக இராதே.

கிராமவாசி : தம்பி, அதோ பார், வயல்களில் நெற்கதிர்கள் சாய்ந்திருக்கும் காட்சியை! இப்போது அறுவடைக் காலமாகையால் குடியானவர்கள் எல்லோரும் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிருர்கள். அவர்கள் பாடுபட்டு உழுது பயிரிட்டதன் பலனை நெற்கதிர்கள் காட்டுகின்றன.

கோபாலன் : பயிரிடும் காலம் தவிர மற்றக் காலங்களில் கிராமவாசிகள் என்ன செய்கிறார்கள்?

கிராமவாசி : ஒன்றும் செய்வதில்லை. சிலர் மட்டும் ஏதாவது கூலிவேலை செய்யலாமென்று பட்டணங்களுக்குப் போய்விடுகிறார்கள்.

கோபாலன் : ஏன் அப்படிச் செய்யவேண்டும்? நூல் நூற்றல், கோழி வளர்த்தல், பாய் முடைதல், ஆடைநெய்தல் போன்ற சிறு குடிசைத் தொழில்களைச் செய்வது உங்களுக்கு இலாபகரமானதாக இருக்குமே. வீண்பொழுது போக்காமல் வாழ்க்கை நடத்தலாமே.

கிராமவாசி : தம்பி, உன் யோசனையை ஒப்புக்கொள்ளுகிறேன். நகரத்திலும் பெரும்பாலோர் வீண் பொழுது போக்குகிறார்களே! அதை நீ பார்த்ததில்லையா?

கோபாலன் : அப்படி நினைக்கக் கூடாது. நகரத்தில் வாணிபமும் கைத்தொழிலும் அதிகமாகையால் யாருக்கும் வீண்பொழுது போக்க நேரமே கிடையாது என்று கூறலாம். குறிப்பிட்ட காலத்தில் அவரவர்கள் தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள். ஆனால் அங்குக் கிராமங்களைப்போல் நல்ல காற்று வசதியும் வீட்டு வசதியும் இல்லை என்று சொல்லலாம்.

கிராமவாசி : அதுமட்டுமா? நகரங்களில் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டவன் உயிரோடு வீடுதிரும்புவான் என்ற உறுதி இல்லையே! எங்குப் பார்த்தாலும் வண்டிகளின் நடமாட்டம். மக்களின் நெருக்கடி சகிக்க முடியவில்லை.

கோபாலன் : ஐயா! நகரத்தில் மட்டும் குற்றங் குறைகள் இல்லையென்று சொல்லமுடியுமா? இரண்டி

டங்களிலும் இன்ப துன்பங்கள் உண்டு. அவற்றில் உள்ள குறைபாடுகளை நீக்கி நலமாக வாழ்வதே நமது கடமையாகும். இவ்வளவு நேரம் கிராமத்தின் காட்சிகளைக் காட்டிய தங்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நானும் அடிக்கடி இங்கு வந்து என்னால் ஆன சேவைகளைப் புரிகிறேன். நேரமாகிறது. நான் போய் வருகிறேன்.

பயிற்சி

பொருளறிக :

உறைவிடம்	ஒத்தாசை	சகிக்க	வாணிபம்
ஏது	காட்சி	முடைதல்	வியப்பு

கீழ்வரும் தொடர்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

பச்சைப் பசேலென்று, மாடமாளிகை, சுறுசுறுப்பாக.

எதிர்ப்பதம் கூறுக :

• இன்பம், நெருக்கமான, முன்னேற்றம், தெளிவான.

விடை கூறுக :

1. கிராமத்தில் கோபாலன் கண்ட காட்சிகள் யாவை ?
2. கிராமங்களில் தெருக்களின் அமைப்பு எப்படி இருக்கும் ?
3. நகரத்துக்கும் கிராமத்துக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை ?

கட்டுரைப் பயிற்சி

1. நீ பார்த்த ஏதேனுமொரு கிராமத்தைப் பற்றிப் பத்து வரியில் ஒரு கட்டுரை எழுதுக.

2. கிராம வாழ்க்கை சிறந்ததா? நகர வாழ்க்கை சிறந்ததா? என்பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. கிராமத்தில் நடைபெறும் தொழில்களைப்பற்றிச் சுருக்கி எழுதுக.

இலக்கணப் பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களில் தகுந்த எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை அமைத்து எழுதுக :

1. மாடுகள் வயலில்—
2. —பாடசாலைக்கு ஓடுகிறார்கள்.
3. புலி—கொன்றது.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைத் தனித்தனியே எடுத்து எழுதுக :

1. அகத்திய முனிவர் தமிழை வளர்த்தார்.
2. பசு பால் தரும்.
3. உன்னிடம் ஒரு பேனா இருக்கிறதா?

4. கொலம்பஸ்

உலகம் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று குணகோளார்த்தம்; மற்றொன்று குடகோளார்த்தம். குணகோளார்த்தத்தில்தான் நாம் வசிக்கின்றோம். இந்நிலப் பரப்புக்குத்தான் பழைய உலகம் என்று பெயர். இக் குணகோளார்த்தத்தில் வாழ்ந்து வந்தோர், உலகமே இத்துடன் சரி; வேறு ஒன்றும் இல்லை என்று எண்ணி வந்தனர். ஆனால் **கொலம்பஸ்** என்னும் அறிஞர் மேற்கில் வேறொரு

கண்டத்தைக் கண்டுபிடித்தார். அதனைப் புதிய உலகம் என்று மக்கள் அழைத்து வருகின்றனர். இப்புதிய உலகத்தில் வட அமெரிக்காக் கண்டமும் தென் அமெரிக்காக் கண்டமும் அடங்கும்.

கொலம்பஸ் தளராத ஊக்கமும், அஞ்சா நெஞ்சமும், எண்ணியதை எண்ணியபடி அடையவல்ல திண்மையும் படைத்தவர். 1447-இல் இத்தாலிய நாட்டின் சிறந்த துறைமுகப் பட்டினமாகிய ஜினேவாவில் கொலம்பஸ் அவதரித்தார். அவர் பெற்றோர்கள் செல்வர்கள் அல்லர். ஆயினும் அவர்களால் இயன்றவரையில் கொலம்பஸைச் செல்வமாகப் போற்றிவந்தனர். கொலம்பஸ் சிறுவனாக இருந்தபோதே நிலநூலைக் கற்பதில் மிக்க ஆர்வம் காட்டி வந்தார். மற்றும் தாம் பிறந்த ஊர் துறைமுகப் பட்டினமாக இருந்ததால் கப்பலோட்டிகள் பலருடன் அவருக்கு நெருங்கிய தொடர்பேற்பட்டது. பதினான்கு வயது நிரம்பும் முன்பே கப்பல் தொழிலில் ஈடுபட்டு அத் தொழிலை முறையாகக் கற்றுத் தேர்ந்து சிறந்த மாலுமியாக மாறினார். கப்பல் தலைவனுடைய மகளையும் மணந்துகொண்டார். இது அவருடைய பிற்கால வாழ்க்கைக்குத் துணையாக நின்றது.

அக்காலத்தில் மேலை நாடுகளில் வாழ்ந்து வந்தோர் கிழக்கு நோக்கிப் பிரயாணம் செய்து இந்தியாவை அடையும் வழியைக் கண்டு பிடித்திருந்தனர். உலகம் உருண்டை என்பதையும் உணர்ந்திருந்தமையால் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்தால் இந்தியாவை உறுதியாக அடையலாம் என்று கொலம்பஸ் எண்ணினார். ஐரோப்பியர் அனைவரும்

இந்தியா செல்வமும் செழிப்பும் உடைய நாடு என்பதை உணர்ந்திருந்தனர். அதனல் அவர்கள் இந்தியாவை அடைய வழிகள் பலவற்றைக் காணும் கருத்துடனே இருந்துவந்தார்கள். நிலவழியாக வருதல் பலர்க்கும் பெருந்துன்பம் விளைவித்து வந்தமையினால் கடல் மார்க்கமாக மேற்கு நோக்கிச் சென்று இந்தியாவை அடையும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற வேட்கை கொலம்பஸுக்குப் பிறந்தது. கொலம்பஸ் இரவும் பகலும் இந்தியாவுக்கு வழி கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தார். ஆனால் அவர் ஆசையை நிறைவேற்றுவதில் ஆதரவு அளிப்பவர் ஒருவருமில்லை.

மேற்கு நோக்கிச் சென்றால் இந்தியாவை அடையலாம். ஆனல் யாருக்கு மன உறுதி இருந்தது? மேலும் பண உதவியும் வேண்டியிருந்தது. கொலம்பஸ் மிகவும் ஏழை. இம்முயற்சியை மேற்கொள்ள வேண்டிய அவ்வளவு பணமும் அவரிடத்தில் இல்லையே! 'மன்மிருந்தால் மார்க்கமுண்டு' என்று சொல்லுவது பொய்யாகுமா? 1474-ஆம் ஆண்டில் போர்ச்சுக்கல் நாடு சென்று, அந்நாட்டு அரசனை யணுகித் தம் கருத்தினைத் தெரிவித்தார். அந்நாட்டில் பல்லாண்டுகள் தங்கியிருந்தார். இறுதியாக அரசன் உதவி செய்யான் என்பது தெரிந்தது. ஆனல் அவர் மனம் மட்டும் எதற்கும் சோர்வடைய வில்லை.

பின்னர், அங்கிருந்து புறப்பட்டு ஸ்பெயின் நாடு சென்றார். அந்நாட்டு அரசியைக் கண்டு தம் கருத்தைத் தெரிவித்தார். அரசி கொலம்பஸின் முயற்சியைப் பாராட்டினாள். ஆயினும் முதலில் பண உதவி

செய்ய இசையவில்லை. இறுதியாகத் தன் அணிகளை விற்றேனும் பொருளுதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்தாள். அரசியின் ஆதரவைக் கண்ட கொலம்ப ஸின் மனத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை யாரால் அளவிட்டுக் கூற முடியும்? அவள் கொடுத்த செல்வத்தைக் கொண்டு, **சாந்தமேரியா, பிண்டா** என்ற இரு

பெருங் கப்பல்களும், **நைஞ** என்ற பெரிய படகும் வாங்கினார். 1492-ஆம் ஆண்டில் **பாலோஸ்** என்னும் துறைமுகப் பட்டினத்திலிருந்து கப்பல்கள் கிளம்பின. கொலம்பஸ் மட்டும் மிக்க உற்சாகத்துடன் அவைகளை ஓட்டிச் சென்றார். ஆனால் அவருடன் இருந்தவர்களும்,

அவரை வழியனுப்பியவர்களும் மனத்தில் கலக்கம் அடைந்தனர்.

கரையை விட்டுக் கப்பல்கள் காற்றின் வேகத்துடன் சென்றன. எங்குப் பார்த்தாலும் ஒரே நீல நிறக் கடல். கண்ணுக் கெட்டிய தூரம் வரை ஒரு பறவையையும் காணமுடியவில்லை. இங்ஙனம் பல நாட்கள் கடலில் கப்பலை ஓட்டிச் சென்றனர் ஆனால் கொலம்பஸுடன் இருந்த மாலுமிகள் சிறிது சிறிதாக மனத்தளர்வு அடைந்து வந்தனர். 'இனி நாம் பிறந்த நாட்டைக் காணப்பெறுவோமோ இல்லையோ' என்று எண்ணி எண்ணி ஏக்கமுற்றனர். மனத்தில் அச்சம் குடிகொண்டது. கொலம்பஸின் மேலிருந்த ஆசை வெறுப்பாக மாறியது. எண்ணித் துணியாமல் பெருந்துன்பக் கடலினிடை அகப்பட்டுக்கொண்டமை நினைந்து வருந்தினர்.

இந்த மனநோய் கொலம்பஸையும் பற்றியது. ஆனால் அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் உற்சாகத்துடன் இருந்தார். எல்லா மாலுமிகளையும் ஒருங்கு கூட்டி ஊக்கம் அளித்து வந்தார். "நாம் நம் முயற்சியில் வெற்றி பெற்றால் இந்தியாவுக்குப் புதிய வழி கண்டுபிடித்த பெருமை யாருக்குச் சேரும்? நமக்குத்தானே? நம்மைத்தான் இனிவரும் மக்கள் புகழ்ந்து பேசுவார்கள்; நீங்கள் மனக் கவலையடையாதீர்கள்; இதோ இந்தியாவை அடைந்துவிட்டோம்", என்று கூறித் தேற்றினார்.

இந்நிலையில் அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும் காலம் வந்தது. ஒருநாள் மாலுமிகள் தம் கப்பலருகே பறவைகள் பறந்து செல்லுதலைக் கண்டார்கள்; பர

மானந்தம் கொண்டார்கள். பறவைகள் நடுக்கடலில் பறந்து செல்லா. நாடு அண்மையில்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். மேலும் சிறிது தூரம் சென்றனர். அன்று வெட்டி உலராத சில மரக் கொம்புகளைக் கண்டனர். இரவு நேரமாயிற்று. கரை யோரமாக வெளிச்சத்தைக் கண்டனர். கரையைச் சேர்வது திண்ணம் எனக்கொண்டு எப்போது பொழுது புலருமோ என எதிர்நோக்கி இருந்தனர்.

பொழுது விடிந்தது. அவர்கள் எதிரே ஒரு செழிப் பான நிலப் பகுதியைக் கண்டனர். அங்கு வாழும் மக்களும் நல்ல குணத்துடன் இருந்தனர். கொலம்பஸ் குழுவினர் தாங்கள் அடைந்த அந்தத் தீவிலே ஸ்பெ யின் நாட்டின் கொடியினை நாட்டி அதன்கீழ் நின்று எல்லோரும் வணங்கினர். மாலுமிகள் எல்லோரும் கரையடைந்ததை எண்ணி எண்ணிப் பெருங் களிப் படைந்தனர்.

அச்சமயம் கொலம்பஸுக்குத் தாம் கண்டுபிடித் தது புதிய உலகம் என்று தெரியாது. இந்தியாவைச் சேர்ந்த தீவு என்று எண்ணி அத்தீவுகளை இந்தியத் தீவு கள் என்றும், அந்நாட்டு மக்களை இந்தியர்கள் என்றும் அழைத்தார். பிற தீவுகளுக்குச் சென்று அவற்றை யெல்லாம் பார்வையிட்டார். அவருடன் வந்த எல்லா மாலுமிகளும் இன்பக் கடலில் ஆழ்ந்தனர்; துள்ளிக் குதித்தனர். வாழ்க்கையில் துன்பப்படாமல் இன்பம் வராது என்பதை அவர்கள் உணர்ந்து ஆடிப்பாடி, மகிழ்ந்தனர்.

நாமும் ஏதாகிலும் அரியகாரியத்தைச் செய்ய நினைத் தால் அதனைச் செய்வது முதலில் துன்பமாகத்தானிருக்

கும். அதற்காக நாம் மனச் சோர்வுகொண்டு அதனைக் கைவிடக் கூடாது. குன்றாத ஊக்கத்துடன் அதனை மேற்கொண்டால் நிச்சயமாகக் காரியம் கைகூடும். பிறகு நமக்குப் பேரின்பம் வரும். கொலம்பஸ் தளராத ஊக்கத்துடன் எதையும் பொருட்படுத்தாமல் சென்றதனால்தானே இன்று புதிய உலகத்தைக் கண்டுபிடித்தவர் என்று நாம் அவரைப் போற்றுகின்றோம்?

பயிற்சி

பொருளறிக :

அவதரித்தல்	குணம்	நிலநூல்
இறுதியாக	குன்று	புலரும்
உறுதியாக	கோளார்த்தம்	மாலுமி
களிப்பு	தளராத	வேட்கை
குடம்	திண்மை	

கீழ்க்காணும் சொற்றொடர்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக :

திடீரென, எண்ணி எண்ணி, ஆடிப்பாடி.

விடை தருக :

1. புதிய உலகத்தைக் கண்டு பிடித்தவர் யார்? அவர் எங்கே பிறந்தார்?

2. அவர் இளமை வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

3. அவர் தம் எண்ணம் நிறைவேற என்ன செய்தார்?

4. புது உலகம் நெருங்கிவிட்டது என்பதை மாலுமிகள் எவ்வாறு அறிந்தனர்?

5. கொலம்பஸ் வாழ்க்கையால் நாம் அறிவது யாது?

இலக்கணப் பயிற்சி

அறுவகைப் பெயர்கள் :

1. ராமன், குயில், மரம்-பொருளைக் குறிக்கும்.
— பொருட் பெயர்.

2. சென்னை, தோட்டம், பள்ளிக்கூடம்-இடத்தைக் குறிக்கும். — இடப் பெயர்.

3. நாள், திங்கள், வாரம்-காலத்தைக் குறிக்கும்.
— காலப் பெயர்.

4. கண், குளம்பு, இலைகள்-உறுப்பைக் குறிக்கும்.
— சினைப் பெயர்.

5. அன்பு, இனிமை, தீமை-குணத்தைக் குறிக்கும்.
— பண்புப் பெயர்.

6. ஓடுதல், பாட்டு, உதவி-தொழிலைக் குறிக்கும்.
— தொழிற் பெயர்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்களை எழுதி அவற்றின் வகையினையும் குறிப்பிடுக :

1. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.
2. மகாத்மா காந்தி அன்பு நிறைந்தவர்.
3. நேற்று என் அண்ணன் காலில் ஒரு முள் தைத்தது.
4. ஏழைக்கு உதவி செய்.
5. கற்றல் கேட்டல் கல்விக் கழகு.

5. பாட்டுக்கொரு புலவன்

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்ற கீதம் திக்கெட்டும் பரவும் இக்காலத்தில் பாரதியாரை அறியாத பள்ளிக்கூடப் பிள்ளைகள் யாரும் இரார். தாய்நாட்டுக்கு விடுதலை கோரிப் பாட்டுப் பாடி மக்களுக்குத் தேசிய உணர்ச்சி யளித்தவர் நம் பாரதியார். அல்லும் பகலும் தாய்நாட்டு விடுதலைக்காக உழைத்த மகாகவி பாரதியார். பைந்தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார். உயிர்க்கவி, அமர கவி, புரட்சிக் கவி, சுதந்திரக் கவி, வரகவி என்று எப்படிப் பாராட்டினாலும் அஃது அவருக்குப் பொருத்தமாகவே இருக்கும்.

பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணியம் என்பது. பாரதியார் திருநெல்வேலிக் கடுத்த எட்டையபுரத்தில் கி. பி. 1882-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் நாளன்று பிறந்தார். அவர் தந்தையார் **சின்னசாமி ஐயர்**. தாயார் **இலட்சுமி அம்மாள்**. சின்னசாமி எட்டையபுரம் சமஸ்தானப் புலவராகத் தொண்டாற்றி வந்தார். பாரதியார் சிறுவயதிலேயே தம் தந்தையைப் போலவே கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் பாடிய பாடல்களைக் கேட்டு எட்டையபுரம் ஜமீன்தார் மிகவும் இன்பம் அடைவார். பாரதியாருடைய இளம் பருவத்திலேயே இலட்சுமியம்மாள் காலமானார். சின்னசாமி ஐயர், அன்னையின் பிரிவால் கலங்காதிருக்கும்படி பாரதியாரை மிகவும் அன்போடு வளர்த்து வந்தார்.

பாரதியார் சிறுவயதிலேயே ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறந்த அறிவுடையவராக விளங்கினார். அவர்

ஆரம்பக் கல்வி பயின்றதும் திருநெல்வேலியில் உள்ள ஹிந்து கலாசாலையில் சேர்க்கப்பட்டார். ஆங்கு மெட்ரிகுலேஷன் வரையில் பயின்றார். அதன் பிறகு பாரதி

யார் காசியில் உத்தியோகம் புரிந்து வந்த தம் மாமனின் ஆதரவில் அங்குள்ள மத்திய இந்துக் கல்லூரியில் படித்தார். அவரது நுண்ணறிவையும் கவிபாடும் திறமையையும் கண்ட ஆசிரியர்களும் நண்பர்களும் அவரைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினர்கள்.

பள்ளிப் படிப்பில் பாரதியார் அவ்வளவாக நாட்டம் செலுத்தவில்லை. தாய் நாட்டுக்கும் தாய் மொழிக்

கும் சேவை புரிவதிலேயே அவர் விருப்பம் சென்றது. மலை, ஆறு, சோலை, வானம், கடல் இவற்றைக் கண்டு அவர் ஆனந்திப்பார். அவற்றின் இயற்கை எழில் புனைந்து கவிகள் பாடுவார். உரைநடை எழுதுவது போல மிக விரைவில் அழகிய கருத்தமைந்த பலபாடல் களைப் பாடுவார். அவருடைய கவிதைத் திறமையைக் கண்டே புலவர்கள் அவருக்குப் **பாரதி** என்னும் பட்டப் பெயரைச் சூட்டினார்கள்.

பாரதியாரின் அறிவுத் திறத்தைக் கண்ட எட்டைய புரம் ஜமீன்தார் அவரைத் தம் அரசவைக் கவிஞராக இருக்கும்படி வேண்டினார். அவர் விருப்பப்படியே எட்டையபுரம் அவைக்களப் புலவராகப் பாரதியார் சிறிது காலம் பணியாற்றி வந்தார். எனினும் அரண் மனை உத்தியோகம் பாரதியாருக்குப் பிடிக்கவில்லை. பின்னர் மதுரைச் சேதுபதி கலாசாலையில் சிறிதுகாலம் தமிழாசிரியராய்ப் பணியாற்றி அந்த வேலையையும் விட்டு விலகிக் கொண்டார்.

தேசப் பணியில் ஆர்வம்மிக்க பாரதியார், சென்னை சென்று **'சுதேசமித்திரன்'** துணையாசிரியராகத் தொண்டு புரிந்தார். அதற்குப் பிறகு **'இந்தியா'** என்னும் வாரப் பத்திரிகையின் ஆசிரியரானார். ஆங்கில ஆட்சியின் கொடுமைகளைப்பற்றி அதில் அடிக்கடிக் கட்டுரைகள் தீட்டுவார். அவற்றைப் படித்துப் பார்த்த மக்களில் பலர் நாட்டு உணர்ச்சி மிக்கவர்களாக விளங்கினார்கள். பாரதியாரின் போக்கைக்கண்ட அரசாங்கத்தினர் அவர் மீது ஆத்திரங் கொண்டு அவருக்குப் பல தொல்லைகள் கொடுக்கலாயினர். 'இந்தியா' என்னும் பத்திரிகையை நடத்தக்கூடாது என்று தடையுத்தரவு

விதிக்கப்பட்டது. அப்பத்திரிகையின் உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

பாரதியாரும் கைதுசெய்யப்படலாம் என அன்பர்கள் பலர் ஐயுறலாயினர். அவர் கைது செய்யப்பட்டால் தேசப் பணியும் தமிழ்த் தொண்டும் நாசமாகுமே என ஏங்கினார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பாரதியார் பிரெஞ்சுக்காரரின் ஆட்சியிலிருந்த புதுச்சேரியை அடைந்தார். புதுச்சேரி ஆங்கிலேய ஆட்சியின் எல்லையை விட்டு நீங்கி இருந்ததால் பிரிட்டிஷ் அரசாங்கத்தினரால் அவரைக் கைது செய்ய முடியவில்லை.

புதுச்சேரி பாரதியாருக்குப் புதிய ஊராக இருந்ததால் பல தொல்லைகள் ஏற்பட்டன. அரசியல் ஒற்றர்கள் அவருக்குக் கொடுத்த தொல்லைகளுக்கு அளவே இல்லை. அத்துடன் வறுமைப் பிணியும் அவருக்குத் துன்பம் கொடுத்தது. அந்தக் காலத்திலும் பாரதியார் சிறிதும் மனந்தளராமல் வீர உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் பல பாடல்களும் கட்டுரைகளும் எழுதி வெளியிட்டார்.

பாரதியாரின் புலமையும் தேசபக்தியும் கண்டு புதுச்சேரியில் அரவிந்த யோகியும், வ. வெ. சுப்பிரமணிய ஐயரும் அவருக்கு நண்பராயினர். துன்பத்திலும் இன்பத்திலும் அவர்கள் இருவரும் நம் கவிஞருக்கு உற்ற துணைவர்களாக இருந்தனர். அங்குப் பாரதியார் அரவிந்தரின் உதவியால் 'கர்ம யோகி' என்னும் பத்திரிகையை நடத்திவந்தார். அங்கிருந்தே சென்னையில் சுதேசமித்திரனுக்குக் கட்டுரைகள், கவிதைகள் எழுதிவந்தார். அதன் பொருட்டுச் சுதேசமித்திரனை

நடத்தி வந்த அரங்கசாமி ஐயங்கார் பாரதியாருக்கு மாதம் ஒன்றுக்கு முப்பது ரூபா அனுப்பி உதவினர்.

சொந்த நாட்டை விட்டுப் புதுச்சேரியில் எத்தனை நாட்களுக்குக் காலம் கழிப்பது! பாரதியாருக்குப் புதுவை வாழ்க்கையும் கசந்தது. 1920-ஆம் ஆண்டில் அவர் மீண்டும் சென்னைக்குப் புறப்பட்டார். சுதேசமித்திரன் துணையாசிரியராகவே மறுபடியும் பதவி ஏற்று அப் பத்திரிகையைச் சிறந்த முறையில் நடத்திவந்தார். அவர் சென்னையில் திருவல்லிக்கேணியில் உள்ள துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் வாழ்ந்து வந்தார்.

கவிஞர் பாரதியார் அருங்குணங்கள் பல அமையப்பெற்றவர். ஜாதி பேதம் என்பதை அவரிடம் சிறிதும் காணமுடியாது. சுதந்திரமான வாழ்க்கையிலேயே அவருக்குப் பற்று உண்டு. அடிமை வாழ்வை அறவே வெறுப்பார். அவரிடத்தில் ஆடம்பரம் எதுவும் இல்லை. எல்லோரும் அவரிடம் எளிதாகப் பழகுவார்கள். ஏழை எளியவர்கட்குத் தம்மால் இயன்ற உதவிகளை எப்போதும் செய்து வந்தார். தேசிய உணர்ச்சியில் ஒப்புயர்வில்லாத கவிஞராய் விளங்கினர். அவர் பாடல்கள் சொல்வளமும் பொருள்வளமும் உடையனவாகத் திகழ்ந்தன. அவர் எத்தகைய துன்பம்வரினும் உள்ளம் கலங்காதவர். இந்தியத் தந்தை மகாத்மா காந்தியடிகளிடம் அவர் அளவற்ற அன்பு பூண்டிருந்தார்.

இத்தகைய அரும் பெரும் கவிஞர் சில நாள் உடல் நலம் இன்றி 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாள் தம் இளமைப் பருவத்திலேயே இவ்வுலக வாழ்வை நீத்தார். பாரதியார் இறக்கும்போது

அவருக்கு வயது முப்பத்தொன்பதே. அவர் இன்னும் உயிருடன இருந்தால் விடுதலைபெற்ற நம் பாரத நாட்டைக்கண்டு மனம் பூரிப்படைவார் அல்லவா?

பாரதியாரின் தமிழ்த்தொண்டையும் தேசப் பணியையும் பாராட்டித் தமிழ் மக்கள் அவருக்கு எட்டையபுரத்தில் **பாரதி நினைவுக் கட்டடம்** என்று ஒரு கட்டடத்தை அழகிய முறையில் அமைத்துள்ளனர். அக் கட்டடம் மிகவும் உன்னதமாக இருந்து பாரதியாரின் பெருமையை நாட்டு மக்களுக்கு நினைவூட்டுகின்றது. மாணவ மணிகளே! நீங்களும் பாரதியாரின் அருங் குணங்களையும் நெறி முறைகளையும் பின்பற்றி நாட்டுக்கு நலம் பல புரிவீர்களாக.

பயிற்சி

பொருளறிக:

அமரகவி	எழில்	கசந்தது
அரசவைக் கவிஞர்	ஐயம்	கேதம்
அவைக்களம்	ஒற்றர்தன்	கைது

திக்கு	நாட்டம்	பணியாற்றி
திங்கள்	நெறிமுறை	புரட்சிக்கவி
தேசியம்	நுண்ணறிவு	புனைந்து

கீழ்க்காணும் தொடர்மொழிகளை வாக்கியங்களில் அமைக்க;

அல்லும் பகலும், துன்பத்திலும் இன்பத்திலும், ஏழை எளியவர், நெறிமுறைகள்.

விடை கூறுக:

1. "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்று பாடியவர் யார்?
2. பாரதியார் இளமைப் பருவத்தைப் பற்றிக் கூறுக.
3. 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பது எப்படிப் பாரதியாரிடம் உண்மையாயிற்று?
4. பாரதியார் சிறந்த தேசபக்தர் என்று எப்படிப் புலப்படுகின்றது?
5. பாரதியார் புதுவைக்குச் செல்லக் காரணம் என்ன?
6. புதுவையில் பாரதியாருக்கு உதவி செய்தவர்கள் யாவர்?
7. பாரதியார் அருங்குணங்கள் யாவை?

தெரிந்து கொள்:

பாரதியார் பாடல்களின் உரிமையைத் தற்போது அரசாங்கத்தாரே வாங்கிக்கொண்டு அவர் கவிதைக்குப் பெருமை அளித்திருக்கின்றனர்.

இலக்கணப் பயிற்சி

ல, ள, ன, ண இவைகளின் வேறுபாட்டைத் தெரிந்து கொள்க.

1. மாடு புல் தின்னும்.
2. கிளி ஓர் அழகான புள்.
3. உன் மனம் எதை நாடுகிறது?
4. முல்லை மணம் வீசுகிறது.

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுதுக:

1. ——இரும்பைத் தேய்க்க உதவும். (அறம். அரம்)
2. குரங்கு மரத்தைவிட்டுக் கீழே——(இரங்கிற்று. இறங்கிற்று)
3. அவன் கூலிக்கு—செய்தான். (வேலை, வேளை)
4. அவன் ——சொற்கள் மிகவும் பொருத்த மானவை. (கூறிய, கூரிய)
5. ஆசிரியர் பாட்டுக்கு——கூறினார். (உரை, உறை)

கீழ்வரும் சொற்களைப் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

அரை, அறை	குளம், குலம்
ஒலி, ஒளி	கூரை, கூறை
காலை, காளை	நிலம், நீளம்

6. சிறிய உயிர்களின் அரிய செயல்கள்

மனிதன் ஆறறிவுடையவன். ஒவ்வொரு மனிதனும் தான் அரிய செயல்களைச் செய்து பெரும் புகழும் பெருவாழ்வும் அடையவேண்டும் என்று விரும்புகிறான். சிலர் ஓயாது உழைத்து அரிய செயல்களைச் செய்வார்கள்; சிலர் வாயால் கூறுவார்கள்; ஆனால் செய்கையில் முடியாமல் திகைப்பார்கள். மனிதனைவிட இழிந்த உயிர்களாகிய குருவி, எறும்பு, தேனீ, நாங்கூழ்ப்புழு, சிலந்தி முதலியவற்றின் செயல்கள் மனித

ராலும் செய்ய முடியாதபடி உன்னதமாக விளங்குகின்றன. தூக்கணாங் குருவிகள் மரக்கிளைகளில் தொங்கவிட்டிருக்கும் அழகிய கூடுகளைப் போன்ற

கூடொன்று நம்மால் செய்ய இயலுமா? இயலாதே! குளவிகள் அரக்குக் கூடுகளை அமைப்பதுபோல் நம்மால் அமைக்க முடியுமா? முடியாதே! சிலந்தி எண்ணிய வளவில் துண்ணெனப் பின்னி முடிக்கும் வலையொன்று நம்மால் இயற்றலாகுமா? ஆகாதே! தேனீக்களின் வனப்பு மிக்க கூட்டைப்போல நம்மால் ஒரு கூடு கட்டமுடியுமா? முடியாதே!

தேன் என்னும் போதே நம் நாக்கில் நீர் சுரக்கிறது. இவ்வினிய தேனைத் திரட்டும் உயிர்கள் சிறிய ஈக்களே அல்லவா? தேனீக்களில் நான்கு இனங்கள் உண்டு. அவை கொம்புத்தேனீ, கொசுத்தேனீ, மலைத் தேனீ, அடுக்குத்தேனீ என்பவை. தேனீக்களின் கூட்டை ஓர் அரசாங்கம் என்றே சொல்லலாம். ஒவ்வொரு கூட்டிலும் ஒரு பெண் ஈ இருக்கும். அதுதான் ராணி ஆகும். வேலைக்கார ஈக்கள் மலர்களில் உள்ள தேனைத் திரட்டிக் கூட்டிற்குள் கொண்டுவந்து சேர்க்கும். சில ஈக்கள் கூட்டில் உள்ள ஈக் குழவிகளை இனிய மதுவருந்தச் செய்து சீராட்டி வளர்க்கும். சில ஈக்கள் தேன் கூட்டையும் அதில் அமைந்துள்ள சிற்றறைகளையும் பழுது பார்க்கும். சிற்றுயிர்களாகிய இவற்றின் ஒற்றுமைதான் என்னே! வேலைக்கார ஈக்களில் ஒன்று சோம்பித்திரியின் ஈயரசி அதனைத் தண்டித்துக் கூட்டை விட்டே வெளியில் ஓட்டிவிடும். ஒற்றுமையும் உழைப்பும் உடையவரே இன்னல் இன்றி இன்பமாக வாழ்வார் என்பதை ஈக்கள் நமக்கு நினைவுபடுத்துகின்றன.

நாங்கூழ்ப் புழுவை நாம் அசட்டை செய்கிறோம். ஆனால் அது செய்யும் அரிய சேவையை நாம் ஒரு

நாளும் மறக்கமுடியாது. இச்சிற்றுயிர் தன் மெல்லிய உடலால் மண்ணைக் கிளறி மேல்மண் கீழ்மண்ணாக வும், கீழ்மண் மேல்மண்ணாகவும் செய்து காற்றை உட் செலுத்திச் செடியைச் செழிப்புடன் வளரச்செய்கிறது. மண்ணை உண்டு மண்ணைக் காக்கும் இச்சிறிய உயி ரின் மாண்புதான் என்னே! இதனாலன்றோ நாங்கூழ்ப் புழுவை **'உழவனின் நண்பன்'** என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இதிலிருந்து பெரியோர்கள் தந்நலம் பாராமல் பிறர் நலத்துக்காகவே உழைப்பார்கள் என்னும் நீதி நமக்குப் புலனாகிறது.



இனிச் சிலந்தியின் அரிய செயல்களையும் அஃது உணவின் பொருட்டுக் கையாளும் தந்திர முறைகளை யும் நோக்குவோம். சிலந்தி வானத்தில் பறக்கும் பூச்சிகளை வலைகட்டிப் பிடிக்கும் வேடன் என்றே கூற லாம். அது தன் வலையை வீட்டின் மூலை முடுக்குகளி லும், செடிகொடிகளிலும், மரக்கிளைகளிலும் கட்டுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிலந்தி தன்னிடத்திலிருந்து உண்டாகும் நூலால் வலைகட்டி அவ்வலையின் நடுவே

மறைந்திருக்கும். ஏதேனும் ஒரு பூச்சி தன் வலையில் வந்து சிக்கிக் கொள்ளின், உடனே அதன் மேல் பாய்ந்து தன் மெல்லிய நூலால் அதைச் சுற்றிச் சுற்றிக் கட்டிவிடும். பிறகு செந்நீரை உறிஞ்சி அப்பூச்சியைக் கொல்லும். பெரிய பூச்சிகள் வலையில் வந்துபடின் சிலந்தி என்ன செய்யும் தெரியுமா? தன் வலை பழுதுபடும் என்று அஞ்சி அப்பூச்சி சிக்கிய இழைகளை அசைத்து அதனை வெளியே விடுவிக்கும். சிலந்தியிடம் ஆச்சரியப்படத்தக்க ஒரு குணம் உண்டு. அது தன் இனத்தைச் சார்ந்த வேறொரு சிலந்தி தன் வலையில் சிக்கிக்கொண்டால் அதைக் கொல்வதில்லை; தன் காலால் அது உட்கார்ந்திருக்கும் நூலை அசைத்து வெளியேற்ற முயலும். அந்த வேற்றுச சிலந்தி தன் வலையை விட்டு நீங்காவிடின் அது தன்னுடன் போர் செய்ய வந்திருப்பதாகக் கருதும். இரண்டும் போர் செய்யும். போரில் தோல்வியடைந்த சிலந்தி வாழ விரும்பாமல் உயிர் விடும். 'மான மழிந்தபின் வாழாமை முன் இனிதே' என்பதன் கருத்தை இச்சிற்றுயிர்களும் பின்பற்றி நடப்பது நமக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகிறதல்லவா?

எறும்புகள் பார்வைக்குச் சிறியனவாக இருப்பினும் அவற்றின் அறிவும் செயலும் நமக்கு வியப்பை அளிக்கும். வரிசை வரிசையாகத் தலைவன் பின்னே அணிவகுத்துச் செல்லும் போர்வீரர்களைப் போன்று எறும்புகள், சாரைசாரையாக ஊரும் காட்சியை என்னென்பது! சோம்பல் என்பதே எறும்புகளிடம் சிறிதும் காண முடியாது. தம் உடல் அளவினும் பல நூறு மடங்கு பெரிய உணவுப் பொருள்களையும் அவை ஒற்று

மையாகக் கவ்விப் பற்றித் தம் புற்றில் கொண்டு சேர்க்கும் செயலைக் கண்டு யார்தாம் வியப்புறுர்? தின்பண்டங்களை எறும்புகளின் வாயில்படாமல் எவ்விடத்தில் ஒளித்து வைப்பினும் அங்கும் இத்தின்பண்டத் திருடர்கள் எப்படியோ வந்து நமது தின்பண்டத்தைக் கொள்ளைகொண்டு போவதைக் கண்கூடாகப் பார்க்கலாம். மனிதர்களில் சிலர் தம் கையிலுண்டானபோது செல்வத்தைக் கண்டபடி செலவழித்துப் பிற்கால வாழ்வில் பொருள் முட்டுப்பாட்டால் துன்பம் அடைகின்றனர். அங்ஙனமில்லாமல் எறும்புகள் கோடைக்காலமெல்லாம் ஓயாது உழைத்துச் சேர்த்த உணவுப் பொருள்களை மாரிக்காலத்தில் உறவினரோடு உண்டு களிக்கும்.

மனிதர்களில் பலர் தமக்கு ஏதாவது ஒரு பொருள் அகப்படின் அதனைப் பிறர்க்குக் காட்டாமல் தாமே அனுபவிப்பர். எறும்புகளில் ஒன்றுக்குத் தரையில் ஒரு சிறிது உணவுப் பொருள் தென்பட்டாலும், அது தன் இனத்தினரைத் திரள்திரளாக அழைத்து வந்து உண்ணும்; எஞ்சிய உணவுப் பொருளை ஒவ்வொரு எறும்பும் தன் வாயில் கவ்விக்கொண்டு புற்றில் கொண்டுபோய்ச் சேர்க்கும். சில எறும்புகள் ஒளியைக் கொடுக்கும் மின்மினிப் பூச்சிகளைப் போன்ற உயிர்களைத் தம் புற்றில் வைத்து உணவு கொடுத்துக் காப்பாற்றுகின்றனவாம். ஒருவகை எறும்புகள் தானியங்களைப் பயிரிட்டுப் பயன் பெறுகின்றனவாம். மனித சமூகத்தில் காணப்படுவது போலவே எறும்புகளும் தமக்குள் தலைவனை ஏற்படுத்தித் தம் தலைவன் ஆணைப்படியே எல்லாக் காரியங்களையும் நடத்தி அமைதியாக வாழ்கின்றன என்று அறி

ஞர்கள் கூறுகிறார்கள். எறும்புகளைப் பார்க்கும் ஒவ்வொரு மனிதனும் சோம்பலை ஒழித்துச் சுறுசுறுப்பாக இருக்க வேண்டுமென்று உறுதிகொள்வது நலம்.

பயிற்சி

பொருளறிக :

அவம்	குழவி	திகைத்தல்
ஆணை	சிராட்டி	மாரிக்காலம்
ஊர்தல்	சுரத்தல்	மாண்பு
களித்தல்	திரட்டும்	முட்டுப்பாடு

கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்மொழிகளை அமைத்து வாக்கியங்களை எழுதுக :

பேரும் புகழும், ஊரும் பேரும், சுற்றிச் சுற்றி, வரிசை வரிசையாக, சுறுசுறுப்பு, தெரிந்தும் தெரியாமலும்.

விடை கூறுக :

1. தேனீக்கள் தேனைச் சேகரிக்கும் முறை யாது?

2. "உழவனின் நண்பன்" என்று எதற்குப் பெயர்? ஏன்?

3. சிலந்தியிடத்தில் சிறப்பாகக் காணப்படும் குணம் என்ன?

4. "தின்பண்டங்களின் திருடன்" என்று எதற்குப் பெயர்? ஏன் அதற்கு அப்பெயர் வந்தது?

5. இப் பாடத்திலிருந்து நீங்கள் அறிந்துகொள்வன யாவை?

இலக்கணப் பயிற்சி

சீதை, மாடு, அரசன், கழுகு, கிளி, உணவு, ஒருவன், மகன், தருமன், விரல், சிறுமி, நாற்காலி, முருகன்—இ

பெயர்களில் பகுத்தறிவு உள்ளனவற்றையும், பகுத்தறிவு இல்லாதனவற்றையும் தனித்தனியே எடுத்து எழுது.

பகுத்தறிவு உள்ளவை—உயர்திணை
பகுத்தறிவு இல்லாதவை—அஃறிணை

உனக்குத் தெரிந்த ஐந்து உயர்திணைப் பெயர்ச் சொற்களையும் ஐந்து அஃறிணைப் பெயர்ச் சொற்களையும் குறிப்பிடுக.

தகப்பனார், அரசன் - ஆணைக் குறிக்கும் பெயர்கள். —ஆண்பால்

தாயார், அரசி - பெண்ணைக் குறிக்கும் பெயர்கள். —பெண்பால்

மக்கள், நகரத்தார் - பலரைக் குறிக்கும் பெயர்கள். —பலர்பால்

குருவி, பேனா - ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்கள். —ஒன்றன்பால்

குருவிகள், பேனாக்கள் - பல பொருளைக் குறிக்கும் பெயர்கள். —பலவின்பால்

ஆண்பால் கூறுக:

குருடி, தயிர்க்காரி, மாணவி, அவள், தங்கை.

பெண்பால் கூறுக:

அரசன், களிறு, குமாரன், மாமன், இவன்.

7. கப்பல் ஓட்டிய தமிழன்

இன்று நமது நாடு சுதந்திரம் பெற்ற நாடாக விளங்கு கின்றது. நம்நாடு அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறப் பாடுபட்டோர் பலராவர். அவர்கள் அல்லும் பகலும் நாட்டு நலத்துக்காகவே தம் உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் தியாகம் செய்தனர். அன்னாரின் உழைப்பினாலேயே இன்று நாம் சுதந்திரம் பெற்ற மக்க ளாகத் திகழ்கிறோம். தாய்நாட்டுக்காக உழைத்த தேசிய வீரர்களுள் **வ. உ. சிதம்பரம் பிள்ளை** அவர்களும் ஒருவராவர்.

சிதம்பரம் பிள்ளை கி. பி. 1873-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாளில் தூத்துக்குடிக்கு அடுத்த ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தகப்பனார் பெயர் **உலகநாதப் பிள்ளை** என்பது. அவர் இளமைப் பருவத்திலேயே தமிழிலும், ஆங்கிலத் திலும் சிறந்த புலமை பெற்றார். பின்னர் நீதிக்கலையில் தேர்ச்சி அடைந்து ஒட்டப்பிடாரத்திலேயே வழக்கறிஞ ராகப் பணியாற்றி வந்தார்.

சிதம்பரம் பிள்ளை மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் உடையவராக விளங்கினார். அவர் பணக்காரர் ஏழை என்று பாராமல் எல்லோரிடமும் அன்புடன் பழகி வந்தார். ஏழைகளுக்குத் தம்மால் இயன்ற உதவி களைப் புரிந்தார்.

அவர் தமது வழக்கறிஞர் தொழிலைச் சிறிதும் குற்றம் குறைவில்லாமல் நடத்தி வந்தார். எனினும், வழக்கறிஞர் வேலையிலேயே அவர் தம் வருமானத்தை வளர்க்க நினைக்கவில்லை. தேச சேவை புரிவதிலேயே அவருக்கு அவா ஏற்பட்டது.

ஐரோப்பியர் கப்பல் வாணிபத்தால் கொள்ளை இலாபம் பெறுவதைச் சிதம்பரம்பிள்ளை கண்டார். அந்த இலாபம் முழுவதும் ஐரோப்பியருக்கே கிடைப்பதைக் கண்டு வருந்தினார். நம் நாட்டு மக்களும் மூலதனம்

வைத்துக் கப்பல் வாணிபம் நடத்தி வளமுற வாழ வேண்டுமென்று விரும்பினார். தமது விடாமுயற்சியினால் செல்வர் பலரின் கூட்டுறவு பெற்று விரைவில் **"சுதேசிக் கப்பல் கம்பெனி"** என்று ஒரு கம்பெனியைத்

தொடங்கி நடத்திஞர். தூத்துக்குடி ஒரு சிறந்த துறைமுகப்பட்டினமாகையால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்கள் சிதம்பரம் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கம்பெனி மூலமாகவே பெரிதும் நடைபெற்று வந்தன. சிதம்பரம் பிள்ளையின் செல்வாக்கைக் கண்ட ஐரோப்பியர் பொருமை கொண்டு, "எங்களுடன் போட்டி போட வேண்டாம். உங்கள் கப்பல் வியாபாரத்தை நிறுத்திக் கொண்டால் இலட்சம் ரூபாய் தருகிருேம்," என்று கூறினார். பிள்ளை அவர்கள் அதற்கு ஒரு சிறிதும் இணங்கவில்லை. அதனுல் ஐரோப்பிய வர்த்தகர்கள் அவருக்குச் சில இடையூறுகள் புரியலாஞர்கள். பிள்ளையவர்கள் எதற்கும் அஞ்சாமல் வாணிபத்தைச் சீரிய முறையில் நடத்தி வந்தார். அவர் செலுத்திய இரண்டு கப்பல்களில் ஒன்றின் பெயர் "**லாஸோ**" மற்ருென்றின் பெயர் "**காலியா**".

. பிள்ளையவர்கள் நம் நாடு அடிமைத் தளையிலிருந்து நீங்கி உரிமை பெறவேண்டும் என்று விரும்பிஞர். திலகர் போன்ற தேசத் தலைவர்களின் வழியைப் பின்பற்றித் தேசத்துக்கு உழைக்கலாஞர். பிரிட்டிஷ் ஆட்சியாளரின் கொடுமைகளை மக்களுக்கு உணர்த்தவேண்டுமென்று **சுப்பிரமணிய சிவா** என்னும் தேச பக்தருடன் சேர்ந்து ஆங்காங்கே சொற்பொழிவாற்றிஞர். அது கேட்டு மக்கள் அரசாங்கத்தாரை வெறுக்கத் தொடங்கிஞர்கள். சிதம்பரம் பிள்ளை தம் வழக்கறிஞர் தொழிலையும் கைவிட்டுக் காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து நாட்டின் விடுதலைக்கான பிரசாரங்களைச் செய்து வந்தார். மக்கள் அந்நிய நாட்டுப் பொருள்களை வாங்காமல்

சுதேசப் பொருள்களையே வாங்கவேண்டும் என்று கூறினார். அவர் பேச்சைக் கேட்டுத் தேசாபிமானிகளில் பலர் மேனாட்டுத் துணிகளைத் தீக்கிரையாக்கினர்.

சிதம்பரம் பிள்ளை மக்களின் தேசிய உணர்ச்சியை வளர்ப்பதற்காகத் திருநெல்வேலியில் **தேசாபிமான சங்கம்** என்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார். தூத்துக்குடியில் ஐரோப்பிய முதலாளிகள் நடத்திய பஞ்சாலைகளில் தொழிலாளர்கள் குறைந்த கூலி பெற்று வருந்தினார்கள். அது கண்ட சிதம்பரம் பிள்ளை, அவர்களுக்குப் போதுமான கூலி கொடுக்குமாறு ஆலை முதலாளிகளிடம் போராடினார். அவர்கள் அவர் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை. அதனால் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தில் பிழைப்புக்கு வழியின்றித் தொழிலாளர் திகைத்தனர். நம் பிள்ளையவர்கள் செல்வர் பலரிடம் நன்கொடை வாங்கி அத்துன்பத்தை நீக்கினார்.

1908-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ஆம் தேதி காங்கிரஸ் மகா சபையின் தலைவர்களில் ஒருவரான **விபின சந்திர பாலர்** என்பவர் விடுதலை ஆனார். அவர் விடுதலையை நாடெங்கும் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றன. அதனால் அரசாங்கத்தார் பொதுக் கூட்டம், ஊர்வலம் போன்ற எதுவும் நடத்தக் கூடாதெனத் தடை உத்தரவு போட்டுவிட்டார்கள். ஆனால் பிள்ளை அவர்கள் அந்தத் தடையையும் மீறிப் பொதுக் கூட்டத்தில் வீர முழக்கம் செய்தார். திருநெல்வேலி ஜில்லா முழுவதும் சிதம்பரம் பிள்ளையும் சிவா'வும் நிறைந்த செல்வாக்கு உடையவர்களாக இருந்தனர். அதனால் வெள்ளையர் ஆட்சியின் அமைதிக்குப் பங்கம் விளையும் என்று கருதிய ஜில்லாக் கலெக்டர்,

அவர்கள் இருவரும் ஜில்லாவை விட்டு வெளியேற வேண்டும் என உத்தரவிட்டார். அந்த உத்தரவையும் இருவரும் மறுத்தனர். அதனால் சிவாவும் சிதம்பரனாரும் கைது செய்யப்பட்டார்கள். ஜில்லா நீதிபதி சிதம்பரம் பிள்ளை அவர்கள் மீது பல குற்றங்களைச் சுமத்தி இருபது ஆண்டுகள் சிறைத்தண்டனை அளித்தார்.

உயர்நீதி மன்றத்தால் சிதம்பரம் பிள்ளை அவர்களின் சிறைத்தண்டனை ஏழு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. சிறையில் நம் பிள்ளையவர்கள் பெற்ற தொல்லைகளுக்கு அளவே இல்லை. சிறையில் அவர் செக்கும் இழுத்தார்; உலக்கையால் நெல்லும் குத்தினார். எனினும் அவர் மனம் வருந்தாமல் சிறையில் கிடைத்த சிறிது ஓய்வு நேரங்களில் தமிழ் நூல் ஆராய்ச்சி செய்து வந்தார். இத்தகைய தியாகியை இந்தியா என்றும் மறக்க முடியுமா? 1912-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சிதம்பரனார் சிறையிலிருந்து விடுதலை பெற்றார்.

சிறையிலிருந்து வெளிவந்த சில நாட்களில் பிள்ளை அவர்கள் வறுமையினாலும் துன்பப்பட நேர்ந்தது. பிள்ளையவர்கள் வறுமையிலும் செம்மை யுடையவராய் இருந்தார். தேசத்தின் திலகம் போன்ற சிதம்பரம் பிள்ளை சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு 1936-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார்.

மாணவர்களே! நீங்களும் சிதம்பரம் பிள்ளை அவர்களைப் போலவே தேசப்பற்றும், மொழிப்பற்றும் உடையவர்களாக நாட்டுக்கு நன்மை புரிந்து வாழ்வீர்களாக.

பயிற்சி

பொருளறிக :

அவா	சிரிய	பங்கம்
அன்னூர்	செவிசாய்த்தல்	பிரசாரம்
அடிமைத்தளை	தியாகி	மூலதனம்
ஆதிக்கம்	தேசாபிமானம்	வளமுற
இடையூறுகள்	நீதிக்கலை	வழக்கறிஞர்

இத்தொடர்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

பணியாற்றி, இடையூறுகள், இணங்கவில்லை, வளமுற, குற்றங்குறைகள்.

விடை கூறுக:

1. சிதம்பரம் பிள்ளை ஏன் "கப்பலோட்டிய தமிழன்" என்று சிறப்பித்துப் பேசப்படுகிறார்?

2. பிள்ளையவர்களின் செல்வாக்கைக் கண்ட ஐரோப்பியர் என்ன செய்தனர்?

3. வ. உ. சி. செலுத்திய இரண்டு கப்பல்களின் பெயர்கள் என்ன?

4. சிதம்பரம் பிள்ளை அவர்கள் சிறைப்படக் காரணம் யாது?

5. பிள்ளையவர்கள் சிறையில் செய்த வேலைகள் எவை?

6. இவருடன் உழைத்த தேசபக்தர் யார்?

7. வ. உ. சி.யின் தேச சேவையைப்பற்றிச் சுருக்கமாக எழுதுக.

8. பிள்ளையவர்களின் அருங்குணங்கள் யாவை?

இலக்கணப் பயிற்சி

பன்மை கூறுக:

கல், பா, பூ, குளம், அது.

ஒருமை கூறுக:

அவை, நாங்கள், விற்கள், முட்கள், அன்னையார்.

நான், யான், நாம், நாங்கள் —தன்மைப் பெயர்கள்
நீ, நீர், நீங்கள், நீவிர் —முன்னிலைப் பெயர்கள்
அவன், அவள், அது, அவை —படர்க்கைப் பெயர்கள்

கீழ்வரும் வாக்கியங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்து எழுதுக:

1. கண்ணன்————ஆசிரியரைக் கண்டு வணங்கினான்.
2. ————நன்றாகப் படித்தால் பரீட்சையில் வெற்றி பெறுவாய்.
3. ————பையைத் தேடுகிறான்.
4. ———— பள்ளிக்கூடம் போனோம்.
5. நீயும்————கோயிலுக்குச் சென்றீர்களா?

8. தம்பி செய்த தந்திரம்

முன்னொரு காலத்தில் சோமு என்றொரு மாண வன் இருந்தான். அவனுக்கு இலக்கணப் பாடம் என் றாலே பிடிக்காது. இலக்கணம் நடக்கும் வகுப்புகளில் உபாத்தியாயரிடம் சொல்லாமலே வீட்டுக்கு ஓடிவிடு வான். இலக்கணத்தில் உயிரும் மெய்யும் கற்றுக் கொள்வதற்குள் அவனுக்கு உயிரும் மெய்யும் போய் விடும்போலிருக்கும். அவனை வகுப்பில் உபாத்தியா யர் ஏதாவது வாக்கியத்துக்கு எழுவாய்ப் பயனிலை கேட் டால் பேசாமல் எழுந்திருப்பானே தவிர ஒன்றும் பதில் சொல்லமாட்டான். அதனால் ஆசிரியர் அவனை, "சோமு, நீ எழுவாய்; ஆனால் ஒன்றுக்கும் பயனிலை," என்று கேலி செய்வார்.

வீட்டிலும் சோமு இலக்கணப் புத்தகத்தைத் தொடுவதே இல்லை. எப்போதாவது ஒரு தடவை எடுத்தாலும் படித்துக் கொண்டே உறங்கி விடுவான். அவனுக்கு முத்து என்னும் ஒரு தம்பி இருந்தான். அவன் சிறிய பையன். இலக்கணப் புத்தகத்தை எடுத்தால்தான் தன் அண்ணனுக்குத் தூக்கம் வரும் போலும் என்று அவன் நினைத்துக் கொண்டான். தூங்க வைக்கும் சக்தி அந்தப் புத்தகத்தில் இருக்கிற தென்று எண்ணி அவன் மிகவும் ஆச்சரியப்பட்டான். யாருக்காவது நித்திரை வராவிட்டால் அதை அவர் அருகில் வைத்தால் தூங்கிவிடச் செய்யலாம் என்று எண்ணினான்.

முத்துவுக்குப் பூம்பாவை என்றொரு தங்கையுண்டு. அவள் ஒரு கைக்குழந்தை. அவள் மிகவும் செல்வ

மாக வளர்ந்து வந்தாள். பூம்பாவை ஒருநாள் வயிற்று வலியால் இரவு தூங்காமல் அழுது தொந்தரவு செய்தாள். வீட்டில் பெற்ரோர்கள் அக் குழந்தையைத் தூங்க வைப்பதற்காகப் பெரிதும் முயன்ருர்கள். ஒன்றும் பயனில்லை. தாயார் தாலாட்டுப் பாடினுள். அப்போதும் பூம்பாவை தூங்கவில்லை. கதை சொல்லிப் பார்த்தாள்; பயனில்லை. தகப்பனுர் வானெலியைப் பாடவைத்தார். அப்போதும் பூம்பாவை தூங்கவே இல்லை. வீடடில் புழுக்கமாக இருக்கும் என்று நினைத்து அவளை மாடியில் கொண்டுபோய்ப் படுக்க வைத்தார்கள். பூம்பாவை மேலும் மேலும் அழ ஆரம்பித்தாளே தவிர ஓய்ந்தபாடில்லை. பெற்ருேர்கள் ஒன்றும் தோன்ருமல் திகைத்தார்கள்.

பெற்ருேரின் துன்பத்தைக் கண்ட முத்து சும்மா இருப்பாஞ? அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. உடனே அவன் தன் அண்ணன் சோமுவின் படிப்பறைக்கு ஓடினுன். சோமு அப்பொழுதுதான் இலக்கணப் புத்தகத்தைக் கையில் பிடித்துத் தூங்கிக்கொண்டிருந்தான். முத்து சோமுவின் கையிலிருந்த அந்த இலக்கணப் புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு மாடிக்கு ஓடினுன். சோமுவும் திடுக்கிட்டெழுந்து அவன் பின்னே ஓடினுன்.

முத்து என்ன செய்தான் தெரியுமா? அதைப் பூம்பாவையின் தலையணைக்குக் கீழ்வைத்து, "கண்ணே, தூங்கு, தூங்கு," என்று சொன்னுன். முத்துவின் தாய் தகப்பனுருக்கு ஒன்றும் புரியவில்லை. சோமு ஆத்திரத்துடன் முத்துவைப் பார்த்து, "ஏனடா, நீ என் புத்தகத்தை எடுத்து இப்படிப் பாழாக்குகிருய்? உனக்குப்

புத்தியில்லையா?" என்று கூறினன். முத்து நிதானமாக, "அண்ணு, எனக்குப் புத்தி இருக்கிறது. அதனுல்தான் இப்படிச் செய்தேன். நீங்கள் இந்தப் புத்தகத்தைக் கையால் தொட்டாலே தூங்கிவிடுகிறீர்களே! ஆகையால் பூம்பாவையும் தூங்கிவிடுவாள் என்று இவ்வாறு



செய்தேன்," என்ருன். முத்துவின் பேச்சைக் கேட்ட அவன் பெற்ருேர்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். சோமு வெட்கப்பட்டான்.

சோமுவுக்குப் புத்தி வந்தது. அன்றையிலிருந்து அவன் இலக்கணத்தில் மிகவும் ஊக்கம் செலுத்தினன். ஆசிரியர் கொடுக்கும் பயிற்சிகளைத் தவருமல் செய்து இலக்கணத்தில் மிகவும் தேர்ச்சி பெற்ருன். வகுப்பில் பாடம் நடக்கும்போது கவனிக்காததனுலேயே அவ

னுக்கு அப்பாடத்தில் வெறுப்பு ஏற்பட்டதே தவிர உண்மையில் இலக்கணப் பாடம் கடினமன்று என்பதை உணர்ந்து கொண்டான். எதையும் ஊக்கத்துடன் செய்தால் அக்காரியம் மிகவும் எளிதாக இருக்கும் என்னும் உண்மையை அறிந்தான்.

" இன்பம் இன்பம் இலக்கணமே
அன்பாய்க் கற்கின் அரைக்கணமே,"

என்றபடி அவன் அந்த நிகழ்ச்சியிலிருந்து இலக்கணத்தில் வல்லவனுனன்.

பயிற்சி

பொருளறிக :

அரைக்கணம்	திகைத்தல்	பயிற்சி
உறக்கம்	நித்திரை	

கீழ்வரும் தொடர்மொழிகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

உயிரும் மெய்யும், திடுக்கிட்டு, வெடுக்கென்று.

விடை கூறுக :

1. சோமுவுக்கு எப்படிப் புத்தி வந்தது ?

2. பூம்பாவையைத் தூங்கவைக்க அவள் பெற்றோர்கள் செய்த செயல்கள் யாவை ?

3. இப் பாடத்திலிருந்து தூக்கத்தைக் குறிக்கும் வேறு சொற்களை எடுத்து எழுதுக.

4. இக் கதையில் நீ காணும் நகைச்சுவைப் பகுதிகளைக் கூறுக.

இலக்கணப் பயிற்சி

1. பாலன் வந்தான். (இயல்பாக நிற்கும் பெயர்)
—முதல் வேற்றுமை

2. தச்சன் கோவிலைக் கட்டினான். (கோயில்+ஐ)
— இரண்டாம் வேற்றுமை

3. தக்கிளியால் நூல் நூற்றான். (தக்கிளி+ஆல்)
— மூன்றாம் வேற்றுமை

4. ஏழைக்குப் பணம் கொடுத்தான். (ஏழை+கு)
— நான்காம் வேற்றுமை

5. வீட்டின் நீங்கினான், (வீடு+இன்)
— ஐந்தாம் வேற்றுமை

6. கண்ணனது பலகை. (கண்ணன்+அது)
— ஆறாம் வேற்றுமை

7. மரத்தில் கிளி. (மரம்+இல்)
— ஏழாம் வேற்றுமை

8. மகனே வா! (அழைக்கும் பெயர்)
எட்டாம் வேற்றுமை

கீழ்வரும் பெயர்களை எட்டு வேற்றுமையிலும் அமைக்க :

கிளி, வண்டி, அரசன், நண்டு, சென்னை.

9. காய்கறித் தோட்டம் அமைத்தல்

மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத பொருள்கள் மூன்று. அவை காற்று, உணவு, தண்ணீர் என்பன. அரிசி, கோதுமை, கேழ்வரகு முதலியவை. நம் நாட்டு மாந்தரின் முக்கியமான உணவுப் பொருள் களாகும். நாம் உண்ணும் உணவு பலவகைச் சத்துப் பொருள்களை உடையதாக இருக்கவேண்டும். அத் தகைய உணவே ஆரோக்கியத்துக்கு ஏற்ற உணவா கும். நாம் வெறும் அரிசியை மட்டும் சமைத்து உண்ப தில்லை. அத்துடன் பால், காய்கறி வகைகள், கீரை, பழங்கள் முதலியனவற்றையும் சேர்த்து உட்கொள்ளு கிறோம். காய்கறிகளை ஆகாரத்துடன் சேர்த்து உண்ப தால் நம் உடம்பு வலிமை பெறுவதுடன் நோய்கள் வராமல் காக்கவும் முடியும். உடம்பும் போதிய வளர்ச் சியை அடையும்.

நாம் உட்கொள்ளும் காய்கறி வகைகளை எப்படிப் பயிரிடுவது? கடையிலிருந்து பணம் கொடுத்துக் காய் களை வாங்கி உண்பதைவிட நாமே நம் வீட்டின் சுற்றுப் புறங்களில் காய்கறிச் செடிகள் நட்டுப் பயிராக்கி உண் பது நல்லதல்லவா? அதனால் நம் செல்வம் மிச்சமாவ துடன் அன்றாடம் புதிய காய்கறிகளாகவும் பறித்து உண்ணலாம். நாம் நம் தேவைக்குப்போக மிகுந்த காய்கறிகளை விற்றுப் பணமும் சேர்க்கக் கூடும்.

காய்கறிச் செடிகளைப் பயிரிடுவதற்குமுன் பயிரிட வேண்டிய நிலத்தைப் பண்படுத்த வேண்டும். நிலத் தின் மண் களிமண்ணாக இருப்பின் தண்ணீர் தேங்கிச் செடிகளின் வேர்களை அழுகும்படிச் செய்யும்; மணலாக

இருப்பின் தண்ணீர் முழுவதும் செடிகளுக்கு எட்டா மல் தரையில் சுவறிவிடும். ஆகையால் மணலும் களி மண்ணும் கலந்த நிலமே காய்கறிச் செடிகளைப் பயிரிடு வதற்குத் தகுந்த இடமாகும். பயிரிடும் இடத்தைத் தேர்ந்தெடுத்த பிறகு அந்நிலத்தை நன்ருக உழுது பண்

படுத்திப் பாத்திகளாகப் பிரித்துக் கொள்வது நலம். மேலே படரும் கொடிவகைகளை ஒருபுறமும், செடிவகை களை ஒருபுறமும், கீரை வகைகளை மற்றொரு புறமும், தரை யில் படரும் கொடி வகைகளை வேருெரு பக்கமுமாகப் பயிர் செய்ய வேண்டும். நாற்றுக்கள் பயிரிடுவதற்குத் தனிப் பாத்திகள் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

நிலத்தைப் பண்படுத்திய பிறகு செடிகளுக்குத் தகுந்த எருக்களைக் கலக்கவேண்டும். எருவுக்கு உரம் என்று மற்ருெரு பெயருமுண்டு. செடிகளின் வளர்ச் சிக்கு எரு மிகவும் அவசியமாகும். மாட்டுச்சாணம், ஆடு, கோழி, பன்றி முதலியனவற்றின் கழிவுப்பொருள் கள் சிறந்த எருக்களாகும். தோட்டத்தின் ஒரு மூலை யில் எருக்குழி ஒன்றை அமைத்து இக்கழிவுப் பொருள்

களைச் சேர்த்து மக்கிப்போகும்படிச் செய்தால் நாளடைவில் அவை சிறந்த உரமாக மாறும். இவையேயன்றித் தழைகள், பிண்ணாக்கு, எலும்புத்தூள் போன்ற பொருள்களும் எருவைத் தயாரிக்க உதவுகின்றன.

கத்தரி, முள்ளங்கி போன்ற செடிவிதைகளை முதலில் ஒரு சிறு பாத்தியில் விதைத்து அவை ஏறக்குறைய இரண்டு அங்குலம் வளர்ந்தவுடன் அவற்றைப் பிடுங்கி வேறிடங்களில் நடுவார்கள். இதற்கு **நாற்று**

நடுதல் என்று பெயர். சிறிய நாற்றுக்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும்போது மெதுவாகப் பாய்ச்ச வேண்டும். பூவாளி ஒன்றினால் அவற்றின் மேலே மெதுவாக நீர் தெளிப்பது நல்லது. மாலை நேரமே செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சத் தகுந்த நேரமாகும். அவரை, புடல், பாகல் முதலிய கொடிகள் காற்றில் அலையாமல் தகுந்த கொழுகொம்புகளை நட்டு அவை படருவதற்கு ஏற்ற பந்தல்களை அமைப்பதுண்டு.

செடிகள் வளரும்போது அவற்றுடன் நமக்கு வேண்டாத குப்பைமேனி, காளான் போன்ற தாவரங் களும் வளரும். அவற்றை அடிக்கடி வேரோடு களைந்து அப்புறப்படுத்தவேண்டும்.அதற்குத்தான் **களையெடுத் தல்** என்று பெயர். களையெடுக்காத செடிகள் செழித்து வளரமாட்டா. மேலும் செடிகள் வளரவொட்டாமல் தடுக்கும் விரோதிகளான எலிகள், வெட்டுக்கிளிகள், வண்ணாத்திப் பூச்சிகள், கம்பளிப் பூச்சிகள் முதலியன தோட்டத்தில் சேராதபடி கவனிக்கவேண்டும். புகை யிலை, சோப்பு, மயில்துத்தம் முதலியவற்றின் கரைசல் களைச் செடிகளின்மேல் தெளிப்பதால் இவை வராத படி காக்கலாம். மேலும் ஆடு மாடுகள் தோட்டப் பயிர்களை நாசமாக்காதபடி உறுதியான வேலிகளை அமைத்துக்கொள்ள வேண்டும். வேலிகளை அடிக்கடி பழுது பார்க்கவும் வேண்டும்.

காய்கள் சமைப்பதற்கான முற்றிய பக்குவத்தை யடைந்து விட்டனவா என்பதை அறிந்து அவற்றைப் பறித்துப் பயன்படுத்திக்கொள்வது நலம். அவரை, வெண்டை, புடல் போன்ற காய்களை அதிகமாக முற்ற வைத்தல் கூடாது. தண்டுக்கீரையை இளைதாக இருக்கும்போதே பிடுங்கிச் சமைத்துக் கொள்ளலாம். அரைக்கீரைப் பாத்தியில் மாதம் இருமுறை அல்லது மும்முறை அரிவாளால் செடியின் மேல்பாகத்தை மட் டும் அறுத்துக் கொள்ளலாம். நம் தோட்டத்திலிருந்து நாம் பறிக்கும் காய்களை எடைபோட்டு நமக்குத் தேவை யானது போக எஞ்சியவற்றை விற்றுக் கணக்கு வைத் துக் கொள்ளுதல் சிறந்த முறையாகும். தோட்டக் குறிப்புப் புத்தகத்தில் செடியின் பெயர், விதைத்த நாள்,

முளைத்த நாள், காய்க்கத் தொடங்கிய நாள், பட்டுப் போன நாள் என்பன போன்ற விவரங்களைக் குறித்து வருவதால் ஒவ்வொரு செடியைப்பற்றிய தன்மைகளையும் நன்கு உணரலாகும்.

தோட்டப் பயிர்களில் பெரும்பாலானவை ஓராண்டுக்குமேல் நிலைப்பதில்லை. எனவே அடுத்த ஆண்டில் விதைப்பதற்கு வேண்டிய விதைகளை முன் ஆண்டுப் பயிர்களிலிருந்தே சேகரித்துக்கொள்ளுதல் நலமாகும். நாமே தயாரித்த முற்றின விதைகளைப் பயிரிடுவதுதான் நல்ல பலனைக் கொடுப்பதாகும். பிறரிடம் விதைகளை விலைக்கு வாங்கலாகாது. நாள்பட்ட விதைகள் சரியாக முளைத்துப் பயனளிப்பதில்லை. செடி கொடிகள் காய்க்கும்போது நல்ல வளமான காய்களை விதைக்கு விடல் வேண்டும். விதை நன்ருக முற்றி நெற்ருனவுடன் அவற்றைப் பறித்து வெயிலில் உலர்த்திப் பூச்சிகள் அரித்துவிடாதபடி பத்திரப்படுத்திவைத்தல் வேண்டும். வித்தகளை அந்தந்தப் பருவங்களில் விதைக்கவேண்டும். 'பருவத்தே பயிர் செய்'. 'ஆடிப் பட்டம் தேடி விதை', என்பன போன்ற பழமொழிகள் விதைகளைத் தகுந்த காலத்தில் விதைக்க வேண்டிய அவசியத்தைத் தெரிவிப்பனவாகும்.

உணவுப்பொருள் நமது தேவைக்குப் பற்ருமல் இருக்கும் இக்காலத்தில் நாம் ஆங்காங்கே காய்கறித் தோட்டங்களை அமைத்து நன்மை பெறவேண்டும். கிராமங்களில் காய்கறித் தோட்டங்கள் அமைப்பதற்குப் பரந்த நிலங்கள் உண்டு. சென்னை போன்ற நகரங்களில் வீட்டு நெருக்கடி அதிகமானதால் தோட்டங்கள் அமைப்பது சிறிது கடினமே. எனினும் அவரவர் தத்

தமக்குக் கிடைத்த நிலப் பகுதிகளில் காய்கறிச் செடிகளைப் பயிரிடுதல் வேண்டும். காய்கறித் தோட்டம் நாட்டின் நன்மைக்கு அவ்சியமென்று உணர்ந்து சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கவர்னர்-ஜெனரலாக இருந்தபோது தமது பெரிய நந்தவனத்தையும் காய்கறித் தோட்டமாக மாற்றினர். சென்னைக் கவர்னரும் தமது மாளிகையின் சுற்றுப்புறத்தில் உள்ள நிலங்களில் உணவுப் பொருள்களைப் பயிரிட ஏற்பாடு செய்தார்.

உணவுப்பொருள் உற்பத்தியைப் பெருக்குவது நம் சுதந்திர அரசாங்கத்தாரின் முக்கியமான திட்டங்களில் ஒன்ருகும். நாம் காய்கறித் தோட்டங்களை அமைப்பதன் மூலம் அரசியலாருடன் ஒத்துழைத்து நலம் பலவும் அடைவோமாக.

பயிற்சி

பொருளறிக :

உரம்	சத்து	பருவம்
கரைசல்	சுவறி	பண்படுத்தல்
களைதல்	நாற்று	
கொழுகொம்பு	நெற்று	

விடை கூறுக :

1. மக்கள் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதன யாவை?
2. ஆரோக்கிய உணவு என்பது யாது?
3. காய்கறிச் செடிகளைப் பயிரிடுவது எப்படி?
4. பூச்சிகள் வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

5. விதைகளைச் சேகரிக்கும் முறைகளை விளக்குக.

6. காய்கறித் தோட்டம் அமைப்பதில் ராஜாஜி செய்த அருஞ்செயல் யாது?

7. காய்கறித் தோட்டம் அமைப்பதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.

இலக்கணப் பயிற்சி

இவற்றைப் படி:

தாய் தன் குழந்தையை எடுத்து முத்தமிட்டாள். கண்ணன் தான் கண்ட காட்சியைப்பற்றிக் கூறினான்.

எடுத்து
முத்தமிட்டாள்
கண்ட
கூறினான்
} இவை வினைச் சொற்கள்

முத்தமிட்டாள்
கூறினான்
} இவற்றின் பொருள் முடிந்துள்ளது. இவை முற்றுவினைகள் எனப்படும்.

எடுத்து
கண்ட
} இவற்றின் பொருள் முடியவில்லை. இவை எச்ச வினைகள் எனப்படும்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள முற்றுவினைகளையும் எச்ச வினைகளையும் தனித்தனியாக எழுதுக:

1. இந்த வீட்டைக் கட்டிய கொத்தன் யார்?
2. நீ நேற்று வாங்கிய புத்தகம் எங்கே?
3. சிறுவன் பந்து விளையாடப் பழகினான்.
4. நான் கற்பித்த பாடத்தை அவன் ஒப்பித்தான்.
5. அவன் மரத்தின்மேல் ஏறிப் பழம் பறித்தான்.

10. நான் சிறுவனாக இருந்தபோது

நான் பிறந்த ஊர் ஒரு சிறிய கிராமம். இராஜவல்லி புரம் என்பது அதன் பெயர். அது திருநெல்வேலியி லிருந்து ஆறு மைல் தொலைவில் இருக்கிறது. நான் படிக் கும் காலத்தில் அங்கே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடந் தான் உண்டு. அந்தப் பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்பு முடியப் படித்தேன்.

எங்கள் ஊரிலிருந்து நான்கு மைல் அளவில் பாளையங்கோட்டை என்ற ஒரு பெரிய ஊர் இருக்கி றது. அங்கே 'ஹைஸ்கூல்' என்னும் உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு அந்நாளில் பேர் பெற்றவை. அவற்றுள் ஒன்று செயின்ட் சேவியர் உயர்நிலைப்பள்ளி. இப்போது அது பெரிய கல்லூரி (காலேஜ்) ஆக வளர்ந்து பெருகி யிருக்கிறது.

சேவியர் உயர்நிலைப் பள்ளியிலே ஐந்தாம் வகுப் பில் என்னைச் சேர்த்துக்கொண்டார்கள். அப்போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை. என் பெற் றோர் அடைந்த பெரு மகிழ்ச்சியைச் சொல்ல முடியாது. பெரிய படிப்பிலே நான் சேர்ந்து விட்டதாக எண்ணி எண்ணி இன்பமுற்றார்கள்.

நான் படித்த பள்ளியிலே கட்டுப்பாடும் கண்டிப் பும் அதிகம். வாரந்தோறும் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனுடைய படிப்பைப் பற்றியும் நடத்தையைப் பற்றியும் தலைமையாசிரியருக்கு ஓர் அறிக்கை அனுப்பு வார்கள். என் காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர் ஒரு சாமியார். அவர் ஆறடி உயரமும் அழ கிய மேனியும் உடையவர். கழுத்திலிருந்து கால் வரை

வெண்மையான அங்கியும் இடையிலே செம்மையான கச்சையும் அணிந்தவர். ஒவ்வொரு வாரமும் தவரு மல் திங்கட்கிழமை யன்று அவர் எங்களுக்குக் காட்சி யளிப்பார்.

பிரம்பும் கையுமாக அவர் ஒவ்வொரு வகுப்பிலும் நுழையும்பொழுது பிள்ளைகளாகிய எங்கள் உள்ளம் பத றும். யாருக்கு அடிவிழுமோ என்று நினைக்கும்பொழுது அறிவே சிதறும். சாமியார் வகுப்பின் நடுவே நின்று கொண்டு வாராந்தர அறிக்கையை விரிப்பார்; வரி வரி யாகப் படிப்பார்: மட்டம் என்றும், மோசம் என்றும் அறிக்கையில் ஆசிரியர்களால் குறிக்கப்பட்ட பிள்ளை

களின் கையில் தனித் தனியே எட்டு அடி கொடுப்பார். ஒருவன் அடிபடும் பொழுது எல்லோரும் நடுங்கு வோம்.

அடிமேல் அடி யடித்தால், அம்மியும் நகரும் அல்லவா? அந்த முறையில் அடிபட்ட பிள்ளைகளும் கருத்தாகப் படித்துக் கல்வியில் முன்னேற்றம் அடைந் தார்கள். “சேவியர் பள்ளியைச் சேர்ந்தால் களி மண் ணுக்கும் கல்வி வரும்.” என்று அக்காலத்திலே சொல்வ துண்டு.

ஐந்தாம் வகுப்பில் அடிவைத்த நான் படிப் படி யாகத் தேறி ஏழாம் வகுப்பையும் முடித்தேன். அந்த ஆண்டுப் பரீட்சையில் தேறிய மாணவர்களுள் முதல் இடம் பெற்றதற்காக எனக்கு ஒரு புத்தகம் பரிசளித் தார்கள். வாரந்தோறும் கடுமையான முகத்தோடு காட்சி யளித்த தலைமையாசிரியர் மலர்ந்த முகத்தோடு அன்று பரிசளித்த கோலம் இன்றும் என் கண்ணை விட்டு அகலவில்லை.

பரிசு பெற்ற புத்தகத்தைக் கொண்டு போய்ப் பெற்றோரிடம் காட்டினேன். அவர்கள் இன்பவாரியில் மூழ்கினார்கள். அப்போது கோடைவிடுமுறைக் காலம் வந்தது. இரண்டு மாதம் நன்றாக விளையாடலாம் என் றெண்ணிச் சொந்த ஊருக்குச் சென்றேன்.

எங்கள் ஊரிலே ஒரு சைவச் சாமியார் இருந்தார். இவருக்கும் பள்ளிக்கூடத்துச் சாமியாருக்கும் எவ் வளவோ வித்தியாசம். கடுமையான முகத்தை இவ ரிடம் யாரும் கண்டதில்லை, காவி உடையும், கண்டி கையும் அணிந்தவர்; எவரிடத்தும் அன்பாய் இருப்ப வர்; கல்விக் கடலைக் கடந்தவர் என்று பெரியோர்

சொல்லுவர். சிவன் கோயிலுக்கு அருகே இருந்த சிறு மடந்தான் அவர் இருப்பிடம்.

விடுமுறைக்காக ஊருக்குச் சென்றதும் என் தந்தையார் நான் கற்ற கல்வியையும் அதற்காகப் பெற்ற பரிசையும் சாமியாரிடம் காட்ட ஆசைப்பட்டார். பரிசைப் பிறரிடம் காட்டுவதில் எனக்கும் ஆசைதானே? புத்தகமும் கையுமாகச் சாமியாருடைய மடத்திற்குச் சென்றேன்; அவர் முன்னே புத்தகத்தை வைத்து வணங்கினேன். அது நான் பெற்ற பரிசு என்று என் தந்தையார் பெருமையோடு பேசினார்.

புத்தகத்தைக் கையில் எடுத்தார் சாமியார். அவர் முகம் மலர்ந்தது. என்னைப் பார்த்து, "நீ நல்ல பையன்; அருமையான தமிழ்ப் புத்தகம் உனக்குப் பரிசாகக் கிடைத்திருக்கிறது. 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறாய் அல்லவா? நாலு என்பது நாலடியார்; இரண்டு என்பது திருக்குறள். இந்தத் திருக்குறளுக்கு இணையான நூல் ஒன்றுமில்லை. இப்பொழுதே நீ இதைப் படிக்கத் தொடங்கவேண்டும்" என்றார்.

அது கேட்ட என் தந்தை, "அப்படியானால் ஒரு நல்ல நாள் பார்த்துச் சுவாமியே அதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்." என்று வேண்டிக் கொண்டார்.

"நாளை வியாழக்கிழமை-குருவாரம்-நல்ல நாள். நாளையே தொடங்கி விடுவோம்," என்று திருநீறு பூசி எங்களுக்கு விடைகொடுத்தார் சாமியார்.

திரும்பி வீட்டுக்கு வரும்பொழுது எனக்கு உற்சாக மில்லை. "விடுமுறைக் காலத்தில் நன்றாக விளை

யாடலாம் என்றல்லவோ இங்கு வந்தேன்? விளையாட்டுத் தோழர்களோடு சேர்ந்து குதித்துக் கொட்டம் அடிக்க வொட்டாது சாமியார் குறுக்கிட்டாரே! பள்ளிக்கூடத்தில் 'படி, படி' என்று ஒரு சாமியார் சொல்வது போதாதா? இங்கும் ஒரு சாமியார் இருந்து கொண்டு 'படி, படி' என்கிருரே! பரிசு பெற்ற புத்தகம் அல்லவோ இத்தனைக்கும் காரணம்?" என்று கவலை கொண்டேன்.

என் மனத்திலே குடிகொண்ட கவலையை என் தந்தையார் அறியவில்லை. மறுநாள் சாமியார் மடத்திற்கு என்னை அழைத்துச் சென்ருர். சாமியார் கருணையோடு என்னைத் தம் பக்கத்தில் வைத்துக்கொண்டு திருக்குறள் கற்கும் முறையை எடுத்துரைத்தார்.

"இந்தப் புத்தகத்தில் அடங்கிய திருக்குறள் முழுவதையும் நீ மனப்பாடமாக்கிக்கொள்ள வேண்டும். நாள்தோறும் ஐந்து குறள் பாடமாக்கினுல் போதும். இளமைதான் இந் நூலைக் கற்பதற்கு ஏற்ற காலம். ஒவ்வொரு குறளின் கருத்தையும் நான் சொல்லித் தருவேன். இப்போது புத்தகத்தில் உள்ள உரையை நீ படிக்க வேண்டாம். கருத்தை மட்டும் தெரிந்து கொண்டால் போதும்," என்று சொல்லித் திருக்குறள் பாடத்தைத் தொடங்கி விட்டார்.

நான் சித்திரப்பாவை போல் சாமியார் சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். பாடம் முடிந்தது; வீடு சென்றேன்.

"முதல் ஐந்து குறளையும் மனப்பாடம் செய்து தொலைக்க வேண்டுமே; நாளைக்குச் சாமியார் கேட்பாரே," என்று ஒரு மூலையில் இருந்து உருப் போடத்

தொடங்கினேன். ஒவ்வொரு குறளையும் படிக்கும் பொழுது வேப்பங் காயைக் கடிப்பதுபோல் இருந்தது எப்படியோ ஐந்து குறளைப்—பத்து வரியையும்—படித்து மூன்றுநாள் சாமியாரிடம் ஒப்பித்தேன். அவர் என்னை ஊக்கப்படுத்தினார். “ஒரு வாரத்திற்குச் சிறிது துன்பமாக இருக்கும். அப்பால் மனப்பாடம் செய்வது பழக்கமாகி விடும்” என்றார்.

அந்த ஆண்டு விடுமுறை எனக்குத் தொல்லையாகத் தோன்றியது. நாள்தோறும் தவறாது மனப்பாடம் செய்து சாமியாரிடம் குறளை ஒப்பித்தேன். இருநூற்றைம்பது குறட்பாக்கள் முடிந்தன. பாளையங்கோட்டையில் பள்ளிக்கூடம் திறந்தது.

அந்த விடுமுறையை எந்த நாளும் நான் மறவேன். தொல்லை விளைப்பதுபோல் தோன்றி எல்லையற்ற இன்பம் விளைத்தது அந்த விடுமுறை. ‘தொடங்குங்கால் துன்பமாய் பின்னர் இன்பம் பயக்கும் நூல் திருக்குறள்’ என்பதில் என்னதடை? நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

— உயர்திரு ரா. பி. சேதுப் பிள்ளை

பயிற்சி

பொருளறிக :

அங்கி	கோட்டம்	தொல்லை
இணையான	கோலம்	பயக்கும்
இன்பவாரி	சித்திரப்பாவை	வையகம்
எல்லையற்ற		

உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

பேர் பெற்ற, அளவில்லை, கட்டுப்பாடு, வாரந்தோறும், எண்ணி எண்ணி, வரிவரியாக, தனித்தனியே, கடுமையான, புத்தகமும் கையுமாய், குறுக்கிட்டு, குடிகொண்ட, எல்லையற்ற.

விடை கூறுக:

1. சேவியர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தவுடன் ஆசிரியர் மகிழ்ச்சி யடையக் காரணம் என்ன?

2. சேவியர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக இருந்த சாமியார் எப்படிப்பட்டவர்?

3. 'சேவியர் பள்ளியைச் சேர்ந்தால் களிமண்ணுக்கும் கல்வி வரும்' என்று ஆசிரியர் கூறக் காரணம் என்ன?

4. 'நாலும் இரண்டு சொல்லுக் குறுதி'—இதன் பொருளை நன்கு விளக்குக.

5. பரிசுப் புத்தகம் எவ்வாறு தொல்லை விளைத்தது; அஃது எப்படி இன்பம் அளித்தது?

இலக்கணப் பயிற்சி

மணி + அடித்தது = மணியடித்தது.
தீ + அணைந்தது = தீயணைந்தது.
பனை + ஓலை = பனையோலை.

நிலைமொழி ஈற்றில் இ, ஈ ஐ என்னும் உயிர் எழுத்துக்கள் இருந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வரின் யகர உடம்படுமெய் தோன்றும்.

சே + அடி = சேயடி
சே + அடி = சேவடி
தே + ஆரம் = தேவாரம்

ஏ என்னும் உயிரெழுத்தை ஈற்றில் உள்ள நிலைமொழி உயிர் எழுத்தை முதலில் உடைய வருமொழியோடு சேரும் போது ய், வ் என்னும் மெய்களுள் ஏதேனுமொன்று பெற்று வரும்.

சேர்த்து எழுதுக:

கனி + அளித்தான், மாலை + அணிந்தான், விள + அழகு, தீ + எரிகின்றது, கோ + இல், ஆடை + எடுத்தான்.

வாழை + பழம் = வாழைப்பழம்

படிக்க + சென்றான் = படிக்கச் சென்றான்

மற்றை + சாதி = மற்றைச் சாதி

ஈ + கால் = ஈக்கால்

நிலை மொழியின் ஈற்றில் உள்ள உயிர் எழுத்துக்களுக்கு முன் க, ச, த, ப என்னும் எழுத்துக்கள் வந்தால் வந்த எழுத்து பெரும்பாலும் மிகும்.

வேல் + அழகு = வேலழகு

பால் + ஏடு = பாலேடு

மெய்யெழுத்துக்கு முன் உயிர் எழுத்து வந்தால் அவ்வுயிர், மெய்யெழுத்தின் மேல் ஏறும்.

சேர்த்து எழுதுக:

வான் + ஏடு, நூல் + அறிவு, கால் + ஒடிந்தது, பால் + ஆவி.

11. இளங்கோவடிகள்

[சேரநாட்டு மன்னன் நெடுஞ்சேரலாதன் தன் சிம்மாதனத்தில் வீற்றிருக்கிறன். அவன் மூத்தமகன் செங்குட்டுவனும் இளையமகன் இளங்கோவும் இருபுறமும் இருக்கின்றனர்.]

(சோதிடன் ஒருவன் அரண்மனைக் கொலுமண்டபத்துக்கு வருகிறன்.)

சோதிடன்: காவல, நான் உங்கள் மன்னரைக் காணவேண்டும்.

காவலன்: அரசர் அனுமதியின்றி யாரும் உள்ளே நுழையக்கூடாது. நீர் யார் என்பதை முதலில் கூறும்.

சோதிடன்: காவல, நான் முக்காலமும் அறிந்து உரைக்க வல்ல சோதிடன். என் நாடு சோழநாடு.

காவலன்: சரி, இங்கேயே இரும். மன்னன் அனுமதி பெற்று உள்ளே செல்லலாம்.

(காவலன் போகிறன்.)

காவலன்: வஞ்சி வேந்தே! வாழி! வணக்கம். யாரோ சோழநாட்டுச் சோதிடராம். தங்களைக் காண வேண்டுமென்று அரண்மனை வாயிலில் காத்திருக்கிறர்.

மன்னன்: சோதிடரா? அவரை உள்ளே வரவிடு.

(காவலன் சோதிடனை உள்ளே அனுப்புகிறன்.

சோதிடன்: சேரர் பெரும, வாழி நின் கொற்றம். வணக்கம்.

மன்னன் : வருக சோதிடரே, உட்காரும். சோழ நாட்டினின்றும் ஈண்டுத் தாங்கள் போந்த காரணம் என்ன? சோழனும் தேவியும் மக்களும் நலந்தானு?

சோதிடன் : மன்னர் மன்ன, யாவரும் நலமே. தாங்கள் வீராதிவீரர். இமயம் வரையில் படையெடுத்து வெற்றி பெற்ற தங்கள் அரிய புகழ் நாட்டின் மூலை முடுக்குகளெல்லாம் பரவியுள்ளது. தங்களைத் தரிசித்து விட்டுப் போகலாமென்றே இங்கு வந்தேன்.

மன்னன் : நன்று சோதிடரே, நும் வரவு நல் வரவாகுக.

சோதிடன் : (பக்கத்திலிருக்கும் குமாரர்களைக் காட்டி) வெற்றி வேந்தே, இவர்கள்தாம் தங்கள் மைந்தர்களோ?

மன்னன் : ஆம். இவன் என் மூத்தமகன். இவன் பெயர் செங்குட்டுவன். இவன் என் இளையமகன். இவன் பெயர் இளங்கோ. இவர்கள் எதிர்காலம் பற்றி நீவிர் ஏதேனும் கூறவல்லீரோ?

சோதிடன் : (இரு பிள்ளைகளின் முகத்தையும் உற்றுக் கவனித்தல்) அரசரேறே, நான் சொல்வதைக் கேட்டுத் தாங்கள் கோபிக்கமாட்டீர்களே?

மன்னன் : சோதிடரே, உள்ளதை உள்ளவாறே தாராளமாகக் கூறுங்கள். நான் தங்களைக் கோபித்தலால் ஆவது என்ன?

சோதிடன் : அரசே, இவ்விரு புதல்வர்களின் முகக் குறிப்பையும் ஆராயின், இளைய புதல்வரே உமக்குப் பின் பட்டத்துக்கு உரியவராவர் என்று தோன்றுகிறது. அவரே எதிர்காலத்தில் பெரும் புகழும் நல் வாழ்வும் உடையவராவார். செங்குட்டுவன் பட்டத்

துக்கு உரியவராகத் தக்க குறிப்பு ஒன்றுமே தோன்ற வில்லை. இதுவே என் சோதிடக் குறிப்பு.

(செங்குட்டுவன் திடுக்கிட்டு முகம் வாட்டமுறுகிறான்; வருத்தத்துடன் தலை குனிகிறான்.)

மன்னன் : செல்வ மைந்த, செங்குட்டுவ, வருத் தப்படாதே.

இளங்கோ : (கோபத்துடன் எழுந்து சோதிடரைப் பார்த்து) சோதிடரே! நன்று உமது பேச்சு! அண் ணன் இருக்கத் தம்பி நாட்டை ஆள்வதா? அஃது ஒரு போதும் இயலாத காரியம்! என் மூத்த சகோதரன் ஆளாமல் நான் முடிபுனைந்து ஆள்வேன் என்று எண்ணிவிட்டீர்?

சோதிடன் : அறிவாற்றல்களிற் சிறந்த இளவரசே, நான் என்ன செய்வேன்? என் சோதிடத்தில் கண்ட உண்மையைத் தானே நான் கூறினேன்?

இளங்கோ : பெரிய உண்மையைக் கண்டுவிட் டீர்? நீரும் பெரும் பொய்காரர். நீர் கூறிய குறிப் பும் பொய்தான். அது வெறும் கட்டுக் கதைதான்.

சோதிடன் : இளவரசே, நான் கூறுவதா கட்டுக் கதை?

மன்னன் : என்ன.......? மூத்தவன் இருக்க இளையவனுக்கா பட்டம்?

சோதிடன் : மன்னர் மன்ன! நான் சொல்ல வில்லையே! சோதிடம் சொல்லும் எதிர்காலப் பலன் இது.

இளங்கோ : (கோபத்துடன்) போதும், சோதிடரே! நிறுத்தும் உம் குறிப்பை! இது புலவர்களும்

மன்னர்களும் நிறைந்த சபை என்பது நினைவில் இருக்கட்டும்.

மன்னன் : இளங்கோ, பொறு. சோதிடரை முனிவதில் என்ன பயன்? கலைஞரை அவமதிக்கக் கூடாது. சோதிடரே! தங்கள் சோதிடத்தின்படி என் மூத்தமகன் செங்குட்டுவன் அரசாளும் வலிமையற்ற வன் என்பது தங்கள் கொள்கையோ?

இளங்கோ : பேரரசர்களை யெல்லாம் வென்று வெற்றிக்கொடி நாட்டிய என் அண்ணனுக்கா அரசாளும் ஆற்றல் இல்லை என்று எண்ணிவிட்டீர்?

சோதிடன் : சோதிடம் கூறும் குறிப்பு அப்படி இருக்கும்போது தாங்கள் இப்படி என்மீது கோபிக்க லாகுமா?

மன்னன் : (சிறிது யோசித்து) சோதிடரே, இதுவே உண்மையானாலும் என் மக்கள் ஒருவர்மீது மற்றொருவர் பொறாமை கொள்ளமாட்டார். இருவரும் ஒரு மனப்பட்டு ஒற்றுமையாகவே என்றும் வாழ்வர்.

இளங்கோ : (ஆத்திரத்துடன்) அப்பா! என்ன சொன்னீர்கள்! இச்சோதிடன் பேச்சைக் கேட்டு நான் என் அண்ணனைத் தள்ளிவிட்டு அரியாசனத்தில் ஏறு வேன் என்று நினைத்துவிட்டீர்களா?

மன்னன் : என் அருமைச் செல்வ! இளங்கோ! ஆத்திரம் வேண்டாம். நம் சேரர் குலம் சிறப்படைய வேண்டுமானால் நீ எதற்கும் சித்தமாக இருக்க வேண்டும். உன் கடமையைச் செய்யத் தவறக் கூடாது. வருங்காலப் பலனை உரைப்பதில் வல்லவ ராகிய சோதிடரை இகழ வேண்டாம்.

இளங்கோ: தந்தையே! இவன் மிகவும் பொய்யன். வாயில் வந்ததை உளறினன். வருங்காலப் பயனை இவனு உணர்த்த வல்லவன்?

மன்னன்: இளங்கோ! கோபத்தால் குணங் கெட்டுப் பேசுதல் உன்னைப்போன்ற இளைஞர்களுக்கு அழகன்று.

இளங்கோ: தந்தையே, தங்களுக்கு இந்தச் சோதிடன் பெரிய அறிஞனாகக் காணப்படலாம். இவன் சோதிடமே என் விதியானல் அவ் விதியையும் என்மதியால் வெல்லுவேன். என் அண்ணனுக்கு இழுக்குத் தேடி நானே அரியாசனம் ஏறுவேன்? இதற்கு ஒரு பொழுதும் உடன்படேன்! இந்த உலகமே தலைகீழாக மாறினலும் உடன்படேன்! இது சத்தியம்.

மன்னன்: குழந்தாய்! இப்படியா சபதம் செய்வது!

இளங்கோ: ஆம்! இந்த அரியாசனத்துக்கு நான் மட்டுமன்று. என் பின்னேரும் உரியவராகார் என்பதற்காக நான் திருமணமே செய்துகொள்ளப் போவதில்லை. எனக்குப் பட்டமும் வேண்டாம்: பதவியும் வேண்டாம். எனக்கு எதற்கு இந்த ஆடம்பரமான ஆபரணங்களும் ஆடைகளும்?

(இளங்கோ தன் அணிமணிகளைக் கழற்றிக் கீழே எறிகிறன்.)

செங்குட்டுவன்: தம்பி, இளங்கோ! இஃது என்ன கோலம்!

இளங்கோ: அண்ணலே, இன்று முதல் நான் ஆண்டி! மன்னன் மகன் அல்லன்.

செங்குட்டுவன் : தம்பி, எனக்காகவா நீ அரச இன்பங்களை இழப்பது? அணிமணிகளைக் கழற்றி எறிகிறாயே! நம்மில் நாட்டை யார் ஆண்டால் என்ன?

இளங்கோ : அண்ணா, தயவு செய்து என்னைத் தடுக்கவேண்டாம். அண்ணன் இருக்கத் தம்பிக்கா அரியாசனம்? இது தகுமா? முறையா?

செங்குட்டுவன் : இளங்கோ, இதற்காகவா நீ துறவறம் கொள்வது? நாம் இருவரும் உடலால் வேறு பட்டாலும் உள்ளத்தால் ஒருவரன்றோ? இதற்காக அரண்மனையை விட்டுச் செல்வது நலமாகுமா?

இளங்கோ : வெற்றியும் வீரமும் நிறைந்த என் அருமை அண்ணன் தங்களுக்கா நான் இழுக்கைத் தேடுவேன் ? மூத்தவன் இருக்க இளையவன் அரசாள்வது தமிழர் மரபன்று. தாங்களே இந்நாட்டை ஆள வேண்டும். என் தாய்நாட்டின் மீது ஆணையாகச் சொல்லுகிறேன். எனக்கு இந்த அரசு வேண்டாம்.

மன்னன் : இளங்கோ ! எவ்வளவு கொடுமையான உறுதியை மேற்கொள்கிறாய் என்று யோசித்துப் பார்.

இளங்கோ : தந்தையே, நமது சேரர் குலப் பெருமையைக் காப்பாற்றுவதற்காக நான் எத்தகைய கொடுமையையும் ஏற்கச் சித்தமாய் இருக்கிறேன். துறவு நெறியினின்று இனி ஒரு சிறிதும் பிறழேன். இன்றே குணவாயிற் கோட்டம் சென்று அறநெறி நின்று உலக மக்கட்குப் பணிபுரிவேன்.

செங்குட்டுவன் : அந்தோ ! தம்பி, உன்னைவிட்டு நான் எப்படிப் பிரிந்திருப்பேன் ! நீ என்னை என்றும் பிரியலாகாது. நான் பதவி ஏற்பின் அரசியற் காரியங்களில் எனக்குத் தக்க ஆலோசனை கூற நின்னையன்றி வேறு யார் இருக்கிறார்கள் ? நீ என்னை விட்டுப் பிரியாமல் அரண்மனையிலேயே இருக்கவேண்டும்.

இளங்கோ : அண்ணலே, தங்கள் ஆணைப்படியே நடப்பேன். தங்கள் உடன் உறையும் நேரம் தவிர மற்றக் காலங்களில் குணவாயிற் கோட்டத்திருந்து அறப்பணி ஆற்றிவருவேன்.

மன்னன் : வாழ்க என் அருமைச் செல்வர்காள் ! உங்கள் இருவரின் கூட்டுறவுதான் சேரர் பரம்பரையின் சிறப்பினை வளர்க்கும்.

சபையினர் எல்லோரும் : வாழ்க இளங்கோ அடிகள்! இளமையில் துறவுபூண்ட ஏந்தல் வாழ்க! வாழ்க!

பயிற்சி

பொருளறிக :

அமர்ந்து	ஏந்தல்	கோட்டம்
அரியணை	ஏறு	போந்து
அறநெறி	கூற்று	வஞ்சி

கீழ்வரும் சொற்றொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

மூலை முடுக்கு, அறிவாற்றல், தலைகீழாக, அணி மணிகள்.

விடை கூறுக :

1. சேரலாதன் மக்களைப்பற்றிச் சோதிடன் கூறிய குறிப்பு யாது?
2. இளங்கோ சோதிடனைக் கோபிக்கக் காரணம் என்ன?
3. அண்ணனுக்காக இளங்கோ செய்த தியாகம் யாது?
4. செங்குட்டுவன் இளங்கோவிடம் என்ன வேண்டினான்?
5. இளங்கோவடிகளுக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

இலக்கணப் பயிற்சி

கீழ்வருவனவற்றைப் படி :

மண் + குடம் = மட்குடம்
பொன் + குடம் = பொற்குடம்.

ணகர மெய்யும், னகர மெய்யும் க, ச, த, ப க்கள் வந்தால் பெரும்பாலும் முறையே டகர றகர மெய்களாகத் திரியும்.

கல்+சிலை = கற்சிலை

வாள்+படை = வாட்படை

லகர வகர மெய்களின்முன் க, ச, த, ப க்கள் வந்தால் பெரும்பாலும் முறையே றகர டகர மெய்களாகத் திரியும்.

கீழ்வருவனவற்றைப் பிரித்து எழுதுக :

பொற்பதக்கம், சொற்போர், மட்பாண்டம், தோட்காப்பு, கற்கோயில்.

கீழ்வருவனவற்றைச் சேர்த்து எழுதுக :

நாள்+குறிப்பு, வேல்+போர், கண்+செவி, தன்+பெருமை.

அருஞ்சொல் அகராதி

அங்கி - சட்டை
அசட்டை - பொருட்படுத்தாமை
அணிகள் - ஆபரணங்கள்
அமரகவி - தெய்வத்தன்மை உடைய கவிஞர்
அமர்ந்து - வீற்றிருந்து
அரசரேறு - அரசர்களில் சிறந்தவன்
அரைக் கணம் - நொடிப் பொழுது
அவதரித்தல் - தோன்றுதல்
அவம் - வீண்
அவா - விருப்பம்
அவைக்களம் - சபை
அறநெறி - நல்ல வழி
அனுட்டித்தல் - கையாளுதல்
அன்புநெறி - அன்புவழி
அன்னார் - அவர், அப்படிப் பட்டவர்
ஆணை - கட்டளை
ஆதிக்கம் - ஆட்சி, உரிமை
இடையூறு - துன்பம்
இணங்கி - இசைந்து
இணை - ஒப்பு, சமம்
இறுதி - முடிவு
இன்பவாரி - மகிழ்ச்சியாகிய கடல்
உரம் - எரு.
ஊர்தல் - தவழ்ந்துசெல்லல்
உறக்கம் - தூக்கம்
உறுதி - நிச்சயம்
உறையும் - வசிக்கும்
எழில் - அழகு
ஏது - காரணம்
ஏந்தல் - தலைவன்
ஏறு - தலைவன், காளை போன்றவன்
ஐயம் - சந்தேகம்
ஒத்தாசை - உதவி
ஒற்றர் - துப்பறிவோர்
கசடற - குற்றமற
கசந்தது - வெறுத்தது
கரைசல் - ஏதேனுமொரு பொருள் கரைக்கப்பட்ட திரவம்
களிப்பு - மகிழ்ச்சி
காட்சி - தோற்றம்
கீதம் - இசை
குடம் - மேற்கு
குணம் - கிழக்கு
குணவாயில் கோட்டம் - இது வஞ்சி நகரத்தின் கீழ்த் திசையிலிருந்த ஓர் ஊர். அவ்வூரில் தான் இளங்கோவடிகள் துறவு பூண்டிருந்தார்.
குழவி - குழந்தை
கூற்று - சொல், பதில்
கொழுகொம்பு - கொடி படர்தற்குரிய கொம்பு

கொட்டம் - வீண் விளையாட்டு
கோட்டம் - கோயில்
சத்து - சாரம்
சால - மிகவும்
சித்திரப் பாவை - சித்திரத்தில் உள்ள பொம்மை
சீரிய - பெருமை பொருந்திய
சுரத்தல் - கசிதல்
தளராத - சளைக்காத
திகைத்தல் - பிரமித்தல், திடுக்கிடுதல்
திக்கு - திசை
திங்கள் - மாதம்
திண்மை - வலிமை
தியாகி - தன்நலம் மறந்து பிறர் நலத்துக்குப் பாடுபடுபவர்
திரட்டும் - சேர்க்கும்
திருவற்ற - நன்மையில்லாத
தீர்ப்பு - முடிவு
தேசாபிமானம் - நாட்டுப் பற்று
தொல்லை - துன்பம்
நடுநிலையாளர் - நீதிபதி
நாட்டம் - எண்ணம்
நித்திரை - உறக்கம்
நில நூல் பூகோளம்
நீதிக்கலை - சட்டக் கல்வி
நுண்ணறிவு - கூர்மையான அறிவு
நெற்று - முற்றிய காய்
பங்கம் - அழிவு
பட்சபாதம் - ஒரு பக்கமாகப் பேசுதல்
பணியாற்றி - சேவை புரிந்து
பண்படுத்தல் - பக்குவப் படுத்தல்
பயக்கும் - கொடுக்கும்
பயிற்சி - அனுபவம்
பரம்பரை - தலைமுறை
பருவம் - பொழுது
பிரசாரம் - விளம்பரம்
புரட்சிக் கவி - புதிய கருத்துக்களைக் கொண்ட கவிஞ
புலரும் - விடியும்
புனைந்து - கற்பனை செய்து
பூதவுடல் - ஊன் உடல்
போந்து - சென்று
மாண்பு - சிறப்பு
மாரிக்காலம் - மழைக்காலம்
மாலுமி-கப்பலோட்டுபவன்
முடைதல் - வளைத்துக் கட்டுதல்
முட்டுப்பாடு - இல்லாமை
மூப்பு - வயதுமுதிர்ச்சி
வஞ்சி - சேரர் தலைநகர்
வழக்கு - மாறுபாடு
வழக்கறிஞர் - நியாயவாதி
வாணிபம் - வியாபாரம்
வியப்பு - ஆச்சரியம்
வேட்கை - விருப்பம்
வையகம் - உலகம்

இளங்கோ வாசகம்

[முதற் புத்தகம் - முதற் படிவம்]

இரண்டாம் பிரிவு

ப. முருகன், M. A.
மாகாணக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை
முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புகள்: மே, 1954; ஜூன், 1955

Approved by the Madras Text Book Committee for class use Vide Page 118 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19-5-'54

சக்தி பிரஸ், சென்னை - 1.

முன்னுரை

‘இளங்கோ வாசகம்’ என்னும் இந் நூல்வரிசை உரிமைபெற்ற நம் திருநாட்டு மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

‘புதிய கல்விமுறைக் கேற்ற புதிய புத்தகம் வேண்டும்’ என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர் தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத் தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு மேலும் கொடுக்கப்பெற்றுள்ளன. மாணவர் தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தினருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் காணிக்கையாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட்டக் கல்வி ஆணையாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கை யுடையேம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

எண்			பக்கம்
I.	கடவுள் வாழ்த்து		1
II.	நீதிப் பகுதி		
1.	விவேக சிந்தாமணி	...	3
2.	இன்னா நாற்பது	...	5
3.	சதகங்கள்	...	7
III.	கதைப் பகுதி		
	வெள்ளைக் காக்கை	...	11
IV.	வருணனைப் பகுதி		
1.	செந்தாமரை	...	15
2.	வாத்து	...	16
V.	பலவகைப் பாடல்கள்	...	18

உரைநடைப் பகுதி

1.	தமிழ்த் திருநாடு	...	21
2.	எங்கள் மைசூர்ப் பயணம்	...	27
3.	பர்மியரைப் பார்	...	35
4.	அஜந்தா மலைக்குகைகள்	...	43
5.	கிரேக்கப் படையெழுச்சி	...	51
6.	மின்சாரத்தின் அற்புதங்கள்	...	58
7.	வெளிநாட்டுக் கடிதங்கள்	...	65
8.	சுதந்திர நாட்டில் மாணவர் கடமை	...	74

I. கடவுள் வாழ்த்து

உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
திலக மாகிய திறலறி வன்னடி
வழுவில் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்
தொழுவல் தொல்வினை நீங்குக வென்(று) யான்.

— வளையாபதி

முறையீடு

திருவும் அறிவும் திறனும் வலிவும்
உருவும் எழிலும் உயர்நன் னடையும்
பரிவும் கொடையும் பணிவும் புகழும்
மருவும் வரம்நீ இறைவா, தருவாய்.

கலையின் நிறைவும் கலங்கா நிலையும்
மலையின் உயர்வும் மணியின் தெளிவும்
துலையின் நிறைபோல் துகளில் மொழியும்
தலைவா, எமக்கே தருவாய், தருவாய்.

வாய்மை வீரம் வண்மை முறைமை
தாய்மைத் தமிழில் தனிநற் புலமை
தூய்மை இவைதாம் தொழுவோம் தரவே
சேய்மைப் பொருளே! செவிசாய்த் தருளே. 8

—பேராசிரியர் மயிலை. சிவ. முத்து

குறிப்புரை

வளையாபதி ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இந்நூல் தற்காலத்தே முழுவதுமாகக் கிடைப்பதில்லை. அறிவன்-அருகதேவன். வழுவில்-குற்றமில்லாத. வாலிதின்-தூய்மையாக. தொழுவல் - வணங்குவேன்.

முறையீடு என்னும் தலைப்பில் அடங்கிய பாடல்களை இயற்றிய முதுபெரும்புலவர் மயிலை சிவ. முத்து அவர்கள் சென்னைக்கடுத்த மயிலாப்பூரில் பிறந்தவர். தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழாசிரியர்கள் முன்னேற்றத்துக்காகவும் அரியபணிகள் பல ஆற்றுபவர்.

திரு - அழகு. பரிவு - அன்பு. நன்னடை - நல்லொழுக்கம். மருவும் - அடையும். துலை - தராசு. துகள் - குற்றம். வண்மை - கொடைக் குணம். தனி - ஒப்பற்ற. சேய்மை - தொலைவில் உள்ள. அறிவுக்கு எட்டாத.

வினாக்கள்

1. வளையாபதிச் செய்யுளில் ஆசிரியர் எதன் பொருட்டுக் கடவுளை வணங்குகிறார்?

2. முறையீடு என்னும் பகுதியில் ஆசிரியர் இறைவனிடம் வேண்டும் வரங்கள் யாவை?

3. கடவுளைச் சேய்மைப்பொருள் என்று குறிப்பிடக் காரணம் யாது?

பயிற்சி

1. திறலறிவன், வழுவில், அறிவன்னடி, செவிசாய்த்தருள் - இவற்றைப் பதம் பிரித்து எழுதுக.

2. தொன்மை+வினை, நன்மை+நடை, துகள்+இல், நன்மை+புலமை—இவற்றைச் சேர்த்து எழுதுக.

3. முறையீடு என்னும் பகுதியில் உள்ள செய்யுட்களின் பொருளை உரைநடைப்படுத்தி ஒரு கட்டுரையாக எழுதுக.

II. நீதிப் பகுதி

1. விவேக சிந்தாமணி

தண்டா மரையி னுடன்பிறந்துந்
தண்டே னுகரா மண்டூகம்
வண்டே கானத் திடையிருந்து
வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலும்
அறியார் புல்லோர் நல்லோரை
கண்டே களித்தங் குறவாடித்
தம்மிற் கலப்பர் கற்றோரே. 1

வானர மழைதனில் நனையத் தூக்கணாந்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடி லிடர தாகுமே. 2

பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே வொளிம முங்கிடும்
மருத்துள தோவெனில் வாக டத்திலை
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே. 3

புத்திமான் பலவா னாவான்
பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலும்
இடரது வந்தே தீரும்

மற்ருெரு சிங்கம் தன்னை
    வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றிற் சாயல்
    காட்டிய உவமை போலாம். 4

—பல புலவர்கள்

குறிப்புரை

பல புலவர்கள் பாடிய நீதிப் பாடல்கள் அடங்கிய நூலுக்கு விவேக சிந்தாமணி என்று பெயர்.

1. தண்மை+தாமரை = தண்டாமரை. தண்மை+தேன் = தண்டேன். மண்டூகம் - தவளை. மது - தேன். புல்லோர் - அற்பர்.

2. வானரம் - குரங்கு. தூக்கணம் - தூக்கணங்குருவி. நெறி - அறிவுரை. ஈனர் - அற்பர்.

3. வாகடம் - மருத்துவ நூல். உரு - உருவம், அழகு. தீரும் - நீங்கும்.

4. இடர் - துன்பம். சாயல் - நிழல்.

வினாக்கள்

1. தவளைக்கும் வண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

2. வானரம் மழையில் நனையக் காரணம் என்ன? தூக்கணம் கூறிய புத்திமதி யாது?

3. இரண்டாம் செய்யுளால் அறியப்படும் நீதி யாது?

4. பெருஞ் செல்வத்தை ஆசிரியர் என்னவென்று குறிப்பிட்டுள்ளார்?

5. செல்வப்பிணிக்கு மருந்து யாது?

6. எவன் பலவான் ஆவான்?

பயிற்சி

1. இரண்டு நான்காம் செய்யுட்களில் அடங்கியிருக்கும் கதைகளைச் சுருக்கி எழுதுக.

2. பண்டு, உறவாடி, பிய்த்திடும், நவின்ற-இவற்றைநும் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

3. முதற் செய்யுளில் அமைந்துள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுதுக.

2. இன்னா நாற்பது

1. ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா ;
நாற்றம் இலாத மலரின் அழகின்னா :
தோற்றம் இலாதான் துணிவின்னா : ஆங்கின்னா ;
மாற்றம் அறியான் உரை.

2. எருதில் உழவர்க்குப் போகிரம் இன்னா :
கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா ;
திருவுடை யாரைச் செறல்இன்னா : இன்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

3. பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா :
இருள்கூர் சிறுநெறித் தாங்தனிப் போக்கின்னா ;
அருளில்லார் தங்கட் செலவின்னா : இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

4. தன்னைத்தான் போற்று(து) ஒழுகுதல் நன்கின்னா.
முன்னை உரையார் புறமொழிக் கூற்றின்னா;
நன்மை இலாளர் தொடர்பின்னா; ஆங்கின்னா;
தொன்மை உடையார் கெடல்.

— கபிலர்

குறிப்புரை

கபிலர் என்னும் புலவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர். அவர் இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டவர். இன்னா நாற்பது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

1. ஆற்றல் - வலிமை. படை - ஆயுதம். நாற்றம் - மணம். மாற்றம் - விடை. தேற்றம் - தெளிவு.

2. புறங்கொடுத்தல் - பின்வாங்குதல். இன்னா - கெட்டது. திருவுடையார் - செல்வர். செறல் - விரோதம் கொள்ளுதல். பெருவலியார் - மிகவும் வலிமையுள்ளவர்.

3. இல்வழி - இல்லாத இடத்தில். கூர் - பொருந்திய, நிறைந்த. செலவு - போதல். வண்மை புரிவு - தருமம் செய்தல்.

4. புறமொழி - புறங்கூறுதல். கூற்று - சொல். தொடர்பு - நட்பு. தொன்மை - பழைமை.

வினாக்கள்

1. இன்னா நாற்பது - இதன் பெயர்க்காரணமும் ஆசிரியர் பெயரும் கூறுக.
2. யாருடைய உரை இன்னாததாகும்?
3. உழவர்க்கு இன்னாதது எது?
4. எவ்விடத்தில் பாட்டுரைத்தல் கூடாது?
5. யாருடைய புறமொழி இன்னாததாகும்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுதுக.

(1) ....இல்லாத மலரின் அழகு இன்னு.

(2) பெருவலியார்க்கு இன்னு செயல்.........

(3) தொன்மை உடையார்.........இன்னு.

(4) நன்மையிலாளர்.........இன்னு.

2. ஆங்கின்னு, புறங்கொடுத்தல், அருளில்லார், செலவின்னு, நன்கின்னு—இவற்றைப் பதம் பிரித்துக் காட்டுக.

3. உங்கள் பாடப் பகுதியில் வந்திருக்கும் செய்யுட்களின் கருத்துக்களை அமைத்து அவற்றுடன் ஒற்றுமையுடைய உங்கள் கருத்துக்களையும் சேர்த்து ஒரு கட்டுரை எழுதுக.

3. சதகங்கள்

வேண்டுவன

அதிவீரன் என்னிலும் தந்திர உபாயமுடன்
அடையலரை வெல்லல்வேண்டும் ;
ஆயிரம் வித்தைகற் ருலும்உல கந்தனில்
அடக்கம திருத்தல்வேண்டும் ;
நதிகோடி நீந்திவந் தாலும்ஓ டந்தனை
நயந்துகரை சேரல்வேண்டும் ;
ஞானதத் துவமுணர்ந் தாலும்உல கத்தினில்
நடக்கைதனை யறிதல்வேண்டும் ;

துதிசேர் குபேரன்என் ருலும்ஒரு லாபமுறு
 தொழிலுடன் இருத்தல்வேண்டும் ;
துய்யவல் லமையுடையன் எனினும்ஒரு சார்பினுல்
 துரைகளைக் காணல்வேண்டும் ;
மதிமூகி யென்னினும் பெரியோர்சொல் கொளல்
 மணவாள நாராயணன் [வேண்டும்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
 வரதவேங் கடராயனே ! 1

—திருவேங்கட சதகம்

வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டும் ; கற்ற
 வழியிலே நிற்கவேண்டும் ;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும் ; தேடி
 வளர்அறம் செய்யவேண்டும் ;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்;பிரிதல்
 செய்யா திருக்கவேண்டும் ;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்;கொண்டு
 தியாகம் கொடுக்கவேண்டும் ;
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்;நாட்டி
 நன்ருய் நடத்தவேண்டும் ;
நம்பன்இணை யடிபூசை பண்ணவேண் டும்;பண்ணி
 ஞலும்மிகு பத்திவேண்டும் ;
ஆலம்அமர் கண்டனே ! பூதியணி முண்டனே !
 அனகன்எம தருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
 அறப்பளீ சுரதேவனே. 2

—அறப்பளீசுர சதகம்

9

வேண்டாதன

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல்வேண்டாம்;
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல்வேண்டாம்;
உற்றவர்கள் போலஉட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பவேண்டாம் ;
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொலிப் பின்சபையில்
ஊமைபோல் நிற்றல்வேண்டாம் ;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கல்வேண்டாம் ;
தைரியந் தனில்விக்ர மாதித்தன் என்னினும்
தன்னையே புகழவேண்டாம் :
மற்றொன்றும் எண்ணாது செய்யவேண் டாமென்பர்]
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே! 3

— திருவேங்கட சதகம்

குறிப்புரை

நூறு பாடல்களைக் கொண்ட நூலுக்குச் சதகம் என்று பெயர். திருவேங்கட சதகம் திருப்பதியில் உள்ள திருமாலைப் பற்றிப் பாடப்பட்டது. இதன் ஆசிரியர் நாராயண பாரதியார் ; வெண்மணி என்னும் ஊரைச் சார்ந்தவர். அறப்பளீசுர சதகம் கொல்லிமலையில் உள்ள அறப்பளீசுரர் என்னும் இறைவன்மீது பாடப்பட்டது. இதன் ஆசிரியர் அம்பலவாணக் கவிராயர். இவர் சிறந்த சிவபக்தர்.

1. அடையலர் - பகைவர். குபேரன் - செல்வன். சார்பு - துணைவர்.

2. வளைகடல் - வளைந்த கடல். ஞாலம் - உலகம். சுற்றிக்கொண்டே இருப்பதால் இப்பெயர் பெற்றது. இணையடி - அடியிணை என்று மாற்றுக. இரண்டு பாதங்கள் என்பது பொருள். பூதி - திருநீறு. மதவேள் - ஒரு வள்ளல்.

3. சற்றும் - சிறிதும். எண்ணாது - யோசியாமல்.

வினாக்கள்

1. திருவேங்கட சதகம், அறப்பளீசுர சதகம் - இவற்றின் பெயர்க்காரணம் கூறுக. ஒவ்வொன்றின் ஆசிரியர் பெயரும் தருக.

2. ஆலமமர் கண்டன், அலர்மேல் மங்கை மணவாளன் - இப் பெயர்கள் யார் யாரைக் குறிக்கும்?

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை நிரப்புக.

1. அதிவீரனாயினும்.................வெல்ல உபாயம் வேண்டும்.

2. குபேரனாயினும் ஒரு..............தொழில் உடையவனாக இருக்கவேண்டும்.

3. ....பருவத்தில் கல்வி கற்கவேண்டும்.

4. எந்தச் செயலையும்.........செய்தல் வேண்டும்.

5. சிறிதும்....................இல்லாதவர் சண்டையை விலக்கலாகாது.

III. கதைப் பகுதி

வெள்ளைக் காக்கை

இரையைத் தேடிக் காகம் ஒன்று
　　சுற்றி வந்தது.
எங்கள் வீட்டுக் கூரை மீது
　　வந்த மர்ந்தது.
தரையில் கொட்டிக் கிடந்த நல்ல
　　தானி யங்களைத்
தடையில் லாமல் புறாக்கள் கூடித்
　　தின்னக் கண்டது.

“ கள்ளத் தனமாய்ப் புறாக்க ளோடு
　　சேர்ந்து நாமுமே,
களித்தே இரையைத் தின்ன வேண்டும் ”
　　எனநி னைத்தது ;

வெள்ளை வர்ணத் தொட்டி ஒன்றை
நாடிச் சென்றது ;
மேனி முழுதும் அதில் நனைத்து
வெளியில் வந்தது.

திரும்பி வந்து புறாக்கள் நடுவே
சேர்ந்து கொண்டது;
திருட்டுத் தனமாய்த் தானி யத்தைத்
தின்ன லானது.

கறுப்புக் காகம் வெண்மை யாக
வந்தி ருப்பதைக்
கண்டு பிடிக்க வில்லை, அந்தப்
புறாக்கள் கூட்டமே.

களிப்பு மிகவும் கொண்ட காகம்
தன்னை மறந்தது ;
'காகா,' 'காகா,' 'காகா,' என்றே
கத்த லானது.

எளிதில் உண்மை கண்டு கொண்ட
புறுக்கள் யாவுமே
எதிர்த்து அதனைக் கொத்திக் கொத்தி
விரட்டி அடித்தன.

தப்பிப் பிழைக்க எண்ணிக் காகம்
உடன் பறந்தது.
தனது இனத்துக் காகக் கூட்டம்
தனைஅ டைந்தது.
அப்போ தந்தக் காகக் கூட்டம்
என்ன செய்தது?
ஆவலோடு 'வருக, வருக'
என்ற ழைத்ததா?

இல்லை, இல்லை, வெண்மை பூசி
வந்த காக்கையை
ஏதோ பறவை என்று அவைதாம்
எண்ணி விட்டன.
தொல்லை கொடுக்கும் பறவை என்று
கருதி விட்டதால்,
துரத்தித் துரத்திக் கோப மாக
விரட்டி அடித்தன.

பிறரை ஏய்க்க நினைத்துக் காகம்
வேடம் பூண்டது.
பிறந்த இனத்துப் பறவை கூடத்
துரத்தி அடித்தது.

பறந்து பறந்து இங்கும் அங்கும்
அலைந்து திரிந்தது.
பாவம், பின்னர் அந்தக் காக்கை
என்ன ஆனதோ?

— குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

குறிப்புரை

இஃது ஈசாப்புக் கதையைத் தழுவி எழுதப்பட்டதாகும். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் சிறுவர்கள் விரும்பும்வகையில் எளிய இனிய பாடல்களும் கட்டுரைகளும் எழுதுவதில் வல்லவர். இவர் 'பூஞ்சோலை' என்னும் மாத இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

வண்ணம் - வர்ணம். இனம் - கூட்டம். தொல்லை - துன்பம். ஏய்க்க - ஏமாற்ற.

வினாக்கள்

1. தானியங்களைத் தின்பதற்காகக் காக்கை செய்த தந்திரம் யாது?

2. காக்கை தன்னைத்தானே எவ்வாறு வெளிப்படுத்திக் கொண்டது?

3. உண்மையான காக்கைகளும் வெள்ளைக் காக்கையை விரட்டக் காரணம் என்ன?

4. இப் பாடத்தால் நீ அறியும் நீதி யாது?

பயிற்சி

1. இக் கதையைச் சுருக்கி உரைநடையில் எழுது.

2. இக்கதையைப் புறாக்கூட்டத்தில் ஒன்று கூறுவது போல மாற்றி எழுது.

IV. வருணனைப் பகுதி

1. செந்தாமரை

கண்ணாடித் தரையின் மீது
    கண்கவர் பச்சைத் தட்டில்
எண்ணாத ஒளிமுத் துக்கள்
    இறைந்தது போல்கு ளத்துத்
தண்ணீரி லேப டர்ந்த
    தாமரை இலையும், மேலே
தெண்ணீரின் துளியும் கண்டேன்
    உவப்பொடு வீடு சேர்ந்தேன். 1

சிலநாட்கள் சென்ற பின்னர்க்
    குளக்கரை சென்றேன்! பச்சை
இலைத்தட்டில் சிந்தும் பால்போல்
    எழில்நீரும், கரிய பாம்பின்
தலைகள்போல் நிமிர்ந்தி ருந்த
    தாமரைச் சிற்ற ரும்பும்
இலகுதல் காணப் பெற்றேன்
    காட்சியின் இன்பம் பெற்றேன். 2

—பாரதிதாசனார்

2. வாத்து

எடுப்பு

வாத்தினைப் பாரடா தம்பி - வெள்ளை
வாத்தினைப் பாரடா தம்பி.

மேல் எடுப்பு

நித்தமும் தண்ணீரில் ஊறி - பேணும்
நீச்சினில் நன்ருகத் தேறி,
சுத்தமாய் வாழ்ந்திடும் வாத்து - நல்ல
சுகத்தின் அறிகுறி ஆச்சே !
— வாத்தினைப் பாரடா......

அமைதி

ஓடிடும் சிறியதை விட்டு - வாத்து
ஒண்டிடும் பெரியதை அள்ளிக்
கூடிடத் தின்னுதல் போல - அறிவைக்
கூழாய்க் குடித்திடு தம்பி. 1
— வாத்தினைப் பாரடா......

வெள்ளைச் சிறகினை விரித்து - தான்
விரும்பிடும் பூவினை அணைத்து
மெள்ளத் தவழ்ந்திடும் வாத்து - அது
மேலான இன்பத்தின் ஊற்று. 2
— வாத்தினைப் பாரடா......

— நாக. முத்தையா

குறிப்புரை

பாரதிதாசனுர் பாரதியாரின் மாணவர். இவர் புதுவையில் வசிக்கிருர். இவர் கவிதைகள் சொல்லழகும் பொருளழகும் சீர்திருத்தக் கருத்துக்களும் நிறைந்தவை.

கவிஞர். நாக. முத்தையா சிறுவர்களுக்குகந்த பாடல்களைப் பாடுவதில் வல்லவர். இவர் சென்னையில் வாழ்கிருர்.

1. உவப்பு - மகிழ்ச்சி. தெண்ணீர் - தெளிவான நீர். சிற்றரும்பு - சிறிய அரும்பு. இலகுதல் - விளங்குதல்.

2. தேறி - தேர்ச்சிபெற்று. சால - மிகவும். பேணும் - காப்பாற்றும்.

வினுக்கள்

1. தாமரை இலையின் மேலுள்ள தண்ணீர்த் துளிகள் எப்படி இருக்கின்றன ?

2. தாமரை அரும்புகளுக்கு உவமையாகக் கூறப் பட்டவை யாவை ?

3. வாத்திஞல் நாம் அறியும் நீதிகள் யாவை ?

பயிற்சி

1. கண்கவர், எண்ணுத, உவப்பொடு, கரகரவென, இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. 'செந்தாமரை' முதற்செய்யுளில் உள்ள எழுவாய்ப் பயனிலை செயப்படுபொருள்களை எடுத்து எழுது.

3. வாத்தினைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

V. பலவகைப் பாடல்கள்

ஒன்றுக்கு ஒன்று பெரிது

எழுதரிது முன்னம் ; எழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய் ;—முழுதுமதைக்
கற்பரிது ; கற்பயனைக் காண்பரிது ; கண்டக்கால்
நிற்பரிது தான் அங்ஙனே. 1

— அவ்வையார்

பழக்கத்தால் வருவன

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்;—நித்தம்
நடையு நடைப்பழக்கம் ; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். 2

— அவ்வையார்

வழுதியின் திருமணப் பெருமை

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்(து)
உண்ட பெருக்க முரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண் டிலேன். 3

— அவ்வையார்

ஏமாற்றம்

கல்லாத வொருவனைநான் கற்று யென்றேன் ;
காடெறியும் மறவனைநா டாள்வா யென்றேன் ;
பொல்லாத வொருவனைநான் நல்லா யென்றேன் ;
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன் ;

மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை ;
 வழங்காத கையனைநான் வள்ளா லென்றேன் ;
இல்லாத சொன்னேனுக் கில்லை யென்றான் ;
 யானுமென்றன் குற்றத்தா லேகின்றேனே. 4

— இராமச்சந்திர கவிராயர்



விகடராமன் குதிரை

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்து (இ)ரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி. 5

— காளமேகப் புலவர்

குறிப்புரை

அவ்வையார்என்றபெயருடன் இரண்டுமூன்று புலவர்கள் இருந்துள்ளனர். இப்பாடல்களை எழுதியவர் கம்பர் காலத்தில் வாழ்ந்தவர். இவர் 12-ஆம் நூற்றுண்டினர். சங்க காலத்தில் ஓர் அவ்வையார் வாழ்ந்துள்ளார்.

இராமச்சந்திர கவிராயர் நகைச்சுவை ததும்பக் கவி பாடுவதில் வல்லவர். இவர் ஒரு பிற்காலப் புலவர்.

காளமேகப் புலவர் 15-ஆம் நூற்றுண்டினர். கறுத்த மேகம் நிறைந்த மழையை விரைந்து பொழிவதுபோல இவர் பற்பல பாடல்களை விரைவில் எழுத வல்லவராகையால் இப்பெயர் பெற்றுர்.

1. பழுதற - குற்றமில்லாமல். நிற்பது - ஒழுகுவது.

2. நித்தம் - நாடோறும். நடை - ஒழுக்கம். தயை - கருணை.

3. வழுதி - பாண்டியன். பெருக்கம் - பெருமை சுருக்குண்டேன் - வாடினேன்.

4. இச்செய்யுள் புலவரின் வறுமை நிலைமையைக் குறிப்பதாகும். எறியும் - வெட்டும். போர்முகம் - போர் முனை. மல் - வீரம். ஆகும் - பொருந்திய. சூம்பல்-மெலிந்த.

5. வேதம்போம் வாயான்-வேதம் ஓதும் வாயை உடையவன். காதவழி-ஏழரை நாழிகை வழி, பத்துக்கல் தூரம்.

விஞக்கள்

1. ஒன்றுக்கொன்று அரிதாக இருக்கும் செயல்கள் யாவை?

2. திருமணத்துக்குச் சென்ற அவ்வையார் பட்ட துன்பங்கள் யாவை?

3. 'யானுமென்றன் குற்றத்தால் ஏகின்றேனே'— குற்றங்கள் யாவை?

4. விகடராமன் குதிரை எப்படிப்பட்டது?

5. காளமேகப் புலவரின் பெயர்க் காரணம் கூறு.

உரைநடைப் பகுதி

1. தமிழ்த்திரு நாடு

உலகில் முதன் முதலாகத் தோன்றிய நாடு நம் தமிழ் நாடேயாகும். தமிழ் வழங்கும் நாடு தமிழ்நாடு எனப்படும். தமிழ்மொழி இன்ன காலத்தில் தோன்றியது என எவராலும் கூறவியலாத தொன்மை உடையது. பழங் காலத்தில் கிழக்கே ஜாவா வரையிலும் மேற்கே மடகாஸ்கர் வரையிலும் தமிழ்மொழி பேசப் பட்டு வந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எனவே அக்காலத்தே நம் தமிழ்நாடு ஒரு பரந்த நிலப் பரப்பாக இருந்தது என்பது புலனாகும். தமிழ்நாடு பிற்காலத்தில் வடக்கில் திருவேங்கட மலையையும், தெற்கில் குமரி முனையையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் எல்லைகளாகக் கொண்டு விளங்கியது.

தொன்று தொட்டே நம் தமிழ்நாடு வாணிபம், கைத்தொழில், நாகரிகம், கலை முதலியவற்றில் சிறந் தோங்கி இருந்தது. நம் நாடு நீர்வளம், நிலவளம், மலை வளம் முதலிய பல வளங்களுமுடையது. இயற்கைச் செல்வங்கள் நிறைந்த தமிழ் மக்கள் முற்காலத்தே கிரேக்கர், உரோமர், யவனர் முதலிய அயல்நாட்டு மக்களிடம் வாணிபத் தொடர்பு பூண்டு வளமுற வாழ்ந்து வந்தனர். அக்காலத்தே நம் நாடு செல்வம் கொழிக்கும் செந்தமிழ் நாடாகத் திகழ்ந்திருந்தது.

ஆதியில் நம் தமிழ்நாடு **சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு** என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்

கப்பட்டிருந்தது. இவையேயன்றி **அருவாநாடு, புனல் நாடு** முதலிய சிறு நாடுகளும் தமிழகத்தில் அடங்கி இருந்தன. முத்தமிழ் நாடுகளை முறையே சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் கோன்முறை கோடாது நாட்டைச் சீரும் சிறப்புமுற ஆண்டுவந்தார்கள். அவர்கள் ஆட்சியில் குடிமக்கள் வளமும் இன்பமும் நிறைந்து விளங்கினர்.

சேரநாடு மேற்குக் கரையோரத்தில் உள்ளது. இது மலைவளம் நிறைந்த நாடு. இக்காலத்தில் திருவாங் கூர், கொச்சி, தென் கன்னடம், கோயம்புத்தூர், சேலம் என வழங்கிவரும் ஜில்லாக்கள் சேரநாட்டினுள் அடங் கும். இங்கு மலைகளிற் செறிந்த காடுகளிலிருந்து ஏலம் இலவங்கம், சந்தனம், மிளகு முதலிய வாசனைப் பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. இங்குள்ள காடுகளில் யானைகள் வதிந்தனவாதலால், 'வேழ முடைத்து மலைநாடு' என அவ்வையார் பாடியுள்ளார். இந்நாட்டில் **பெரியாறு, பொருநை** என்னும் வற்றாத வளநதிகள் ஓடுகின்றன.

சேரநாட்டின் தலைநகரம் **வஞ்சி**. இதற்குக் **கருவூர்** என்னும் மற்றொரு பெயருண்டு. **தொண்டியும் முசிரி** யும் இந்நாட்டின் துறைமுகப் பட்டினங்களாகும். பழங் காலத்தில் அயல்நாட்டுக் கப்பல்கள் இத்துறைமுகங்களி னின்றே இங்கு விளையும் வாசனைப் பொருள்களை ஏற் றிச் சென்றன. சேரநாட்டை ஆண்ட மன்னர்களுள் **சேரன் செங்குட்டுவன்** புகழ்மிக்கவன். அவன் இம யம் வரை சென்று, அங்குள்ள மன்னர்களை வென்று, இமயத்தில் தமிழ்க்கொடி பொறித்தனன் எனச் சரித்தி ரம் கூறுகின்றது. கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்ததும்

இவன் காலத்திலேயேயாம். சேரன் செங்குட்டுவன் இளவல் இளங்கோவடிகள். அவரே நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் காவியத்தை இயற்றியருளினர்.

சோழநாடு தஞ்சையும் திருச்சியும் அடங்கிய நிலப் பகுதியாகும். சோழநாடு நிலவளம் செறிந்த நாடு. 'வான் பொய்ப்பினும் `தான்பொய்யாக்' காவிரி பாய்வதால் சோழநாடு நெல்லும் கரும்பும் நிறைந்த நாடாகப் பொலிகிறது. எனவே, 'சோழவளநாடு சோறுடைத்து' என அவ்வையாரால் இந்நாடு பாராட்டப் பெற்றது. நெடிய வயல்களும், இனிய பொழில்களும் இந்நாட்டுக்கு வனப்பை அளிக்கின்றன. சோழநாட்டின் தலைநகரம் **உறையூராகும். தஞ்சை, திருவாரூர், காவிரிப்பூம் பட்டினம்** முதலிய பட்டணங்களும் சிற்சில சமயங்களில் தலைநகரங்களாக இருந்தன. காவிரிப்பூம் பட்டினமே அதன் துறைமுகமாகவும் இருந்தது. இதற்குப் **புகார்** என்றும் வேறு பெயர் உண்டு. சோழ மன்னர்களில் **கரிகாலன், இராசராசன், இராசேந்திரன்** முதலியவர்கள் மிகவும் புகழ்பெற்றவர்கள். **கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி** முதலிய செந்தமிழ்ப் புலவர்கள் சோழமன்னன் குலோத்துங்களுல் ஆதரிக்கப் பெற்றூர்கள்.

இன்று **மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி** என வழங்கும் ஜில்லாக்களைக்கொண்ட நிலப் பகுதியே அக்காலத்தே **பாண்டிய நாடு** என்று அழைக்கப்பட்டது. மிகப் பழங்காலத்தே பாண்டிய நாடு தென்கடலாகிய இந்துமகா சமுத்திரத்தில் நெடுந் தூரம் பரவியிருந்தது. அக்காலத்தே இதன் தலைநகரங்

களாக இருந்த தென் மதுரை, கபாடபுரம் முத லியவை கடல்கோளால் அழிந்தன. அதன் பின்னரே இன்றுள்ள மதுரை பாண்டிய நாட்டின் தலைநகராயிற்று. வைகை, பொருநை என்னும் இரண்டு ஆறுகள் இந்நாட்டிற் பாய்கின்றன. பாண்டியநாடு கடலை அடுத் திருந்ததால் இங்கு முத்தெடுக்கும் தொழில் சிறப்பாக நடைபெற்றது. 'பூமியர்கோன் தென்னாடு முத்துடைத்து' என்னும் செய்யுளடியால் இதனை நன்கறியலாம். கொற் கைத் துறைமுகத்தினின்று ஏராளமான முத்துக்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நெடுஞ் செழியன் என்பவன் பாண்டியமன்னருள் சிறந்தவன்.

பாண்டிய மன்னர் மதுரையில் தமிழ்ச் சங்க மொன்றை நிறுவிச் செந்தமிழ் மொழியை வளர்த்து வந் தார்கள். அச் சங்கத்தில் தமிழாய்ந்த புலவர்கள் இயற் றியனவே சங்க இலக்கியங்கள் என வழங்குகின் றன. இச் சங்கச் செய்யுட்களால் நாம் நம் முன்னோர் களின் நாகரிகம், கைத்தொழில், வாணிபம், வீரம், போர்முறை, இல்வாழ்க்கை முதலியவற்றைப் பற்றிய செய்திகளை உணரலாம். சங்கச் செய்யுட்களே தமிழர் வரலாற்றுக்கு ஆதாரமாக இருக்கின்றன.

இங்ஙனம் பலவகைப் பெருமைகள் வாய்ந்தது நம் தமிழ்நாடு. அக் காலத்தினர் நாட்டையும் மொழியை யும் உயிரெனப் போற்றி வந்தார்கள். முடி மன்னர் மூவர் ஆண்ட முத்தமிழ்நாடு இன்று எந்நிலையில் உள் ளது? ஒரு காலத்தில் இமயம் முதல் குமரிவரை பரந் திருந்த நம் தமிழ்நாடு அளவில் குறைந்தது. வாணிபம் வளங் குன்றியது: கைத்தொழில் திறனும் மறைந்தது. வீரத்திலும் தமிழரிடம் முன்னேற்றமில்லை. நாம்

இன்று உரிமைபெற்ற திருநாட்டில் வாழ்கின்றோம். இழந்த பெருமைகளை மீண்டும் பெற வேண்டாமா? தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் தளராத மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் உடையவர்களாய்ப் பொருளாதாரத்திலும் தொழில் துறையிலும் சிறந்து வாழ்வோமாக.

பயிற்சி

பொருளறிக :

ஆய்ந்த	கோன்முறை	வதிந்தன
இளவல்	தொடர்பு	வேழம்
கடல்கோள்	பூமியர்கோன்	
கோடாது	யவனர்	

விடை கூறுக :

1. தமிழ்நாடு பண்டைக்காலத்தில் எவ்வளவு தூரம் பரவி இருந்தது?
2. தமிழ்நாட்டின் பிற்கால எல்லைகள் யாவை?
3. சேர நாட்டின் பெருமைகள் யாவை?
4. சேரன் செங்குட்டுவனைப்பற்றி ஒரு குறிப்பு எழுதுக.
5. இளங்கோவடிகளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
6. சேர சோழ பாண்டிய நாடுகளில் அடங்கும் ஜில்லாக்கள், தலைநகரங்கள், துறைமுகப் பட்டினங்கள் முதலியனவற்றைத் தனித் தனியாக எடுத்து எழுதுக.
7. சோழ மன்னன் குலோத்துங்கனால் ஆதரிக்கப்பட்ட புலவர்கள் யாவர்?

8. பாண்டிய நாட்டின் பெருமைகளைச் சுருக்கி எழுதுக.

9. மதுரைத் தமிழ்ச் சங்கம் யாரால் நிறுவப் பெற்றது? அதன் பயன் யாது?

10. சங்கச் செய்யுட்களால் நாம் அறிவன யாவை?

இலக்கணப் பயிற்சி

பாண்டிய மன்னர் தமிழ்ச் சங்கத்தை நிறுவினர்.

(செய்வினை வாக்கியம்)

தமிழ்ச் சங்கம் பாண்டிய மன்னரால் நிறுவப் பெற்றது.

(செயப்பாட்டு வினை வாக்கியம்)

கீழ்வருவனவற்றுள் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றி எழுதுக :

1. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

2. 'சோழவளநாடு சோறுடைத்து' என அவ்வையார் சோணாட்டைப் பாராட்டினார்.

3. நாம் இழந்த பெருமைகளை மீண்டும் பெற வேண்டாமா?

4. அன்னை கஸ்தூரியைக் காந்தியடிகள் அன்புடன் நேசித்தார்.

5. அக்காலத்தினர் நாட்டையும் மொழியையும் உயிரெனப் போற்றி வந்தார்கள்.

2. எங்கள் மைசூர்ப் பயணம்

(இராணிப்பேட்டையிலிருந்து மாணவர்கள் மைசூருக்குச் சென்று வந்த விவரம் இங்கே தரப்படுகிறது.)

காஃபி, டீ, இந்து, தாய்நாடு என்னும் சத்தம் எங்கள் காதைத் துளைத்தது. இரவில் மக்கள் ஈட்டத்திலும், நீண்ட பிரயாணத்திலும் அலுப்புற்றுத் தூங்கிய நாங்கள் கண்விழித்தெழுந்து அமர்ந்தோம். நாங்கள் ஏறிய புகைவண்டி பங்களூரை அடைந்தது. எல்லோரும் முதல் நாள் பங்களூரைக் கண்டு களித்து மறுநாள் மைசூருக்குச் செல்வதாகத் திட்டமிட்டுக் கொண்டோம்.

இயற்கை அழகும் செயற்கை எழிலும் நிறைந்த நகரங்களில் பங்களூரும் ஒன்று. அங்குப் பாதைகள் ஒரு கோடி மிகத்தாழ்ந்தும் மற்றொரு கோடி மிக உயர்ந்தும், சில விடங்களில் நடுவில் குழிந்தும், இருபுறமும் உயர்ந்தும் விளங்குகின்றன. காலையில் குளிர் மிக அதிகமாகவும், நடுப்பகலில் வெப்பம் அதிகமாகவும் இருக்கின்றன. அங்குள்ள மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், சாலைகளும், சோலைகளும் பார்ப்பவர் கண்களுக்கு விருந்தாக விளங்குகின்றன.

பங்களூரில் **கப்பன் பார்க்** என்னும் நந்தவனமும் **இலால் பாக்** என்னும் நந்தவனமும் கண்டு களித்தோம். அங்குள்ள பூஞ்செடிகளில் பலவிதமான நிறமுடைய மலர்கள் பூத்துக் காற்றில் அசையும் காட்சி, பார்க்கப் பார்க்க ஆனந்தமாக இருக்கிறது. பூஞ்செடிகள் ஆங்காங்கே வரிசை வரிசையாக நடப்பட்டுச்

செழித்து வளர்ந்திருக்கின்றன. பச்சைக் கொடிகள் நெடிய மரங்களில் பாம்பைப்போல வளைந்தும் நெளிந்



தும் படர்ந்துள்ளன. அங்கு நெருங்கித் தழைக்கும் செடிகளைத் தோட்டக்காரர்கள் ஒரே மட்டமாக வெட்டி அவற்றில் பலவித அழகிய உருவங்களைக் கத்தரித்து வைத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க செயலாகும்.

பங்களூரைப் பார்த்துக் களித்து, மறுநாள் மைசூருக்குப் புறப்பட்டோம். மைசூர்த் தசராப் பண்டிகையைப் பார்ப்பதற்காகப் புகைவண்டியில் வந்த மக்கட் கூட்டம் மிகவும் நெருக்கமாக இருந்தது. வண்டியில் எள் விழுவதற்கும் இடமில்லை. எங்களில் பலர் நின்று

கொண்டே இருந்தார்கள். வண்டி மைசூரை அடைந்தது. வண்டியை விட்டுக் கீழே இறங்கினோம். நாங்கள் தங்குவதற்கென முன்னரே ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஓர் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றோம்.

மைசூரை அடைந்ததும் மன்னர் மாளிகையைக் காண வேண்டுமென்ற அவா எங்களைப் பிடர்பிடித்துத் தள்ளிற்று. அன்று அரண்மனை மிகவும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவர்களில் ஆங்காங்கே மின்சார விளக்குகள் வரிசை வரிசையாகப் பதிக்கப்பட்டிருந்தன. பல வண்ணமுள்ள மின்சார விளக்குத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. இரவில் அவை நட்சத்திரங்களை வான வீதியில் வரிசையாகத் தொங்கவிட்டாற்போல் ஒளி வீசலாயின. மைசூர் நகரமெங்கும் மின்சார விளக்குகளின் வெளிச்சம் நிலவு ஒளி போலவே காணப்பட்டது.

மைசூரில் பார்க்கத் தக்க சிறந்த இடங்களில் மிருகக் காட்சிசாலையும் ஒன்று. அங்கே சிங்கம், புலி, சிறுத்தை போன்ற காட்டு விலங்குகளை எப்போதும் கூட்டில்போட்டு அடைத்து வைக்காமல் திறந்த வெளிகளில் உயர்ந்த வேலிகளுக்கிடையில் இயற்கையான சூழ்நிலையில் வளர்த்து வருகிறார்கள். அம் மிருகங்கள் தப்பிப் போகாதிருப்பதற்காக அங்கு ஆழமான அகழிகள் வெட்டப்பட்டுள்ளன. அங்கு உலகத்தில் பல தேசங்களில் உள்ள அபூர்வமான பறவைகளும், மிருகங்களும் காணப்படுகின்றன. தண்ணீரில்வசிக்கும்மீன் வகைகளும், முதலை, நண்டுபோன்ற உயிரினங்களும் செயற்கை நீர்நிலைகளில் வளர்க்கப்படுகின்றன. அம் மிருகக் காட்சிசாலை பார்க்க வருவோரின் கண்ணையும்,

கருத்தையும் ஒருங்கே கவர்கிறது. அங்குப் பறவைகள் பாடும் பண்ணில் மயங்குவார் சிலர்; குரங்குகளுக்குக் கொட்டைகளும், பழங்களும் கொடுத்துக் குதூகலிப்பர் சிலர்; யானைகளுக்குத் தீனியளித்து இன்புறுவார் சிலர். சிங்கத்தின் வீரநடையையும் புலியின் பாய்வையும் கண்டு தாமும் வீரரே என அளந்த நடையோடு நடந்து செல்வார் சிலர். மைசூரின் மிருகக் காட்சிசாலை இயற்கை எழில் விளங்கும் சோலையாகவே விளங்குகிறது.

நாங்கள் மைசூருக்குச் சென்ற அன்று அரசர் பவனி வரும் நன்னாளாகும். அன்று மாலை நான்கு மணிக்கெல்லாம் மக்கள் கூட்டம் கடல்போலத் திரண்டது. மன்னரைக் கண்ணாரக் காணவேண்டுமென்னும் ஆசையால் மக்கள் பலர் அரசர் தெருவின் மாடிகளில் இரண்டு மணிக்கே சென்று முன்னிடம் பெற்றனர். நூற்றுக்கணக்கான சாரணரும், போர் வீரர்களும் அணிவகுத்து முன் சென்றனர். பரிகளும் கரிகளும் அலங்கரிக்கப்பட்டுப் பின் சென்றன. அரசாங்க உத்தியோகத்தர்கள் அவரவர்கட்குரிய உடை அணிந்து தத்தம் ஊர்திகளில் வரிசையாகச் சென்றனர். கடைசியில் மன்னர் பொன்னுடை பூண்டு பட்டத்து யானையின்மேல் அமர்ந்து பவனி வந்தார். வழியில் மக்கள் அளித்த ஆயிரக்கணக்கான மலர் மாலைகளை மன்னர் மகிழ்வுடன் ஏற்றார். மைசூர் மக்கள் வழிநெடுக மாவிலைத் தோரணங்கள் கட்டினர். இன்னும் பல அலங்காரங்களும் செய்திருந்தனர். இங்ஙனம் மாலை நான்கு மணிக்குப் புறப்பட்ட மன்னர் பவனி இரவு பத்து மணி வரையில் நடைபெற்றது.

பிருந்தாவனம் என்னும் பூங்கா ஒன்று மைசூருக்குப் பனிரண்டு மைல் தொலைவில் உள்ளது. அது **கிருஷ்ணராஜ சாகரம்** என்னும் அணையை அடுத்து இருக்கிறது. பிருந்தாவனம் மைசூருக்குத் திலகம் போல் விளங்குகிறது. பிருந்தாவனத்தில் நாங்கள் கண்ட காட்சிகளை என்னென்று கூறுவோம்! எங்குப் பார்த்தாலும் பசும்புற்றரைகளே காணப்படுகின்றன! அங்கங்கே பூஞ்செடிகளும், மின்விளக்குகளும், நீர் தெளிக்கும் குழாய்களும் காணப்படுகின்றன. ஆங்கு வீசும் குளிர் காற்று மனத்துக்கு மிகவும் இன்பமாக இருக்கிறது. மைசூரிலிருந்து மாலை நேரங்களில் மக்கள் உல்லாசமாக உலாவுவதற்காகப் பிருந்தாவனத்துக்குச்



செல்கிறார்கள். இரவில் ஆங்குள்ள நீரூற்றுக்களைச் சேய்மையிலிருந்து பார்த்தால் அவை மேகங்கள் சூழப் பெற்ற வெண்மையான கூரைபோன்று காட்சி அளிக்

கும். அவ்வூற்றுநீர் கூடாரம் போன்றும், வில்போன்றும் வளைந்து விழுகின்றது. இவ் வினிய காட்சிகள் ஒவ்வொருவரும் கண்டு களிப்பதற்குரியன.

நாங்கள் மைசூரைப் பார்த்துத் திரும்பும் வழியில் **சீரங்கப்பட்டணம்** என்னும் சரித்திரப்பிரசித்திபெற்ற ஊருக்குச் சென்றோம். சீரங்கப்பட்டணம் மைசூருக்கு இரண்டு மைல் தொலைவில் உள்ளது. அங்குத்தான் மைசூர்ச் சண்டைகளில் போர்செய்து உயிர்நீத்த **திப்பு சுல்தான், ஹைதர் அலி** என்னும் முகமதிய மன்னர்களின் மாளிகைகள் காணப்படுகின்றன. அங்குச் சிவாலயமொன்று சோழமன்னரால் கட்டப்பட்டுள்ளது. திப்பு சுல்தான் மாளிகைச் சுவர்களில் மைசூர்ச் சண்டைகளைப்பற்றிய விவரங்களும், பட விளக்கங்களும் வரையப்பட்டுள்ளன. ஹைதர் அலி, அவர் மனைவி, திப்பு சுல்தான் முதலியவர்களின் கல்லறைகளை உடைய கோரி மிகவும் வனப்புடையதாக விளங்குகின்றது. ஆற்றுக்கு இடையில் உள்ள நிலப்பகுதி **அரங்கம்** எனப்படும். சீ என்னும் சொல் சிறப்பைக் குறிப்பதாகும். காவிரியாற்றுக்கு இடையில் அமைந்திருப்பதால் இவ்வூருக்குச் **சீரங்கம்** எனப் பெயர் வந்தது. நாங்கள் புண்ணிய நதியாகிய காவிரியாற்றில் குளித்து உண்டிகொண்டு வண்டி ஏறினோம். மாலை எங்கள் ஊராகிய இராணிப்பேட்டையை அடைந்தோம். எங்கள் மைசூர்ப் பிரயாணம் முடிந்தது. எனினும் இப் பிரயாணத்தை எங்களால் என்றுமே மறக்க முடியவில்லை.

பயிற்சி

பொருளறிக :

அகழி	குதூகலித்தல்	திட்டம்
அபூர்வமான	சூழ்நிலை	பண்
அலுப்புற்று	செம்மை	பிடர்

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

மாட மாளிகை, வரிசை வரிசையாக, கண்ணுற, வழி நெடுக.

பதம் பிரித்து எழுதுக :

நீரூற்று, பசும்புல், பொன்னுடை, நன்னாள்.

எதிர்பதம் கூறுக :

இயற்கை, தாழ்ந்து, அபூர்வமான.

விடை தருக :

1. பங்களூரின் இயற்கை யழகைப்பற்றிக் குறிப்பு எழுதுக.
2. மைசூர் அரண்மனை எவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருந்தது?
3. மைசூர் உயிர்க் காட்சி சாலையில் காணும் சிறந்த காட்சிகள் யாவை?
4. பிருந்தாவனம் எவ்வாறு பெருமை வாய்ந்தது?
5. மைசூர் மன்னரின் பவனி எவ்வாறு இருந்தது?
6. ஸ்ரீரங்கப் பட்டணத்திற்கு அப் பெயர் வரக் காரணம் என்ன?
7. ஸ்ரீரங்கப் பட்டணத்தின் சிறப்புகளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

இலக்கணப் பயிற்சி

1. பிருந்தாவனம் மைசூ ருக்குப்பனிரண்டு மைல் தூரத்திலுள்ளது.

2. நாங் கள் கண் ட காட் சிகளை என்னென்று கூறு வோம்!

மேலே கண்ட வாக்கியங்களை எளிதில் படிக்க முடியாது.

வாக்கியங்களை எளிதில் படிக்கவேண்டுமாயின் சொற்களுக்கு இடையிடையே இடம் விட்டு எழுத வேண்டும்.

(உ-ம்.) 1. பிருந்தாவனம் மைசூருக்குப் பனிரண்டு மைல் தூரத்திலுள்ளது.

2. நாங்கள் கண்ட காட்சிகளை என்னென்று கூறுவோம்!

கீழ்வரும் சொற்களை இடம் விட்டுச் சரியாக எழுதுக:

1. எங்களில்ப லர்நின் றுகொண்டே இருந்தார்கள்.
2. யானைகளு க்குத்தீனியளித் துஇன்புறுவா ர்சிலர்.
3. நாங்கள்புண் ணியநதியா கியகாவிரி யாற்றில் குளி த்தோம்.
4. ஆற் றிடைப்பூ மிக்குஅரங் கம்என் றுபெயர்.
5. புலிப சித்தா லும்புல் லைத்தின் னாது.

3. பர்மியரைப் பார்

நாம் நம் நாட்டினரின் நடையுடை பாவனைகளை அறிந்து கொள்வது போலவே பிறநாட்டு மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசிய மாகும். ஒவ்வொரு நாட்டின் நீர்வளம், நிலவளம், தட்ப வெட்ப நிலைமைக்குத் தக்கபடி அந்நாட்டு மக்க ளின் வாழ்க்கை நிலையும் மாறுபடுவதுண்டு. அதனால் நாம் அவர்களுடைய நடை யுடை பாவனைகளை அறிந்து கொள்வதுடன் ஒருவருக் கொருவர் உற்ற சமயத்தில் உதவி புரிந்து கொள்ளவும் கூடும். பிற நாட்டு மக்களை நம் சகோதரர்களாகவே பாவித்து அவர்களுடன் பழகு வது நல்லது.

நம் நாட்டுக்குக் கிழக்கே இருப்பது பர்மா தேசம். அந் நாட்டில் வாழும் மக்களுக்குப் **பர்மியர்** என்று பெயர். முற்காலத்தில் பர்மாவும் நம் நாட்டுடன் சேர்ந்த நிலப்பகுதியாகவே இருந்தது. பர்மா சில ஆண்டு களுக்கு முன்னர்தான் இந்தியாவிலிருந்து ஆங்கிலேய ரால் பிரிக்கப்பட்டது. கீழ்த்திசை நாடுகளில் பர்மா நீர்வளம், நிலவளம், குடிவளம் முதலிய எல்லா வளங் களும் செறிந்து விளங்குகின்றது. இங்கு வானளாவிய மலைகளும், பேராறுகளும், அடர்ந்த காடுகளும் இருக் கின்றன. இந்நாட்டு இயற்கைக் காட்சிகள் எல்லோரும் பார்த்து மகிழ்ச்சி அடைதற்குரியவை. பர்மாவுக்கும், நம் நாட்டுக்கும் பழங்காலத்திலிருந்தே வாணிபம், கைத் தொழில் போன்ற துறைகளில் நெருங்கிய தொடர்பு உண்டு. கங்கைக் கரையில் வாழ்ந்த இந்தியர் பலர் அஸ்ஸாம் வழியாகப் பர்மாவுக்குச் சென்று குடியேறி

னர். குடியேறியவர்கள் இந்தியக் கலையையும் நாகரிகத்தையும் அங்குப் பரப்பினர். பர்மியரும் இந்திய நாட்டுக்கு வந்தனர். முற்காலத்தில் பெருமை வாய்ந்த **தட்சசீலம்** என்னும் பல்கலைக் கழகத்தில் பர்மாவிலிருந்து பல மாணவர்கள் வந்து கல்வி பயின்றனர். அவர்கள் நம் நாட்டு நாகரிகம், மொழி, கலை முதலியவற்றில் மிகவும் ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். பர்மிய மாணவர்கள் நம் நாட்டுக்கு வந்துதான் வடமொழி கற்றுக் கொண்டு போனார்கள். இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் சிறந்த போக்கு வரவு மார்க்கங்கள் உண்டு. அவை எவை எனத் தேசப்படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்.

இக் காலத்தில் இந்திய மக்கள் பலர் பர்மாவின் தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலைசெய்து பிழைக்கின்றனர். நம் நாட்டிலிருந்து வாணிபத்தின் பொருட்டும் சிலர் அங்குச் சென்று தங்கலாயினர். அங்கே நிலங்களை நன்ருகப் பயிரிட்டுச் செல்வத்தைத் திரட்டியவர்களும் இந்தியர்களே. நகரங்களில் கடைகளில் உட்கார்ந்துகொண்டு பர்மியர்களுக்கு வேண்டிய பண உதவி செய்து அவர்களை முன்னேற்றத்துக்குக் கொண்டுவந்தவரும் நம்மவர்களே. நமது நாட்டிலிருந்து **நகரத்தார்** என்று கூறப்படும் தனவைசியர் பலர் அங்குக் குடியேறித் தங்கள் செல்வத்தை யெல்லாம் அந் நாட்டு மக்களுக்கு வழங்கினர். இத் தனவைசியர் செய்த தொண்டை அளவிட்டுக் கூற இயலாது. பர்மியரே இவர்களால்தான் தாங்கள் முன்னேற்றம் அடைந்தனர் என்று ஒப்புக்கொள்ளுகின்றனர். இங்ஙனம் இந்தியாவின் தொடர்பு பர்மாவுக்குப் பல நன்மைகளைத் தந்துள்ளது.

பர்மா வாணிபத்தில் இந்தியாவுடன் இணைந்து நிற்பதைப் போலவே சீனா, சையாம், மலேயா போன்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. பர்மா, பற்பல ஆண்டுகளாக ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டு அடிமைத் தளையினால் பிணைக்கப்பட்டிருந்தது. பர்மியர் சுதந்திரத்தினைப் பெறப் பல கிளர்ச்சிகள் செய்தனர். இறுதியாக இன்று அவர்களும் நம்மைப்போலவே உரிமை வாழ்வு பெற்று மகிழ்கின்றனர்.

பர்மியர் சீனருக்கும் மலேயருக்கும் நடுத்தரமான ஒரு கலப்புச் சாதியார் ஆவர். அவர்கள் வெண்மையும் மஞ்சளும் கலந்த நிறத்தினர்; குள்ளமான உருவம் உடையவர்கள். மலைகளிலும் கிராமங்களிலும் வசிக்கும் பர்மிய மக்களில் சிலர் இன்னும் அநாகரிகமுள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள். நகரத்தில் வசிப்போர் நாகரிகமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

பர்மியரில் ஆடவரும் பெண்டிரும் கூந்தலைப் வளர்ப்பதில் மிகவும் விருப்பமுடையவர்கள். அவர்கள் கூந்தல் மிகவும் கறுத்திருக்கும். பர்மிய ஆடவன் தன் தலைமயிரைச் சேர்த்து உச்சந்தலையில் முடித்துக்கொள்வான். பெண்கள் தங்கள் நீண்ட கூந்தலைப் பலவகையான பின்னல்கள் இட்டுத் தொங்கவிட்டுக் கொள்வர். விலை

யுயர்ந்த பட்டாடைகளையும் ஆபரணங்களையும் அணிவதில் பர்மியருக்குப் பிரியம் அதிகம். ஆடவர்கள் தலையில் பாகை அணிவதும் உண்டு. பெண்கள் தங்கள் கூந்தலில் ஜப்பானியரைப் போலச் சீப்பைச் செருகிக் கொள்வதுண்டு.

பர்மியப் பெண்கள்தாம் குடும்பத்தை நடத்தும் பொறுப்பு மிக்கவர்கள். அவர்கள் வியாபாரமும் செய்கிறார்கள். பர்மியர் சிறிய தொழில்களைச் செய்வதை இழிவாகக் கருதுகிறார்கள். எனினும் தலைவனுக்கு அடங்கி நடத்தல், தான தருமங்கள் செய்தல், திருவிழாக்கள் கொண்டாடுதல் போன்ற நற்பழக்கங்கள் அவர்களிடம் காணப்படுகின்றன. தமக்குக் கிடைத்த செல்வத்தை அவர்கள் தாராளமாகச் செலவு செய்வார்கள். 'நாளைக்கு என்ன செய்வது' என்னும் எண்ணமே அவர்களுக்குக் கிடையாது. விடுதியில் அவர்களுக்கு மிக்க நம்பிக்கை உண்டு. இன்பம் வந்தால் மகிழ்வதும், துன்பம் வந்தால் வருந்துவதும் அவர்களிடம் இல்லை. இரண்டையும் அவர்கள் ஒரே தன்மையினை உடையதாகக் கருதுவர். இந் நற்குணம் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கவேண்டிய அரிய குணமாகும். பர்மியர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர். ஆயினும், அவர்கள் ஜாதிமத வேறுபாடின்றி எல்லோரிடமும் அன்பாகவே பழகிவருகிறார்கள். அவர்கள் பேசும் மொழிக்குப் **பர்மிய மொழி** என்றே பெயர்.

பர்மியர் ஆட்டுச் சண்டை, சேவற்போர், குதிரைப் பந்தயம், மல்யுத்தம் போன்ற துறைகளில் தம் செல்வத்தைச் செலவழிப்பர். தமக்கு எப்படிப்பட்ட நெருக்கடியான வேலைகள் இருப்பினும் அவர்கள் திருவிழா,

வேடிக்கைகள் இவற்றைக் காணத் தவறமாட்டார்கள். தம் மதத்தின் உயர்ந்த எண்ணங்களைப் பர்மியர் நாடக



மாக நடித்து விளக்குவர். அந் நாடகத்தின் செலவைச் செல்வர் எவரேனும் ஏற்றுக்கொண்டு நடத்துவது வழக்கம். பர்மியரின் மதகுருக்கள் பௌத்த மடங்களில்

வசிக்கின்றனர். இத் துறவிகள் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் சிறந்த சேவையைப் புரிந்து வருகின்றனர். ஒவ்வொரு பௌத்த மடத்திலும் சிறு பள்ளிக்கூடம் ஒன்று உண்டு.

பர்மியரும் நம் நாட்டினரைப் போலவே நெல்லரிசியைத்தான் உணவாகக் கொள்வார்கள். ஒரு பெரிய தட்டில் உணவைப் படைத்துக் குடும்பத்தினர் எல்லோரும் அதைச் சுற்றிலும் அமர்ந்து உண்பது வழக்கமாகும்.

பர்மியரிடத்தில் சில வேடிக்கையான பழக்கங்கள் உள்ளன. மழையைப்பற்றி அவர்கள் செய்யும் சடங்குகள் நமக்கு வியப்பினை அளிக்கும். நாட்டில் மழையே இல்லாது வறண்டு போனால் ஊருக்கு வெளியே உள்ள கோயிலுக்கு மேளதாளத்துடன் சென்று 'மழையை அழைத்து வருதல்' என்னும் திருவிழாக் கொண்டாடுவர். மிகுதியாகப் பெய்துவிட்டால் மழையை மீண்டும் இப்படியே கோலத்துடன் அழைத்துச் சென்று விட்டுவிட்டு வருவார்கள். நமது நாட்டிலுங்கூட இதைப் போன்ற பழக்கம் உண்டு. ஆற்றில் பெருவெள்ளம் வந்து கரைபுரண்டு ஊர்களை அடித்துக்கொண்டு போகும்போது நம்மவர்கள் மேளதாளத்துடன் சென்று மலர், பழம், மாங்கல்யம் முதலியனவற்றை வெள்ள நீரிலே வைத்துக், "கங்கா தேவியே! எங்கள் பிழையைப் பொறுத்து எங்களுக்கு இடையூறு ஒன்றும் செய்யாது போய்விடுக," என்று வேண்டுவதுண்டு.

பர்மியரில் பெரும்பான்மையோர் விவசாயத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றனர். அவர்கள் உணவுக்குக் குறைவில்லை. அவர்கள் உழுது பயிரிட்டு மிகுதி

யாகும் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். நமது நாட்டுக்குக்கூட பர்மா அரிசி வருவதுண்டு. இன்னுஞ் சிலர் பெருங்காடுகளில் வேலை செய்வார்கள்; அடர்ந்த காடுகளில் தேக்கு முதலிய மரங்களை வெட்டி வீழ்த்தி வெளிநாடுகளுக் கனுப்புவார்கள். பர்மா தேயத்துத் தேக்கு உலகில் சிறந்த மரமாகும். சிலர் பொன், வெள்ளி, ஈயம், வைரம், கெம்பு முதலியன எடுத்து வெளி நாடுகளுக்கு அனுப்புவதைத் தங்கள் வேலையாக வைத்துக்கொண்டிருக்கின்றனர். இரங்கூன் வைரம் சிறந்ததென்று நமக்கு நன்குகத் தெரியும். பர்மா மண்ணெண்ணெயை நாமறிவோம். பர்மாவில் மண்ணெண்ணெய்க் கிணறுகள் அதிகம். மண்ணெண்ணெயை எடுத்துச் சுத்தம் செய்து அனுப்புவதில் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். இங்ஙனம் அந்நாட்டு மக்கள் பலவகைப்பட்ட தொழில்களில் அமர்ந்து தங்கள் நாட்டை முன்னணிக்குக் கொண்டுவர முயற்சி செய்கின்றனர். அதுபோலவே நாமும் நம் நாட்டின் முன்னேற்றத்துக்கான தொழில்களை மேற்கொண்டு நலம் பெறவேண்டும்.

பயிற்சி

பொருளறிக:

இணைந்து	சேவை	படைத்து
கிளர்ச்சி	துறை	பேராறு
செறிந்து	தொண்டு	வாணிபம்

விடை தருக:

1. பர்மாவின் இயற்கை அமைப்பு எப்படிப்பட்டது?
2. பழங் காலத்திலிருந்தே இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் தொடர்பு உண்டு என்பது எவ்வாறு தெரிகிறது?

3. இந்தியரின் தொடர்பால் பர்மியர் அடைந்த நன்மைகள் யாவை?

4. பர்மியரிடம் காணப்படும் சில நற்பழக்கங்கள் யாவை?

5. பர்மியர் நாடகம் நடத்துவது எப்படி?

6. பர்மியர் குடும்பத்தில் அநுசரிக்கும் முறைகள் யாவை?

7. மழையை அழைத்தல் என்றால் என்ன?

8. பர்மியரின் தொழில்கள் யாவை?

9. பர்மாவின் ஏற்றுமதிப் பொருள்கள் யாவை?

இலக்கணப் பயிற்சி

1. குழந்தை பால் குடித்தது.

2. பர்மியர் பட்டாடை உடுப்பர்.

இங்குப் 'பால், குடித்தது' என்பதும் 'பட்டாடை, உடுப்பர்' என்பதும் ஒன்றுக்கொன்று பொருத்தமான சொற்கள்.

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்து எழுது :

1. பர்மியப் பெண்கள் கூந்தலைப் பல வகையாகப் (பின்னிக் கொள்வர், கட்டிக் கொள்வர்.)

2. என் தங்கை ஒரு பாட்டு......(பாடினாள், சொன்னாள், பேசினாள்.)

3. இராமன் ஓர் இட்டலி......(பருகினான், தின்றான், கடித்தான்.)

4. கொற்றன் வீட்டை.......(செய்தான், நட்டான், கட்டினான்.)

5. கோழி காலையில்......(கத்திற்று, கூவிற்று, கரைந்தது.)

4. அஜந்தா மலைக்குகைகள்

நமது நாட்டில் பல சமயங்கள் தோன்றி மக்களுக்கு அறிவைப் புகட்டி வந்தன. சமயங்கள் பல தோன்று வதும் அழிவதுமாகவே இருந்து வந்தன. இந்தியாவில் இந்துமதம் மறுமலர்ச்சி யடைந்து எங்கும் பரவ ஆரம் பித்தது. சாளுக்கிய அரசர்களால் இந்துமதம் தென் னிந்தியாவில் எங்கும் பரவலாயிற்று. அவ் வமயத்தில் பௌத்த மதம் சீர்குலையத் தொடங்கியது. அதனல் பௌத்த சந்நியாசிகள் மனக்கவலையடைந்து, பௌத்த மதக் கொள்கை, கலை, பண்பாடு அழியாது காப்பாற்ற வழிதேடித் தென்னிந்தியாவில் பல இடங்களில் பல கழகங்களை நிறுவினர்; பல மண்டபங்களை எழுப்பினர். பல குகைகளைக் குடைந்து ஆங்குத் தங்கித் தங்கள் மதத் தைப் போதித்து வந்தனர். இங்ஙனம் பௌத்தத் துறவிகளால் தென்னிந்தியாவில் கழகங்கள் உண்டாக் கப்பட்ட இடங்களுள் ஒன்றுதான் **அஜந்தா** என்பது.

அஜந்தா மலைக்குகைகளில் சிற்பக் கலையும், சித்திரக் கலையும் ஒருங்கு,கூடிக் காண்போரை மகிழ்விக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த அஜந்தாச் சிற்பங்களைத் தமிழர்கள் நெடுநாட்களாக அறியாமல் இருந்தனர்.ஏறக் குறைய 150 ஆண்டுகளுக்கு முன்னரே இவற்றைப் பற்றிய விவரம் தெரியவந்தது. அக்காலம் வரையிலும் இவற்றைப் பற்றிப் பேசுவோர் இல்லை; கேட்போர் இல்லை ; கண்டு மகிழ்வோரும் இல்லை. இவை மலைக ளுக்கு நடுவில், மரஞ்செடி கொடிகள் வானளாவி நெருங்கி வளர்ந்த புதர்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு தம்பெருமையை மறைத்துக்கொண்டிருந்தன.

இவற்றின் அழகிய தோற்றம் அழிந்து போவதற்கு முன்னரே நாம் நம்முடைய நல்வினைப்பயனால் இவற்றைக் கண்டோம். இவை இன்று நம் நாட்டின் சிற்பக் கலைக்கும் சித்திரக் கலைக்கும் சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்தன என்று எண்ணி எண்ணிப் பெருமிதம் கொள்ளுகிறோம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சிற்பங்களைக் காணும் விருப்பமுடையவர்கள் பம்பாயினின்றும் டில்லிக்குப் போகும் புகைவண்டிப் பாதையில் **பச்சோரா** என்னும் ஊரில் இறங்க வேண்டும். அங்கிருந்து கிளை இருப்புப்பாதை வழியாகப் **பாஹுரை** யடையலாம். பாஹுரிலிருந்து மீண்டும் பதின்மூன்று மைல் சென்றால் **பரத்பூர்** என்ற பெயருடைய கிராமத்தை யடையலாம். இவ்வூருக்கு நான்கு மைல்களுக்காப்பால்தான் அஜந்தாக் குன்றுகள் இருக்கின்றன. இக் குன்றுகளில் குகைகள் பல அமைந்துள்ளன. இவற்றைத்தான் அஜந்தா மலைக்குகைகள் என்று சொல்லுகிறோம்.

அஜந்தா துர்க்கம் நைஜாம் இராச்சியத்தின் வட கோடியில் உள்ளது. இதனருகில் ஒரு சிற்றாறும் ஓடுகிறது. இங்குள்ள குன்றுகளில்தான் இருபத்தொன்பது குகைகள் குடையப்பட்டுள்ளன. இவை மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடு அமைந்து விளங்குகின்றன. ஆற்றின் பக்கத்தில் அமைந்திருக்கும் இக் குகைச்சுவரில் உள்ள பொன்னிறச் சித்திரங்கள் ஆற்றில் பிரதிபலித்து அழகுக்கு அழகு ஊட்டி விளங்குகின்றன. இவற்றின் முழு அழகையும் கண்டு மகிழவேண்டுமானால், பாறைகளுக்குப் பாறை தாவ வேண்டும்; காட்டு வழியாகச்

செல்ல வேண்டும்; உடலை யொடுக்கிக்கொண்டு செடி புதர்களிடையே ஊர்ந்து செல்லவும் வேண்டும்.

இவ்வாறு காட்டு வழிகளைக் கடந்ததும் நாம் இருபத்தொன்பது குகைகளைக் காணலாம். இக் குகைகள் அனைத்திலும் பௌத்தத் துறவிகள் தங்களுக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் தங்களது கைத்திறனைக் காட்டியுள்ளனர். இக் குகைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்; ஒன்று **சைத்தியம்**: மற்றொன்று **விஹாரம்**. சைத்தியம் என்று சொல்லப்படுபவை

முன்னே உயர்ந்த வில்வளைவான மண்டபமும், முட்டை வடிவமான சன்னலையும் கொண்ட கோயில்களாக விளங்குகின்றன. இவற்றின் உள்ளே புத்த பகவான் உருவச் சிலைகள் இருக்கின்றன. இங்கே நான்கு சைத்

தியங்கள் இருக்கின்றன. மற்றைய இருபத்தைந்து குகைகளும் விஹாரங்களாம். பௌத்த விடுதிகளுக்குத் தான் விஹாரங்கள் என்று பெயர். இந்த விஹாரங்கள் ஒவ்வொன்றின் நடுவிலும் ஒரு பெரிய மண்டபம் இருக்கின்றது. மண்டபத்தின் பக்கங்களிலே பல சிறு

வாயில்கள் இருக்கின்றன. இவையே பக்கத்திலிருக்கும் அறைகளுக்குச் செல்லும் வாயில்கள் ஆகும். ஒவ்வொரு மண்டபத்திலும் தலைவாயிலுக்கு எதிராக ஒரு மூலத்தானம் இருக்கின்றது. இந்த மூலத்தானத்தில் புத்தப் பெருமானது உருவச்சிலைகள் இருக்கின்றன.

பிறைவடிவமான பள்ளத்தாக்கிலேயே இக் குகைகள் அமைந்துள்ளன; குன்றுகளின் கீழே சில குகைகள் உள்ளன; நடுவில் சில இருக்கின்றன; உச்சியிலும் வேறு சில இருக்கின்றன. இக் குகைகளின்மேல் எப்போதும் சூரிய ஒளி படுவதில்லை. கீழ்த்திசையிலிருக்கும் குகைகள் மாலை நேரம் வரையிலும் இருண்டே கிடக்கும். இவை மாலைநேர வெயிலில் கண்ணைக் கவ

ரும் ஒளியுடையனவாக மாறுகின்றனவாம். மத்தியில் இருப்பன பகலில் எப்போதும் ஒலியுடன் விளங்கு கின்றன. பள்ளத்தாக்கின் மேற்குக் கோடியிலுள்ள



குகைகள் காலையில் மட்டுமே வெயில் பட்டு வெளிச்ச மாக இருக்கின்றன.

இக் குகைகள் எல்லாம் கி. பி. இரண்டாம் நூற் ருண்டிலிருந்து ஏழாம் நூற்ருண்டுக்குள் குடையப் பட்டன வென்று சொல்லுவார்கள். இவற்றின் தோற் றத்தைக் காண்போர் அனைத்தும் ஒரே காலத்தில் உண் டாக்கப்படவில்லை என்றும் இவை மிகக் குறுகிய காலத் தில் அவசரமாகச் செய்யப்பட்டவையல்ல என்றும் உணர்த்துகிருர்கள். பல ஆண்டுகள் உழைத்த உழைப் பின் பயனுகவே இவை தோன்றின. முன்னர்க் கூறிய படி இவற்றின் தோற்றம் பௌத்தமதச் சார்புடையதே யாகும். குகைகளில் வெட்டப்பட்டுள்ள படிமங்கள் புத்தமதக் கொள்கைகளை எடுத்துக் காட்டுகின்றனவாய் அமைகின்றன. பௌத்த சமயத் துறவிகள் புத்தரை வணங்கும் காட்சி, புத்தர் திருமணக் காட்சி முதலியன

செதுக்கப்பட்டுள்ளன. சாளுக்கிய அரச பரம்பரையைச் சேர்ந்த இரண்டாவது புலிகேசன் பாரசீகத் தளபதிகளை வரவேற்பதாக இரண்டாவது குகையில் சிற்பமொன்று செதுக்கப்பட்டுள்ளது. புத்தர் வாழ்க்கை வரலாற்றைக் காட்டும் படங்கள் வரிசையாகச் சுவரில் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன. மதச் சார்புடைய



இப்படங்களே யல்லாமல் மிருகங்களின் உருவங்களும் தனி மனிதர்களின் உருவங்களும் அழகாகத் தீட்டப் பட்டுள்ளன.

"அஜந்தாக் குகைகளில் காணப்படும் சித்திரச் சிற்ப வேலைப்பாட்டின் அழகை யாரால் கூறமுடியும்? இவற்றை நேரில் கண்டவரால்தான் உணரமுடியும். இவற்றின் எளிமையும், மத ஊக்கமும் எவ்வளவு அற்புதமாக எழுந்தோங்கி நிற்கின்றன!" என்று டே என்பவர் இவற்றைப் பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார்.

இந்த அஜந்தாக் குகைச் சிற்பங்களில்தான் நம் நாட்டின் பெருமை பொதிந்து கிடக்கின்றது: நம் முன்னோரின் ஓவியத் திறமை உருப்பெற்று விளங்குகின்றது.

இவற்றைப் பொன்னேபோல் போற்றிக் காப்பது நம் நாட்டவரின் கடமையாகும்.

பயிற்சி

பொருளறிக :

எடுத்துக்காட்டு	சமயங்கள்	மறுமலர்ச்சி
கலை	பண்பாடு	துர்க்கம்
கழகங்கள்	புகட்டுதல்	தளபதி

விடை கூறுக :

1. அஜந்தா மலைக்குகைகளின் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

2. இக் குகைகள் யாரால் உண்டாக்கப்பட்டன ?

3. அஜந்தாக் குகைகள் எங்கே இருக்கின்றன ?

4. 'சைத்தியம்' என்றால் என்ன ? 'விஹாரம்' என்றால் என்ன ?

5. இக் குகைகளைப் பற்றி டே என்பவர் என்ன கூறுகின்றார் ?

6. அஜந்தாக் குகைகளால் நாம் அறியும் உண்மைகள் யாவை ?

தெரிந்து கொள் :

அஜந்தாக் குகைகளின் சிற்பங்களில் சில சென்னைப் பொருட்காட்சி சாலையிலும் வைக்கப்பட்டுள்ளன.

உங்கள் ஊரில் ஏதேனும் பழைய சின்னங்கள் இருப்பின் அவற்றைப்பற்றி அறிந்து ஒரு குறிப்பு எழுது.

இலக்கணப் பயிற்சி

இது முற்றுப்புள்ளி
இது காற்புள்ளி
இது அரைப்புள்ளி
இது முக்காற் புள்ளி
இது உணர்ச்சிக் குறி
"இவை மேற்கோள் குறிகள்

உங்கள் பாடங்களில் இவ்வகையான குறிகள் எவ்வெவ் விடங்களில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன என்பதை நன்கு கவனிக்கவேண்டும்.

கீழ்வரும் வாக்கியங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடுக:

1. அஜந்தாவில் சிற்பக் கலையும் சித்திரக் கலையும் ஒருங்குகூடிக் காண்போரை மகிழ்விக்கின்றன.
2. சிறந்த பொருள்களை எளிதில் காண முடியுமா
3. தம்பி இங்கே வா என்று பாட்டி அழைத்தாள்
4. அந்தோ காந்தி அண்ணல் மறைந்தனரே
5. அண்ணு இங்கே வாருங்கள் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுங்கள்
6. என்ன ஆச்சரியம் இச் சிறுவன் சிங்கத்துடன் நின்று போராடுகிருனே
7. கந்தனும் கோபாலனும் இராமனும் நேற்று என் வீட்டுக்கு வந்தார்கள்
8. தமிழ் மன்னர் மூவர் அவர்கள் சேரர் சோழர் பாண்டியர்
9. உன் புத்தகம் இதுதானு
10. ஏது இந்தக் கனி இதுபோல் மற்றுமொருகனி கொண்டுவா என்ருன் பரமதத்தன்.

5. கிரேக்கப் படையெழுச்சி

நம் இந்திய நாட்டுக்கு வடமேற்கில் ஐரோப்பாக் கண்டத்தில் கிரீஸ் என்னும் ஒரு நாடு உண்டு. அந்நாடு பழங்காலத்திலிருந்தே நாகரிகத்திற் சிறந்த நாடாகும். அந்த நாட்டில் வாழும் மக்கள் **கிரேக்கர்கள்** என்று வழங்கப்படுகின்றனர். நம் நாடு பண்டைக் காலத்தில் செல்வமும் சிறப்பும் உடையதாக இருந்தது. 'பொன் விளையும் பூமி' என்று உலகத்தார் யாவரும் இந்தியாவைப் போற்றிப் புகழ்ந்தனர். இதன் வளப்பத்தைக் கேட்டு அந்நிய நாட்டினர் பலர் அடிக்கடி படையெடுத்து வந்தனர். இங்ஙனம் படையெடுத்தவர்களில் **அலெக்ஸாந்தர்** என்னும் யவன மன்னரும் ஒருவராவர்.

அலெக்ஸாந்தர் ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முன் கிரீஸ் தேசத்தில் உள்ள **மாஸிடோனியா** என்னும் நாட்டைத் திறமையுடன் ஆண்டு வந்தார். அவர் மிகவும் சிறந்த வீரர்; உலகம் முழுவதும் உள்ள நாடுகளை வென்று, தாமே மன்னாதி மன்னராக விளங்க வேண்டுமென்னும் பேரவா உடையவர். அவர் வலிமை நிறைந்த வீரர்களைக் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டினார் முதலில் கிரீஸ் தேசம் முழுமையும் வென்றார். அதன் பின்னர் எகிப்து, பாரசீகம், ஆப்கனிஸ்தானம் முதலிய நாடுகளை வென்றார். பாரசீகத்தில் இருக்கும்போது இந்தியாவின் சீரும், சிறப்பும் கேள்விப்பட்டு அதன்மீது படையெடுக்க உறுதிகொண்டார். வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவிற்குள் புகுந்து ஜீலம் நதிக்கரையில் தங்கினார்.



அக் காலத்தில் சிந்து சமவெளியை ஆண்ட இந்து அரசர்கள் தமக்குள் ஒற்றுமையின்றி ஒருவரோ டொருவர் அடிக்கடிப் பகைமை கொண்டனர். அங்கு ஜீலம் நதி

யின் மேற்கில் அம்பி என்னும் மன்னனும், கிழக்கில் புருஷோத்தமன் என்னும் அரசரும் ஆண்டு வந்தனர். இருவருக்கும் இயல்பாகவே உட்பகை உண்டு. அலெக்ஸாந்தரின் படையெடுப்பைக் கண்டு அம்பி கலங்கிவிட்டான். அவன் தக்ஷசீலம் என்னும் நகரத்தை ஆண்டு வந்தான். அம்பி, புருஷோத்தமனைக் காட்டிக்கொடுத்து அலெக்ஸாந்தரிடம் தோல்வியுறச் செய்யவேண்டும். என்று உளம்கொண்டான். அதனால் அலெக்ஸாந்தருக்கு அடிபணிந்து மற்ற நகரங்களையும் வெல்வதற்கு வேண்டிய பணமும் படையும் கொடுத்து உதவினான்.

புருஷோத்தமன் அம்பியைப்போல் தம் அருமை நாட்டை அந்நிய மன்னரிடம் ஒப்படைக்க விரும்பவில்லை. அடிமை வாழ்வில் தம் நாட்டு மக்களைச் சிக்க வைக்க அவர் மனம் துணியவில்லை. அவர் மானம் பெரிது என்று வாழும் மறக்குடி மன்னர்; புறமுதுகிட்டோடும் புல்லர் அல்லர்.

அலெக்ஸாந்தரின் படையெடுப்பைக் கண்டு புருஷோத்தமன் தினைத்துணையும் அஞ்சவில்லை. ஒருபெரிய சேனையைத் திரட்டி ஜீலம் நதிக்கரையில் அலெக்ஸாந்தருடன் பெரும்போர் செய்தார். புருஷோத்தமனின் படை வீரர்கள் கருநாகம்போல் சீறிக் கிரேக்க வீரர் பலரை வீழ்த்தினர். போர் மிகவும் கடுமையாக நடந்தது. யார் தோற்பர்: யார் வெற்றியுறுவர் என்று கூறமுடியாத படி நெடுநேரம் நடந்தது. எனினும் அம்பியின் சூழ்ச்சியினால் புருஷோத்தமன் ஏறியிருந்த பட்டத்து யானையின் துதிக்கை வெட்டப்பட்டது. துதிக்கை வெட்டுண்ட யானை வெறிகொண்டது. அது மற்ற யானைகளுடன் சேர்ந்து போரில் குழப்பம் உண்டாக்கிற்று. இறுதி

யாகப் புருஷோத்தமன் தோல்வியடைந்தார் எனினும் அவர்தம் வீரத்தைக் கண்டு அலெக்ஸாந்தர் மிகவும் வியப்புக்கொண்டார். தோல்வியுற்ற புருஷோத்தமன் அலெக்ஸாந்தர் முன் அழைத்துச் செல்லப்பட்டார். புருஷோத்தமனைக் கண்ட அலெக்ஸாந்தர், "புருஷோத்தமரே, உங்கள் வீரத்தைக் கண்டு நான் பாராட்டுகின்றேன். நான் தங்களை எவ்விதம் நடத்தவேண்டுமென்று விரும்புகிறீர்கள் ?" என்று கேட்டார். அது கேட்ட

புருஷோத்தமன், "நீரும் மன்னன், நானும் மன்னன் என்னையும் ஒரு மன்னனாகவே மதித்து நடத்த வேண்டும்," என்றார். தாய்நாட்டுக்காக உயிரையும் கொடுக்கச் சித்தமாய் இருந்து போராடிய புருஷோத்தமனின் வீர உரையைக் கேட்டயவன மன்னர் மகிழ்ச்சியடைந்து, அவருடைய நாட்டை அவருக்கே திருப்பிக்

கொடுத்துவிட்டார். அவர் வீரவுரைகளைப் பொன் ஏட்டிலே எழுதச் செய்து தம் நிதி நிலையத்தில் வைத்துப் போற்றுமாறு அமைச்சருக்குக் கட்டளையிட்டார். புருஷோத்தமன் மீண்டும் தம் நாட்டுக்கு மன்னனாகி இனிது ஆட்சி புரிந்து வந்தார்.

அலெக்ஸாந்தர் மேலும் கிழக்கே சென்று இந்திய நாடுகளைக் கைப்பற்ற விரும்பினார். ஆனால் அவருடைய படைவீரர்கள் அதற்கு உடன்படவில்லை. அவர்கள் தங்கள் தாய்நாட்டுக்குச் சென்று தன் மனைவி மக்களையும், சுற்றத்தாரையும் காண விழைந்தார்கள். எனவே அலெக்ஸாநதர் தம் தாய்நாட்டுக்குத் திரும்பவேண்டியதாயிற்று. வழியில் **பாபிலோன்** என்னும் நகரத்தில் சுரநோயால் அவர் மரணம் அடைந்தார். கிரீஸ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உள்ள தூரம் ஆயிரக்கணக்கான மைல்கள் இருப்பினும், போக்குவரவுச் சாதனங்கள் மிகக் குறைந்த பண்டைக் காலத்திலேயே அலெக்ஸாந்தர் பெரும்படை திரட்டிப் பல நாடுகளை வென்றது வியப்புக்குரிய செயலல்லவா? அதனாலன்றோ அவருக்கு '**மகா அலெக்ஸாந்தர்**' என்னும் சிறப்புப் பெயரும் வழங்கலாயிற்று.

கிரேக்கப் படையெழுச்சிக்கு முன்னரே இந்தியர் கிரேக்கருடன் வாணிபம் நடத்தி வந்தனர். எனினும் கிரேக்கப் படையெழுச்சியின் பின்னரே கிரேக்கச் சிற்பக் கலையும், ஓவியக் கலையும், மருத்துவக் கலையும், வானநூற் கலையும் நம் நாட்டில் பரவலாயின. நம் நாட்டுக்கும், ஐரோப்பாவுக்கும் அலெக்ஸாந்தர் நான்கு போக்குவரவு மார்க்கங்களை ஏற்படுத்தினார். இந்தியருக்கும் கிரேக்கருக்கும் இடையே வாணிபம் வளர்ச்சி

யடைந்தது. கிரேக்கர்களின் நல்ல பழக்க வழக்கங்களும் கைத்தொழில் முறைகளும் நம்மவரிடையே பரவின. கிரேக்க சமயக் கொள்கைகள் நம் நாட்டுச் சமயக் கருத்துக்களுடன் கலந்தன.

அலெக்ஸாந்தருக்குப்பின் அவர் வென்ற இந்திய நாடுகளை அவர்தம் சேனைத் தலைவர்களுள் ஒருவராகிய **செல்யூகஸ் நிகேடர்** என்பவர் ஆண்டுவந்தார். அவர் அலெக்ஸாந்தரைப்போல வன்மை யற்றவராகையால் மகதநாட்டை ஆண்ட சந்திரகுப்தர் என்னும் மௌரிய மன்னர் அவருடன் போர் செய்து காபூல் பள்ளத்தாக்கையும், பஞ்சாபையும் தம்முடைய ஆட்சியில் சேர்த்துக் கொண்டார். செல்யூகஸ் தன் மகளைச் சந்திரகுப்தருக்கு மணம் செய்து கொடுத்தார். தம் அரண்மனைப் புலவரான **மெகஸ்தனிஸ்** என்னும் அறிஞரைச் சந்திரகுப்தரின் அவையில் இருக்கச் செய்தார். மெகஸ்தனிஸ் எட்டு ஆண்டுகள் இந்தியாவில் தங்கி யிருந்து சந்திரகுப்தரின் ஆட்சியைப் பற்றியும் மகதநாட்டு மக்களின் நடையுடை பாவனைகளைப் பற்றியும் ஒரு நூல் இயற்றினர். இந்நூலுக்கு **இண்டிகா** என்று பெயர். செல்யூகஸுக்குப் பிறகு பாக்டீரியாவை யாண்ட கிரேக்க மன்னர்கள் பன்முறை பஞ்சாபின்மீது படையெடுத்தனராயினும் அவர்களால் ஓர் ஊரையும் கைப்பற்றி ஆளமுடியவில்லை.

பயிற்சி

பொருளறிக:

உட்பகை	புல்லர்	வானநூற் கலை
ஓவியக்கலை	மறக்குடி	
சிற்பக் கலை	யவனர்கள்	

விடை கூறுக:

1. இந்தியா ஏன் "பொன் விளையும் பூமி" என்று புகழப்படுகிறது?

2. அலெக்ஸாந்தரின் இளமையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. அவர் இந்தியாவை எப்படி அடைந்தார்? எங்கே தங்கினார்?

4. புருஷோத்தமனின் பெருந்தன்மையை அலெக்ஸாந்தர் எவ்வாறு அறிந்தார்?

5. 'செல்யூகஸ் நிகேடர்' என்பவர் யார்? அவரைப் பற்றிக் குறிப்பு வரைக.

6. கிரேக்கப் படையெழுச்சியின் பயன்கள் யாவை?

7. மெகஸ்தனிஸ் எழுதிய நூலின் பெயர் யாது? அதிற் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை?

இலக்கணப் பயிற்சி

அலெக்ஸாந்தர் அம்பியை வென்றார்.

அம்பி அலெக்ஸாந்தரால் வெல்லப்பட்டார்.

செயப்படுபொருள் எழுவாயாக வரும்போது எழுவாய் மூன்றும் வேற்றுமையாக வரும்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள செயப்படுபொருளை எழுவாயாக மாற்றி எழுதுக:

1. பூனை எலியைக் கொன்றது.

2. அவன் பெட்டியைத் திறந்தான்.

3. புருஷோத்தமனின் நாட்டை அலெக்ஸாந்தர் மறுபடியும் அவருக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

4. கோபாலன் மாம்பழம் தின்றான்.

5. நான் கற்பித்த பாடத்தை அவன் மறந்துவிட்டான்.

6. மின்சாரத்தின் அற்புதங்கள்

தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் ஒரு தலை சிறந்த விஞ்ஞானி. விஞ்ஞானத்துறையில் அவர் செய்த ஆராய்ச்சிகள் எண்ணிறந்தவை. கிராமபோனையும், படக் காட்சியையும் கண்ட அறிஞர் எடிசனே அவர்.



ஒரு சமயம் மக்கள் சிலர் அவரைப் பார்த்து, "நீங்கள் செய்த ஆராய்ச்சிகளில் எதனை முதன்மையாகக் கருதுகிறீர்கள்? எது உங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது?" என்று கேட்டார்கள். அதற்கு எடிசன், "அன்பரீர். என் ஆராய்ச்சிகளில் எனக்கு இன்பம் அளித்தது பேச்சு இயந்திரமே. எனினும் மின்சார விளக்கையே நான் முதன்மையாகக் கருதுகிறேன்," என்று கூறினர். நாகரிகம் மிக்க இக்காலத்தில் மின்சாரம் நம் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருக்கின்றது. கண்ணுக்குப் புலப்படாத மின்சாரம் கடவுளைப் போலிருந்து செய்யும் அற்புதங்களைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடையாதார் யார்?

மின்சாரம் ஒரு நல்ல வேலைக்காரனைப்போல் நமக்குப் பல வழிகளிலும் நன்மை புரிகிறது.

முதன் முதலில் மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட செய்திகள் அற்புதமானவை. **தேலீஸ்** என்னும் ஓர் அறிஞர் **ஆம்பர்** என்னும் மணியைத் தேய்த்தால் ஒரு வித சக்தி ஏற்படுகிறதென்றும், அதுவே மின்சாரமென்றும் கண்டார். **கால்வனி** என்னும் விஞ்ஞானி ஒருவர் வெவ்வேறு உலோகக் கம்பிகள் இரண்டைக்கொண்டு ஒரு தவளையின் கால்களைத் தொட்டார். உடனே அத் தவளை தன் கால்களை 'வெடுக்'கென்று உள்ளுக் கிழுத்து உதைத்தது. இதனால் அவர் இரண்டு உலோகங்கள் பிராணியொன்றின் உடலில் படும்போது மின்சார சக்தி ஏற்படுவதாக உணர்ந்தார். அமெரிக்க ஆறுகளில் வசிக்கும் **ஜிம்னோடஸ்** என்னும் விலாங்கு மீன்களாலும், ஆப்பிரிக்காக் கண்டத்தில் நைல் நதியில் உள்ள **பூனைமீன்**களாலும், கடலில் இருக்கும் **திருக்கைமீன்**களாலும் பழங்கால மக்கள் தாக்குண்ட போது அதிர்ச்சி யுற்று மிகவும் வருந்தினர். பின்னர் அவற்றின் வால், உடம்பு, தலை ஆகிய உறுப்புக்களிலிருந்து தோன்றும் மின்சாரத்தினலேயே அவர்களுக்கு அத்தகைய துன்பம் ஏற்பட்டதென அறிந்தார்கள். தற்காலத்தில் மின்சாரமும், மின்னலின் சக்தியும் ஒன்றே என்பதை மக்கள் நன்கு அறிவர்.

விஞ்ஞானிகள் பலர் இடைவிடாது உழைத்த உழைப்பின் பலனால் மின்சாரம் செய்யும் முறைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காந்தக் கட்டைகளில் கம்பிச் சுருளைச் சுற்றுவதனாலும், **ஸெல்கள்** என்னும் மின் கலங்களினாலும் மின்சாரம் எடுக்கிறார்கள்.

மேடான இடங்களிலிருந்து பள்ளமான இடங்களில் விழும் நீர்வீழ்ச்சியில் உள்ள சக்தியைக் கொண்டும் மின்சாரம் உண்டாக்குகிறார்கள். நம் நாட்டில் மேட்டூர், சிவசமுத்திரம், பைகாரா முதலிய இடங்களில் உள்ள நீர்வீழ்ச்சிகளிலிருந்து இத்தகைய மின்சாரம் எடுக்கிறார்கள். மின்சாரத்தைக் கம்பிகளின் வழியாகச் செலுத்தி அவரவர்கட்கு வேண்டும் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நம் வீடுகளில் ஒரு பொத்தானைத் தட்டினால் வீட்டில் உள்ள மின்சாரக் குமிழ்விளக்குகள் 'பளிச்' சென்று நிலா



வெளிச்சம்போல் ஒளி வீசுகின்றன. இவ் விளக்குகள் எரிவதற்கு எண்ணெயும் வேண்டாம்: தீக்குச்சும் வேண்டாம்; காற்று மழை இவற்றால் இவை அணைந்துவிடும் என்ற பயமும் இல்லை. நம் நண்பர், உறவினர் எவரேனும் நாம் வீட்டினுள் ளிருக்கிறோமா என்று அறிய வெளியிலிருந்து ஒரு பொத்தானை அமிழ்த்தினால் போதும். உடனே 'கிணுங் கிணுங்' கென்று மின்சார மணி ஒலிக்கத் தொடங்கி விடும்.

மின்சாரம் எல்லா வகையான இயந்திரங்களையும் இயக்கவல்ல ஆற்றல் படைத்தது. வீடு பெருக்குதல் பால் கறத்தல், சமையல் செய்தல், நெல் குத்துதல், தானியங்களைப் பருப்பாக்குதல், உடை தைத்தல், சலவை செய்தல், காற்று விசிறுதல், மாவரைத்தல் போன்ற எல்லாக் குடும்ப வேலைகளையும் மின்சாரம் ஒழுங்காகச் செய்கின்றது. நாம் எளிதில் செல்ல முடி

யாத மாடிகளில் மின்சாரம் நம்மைக் கண்ணை மூடித் திறப்பதற்குள் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறது.



ஒருவர் ஓரிடத்தில் நின்று பாடுவதையும், பேசுவதையும் அப்படியே வேறு இடங்களில் இருப்பவர்கள் வானொலியின் மூலம் கேட்டு மகிழச்செய்வது மின்சாரமேயன்றோ? அயலூரில் இருக்கும் நம் நண்பர்களும் உறவினர்களும் தமக்குண்டாகும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளை உடனுக்குடன் நமக்குத் தெரிவிக்கும் தந்தியை இயக்குவது எது? மின்சாரமல்லவா?

தாழ்ந்த உலோகங்களால் செய்யப்பட்ட பாத்திரங்களுக்கும், நகைகளுக்கும் வெள்ளி அல்லது தங்க முலாம் பூசுவதற்கு மின்சாரம் பயன்படுகிறது. முலாம் பூசுவதற்கு வேண்டிய உலோகப் பொருளை நன்றாகத் துலக்கித் தங்கம் அல்லது வெள்ளிக்கரைசலில் அமிழும்படி தொங்கவிட வேண்டும். பின்னர் அக்கரைசலில் மின்சாரத்தைச் செலுத்தினால் வேண்டிய பொருளின்மேல் வெள்ளி அல்லது தங்க முலாம் படியும். மின்சாரத்தின் உதவியால் நாம் டிராம், இரெயில் முதலிய ஊர்திகளில் ஏறி எண்ணியவிடங்கட்குத் துண்ணெனச் செல்கின்றோம். இவ்வண்டிகள் தரையில் பதிக்கப்பட்டிருக்கும் தண்டவாளங்களில் ஓடுகின்றன. இவற்றின் மேலே தடித்த கம்பிகள் செல்வதைப் பார்த்திருக்கிறீர்களா? அக் கம்பிகளிலிருந்து ஓர் இணைப்பின் மூலமாக இயந்திரங்களுக்கு மின்சாரம் பாய்வதால்தான் வண்டிகள் ஓடுகின்றன. சென்னை, பம்பாய், கல்கத்தா

போன்ற நகரங்களில் இத்தகைய வண்டிகளைக் காண லாம்.

ஓரிடத்திலிருந்து கொண்டே வேறு இடங்களிலிருக் கும் மக்களுடன் பேசுவதற்குப்பயன்படும் **டெலிபோன்** என்னும் கருவி இயங்குவதற்கும் மின்சாரம் இன்றி யமையாததாகும். **கம்பியில்லாத் தந்தி**களின் மூலம் வெகுதூரம் செய்திகளை உடனுக்குடன் தெரிவிப்பதற் கும் மின்சாரம் சிறந்த துணையாகும். **டெலிவிஷன்** என் னும் ஓர் அற்புதக் கருவியும் மின்சாரத்தினாலேயே இயங்குகின்றது. அது நூற்றுக் கணக்கான மைல் களுக்கு அப்பாலிருந்து பேசுகிறவர்களையும், பாடுகிறவர் களையும், நடிப்பவர்களையும் அப்படியே நம் வீட்டில் அமைத்திருக்கும் திரையில் காணும்படி செய்கிறது. மருத்துவர்கள் நரம்பு சம்பந்தமான சில, நோய்களைப் போக்குவதற்கும்மின்சாரசக்தியைஉபயோகிக்கிறார்கள்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் சிற்றுண்டிச் சாலைக்குச் செல்வோர் தமக்கு வேண்டிய பொருள்களின் விலையை இயந்திரங்களில் குறிப்பிடப் பட்ட ஒரு கருவியில் நுழைந்ததும், ஒரு தட்டில் வேண் டிய பொருள் வெளியே வந்து நிற்கும். அவர்கள் அதை உண்ட பிறகு எச்சிற் கலங்களையும் கரண்டிகளையும் கழுவி, துடைத்து, உலர்த்தி, அடுக்கி வைப்பதற்கும் மின்சாரம் உபயோகப்படுகிறது. தொழிலாளர் பலர் நெடுநேரம் செய்யக்கூடிய வேலையைச் சிறிது நேரத்தில் செய்து முடிக்கும் மின்சாரத்தின் ஆற்றலை என்னென் பது!

மின்சாரத்தினால் மேற்கூறிய அற்புதங்கள் நிகழ் கின்றன வென்று அறிந்தோம். மேலும் பலப்பல அற்

புதங்களும் ஏற்படக்கூடும். இதனுல் பல தீமைகளும் ஏற்படுவதை நாம் காண்கிறோம். தீமைகளை நீக்கி நன்மைக்கே இதனைப் பயன்படுத்தி நாம் வளமுற வாழ்வோமாக.

பயிற்சி

ஆற்றல்	எண்ணிறந்த	செலுத்தி
இணைப்பு	ஒலி	புலப்படாத
இயக்குதல்	ஒளி	விழும்

கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

தலைசிறந்த	துண்ணென
முதன் முதலில்	உடனுக்குடன்
வெவ்வேறு	நூற்றுக்கணக்கான

எதிர்ப்பதம் கூறுக :

தாழ்ந்த, இன்பம், எளிது, அயலூர், தடித்த.

விடை தருக :

1. தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் யார்? அவர் மின்சாரத்தைப் பற்றி என்ன கூறியுள்ளார்?

2. மின்சாரம் பழங்காலத்தில் எங்தெந்த விதங்களில் கண்டு பிடிக்கப்பட்டது?

3. தற்காலத்தில் மின்சாரத்தை எங்ஙனம் உற்பத்தி செய்கிறார்கள்?

4. நம் நாட்டில் எவ்வெவ்விடங்களில் நீர்வீழ்ச்சிகளிலிருந்து மின்சாரம் எடுக்கப்படுகிறது?

5. மின்சாரத்தினுல் நடைபெறும் குடும்ப வேலைகள் யாவை?

6 மின்சாரத்தினுல் வண்டிகள் எவ்வாறு ஓடுகின்றன?

7. பாத்திரங்களுக்கு வெள்ளிமுலாம் பூசுவதெப்படி?

8. 'டெலிவிஷன்' என்னும் கருவியைப்பற்றிக் குறிப்பு எழுதுக.

9. அயல் நாடுகளில் மின்சாரத்தினுல் ஏற்பட்டுள்ள அற்புதங்கள் யாவை?

10. மின்சாரத்தினுல் தற்காலத்தில் நமக்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

தெரிந்து கொள் :

1. 'மின்சாரமும் அதன் அற்புதங்களும்' என்பது பற்றிச் செய்தித் தாள்களிலும் உங்கள் நூல் நிலையப் புத்தகங்களிலும் உள்ள செய்திகளை அறிந்துகொள்.

2. உங்கள் ஊரில் மின்சாரத்தின் மூலம் இயங்கும் இயந்திரங்களைப் பற்றியும் அவை வேலை செய்யும் விதங்களைப் பற்றியும் தெரிந்துகொள்.

7. வெளிநாட்டுக் கடிதங்கள்

1. சீனக் கடிதம்

பீக்கிங்,
22-12-'52.

அன்புள்ள இந்திய நண்பர்களே,

என் பெயர் **பெங்க் ஹோ**. எனக்கு வயது பனிரண்டு. நான் ஆறும் வகுப்பில் படிக்கிறேன். **போ-சியா-சீயே** என்னும் ஆரம்பப்பள்ளியில் படிக்கிறேன். இஃது எங்கள் தேசத்தின் தலைநகரான **பீக்கிங்**கில் உள்ளது.

இந்தக் கடிதத்தை உங்களுக்கு நான் எழுத வேண்டும் என்று சொன்னபோது, என் இந்திய நண்பர்களே, நான் இன்பக் கடலில் திளைத்தேன். ஏனென்றால் இந்தியாவைப் பற்றி நாங்கள் பூகோள வகுப்பில் படித்தோம். இந்தியா எங்கள் தேசத்தின் தெற்கில் இருக்கும் சகோதர தேசமென்றும், அஃது ஏராளமான மக்கள் தொகையைக் கொண்ட பெரிய நாடு என்றும் எங்கள் ஆசிரியை சொன்னார்கள். அத்துடன் இந்தியாவைப்பற்றிய பல படங்களையும் காட்டினார்கள். ஒரு படத்தில் நாங்கள் இந்திய யானை ஒன்றைப் பார்த்தோம். அது மிகப் பெரியதாக இருந்தது. ஒரு காலத்தில் நான் இந்தியாவுக்கு வருவேன். அப்போது உங்

களை யெல்லாம் பார்ப்பேன் ; அந்தப் பெரிய யானைகளையும் பார்ப்பேன்.

எங்கள் பள்ளியிலுள்ள இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் ஒரு பிரிவுக்கு நான் தலைவனாக இருக்கிறேன். அந்தக் கழகத்திலுள்ள ஒவ்வொருவனின் கடமையும் என்ன தெரியுமா? அவன் நல்ல மாணவனாக இருக்க வேண்டும். பெரியவனானதும் நல்ல குடிமகனாக இருந்து நாட்டுக்குச் சிறந்த தொண்டு செய்ய வேண்டும். சங்கீதம், விஞ்ஞானம்,பொம்மை விமானம் செய்தல், இலக்கியம், கலை முதலியவற்றில் ஆர்வமுள்ளவர்களைச் சேர்த்துப் பற்பல பிரிவுகளாக இக் கழகத்தினர் அமைத்திருக்கிறார்கள். இந்தப் பிரிவுகளில் எதில் வேண்டுமானாலும் இளைஞர் கழகத்தினர் சேரலாம்.

நான் மாதிரி ஆகாய விமானம் செய்யும் பகுதியில் ஈடுபட்டு இருக்கிறேன். உலகிலேயே மிகமிக வேகமாகப் பறக்கக்கூடிய ஆகாய விமானத்தை நான் என்றாவது ஒருநாள் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். எதற்காக? போர் செய்வதற்காக அன்று, அதை ஓட்டிக்கொண்டு உலகின் பல பாகங்களுக்கும் சென்று ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நண்பர்களைப் பார்த்து வருவேன். அங்ஙனம் சுற்றி வரும்போது நான் இந்தியாவுக்கும் வருவேன். அப்போது எனக்கு நீங்கள் உங்கள் தேசத்திலுள்ள பெரிய காடுகளைக் காட்டுவீர்கள். எல்லாவிதமான பெரிய மரங்களையும் நான் காண்பேன். அத்துடன் விலங்குகளையும் காண வேண்டும். ஏனென்றால், நான் வருங்காலத்தில் ஒரு பெரிய உயிரின ஆராய்ச்சியாளனாக வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். நான் காட்டிலே ஆராய்ச்சி

செய்து பலவகை மரங்களையும், மலர்களையும், விலங்கு களையும் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் செடிகளை நட்டு, அவற்றை வளர்க்க விரும்பு கிறேன். எங்கள் வீட்டின் பின்புறத்தில் நான் ஒரு சின்னஞ் சிறிய தோட்டம் வைத்துள்ளேன். அதில் தக் காளி பயிரிடுகிறேன். சென்ற கோடை காலத்தில் எட்டுப் பெரிய தக்காளிக் காய்கள் கிடைத்தன.

எனக்கு ஜாலவித்தை யெல்லாம் செய்யத் தெரி யும். அதை நான் செய்து காட்டும்போது என் நண் பர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இராது. அவர்கள் என்னைக் **குட்டி மந்திரவாதி** என்று அழைப்பார்கள். ஒரு முட்டையைக் கைக்குட்டையாக மாற்றும் வித்தை கூட எனக்குத் தெரியும் !

இன்னும் எவ்வளவோ செய்திகள் சொல்ல வேண்டும். ஆனால் நேரமில்லை. இத்துடன் நான் நிறுத் திக்கொள்கிறேன். ஒரு காலத்தில் நாம் ஒருவரையொரு வர் சந்திப்போம். உங்களில் யாராவது உயிரின ஆராய்ச்சியாளனாகப் பிரியப்படுகிறீர்களா? இந்தியா வில் நீங்கள் என்ன மாதிரித் தக்காளிகளைப் பயிரிடுகி றீர்கள் என்பதை அறிய ஆவல். யானைகள் எங்கே வசிக்கின்றன என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

உங்கள் அன்புள்ள,

பெங் ஹோ.

2. எகிப்துக் கடிதம்

அலெக்ஸாந்திரியா,
11-10-'52.

அன்புள்ள சகோதர சகோதரிகளே,

நான் ஒரு கிரேக்கப் பெண். **அலெக்ஸாந்திரியா**வில் வசிக்கிறேன். என் பெயர் **ஹெலன் பயாஸோஸ்.**

என் வயது பதினைந்து. அக்டோபர் 16-ஆம் தேதி என் பிறந்த நாள். நான் உயரமாக இருக்கிறேன். சிவந்த பழுப்புநிறக் கண்கள், குட்டையான செம்பட்டை மயிர், கரியநிறத் தோல் இவைகளை நான் பெற்றிருக்கிறேன்.

என் பெற்றோர்களும் நானும் அலெக்ஸாந்திரியாவில் பிறந்தோம். இங்குத்தான் இப்போது நான் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு தங்கை உண்டு. அவள் பெயர் மேரி. ஒரு புருவையும் ஐந்து கானரிப் பறவைகளையும் நான் வளர்த்து வருகிறேன்.

அலெக்ஸாந்திரியாவிலுள்ள ஆங்கிலப் பெண் கல்லூரி (English Girls' College) யில் நான் படித்து வருகிறேன். பள்ளியில் 'டென்னிஸ்', 'ஹாக்கி' முதலிய பந்தாட்டங்களை நாங்கள் ஆடுவோம். நீந்துவதற்குக் கூட அங்கே வசதியான குளம் ஒன்று இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை நாங்கள் எங்களுடைய நீந்தும் திறமையைக் காட்டுவோம்.

எனக்கு மிகவும் பிடித்தமான பாடம் விளையாட்டுத் தான். இதைக் கேட்க உங்களுக்குச் சிரிப்பு வருகிறதா? எங்களுக்கு விளையாட்டுக்கூட ஒரு பாடந்தான். ஒவ்வொரு நாளும் நாங்கள் அந்தப் பாடத்தைக் கட்டாயமாகக் கற்கவேண்டும். பள்ளிக்கூட 'ஹாக்கி' குழுவிலும், வலைப்பந்துக் குழுவிலும் நான் உறுப்பினளாக இருக்கிறேன். நான் பல நாட்டுத் தபால் 'கார்டு'களை யும், நடனப்படங்களையும் சேகரித்து வருகிறேன். எனக்கு நடனம், விளையாட்டு, கடிதம் எழுதல் முதலியவற்றில் ஆர்வம் அதிகம். ஸ்பெயின் நாட்டுக்கும், ஹாவாய்த் தீவுக்கும் சென்று பார்த்து வரவேண்டும் என்பதே என் கனவு. நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கிரீஸ் தேசத்துக்குச் சென்றிருந்தேன். அந்த நாட்டை நான் மிகவும் விரும்புகின்றேன்.

மருத்துவ வகுப்புகளுக்கு நான் விருப்பத்துடன் செல்கிறேன். சென்ற கோடை விடுமுறையில் கிரேக்க மருத்துவ விடுதியில் எவ்வளவோ செய்திகளைக் கற்றுக் கொண்டேன். முதல் உதவி செய்தல், ஊசி குத்துதல், கட்டுக் கட்டுதல், 'ஆபரேஷன்' செய்யும் முறை, நோயாளிகளுக்கு உதவுதல் முதலியவற்றைக் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

உங்களுக்கு இப்போது எகிப்து தேசத்தைப் பற்றிச் சிறிது சொல்லப் போகிறேன். உங்களில் சிலர் எகிப்துக்கு வந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்! இஃது ஒரு பெரிய நாடு. எகிப்தில் பார்ப்பதற்குப் பல சிறந்த இடங்கள் இருக்கின்றன. பிரமிட் என்ற பெரிய கோபுரங்களும், சிங்க உடல் அமைந்த மனிதச் சிலைகளும் முக்கியமானவை. எகிப்தைப் பற்றிக் கூறும்

போது, அதை நைல் நதியின் நன்கொடை என்று அழைக்கிறார்கள். நைல் நதி இல்லாவிடின் எகிப்து ஒரு பாலைவனமாகப் போயிருக்கும். நைல் நதி கெய்ரோ நகரத்தின் வழியாக ஓடுகிறது.

எகிப்தின் முக்கிய ஏற்றுமதி பருத்திதான். அது இங்கேயே பயிரிடப்படுகிறது. எகிப்தின் மக்கள்தொகை சில ஆண்டுகளாக அதிகமாகிக் கொண்டே வருகிறது. பல நாடுகளிலிருந்து மக்கள் வந்து இங்குக் குடியேறி வருகிறார்கள்.

நான் உங்களுக்குக் கடிதம் எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். என் கடிதத்தைப் படிப்பதிலும் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள் என்று எண்ணுகிறேன்.

சில ஆண்டுகளில் நான் இந்தியாவுக்கு வரலாம். ஆனால், நீங்கள் எகிப்துக்கு வருவதற்கு மட்டும் மறந்து விடாதீர்கள்! உங்களுக்கு எப்போதும் நல்வரவேற்பு இருக்கும்.

என்றும் அன்புள்ள உங்கள் எகிப்தியச் சகோதரி,

ஹெலன் பயாஸோஸ்.

3. ஜெர்மன் கடிதம்

டஸல்டார்ப்,
16-11-'52.

அன்புள்ள இந்தியச் சிறுவர் சிறுமிகளே,

நான் ஒரு ஜெர்மனியப் பெண். என் பெயர் **இங் பார்க் பேயர்.** நான் 1934-ஆம் ஆண்டில் பிறந்தேன்.

எங்கள் நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கும் உங்கள் நாட்டுத் தட்பவெப்ப நிலைக்கும் வேற்றுமை உண்டு. மிகவும் உஷ்ணமான கோடைக்காலம் எப்படி யிருக்கும் என்பதே எங்களுக்குத் தெரியாது. 'ஜில்' லென்ற குளிர் காலந்தான் எங்களுக்குத் தெரியும்.

நான் என் பெற்ரேருடனும் ஒரு தம்பி ஒரு தங்கையுடனும் **டஸல்டார்ப்** என்னும் நகரில் வசிக்கிறேன். இது **ரைன் நதி**க் கரையில் இருக்கிறது. இது தொழிற்சாலைகள் நிறைந்த மிக முக்கியமான நகரம். இந் நகரம் மக்கள் நெருக்கமுள்ள பிரதேசத்தில் இருக்கிறது.

நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துவருகிறேன். ஏனைய பாடங்களுடன், பிரெஞ்சு, ஆங்கிலம், இலத்தீன் ஆகிய மூன்று அந்நிய மொழிகளையும் கற்று வருகிறேன். ஜெர்மனியில் நாங்கள் ஆரும் வயதில் பள்ளிக்குப் போகிரேம்; பத்தொன்பதாம் வயதில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொள்ளுகிரேம். எங்கள் பள்ளிப்

படிப்பை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அதன்படி ஆரம்பப் பள்ளியில் முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்புவரை படிக்கவேண்டும். பிறகு, உயர்நிலைப் பள்ளியில் ஒன்பது ஆண்டுகள் படிக்கவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் ஆரம்பப் பள்ளிக்குக் கட்டாயமாகச் சென்று படித்தாக வேண்டும்.

விளையாடுவது, படிப்பது, வெளிநாடுகளுக்குச் செல்வது இவைகளே என் பொழுது போக்குகள். சென்ற கோடை விடுமுறையில் நான் என் தங்கையுடன் சைக்கிளிலே பிரான்சுக்கும், ஸ்விட்ஸர்லாந்துக்கும் சென்றிருந்தேன். அப்படிச் சென்றிருந்தபோது நாங்கள் இரவு நேரங்களில் சிறுவர் விடுதிகளில் தங்கியிருந்தோம். அப்போது பெரும்பாலும் ஐரோப்பாவின் எல்லா இடங்களிலிருந்தும் வந்த பல சிறுவர்களையும் சிறுமிகளையும் சந்தித்தோம்.

இந்தியாவைப் பற்றிய சில புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். அவை என் உள்ளத்தைக் கவர்ந்தன. உங்கள் நாட்டைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள அவாவுகிறேன்.

உங்கள் ஜெர்மன் சகோதரி,

இங்பார்க் பேயர்.

பயிற்சி

பொருளறிக:

அவா	திளைத்தேன்
உறுப்பினர்	நன்கொடை
குடிமகன்	மருத்துவ விடுதி

கீழ் வருவனவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

இன்பக் கடலில், ஏராளமாக, பெரும்பாலும், நல்வரவேற்பு.

விடை கூறுக:

1. சீனக் குழந்தைகள் இந்தியாவைப் பற்றி என்ன அறிந்துள்ளார்கள்?
2. சீனப் பள்ளிக்கூடத்துக் கல்விமுறையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
3. எகிப்தியச் சிறுமியின் விருப்பம் என்ன?
4. 'நைல் நதியின் நன்கொடை' எது? அதன் பெயர்க் காரணம் கூறுக.
5. ஜெர்மன் நாட்டுக் கல்வி முறையைப் பற்றி இங்பார்க் பேயர் என்ன கூறுகிறாள்?

தெரிந்து கொள்:

கானரி என்னும் தீவிலிருந்து கொண்டு வந்து வளர்க்கப்பட்ட பறவைகளுக்குக் கானரிப் பறவைகள் என்று பெயர்.

8. சுதந்திர நாட்டில் மாணவர் கடமை

பரம்பரை பரம்பரையாக அடிமைத் தளையிற் சிக்கியிருந்த நம் திருநாடு மகாத்மா காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகாகவி பாரதியார் போன்ற அரிய தலைவர்களின் திருப்பணியால் இன்று உரிமை பெற்று விளங்குகின்றது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று இன்று நாம் இறும்பூது கொள்வதற்குக் காரணம் அன்னாரின் தன்னலமற்ற தியாகமேயன்றோ? இன்று மக்களாட்சி நடைபெறுகிறது. இப் பேற்றை நாம் அனுபவிக்கும் வாய்ப்புப் பெற்றிருக்கின்றோம்.

இக் காலத்துச் சிறுவர்களே பிற்காலப் பெரியோர்கள். நமது நாட்டின் முன்னேற்றம் இக் கால இளைஞர்கள் கையிலிருக்கின்றது. எனவே நம் நாட்டு நலத்திற்கான துறைகளில் சிறுவயதிலேயே பயிற்சி பெறுவது மாணவ மாணவியரின் சீரிய கடமையாகும். நாட்டிற்கான ஒழுங்கு முறைகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்க வேண்டியவர்கள் மாணவர்களே. 'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்' என்னும் பாரதியாரின் கனவு பலித்திருக்கும் இக்காலத்தில் தேசசேவை புரிவதில் மாணவர்கள் அனைவரும் புத்துணர்ச்சியும் மகிழ்ச்சியும் கொள்ளுதல் வேண்டும். நல்ல பழக்கங்களையும் பண்புகளையும் வளர்ப்பதற்கேற்ற பருவம் இளமைப் பருவமே. மாணவர்கள் அறிவுப் பயிற்சியுடன் கைத்தொழில், சமூக சேவை முதலிய துறைகளிலும் சிறந்த பயிற்சி பெறுதல் வேண்டும்.

சுதந்திரம் என்னும் சொல்லுக்கு அவரவர் தத்தம் மனம் போன போக்கில் நடப்பதென்பது பொருளன்று.

தாம் எத்துணைச் செல்வமும் கல்வியும் படைத்தவர்களாயினும் சமுதாயக் கட்டுப்பாடுகட்கும் பொதுச் சட்ட திட்டங்களுக்கும் அடங்கி நடப்பதே நேர்மையானது. நம்மினும் அறிவிலும் அனுபவத்திலும் நிறைந்த பெரியோர்கள் வகுத்த முறைகளினின்று மாறுபட்டு நடப்பது நாட்டுக்கே தீமை விளைவிப்பதாகும். மாணவர்கள் தம் இளமைப் பருவ முதலே தலைவனுக்கு அடங்கி நடக்கும் தன்மை, ஒற்றுமை, விடாமுயற்சி முதலிய நற்குணங்களைப் பெற்றுத் தமக்கும் பிறர்க்கும் நன்மையான காரியங்களையே செய்ய முற்படுதல் வேண்டும்.

மாணவர்கள் தாம் கற்கும் கல்வி, உத்தியோகம் பெறுதற்பொருட்டே என்னும் மனப்பான்மை கொள்ளலாகாது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்துப் பட்டதாரிகளாக வெளிவருகின்றனரே! இவ்வெல்லோருக்கும் உத்தியோகம் கிடைப்பதென்பது முயற்கொம்பே. ஆகையால், மாணவர்கள் சிறு வயதிலேயே ஏதாவதொரு கைத்தொழிலில் திறமை பெறவேண்டும். இதனை அறிந்தே நம் சுதந்திர அரசியலார் பள்ளிக்கூடங்களில் நூல் நூற்றல், ஆடை நெய்தல், சாயம் போடுதல் முதலிய தொழிற் கல்வியை மாணவர்கட்குப் போதிக்குமாறு ஏற்பாடுகள் செய்துள்ளனர். பள்ளிப் படிப்பு முடிந்ததும் அவரவர் தத்தமக்கு விருப்பமானதொரு கைத்தொழிலைச் செய்து போதிய வருவாய் உடையவராதல் வேண்டும்.

நாட்டிற் பிறந்த மக்கள் அனைவரும் நம் நாட்டுப் பொருள்களையே வாங்கிப் பயன்படுத்துவது சிறந்த தேச சேவையாகும். அந்நிய நாட்டுப் பொருளகளையே

நாம் ஆதரித்துக் கொண்டிருப்பின் நம் நாட்டுக் கைத் தொழிலும் வாணிபமும் விரைவில் நசித்துவிடக்கூடும். நம் நாட்டிற் செய்யப்படும் பொருள்கள் அந்நிய நாட்டுப் பொருள்களைப் போல் உறுதியும் வனப்பும் உடையனவா யில்லையே என்று சிலர் குறை கூறுவர். படித்தவர்கள் தொழில் திறமை பெருமையே இதற்குக் காரணமாகும். கல்வி கற்ற மாணவர்கள் பிறநாடுகளுக்குச் சென்று தொழில் நுணுக்கங்களை உணர்ந்து நம் நாட்டுக் கைத்தொழிலை வளர்க்கப் பாடுபடுதல் வேண்டும்.

அடுத்ததாக மாணவர்கள் கடமைகளிற் சிறந்தது கிராமத் தொண்டு. நம் நாடு ஏழு லட்சம் கிராமங்களைக் கொண்டது. கிராமத்தார்கள் நகரத்தாருடன் தொடர்பு கொண்டு வாழ்வதே நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாகும். இன்றைய கிராமவாசிகளின் நிலைமை என்ன? அவர்கள் வறுமை, கல்வியின்மை, மூடப்பழக்கங்கள் முதலியனவற்ருல் அல்லலுறுகின்றனர். கிராம முன்னேற்றத்தில் நம் அரசியலார் தம் கருத்தைச் செலுத்தி வருகின்றனர். அவர்களுடன் நாமும் ஒத்துழைத்தல் இன்றியமையாததாகும். மாணவர்கள் தம் ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் கிராமங்கட்குச் சென்று எழுத்து வாசனையற்ற முதியோர்க்குக் கல்வி கற்பிக்கலாம்; அன்ருடம் நடக்கும் உலக நிகழ்ச்சிகளைக் கூறலாம்; விவசாயம், கைத்தொழில் முதலிய துறைகளில் கையாளவேண்டிய புதிய முறைகளைப் பற்றி விளக்கிப் பேசலாம்: அவர்கள் தூய்மையான வாழ்க்கை நடத்தவும் பிணக்குகளின்றி ஒற்றுமையாக வாழவும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யலாம்.

கிராம மக்கள் பெரும்பாலும் உழவுத் தொழிலே புரிகின்றனர். பயிரிடுங் காலந்தவிர மற்ற நேரங்களில் அவர்கள் ஒரு தொழிலுமின்றி வறிதே காலங் கழிக்கின்றனர். அக் காலங்களில் எளிதில் செய்யக் கூடிய நூல் நூற்றல், ஆடை நெய்தல், கூடை முடைதல், கோழி வளர்த்தல் போன்ற சிறு தொழில்களைப் புரியுமாறு அவர்களை ஊக்குதல் வேண்டும். கிராமவாசிகளும் நமது சகோதரர்களே என்னும் மனப்பான்மை கொண்டு அவர்களுடன் பழகவேண்டும். மக்கள் அனைவரும் 'ஓரினம்; ஒரு குலம்' என்று எண்ணிப் பொதுப் பணிகள் புரியவேண்டும்.

நம் நாடு பண்டைக் காலத்திலிருந்தே கல்வி, கலை, நாகரிகங்களிற் சிறப்புடையது. அந்நியர் ஆட்சியில் தம் சொந்த நாட்டுப் பண்பாடுகளை மக்கள் அறவே மறந்தனர். மக்கள் அயல் நாட்டு நாகரிகங்களிலும், நடையுடை பாவனைகளிலும் அவாக் கொண்டதால் நம் நாட்டுச் செல்வம் சிதைவுற்றது; கலைகள் மறைந்தன. இனியேனும் நம் நாடு பண்டுபோல் நன்னிலை பெற நாம் நம் நாட்டு மொழி, கலை, நாகரிக வளர்ச்சியில் கருத்துக் கொண்டு சேவை புரிதல் வேண்டும். அரசியல், பொருளாதாரம், வாணிபம், கைத்தொழில், கல்வி என்னும் பற்பல துறைகளிலும் நம் நாடு உலக அரங்கில் முதன்மை பெற நாம் பாடுபடுதல் வேண்டும்.

பயிற்சி

பொருளறிக :

அரங்கு	பிணக்கு	வகுத்த
இறும்பூது	மனப்பான்மை	வறிதே
எடுத்துக்காட்டு		

வாக்கியங்களிற் சேர்த்து எழுதுக :

பரம்பரை பரம்பரையாக, முற்பட, அன்றாடம், முதன்மை பெற.

விடை கூறுக :

1. நம் நாடு விடுதலைபெறப் பாடுபட்ட பெரியோர்கள் சிலரைக் கூறுக.

2. மாணவர்கள் இளமைப் பருவத்திலேயே கைக்கொள்ள வேண்டிய அருங்குணங்கள் யாவை?

3. நாம் ஏன் நம் நாட்டுப் பொருள்களையே ஆதரிக்க வேண்டும்?

4. விடுமுறை நாட்களில் மாணவர்கள் எங்ஙனம் கிராம சேவை செய்யலாம்?

5. நம் நாடு பண்டைக் காலத்துப் பெருமைகளை அடைய நாம் என்ன செய்யவேண்டும்?

இலக்கணப் பயிற்சி

i. இவர் நம்மை ஆளும் தலைவர்.

ii. நம்மை ஆளும் தலைவர் இவர்.

இவ்விரண்டு வாக்கியங்களில் முதல் வாக்கியத்தில் இவர் என்பது எழுவாய்; தலைவர் என்பது பயனிலை. இரண்டாம் வாக்கியத்தில் தலைவர் என்பது எழுவாய்; இவர் என்பது பயனிலை. இதனால் எழுவாயாக வந்த பெயர் பயனிலையாகவும், பயனிலையாக வந்த பெயர் எழுவாயாகவும் வருதலும் உண்டு என அறிக.

பின்வரும் பெயர்களை எழுவாயாகவும் பயனிலையாகவும் வருமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

1. கண்ணன்—பசு.
2. கிளி—பறவை.
3. வந்தவன்—பொன்னன்.
4. தமிழ்—மொழி.
5. நீங்கள்—ஆதரித்தவர்கள்.

அருஞ்சொல் அகராதி

அகழி - கோட்டையைச் சுற்றிலுமுள்ள நீர்நிலை
அபூர்வம் - அற்புதம்
அரங்கு - மேடை
அலுப்புற்று - களைத்து
அவா - ஆசை, விருப்பம்
ஆய்ந்த - ஆராய்ந்த
ஆற்றல் - சக்தி
இணைந்து - சேர்ந்து
இணைப்பு - சந்திப்பு
இயக்குதல் - அசைத்தல்
இளவல் - தம்பி
இறும்பூது - பெருமிதம்
உட்பகை - வெளிக்குத் தெரியாமலிருக்கும் பகை
எடுத்துக்காட்டு - உதாரணம்
எண்ணிறந்த - கணக்கில்லாத
ஒலி - ஓசை
ஒளி - வெளிச்சம்
ஓவியக்கலை - சித்திரக்கலை
கடல்கோள் - கடலால் கொள்ளைப்படுதல்
கலை - ஓவியம், இசை, நாட்டியம் போன்ற வித்தைகள்
கழகங்கள் - சங்கங்கள்
கிளர்ச்சி - எழுச்சி
குதூகலித்தல் - மகிழ்ச்சி யடைதல்
கோடாது - தவறாமல்
கோன்முறை - அரசநீதி
சமயம் - மதம்
சிற்பம் - கோயில் முதலியவை கட்டும் சாத்திரம்
சூழ்நிலை - சுற்றுப்புற நிலைமை
செலுத்தி - புகுத்தி
செறிந்து - நெருங்கி
தளபதி - படைத்தலைவன்
திட்டம் - ஏற்பாடு
திளைத்தேன் - மகிழ்ந்தேன்
துர்க்கம் - மலையிடுக்கு வழி
துறை - வகை
தொடர்பு - சம்பந்தம்
தொண்டு - சேவை
படைத்து - செய்து
பண்பாடு - அருங்குணங்கள்
பிடர் - கழுத்து
பிணக்கு - மாறுபாடு
புகட்டுதல் - எடுத்துக் கூறுதல்
புலப்படாத - கண்ணுக்குத் தோன்றாத
பூழியர்கோன் - பாண்டியன்
பேராறு - பெரிய ஆறு
மறக்குடி - வீரக் குடும்பம்
மனப்பான்மை - உள்ளத்தின் தன்மை
யவனர் - அரேபியர் (கிரேக்கரையும் குறிக்கும்)
வதிந்தன - வசித்தன
வறிதே - வீணாக
வாணிபம் - வியாபாரம்
வானநூற்கலை - வானத்தைப் பற்றியும், வானத்தில் உள்ள பொருள்களைப் பற்றியும் கூறும் வித்தை
வீழும் - விழும்
வேழம் - யானை

இளங்கோ வாசகம்

[இரண்டாம் புத்தகம் - இரண்டாம் படிவம்]

முதற் பிரிவு

பேராசிரியர் ப. முருகன், M. A.
மாநிலக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை

முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புக்கள்: மே 1954, ஜூன், 1955

Approved by the Madras Text Book Committee for class use Vide Page 118 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19-5-'54

சாந்தி பிரஸ், சென்னை - 1.

முன்னுரை

'இளங்கோ வாசகம்' என்னும் இந்நூல்வரிசை உரிமைபெற்ற நம் மாநில மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

'புதிய கல்விமுறைக் கேற்ற புதிய புத்தகம் வேண்டும்' என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத் தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு இடம் கொடுக்கப்பெற்றுள்ளன. மாணவர்தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தினருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் காணிக்கையாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட்டக் கல்வி ஆணையாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

எண்			பக்கம்
I.	கடவுள் வாழ்த்து	...	1
II.	நீதிப் பகுதி		
	1. ஆசாரக் கோவை	...	5
	2. நீதி வெண்பா	...	8
	3. திரிகடுகம்	...	11
	4. திருக்குறள்	...	14
III.	வரலாற்றுப் பகுதி	...	23
IV.	கதைப் பகுதி		
	1. நரிக்குட்டி	...	26
	2. பிள்ளையும் கிள்ளையும்	...	29
V.	வருணனைப் பகுதி	...	34
VI.	பலவகைப் பாடல்கள்	...	36

உரைநடைப் பகுதி

1.	அன்னை கஸ்தூரி	...	41
2.	தலை இருக்க வாலாடுமா?	...	48
3.	பார்க்க வேண்டாமா?	...	54
4.	'யானோ அரசன், யானே கள்வன்!'	...	62
5.	மாடுகளை வளர்த்தல்	...	68
6.	ஒரு விநோத வழக்கு - I	...	75
7.	ஒரு விநோத வழக்கு - II	...	81
8.	இதுதான் 'பாங்கு'	...	87
9.	சர் ஜகதீச சந்திர போஸ்	...	94
10.	மாண்டவன் மீண்டான்	...	102
11.	பாலாற்றங் கரையில்	...	107
12.	நல்ல மருத்துவர்	...	115
13.	நான் சிறுவனாக இருந்தபோது	...	122

1. கடவுள் வாழ்த்து

தெய்வ முழக்கம்

உலகமெலாங் கடந்துகடந்
　　தொளிருமொரு தெய்வம் ;
உலகுதொறும் கலந்துகலந்
　　தோங்குவிக்கும் தெய்வம் ;
இலகுசரா சரமெல்லாம்
　　இயக்கிநிற்கும் தெய்வம் :
இன்பறிவாய் அன்பருளாய்
　　என்றுமுள தெய்வம் :
அலகிலொளி ஒலியாகி
　　அகிலஞ்செய் தெய்வம்.
அருங்கலையில் நடம்புரியும்
　　ஆனந்தத் தெய்வம் ;
பலசமய ஒருமையிலே
　　பயன்விளைக்கும் தெய்வம் ;
பழம்பொருட்கும் பழம்பொருளாம்
　　பழந்தெய்வம் பாரே. 1

—திரு. வி. கலியாணசுந்தரனுர்

கந்தரனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே ! 2

— அருணகிரிநாதர்

வில்லிபாரதம்

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம். 3

—வில்லிபுத்தூராழ்வார்

ஞாயிறு வாழ்த்து

கடலிலே கோடி கோடிக்
கதிர்க்கைகள் ஊன்றி நின்றாய்!
நெடுவானில் கோடி கோடி
நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ, காடோ,
இல்லமோ, பொய்கை, ஆறோ,
அடங்கநின் ஒளிஅ ளாவ
அமைந்தனை! பரிதி, வாழி! 4

பாரதிதாசனார்

தமிழ் வாழ்த்து

இன்னிசை யணிந்த பொன்னிளஞ் செல்வி
இனிமையே தன்பெய ரானாள்
மன்னுல கெல்லாம் வணங்கிடத் தக்க
பொதுமறை யருளிய வாணி
பன்மொழிக் குயர்ந்த தொன்மொழி யரசி
பரமனின் வரம்பெற்ற புதல்வி
தன்னிக ரற்ற தமிழெனும் அமுதத்
தாய்மல ரடிபணிந் துய்வாம். 5

—சுவாமி சுத்தானந்த பாரதியார்

குறிப்புரை

1. திரு வி. கலியாணசுந்தரனுர் தமிழ் மக்களால் தமிழ்ப் பெரியார் என்று பாராட்டப்பட்டவர். இவர் எம் மதமும் சம்மதமென்னும் சமரச நோக்குடையவர். இவர் பல்லாண்டுகளாகச் சென்னை இராயப்பேட்டையில் தங்கி இருந்து, மொழி, அரசியல், சமூகம், தொழிலாளர் முன் னேற்றம், பெண்கள் உயர்வு முதலிய துறைகளில் சிறந்த பணிகள் ஆற்றினுர். இவர்தம் இனிய உரைநடை நூல் களும், செய்யுள் நூல்களும் மாணவர்கள் படித்து இன் புறத் தக்கவை.

சரம் - அசையும் பொருள். அசரம் - அசையாப் பொருள். அலகில் - அளவில்லாத.

2. அருணகிரிநாதர் சிறந்த முருகனடியார். இவர் சந்தச் செய்யுட்கள் இயற்றுவதில் வல்லவர், திருப்புகழ் முதலிய நூல்கள் இவரால் இயற்றப்பட்டவை.

மரு - மணம். குகன் - முருகன்.

3. வில்லிபுத்தூராழ்வார் ஒரு வைணவ அடியார். இவர் தலைசிறந்த கவிஞர். மகாபாரதம் இவரால் தமிழில் இயற் றப் பெற்றது. இவர் 500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்.

ஆழி - சக்கரம். முகில் - மேகம். முளரி - தாமரை. இறைஞ்சி - துதித்து. பதமுளரி - திருவடிகளாகிய தமாரை. உருவகம்.

4. பாரதிதாசனுர் தமிழ்நாட்டின் தலைசிறந்த கவிஞர், இவர் பாரதியாரின் மாணவர். தமிழ் மக்களுக்குத் தமிழ் உணர்ச்சி, வீரம், அறிவு முதலியன ஊட்டும் வகையில் எண்ணிறந்த பாடல்களை இயற்றி வருகிறுர். இவர் புதுவை யில் வாழ்கிறுர். இப் பாடல் அழகின் சிரிப்பு என்னும் நூலிலிருந்து தொகுக்கப் பெற்றது.

கதிர்க்கைகள்—கிரணங்களாகிய கைகளை, உருவகம். நெடுவான்-பெரியவானம். பொய்கை-குளம். பரிதி-சூரியன்

5. சுத்தானந்த பாரதியார் பிறவியிலிருந்தே துறவி யாக இருந்து மொழிப்பணியும் சமயப்பணியும் ஆற்றி வரு கிறார். இவர் பல்லாண்டுகளாகப் புதுவை அரவிந்தர் ஆசிர மத்தில் தங்கி அறப் பணியாற்றி வந்தார். இவர் பாடல் கள் எளிமையும் இனிமையும் உடையவை.

பொதுமறை - திருக்குறள். தொன்மொழி - பழஞ் சிறப்பு வாய்ந்த தமிழ்மொழி. நிகர் - ஒப்பு. அற்ற - இல் லாத. உய்வாம் - துன்பமின்றி வாழ்வோம்.

வினாக்கள்

1. தெய்வத்தின் தன்மைகளைக் குறித்துத் திரு. வி. க அவர்கள் கூறுவதென்ன?

2. முருகனின் இயல்புகள் யாவை?

3. திருமகன் தலைவன் யார்? அவன் தன்மைகள் யாவை?

4. கதிரவனின் பரந்த ஒளியைப் பாரதிதாசனார் எவ் வாறு வருணிக்கின்றார்?

5. தமிழ் மொழியின் பெருமைகள் யாவை?

பயிற்சி

1. சராசரம், அன்பருள், தொன்மொழி, மலரடி இளஞ் செல்வி - இவற்றைப் பதம் பிரித்துக் கூறுக.

2. எதிர்ப்பதம் தருக: உரு, ஒருமை, இலதாய், கடந்து, பழமை.

3. முதற் செய்யுளின் திரண்ட பொருளை உரை நடைப்படுத்தி எழுதுக.

II. நீதிப் பகுதி

1. ஆசாரக் கோவை

நன்றி யறிதல், பொறையுடைமை, இன்சொல்லோ(டு)
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோ(டு)
ஒப்புர வாற்ற அறிதல், அறிவுடைமை,
நல்லினத் தாரோடு நட்டல், இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1

நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் ; உமியார் : திளையார் : விளையாடார் :
காய்ந்த தெனினும் தலையொழிந் தாடாரே
ஆய்ந்த அறிவி னவர். 2

காலினீர் நீங்காமை உண்டிடுக : பள்ளியும்
ஈரம் புலராமை ஏறற்க : என்பதே
பேரறி வாளர் துணிபு. 3

கிடந்துண்ணார்: நின்றுண்ணார்: வெள்ளிடையு [முண்ணார் :
சிறந்துமிக உண்ணார் ; கட்டில்மே லுண்ணார் ;
இறந்தொன்றும் தின்னற்க நின்று. 4

கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வந் தொழுது,
வடக்கொடு கோணம் தலைசெய்யார், மீக்கோள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி. 5

பழியார் : இழியார் ; பலருள் உறங்கார் :
இசையாத நேர்ந்து காவார் : இசைவின்றி
இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார் ; தள்ளியும்
தாங்கருங் கேள்வி யவர். 6

படிறும், பயனிலவும், பட்டி புரையும்,
வசையும், புறனும், உரையாரே என்றும்
அசையாத உள்ளத் தவர். 7

—பெருவாயின் முள்ளியார்

குறிப்புரை

இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் கடைச் சங்க காலப் புலவர்.

1. பொறையுடைமை - பொறுத்துக் கொள்ளுதல். ஒப்புரவு - உபகாரம். நட்டல் - நட்புக்கொள்ளுதல்.

2. நெறிப்பட்டார் - நல்லவழியில் நடப்போர். என்ஞான்றும் - எப்போதும். இளையார் - (தண்ணீரைக்) குடையமாட்டார். காய்ந்து - காய்ச்சலடித்தது. தலை ஒழிந்து - தலை நீங்க. ஆடார் - குளிக்கமாட்டார். ஆய்ந்த - ஆராய்ந்து தெளிந்த.

3. நீங்காமை - நீங்குவதற்கு முன் (கால் கழுவிய உடனே), புலராமை - உலராமல். ஏறற்க ஏறலாகாது. துணிபு - கொள்கை.

4. கிடந்து - படுத்து. வெள்ளிடையும் - வெட்ட வெளியிலும். இறந்து - அளவுக்கு மிஞ்சி.

5. கிடக்குங்கால் - படுக்கும்பொழுது, கோணம் - மூலைத் திக்குகள். வடகிழக்கு, வடமேற்கு முதலியன. தலை செய்யார் - தலையை வையார். மீக்கோள் - மேர்போர்வை. சேர்தல் - படுத்துக்கொள்ளுதல்.

6. எள்ளி - இழித்து. இல்லார் - ஏழைகள்.

7. படிறு - பொய். வசை - இகழ்ச்சி. புறன் - புறங் கூறுதல்.

வினாக்கள்

1. ஆசார வித்துக்கள் யாவை?
2. குளிக்கும்போது கவனிக்கவேண்டுவன யாவை?
3. பேரறிவாளர் கொள்கை யாது?
4. உண்ணும்போது என்னென்ன செய்யலாகாது?
5. படுக்கும்போது என்னென்ன கவனிக்க வேண்டும்?
6. சிறந்த கேள்விச் செல்வமுடையார் தன்மைகள் யாவை?
7. அறியாத உள்ளத்தவர் என்னென்ன உரையார்?

பயிற்சி

1. எஞ்ஞான்றும், தலையொழிந்து, பேரறிவாளர், இசைவின்றி, எள்ளி - இவற்றை நும் சொந்த வாக்கியங் களில் அமைத்துக் கூறுக.

2. இன்னாத, இன்சொல், நன்னிலம், இல்லார், வசை- இவற்றின் எதிர்ச் சொற்கள் கூறுக.

3. பொறை, திளையார், ஆய்ந்த, இறந்து, கோணம், படிறு - இவற்றின் பொருள் கூறுக.

4. நன்றி + அறிதல், ஒப்புரவு + ஆற்றல், தெய்வம் + தொழுது. காய்ந்தது + எனினும் - இவற்றைச் சேர்த்து எழுதுக.

5. 'ஆசாரக் கோவை' என்னும் தலைப்பில் நும் பாடப் பகுதியில் வந்துள்ள செய்யுட்களின் திரண்ட கருத்துக்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.

2. நீதி வெண்பா

ஈக்கு விடந்தலையில் எய்தும்; இருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே; துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். 1

கொம்புளதற் கைந்து, குதிரைக்குப் பத்துமுழம்,
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே;—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. 2

சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர்; ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே; விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டே ஒலி? 3

மனம்வேறு; சொல்வேறு; மன்னுதொழில் வேறு;
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே,
மனமொன்று; சொல்லொன்று; வான்பொருளும்ஒன்றே
கனமொன்று மேலவர்தங் கண். 4

வாகுநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ? கூறு. 5

உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே:
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே;—முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமர்; அவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து. 6

கல்லார் பலர் கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ? விளம்பு. 7

—ஔவையார்

குறிப்புரை

பற்பல நீதிகளைக் கூறும் வெண்பாக்களால் ஆகிய நூலாகையால் இதற்கு இப்பெயர் வந்தது. இதனை இயற்றியவர் ஔவையார். சிலர் இந்நூலை இயற்றிய ஆசிரியர் இன்னார் என்று விளங்கவில்லை என்றும், இந்நூல் 'நீதி சாத்திரம்' முதலிய வடமொழி நூல்களின் மொழி பெயர்ப்பு என்றும் கூறுகின்றனர்.

1. இருந்தோள் - பெரிய தோள். வாய்த்த - பொருந்திய. பசுமை+கண்=பைங்கண். துர்ச்சனர் - தீயோர். அங்கம் - உடம்பு.

2. வெம்புகரி - கோபிக்கின்ற யானை. வம்பு செறி - கொடுமை நிறைந்த. நெறி-முறை.

3. ஒண்கலம் - ஒள்ளிய பாத்திரம். சிலுசிலுப்பர் - படபடத்துப் பேசுவர்.

4. மனம் - எண்ணம். வினைவேறுபட்டவர் - தீவினையுடையோர். வான் பொருள் - சிறந்த பொருள். கனம் - பெருமை.

5. வாக்கு நயம் - சொல்லினிமை. நீடு - நீண்ட. ஆக்கை நயம் - வடிவத்தின் தன்மை.

6. மானுவர் - ஒப்பர். அதமர் - அற்பர். முத்து அலரும்-முத்தைப்போல் மலருகின்ற. கமுகு-பாக்குமரம். தேங்கதலி - இனிய வாழை மரம்.

7. அல் ஆரும்-இரவில் தோன்றுகின்ற. எண்ணிலா வான் மீன் - அளவில்லாத நட்சத்திரங்கள்.

வினாக்கள்

1. 'எவ்வெவற்றுக்கு எங்கெங்கே விடம் உண்டு.

2. 'தீயாரைத் தூரத்தில் காணும்போதே நீங்குவது நல்லது' ஏன்?

3. வெண்கலமும், பொற்கலமும் போன்றோர் யார்? எப்படி?

4. தீயோரிடத்தும் மேலோரிடத்தும் காணப்படும் தன்மைகள் யாவை?

5. கற்றோரையும் கல்லாரையும் அறிவது எப்படி? எவைபோல?

6. உத்தமர், மத்திமர், அற்பர் தன்மைகள் யாவை?

7. 'கல்லார் பலர் சேரினும் கற்றோர் ஒருவருக்கு ஒப்பாகார்?—இதற்குக் காட்டப்பட்ட உவமையை விளக்குக.

பயிற்சி

1. ஆறும் செய்யுளின் எழுவாய்ப் பயனிலை செயப்படு பொருள்களை எடுத்து எழுதுக.

2. பைங்கண், நோக்கரிய, சிறு குயில், முத்தலரும், அல்லாரும்—இவற்றைப் பதம் பிரித்துக் கூறுக.

3. நீதி வெண்பாவில் குறிப்பிடப்பட்ட அற்பர் தன்மைகளையும், உத்தமர் தன்மைகளையும் தனித்தனிக் கட்டுரைகளாகப் பிரித்து எழுதுக.

4. நீதிவெண்பாச் செய்யுட்களில் உள்ள கருத்துக்கள் அடங்கியனவாக நுமக்குத் தெரிந்த பழமொழிகளைக் கூறுக.

3. திரிகடுகம்

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்,—பாத்துண்ணும்
தன்மை யிலாளர் அயலிருப்பும், இம்மூன்றும்
நன்மை பயத்த லில. 1

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றுனும்-உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும், இம்மூவர்
சாவா உடம்பெய்தி னூர். 2

வருவாயுள் கால்வழங்கி வாழ்தல், செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை,—எய்தப்
பலநாடி நல்லவை கற்றல், இம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். 3

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும், இம்மூன்றுஞ்
செல்வ முடைக்கும் படை. 4

வைததனை யின்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்,—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும், இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டு வாழ்வார். 5

அருளினை நெஞ்சத் தடைகொடா தானும்,
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்,
இறந்தின்னு சொல்லகிற் பானுமிம் மூவர்
பிறந்தும் பிறந்திலா தார். 6

ஈதற்குச் செய்க பொருளை, அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை,—யாதும்
அருள் புரிந்து சொல்லுக சொல்லை, யிம் மூன்றும்
இருள்உலகம் சேராத வாறு. 7

—நல்லாதனார்

குறிப்புரை

சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று பொருள்களால் ஆகிய காரமான மருந்து ஒருவர் உடல் நோயை மாற்றி இன்பம் புரிவதுபோல ஒவ்வொரு பாட்டிலும் அமைந்த மும்மூன்று கருத்துக்களும் உள நோயாகிய அறியாமையைப் போக்கி நன்மை புரிவதால் இந்நூலுக்குத் திரிகடுகம் என்று பெயர். இந் நூலாசிரியராகிய நல்லாதனார் வைணவ சமயத்தவர். இவர் இற்றைக்கு 1,800 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

1. கணக்காயர் - ஆசிரியர். பிணக்கு - மாறுபாடு. பாத்து - பகுத்து.

2. வான் புகழ் - சிறந்த புகழ். நட்டான் - நிலை நிறுத்தியவன். கூவல் - கிணறு. தொட்டான் - தோண்டியவன்.

3. கால் - கால் பகுதி. செரு - போர்.

4. தருக்கல் - செருக்குக் கொள்ளுதல். கொன்னே - வீணாக. முன்னிய - முற்பட்ட. வெஃகும் - விரும்பும்.

5. நெய் பெய்த - நெய் ஊற்றப் பெற்ற. நாடா - விரும்பாத. ஊறிய - ஊறும்படியான. கைப்பு - கசக்கின்ற பொருள். மெய்ப்பொருள் - உண்மையான பரம்பொருள்.

6. துவ்வான் - அனுபவியாமல். இறந்து - தன் நிலைகடந்து.

7. செய்க - தேடவேண்டும். பெருநூல் - பெருமையாகிய நூல். இருள் உலகம் - நரக உலகம்.

வினாக்கள்

1. நன்மை பயவாதவை எவை?
2. சாவா உடம்பை எய்துபவர் யாவர்?
3. நல்லவர் கொள்கைகள் யாவை?
4. செல்வத்தை அழிக்கும் படைகள் எவை?
5. மெய்ப்பொருள் கண்டு வாழ்பவர் யாவர்?
6. பிறந்தும் பிறவாதவர் யாவர்?
7. நரகத்திற் சேராமைக்கு என்னென்ன செய்தல் வேண்டும்?

பயிற்சி

1. குறைவின்றி, பயத்தல், வழங்கி, முன்னிய, மாட்சி, மெய்ப்பொருள் - இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. பிணக்கு, சிறுமை, வாழ்வார், சாவா, கைப்பு, செய்க - இவற்றின் எதிர்ப்பதங்கள் சொல்லுக.

3. அயலிருப்பு, குறைவின்றி, உடம்பெய்தினர், சிறப்புடைமை, பல் பொருள், அறநெறி - இவற்றைப் பதம் பிரித்துக் கூறுக.

4. பொருள் கூறுக :—கணக்காயர், பாத்துண்ணும், கூவல், செரு, வெஃகும், இருளுலகம்.

5. திரிகடுகச் செய்யுட் பகுதியை எங்கள் சொந்த வாக்கியங்களில் உரைநடைப் படுத்தி எழுதுக.

4. திருக்குறள்

(அரசியலாரால் குறிப்பிடப் பெற்றவை)

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 1

அறத்தான் வருவதே இன்பம் ; மற் றெல்லாம்
புறத்த ; புகழும் இல. 2

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். 3

அன்பின் வழிய(து) உயிர்நிலை அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு. 4

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 5

அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன் அமர்ந்து
நல்விருந்(து)ஓம்புவான் இல். 6

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ; ஒருவற்(கு)
அணிஅல்ல ; மற்றுப் பிற. 7

காலத்தி னாற்செய்த நன்றி சிறி(து) எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 8

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் ; பேணிப்
பிறவும் தமபோல் செயின். 9

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் ; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 10

ஒழுக்கம் உடைமை குடிமை ; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 11

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை : இழுக்கத்தின
எய்துவர் எய்தாப் பழி. 12

ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 13

அழுக்கா(று) எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 14

அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன் அறிந்(து) ஆங்கே திரு. 15

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் ; நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 16

இலன்என்று தீயவை செய்யற்க ; செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து. 17

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கட் படின். 18

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 19

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு. 20

வான்உயர் தோற்றம் எவன்செய்யும் ? தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். 21

உள்ளத்தால் உள்ளலும் தீதே ; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 22

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 23

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் : தீய
பிறத்தல் அதனால் வரும். 24

பிறர்க்(கு) இன்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 25

அஞ்சாமை, ஈகை, அறி(வு), ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்(கு) இயல்பு. 26

கண்ணுடையர் என்பவர் கற்றோர் : முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 27

தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி ; மாந்தர்க்குக்
கற்றனைத்(து) ஊறும் அறிவு. 28

அரங்(கு)இன்றி வட்(டு)ஆடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல். 29

எனைத்தானும் நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 30

அறிவுடையார் ஆவ(து) அறிவார் ; அறிவிலார்
அஃ(து)அறி கல்லா தவர். 31

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு? 32

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 33

மனத்தான்ஆம் மாந்தர்க்(கு) உணர்ச்சி ; இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல். 34

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 35

கொக்(கு)ஒக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
குத்(து)ஒக்க சீர்த்த இடத்து. 36

நெடும்புனலுள் வெல்லும் முதலை ; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 37

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 38

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்(கு)உடையார் மாநிலத் தில். 39

அரியவென்(று) ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின். 40

வேலன்று வென்றி தருவது; மன்னவன்
கோல்; அதூஉம் கோடா(து) எனின். 41

துளியின்மை ஞாலத்திற்(கு) எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. 42

உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும். 43

மடிமை குடிமைக்கண் தங்கிற்றன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும். 44

அருமை உடைத்தென்(று) அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 45

இன்பம் விழையான் இடும்பை இயல்(பு) என்பான்
துன்பம் உறுதல் இலன். 46

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட(து) அமைச்சு. 47

பழிமலைந்(து) எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. 48

எண்ணிய எண்ணியாங்(கு) எய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். 49

சூழ்ச்சி முடிவு துணி(வு) எய்தல்; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 50

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 51

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. 52

நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. 53

மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்(று) ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 54

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 55

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 56

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். 57

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்(பு) ஊன்றிய தூண். 58

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 59

இரவார் இரப்பார்க்கொன்(று) ஈவர்; கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 60

—திருவள்ளுவர்

குறிப்புரை

சிந்தைக்கும் செவிக்கும் இனியது திருக்குறள். இது எல்லோருக்கும் எக்காலத்துக்கும் பொதுவான நீதிகளைக் கூறும் நூலாகும். இது குறுகிய செய்யுட்களால் அரிய கருத்துக்களைக் கூறும் திறம் உடையது இதனை இயற்றிய திருவள்ளுவர் சென்னையில் உள்ள மயிலாப்பூரில் தோன்றி னார். இவர் தந்தையார் பகவன். தாயார் ஆதி. இவர் நெசவுத் தொழிலை மேற்கொண்டார். இவர் கடைச் சங்க காலத்தவர்.

1. உவமை - ஒப்பு. தாள் - திருவடிகளை. மாற்றல் - போக்குதல்.

2. மற்று எல்லாம் - அரத்தாலன்றி வரும் இன்பங்களெல்லாம். புறத்த - வேறானவை (துன்பமாகும்).

3. ஈன்ற - பெற்ற. சான்றோன் - அறிவில் பெரியோன்.

4. இலார் - இலாதவர். போர்த்த - மூடிய.

5. தாழ் - தாழ்ப்பாள். ஆர்வலர் - அன்பு காட்டப் பெற்றவர். புன் கண்ணீர் - கண்களிலிருந்து வரும் சிறிய நீர்த்துளிகள்.

6. அகன் - அகம். முகன் - முகம், போலிகள். இல் - வீடு. செய்யாள் - இலக்குமி.

7. அணி - நகை. பிற - பொன்னாலும் மணியாலும் ஆன நகைகள்.

8. ஞாலத்தின் - உலகைவிட. மாண - மிகவும்.

9. வாணிகம் - வியாபாரம் - பிறவும் - மற்றவர் பொருளும்.

10. தகைத்து - சிறந்த தன்மையுடையது. பணிதல் - அடக்கமாக இருத்தல்.

11. குடிமை - குடிப்பிறப்பு. இழுக்கம் - ஒழுக்கம் தவறுதல்.

12. எய்துவர் - அடைவர். எய்தா - அடையத்தகாத.

13. ஒருத்தார்க்கு - தண்டித்தவர்களுக்கு. பொன்றும் - அழியும். துணையும் - வரையில்.

14. அழுக்காறு - பொறாமை. பாவி - பாவிக்குணம், செற்று - அழித்து. தீ உழி - நரகம். உய்த்துவிடும் - தள்ளிவிடும்.

15. அறன் - அறம், போலி. வெஃகா - விரும்பாத, திறன் - வகை. திரு - செல்வம்.

16. நகை - இனிமையாக, ஆடல் - கொள்ளுதல். தேற்றுதவர் - அறியாதவர்.

17. இலன் - ஏழை. மற்றும் பெயர்த்து - மேலும் மேலும்.

18. நயன் - உதவி. படின் - இருப்பின்.

19. தாம் உடைமை - தம் செல்வம். வன்கணவர் - கருணை யற்றவர்.

20. இசை - புகழ். ஊதியம் - பயன்.

21. படின் - பொருந்தினால். எவன் செய்யும்?- என்ன பயனைச் செய்யும்?

22. உள்ளலும் - நினைத்தலும். கள்வேம் - வஞ்சிப்போம்.

23. சான்றோர் - அறிவிற் சிறந்தோர். பொய்யா - பொய்யாத.

24. வெகுளி - சினம். யார் மாட்டும் - எவரிடத்தும் அதனால் - அக்கோபத்தால்.

25. முற்பகல்-முன்னே. பிற்பகல் - பின்னே. இன்னா-துன்பம்.

26. ஊக்கம் - மன எழுச்சி. எஞ்சாமை-குறையாமை.

27. கண் உடையார் - கண்ணை உடையவர். கற்றோர் கண் உடையவர்; கல்லாதவர் புண்ணுடையவர் என்பது கருத்து.

28. தொட்டனைத்து - தோண்டிய அளவு. கற்றனைத்து - படித்த அளவு. கேணி - ஊற்று. ஊறும் - சுரக்கும்.

29. அரங்கு - கூடம். வட்டு வட்டமாகிய ஆடும் கட்டம். கோட்டிகொளல் - சபையில் பேசல்.

30. ஆன்ற - நிறைந்த. அனைத்தாலும் - அவ்வளவு சிறியதாயினும்.

31. அறிவுடையார் - அறிஞர். ஆவது-பின்னால் வருவது. கல்லாதவர் - படிக்காதவர்.

32. காண்கிற்பின்-காணின். இறைக்கு-தலைவனுக்கு.

33. தமர் - உறவினர். வலிமையுள் - பலத்துள்.

34. உணர்ச்சி-அறிவு. இன்னான்-இப்படிப்பட்டவன்.

35. பீலி - மயிலிறகு. சாகாடு - வண்டி.

36. கூம்பும் பருவம் - அடங்கி இருக்கும் காலம். சேர்ந்த இடத்து - சமயம் வந்த போது.

37. நெடும்புனல் - ஆழமான நீர். அடும் - கொல்லும்.

38. ஏனை - மற்ற. கருமம் - செயல். கட்டளைக்கல் - பொன்னின் மாற்று உரைக்கும் கல். சிறுமை - தாழ்மை.

39. பேணான் - விரும்பான். மருங்கு - அண்மை. இல் - இல்லை.

40. பொச்சாவா - மறவாத. போற்றி - எண்ணி.

41. வென்றி - வெற்றி. கோல் - ஆட்சி. கோடாது - கொடுங்கோல் ஆகாமல்.

42. ஞாலம் - உலகம். துளி - மழைத்துளி. அளி - அருள். எற்று - எத்தன்மை உடையது.

43. உள்ளம் - முயற்சி.

44. மடிமை - சோம்பல். ஒன்னார் - பகைவர்.

45. அசாவாமை - மனம் தளராமை.

46. இடுக்கண் அழியாமை - துன்பத்திற்கு வருந்தாமை. விழையான் - விரும்பாதவனாக. இலன் - இல்லை.

47. வன்கண் - உறுதியான தன்மை. ஆள்வினை - முயற்சி. மாண்டது - மாட்சிமை உடையது.

48. மலைந்து - மிகுந்து. ஆக்கம் - செல்வம். நல்குரவு - வறுமை. கழி - மிக.

49. திண்ணியர் - மன உறுதியுடையவர். எய்துப - அடையவர்.

50. சூழ்ச்சி - ஆலோசனை.

51. பளிங்குபோல் - கண்ணாடிபோல். கடுத்தது - தோன்றியது.

52. தள்ளா - தவறாத. விளையுள் - விளைவு. தக்கார் - அறவோர்.

53. நிறை - முழுமை. நீர - தன்மையான. கேண்மை - நட்பு. பேதையர் - மூடர். பின் - தேய்பிறை.

54. மருவுக - கொள்க. மாசு - குற்றம். ஒருவுக - தள்ளுக.

55. குடி - நற்குடி. குன்றுவ - இழந்தவை. அடுக்கிய - பல.

56. நீப்பின் - நீங்கினால். மா - மிருகம். அன்னார் - போன்றவர். நீப்பர் - விடுவர்.

57. மேல் அல்லார் - தாழ்ந்தோர். மேல் - உயரிய இடம். கீழ் அல்லார் - உயர்ந்தோர். கீழ் - தாழ்ந்த இடம்.

58. நாண் - அச்சம். ஒப்புரவு - உபகாரம். கண்ணோட்டம் - தாட்சண்யம். சால்பு - பெருந்தன்மை.

59. குடி - குடிமை. சுற்றமா - சுற்றமாக. உலகு - உலக மக்கள்.

60. இரவார் - யாசிக்க மாட்டார். கரவாது-ஒளிக்காமல். உண் மாலையவர் - உண்பவர்.

III. வரலாற்றுப் பகுதி

கட்ட பொம்மு கும்மி

ஆரும் அறியாம லேயிருக்க அந்த
சாமத்தில் பிற்கட்டுக் காலன் துரை
வீர நகரெனும் பாஞ்சைப் பதிதனை
வெல்லலாம் என்று விரைந்தடைந்தான். 1

மூளை பிடுங்கி உயிர்குடிப்பான் கட்ட
பொம்மு முரசம் முழங்கு வித்தான் ;
வேளை விடியட்டும் பீரங்கி குண்டிட்டு
வேரறுப்போ மென்று காலன எண்ணி, 2

நேரும் குதிரை அணி யணியாய் வைத்து
நீளிட்ட செண்டாக கொடியும் நட்டுக்
காரும் கடல்போல் நிறைந்த பட்டாளங்கள்
கம்மென் றிருந்த விடியு மட்டும் 3

மாமன் கெடிவேட்டூர் நாயக்க ருடன்வடி
வாளுடை வீரர் சிலர் திரண்டு
சோமன் செகவீர ராமக கட்டபொம்மைச்
சூழ்ந்து படைநிலை சோர்ந்து சொன்னார். 4

அப்படி அன்னவர் சொன்னவுடன் ஆண்ட
கட்ட பொம்மு துரை திட்ட மதாய்
முப்புரம் எரித்த ஈசுரன் ஈன்ற
முருகன் நமக்குத் துணையுண்டென்றார். 5

'கற்பித்' வன் நம்மைக் காப்பானென் றேகதை
சொல்லுவார் நல்லோர் பெரியோர்கள் :
சுப்ரமண் யத்தெய்வம் உண்டு நமக்குத்
துணைசெய்யும் சக்கம்மா தேவியுமே. 6

'ஏகச் சமுத்திரம் என்படை என்சனம்
இல்லையென்று வந்தான் காலன் துரை?
சாகத்து ணிந்தவ னுக்குச்ச முத்திரம்
தன்முழங் காலள வென்றுரைப்பார், 7

நூறுக்கெழுதி முகித்த பிரமன் பின்
ஆறுக் கெழுது வானோ அழித்து?
போருக்கு வந்தவர் பாருக் கிரையாகப்
போன்றிட வென்று புகழ்கொள்ளுவேன். 8

தோடாய மாக இருக்கின்றேன் என்றல்லோ
தொங்கலில் பிற்கட்டு காலன் வந்தான்?
நாடாமல் பட்டாளம் ஓட அடித்துமே
நாட்டில் திசைக்கம்பம் நாட்டுகிறேன். 9

காலனைக்கொல்கிறேன்; பிற்கட்டை வெல்கிறேன்;
கண்ட துண்டப் படை பட்டு விழ
மூலப லச்சண்டை வாய்ந்தது போல்சக
தேவிமுன் னிற்க அடித்தொழிப்பேன். 10

குறிப்புரை

நம் நாட்டில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து 1857-இல் வட இந்தியாவில் சிப்பாய்க் கலகம் என்று ஒரு பெரும் போர் நடந்தது. ஆனால் தமிழ் நாட்டில் அப்போர் நடப்பதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னரே உரிமை

உணர்ச்சிகொண்டு வெள்ளேயரை எதிர்த்த வீரன் ஒருவன் இருந்தான். அவன் பாஞ்சாலக்குறிச்சியை ஆண்ட கட்ட பொம்மன் என்னும் பாளேயக்காரன். ஆங்கிலேயர் அவனேக் கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கிவிட்டுக் கொன்றனர். அவ்வீரன் வெள்ளேயர் முற்றுகையைத் தன் மாமன் மூலம் அறிந்து கூறிய வீரவுரைகள் நம் பாடப் பகுதியில் வந்துள்ளன.

அத்த சாமம் - நள்ளிரவு. பாஞ்சைப்பதி - பாஞ்சாலக் குறிச்சி என்னும் ஊர். வடி - கூர்மையாக்கப்பட்ட. முப் புரம்-திரிபுரம், மூன்று மதில்கள். கற்பித்தவன் - படைத் தவன். சங்கம்மாதேவி-கட்டபொம்மன் வழிபடும் தெய்வத் தின் பெயர். பொன்றிட-அழிய. தோடாயமாக - இளேத் தவன்போல. திசைக்கம்பம் - வெற்றிக்கம்பம். தொங் கலில் - முடிவில்.

வினுக்கள்

1. இப்பாடலில் வந்திருக்கும் பழமொழிகளே எடுத்து எழுதுக.
2. பாஞ்சாலக்குறிச்சிமீது படையெடுத்துச் சென்ற வர் யார்?
3. பிற்கட்டுகாலன் வருகையை அறிந்து கட்ட பொம்மன் கூறிய வீர உரைகளேக் தொகுத்து எழுதுக.
4. கட்டபொம்மன் வழிபடும் கடவுளர் யாவர்?

பயிற்சி

கீழ்வரும் சொற்களே வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

1. வேரறுப்போம், கம்மென்று, கண்டதுண்டமாக, தோடயமாக, தொங்கலில்.
2. இப்பாடற் பகுதியை உரைநடைப்படுத்தி எழுதுக.

IV. கதைப் பகுதி

1. நரிக்குட்டி

குட்டிகள் இரண்டுடைக் கொடிய கேசரி
பெட்டையை நோக்கியுன் பிள்ளை கட்குறைத்
தட்டற ஈகுவன் தனிவி டாது நீ
மட்டறும் அன்பினால் வளர்த்தி யாலென்றே. 1

உறுமுணை(வு) அளித்துவாழ் நாளில் ஓர்தினம்
சிறுநரிக் குட்டியைப் பற்றிச் சென்றிதைக்
கறியெனக் கொள்கவென்(று) அளிப்பக் கண்டிது
பெறுமழ குடைத்தெனப் பெட்டை யெண்ணியே. 2

குறியதங் குட்டிக ளோடுங் கூட்டியே
நறியவூன் உணவினைத் தந்து நாடொறும்
பிரிவற வளர்த்திட வளர்ந்த பின்னோர்நாள்
அறிவுறு மூன்றுமங் கடவி புக்கவே. 3

நண்ணியோர் கரிதனை நரியின் குட்டிதான்
கண்ணுற நோக்கியே ஓடக் கண்டிடம்
அண்ணிமற் றிரண்டும்பின் னதனை நோக்கியே
ஒண்ணுமோ ஓடுதல் உனக்கென் றேசலும். 4

நரிபெறு குட்டியும் வலியி னான்மிகப்
பெரியனென் றுறுகலாம் புரியப் பின்பிதைப்
பரிவொடு வளர்த்தபெண் சிங்கம் பார்த்திது
தெரிவிலா துரைத்தனை செய்தி கேளென. 5

" நீயொரு சம்புவின் குட்டி நின்னைநான்
மாய்வில்லென் குட்டிக ளொடும்வ ளர்த்தனன்
தீயநின் குலந்தனைத் தெரியி னென்மகார்
காய்வரென் றுரைத்தலுங் கடிதின் நீங்கிற்றே. 6

—வீரமார்த்தாண்ட தேவர்

குறிப்புரை

இப் பாடல் வீரமார்த்தாண்ட தேவர் எழுதிய பஞ்ச தந்திரப் பாடலிலிருந்து எடுக்கப்பட்டது. இந்நூலில் வீர மார்த்தாண்ட தேவர் ஐந்து உபாயங்களை அமைத்துக் கதைப் பாடல்கள் இயற்றியுள்ளார். இவர் எல்லோருக்கும் எளிதாக விளங்கும் வண்ணம் கவி இயற்றுவதில் வல்லவர். நட்பின் பேறு, நட்புப் பிரித்தல், அடுத்துக் கெடுத்தல், நன்மைக்குத் தீமை, ஆராயாது செயல் ஆகிய இவை ஐந்து தந்திரங்களாகும். பஞ்சதந்திரப் பாடல் கதைகளையெல்லாம் வித்துவான் தாண்டவராய முதலியார் என்பவர் உரைநடையில் எழுதியுள்ளார்.

1. கேசரி - சிங்கம். உணா - உணவு. தட்டற - தடையின்றி. மட்டறு - அளவற்ற.

2. உறு - தகுந்த. அளிப்ப - கொடுக்க. பெட்டை - பெண் (சிங்கம்)

3. குறிய - சிறிய. நறிய - வாசனை தங்கிய. ஊன் - மாமிசம். பிரிவற - விட்டு நீங்காது. அடவி - காடு. புக்க - புகுந்தன.

4. நண்ணி - அடைந்து. கரி - யானை, கண்ணுற - கண்கள் பொருந்த. அண்ணி - நெருங்கி. ஒண்ணுமோ? - தகுமோ? ஏசலும் - ஏளனஞ் செய்ய.

5. வலியினால் - ஆற்றலினால். உறு - பொருந்திய. கலாம் - கலகம். புரிய - செய்ய. பரிவு - அன்பு. தெரிவிலாது - அறியாமல்.

6. சம்பு - நரி. மாய்வுஇல் - அழிவு இல்லாத. மகார் - குழந்தைகள். காய்வர் - கோபிப்பர். கடிதின் - விரைவில்.

வினாக்கள்

1. ஆண் சிங்கம் தன் பெட்டையை நோக்கிக் கூறியது யாது?

2. ஒருநாள் ஆண் சிங்கம் என்ன கொண்டு வந்தது? பெண் சிங்கத்தை நோக்கி என்ன கூறிற்று?

3. காட்டுக்குச் சென்ற குட்டிகள் கண்டதென்ன?

4. நரிக்குட்டி என்ன செய்தது?

5. பெண் சிங்கம் கூறியது யாது?

6. இக் கதையினால் நீ அறிவது யாது?

பயிற்சி

1. இக் கதையை நும் சொந்த நடையில் அமைத்து எழுதுக.

2. இவ் வரலாற்றை நரிக்குட்டியே கூறுவதுபோல உரைநடையில் மாற்றி எழுதுக.

3. இப்பாடத்தில் உள்ள பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்றுக்களை எடுத்து எழுதுக.

4. இப்பாடத்தில் உள்ள பெயர்ச்சொற்களை எடுத்து அவை, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்— இவற்றில் இன்னின்ன வகையைச் சேர்ந்தவை என்று பிரித்து எழுதுக.

2. பிள்ளையும் கிள்ளையும்

பிள்ளை

'தேன்பழச் சோலை பயிலும் சிறுகிளியே!
வான்பழித் திங்ஙனே வாராயோ—யான் செய்த
பொன்னனை கூட்டிற் புகுந்து மகிழ்வுடனே
என்னோடு வாழ்வாய் இனிது. 1

கிள்ளை

என்றன் வரவை எதிர்நோக்கு நற்பிள்ளாய்!
தென்ற லுலவு தருவிட்டு—நின்றன்
பொலன்கூட்டில் தங்கிப் புழுங்கி வருந்தல்
நலமாமோ வென்னோ நவில்? 2

பிள்ளை

கொய்யாப பழமுண்டு ; கொவ்வைக் கனியுண்டு ;
தூய்யநற் பாலும் தெளிதேனும்—பையவே
இன்ன பலவுண்டே என்னேடினி திருந்தால்
என்னை வுனக்கே இடர் ? 3

கிள்ளை

கொய்யாப் பழம்வேண்டேன் ; கொவ்வைக் கனி
[வேண்டேன்;
துய்யதேன் பாலும் சுவைபாரேன்—செய்யவிப்
பூங்காவி லுள்ளநற் றீங்கனிக ளுண்டாலே
ஓங்குமே உள்ள வுவப்பு. 4

பிள்ளை

மெத்தென வேயுனக்கோர் மென்மலர்ப் பள்ளிதனைச்
சித்தஞ்செய் துள்ளேன் சிறுகூட்டில்—நித்தம்
இனிய மொழிக ளிசைத்துமே யென்னை
நனிமகிழச் செய்வாய் நயந்து. 5

கிள்ளை

மெத்தென வேயெனக்கோர் மென்மலர்ப் பள்ளிதனைச்
சித்தஞ்செய் தாயிச் சிறுபொந்தில்—எத்தினமும்
வாடாத பஞ்சினு லானவென் கூட்டிற்கே
ஈடாமோ வென்ன இயம்பு? 6

பிள்ளை

என்தம்பி, என்னண்ணன், எல்லாருஞ் சேர்ந்துன்றன்
இன்சொல் லினைக்கேட் டினிதிருப்போம்—நன்ருக
எங்கள் குழுவினரோ டென்றும் விளையாடித்
தங்குவா யிக்கூட்டில் தான். 7

கிள்ளை

உங்கள் குழுவினரோ டோடி விளையாடின்
எங்கள்பெற் றோர்க ளெனைக்காணு—திங்குமங்கும்
தேடித் திரிந்து தியங்குவ ராதலால்
நாடி யுமைச்சேரேன் நான். 8

பிள்ளை

பச்சைக் கிளியே, பனிக்காலம் வந்துற்றால்
இச்சைகொண் டெவ்விடத்தே யேகுவாய்?—அச்சமே
தாங்கிக் குளிரால் தவித்துப் பலவிடத்தும்
ஏங்கியென் செய்வாய் இனி? 9

கிள்ளை

பண்ணார் மொழிப்பிள்ளாய்! பணபுள் ளவென் னிறக்கை
தண்ணார் குளிரையுடன் தாங்காதோ?—நண்ணுபிற
வெந்நாடு நோக்கி விரைந்தே பறந்திடுவேன்
தண்ணாட் டினையே தவிர்த்து. 10

பிள்ளை

வெப்பநா டுன்னி விரைந்துசெலு மாற்றலுளாய்,
அப்பதிசெல் லாறுனக் காருரைப்பார்—செப்புமென்
இன்மொழிகேட் டிங்குற்று வின்னலொன் றுமில்லாமல்
நன்றுறைய லாமலவோ நாம்? 11

கிள்ளை

காதம் பலவாக் கடந்தமைந்த நாடெனினும்
ஏதுமில் லாமலே யென்றனுக்கே—ஓதுபுகழ்
ஆண்டவனே நல்லா றருள மனங்கொண்டால்
வேண்டுமோ வேறு துணை? 12

பிள்ளை

நன்று கிளியே, நயமான வாசகமே
இன்றே உரைசெய்தா யிஃதேபோல்—என்றுமே
நீட்சியுள அக்கிளையில் நின்றே யெனக்குன்றன்
காட்சிதரு வாயே கனிந்து. 13

கிள்ளை

என்றன் சிறுசொல்லை யிவ்வளவும் கேட்டிங்கே
நின்ற சிறுமதலாய், நின் விழைவால்—என்றுமுன்
வாய்மொழி கேட்கவே வந்திங் கமர்ந்திடுவேன்.
போய்வரு கின்றேன் பொறு! 14

—வித்துவான். தணிகை. உலகநாதன்

குறிப்புரை

இச் செய்யுளைப் பாடிய வித்துவான் தணிகை உலகநாதன் அவர்கள் வடார்க்காடு ஜில்லாவில் திருவத்திபுரம் என்னும் ஊரைச் சார்ந்தவர். தற்போது சென்னை ஹிந்து தியலாஜிகல் பள்ளியில் துணையாசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

1. பயிலும் - வாசிக்கும். பொன்னுன - அழகிய.
2. தரு - மரங்கள். நவில் - சொல்.
3. துய்ய-தூய்மையான. தெளிதேன்-தெளிந்த தேன்.
4. தீம் கனி - இனிமையான பழம்.
5. இசைத்து - பேசி. நனி - மிகவும்.
6. குழுவினர் - கூட்டத்தினர்.
7. தியங்குவர் - வருந்துவர். நாடி - வரும்பி.
9. இச்சை கொண்டு - விரும்பி.

10. தண் ஆர் - குளிர்ச்சி பொருந்திய. வெந்நாடு - வெப்பமான நாடு.

11. இன்னல் - துன்பம். செப்பும் - சொல்லும்.

12. ஏதம் - துன்பம். நல் ஆறு - நல்ல வழி.

13. கனிந்து - மகிழ்ந்து.

14. மதலாய் - குழந்தாய்.

வினாக்கள்

1. சிறுவன் கிளிக்காகச் செய்துதர விரும்பும் வசதிகள் யாவை?

2. கிளி ஏன் சிறுவனுடன் இருக்க விரும்பவில்லை?

3. சிறுவன் கிளியுடன் இருக்க விரும்பியது ஏன்?

பயிற்சி

1. கிளிக்கும் சிறுவனுக்கும் உரையாடல் அமைத்து உரைநடையில் ஒரு கட்டுரை வரைக.

2. தென்றல், இனிதிருந்தால், மெத்தென, சித்தம் செய், இங்கு மங்கும், இச்சை கொண்டு—இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

3. இவ்வுரையாடலை நும் வகுப்பில் நாடகமாக நடித்துப் பயிலுக.

V. வருணனைப் பகுதி

மா

காணிக்குப் புறத்தேஓர் பதிவிட்ட
　　மாநட்டுக் கண்கா ணித்துக்
கேணித்தண் ணீர் விடுத்தேன் பின்நாளில்
　　அதன் நிழலின் கீழ்இ ருந்தேன்
மாணிக்க மாம்பழந்தான் மரகதத்தின்
　　இலைக்காம்பில் ஊஞ்ச லாடச்
சேண்எட்டும் கோலெடுத்தேன் கைப்பிடித்தேன்
　　வாய்வைத்தேன் தேன்தேன் தேனே! 1

பலா

பால்மணக்குக் கிள்ளுகின்ற பச்சையிலை
　　தங்கக்காம் படர்மி லார்கள்
வான்மணக்க உயர்ந்தகிளை அடர்ந்தபலா
　　மரத்திற்சிற் றூனைக் குட்டி
போல்மணக்கும் பலாப்பழங்கள் அண்ணுந்த
　　பொழுதினிலே புதுமை கொள்ள
மேல்மணக்கும் கிளையினிலே, நடுமணக்கும்
　　வேர்க்குள்ளும் மணக்கும் நன்றே! 2

வாழை

தாயடியில் கன்றெடுத்துத் தரையூன்றி
　　நீர்பாய்ச்சத் தளிர்த்த வாழைச்
சேயடியில் காத்திருந்தால் தெருத்திண்ணை
　　போற்பெரிய இலைகள் ஈயும்
காயடியில் பெரும்பூவும் கறிக்கீயும்
　　கடைந்தெடுத்த வெண்ணெ யோடும்
ஈயடித்தேன் கலந்துருட்டி இனியபழக்
　　குலையீயும் இந்தா என்றே. 3

—பாரதிதாசனார்

குறிப்புரை

இப்பகுதி பாரதிதாசனாரின் குடும்ப விளக்கு இரண்டாம் பகுதி(விருந்து)யிலிருந்து எடுக்கப் பெற்றது. ஆசிரியரைப் பற்றிய குறிப்புக்கள் வாழ்த்துப் பகுதியில் கூறப் பட்டுள்ளன.

1. காணி - வயல். மா - மாஞ்செடி. கண்காணித்து - காப்பாற்றி. கேணி - கிணறு. சேண் - உயரத்தில்.

2. மிலார் - சிறு கிளை. சிற்றானை - சிறிய யானை.

3. தளிர்த்த - தழைத்த. ஈயும் - கொடுக்கும்.

வினாக்கள்

1. மாமரம் தந்த பயன்கள் யாவை?

2. பலாக் கனிகள் எதுபோன்று உள்ளன?

3. பலா மரத்தின் கிளையும் இலையும் எவ்வாறு இருக்கின்றன?

4. வாழை யிலைக்கு உவமையாக ஆசிரியர் கூறுவது யாது?

5. வாழையின் பயன்கள் யாவை?

பயிற்சி

1. கண்காணித்து, ஊஞ்சலாட, புதுமை கொள்ள தளிர்த்த, கடைந்தெடுத்த—இவற்றைச் சொந்த வாக்கியங்களில் சேர்த்துக் கூறுக.

2. புறம், சேண், வான், புதுமை, சேய்—இவற்றின் எதிர்ச் சொற்களைக் குறிப்பிடுக.

3. மா, பலா, வாழை இவற்றின் பயன்களைக் குறித்துத் தனித்தனியே கட்டுரை வரைக.

VI. பலவகைப் பாடல்கள்

சிவபெருமானுக்கும் தேங்காய்க்கும் சிலேடை

கல்லால் அடியுறலால், கண்மூன் றிருப்பதால்,
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்,—வல்லோடு
கொள்ளுகையால், கங்கா குலமுத்துச் சாமிமன்னு!
கள்ளிதழி யான்நிகர்தேங் காய். 1

—அழகிய சொக்கநாதப் புலவர்

ஆநந்தரங்கம் பிள்ளையின் பெருமை

அலையான் ; கவடுபடான் ; ஆரிடத்தும் காயான் ;
இலையென்ப தென்நாளு மில்லை ;—கலைதேர்ந்த
சாலைமுத்துக் கிருஷ்ணனருள் சற்குணசிந் தாமணியைச்
சோலையென்று சொன்னவரார் ? சொல். 2

—சவ்வாதுப் புலவர்

புலவர் பெருமை

மன்னவனும் நீயோ ? வளநாடும் உன்னதோ ?
உன்னையறிந் தோதமிழை ஓதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு ? 3

—கம்பர்

தண்டின் பயன்

முனியதட்டும் : முள் தூக்கும் ; முன்னீர் அளக்கும் :
கனியுதிர்க்கும் ; கவ்வுநாய் காக்கும்—தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் ; பயந்தீர்க்கும்; பாம்படிக்கும் ;
கைத்தலத்தில் தண்டிருந்தக் கால். 4

குடையின் பயன்

பகலோன் சுடுகிரணம், பாய்பறவை யெச்சம்,
மிகமேல் படாதகற்றும்: விண்ணில்—முகிலதனால்
பெய்யுமழை தடுக்கும் ; பேரழகு மாம்ஒருவர்
கையில் குடையிருந்தக கால் 5

செருப்பின் பயன்

கல்லும் உறுத்தாது: காலிள்முள் தைக்காது ;
கல்லவெயி லின்சூடும் ஏறாது:—தொல்லைவரும்
மாலைப் பொழுதில் வழிநடக்கக் கூசாது ;
காலிற் செருப்பிருந்தக் கால் 6

எங்கள் நாடு

நீர்வளமும் நிலவளமும் நிலவிய நன்னாடு
ஏர்வளத்தின் பேர்வளத்தால் ஏற்றமுள்ள நாடு

பொற்குவையால் நெற்குவையால் புகழடைந்தநாடு
சிற்பமுடன் ஓவியங்கள் சிறந்திருந்த நாடு

வாழைபலா மாமரங்கள் வளமிகுந்த நாடு
தாழைபனை தென்னை இவை தழைத்துயர்ந்த நாடு

ஆவினத்தின் அருமையறிந் தாதரிக்கும் நாடு
கோவில்களும் கோபுரமும் கொண்டொளிரும் நாடு

மல்லியோடு முல்லைமலர் மணங்கமழும் நாடு
அல்லியோடு தாமரையின் அழகுமிகும் நாடு

பள்ளர்களும் மள்ளர்களும் பண்மிழற்றும் நாடு
வள்ளல்களும் வீரர்களும் வாழ்ந்திருந்த நாடு

கைத்தொழிலும் வாணிபமும் கற்றிருந்த நாடு
வித்தையினில் வல்லவர்கள் வீற்றிருந்த நாடு

அவ்வைதிரு வள்ளுவர்நல் லறம் உரைத்த நாடு
எவ்வெவரும் போற்றுகின்ற எங்கள் தமிழ்நாடு. 7

—பேராசிரியர் மயிலை. சிவ. முத்து

குறிப்புரை

முதல் ஆறு பாடல்களும் தனிப்பாடல் திரட்டிலிருந்து எடுக்கப் பெற்றவை.

புலவர்கள் பலராய் பற்பல காலங்களில் தத்தம் ஆற்றலும் அறிவும் விளங்கப் பாடிய பாடல்களின் தொகுதிக்குத் தனிப்பாடல் திரட்டு என்று பெயர். இவை பிற

பாடல்களோடு தொடர் இல்லாமல் தனித்து நிற்கும் பாடல்கள் ஆகும்.

பேராசிரியர் மயிலை. சிவ. முத்து அவர்கள் மாணவர்களுக்கென இனிய எளிய கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும் எழுதுவதில் வல்லவர். சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவராகப் பல்லாண்டுகளாய்ப் பணியாற்றி வருகிறார். சென்னை மாணவர் மன்றமும் இவரால் சிறந்த முறையில் போற்றப்படுகிறது.

1. கல்லால் அடியுறல் - கல்லால் உடைக்கப்படுதல், சாக்கியரால் கல்லால் அடிக்கப்படுதல். கள்ளிதழியான் - கொன்றைப் பூவையணிந்த சிவபெருமான்.

2. சவ்வாதுப் புலவர் பிரம்பை ஆநந்தரங்கம் பிள்ளையைச் 'சோலை' யென்று வேறு ஒருவர் கூறியதை மறுத்துக் கூறுவதுபோல் இச் செய்யுளை இயற்றினார்.

அலையான் - (சோலை இலை அலையும்; ஆனால் இவன் அலையான்) இவன் சலிக்க மாட்டான். கவடு-கிளை, வஞ்சகம். இலை-மரத்தில் உள்ள இலை, இல்லை என்னும் எதிர் மறைச் சொல். சோலையின் தன்மைகள் ஒன்றும் இவன் பால் இல்லை என்பது கருத்து.

3. இது தம்மை இகழ்ந்த குலோத்துங்க மன்னனைப் பார்த்துக் கம்பர் பாடியது. நீயோ - நீ ஒருவன்தானோ? வளநாடு - வன்மை யமைந்த நாடு. உன்னதோ ? - உனக்கு உரியதோ? ஓதினேன் - கற்றேன்.

4. தண்டு - தடி. முன்னீர் - முன்னால் உள்ள நீரின் ஆழம். கைத்தலம் - கையிடம்.

5. பகலோன் - சூரியன். எச்சம் - கழிவுப்பொருள். முகில் - மேகம்.

6. தொல்லை - துன்பம். கூசாது - வலிக்காது.

7. குவை - குவியல், ஆவினம் - பசுக்கூட்டம் பள்ளர் - உழவர். மள்ளர் - வீரர்.

வினாக்கள்

1. தேங்காய் எவ்வாறு சிவபெருமானுக்கு ஒப்பாகும்?

2. 'ஆநந்தரங்கம் பிள்ளையைச் சோலை என்று கூறுவது பொருந்தாது.' ஏன்?

3. 'உண்டோ குரங்கேற்றுக் கொள்ளாதகொம்பு?' இவ் வுவமையைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.

4. தண்டின் பயன்கள் யாவை?

5. குடையால் அடையும் நன்மைகள் யாவை?

6. செருப்பு நமக்கு எவ்வெவ் விதங்களில் பயன்படுகிறது?

பயிற்சி

1. அடியுறலால், வளநாடு, வேந்துண்டோ, கனியுதிர்க்கும், பயந்தீர்க்கும்—இவற்றைப் பதம் பிரித்துக் கூறுக.

2. நம் நாட்டின் பெருமைகளைப்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.

3. மணங்கமழும், போற்றுகின்ற, ஏற்றமுள்ள, விரைந்து, தொல்லை—இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

உரைநடைப் பகுதி

1. அன்னை கஸ்தூரி

அன்புநெறி காத்த அண்ணல் காந்தியார் தமது தூய வாழ்க்கையால் உலகினர் போற்றும் உத்தமராக விளங்கினார். அவர்தம் வாழ்க்கைத் துணைவியராக அமைந்தவரே அன்னை கஸ்தூரியாவர். இருவரும்

ஈருடல் ஒருயிர் போன்று கருத்தொருமித்து இல்லறம் நடத்தினர். அவர்கள் குடும்ப வாழ்க்கை உலகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். காந்தியடிகளின் குடும்ப விளக்காகத் திகழ்ந்த அன்னை கஸ்தூரியின் வாழ்க்கை அனைவரும் படித்து மகிழ்தற்குரியதாகும்.

காந்தியடிகள் பம்பாய் மாகாணத்தில் உள்ள **போர்பந்தர்** என்னும் ஊரில் 1869-ஆம் ஆண்டில் தோன்றினார். அவ்வூரிலேயே அதே ஆண்டிற்றான் அன்னை கஸ்தூரியும் அவதரித்தார். இளமையில் அவருக்கு ஏட்டுப்படிப்பில் நாட்டம் செல்லவில்லை. அவருடைய பெற்றோர்கள் அவரைப் பள்ளிக்கூடத்திற் சேர்க்கவில்லை. பெற்றோர், உற்றாருடன் பழகியே அவர் சிறிதளவு கல்வியறிவைப் பெற்றார். திருமணம் ஆனதும் தம் கணவனார் உதவியால் கடிதம் எழுதும் அளவுக்குக் கல்வி பயின்றார்.

அவர் பள்ளிப்படிப்பு இல்லாதவராயினும் உலக அறிவு நிரம்பப் பெற்றவர். இளமைப் பருவத்திலேயே அவர்பால் அன்பு, அடக்கம், இன்சொல், தியாகம், விடாமுயற்சி, எளிமை முதலிய அருங்குணங்கள் குடிகொண்டன. சுருங்கக்கூறின், அவர் காந்தியண்ணலின் பெருமைக்குப் பொருத்தமான எல்லாப் பண்புகளும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தார்.

1896-ஆம் ஆண்டில் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவுக்கு வழக்கறிஞராகப் பணியாற்றச் சென்றார். அன்னை கஸ்தூரியும் உடன் சென்றார். அண்ணலின் இன்ப துன்பங்களில் அன்னையும் பங்குகொண்டு இணைபிரியாது வாழ்ந்து வந்தார். தோட்டி வேலை செய்வது இழிவானது என்ற கொள்கையைக் காந்தியடிகள்

வெறுத்தார். ஆகையால் தென்னுப்பிரிக்காவில் அவர் தங்கி இருந்த வீட்டை வேலைக்காரர்களைக் கொண்டு தூய்மை செய்வதில்லை. எவ்வளவு உயர்ந்தவராயினும் தாம் வசிக்கும் வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் தாமே தூய்மை செய்ய வேண்டுமென அவர் விரும்பினுர். தம்முடன் தம் துணைவியும் அவ் வேலைகளை மேற் கொள்ளவேண்டுமென்பது அவர் எண்ணம். அத் தகைய வேலைகளில் பழக்கமில்லாத அன்னை கஸ்தூரி முதலில் வெறுப்படைந்தார். ஆயினும் கணவன் கொள் கையே தமது கொள்கையாக எண்ணி மனமுவந்து பணியாற்றினுர். அவர், தம் வீட்டு அறைகளிலிருந்து கழுநீர், சிறுநீர்ப் பாண்டங்களை எடுத்துத் தாமே சுத்தம் செய்து துலக்கி வைப்பார். தம் வீட்டில் தங்கியிருந்த அலுவலர்களின் அறைகளையும் மனம் கோணுமல் தூய்மை செய்துவந்தார்.

அன்னை கஸ்தூரி எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் தமது உறுதியான கொள்கையினின்று மாறுபட மாட்டார். ஒருசமயம் அவர் பெரிதும் நோய்வாய்ப்பட்டிருந்தார். ஊன் உணவு கொடுத்தாலன்றி அவர் பிழைக்கமாட்டார் என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். ஊன் உண்ணுமை மகாத்மா காந்தியடிகளின உயர்ந்த கொள்கைகளில் ஒன்றன்ருே? அதனுல் அன்னை கஸ்தூரியும் அக் கொள்கையிற் சிறிதும் பிறழ வில்லை. பெரிதும் உடல் நலம் குன்றி இருந்த அந் நிலையிலும் அவர், "இம்மனிதப் பிறவி கிடைத்தற் கரியது, ஊனும் மதுவும் உண்டு இதனை அசுத்தமாக்க விரும்ப வில்லை. நான் இறந்தாலும் சரி; பிழைத்தாலும் சரி, இவ் விரண்டையும் உட்கொள்ளமாட்டேன்," என்று

கூறிவிட்டார். என்னே அவர்தம் மன உறுதி! மகாத்மா காந்தியின் உண்மைத்துணைவி அன்னை கஸ்தூரி என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ?

அன்னையார் அடக்கமே உருவமானவர். எனினும் அவரும் சுதந்திர உணர்ச்சியில் சிறிதும் தளராதவர் என்பதை மகாத்மா தம் சுய சரிதையில் கூறியுள்ளார்: "என் உத்தரவின்றி வெளியே எங்கும் செல்லக் கூடாது என்று நான் என் அதிகாரத்தை என் மனைவி மீது செலுத்த விரும்பினேன். ஆனால் அவள் நான் ஆட்டிவைக்கும் மரப்பாவையாக இருக்க இசையவில்லை. தனக்குரிய சுதந்திரத்தை இழக்க அவளுக்கு விருப்பமில்லை. என் ஆணையின்றியே கோயில் குளங்களுக்குச் சென்று வந்தாள்." பின்னல் மகாத்மா தம் எண்ணம் தவருனது என்று வருந்தினர். அன்னையார் தமக்கு நிறைந்த கல்வியறிவு இல்லாவிடினும் தம் அனுபவ ஞானத்தால் பேரறிஞர்கள் முன்னும் சமயோசிதமாக நடந்துகொள்ளும் திறமை வாய்ந்தவர்.

எத்தகைய இடுக்கண் உற்ருலும் அன்னை கஸ்தூரி மனம் கலங்கமாட்டார். தம் அருமைக் கணவனர் நாட்டு விடுதலை விரும்பி சிறைப்பட்டபோதெல்லாம் அவர் ஆறுதலுடன் இருந்தார். தாமும் அவருடன் சில சமயங்களில் சிறை வாழ்வை அனுபவித்தார். மகாத்மா சிறையில் இருக்கும்போது நாட்டு மக்கள் தேசப்பற்றிலும் தமது கடமையிலும் தவருதிருக்கும்படி அவர் அடிக்கடி கூறுவார்.

அன்னை கஸ்தூரி தம் உள்ளத்தில் மூன்று குறைகளை எண்ணி எண்ணி அடிக்கடி ஏங்கியதுண்டு. நம் நாட்டு மக்கள் உண்ண உணவும், உடுக்க உடையும்

இருக்க இடமும் இன்றித் தவிக்கும் காட்சியும், பல்லாண்டுகளாகத் தாய்நாடு அடிமையில் சிக்கி இருந்ததும், தம் பெற்றோர்கள் தம்மைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைக்காமையுமே அக் குறைகளாகும். நாட்டுப் பணிக்குக் கல்வியறிவும் பெரிதும் பயன்பட்டிருக்குமே என்பது அவர் கருத்தாகும்.

சமயத்துக்குத் தக்க ஆலோசனைகள் கூறும் நுண்ணறிவும் நம் அன்னையிடம் அமைந்திருந்தது. பல்லாண்டுகட்கு முன்னரே காந்தியடிகள் பால் அருந்துவதில்லை என்று விரதம் பூண்டார். ஒரு சமயம் பால் அருந்தினால்தான் அவர் உடல் நலமடையும் என்னும் நிலைமையில் இருந்தார். கணவன் உடல் நலனைக் காப்பதே தம் கடமையென்று உணர்ந்த அன்னை, "பெரியீர், தாங்கள் விரதத்தைக் கைவிடும்படி நான் கூறவில்லை. பால் அருந்துவது என்றால் பசுவின்பால் அல்லது எருமைப் பாலைத்தானே மக்கள் குறிப்பிடுவர். வெள்ளாட்டுப் பால் அருந்துங்கள்; உங்கள் விரதம் இதனால் கெட்டு விடாது," என்று வேண்டினார். தம் துணைவியின் மதி நுட்பத்தை மெச்சிய அண்ணலார் அன்றையிலிருந்து வெள்ளாட்டுப் பாலைத் தம் உணவுப் பொருள்களில் ஒன்றாகக் கொண்டார்.

1942-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் ஒரு பொதுக்கூட்டத்தில் மகாத்மா பேசவிருந்தார். ஆனால் அரசியலார் முன்னாள் இரவிலேயே அவரைக் கைது செய்து சிறையிலிட்டனர். அதுகண்ட அன்னை, "என் கணவர் பேசாவிட்டால் என்ன? நான் எங்கே போய் விட்டேன்? அவருக்காக நான் பேசுவேன்," என்று கூறினார். இச்செய்தி யறிந்த அரசியலார் அவரையும்

கைதுசெய்து ஆகாகான் மாளிகையில் காவலில் வைத்தனர். தம் எழுபத்தைந்து வயதில் அன்னை தம் கணவருடன் சிறையில் காலம் கழித்தார். தம் முதுமைப் பருவத்தும் சிறைப்பட்ட அன்னை நோய்வாய்ப்பட்டு அதனினின்று மீளாமல் 22-2-1944 சிவராத்திரி நாளன்று காலமானார். அன்னையின் பிரிவை யறிந்து இமயம் முதல் குமரிவரையுள்ள நாட்டு மக்கள் அனைவரும் துன்பக் கடலில் மூழ்கினர்.

காந்தியடிகளாரும், கஸ்தூரி அன்னையும் இன்று அமரவாழ்வை யடைந்துள்ளனர். அவர்கள் வாழ்க்கை நம் வாழ்வுக்கு வழிகாட்டியாகும். நாமெல்லோரும் அவர்தம் சீரிய கொள்கைகளைப் பின்பற்றிச் சிறப்புடன் வாழ்வோமாக..

பயிற்சி

பொருளறிக :

எடுத்துக்காட்டு	விரதம்
ஒருமித்து	மதிநுட்பம்
பிறழுவில்லை	நாட்டம்
சான்று	

வாக்கியத்தில் அமைக்க :

எள்ளளவும்	கடைபிடித்தது
இணைபிரியாது	மேற்கொள்ள
மனம் கோணாமல்	

எதிர்ப்பதம் தருக :

இல்லறம், குன்றிய, இழிவு, பிரிவு, முதுமை.

விடை கூறுக :

1. அன்னை கஸ்தூரி எப்போது எங்கே பிறந்தார்?
2. கஸ்தூரியின் அருங்குணங்கள் யாவை?

3. தென்னாப்பிரிக்காவில் அன்னை கஸ்தூரி காந்தி யடிகளார் மனம் மகிழுமாறு செய்த அரிய சேவை யாது?

4. துன்பம் நேரினும் அன்னை கஸ்தூரி தம் கொள் கையைக் கைவிடமாட்டார் என்பதைத் தக்க சான்றுடன் விளக்குக.

5. அவர் மிகவும் நுண்ணறிவு உடையவர் என்ப தைக் காட்டும் நிகழ்ச்சியைக் கூறுக.

6. அன்னை கஸ்தூரியின் நாட்டுப்பற்றைக் குறிக்கும் நிகழ்ச்சி யாது?

கட்டுரை :

1. அன்னை கஸ்தூரி நாட்டுக்குச் செய்த தொண்டு களைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதுக.

2. மகாத்மா காந்தியடிகள் தம் மனைவியின் வர லாற்றை நேரில் கூறுவதுபோலச் சுருக்கமான கட்டுரை யொன்று எழுதுக.

இலக்கணம் :

1. காந்தியடிகள் உலகம் போற்றும் உத்தமராக விளங்கினார் (செய்தி வாக்கியம்)

2. என் உத்தரவில்லாமல் வெளியே செல்லாதே. (கட்டளை வாக்கியம்)

3. நான் எங்கே போய்விட்டேன்? (வினா வாக்கியம்)

4. என்னே அவர்தம் தியாகம்! (உணர்ச்சி வாக்கியம்)

மேற்கண்ட வாக்கியங்களைப் படித்து இப்பாடத்தி லிருந்து வகைக்கு ஒருதாரணம் எடுத்து எழுதுக.

2. தலை இருக்க வாலாடுமா?

'தலை இருக்க வாலாடுமா?' என்னும் பழமொழி தொன்று தொட்டு நம் தண்டமிழ் மொழியில் வழங்கி வருவதொன்றாகும். சமூகத்தில் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்கள் மக்களுக்குத் தலைவராக அமைவர். அவர்கள் கூறும் அறிவுரைகளும் ஆலோசனைகளும் பிறரை நல்வழிபடுத்துவனவாம். தலைவர்களே தம்மைச் சார்ந்தவரின் வாழ்க்கைக்கு வழிகாட்டி ஆவார்கள். அவர்கள் எப்போதும் தன்னலங் கருதாது பிறர் நலமே குறிக்கோளாக இருப்பா. எனவே தலைவர்களுக்கு ஏனையோர் அடங்கி விசுவாசத்துடன் இருக்க வேண்டு மென்பதே இப் பழமொழியின் கருத்தாகும்.

தலைவர் எண்ணத்துக்கு மாறாக நடப்போர் ஆராய்தலின்றிக் காரியங்களில் ஈடுபட்டுத் துன்புறுவர். ஒரு சமூகத்தில் ஒரு சிலர் அடங்காமல் தம் விருப்பப்படியே நடப்பினும் அதனால் விளையும் கேடு அச் சமூகத்தில் உள்ள அனைவருக்குமே உண்டாவது இயல்பு. 'தலைக்குத் தலை பெரியதனம்; உலைக்கு அரிசி இல்லை' என்னும் பழமொழியும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. தலைவருடன் மனம் ஒன்றுபட்டு வாழ்வார் எத்தகைய அரிய செயலினையும் எளிதில் முடித்து இன்புறுவர். சில புறாக்கள் தலைவனை மீறியதால் அடைந்த துன்பத்தையும் தலைவன் சொற்கேட்டு உயிர் தப்பியதையும் குறிக்கும் கதையொன்றை இங்கே கூறுவோம் :

முன்னொரு காலத்தில கோதாவரி ஆற்றங்கரையில் உள்ள காட்டில் **சித்திரக்கிரீவன்** என்னும் ஒரு புறாவரசு தன் பரிவாரங்களுடன் வசித்து வந்தது. அது

புத்திக் கூர்மையுடையது : அனுபவம் முதிர்ந்ததாக இருந்தது. ஆகையால் அதையே எல்லாப் புருக்களும் தமக்குத் தலைவனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டன. சித்திரக்ரீவனுக்கு **நீலமேனி** என்றொரு மந்திரி இருந்தது. நீலமேனி மந்திரியாக இருந்தாலும் சிறிது அவசர புத்தியுடையது.

ஒரு நாள் காலையில் வேடன் ஒருவன் அங்குள்ள குளக்கரையை அடைந்தான். அங்கு ஒரு பெரிய வன்னி மரத்தின் அடியில் வலையை விரித்துப் பலவகைத் தானியங்களைத் தெளித்து விட்டுச் செடிகளின் மறைவில் ஒளிந்துகொண் டிருந்தான். அதன் பிறகு சித்திரக்கிரீவன் தன் புருக் கூட்டத்துடன் அங்கு வந்து இறங்கிற்று. வன்னி மரத்தின் அடியில் பலவகைத் தானியங்களைக்கண்ட புருக்கள் அவற்றைத் தின்பதற்காக மிகவும் ஆவல் கொண்டன. அதையறிந்த சித்திரக்கிரீவன் புருக்களை நோக்கி, "மனிதர் நடமாட்டம் இல்லாத இக் காட்டில் தானியங்கள் எப்படி வரும்? இதனை ஆராய்ந்து அறிந்த பிறகுதான் தின்ன வேண்டும். என் பேச்சைக் கேளுங்கள்; சிறிது பொறுத்திருங்கள்," என்று கூறிற்று. அதன் கூற்றைச் செவியுற்ற நீலமேனி பரிவாரங்களைப்பார்த்து, "நமது அரசர் சொல்வதுபோல் நாம் ஆலோசித்துக் கொண்டிருந்தால் நமக்கு ஓர் இரையும் அகப்படாது. தீராத ஐயம் உடையவன், பொருமை உடையவன், மகிழ்ச்சியற்றவன், வெட்கப்படுகிறவன், குரோதம் உள்ளவன், பிறர் பொருளால் வாழ்பவன் என்னும் இவர்கள் துன்பமே அடைவார்கள். ஆதலின் நாம் இந்த உணவைப் பற்றி ஒரு சிறிதும் ஐயுறலாகாது," என்று கர்வத்தோடு கூறிற்று.

நீலமேனியின் விருப்பத்தை அறிந்த சித்திரக்கிரீவன் ஆராயாமல் செய்யும் செய்கையால் ஆபத்து நேரும் என்று பலவாறு சொல்லியும் புருக்கள் கேளாமல் தானியம் தின்னப் போயின. போய் அமர்ந்தவுடன் வலையில் அகப்பட்டுக் கொண்டன. புருவரசு அவற்றைப் பார்த்து, "தலைவனாகிய என் சொல்லைக் கேளாமல் இப்படி வலையில் அகப்பட்டுக் கொண்டீர்களே! நான் மட்டும் வெளியில் தனியாக இருந்து பயன் என்ன?" என்று கூறித் தானும் வலையில் அகப்பட்டுக் கொண்டது.

பறவைகள் வலையில் சிக்கிக்கொண்டதைத் தொலைவிலிருந்து உணர்ந்த வேடன், அவ்விடத்திற்கு வரத் தொடங்கினான். அதைப் பார்த்த புருக்கள் சித்திரக்கிரீவனைப் பார்த்து, "அரசே, தாங்கள் சொன்ன புத்திமதியைக் கேளாமல் தங்களை அவமதித்தோம். அதனால் அல்லற்படுகிறோம். அந்தோ! அதோ வேடன் வருகிறானே! என் செய்வது?" என்றன. அதற்குச் சித்திரக்கிரீவன், "இப்போது இதைச் சொல்லி என்ன பயன்? நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன். அதையாவது கேளுங்கள்: உயிர் தப்ப வழி உண்டு. நாம் எல்லோரும் வலையோடு ஒருமிக்கப் பறந்து வேறு இடத்தை அடையவேண்டும்," என்றது. உடனே புருக்கள் எல்லாம் அதற்கு உடன்பட்டு அவ்வாறே செய்தன.

புருக்கள் ஒன்றுசேர்ந்து பறக்கும் காட்சியைக் கண்ட வேடன் அவை எங்ஙனமேனும் மனம் வேறுபட்டுக் கீழே இறங்கக் கூடுமென்று பின் தொடர்ந்தான். ஆனால் அவை உள்ளம் ஒருமித்து அவன் கண்ணுக்

கெட்டாத தூரம் வேகமாகப் பறந்து போய்விட்டன. "கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே" என்று வேடன் மனம் வருந்தி வீடு திரும்பினன்.

அ· சித்திரக்கிரீவன் தன் பரிவாரங்களுடன் **சுந்தர வனம்** என்னும் காட்டில் தன் கண்பனுகிய **இரணி யகன்** என்னும் எலி அரசனை அடைந்தது. இரணியகன் சித்திரக்கிரீவனைப் பார்த்து, "நீ எல்லோரையும் விட புத்திசாலியாயிற்றே? உனக்கு எப்படி இந்தக் கதி நேர்ந் தது," என்று கேட்டது. அதற்குச் சித்திரக்கிரீவன் விடைகூறுவதற்குள் நீலயேனி இரணியகனைப் பார்த்து "அன்பரே, எங்கள் தலைவர் சித்திரக்கிரீவன் பேச்சைக் கேட்டிருந்தால் எங்களுக்கு இந்தக்கதி நேர்ந்திராது. நாங் களே ஆராயமல் இதில் சிக்கிக் கொண்டோம். எங் களுக்காக அவரும் அகப்பட்டுக் கொண்டார்," என்

றது. அது கேட்ட இரணியகன் சித்திரக்கிரீவனைப் பார்த்து, “ நண்பா, என் பல் மென்மையானது. இவர்கள் எல்லோருடைய தலைகளையும் அறுக்க என்றால் இயலாது. ஆகையால் உன் தலையைமட்டும் முதலில் துணிப்பேன். பின்னர் என்றால் இயன்ற வரையில் மற்றவர் தலையை அறுக்கிறேன்,” என்றும் கூறிற்று.

அதற்குச் சித்திரக்கிரீவன், “நீ இயம்புவது நன்று. ஆனால் இவர்களைத் துன்பத்தினின்று காப்பதற்காகத் தானே என்னை அரசனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்? இவர்களைக் காப்பாற்ற நான் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் இவர்கள் தலையை அறு,” என்று கூறிற்று. அதைக்கேட்ட இரணியகன், நீ மிகவும் நல்லவன்: அடுத்தவரைக் காக்கும் அன்பன்; தலைவனிடத்தில் விசுவாசமுள்ள குடிகளும், குடிகளிடத்தில் அன்புள்ள கொற்றவனும் நன்மையடைவார்கள்,” என்று சொல்லித் தன்னுடன் வாழும் எலிப் பரிவாரங்களையும் வரவழைத்து எல்லாப் புறாக்களின் தலைகளையும் அறுத்து விடுவித்தது.

சித்திரக்கிரீவன் இரணியகனைத் தழுவி அளவளாவிற்று.. பின்னர், தன் பரிவாரங்களுடன் தன் இருப்பிடத்துக்குப் பறந்துபோய் விட்டது. அன்று முதல் புறாக்கள் தம் தலைவன் சொல்லைப் பொன்னேபோல் போற்றி இன்பமாக வாழ்ந்து வந்தன.

பயிற்சி

பொருளறிக:

சார்ந்தவர்	ஈண்டு	குரோதம்	துணித்து
விசுவாசம்	பரிவாரம்	தலை	கொற்றவன்

எதிர் மொழி தருக:

தன்னலம், ஆவல், ஐயம், தனியாக, கேடு.

விடை கூறுக:

1. தலைவர்களின் சிறந்த பண்புகள் யாவை?

2. தலைவருக்கு அடங்காதவர் அடையும் பயன் யாது?

3. தானியத்தைக் கண்ட சித்திரக்கிரீவன் புறாக்களிடம் கூறியதென்ன?

4. அதற்கு நீலமேனி என்ன கூறிற்று?

5. புறாக்கள் எங்ஙனம் வேடன் கையில் அகப்படாமல் தப்பின?

6. பறந்து சென்ற புறாக்களை வேடன் பின்தொடர்ந்ததேன்?

7. சித்திரக்கிரீவன் தன்னலம் கருதாதது என்பது எப்படிப் புலனாகும்?

8. எலியரசு புறாவரசை எவ்வாறு பாராட்டிற்று?

தெரிந்து கொள்:

இக் கதை தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்ச தந்திரக் கதையைத் தழுவி எழுதப் பெற்றது. உங்கள் நூல் நிலையத்தில் இப்புத்தக மிருப்பின் வாங்கிப் படித்துப் பாருங்கள்.

இலக்கணம்:

தகுந்த சொற்களைச் சேர்த்து எழுதுக;

1. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு மா............ இருக்கின்றது. (மரம், மறம்)

2. புறாக்கள் தம் நண்பனிடம்...............சென்றன. (பறந்து, பரந்து)

3. திருடன்.........அறுத்துக்கொண்டு ஓடிவிட்டான். (தலையை, தளையை)

4. எலியரசு தன்............வெளியே வந்தது. (வளையிலிருந்து, வலையிலிருந்து)

5. பாரி பழத்தை.........(அரிந்தான், அறிந்தான்)

3. பார்க்க வேண்டாமா?

தொன்று தொட்டே நம் செந்தமிழ் நாடு சிற்பக் கலையில் சிறந்து விளங்குகிறது. இந்நாட்டுச் சிற்பக் கலைக்கு இருப்பிடமாய் உள்ள ஊர்களில் மகாபலிபுரமும் ஒன்று. இக்காலத்தே ஒரு சிற்றூராக விளங்கும் இவ்விடம் முற்காலத்தே பல்லவராட்சியில் சிறந்த துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்தது. தென்னாட்டுச் சிற்பக்கலையை வளர்த்தவர்களில் பல்லவர்கள் முதன்மையானவர். **மகேந்திர வர்மன்** என்னும் பல்லவ மன்னனும், அவன் மகன் **நரசிங்க வர்மனும்** சிற்பப் பணியில் தலைசிறந்தவர்கள். அவர்கள் ஏழாம் நூற்றாண்டில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தமிழ்நாட்டை ஆண்டனர். அவர்களே மகாபலிபுரத்தில் கற்பாறைகள் பலவற்றைக் குடைந்து கோயில்கள் அமைத்தார்கள். அப் பாறைகளிற் பல மண்டபங்கள் அமைத்து அழகிய உருவங்கள் பலவற்றைச் செதுக்கிவைத்தார்கள். அச் சிற்பச் செல்வங்கள் பார்ப்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வனப்பு வாய்ந்தவை. மகாபலிபுரத்துச் சிற்பங்களைக் காண ஆண்டுதோறும் நாட்டின் பற்பலவிடங்களிலிருந்தும் திரள் திரளாக மக்கள் போந்து நம் நாட்டுப் பண்டைச் சிற்பத் திறனறிந்து பெருமிதம் அடைகின்றனர்.

நரசிங்க வர்மனின் விருதுப் பெயர் **மாமல்லன்** என்பது. மற்போர் வீரரிற் சிறந்தவன் என்பது இதன் பொருள். இந்நகரம் மாமல்லனின் பெயரால் மாமல்லபுரம் என வழங்கலாயிற்று. பிற்காலத்தில் மாமல்லபுரம் **மகாபலிபுரம்** என்று மருவிவிட்டது. முற்காலத்தில்

இந்நகரம் சிறந்த துறைமுகப் பட்டினமாக அமைந்திருந்தது என்பதைக் 'கலங்கள் இயங்குங் கடல்மல்லை என்னும் ஆழ்வார் பாடலால் உய்த்துணரலாகும். மகா' பலிபுரம் செங்கற்பட்டுப் புகைவண்டி நிலயத்தினின்று கிழக்கே இருபதுகல் தொலைவில் இருக்கிறது. சென்னையில் இருப்போர் புகைவண்டியில் புறப்பட்டுச் செங்கற்பட்டை அடைந்து அங்கிருந்து திருக்கழுக்குன்றத்தின் வழியாக மகாபலிபுரத்தை அடையலாம். படகில் செல்வோர் பக்கிங்காம் கால்வாய் வழியாக மகாபலிபுரத்துக்குச் செல்லலாம்.

மலைகளைக் குடைவதும், கற்பாறைகளில் நமது விருப்பம்போல் சிற்பங்களைச் செதுக்குவதும் எத்துணை அரிய செயலென்று சிந்தித்துப் பாருங்கள். மின்சாரம், இயந்திரம் போன்ற வசதிகளற்ற பண்டைக்காலத்தே கண்ணைக் கவரும் சிற்ப வேலைப்பாடுகளை யமைத்த மாமல்லனின் திறனை என்னென்போம்! இங்குள்ள ஒவ்வோரமைப்பும் பல்லவ மன்னனது பெரும்புகழின் அழியாச் சின்னமாக விளங்குகின்றது.

மகாபலிபுரத்துக்குச் செல்வோர் முதன் முதலில் மகிடாசுரமர்த்தனியின் அழகிய குகைக் கோயிலைக் காணலாம். இக்குகைக் கோயிலின் முன்புறத்தே உள்ள ஆறு தூண்களும் உள் மண்டபமும் ஒரே பாறையைக் குடைந்து ஆக்கப்பட்டவை. மண்டபத்தின் உட்பாகத்தில் கூடம் ஒன்று அமைந்துள்ளது. கூடத்து நடுச்சுவர் மத்தியில் சிவபெருமான் உமையம்மையுடன் வீற்றிருக்கும் காட்சியைக் காணலாம். பார்வதியின் மடியில் குழந்தை முருகனின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. தெனபக்கத்துச் சுவரில் துர்க்கை கோபக்கனல் பறக்க

மகிடாசுரனுடன் போரிடும் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றது. துர்க்காதேவி அரிமாவின் மீதிவர்ந்து கையில் வில்லைப் பிடித்து அவ்வரக்கன்மீது



வாளி தொடுக்கும் தோற்றம் மிக மிக அழகாகச் சித்த ரிக்கப்பட்டுள்ளது. சிற்பி தன் கைவன்மை முழுவதும் காட்டி ஆண்டு வரும் மக்களை மகிழ்ச்சியும் வியப்பும் அடையச் செய்கிருன். அசுரனின் முகத்தில் நடுக்கக் குறிகள் தெளிவாகப் புலப்படும் வண்ணம் செதுக்கப் பட்ட சிற்பத் திறனை இங்கே காணலாகும். அம் மண்டபத்தின் வடபுறச் சுவரில் திருமால் ஆதிசேடன் மீது அறிதுயில் கொள்ளும் திருவுருவத்தைப் பார்க்க லாம்.

முற்காலத்தில் மகிடாசுரமர்த்தனியின் கோயிலின் மீது மற்ருெரு கோயில் இருந்ததாகக் கூறுகிருர்கள்.

அக் கோயிலில் அல்லும் பகலும் அணையாது எரிந்து கொண்டிருந்த பெரிய விளக்கொன்று உண்டு. பழங் காலத்தில் அவ் விளக்கே மாலுமிகளுக்குக் கலங்கரை விளக்கமாக உதவியது என்று இங்குள்ளோர் கூறுகின் றனர். அக் கோயிலுக்குச் செல்வோர் அதில் உழக்கு எண்ணெயை ஊற்றுவது வழக்கம். அங்கு எழுந்தருளிய இறைவனுக்கு '**உலகண்ணல்**' என்று பெயர்.

அதற்கடுத்தாற்போல் தெற்கில் உள்ள **பஞ்ச பாண்டவர் ரதங்கள்** எனப்படும் ஐந்து கோயில் களைக் காணலாம். இவை ஐந்தும் ஒற்றைக் கற்கோயில் கள். இவை ஒவ்வொன்றும் சிற்ப வேலைப்பாட்டுக்குச் சிறந்த இடமாக விளங்குகின்றது. இவற்றுள் தருமராஜ ரதத்தில் உள்ள நுண்ணிய சிற்பத் திறனைக் கண்டு வியவாதவர் ஒருவருமிலர். தருமராஜ ரதம் ஏனைய கோயில் களை விடப் பெரியது. இதன் ஒவ்வோரடுக்கிலும் மிக அழகிய மாடப்புரைகள் செதுக்கப்பட்டுள்ளன. இரண் டாம் அடுக்கில் தெய்வச்சிலையொன்று இருப்பதென்ப தற்கான அறிகுறிகளைக் காணலாம். பீமன் இரதத் துக்கு முன்னும் பின்னும் மண்டபங்கள் அமைக்கப்பட் டுள்ளன. 'அர்ச்சுணன் ரதமும்,' 'திரௌபதி ரதமும்,' முன் மண்டப மொன்ருல் இணைக்கப்பட்டுள்ளன. அதனையடுத்து 'நகுலசகாதேவ ரதங்கள்' காணப்படு கின்றன. அவை எக்காரணத்தாலோ முற்றுப் பெருத ஒற்றைக் கற்கோயில்களாகவே காணப்படுகின்றன. திரௌபதி ரதத்தில் துர்க்கை சிலையொன்று இருக் கின்றது. அதன் எதிரே ஒரு வீரன் தன் தலையைத் தானே வெட்டிக் காளிக்குப் பலியிடுவது போன்ற சிலை யினைக் காணலாம். உண்மையில் கற்கோயில்களாக

விளங்கும் இவை தோற்றத்தில் தேர்களைப் போன்றிருப்பதனாலும், இவற்றிலிருந்த சிவலிங்கங்கள் தற்காலத்தில் காணப்படாமையினாலும் மக்கள் இவற்றைப் **பஞ்சபாண்டவ ரதங்கள்** என்று வழங்கலாயினர் போலும். பஞ்சபாண்டவர் ரதங்களுக்கு எதிரில் உயிருள்ள சிங்கமும், யானையும் நிற்பது போன்ற அழகிய கற்சிலைகளைக் காண்போர் பல்லவர் மாண்பைப் பலவாறு பாராட்டிச் செல்வர்.

இவ்வளவு காட்சிகளையும் பார்வையிட்ட பின்னர் நாம் விளக்குத் தூணுக்கு வடகிழக்கே முற்றுப் பெறாத குகைக் கோயிலொன்றை அடையலாம். அங்குள்ள பெரும் பாறைப் பிளவில் பற்பல சிற்பங்கள் பொலிவுடன் செதுக்கப்பட்டுள்ளன. அங்கு ஒற்றைக்காலில் நின்று தவம் செய்யும் ஒருருவத்தைக் காணலாம். அதனைச் சிவபெருமானை நோக்கித் தவம் புரியும் அர்ச்சுனனின் சிலை என்று சிலர் கூறுவர். ஆனால் அது பகீரதனின் உருவச்சிலை என்பதே தற்கால ஆராய்ச்சியாளர் துணிபு. அவ்வுருவத்தைச் சுற்றிலும் பல மக்கள் உருவங்களும் பிராணிகளின் உருவங்களும் காணப்படுகின்றன. இங்கே தவம் செய்யும் பகீரதனைக் கண்ட பூனையொன்று தானும் விரும்பித் தவம் செய்வது போன்ற சிலையொன்றைப் பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

அப்பாறைக்கு வடமேற்கில் ஒரு பெரிய வட்டப் பாறை எத்தகைய ஆதாரமும் இன்றித் தரையில் ஒரு சிறிய பாகத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அப்படி இப்படி அசையாமல் ஒரே நிலையில் பல்லாண்டுகளாக நின்றிருக்கும் அப் பாறையைக் கண்டு சிலர் திகைப்பர்.

அதனருகில் வராகக் கடவுள் குகைக்கோயில் உள்ளது. இக் குகைக்கோயிலில் திருமாலின் வராக அவதாரக் கதை சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளது. இங்குத் திருமால் பேருருத் தாங்கி மாவலியின் முடிமிசைத் தன் திருவடிகளை ஊன்றிய காட்சி வனப்புடன் செதுக்கப் பட்டுள்ளது. இவை யனைத்தும் கண்ணுக்கும் கருத் துக்கும் நல்விருந்தளிக்கின்றன.



இனி மகாபலிபுரத்தின் இயற்கைச் செல்வமாகத் தோன்றும் கடற்கரைக்குச் செல்லலாம். அங்குக் கட லலைகள் 'ஓ'வென்று ஒலித்துக் கரையில் வந்து மோதும். அங்குத்தான் 'தலசயனக் கோயில் இருக்கிறது. அதற் குக் 'கரைகோயில்' எனவும் பிரிதொரு பெயருண்டு.

தென்னாட்டுச் சிற்பச் செல்வமாக விளங்கும் மகாபலிபுரத்தில் மேலும் பற்பல காட்சிகளையும் காணலாம். இச் சிற்பங்கள் நமக்கு உணர்த்துவதென்ன? இவற்றால் நம் முன்னோர்கள் சிறந்த கைத்திறனும் ஆற்றலும் படைத்தவர்கள் என்பதும், அக்காலத்து மன்னர்கள் சிற்பக்கலையையும், கலைஞர்களையும் போற்றும் அருங்குணம் வாய்ந்தவர்கள் என்பதும் புலனாகும். நாமும் நம் பண்டைப் பெருமைகளை அறிந்து மகிழ்வதோடு அமையாமல் ஓவியம், சிற்பம் முதலிய நற்கலைகளை நன்கு பயின்று நலமுற வேண்டும்.

பொருளறிக :

போந்து	உய்த்துணர
பெருமிதம்	கனம்
விருதுப் பெயர்	மாடப்புரை
மல்லன்	அமையாமல்

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

தோன்று தொட்டே, திரள்திரளாக, பெருமிதம், விருதுப் பெயர், அறிகுறிகள்.

விடை கூறுக :

1. பல்லவ மன்னர்களுள் சிறந்தவர்கள் யாவர்? அவர்கள் தலைநகரம் யாது?

2. மகாபலிபுரம் பழங்காலத்தில் எவ்வாறு சிறப்புற்றிருந்தது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

3. சென்னையிலிருந்து மகாபலிபுரத்துக்குச் செல்லும் வழியை விளக்கி எழுதுக.

4. மகிடாசுரமர்த்தனியின் கோயிலைப்பற்றிச் சுருக்கி எழுதுக.

5. தருமராஜ ரதத்தைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

6. பஞ்சபாண்டவ ரதங்கள் கோயில்களாக இருந்தும் இரதங்கள் என்று அழைக்கப்படுவது ஏன்?

7. பகீரதன் தவம், வராகக் கடவுள், தலசயனக்கோயில்—இவற்றைப்பற்றி குறிப்பு வரைக.

கட்டுரை :

1. மகாபலிபுரத்தில் காணும் காட்சிகளைப் பற்றி வெளியூரிலிருக்கும் உன் நண்பன் ஒருவனுக்குக் கடிதம் எழுதுக.

2. சிற்பங்கள் அமைந்த வேறொரு கோயிலொன்றைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

இலக்கணம் :

பிரதாபன் எப்போதும் தன் விருப்பம் போலவே நடப்பான். (உடன்பாடு)

அன்னை கஸ்தூரிக்கு ஏட்டுப் படிப்பில் நாட்டம் செல்லவில்லை. (எதிர்மறை)

செய்தி நிகழ்வதைக் குறிப்பது உடன்பாடு; நிகழாமையைக் குறிப்பது எதிர்மறை.

முதல் மூன்று பாடங்களிலிருந்து மும்மூன்று உடன்பாட்டு வாக்கியங்களையும் எதிர்மறை வாக்கியங்களையும் எடுத்து எழுது.

4. 'யானோ அரசன், யானே கள்வன்!'

இடம்: பாண்டியன் நெடுஞ்செழியன் அரண்மனை.

உறுப்பினர்: நெடுஞ்செழியன் அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறான். கோப்பெருந்தேவி அருகில் வீற்றிருக்கிறாள். வாயிற் காவலனைக் கண்ணகி பார்த்துக் கூறுகின்றாள்.

கண்ணகி: பாண்டிய அரசனின் அரண்மனைக் காவலன் நீ தானா?

காவலன்: ஆம். அம்மையீர், தங்களுக்கு உற்றது என்ன?

கண்ணகி: அரச நீதி தவறிய மன்னனின் வாயிற் காவல, விரைந்தோடி, 'கணவனை இழந்த காரிகையொருத்தி கையிற் சிலம்புடன் நின்னைக் காணக் கடை வாயிலில் காத்திருக்கிறாள்,' என்று உன் மன்னனிடம் சொல். உம், விரைந்து செல்.

காவலன்: நன்று அன்னையே, அங்ஙனமே செல்கின்றேன். அதுகாறும் தாங்கள் ஈண்டே இருக்கலாம்.

(காவலன் அரண்மனைக்குள் சென்று மன்னனை வணங்கிக் கூறுகின்றான்.)

காவலன்:

வாழி எம் கொற்கை வேந்த, வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ வாழி!
செழிய வாழி! தென்னவ, வாழி!
பழியொடு படராப் பஞ்சவ வாழி!

நமது அரண்மனை வாயிலில் பெண் ஒருத்தி நிற்கின்றாள். அவள் கண்களிற் கனற்பொறி சிந்தக் கொற்றவைபோல் சினம் கொண்டு நிற்கிறாள். அவளைப் பார்ப்பதற்கே மிக்க அச்சம் உண்டாகின்றது. கணவனை இழந்தவளாம்; கையிற் பொற்சிலம்பொன்று காணப்படுகிறது. அவள் நின்னைக் காணவேண்டுமென்று கூறுகின்றாள்.

பாண்டியன் : அவளை உள்ளே அழைத்து வருக.

காவலன் : (கடைவாயிலிற் சென்று கண்ணகியைப் பார்த்து) அன்னாய், தாங்கள் எங்கள் அரசரைக் காண ஆணை கிடைத்துவிட்டது. தாங்கள் சென்று மன்னனிடம் உற்றது உரைக்கலாம்.

(கண்ணீர் சொரியக் கண்ணகி சென்று பாண்டியனைக் காண்கிறாள்.)

பாண்டியன் : அம்மையீர், நீர் சொரியும் கண்களுடன் எம் முன் வந்து நிற்கும் நீங்கள் யார்? உங்கட்கு உற்ற இடுக்கண் என்னை?

கண்ணகி : அறிவும் ஆராய்ச்சியும் இல்லாத அரசே, நான் சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகப் பெருங்குடியிற் பிறந்தவள். ஒரு பறவையின் பொருட்டுத் தன் உடற்றசையை அறிந்து கொடுத்த சிபியும், தாய்ப்பசுவின் துயரங்கண்டு அதன் கன்றைக் கொன்றமைக்காகத் தன் ஒரே மகனைத் தேர்க்காலில் மாய்த்த மனுநீதிச் சோழனும் ஆண்ட பெருமை உடையது எங்கள் நாடு. கோன்முறை கோடாத அவர்களெங்கே! நீ எங்கே!

நீதிநெறி தவறாத அம்மன்னர்களின் நகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் மாசாத்துவான் என்னும் வணிகர் ஒருவர் உண்டு. அவர் மகனாரே என் கணவ னாராகிய கோவலன். நாங்கள் இருவரும் சிலம்பை விற்று வாணிபம் செய்வதற்காக மதுரைக்குப் போந் தோம். என் கணவர் சிலம்பை எடுத்துத் தெருவிற் சென்றபோது நின் ஏவலர் அவரைக் கள்வனெனக் கூறிக் கொலை செய்து விட்டனர். அநீதி புரிந்த அரசே, என் பெயர் கண்ணகி என்பது.

பாண்டியன்: பெண் அணங்கே! நின் கணவன் கள்வனே. கள்வனைக் கோறல் கடுங்கோலாமோ? அஃது அரச நீதியே யாகும். நீயே யோசித்துப் பார்.

கண்ணகி: மதியிழந்த மன்னா, என் கணவர் மீது சாட்டப்பட்ட குற்றம் யாது? என் கணவர் சிலம் பைத் திருடியது உண்மைதானா?

பாண்டியன்: ஆம். என் தேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் அவனேதான். கையுங்களவுமாகப் பிடிப்பட்டவனைக் கொல்லுதல் கொடுங்கோலன்று.

கண்ணகி: நெறிதவறிய வேந்தே. கேள். என் கணவர் கள்வரல்லர். அவர் என் காற்சிலம்புகளில் ஒன்றை எடுத்து விற்கச் சென்றார். மற்றொரு சிலம்பு இதோ என்னிடத்தில் உள்ளது. அவரிடமிருநது கைப் பற்றிய சிலம்புடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள். உண்மை விளங்கும். மேலும், என் சிலம்புகட்கு அடை யாளமாக அவற்றுள் மாணிக்கப் பரல்களைக் காண லாம்; உடைத்துப் பாருங்கள்.

பாண்டியன்: நன்று. என் தேவியின் காற்சிலம்பு களில் முத்துப்பரல்களே இருக்கும். நின் கணவனிட

மிருந்து கைப்பற்றிய சிலம்பைக் கொண்டு வந்து உண்மையை அறிவோம்.

(கோவலனிடமிருந்து ஏவலர் கவர்ந்து வந்த சிலம்பு கொண்டுவரப்பட்டது.)

பாண்டியன் : அம்மையீர், இதுதான் நின் கணவரிடமிருந்த சிலம்பு. இது நின் கையிலுள்ள சிலம்பின் இணைச் சிலம்பே யாகும்.

கண்ணகி : சிலம்பை இதோ உடைக்கிறேன், என்ன பரல்கள் இருக்கின்றன என்று பாருங்கள்.

(கண்ணகி தன் கைச்சிலம்பை உடைக்கின்றாள். உள்ளிருந்த மாணிக்கப்பரல் அரசன் வாயில் தெறித்தது.)

பாண்டியன் : (பதை பதைத்து) அந்தோ! என் செய்தேன்! ஆராயாமல் அறிவிழந்தேனே! பொன் செய் கொல்லன் தன்சொற் கேட்ட யானோ அரசன்? யானே கள்வன்! மக்களை நீதியுடன் ஆண்ட பாண்டிய மன்னரின் பரம்பரைப் புகழ் என்னால் அழிந்ததே! நான் ஏன் இனி உயிர்வாழ வேண்டும்? என் ஆயுள் இன்றுடன் ஒழிக. ஒழிக என்னுயிர்!

(அரசன் மயங்கிக் கீழே விழுந்து மடிகிறான்.)

கோப்பெருந்தேவி : (நடு நடுங்கிக் கண்ணகியைப் பார்த்து) கற்புத் தெய்வமே! கணவரை இழந்தவர்க்கு இனி வேறு ஆறுதல் என்ன இருக்கிறது? என்னுயிர் கொண்டு அவருயிர் தேடுவேன்.

(அரசியும் கண்ணகியின் திருவடிகளில் வீழ்ந்து இறக்கிறாள்.)

பயிற்சி

பொருளறிக

ஈண்டு	கோடாத
கொற்கை	கோன்முறை
செழியன்	அணங்கு
பஞ்சவன்	பரல்
கொற்றவை	

விடை கூறுக :

1. கண்ணகி வாயிற் காவலனிடம் என்ன கூறினாள்?
2. காவலன் பாண்டியனிடம் சென்று என்ன தெரிவித்தான்?
3. சோழ நாடு நீதி நிறைந்த நாடு என்பதை விளக்கும் சான்றுகள் யாவை?

4. கண்ணகியும் கோவலனும் ஏன் மதுரைக்குச் சென்றனர்?

5. 'தன் கணவன் கள்வன் அல்லன்' என்பதைக் கண்ணகி எவ்வாறு மெய்ப்பித்தாள்?

6. 'யானோ அரசன்? யானே கள்வன்!'—இதனைக் கூறியவன் யார்? எப்போது? விளக்குக.

7 இப்பாடத்தில் பாண்டியனைக் குறிக்கும் சொற்களை எடுத்து எழுதுக.

கட்டுரை :

1. பாண்டியன் அரண்மனையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கண்ணகி நேரில் கூறுவதுபோல் ஒரு கட்டுரை வரைக.

2. சிபிச் சக்கரவர்த்தியின் வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

3. மனுநீதிச் சோழன் நீதியை நிலை நாட்டியது எங்ஙனம்? சுருக்கமாக ஒரு கட்டுரை எழுதுக.

4. இப்பாடம் உன் வகுப்பில் நடிக்கப்படும்போது நீ யாராக நடிப்பாய்? உன் விடைக்குக் காரணம் கூறுக.

இலக்கணம் :

யானோ அரசன்!—இஃது என்ன வாக்கியம்? பொருள் மாறுபடாமல் இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றுக.

நான் ஏன் இனி உயிர்வாழ வேண்டும்?—இஃது என்ன வாக்கியம்? இதனைப் பொருள் மாறுபடாமல் எதிர்மறைப் படுத்தி எழுதுக.

5. மாடுகளை வளர்த்தல்

நம் நாடு வயல்கள் நிறைந்த வளநாடு. நாட்டின் பெரும்பாலான மக்கள் வயல்கள் செறிந்த கிராமந்தரங்களிலேயே வதிகின்றனர். நம் நாட்டாரின் முக்கியமான தொழில் பயிர்த்தொழில். பயிர்த்தொழிலினால் தான் நமக்கு வேண்டிய உணவை நாம் பெறுகிறோம். உழவுத் தொழில் இன்றேல், மக்கள் உயிர் வாழார். இதனாலன்றோ, ஆசிரியர் திருவள்ளுவர்,

> " சுழன்று ஏர்ப்பின்ன துலகம் அதனால்
> உழந்தும் உழவே தலை "

என்று கூறியருளினார்? எனவே. உழுதொழில் புரிவோரே நாட்டு மக்களின் நற்றுணைவராவர்.

வேளாண் மக்களின் சிறந்த துணைவராயிருப்பவை மாடுகள். மாடுகள் மற்றவர்க்குப் பால் தருதல், வண்டி இழுத்தல், பொதி சுமத்தல் போன்ற பணிகளைச் செய்கின்றன. மனிதனின் குழந்தைப் பருவத்தும், முதுமைப் பருவத்தும் இன்றியமையாத உணவுப் பொருளாக விளங்குவது பால். பாலைக் கறந்து கொடுக்கும் பசுவை நம் நாட்டினர் **"கோமாதா"** என்று தாயன்பு காட்டி வளர்ப்பதினின்றே அதன் பெருமையை உணரலாகும். உடல்நலம் குன்றியவருக்கும் பசுவின்பால் உயிர்நாடியாக விளங்குகின்றது. எருதுகள் பாரவண்டிகளை இழுக்கின்றன; நிலத்தை உழுகின்றன; நிலம் வளமுடையதாக வேண்டிய உரத்தையும் தருகின்றன. கால் நடைகள் நமக்குப் பணி செய்து நம்மை உய்விப்பதற்காக வந்த **நாற்கால் நண்பர்கள்** என்று கூறலாம். நமக்காக உழைத்து நம் உயிரைக் காக்கும் கால் நடைகளை

அன்புடன் காத்து வருதல் நமக்குற்ற கடமையாகும். உழவுத் தொழிலில் தொடக்கத்திலிருந்து எருவிடுதல், நிலம் உழுதல், கபிலை அடித்தல், அறுவடை செய்தல், பிணை அடித்தல் போன்ற எல்லா வினைகட்கும் கால் நடைகளின் உதவி இன்றியமையாததாகும்.

மாடுகளை வளர்த்தல் நம் நாட்டினருக்கு நல்ல வருவாய் அளிக்கும் தொழில்களில் ஒன்றாகும். இதனை உணராதார் இத்தொழிலை மதியாமல், இத்தொழில் புரிவோரையும் இழித்துப் பேசுவது உண்டு. வெளி நாட்டினரோ கால் நடைப் பண்ணைகளை ஆங்காங்கே ஏற்படுத்தி, நல்ல ஊதியம் பெறுகின்றனர். உலகத்தில் **டென்மார்க்கு, ஹாலந்து, ஜெர்மனி** போன்ற நாடுகளில் கால் நடைகள் அதிகம். நம் நாட்டில் காங்கயம், ஓங்கோல், மைசூர், கத்தியவார், பஞ்சாப் முதலிய இடங்களில் உயர்தரமான மாடுகள் வளர்க்கப்படுகின்றன.


ஓங்கோல் காளை

உலகத்தில் உள்ள கால் நடைகளின் மொத்த எண்ணிக்கை 54 கோடியாகும் அதில் நம் தாய் நாட்டில் உள்ளவை 18 கோடியாகும். எகிப்து நாட்டில் நூறு ஏகர் நிலத்துக்கு 25 கால் நடைகளும், டச்சு

நாட்டில் 38 கால் நடைகளும் இருக்க, நம் நாட்டில் மட்டும் 67 கால் நடைகள் உள்ளன. ஏனைய நாடுகளின் தொகையைவிட இத்தொகை மிகப் பெரியதேயாகும். இவ்வளவையும் ஓம்புவதற்குப் போதுமான புற்றரைகளும், உணவுப் பொருள்களும் இன்மையால் அவற்றால் நாம் தக்க பலனை அடைவதில்லை. இக்காலத்தில் நம் நாட்டுக் கால் நடைகளின் நிலைமை இரங்கத் தக்கது. இந் நாட்டில் இருக்கும் கால்நடைகளில் சிறந்தனவாகக் கருதப்படுபவை காங்கயம் மாடுகளே. இவை பார்வைக்குப் பருத்து உயர்ந்திருக்கும். ஆயினும் கடினமான வேலைகளைச் செய்யா. நல்ல தீனி இன்றேல் இவை விரைவில் உடல் நலம் குன்றி நசித்து விடும். மைசூர் மாடுகளும் காங்கய மாடுகளும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருக்கும். காங்கயம் பசுக்கள் நிறையப் பால் கொடுப்பவை. ஓங்கோல் மாடுகள் பெரிதும் விவசாயிகளால் வளர்க்கப் படுபவை. அவை தொழில் புரிவதிலும், பால் கொடுப்பதிலும் சிறந்தவை. ஓங்கோல் காளைகள் வலிமை மிக்கவை. அவை பாரமான வண்டிகளையும் கலப்பைகளையும் இழுக்கக் கூடியவை. மேலும்,



காங்கயம் பசு.

புங்கனூர் இனம் என்னும் வேற்று இன மாடுகளும் உண்டு. இவை பயிர் வேலைக்கு மிகவும் பயன்படு பவை. புங்கனூர் மாடுகள் சித்தூர் மாவட்டத்தில் அதிகம். இவை மிகவும் கடினமான வேலைகளைச் செய்வதில்லை. இந்த இனத்து மாடுகளை கவனிப்பாரற்று, எண்ணிக்கையிற் குன்றலாயின. தற்காலத்தே புங்க னூர் இனக் கால்நடைகள் இல்லை என்றே சொல்லலாம்.

மாடு வளர்ப்பவர்கள் கவனிக்கவேண்டியவை பல உண்டு. உணவும் உறையுளும் மக்கள் உயிர் வாழ்க்கைக்கு எத்துணை இன்றியமையாதனவோ, அவ்வளவு மாடுகளுக்கும் அவசியமானவை. மழை, குளிர், வெயில் இவற்றால் மாடுகள் தாக்குறா வண்ணம் இருக்கத்தக்க தொழுவங்கள் வேண்டும். அத் தொழு வங்கள் போதுமான காற்றோட்டமும் வெளிச்சமும் பொருந்தியனவாக இருத்தல் வேண்டும். மாடுகளை நெடுநேரம் ஓர் இடத்தில் பிணித்து வைத்தல் கூடாது. அவற்றைக் குறிப்பிட்ட நேரங்களில் அவிழ்த்து விட்டு, காலார மேயும்படி செய்தல் நலம். கிராமங்களில் அங் கங்கே உள்ள புறறரைகளுக்கு மக்கள் தம் கால் நடை களை இங்ஙனம் ஓட்டிச் செல்வதுண்டு. மாடுகளைத் தொழுவத்தில் கட்டிவைக்கும் காலங்களில், அவற்றிற்கு உண்ண உணவும், பருக நீரும் போதுமான அளவு அளிக்க வேண்டும். வைக்கோல், புல் இவையே யன்றித் தவிடு, பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, தானி யப் பொட்டுக்கள் முதலியனவும் அவற்றின் சத்துள்ள உணவுப் பொருள்களாம். தொழுவத்தில் ஏற்படும் குப்பை, கூளங்களை நீக்கித் தூய்மையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பசுக்களை வளர்க்கும் பால் விற்பனையாளர் சிலர் கன்றுக்குப் பால்விடாமல் கறந்து பால் விற்பர். இதனினும் கொடுமை வேறுண்டோ? தான் ஈன்ற கன்று பாலின்றி வருந்துதல் கண்டு, தாய்ப்பசு இரங்குமன்றோ? கன்றுக் குட்டியும் நாளடைவில் உடல் உரம் குன்றி மாய்ந்து போகும். கன்றுக் குட்டியைச் சிலர் தம்முடைய அருமைக் குழந்தையைப்போல் சீராட்டி வளர்த்து வருதல் பாராட்டுதற்குரியதாகும். எருதுகளை வளர்க்கும் வண்டிக்காரர் சிலர் அவற்றை ஈவிரக்கமின்றி, எந்நேரமும் வண்டியிற்பூட்டி அல்லற் படுத்துவர். கழுத்து வீக்கம் பெறினும் அவற்றை நுகத்தடியிற் பூட்டித் துன்புறுத்துவர். இந்த அடாத செயல்களை விடுத்து, அன்பு முறையில் மாடுகளை வளர்ப்பதே பண்பும், பயனும் தருவதாகும். மாடுகளுக்கு நோய்கள் ஏற்படின், அவற்றைத் தக்க கால்நடை மருத்துவர்களிடம் காட்டிக் குணப்படுத்த வேண்டும். கால் நடை மருத்துவத்தின் பொருட்டு,அரசாங்கத்தார் ஆங்காங்கே கால்நடை மருத்துவசாலைகள் ஏற்படுத்தியுள்ளார்கள். சில சமயங்களில் மாடுகளுக்குத் தொற்றுவியாதிகள் ஏற்படுவதுண்டு. அவ் வமயங்களில், வியாதியுள்ள மாடுகளைத் தனியான இடத்தில் கட்டிக் கவனிக்க வேண்டும். மற்ற மாடுகளுடன் சேர்ந்து மேய விடுதல் கூடாது.

'கால் நடைகள் ஒரு நாட்டின் சிறந்த செல்வம்' என்று நம் பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றன. அக்காலத்தே மக்கள் கால்நடைகளைத் தம் உயிரினும் இனியனவாய்க் காத்து வந்தனர். ஓர் அரசன் வேற்றரசனுடன் போர் புரியுமுன் அவனுடைய நாட்டுக் கால்

நடைகளை ஊனம் ஒன்று மின்றிக் கவர்ந்து வருவது அக் கால வழக்கமாக இருந்தது. ஆனிரைகளின் சிறப்பை விளக்கவே கண்ணன் ஆயர்பாடியில் வதிந்தனன் போலும்! அசோகர் தம் ஆட்சியில் கால் நடைகட்கென ஆங்காங்கே மருத்துவசாலைகள் ஏற்படுத்தி இருந்தார். பொங்கல் முதலிய நன்னாட்களில் கால் நடைகளை அலங்கரித்துப் போற்றித் துதிக்கும் வழக்கம் நம்மவ ரிடையே இன்றும் இருப்பதைக் காணலாம். அவற்றிற் கென்றே **மாட்டுப் பொங்கல்** எனத் தனியான திரு நாள் கொண்டாடப்படுகிறது. கால் நடைகளின் விருத் திக்காக அரசாங்கத்தாரும், செல்வரும் மனமுவந்து பற்பல இடங்களிலும் மாட்டுப் பண்ணைகளை ஏற்படுத்து தல் நலம். மாடு வளர்த்தல் நாடு செழிக்கச் செய்யும் நற்பணிகளில் ஒன்று என்பதை மக்கள் அனைவரும் உணர வேண்டும்.

பயிற்சி

பொருளறிக :

வதிகின்றனர்	தாக்குருவண்ணம்
உழந்தும்	அல்லல்
நற்றுணை	நுகத்தடி
உரம்	ஊனம்
ஓம்புவது	ஆனிரை
உறையுள்	

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

நாளடைவில், சீராட்டி, குணப்படுத்த.

விடை தருக:

1. மாடு வளர்த்தல் நம் நாட்டின் முக்கியமான தொழில் ஆவது எப்படி?

2. மாடுகள் நாட்டு மக்களின் நற்றுணைவர் ஆவதெப்படி?

3. மக்கள் "கோமாதா" என்று ஏன் பசுவைப் பாராட்டுகின்றனர்?

4. மாடுகளால் மாந்தர்க்கு உண்டாகும் நன்மைகள் யாவை?

5. நம் நாட்டில் எந்த எந்த இடங்களில் உயர்தரமான மாடுகள் வளர்க்கப்படுகின்றன?

6. மாடு வளர்ப்பவர்கள் கவனிக்க வேண்டியவைகள் யாவை?

7. சிலர் மாடுகளை எவ்வாறு கொடுமைப் படுத்துகின்றனர்.

8. பண்டைக் காலத்தில் கால்நடைகளை நாட்டின் செல்வமாகப் பாராட்டினார்கள் என்பதற்குச் சான்று ஒன்று தருக.

9. மாட்டுப் பொங்கல் கொண்டாடப் படுவதின் நோக்க மென்ன?

கட்டுரைப் பயிற்சி:

1. கால் நடை வளர்த்தலைப் பற்றிச் சிறு கட்டுரை வரைக.

2. உங்களுக்கு அருகில் உள்ள ஒரு கால்நடை மருத்துவசாலைக்குச் சென்று அங்கு நீ காணும் காட்சிகளைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

6. ஒரு விநோத வழக்கு - I

வெனிஸ் என்னும் நகரம் உலகத்தில் வனப்பு வாய்ந்த ஒரு நகரமாகும். அஃது ஐரோப்பாக் கண்டத்தில் இத்தாலி நாட்டில் உள்ளது. முன்னொரு காலத்தில் அந்நகரில் **அந்தோனியோ** என்னும் செல்வத்திற் சிறந்த சீமான் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் பொருள் நிறைந்தவனாக இருந்ததற்கேற்ப அருளும் நிறைந்தவனாக விளங்கினான். இல்லையென்று தன்னை நாடி வந்தவர்க்கு இல்லையென்று சொல்லாமல் வேண்டிய உதவிகள் புரிந்தான். பொருள் முடையால் தன்னை அண்டிய வறிஞர்கட்கு வட்டியின்றிக் கடன் கொடுத்து உதவினான். அந்தோனியோவின் அருங்குணங்களைக் கண்டு அவனை எல்லோரும் போற்றினர்.

அந்தோனியோவுக்குப் **பஸ்ஸானியோ** என்னும் அருங்குண நண்பனொருவன் இருந்தான். இருவரும் உயிரும் உடலும், நகமும் தசையும்போல் இணைபிரியா நண்பர்களாயிருந்தனர். வாழ்விலும் தாழ்விலும் ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்புகொண்டு வாழ்ந்து வந்தனர். பஸ்ஸானியோ அந்தோனியோவைப் போல் அவ்வளவு செல்வன் அல்லன். ஆகையால் தன் நண்பனுக்குப் பொருள் வேண்டிய காலங்களில் அந்தோனியோ வேண்டிய பொருளுதவி புரிந்து வந்தான்.

இத்தகைய சிறந்த நண்பர்கள் வாழ்ந்த வெனிஸ் நகரில் ஒரு தீயோனும் இருந்தான். அவன் **ஷைலக்** என்னும் ஒரு கிழ வணிகன். ஷைலக் ஒரு பேராசைக்காரன்; ஏற்றவர்க்கு இம்மியும் ஈயாத உலோபி. தன்னிடம் கடன் பெற்ற ஏழை எளியவர்களிடம் அநியாய

மாக வட்டி வாங்கியும், கடன் செலுத்த முடியாதவரைப் பலவகையில் துன்புறுத்தியும் வந்தான். அந்தோ னியோவை விரும்பிப் போற்றிய வெனிஸ் மக்கள் ஷைலக்கைத் தூற்றினர். பெரும்பாலோர் அவனிடம் கடன் வாங்கப் பயந்து அந்தோனியோவை அண்டினர். ஷைலக்கின் கொடுமைகளைக் கவனித்த அந்தோனியோ அவன் பேராசைத் தன்மையை அடிக்கடிக் கண்டித்து வந்தான். அந்தோனியோவின் புகழ் நாடெங்கும் பர வக்கண்ட ஷைலக் உள்ளத்தில் பொருமை குடிகொண் டது. எனினும் ஷைலக் அதை வெளிக்குக் காட்டாமல் அந்தோனியோவைப் பழிவாங்கத் தக்க சமயம் பார்த் திருந்தான்.

இங்ஙனமிருக்க, அந்தோனியோவின் நண்பனுகிய பஸ்ஸானியோ **போர்ஷியா** என்னும் ஒரு செல்வக் குமரியை மணக்க விரும்பினுன். அவளைத் திருமணம் செய்துகொள்வதற்கு ஏற்ற செல்வம் தன்னிடமில் லாமையால் அந்தோனியோவின் உதவியை நாடினுன். அந்தோனியோவிடம் அவ்வமயத்தில் பொருள் இல்லை. அதற்குக் காரணம் அந்தோனியோவின் கப்பல்கள் சரக்கு ஏற்றி வெளி தேசங்களுக்குச் சென றிருந் தமையே யாகும். எனினும் அவன் தன் நண்பனுக்கு எப்படியேனும் உதவி செய்தல் வேண்டுமென அவா வினுன். அந்தோனியோ பஸ்ஸானியோவைப் பார்த்து, "ஆருயிர் நண்ப, கையில் பொருளில்லாத இச்சமயத் தில் நின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாமைக்கு வருந்துகிறேன். ஆயினும் உனக்குக் கடன் கொடுப் போர் வேறு எவரேனும் இருப்பின் நீ வேண்டிய தொகையைப் பெற்றுக்கொள். என் கப்பல்கள் ஊருக்

குத் திரும்பி வந்தவுடன் நான் அக்கடனைக் கொடுத்து விடுவதாகச் சொல்," என்றான்.

பஸ்ஸானியோ கடன் வாங்க ஷைலக்கிடமே செல்லவேண்டியவனானான்; அந்தோனியோவின் விருப்பத்தை ஷைலக்கிற்குத் தெரிவித்தான். அந்தோனியோவைப் பழிவாங்கத் தக்க சமயம் பார்த்திருந்த ஷைலக் மிகவும் மகிழ்ச்சி அடைந்து அவன் கேட்ட மூவாயிரம் பொன்னைக் கொடுக்க ஒப்புக்கொண்டான். வழக்கம் போல் வாங்கும் வட்டி இல்லாமலே கடன் கொடுக்க முன்வந்தான். அவன் அந்தோனியோவை வரவேற்று, "நீ என்னை இகழ்ந்தாலும் நான் உன் நண்பனாகவே இருக்க விரும்புகிறேன். இந்த மூவாயிரம் பொன்னுக்கும் வட்டி வேண்டாம். ஆனால் வேடிக்கையாக நாம் இருவரும் ஒரு பத்திரம் எழுதிக்கொள்வோம். குறித்த காலத்தில் என் பணத்தைத் திருப்பிக் கொடாவிடின் உன் உடம்பில் எப்பாகத்திலிருந்தாவது ஒரு பவுண்டு தசையை என் விருப்பம்போல் வெட்டி எடுத்துக் கொள்ளலாம் என்று உடன்படிக்கை செய்துகொள்வோம்?" என்றான்.

பஸ்ஸானியோ இந்தத் திட்டத்தை வெறுத்து அந்தோனியோவைப் பத்திரத்தில் கையெழுத்திட வேண்டாமென்று தடுத்தான். அந்தோனியோ விரைவில் தன் வியாபாரக் கப்பல்கள் திரும்பிவிடும் என்று துணிந்து ஷைலக்கின் பத்திரத்தில் கையெழுத்திட்டு மூவாயிரம் பொன்னையும் வாங்கிப் பஸ்ஸானியோவுக்குக் கொடுத்தான். பஸ்ஸானியோ நண்பனுக்கு நன்றி கூறிப் போர்ஷியாவைக் காண **பெல்மாண்ட்** என்னும் ஊருக்குச் சென்றான்.

போர்ஷியாவின் தந்தை இறக்கும் தருவாயில் இருந்தபோது அவள் திருமணத்தைப்பற்றி ஓர் ஏற்பாடு செய்திருந்தார். பொன், வெள்ளி, ஈயம் என்னும் தனித்தனி மூன்று உலோகங்களால் ஆன பெட்டிகளில் ஒன்றில் போர்ஷியாவின் படம் இருந்தது. முதல்தடவையாகவே அவளது படம் இருக்கும் பெட்டியைத் தேர்ந்தெடுப்பவர்க்கே அவள் மனைவியாவாள் என்பதே அந்த ஏற்பாடாகும். அதன்படி போர்ஷியாவை மணக்கப் பலர் முன்வந்தனர். அவர்களில் ஒருவன் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த இளவரசன். அவன் தங்கப் பெட்டியைத் தேர்ந்தெடுத்தான். அப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது அதில் ஒரு மனிதனின் மண்டை ஓடுதான் இருந்தது. அத்துடன் 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்னும் பழமொழி தீட்டப்பெற்ற ஓலையொன்றும் இருந்தது. அவனுக்குப் பின்னர், ஸ்பெயின் தேசத்து இளவரசன் ஒருவன் வந்தான். அவன் போர்ஷியா தன்னை நிச்சயமாக மணப்பாள் என்று நினைத்தான். அவன் வெள்ளிப் பெட்டியைத் தேர்ந்தெடுத்தான். அதில் ஒரு மடையனின் தலைப்படத்தையே கண்டான்; நாணத்தால் தலை குனிந்து தன் நாடு சென்றான்.

கடைசியாகவே பஸ்ஸானியோ வந்தான். அவனுடைய அழகிய தோற்றத்தைக் கண்ட போர்ஷியா அவனையே மணக்க விரும்பினாள். தவறான பெட்டியைத் தேர்ந்தெடுத்தால் என்ன செய்வது எனறு அஞ்சினாள். ஆனால் இன்னதுதான் சரியான பெட்டியென்று அவனுக்கு அவள் தெரிவிக்க விரும்பவில்லை. பஸ்ஸானியோ மூன்று பெட்டிகளையும் உற்றுக் கவனித்

தான். 'புறத்தில் பளபளப்பானவை அகத்தில் மங்கியும் இருக்கலாம்' என்று எண்ணி, பஸ்ஸானியோ ஈயப் பெட்டியைத் தேர்ந்தெடுத்தான். அவன் அப்பெட்டியைத் திறந்தான்; அதில் போர்ஷியாவின் உருவப் படத்தைக் கண்டு பேரின்பம் அடைந்தான். போர்ஷியாவும் களிப்படைந்தாள். இருவரும் விரைவில் திருமணம் புரிந்துகொள்ள விரும்பினர்.

பஸ்ஸானியோ பெல்மாண்டில் இன்பமாகக் காலங் கழித்து வரும்போது ஒருநாள் அந்தோனியோவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதனைப் பிரித்துப் படித்த பஸ்ஸானியோ திடுக்கிட்டு வருந்தினான். அக் கடிதத்தில்

அந்தோனியோவின் கப்பல்கள் புயறகாற்றில் மோதிக் கடலில் மூழ்கிவிட்டன என்றும், குறிப்பிட்ட நாள் தவறிவிட்டதால் அந்தோனியோ உயிரை இழக்க நேரிடும்

என்றும் எழுதப்பட்டிருந்தது. மேலும் ஷைலக்கின் ஒரே மகள் தன் ஆடை ஆபரணங்களுடன் அந்தோனியோவின் நண்பன் ஒருவனை மணக்க விரும்பி அவனுடன் வீட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டாள். இந்நிகழ்ச்சி ஷைலக்குக்கு அந்தோனியோவின்மேல் இருந்த ஆத்திரத்தைப் பன்மடங்கு தூண்டிவிட்டது. தான் இறப்பதற்கு முன் பஸ்ஸானியோவை ஒருமுறை பார்க்கவேண்டுமென்று அந்தோனியோ விரும்பினான்.

பயிற்சி

பொருளறிக :

வனப்பு	அண்டிய	அவாவினான்
பொருள் முடை	இம்மியும்	நாணம்

விடை கூறுக :

1. அந்தோனியோவின் அருங்குணங்கள் யாவை ?
2. ஷைலக் எப்படிப் பட்டவன் ?
3. ஷைலக் அந்தோனியோவை வெறுக்கக் காரணம் என்ன ?
4. பஸ்ஸானியோ ஏன் அந்தோனியோவிடம் பொருளுதவி விரும்பினான் ?
5. அந்தோனியோ பஸ்ஸானியோவுக்கு எவ்வாறு பொருளுதவி செய்தான் ?
6. போர்ஷியாவின் மண ஏற்பாடு யாது ?

7. ஒரு விநோத வழக்கு-II

'விளையாட்டே வினையாயிற்றே,' என்று வருந்திய பஸ்ஸானியோ எல்லா விவரங்களையும் போர்ஷியாவுக்குத் தெளிவாகக் கூறினான். அதுகேட்ட போர்ஷியா விரைவில் அவனைத் திருமணம் செய்து கொண்டாள். அவள் அவனைப் பார்த்து, "தங்கள் நன்மைக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்த அவ் வுத்தம நண்பனைத் தாங்கள் உடனே சென்று காணவேண்டும்; எவ்வளவு செல்வம் வேண்டுமாயினும் எடுத்துச் சென்று கடன் தொகையை விட இருபது மடங்குத் தொகை வேண்டுமாயினும் தந்து நண்பன் உயிரைக் காப்பாற்றுங்கள்," என்று கூறி விடையளித்தாள். பஸ்ஸானியோ அவளுக்கு நன்றிகூறி வெனிஸ் நகரத்துக்குப் புறப்பட்டான்.

பஸ்ஸானியோ அந்தோனியோவை நீதிமன்றத்தில் சந்தித்தான். ஷைலக் ஒரு புறத்தில் அந்தோனியோவைப் பழிவாங்கும் துணிவுடன் நின்றுகொண்டிருந்தான். அந்தோனியோ மனந்தளராமல் முகம் மலர்ந்து நின்றான். பஸ்ஸானியோ இவ்வளவும் தன்னால் நேர்ந்ததென்று வருத்தத்துடன் நின்றுகொண்டிருந்தான். அந்தோனியோ தான் பத்திரத்தின்படியே நடக்க ஒப்புக்கொள்வதாகவும், வெனிஸ் நகர வணிகர் வாக்குத் தவறுபவர் என்னும் இழிசொல் தன்னை அடையலாகாதென்றும் கூறினான். நீதிபதி ஷைலக்கைப் பார்த்துப் பஸ்ஸானியோ தரும் பணத்தைப் பெற்றுக்கொண்டு அந்தோனியோவை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடும்படி கேட்டார். அதற்கு ஷைலக், "நீதிபதி அவர்களே,

நான் பத்திரத்தின்படியேதான் நடப்பேன்; அந்தோனியோவை நான் மிகவும் வெறுக்கிறேன்," என்ருன்.

பஸ்ஸானியோ: ஷைலக், அப்படியாளுல் மனிதர்கள் வெறுப்பனவற்றைக் கொல்லத்தான் வேண்டுமா?

ஷைலக்: சட்டத்தின்படிதான் நான் நடப்பேன். வேறென்றும் நான் விரும்பேன்.

பஸ்ஸானியோ: ஷைலக், அந்தோனியோ கொடுக்க வேண்டிய பொருளைப்போல் உனக்கு இருமடங்கு பணம் தருவேன். அவரை விட்டு விடு.

ஷைலக்: அறுபதாயிரம் மடங்கு பணம் கொடுத்தாலும் எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டியது அந்தோனியோவின் உடலிலிருந்து ஒரு பவுண்டு தசையே.

பஸ்ஸானியோ: ஷைலக், நீ ஒரு கல்நெஞ்சன். பிறருக்குக் கருணை காட்ட மறுக்கும் உன்னிடம் பிறர் எவ்வாறு கருணை காட்டுவார்கள் என்பதை நினைத்துப் பார்.

ஷைலக்: ஒருவரிடமும் நான் கருணையை எதிர்பார்க்கவில்லை. நான் வேண்டுவது ஒரு பவுண்டு தசைதான்.

ஷைலக் ஒரு நீண்ட கத்தியை எடுத்துத் தீட்டிக் கொண்டிருந்தான். நீதிபதிக்கு என்ன தீர்ப்புக் கூறுவதென்று புரியவில்லை. நீதி ஒருபுறமிருக்க ஷைலக்கை மனமிரங்கச் செய்து அந்தோனியோவைக் காப்பாற்ற வேண்டுமென்று அவர் விரும்பினுர். நீதிபதி எவ்வளவு சொல்லியும் ஷைலக் அதற்கு இணங்கவில்லை.

அச்சமயம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞர் வந்து தோன்றினுர். அவர் **பெல்லாரியோ** என்னும் சட்ட

நிபுணரிடமிருந்து ஒரு கடிதம் கொண்டு வந்திருந்தார். அக் கடிதத்தில் தாம் அந்தோனியோவுக்காக வழக் காட விரும்பியதாகவும், உடல் நலமின்மையால் தனக் குப் பதிலாகப் **பெல்தாசர்** என்னும் ஓர் இளைஞரை அனுப்பி இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். நீதிபதி அவரை அந்தோனியோவுக்காக வாதிக்க அனுமதித்தார்.

அந்த வழக்கறிஞர் முதலில் அவர்களுடைய பத் திரத்தைப் படித்துப் பார்த்தார். பின்னர் ஷைலக்கைப் பார்த்து, " ஐயா, உம் பத்திரத்தில் கூறியபடியே நடந்து கொள்ள உமக்குச் சட்டம் இடம் கொடுக்கிறது. எனி னும் மனிதனுக்கு மனிதன் இரக்கம் காட்டவேண் டாமா? நாம் நம்மீது இரக்கம் காட்டவேண்டுமென்று தெய்வத்தை வேண்டுகிறோமல்லவா?" என்று நயம் படக் கூறினார். ஷைலக்கின் நெஞ்சம் சிறிதும் இளக வில்லை. பத்திரத்தின்படியே நடக்கவேண்டுமென்றான். அவர், "சரி, இனி வேறு வழியில்லை. பத்திரத்தில் கூறியபடி அந்தோனியோவின் உடம்பிலிருந்து ஷைலக் ஒரு பவுண்டு தசையை வெட்டிக்கொள்வதே நியாயம். அந்தோனியோ, சட்டப்படி உன் மார்பைக் காட்டு," என்றார். பின்னர் வழக்கறிஞர் அந்தோனியோவைப் பார்த்து, "நீ ஏதாவது பேசவேண்டுமா?" என்றார். அவன் சிறிதும் வருத்தமின்றி அமைதியாக, "ஒன்று மில்லை," என்றான். பின் பஸ்ஸானியோவைப் பார்த்து "நீ நலமாய் இரு: உன் துணைவியை நான் வாழ்த்திய தாகத் தெரிவி,' என்றான்.

ஷைலக், வீண் பொழுது போகிறதே என்று ஆத்தி ரப்பட்டான். நீதி மன்றத்தில் ஒரே பரபரப்பு ஏற்பட் டது. என்ன நேருமோ என்று எல்லோரும் திகைத்தனர்.

ஷைலக் நீதிபதியைப் பார்த்து, "நேரமாகிறது, விரைவில் தீர்ப்புக் கூறுங்கள்," என்று வேண்டினான். அதற்குள் பெல்தாசர் என்னும் அவ் வழக்கறிஞர் ஷைலக்கைப் பார்த்து, "தசையை நிறுக்கத் தராசு கொண்டு வந்திருக்கிறீரா?" என்றார்.

ஷைலக்: இதோ, தராசு சித்தமாக இருக்கிறது.

வழக்கறிஞர்: தசையை அறுக்கும்போது இரத்தம் ஒழுகுமே, அதை நிறுத்த மருத்துவரை அழைத்து வந்திருக்கிறீரா?

ஷைலக்: பத்திரத்தில் அப்படியொன்றும் கூறவில்லை.

வழக்கறிஞர்: சரி, அப்படியானால் அதில் கண்டபடியே தசையை அறுத்துக்கொள்.

ஷைலக் பேரின்பத்துடன் கத்தியைத் தீட்டிக்கொண்டு அந்தோனியோவைத் தன்பக்கம் அழைத்தான். வழக்கறிஞர் சட்டென்று ஷைலக்கை மறித்து, "ஐயா, பத்திரத்தில் குறிப்பிட்டபடி நீர் ஒரு பவுண்டு தசையைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்; ஒரு சொட்டுச் செந்நீரும் சிந்தக்கூடாது. நீர் வெட்டியெடுக்கும் தசை சரியாக ஒரு பவுண்டு இருக்க வேண்டும். சிறிதும் கூடவும் கூடாது; குறையவும் கூடாது. நீர் பத்திரத்தின்படிதான் நடக்க வேண்டும். தவறினால் சட்டம் மீறிய குற்றம் உம்மைச் சாரும். உம்முடைய செல்வமும், வீடும், சொத்தும் அரசாங்கத்தைச் சேர்ந்துவிடும்," என்றார்.

இதைக் கேட்டதும் ஷைலக் திடுக்கிட்டான். சபையோர் வழக்கறிஞர் நுண்ணறிவைக் கண்டு பாராட்டி

னர்; அந்தோனியோ உயிர் தப்பினான் என்று மகிழ்ச்சி கொண்டனர்.

ஷைலக் ஒன்றும் தோன்றாமல், "நீங்கள் முதலில் கூறியபடி பணம் கொடுங்கள், போதும்," என்றான். பஸ்ஸானியோவும் பணங் கொடுக்கச் சென்றான். பெல்தாசர் அவனைத் தடுத்து, ஷைலக்கைப் பார்த்து, "நீ பத்திரத்தின்படியே நடந்தாக வேண்டும். பணம் உனக்குத் தரமுடியாது. இவ்வூர் மனிதன் உயிரைக் கொல்ல நீ சதி செய்தாய். ஆகையால் உன் சொத்துக்கள் எல்லாம் நம் நாட்டுச் சட்டப்படி அரசாங்கத்தைச் சேர வேண்டும். உன்னையும் மரணதண்டனை யில்லாமல் விடுதலை செய்வது நீதிபதியின் விருப்பம்," என்றார்.

நீதிபதி தீர்ப்பு அளித்தார். ஷைலக் சொத்தின் ஒரு பாதி அரசாங்கத்திற்குச் சேர்ந்தது; மற்றொரு பாதி அவன் மகளுக்குச் சேர்ந்தது. ஷைலக் கோபத்துடன் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினான்.

பின்னர் மாறு வேடம் பூண்டு பெல்தாசராக வந்தவர் போர்ஷியாவே என்பதை அந்தோனியோவும் பஸ்ஸானியோவும் உணர்ந்து பேரானந்தம் கொண்டனர். போர்ஷியாவே தன் உறவினரான ஒரு சட்ட நிபுணரின் ஆலோசனைப்படி அங்ஙனம் செய்தாள் என்பதைக் கேள்வியுற்ற மக்கள் எல்லோரும் போர்ஷியாவின் நுண்ணறிவைப் புகழ்ந்தனர். இச்சமயத்தில் அந்தோனியோ கடலில் மூழ்கிவிட்டனவென்று எண்ணியிருந்த கப்பல்கள் மூன்றும் துறைமுகம் வந்து சேர்ந்தன. எல்லோரும் இன்பக் கடலில் மூழ்கினர்.

பயிற்சி

பொருளறிக :

இணங்கவில்லை — பரபரப்பு — நுண்ணறிவு
வழக்கறிஞர் — மருத்துவர் — சதி
நிபுணர்

வாக்கியங்களில் சேர்த்து எழுதுக :

நகமும் தசையும் போல், கண்டித்து, திடுக்கிட்டு, சட்டென்று, வெளியேறினான்.

விடை கூறுக :

1. அந்தோனியோவை விடுவிக்கப் பஸ்ஸானியோ என்ன செய்தான்?
2. போர்ஷியா எவ்வாறு நியாய சபையில் தோன்றினாள்?
3. வழக்கில் போர்ஷியா எவ்வாறு ஷைலக்கை வென்றாள்?
4. ஷைலக் எவ்வாறு தண்டிக்கப்பட்டான்?

கட்டுரைப் பயிற்சி :

உன்னை அந்தோனியோவாகப் பாவித்து நீ நேரில் கூறுவது போல் இக்கதையை மாற்றி எழுது.

தெரிந்துகொள் :

இக்கதை ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலக் கவிஞர் இயற்றிய வெனிஸ் வர்த்தகன் என்னும் கதையின் சுருக்கமாகும்.

8. இதுதான் 'பாங்கு'

மணிவண்ணனுக்குத் தேர்வு முடிந்துவிட்டது. வேனில் விடுமுறை ஆரம்பமாயிற்று. விடுமுறையை உல்லாசமாகக் கழிக்கும் பொருட்டு அவன் சென்னைக்குச் சென்றிருந்தான். சென்னையில்தான் அவன் அண்ணன் உத்தியோகத்தில் இருந்தான்.

மணிவண்ணனும் அவன் அண்ணனும் ஒரு நாள் கடைவீதிக்குச் சென்றார்கள். மணிவண்ணனுக்காக இரண்டு கோட்டுகளையும் சட்டைத் துணிகளையும் அவன் அண்ணன் வாங்கினான். வாங்கிய பிறகு, கடைக்காரனைப் பார்த்து, "மொத்தம் என்ன விலை ஆயிற்று?" என்றான். கடைக்காரன் "ரூ.36-11-0 ஆயிற்று என்று கூறி ஒரு பட்டியைக் கொடுத்தான். உடனே மணிவண்ணனின் அண்ணன், தன் கையிலிருந்த நீளமான ஒரு புத்தகத்தை எடுத்தான். அதில் ஒரு தாளில் முதன் முதலில் தேதியையும், அதன் கீழ்க் கடையின் பெயரையும் எழுதினான். பின்னர் தொகையையும் குறிப்பிட்டான்; அடியில் கையெழுத்திட்டான். இறுதியாக அத்தாளைத் தனியாகக் கிழித்துக் கடைக்காரனிடம் கொடுத்தான். பிறகு இருவரும் காரில் ஏறி சென்னைக் காட்சிகளைக் காணச் சென்றனர்.

மணிவண்ணன் : ஏன் அண்ணா, நீங்கள் கடைக்காரனுக்குப் பணத்தைக் கொடுக்காமல் ஏதோ ஒரு காகிதத்தைக் கிழித்துக் கொடுத்துவிட்டு வந்து விட்டீர்கள்?

அண்ணன் : அது வெறும் காகிதமா? இல்லை, இல்லை. அதைக் கொண்டுபோய்க் கொடுத்தால் உடனே பணம் கிடைத்துவிடும்.

மணி : யாரிடம் கொண்டுபோய்க் கொடுப்பது? வீட்டில் அண்ணியிடமா?

அண்ணன் : அடடே! அது என்ன, ஏதோ ஒரு சீட்டு என்று நினைத்தாயோ? அது சீட்டு அன்று. அதற்குத்தான் '**செக்**' என்று பெயர்.


3-4-1951
No. BL 49/8426
KARUNANIDHI BANK LTD.
MADRAS
கருணாநிதி பாங்க் லிமிடெட். சென்னை.
Pay...New Emporium.....or Bearer
Rupees...Thirty six and annas twelve only
Rs. 36-12-0
N.V. Sekar

மணி : செக்கா? அப்படி என்றால் என்ன அண்ணா?

அண்ணன் : அந்தத் தாளைக் கொண்டு போய்ப் பாங்கில் கொடுத்தால் உடனே பணம் கிடைக்கும். அதையே 'செக்' என்று கூறுவார்கள்.

மணி : பாங்கு என்பது என்ன? அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

அண்ணன் : சொல்லுகிறேன். ஆனால் முதலில் உன்னை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். நானும் உன் அண்ணியும் ஊருக்கு வரும்போது உனக்குப் பணம் தருகிறோமே, நீ அதை என்ன செய்கிறாய்?

மணி : அதைப் பத்திரமாக அம்மாவிடம் கொடுத்து வைப்பேன். வேண்டும்போது வாங்கிக் கொள்வேன்,

அண்ணன் : நானும் அப்படித்தான். கிடைக்கும் போது பணத்தை ஓரிடத்தில் கட்டி வைப்பேன். அவ்விடத்திற்குத்தான் **பாங்கு** என்று பெயர். அது பிறர் குறைந்த வட்டிக்குத் தரும் பணத்தை வாங்கிச் சிறிது உயர்ந்த வட்டிக்குக் கடன் கொடுத்து உதவும். ஒவ்வொரு பாங்குக்கும் கிளை நிலையங்களும் இருக்கின்றன.

மணி : அப்படியானால் பணக்காரர்களுக்குத் தான் பாங்கு உதவும் போலிருக்கிறது ?

அண்ணன் : அப்படிச் சொல்லி விடாதே. குறைந்த வருவாயுள்ளவர்களும் பணம் கட்டுகிறார்கள். அவர்கள் வருவாயில் சிறிது மீதம் செய்து முதலைத் திரட்டலாம். இம்முறை, **சேமிப்புக் கணக்கு** (சேவிங்ஸ் பாங்க்) எனப்படும். இதற்கும் வட்டி கிடைக்கும்.





மணி : அண்ணா, அப்படியானால் நீங்கள் வைத்திருக்கும் கணக்குக்கு என்ன பெயர் ?

அண்ணன் : நான் வைத்திருக்கும் கணக்குக்கு **நடப்புக் கணக்கு** என்று பெயர். சேமிப்புக் கணக்குக்கும் இதற்கும் சில வேற்றுமைகள் உண்டு. நடப்புக் கணக்கில் நான் வைத்துள்ள பணம் வேண்டும் போது வாங்கிக் கொள்ளலாம். ஆனால் சேமிப்புத் தொகையில் } ஒரு வாரத்தில் குறிப்பிட்ட அளவுக்கு

மேல் பணம் எடுக்க முடியாது. நடபபுக கணக்கிலுல் வியாபாரிகளுக்கு அதிக நன்மை உண்டு. சேமிப்புக் கணக்கிலுல் வியாபாரிகளுக்குப் பயனில்லே. நடப்புக் கணக்கில் சேமிப்புக் கணக்கைவிட வட்டி மிகவும் குறைவாகவுள்ளது.

மணி : சேமிப்புக் கணக்கில் பணம் போட்டால் எவ்வளவு வட்டி கிடைக்கும் ?

அண்ணன் : ரூபா நூற்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு வட்டி ரூபா ஒன்றரை அல்லது ரூபா இரண்டு கிடைக்கும்.

மணி : அண்ணு, அதைவிட அதிகமான வட்டி கிடைக்கும் முறை ஒன்றும் இல்லேயோ ?

அண்ணன் : தவணைக் கணக்கு (Fixed Deposit) என்று ஒரு கணக்கு இருக்கிறது. இரண்டு அல்லது மூன்று ஆண்டு என்று காலம் குறிப்பிட்டுப் பணத்தைக் கட்டுவதே இம் முறையாகும். இதில் ரூபா நூற்றுக்கு இரண்டே முக்கால் அல்லது மூன்று ரூபா வீதம் வட்டி கிடைக்கும். ஆனுல் இரண்டு ஆண்டு மூன்று ஆண்டு என்று நாம் தவணே குறிப்பிட்டுக் கட்டி விட்டால் அதற்கு இடையில் பணம் வாங்க முடியாது. தவணே முடிந்த பிறகுதான் வாங்கலாம்.

மணி : ஆமாம். கையில் இருக்கும் பணத்தை நாம் எதற்காக பாங்கில் போட்டு வைக்கவேண்டும்? அப்புறம் ஏன் செக்கைக் கொடுத்து பணம் வாங்க வேண்டும்?

அண்ணன் : எல்லாவற்றிற்கும் காரணம் உண்டு. வீட்டில் நாம் பணத்தை வைத்திருக்கும் போது, எவனுவது திருடன் அபகரித்துக் கொண்டு

போய்விட்டால் என்ன செய்வது? நம் பணத்தை நாம் பத்திரமாக வைத்திருப்பதற்குப் பாங்கு பயன்படுகிறது. அன்றியும் நாம் யாருக்காவது பணம் கொடுக்கவேண்டியிருந்தால் ஒவ்வொரு நாணயமாக எண்ணிக் கொடுக்க வேண்டியதில்லை. நான் கொடுத்ததைப்போல் 'செக்' கையே கொடுத்து விடலாம்.

மணி: அண்ணு, இப்பொழுது நீங்கள் எந்தக் கணக்கிலிருந்து பெறுவதற்குக் கடைக்காரனிடம் 'செக்' கைக் கொடுத்தீர்கள்?

அண்ணன்: நடப்புக் கணக்கிலிருந்து பெறுவதற்குச் செக்கைக் கொடுத்தேன். நான் வைத்திருப்பது நடப்புக் கணக்குதான்!

மணி: ஆமாம். இந்தப் பணத்தையெல்லாம் பாங்கில் என்ன செய்கிருர்கள்? அப்படியே இரும்புப் பெட்டியில் வைத்துப் பத்திரமாகப் பூட்டி வைக்கிருர்களா?

அண்ணன்: பூட்டி வைத்தால் பணம் செலுத்தியவர்களுக்கு எவ்வாறு வட்டி கொடுப்பது? இலாபம் பெறுவது எப்படி? வியாபாரிகளுக்கும், மற்றும் பணம் தேவையானவர்களுக்கும் பாங்கிலே கடன் கொடுக்கிருர்கள். வீடு, நகை, சாமான்களின்மேல் கடன் கொடுப்பார்கள். அவற்றிற்கு அதிகமாக வட்டி வாங்குவார்கள். மேலும் அயலூருக்கு '**டிராப்ட்**'டுகள் **(Drafts)** கொடுப்பார்கள். அதில் 'கமிஷன்' கிடைக்கும்.

மணி: 'டிராப்ட்டா'? அப்படியென்ருல்......?

அண்ணன்: திருச்சிராப்பள்ளியிலுள்ள ஒருவருக்கு நாம் 500 ரூபா அனுப்பவேண்டுமென்று வைத்

துக் கொள்வோம். இங்குள்ள ஒரு 'பாங்கி'ல் 500 ரூபாயையும் அதற்குறிய கமிஷனையும் கொடுத்தால் திருச்சிராப்பள்ளியிலுள்ள அவர்களின் கிளை நிலையத்துக்கு ஒரு 'டிராப்ட்' கொடுப்பார்கள். அதை நாம் அஞ்சலில் அவ்வூருக்கு அனுப்பிவிட்டால் அங்கு அதற்கு உடனே பணம் கிடைக்கும். அதுமட்டுமா? '**பில்**' என்று கேள்விப்பட்டிருக்கிருயா?

மணி: அண்ணு, அதையும் விளக்கிக் கூறுங்கள். கேட்கிறேன.

அண்ணன்: மதுரைக்கு இங்கிருந்து ஒருவர் ஏதோ ஒரு பொருளைப் புகைவண்டியில் அனுப்புகிருர். அனுப்பிவிட்டு, இரசீதையும் பட்டியலையும் பாங்கில் கொடுத்தால், மதுரைக் கிளைக்கு அந்தப் பட்டியலை அவர்கள் அனுப்பிவிடுவார்கள். அங்குள்ளவர் பணத்தைப் பெற்றுகொண்டு, இரசீதையும் பட்டியலையும் உரியவரிடம் கொடுப்பார்கள். இதற்கும் கமிஷன் உண்டு.

மணி: அண்ணு, பாங்குகளால் நமக்கு வேறு பயனும் உண்டோ?

அண்ணன்: மணி, வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்வதற்கும் இந்தப் பாங்குகள் உதவுகின்றன. இப்படிப் பல வழிகளில் நமக்குப் பயன்படுகின்றன. பாங்குகள் இல்லையேல் நம் நாட்டில் இவ்வளவுகூட வியாபாரம் பெருகி இருக்கவே இயலாது.

மணி: ஓகோ! இதுதான் 'பாங்கு' என்பதா? அண்ணு, தங்களால் இன்று பல அருமையான செய்திகளை அறிந்து கொண்டேன்.

பயிற்சி

பொருள் கூறுக :

தேர்வு　　　　இறுதியாக
வேனில் விடுமுறை　　　　அஞ்சல்

விடை கூறுக :

1. மணிவண்ணன் ஏன் சென்னைக்குச் சென்றான் ?
2. செக் என்றால் என்ன ? விளக்கிக் கூறுக.
3. பாங்கு என்றால் என்ன என்பதைப் பற்றி மணிவண்ணனுக்கு அவன் அண்ணன் எங்ஙனம் விளக்கிக் கூறினான் ?
4. 'சேமிப்புக் கணக்கு' என்றால் என்ன ?
5. நடப்புக் கணக்காவது யாது ?—இதனால் யாருக்கு நன்மை யதிகம் ? எப்படி ?
6. தவணைக் கணக்கு என்றால் என்ன ?
7. பாங்குகளால் நாம் அடையும் நன்மைகள் யாவை ?

தெரிந்துகொள் :

உன் பெற்றோர் அல்லது உறவினரின் பாங்குக் கணக்கு இருப்பின் அவர்களுடன் ஒரு நாளைக்குப் பாங்குக்குச் சென்று அதன் நடைமுறைகளைத் தெரிந்துகொள்.

9. சர் ஜகதீச சந்திர போஸ்

முற்காலத்தில் 'மரஞ் செடி கொடிகட்கும் உயிருண்டு; அவைகளும் நம்மைப்போலவே இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன' என்னும் உண்மையை மக்கள் உணரவில்லை. அவர்கள் அவற்றை உயிரில்



லாப் பொருள்களாகவே எண்ணி வந்தார்கள். இவ்வுண்மையைத் தகுந்த சோதனைகளின் மூலம் உலகத்தாருக்கு விளக்கிக் காட்டியவர் **சர் ஜகதீச சந்திர போஸ்** என்னும் இந்திய விஞ்ஞானியே யாவர். அவர்

ஓயாது உழைத்துத் தம் அரிய ஆராய்ச்சிகளால் மேலும் பற்பல புதுமைகளைக் கண்டு பிடித்தார்.

இந்திய நாட்டின் தவமணியாய் இலங்கிய சர் ஜகதீச சந்திரபோஸ் வங்காள மாகாணத்தில் **விக்ரம் பூர்** என்னும் சிற்றூரில் 1858-ல் பிறந்தார். அவருடைய தந்தையார் **பகவன் சந்திரபோஸ்** அவ்வூரிலேயே உதவி நீதிபதியாகப் பணியாற்றி வந்தார். அவர் அறிவும், ஆற்றலும், உண்மையும், ஒழுக்கமும் நிறைந்த உத்தமர். தந்தையார் தம் திருமகனுரையும் தம்மைப்போலவே நன்னெறிகளிற் பழக்கிவந்தார். அதனுல் ஜகதீசர் இளமையிலேயே அருங்குணங்களனைத்தும் வாய்க்கப்பெற்று எல்லோராலும் பாராட்டப் பெற்ருர்.

'விளையும்பயிர் முளையிலே தெரியும்' என்னும் பழமொழிக்கிணங்க, அவர் சிறுவயதிலிருந்தே எப்பொருளையும் கூர்ந்து பார்த்து ஆழ்ந்து சிந்திக்கும் தன்மையுடையவரா யிருந்தார். அவர் நாடோறும் தமக்குத் தோன்றும் ஐயப்பாடுகளைத் தம் தந்தையாருக்குக் கூறுவார். அவரிடம் அவ் வையங்களைத் தெளிந்த பின்னரே அவர் படுக்கைக்குச் செல்வது வழக்கம். தம் மைந்தனின் அறிவு நுட்பத்தைக் கண்ட தந்தையார் அவ் வையங்களுக்குப் பொருத்தமான விடைகளை அவர் உளங்கொள்ளுமாறு பொறுமையுடன் சொல்லுவார். ஜகதீசர் இங்ஙனம் அடிக்கடி தந்தையைத் தொந்தரவு செய்வது அவர்தம் பாட்டியாருக்குப் பிடிப்பதில்லை. "கேட்டவை போதுமடா ஜகதீஸ், அப்பா தூங்கட்டும், நீயும் போய்ப் படுத்துக்கொள்," என்று அவர் அடிக்கடிக் கூறுவார். அதற்கும் ஜகதீசர்

இசையாமல் தந்தையாருக்குத் தொலலே விளைப்பின் “என்னடா இது, நீ போய் தூங்கப் போகிருயா? அடி வாங்கப் போகிருயா?” என்று மிரட்டுவார். ஆனுல் ஜக தீசருக்கோ ஏதேனும் ஐயமிருப்பின் ஒருநாளும் தூக்கம் வருவதில்லே.

அவர் முதலில் தம் ஊரில் இருந்த ஆரம்பப்பள்ளி யில் படித்து வந்தார். படிப்படியாய்க் கற்றுக் கல்கத்தா வில் உள்ள செயிண்டு சேவியர் கல்லூரியிற் சேர்ந்து **பி. ஏ**. பட்டம் பெற்ருர். கல்லூரிப் படிப்பில் இயற்கைப் பாடத்தில் நம் ஜகதீசரே முதல் மாணவராக விளங்கி ஞர். அவர் தம் விஞ்ஞானப் புலமையை மேலும் வளர்த்தற் பொருட்டு இங்கிலாந்து சென்று கற்க விரும் பினர். அவர் தந்தையாரும் அதற்கிசைந்து வேண்டிய பொருளுதவியினே மனமுவந்து செய்தார். ஜகதீசர் இங்கிலாந்து சென்று 1885-இல் **பி. எஸ்ஸி**. என் னும் பட்டம் பெற்று விஞ்ஞானத்தில் ஒப்புயர்வற்றவ ராக விளங்கினர். அவர் இங்கிலாந்தில் தம் படிப்பு முடிந்ததும் தாய்நாடு திரும்பினர்.

அக்காலத்தே அரசப் பிரதிநிதியாய் இருந்தவர் **ரிப்பன் பிரபு** அவர்கள். இங்கிலாந்திலிருந்த தம் பேராசிரியர் **பாஸெட்** என்பவர் கொடுத்த கடிதத்தி ஞல் ரிப்பன் பிரபுவுக்குப் போஸ் நன்கு அறிமுக மானர். இங்கிலாந்திலிருந்து திரும்பியதும் அவரை ரிப்பன் பிரபு முகம் மலர்ந்து இனிது வரவேற்ருர். அவர் உதவியினுல் நம் ஜகதீசர் கல்கத்தா மாகாணக் கல்லூரியில் பூதநூற் பேராசிரியரானர். பேராசியராக இருந்தபோது அவர் அடிக்கடி இயற்கைத் தத்துவ ஆராய்ச்சிகள் பல புரிந்து தாம் கண்ட உண்மைகளேப்

பத்திரிகைகளில் வெளியிட்டு வந்தார். வரவர அவர் புகழ் உலகின் மூலை முடுக்குகளெல்லாம் பரவிவிட்டது. இலண்டன் ராயல் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட அவரது கட்டுரையொன்று உலகினர் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அக்கட்டுரை **மின்சார அலைகளைப் பற்றிய** தாகும். வங்காள அரசியலாரும் அவர்தம் பேராற்றலை வியந்து அவருக்கு வருடமொன்றுக்கு ரூபா 2500 உதவி செய்தனர். அவரது ஆராய்ச்சிக்கு வேண்டிய பிற உதவிகளையும் செய்தனர். மின்சார அலைகள் நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. எனினும் அவை ஒளி அலைகளைப் போலவே எங்கும் நிறைந்துள்ளனவென்பதை அவர் தாமே தயாரித்த நுட்பமான சிறு கருவிகளைக் கொண்டு அனைவருக்கும் புலப்படுத்தினர். அவர் அவ்வுண்மையை 1897-இல் இலண்டன் மாநகரத்தில் அனைவரும் வியக்கும் வண்ணம் பரிசோதனைகளால் விளக்கிக் காட்டினர். அவர்தம் அரிய ஆராய்ச்சித் திறனைக் கண்ட மேனாட்டு அறிஞர்கள் அவரைப் பெரிதும் பாராட்டினர்.

ஜகதீசர்பேரும்புகழும்பெருவதைக்கண்டு அழுக்காறடைந்த சில வெள்ளையர்கள் அவர் கண்ட புதுமைகள் அனைத்தும் முன்னரே தம் நாட்டு விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டனவென்று பொய்ப்பிரசாரம் புரிந்தனர். அவருடைய கட்டுரைகளும் ராயல் சங்கத்தாரின் பத்திரிகைகளில் வராமல் தடுத்தனர். அத்தகைய துன்பங்கள் நேர்ந்த போதும் போஸ் மனந் தளரவில்லை. மேலும் பற்பல உண்மைகளைக் காண்பதிலேயே அவர் மனம் முனைந்து நின்றது. கம்பிகளின் தொடர்பு இல்லாமல் மின்சார அலைகளைத் தூண்டிப்

பயன் படுத்தும் புதிய முறைகளையும் அவர் கண்டறிந்தார். இவ்வுண்மையை, மின்சார அலைகளைக் கம்பிகள் இன்றி மூன்று சுவர்களிடையே செலுத்தி, அங்கிருந்த கனமான பொருளை அப்புறப்படுத்தியும், அதனருகிலிருந்த மின்சார மணியை யடிக்கச் செய்தும், வெடி மருந்துத் திரளைப் பற்றவைத்தும் விளக்கினார். இச் சோதனையை நேரில் கண்ட மேனாட்டு அறிஞர்கள் பெரிதும் வியப்புற்று ஜகதீசரைப் பல படப் பாராட்டினர். ஒருசமயம் அவர் பாரிஸ் நகரில் பேசிய விஞ்ஞான சொற்பொழிவைக் கேட்டு **விவேகானந்த அடிகள்** மிகவும மகிழ்ச்சி அடைந்தார்.

ஜகதீச சந்திர போஸ் தாம் கண்ட உண்மைகள் பலவற்றைப் பற்றி ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் சொற்பொழிவுகள் பல ஆற்றிப் பெரும் புகழ் பெற்றார். அவர்தம் அரிய புலமைக்காக இலண்டன் நகரக் கலா சாலையார் **டாக்டர் ஆப் சைன்ஸ்** என்னும் பட்டமும், இந்திய அரசியலார் சர் என்னும் பட்டமும், **சி. ஐ. இ.**, **சி. எஸ். ஐ.**, என்ற பட்டங்களும் வழங்கினர்.

ஜகதீசர் கல்கத்தாவில் பெரிய ஆராய்ச்சிக் கூடமொன்றை நிறுவித் தாவரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் பலவற்றைச் செய்துவந்தார். அவர் கண்ட புதுமைகளில் தாவரங்களைப் பற்றியவை மிகவும் சிறப்புடையவை. மெய்வருத்தம் பாராமல் பல்லாண்டுகள் அவ்வாராய்ச்சியில் உழைத்துப் பலரும் வியக்கும் வண்ணம் பல அற்புதமான உண்மைகளை வெளியிட்டார். 'தாவரங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள நரம்புத் தொடர்பு ஒன்றே; மைமோசா என்னும் மரத்து வாழ்க்கை மனித

வாழ்க்கையை மெய்ப்பித்து விடுகிறது என்னு
உண்மையை அவர் வெளியிட்டார். தாவரங்களின்
வளர்ச்சியை நிமிடத்துக்கு ஒருமுறை அறிவிக்கக்கூடி
அற்புதமான கருவியொன்றையும் அவர் கண்டு பிடி
தார். தாவரங்களைச் சிறிது துன்புறுத்தினலும் அவை
நம்மைவிடத் துன்பம் அடைகின்றன என்பதை
போஸ் ஒரு சிறிய சோதனையால் விளக்கிக் காட்டின
'காபேஜ்' என்னும் முட்டைக் கோஸ் இலையைச் சி
தளவு கிள்ளி அதனைக் கொதிக்கும் நீரில் இ
டார். அது படும் வேதனையைத் தம் மின்சாரக் கரு
களின் மூலம் மக்களுக்குக் காட்டினர். கொதிக்கு
நீரில் அந்த இலைத்துண்டு அடைந்த வேதனை **அறிஞ**
பெர்னட்ஷாவின் மனத்தையும் உருகச் செய்தது. இ
னமே ஜகதீசர் மதுவின் மயக்கத்தால் தாவர
கள் ஆடும் விதத்தையும், விஷத்தை உண்டா
அவை இறந்து போகும் தன்மையையும், அவை
மைப் போலவே தூங்கும் விதத்தையும் மின்சாரக்
விகள் மூலம் காட்டினர். 'ஓரிடத்தில் நோயுற்றிருக்கு
செடிகளுக்கு மயக்க மருந்து கொடுத்து மயக்கமு
செய்து அவற்றை வேரோடு பிடுங்கி வேறிடத்தி
நட்டு மயக்க மருந்தை எடுத்துவிட்டால் அவை மு
போலவே செழித்து வளருகின்றன என்பதை
அவர் மக்களுக்குப் புலப்படுத்தினர். மக்கள் அவ
றைக் கண்டு பெரு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்த
கள்.

ஜகதீசர் தாம் திரட்டிய முழுச் செல்வத்தை
மற்றும் பல பெருஞ் செல்வர்கள் அளித்த நன்கொ
களுடன் சேர்த்துக் கல்கத்தாவில் ஒரு விஞ்ஞா

ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தினார். அங்குத் தாவரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளுக்கென எல்லா வசதிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அவ் வாராய்ச்சி நிலையத்துக்கு நம் நாட்டு மாணவர்களேயன்றி, பிறநாட்டு மாணவர்களும் வந்து புதுமுறை ஆராய்ச்சிகளை உணர்ந்து செல்கின்றனர். ஜகதீசர் 1937-ஆம் ஆண்டில் தம் ஊனுடலை நீத்துப் புகழுடம்பெய்தினார். அவர் ஆற்றிய விஞ்ஞானத் தொண்டினால் நம் இந்திய நாட்டுக்கே ஒரு தனிப் பெருமை உண்டாயிற்று. 'உழைப்பு உயர்வை அளிக்கும்' என்னும் நீதியை நிலைநாட்டிய சர் ஜகதீச சந்திர போஸ் அவர்கள் திருப்புகழ் இவ்வுலகம் உள்ளளவும் நின்று நிலவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பயிற்சி

பொருளறிக:

இசைந்து	முனைந்து	ஊனுடல்
பிரதிநிதி	தொடர்பு	நீத்து
பூதநூல்	வேதனை	

வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

நாடோறும், உளங்கொள்ளுமாறு, படிப்படியாய், ஒப்புயர்வற்ற, மூலைமுடுக்குகளெல்லாம், எள்ளளவும், உள்ளளவும்.

விடை கூறுக:

1 ஜகதீசர் தந்தை யார்? அவர் தம் மகனைச் சிறு வயதில் எவ்வாறு பழக்கினார்?

2. 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்னும் பழமொழிக்கிணங்க ஜகதீசர் இளமையில் எவ்வாறு இருந்தார்?

3. ஜகதீசர் எவ்வாறு கல்வி பயின்றார்?

4. மின்சார அலைகளைப்பற்றி ஜகதீசர் கண்ட உண்மை யாது?

5. கம்பி இல்லாமல் மின்சார அலைகளைச் செலுத்தும் முறையை அவர் எங்ஙனம் விளக்கிக் காட்டினார்?

6. தாவரங்களைப் பற்றி அவர் கூறிய முடிவு யாது? அதை எங்ஙனம் விளக்கினார்?

இலக்கணம் :

1. இப்பாடத்தில் வந்துள்ள சிற்றூர், போற்றல், பெருஞ் செல்வம், எள்ளளவு, ஐயமில்லை என்னும் சொற்களைப் பிரித்துக் காட்டுக.

2. ஜகதீசர் கல்கத்தாவில் பெரிய ஆராய்ச்சிக் கூடமொன்றை நிறுவித் தாவரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் பலவற்றைச்செய்து வந்தார்.—இவ்வாக்கியத்தை இரண்டு வாக்கியமாகப் பிரித்து எழுதுக.

3. தந்தையார் தம் திருமகனாரையும் தம்மைப் போலவே நன்னெறிகளிற் பழக்கி வந்தார். அதனால் ஜகதீசர் இளமையிலேயே அருங்குணங்களனைத்தும் வாய்க்கப் பெற்றார்.—இவ்விரண்டு வாக்கியங்களை ஓரே வாக்கியமாகச் சேர்த்து எழுதுக.

10. மாண்டவன் மீண்டான்

முன்னொரு காலத்தில் ஓரூரில் கண்ணன் என்னும் சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு மைத்துனர் இருந்தனர். ஒருவர் பெயர் சத்தியநாதன். மற்றொருவர் பெயர் சாமிநாதன். இருவரும் அவ்வூரில் பெயர் பெற்ற நடிகர்கள். அவர்கள் நாடக மேடையில் தோன்றுவார்கள் என்னும் செய்தியறிந்தால் மக்கள் திரள்திரளாகக் கூடிவிடுவர். ஆனால் இவ்விரு நடிகரிடையே மாறாத உட்பகை இருந்தது.

ஒரு சமயம் அவ்வூரில் அரிச்சந்திர நாடகம் நடைபெற்றது. அந்நாடகத்தின் பதினெட்டுக் காண்டங்களும் பதினெட்டு இரவில் நடைபெற்றன. அக் காலத்தில் நாடகம் நடைபெறுவதென்றால் நடிகர்களின்சுற்றத்தினர்கள் மேடையில் வந்து தத்தம் உறவினர் முதல் தடவையாக வேடத்துடன் திரைக்கு வெளியே தோன்றியதும் மாலை, ஆடை, ஆபரணங்கள் முதலிய மரியாதைகள் செய்வதுண்டு. முற்றும் துறந்த முனிவராகத் தோன்றும் விசுவாமித்திர முனிவருக்கு ஒரு கைக்கடியாரம் அன்பளிப்பாகக் கிடைக்கும். அந்தணருக்கு அடிமையான சந்திரமதிக்கு ஒரு தங்கச் சங்கிலி மரியாதையாக வரும். தோட்டிக்கு ஆட்பட்ட அரிச்சந்திரன் கழுத்தில் பட்டாடைகள் தோற்றமளிக்கும். இவற்றைப் பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

ஒருநாள் இரவு அரிச்சந்திர நாடகத்தில் **மயான காண்டம்** நடைபெற்றது. அன்றைய நாடகத்தில் சத்தியநாதன் அரிச்சந்திரனாகவும், சாமிநாதன் சந்திரமதியாகவும் வேடம் பூண்டனர். இச் செய்தியை அறிந்த

ஊர்மக்கள் எள் விழுவதற்கும் இடமில்லாத வண்ணம் நாடகமேடைக்கருகில் இடம் தேடிக்கொண்டனர்.

கண்ணன் அன்று லோகிதாசனாக நடித்தான். பாவம்! அந்தணர் கட்டளைப்படி தருப்பை கொய்யச் சென்ற லோகிதாசன் அரவந்தீண்டி இறந்தான். அச் செய்தியை உடன்சென்ற அயலகத்துச் சிறுவர்கள் சந்திரமதியிடம் தெரிவித்தார்கள். அத் துன்பச் செய்தியைக் கேட்ட சந்திரமதி இடியுண்ட நாகம்போலத் துடிதுடித்தாள். "ஐயிருதிங்கள் அணிவயிற்றில் தாங்கிப் பெற்ற என் அருமைச்செல்வன் மாய்ந்தானோ? அந்தோ! தெய்வமே! இனி என் செய்வேன்?" என்று அரற்றினாள். அயலகத்துப் பிள்ளைகள் கூறிய வழியறிந்து ஆலமரமொன்றை அடைந்தாள். அதனருகே தன் இறந்த மைந்தன் லோகிதாசன் வாடிய கொடிபோல் கிடப்பதைக் கண்ட சந்திரமதி அவனை வாரி அணைத்து ஓவென அலறினாள். இவ் விடங்களில் சந்திரமதியின் உருக்கமான நடிப்பைக்கண்டு மக்கள் அனைவரும் கண்ணீர் விட்டனர். 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டவன் மீள்வதில்லை' எனத் தேறிய சந்திரமதி தன் மைந்தனை அடக்கம் செய்வதற்காக மயானத்துக்குப் புறப்பட்டாள்.

மயானத்தில் அரிச்சந்திரனாகிய சத்தியநாதன் தோட்டி வேடத்தில் தோற்றமளித்தார். அரிச்சந்திரன் வீரபாகு என்னும் தோட்டிக்கு அடிமையாகிச் சுடுகாட்டைக் காவல் புரியும் கடமை உடையவனானான். அன்று சந்திரமதியாக வேடம் தரித்த மைத்துனருக்கு கண்ணனின் அண்ணன் ஒரு தங்க மோதிரத்தைப் பரிசாக அளித்தான். அரிச்சந்திரனாகிய மைத்துனரே முதல்நாள்

இரவு இந்திரனாகவும் வேடம் பூண்டதால் அன்றே அவருக்கு ஒரு தங்க மோதிரம் பரிசாக அளிக்கப்பட்டது. எனவே மயான காண்டத்தில் அரிச்சந்திரனுக்கு மட்டும் மரியாதை செய்யவில்லை. சந்திரமதி மேடையில் தோன்றியதும் தங்கமோதிரம் பெற்றதை அறிந்த அரிச்சந்திரன் வேடத்திலிருந்த சத்தியநாதன் தமக்கும் அன்று ஒரு தங்கமோதிரம் பரிசாகக் கிடைக்குமென்று நினைத்தார். ஆனால் அது கிடைக்காமற் போகவே அவர் பங்காளி மீதிருந்த அழுக்காறு மேலும் வளர்ந்தது.

சந்திரமதி தன் மைந்தன் பிணத்தைச் சுடுகாட்டில் ஒரு மூலையில் கிடத்தி, அங்குமிங்கும் இறைந்து கிடந்த கட்டைகளையும் எரிமுட்டைகளையும் பொறுக்கலானாள். அரிச்சந்திரன் சந்திரமதியைக் கண்டு, ஆத்திரம் கொண்டு, "காற்பணமும், முழத்துண்டும், வாய்க்கரிசியும் இன்றிப் பிணம் சுடலாகாது. என் தலைவனின் கட்டளை இதுவாகும்," என்றான். அது கேட்ட சந்திரமதி "அப்பா, நானோ திக்கற்ற ஏழை. காற்பணத்துக்கும், முழத்துண்டுக்கும், வாய்க்கரிசிக்கும் நானெங்கே போவேன்? என்மீது இரக்கம் காட்டி இறந்த என் மகனைச் சுடுவதற்கு இசைவு தரவேண்டும். உனக்கு ஆயிரம் புண்ணியம் உண்டு," என்று இரந்தாள்.

அரிச்சந்திரன் அதற்குச் சிறிதும் இசையவில்லை. சந்திரமதி அரிச்சந்திரனை மீண்டும் மீண்டும் வேண்டிப் பாடிய அழுகைப் பாட்டு இராகமாலிகையில் மிக மிக உருக்கமாக இருந்தது. நாடகம் பார்த்த மக்கள் அனைவரும், "நன்று, நன்று," எனக் கைதட்டிப் பாராட்டினர். இந் நிகழ்ச்சி அரிச்சந்திரனாக வேடம் தரித்த சத்தியநாதனின் அழுக்காற்றைக் கொழுந்துவிட்டு எரி

யச் செய்தது. சந்திரமதி எவ்வளவுதான் வேண்டியும் அரிச்சந்திரன் இம்மியும் ஒப்பவில்லை. முடிவாக அவன் உள்ளத்திலிருந்து எழுந்த ஆத்திரத்தால், தன்னையே மறந்து சந்திரமதியின் தலையில் எட்டி உதைத்தான். "அடி கள்ளி, உன்னிடம் ஒன்றுமில்லை என்று பாசாங்கு செய்கிருயே! இப்போது உன் மைத்துனன் தந்த மோதிரம் இருக்கிறதே! அதையாவது கொடுக்கக் கூடாதா?" என்று வெடுவெடுப்பாகப் பேசினுன். அரிச்சந்திரன் ஓங்கி உதைத்ததின் பயனுகச் சந்திரமதியின் தலைமயிர் கீழே விழுந்தது. அந்த உதை செத்துப்போன லோகிதாசனுக இருந்த கண்ணன் முதுகிலும் பட்டதால் அவன், "ஐயோ! அப்பா! அம்மா!." என்று அலறி எழுந்து உயிருடன் நாடக மேடைக்கு உட்புறம் ஓடிவிட்டான். அரிச்சந்திரனுக நடித்தவரும் சந்திரமதியாக நடித்தவரும் ஆடைகளை இழுத்துக் கட்டிக்கொண்டு மற்போருக்கும் சித்தமாகிவிட்டார்கள்.

திரை விடப்பட்டது. வெளியில் மக்கள் கை தட்டலின் ஒலி வானைப் பிளந்தது. எல்லோரும் வயிறு குலுங்கச் சிரித்து வீடு போய்ச் சேர்ந்தார்கள். நாடக நிகழச்சிக்குப் பின்னர் சில நாட்கள் கழித்துச் சத்தியநாதனும் சாமிநாதனும் உட்பகை நீங்கி அன்புடன் பழகினுர்கள். அவர்கள் அளவளாவும் போதெல்லாம் மயான காண்டத்தை எண்ணி எண்ணிச் சிரிப்பார்கள்.

பயிற்சி

பொருளறிக :

காண்டம்	மயானம்	இசைவு
துறந்த	அகம்	மற்போர்
ஆட்பட்ட	காற்பணம்	

வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

ஆட்பட்ட, எள் விழவும் இடமில்லாதபடி, நாளடைவில், இம்மியும், வயிறு குலுங்க.

விடை கூறுக :

1. நாடகத்தில் தோன்றிய நடிகர்களுக்கு அவர்தம் உறவினர் எவ்வாறு மரியாதை செலுத்தினர்?

2. எந்த நிகழ்ச்சிகள் பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருக்கும்?

3. மைந்தன் இறந்தது கேட்ட சந்திரமதி யடைந்த துன்பங்கள் யாவை?

4. சத்தியநாதனின் அழுக்காறு கொழுந்து விட்டெரியக் காரணம் என்ன?

5. மாண்ட லோகிதாசன் எவ்வாறு உயிர் பெற்றான்?

6. இக் கதையில் காணப்படும் நகைச்சுவைப் பகுதிகளைக் குறிப்பிடு.

இலக்கணம்

1. ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ?—இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

2. சந்திரமதி. "அப்பா, நானோ திக்கற்ற ஏழை. காற்பணத்துக்கும், முழத்துண்டுக்கும், வாய்க்கரிசிக்கும் நானெங்கே போவேன்?" என்றாள்.—இவ் வாக்கியத்தில் உள்ள மேற்கோள் குறிகளை நீக்கிப் பொருள் மாறாமல் அயல் கூற்றாக மாற்றி எழுதுக.

11. பாலாற்றங் கரையில்

135, பவழக்காரத் தெரு,
சென்னை,
4-11-1953.

அன்புள்ள புகழேந்தி,

வணக்கம். இங்கு யாவரும் நலம். அங்கு எல்லோரும் நலமா?

சென்றவாரம் என் தந்தையும் நானும் பார்த்த ஒரு சிறந்த பள்ளிக்கூடத்தைப்பற்றியும், அதன் நடைமுறைகளைக் குறித்தும் உனக்குக் கடிதம் எழுத விரும்பினேன். அவ் விவரங்களை நீ இதிற் காணலாம்.

என் தந்தையாரிடம் அடிக்கடி ஒரு பெரியவர் வந்து 'அண்ணா, தங்கள் எங்ஙனமேனும் ஒரு முறை எமது பள்ளியைப் பார்வையிட வேண்டுமென்று அழைப்பதுண்டு. அவர்தாம் வாலாஜாபாத் இந்துமத பாடசாலைத் தலைவர் திருவாளர் வா. தி. மாசிலாமணி முதலியார் என்று என் தந்தையார் எனக்கு அறிமுகப் படுத்தினார். அவருடைய விருப்பத்திற்கிணங்கி என் தந்தையும் நானும் 5-10-'53-ல் வாலாஜாபாத்துக்

குப் புறப்பட்டோம். நாங்கள் இவர்ந்து சென்ற மோட்டார் வண்டி எங்களைப் பள்ளிவாயிலுக்கே நேராகக் கொண்டு போய்ச் சேர்த்தது.

பள்ளித் தலைவரும், செயலாளர் திருவாளர் தணிகையரசும் எங்கள் வருகை கண்டு இருகை கூப்பி அகமும் முகமும் மலர்ந்து வரவேற்றனர். விருந்தினர் இல்லத்தில் நாங்கள் தங்கி இருப்பதற்கேற்ற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

இப்பள்ளி ஓர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியேயாயினும் இதன் இருப்பிடமும், நடை முறைகளும் கண்டு வியவாதார் எவருமிலர். ஆண்டு தோறும் பற்பல கல்வித் துறை அலுவலர்களும், அரசாங்கத் துறையினரும், அமைச்சர்களும் இங்குப் போந்து பள்ளியைப் பாராட்டியுள்ளனர்.

வாலாஜாபாத் காஞ்சிபுரத்துக்கும் செங்கற்பட்டுக்கும் இடையில் உள்ள ஓர் சிற்றூர். ஊருக்கு அப்பால் ஓடும் பாலாற்றங் கரையில்தான் இப்பள்ளி அமைந்துள்ளது. இயற்கை வளம் செறிந்த இடத்தில் அமைந்திருக்கும் இப்பள்ளி பண்டைக் குருகுலங்களைப் போல் காட்சி அளிக்கிறது. ஆற்றின் கரையோரத்தில் தண்ணீர் சலசல வென்று பளிங்கு போன்று ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கப்பால் பார்வைக்கெட்டிய தூரம் பரவியுள்ள வெண்மணற் பரப்பு கண்ணைக் கவர்கிறது.

கல்வியை வெறும் ஏட்டுப் படிப்பாகச் செய்து விடாமல் இப்பள்ளியிற் பயிலும் மாணவர்களுக்குப் பிற்கால வாழ்வில் தாமே வருவாய் தேடிக் கொள்ளும் வண்ணம் தொழிற்கல்வியும் போதிக்கப் படுகிறது. இங்குள்ள விடுதியில் வதியும் நூற்றுக்கணக்கான மாண

வர்கள் சாதிசமய வேறுபாடின்றிக் கலந்து பழகும் பண்பும் சீரியஒழுக்கமும் நிறைந்து விளங்குகிறார்கள். இவர்களனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்போல் ஒன்றுபட்டு வாழும் உயர்பண்பு பாராட்டற்குரிய தன்றோ? இங்கு நெசவுத் தொழில், தச்சுவேலை, தையல் வேலை, பைண்டுவேலை, பாத்திரங்களுக்கு ஈயம் பூசுதல், பொத்தான் செய்தல், விளையாட்டுச் சாமான்கள் செய்தல் போன்ற கைத்தொழில்கள் திறமைவாய்ந்த தொழிலாசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.

இப்பள்ளியில் உள்ள **ஞானசம்பந்தர் நூல் நிலயத்தில்** ஆயிரக்கணக்கான தமிழ்நூல்களும் ஆங்கில நூல்களும் உள்ளன. இவற்றைப் பள்ளிமாணவர்களே யன்றி உள்ளூர்ப் பொதுமக்களும் படித்துப் பயன்பெறுகிறார்கள். மற்றும் வாகீசர் இலவச இதழ்நிலையம் என்னும் படிப்பகமும், மெய்கண்டார் மாணவர் கழகம், சுந்தரானந்தர் இசையரங்கு, நாடகமன்றம், வீமன் விளையாட்டு வெற்றிப்படை, சாரணர்குழு, குருளையர் கூட்டம் என்னும் பல்வகை இயக்கங்களும் இப் பள்ளியில் அமைந்துள்ளன. இவற்றில் எல்லா மாணவர்களும் பங்கு கொண்டு பயன்பெறுகின்றனர்.

மாணவர் விடுதியின் அமைப்பும் நடை முறைகளும் எங்கள் கருத்தைக் கவர்ந்தன. இவ் விடுதியின் பெயர் **வள்ளலார் இல்லம்** என்பதாகும். இவ்வில்லத்தில் 550 மாணவர்கட்குமேல் உள்ளனர். மாணவரில்லத்தை எங்களுக்குக் காட்டிய திரு. தணிகையரசர் அதன் ஒருநாள் நிகழ்ச்சியை நன்கு விளக்கிக் கூறினார். மாணவரில்லத்தில் ஒவ்வொரு நாளும் விடியல் ஐந்து மணிக்கு அன்புமணி

அடிக்கும். அன்புமணி கேட்டதும் அனைவரும் விழித் தெழுவர்; அப்படியே படுக்கையில் உட்கார்ந்து கைகளைக் கூப்பிக் கடவுளை எண்ணி ஒரு விண்ணப்பம் செய்வர்; பின்னர்க் காலைக் கடனாற்றி வந்து, ஆசிரியர்



முன்பு அணி அணியாக அமர்ந்து அன்றுடப் பாடங் களைப் படித்து ஏழு மணிக்குமேல் இல்லத்துப் பணி களை இனிதாகச் செய்வர்; பாலாற்றுக் கால் நீரில் பாங் குடன் நீராடுவர். அதன் பின் காலை எட்டு மணிக்கு உணவு கொள்வர்; காலை மாலை பள்ளிக்குச் சென்று, இடையில் பன்னிரண்டு மணிக்குப் பகலுணவு கொள் வர்; மாலையில் பள்ளியினின்று திரும்பியதும் சிற் றுண்டி கொண்டு விளையாடுவர்; ஆறுமணிக்கு எங்கும் நிறைந்த இறைவனை அன்புடன் வணங்குவர்; பிறகு பாடங்களைப் பிழையறப் படித்து, இரவு எட்டு மணிக்கு

உணவு உண்பர். ஒன்பது மணிக்கு அமைதி மணி கேட்கும். உடனே ஆண்டவன் நினைவோடு அன்றுடம் செய்தவற்றை எண்ணிப் பார்த்து, நல்லவற்றிற்காக நன்றி தெரிவித்து, அல்லவற்றிற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு படுத்து உறங்குவர்.

மாணவர் இல்லத்து வேலைகளையெல்லாம் பணியாளர் இன்றி மாணவர்களே செய்யும் திறனைக்கண்டு நாங்கள் ஆச்சரியப்பட்டோம். இல்லத்து உண்டி, உறையுள், கருவூலம், காய்கறித் தோட்டம் இவற்றின தொடர்புள்ள எல்லாப் பணிகளையும் மாணவர்களே தங்களுக்குள் முறையிட்டுக்கொண்டு செய்துகொள்ளுகின்றனர். பயிர்ப் பண்ணையிலிருந்து காய்கறிகளைப் பறித்துக் கொணர்வர் சிலர். அவற்றைச் சமயலுக்குத் தக்கவாறு நறுக்கிக் கொடுப்பர் சிலர் ; பாலாற்றின் நீரூற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவர் சிலர் ; விளக்குகளைத் துடைத்து நெய்யிட்டு வைப்பர் சிலர். சீர்கெட்ட மின் விளக்குகளையும் செப்பம் செய்வர் சிலர். இல்லத்தைப் பரந்த விளக்குமாற்றால் தூய்மை செய்வதும், உணவு பரிமாறிக்கொண்டு உண்பதும், உண்ட பின்னர் பாத்திரங்களைத் துலக்கி, அவற்றைப் பாதுகாத்தலும் மாணவர்களே புரியும் பணிகள் என்பதைக் கேட்க நீயும் வியப்புறுவாய் என்று நினைக்கிறேன்! அவ்வப்போது இல்லத்துக்கு வரும் விருந்தினரையும் பெற்றோர்களையும் வரவேற்று, உணவளித்து, வழியனுப்பும் பொறுப்பும் மாணவர்களுக்கு உண்டு.

அன்புள்ள நண்ப, தமிழ் நாட்டில் தலைசிறந்த இப்பள்ளியைக் கண்டு களித்து மாலை என் தந்தையும் நானும் ஊர் திரும்பினோம். பள்ளியின் வளர்ச்சியோ

தம் வாழ்வின் பயனாகக் கருதும் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களின் தொண்டும் முயற்சியும், அவருக்கு வலக்கை போன்று இருந்து இல்லத்துப் பணிகளைக் கவனித்து அல்லும் பகலும் உழைக்கும் திரு. தணிகையரசரின் உழைப்பும் பெரிதும் பாராட்டத் தக்கவையன்றோ? இருவரும் பல்லாண்டு வாழ்ந்து கல்விப் பணி புரிவார்களாக. நீயும் ஒரு முறை இப் பள்ளியைப் பார்வையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதே என் விருப்பம். நீ புறப்படுவதாயிருந்தால் எனக்குத் தெரிவி. நானும் உன்னுடன் மீண்டும் ஒரு முறை வர முயல்வேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள நண்பன்,
த. குருநாதன்.

முகவரி :

த. புகழேந்தி,
33, பெரிய தெரு,
திருவத்திபுரம்.

பயிற்சி

பொருளறிக :

எந்தை	குருகுலம்	கால்
இவர்ந்து	அரங்கு	நெய்
அலுவலர்	மன்றம்	
போந்து	இயக்கம்	

உன் சொந்த வாக்கியங்களிற் சேர்த்து எழுதுக:

அகமும் முகமும், சல சலவென்று, விண்ணப்பம், அணி அணியாய், பிழையற.

விடை கூறுக:

1. இந்துமத பாடசாலை எங்கே உள்ளது? அதன் இருப்பிடம் எவ்வாறு சிறப்புடையது?

2. இப்பள்ளியில் கற்பிக்கப்படும் கைத்தொழில்கள் யாவை?

3. இந்துமத பாடசாலையிற் பயிலும் மாணவர்கள் அடையும் நன்மைகள் யாவை?

4. இப்பாடசாலையின் தொடர்புடைய வேறு உறுப்புகள் யாவை?

5. வள்ளலார் இல்லத்து மாணவர்கள் வாழ்க்கையை எவ்வாறு கழிக்கிறார்கள்?

6. மாணவர் இல்லத்தில் விடியற்காலை ஐந்து மணியிலிருந்து இரவு ஒன்பது மணிவரை நடக்கும் நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக எழுதுக.

7. மாணவர்களே தங்களுக்குள் முறையிட்டுப் புரியும் இல்லப் பணிகள் யாவை?

இலக்கணம் :

சொற்களை இடம் விட்டு எழுதித் தகுந்த நிறுத்துக் குறிகளும் இடுக.

1. அந்தோ சந்திரமதி தன் மகன் இறந்து விட்டான் என்று கண்ணீர் விட்டாள்.

2. ஆ ஆ சிறிய பறவை பறக்கிறதே

3. நின் தந்தையார் எங்கே போனூர்

4. மாணவர்கள் ஆசிரியரைக் கண்டனர் எழுந்தனர் வணங்கினர்

5. கண்ணன் ஆடியும் பாடியும் ஓடியும் வீடுபோய்ச் சேர்ந்தான்

கட்டுரைப் பயிற்சி :

1. உன்னையொரு இந்துமத பாடசாலை இல்லத்து மாணவனாக நினைத்து நீ அன்றாடம் புரியும் வேலைகளைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

2. உன் பள்ளிக்கும் இந்துமத பாடசாலைக்கும் உள்ள ஒற்றுமைகளை எடுத்துக் கூறுக.

12. நல்ல மருத்துவர்

சென்னையில் **'ஜெனரல் ஆஸ்பத்திரி'** என்னும் ஒரு பெரிய மருத்துவ விடுதி இருப்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். நமது மாகாணத்தில் உள்ள மிகப் பெரிய மருத்துவ விடுதி அஃதொன்றேயாகும். புது முறை சிகிச்சைகளால் பற்பல நோய்களையும் தீர்க்கும் கைதேர்ந்த மருத்துவர் பலர் அங்குள்ளனர். அம் மருத்துவ விடுதியின் வாயிற் பக்கத்தில் கம்பீரமான தோற்றத்துடன் நிற்கும் மருத்துவர் ஒருவரின் சிலையை நீங்கள் காணலாம். அவர் யார் தெரியுமா? அவரே சென்னையில் சீரும் சிறப்பும் பெற்று மருத்துவத் திலக மாக விளங்கிய **டாக்டர் அரங்காச்சாரி** அவர்கள். 'பிழைக்கமாட்டார்' என்று பிற மருத்துவர்களால் கைவிடப்பட்டுத் தீராப்பிணியால் வருந்திய நோயாளி கள் பலரும் டாக்டர் அரங்காச்சாரி அவர்களின் மருத் துவத்தால் உயிர்பெற்று மகிழ்ந்தனர்.

டாக்டர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள **சருக்கை** என்னும் கிராமத்தில் ஒரு பெரிய குடும்பத் தில் பிறந்தவர். அவர் தந்தையார் பெரிய நிலச்சுவான் தாராக இருந்து பீடுடன் வாழ்ந்து வந்தார். அவரைச் சிறுவயதில் சீனிவாசரங்கன் என்று அவருடைய பாட்ட ஞரின் திருப்பெயரைச் சேர்த்துப் பெயரிட்டழைத்தனர். பின்னர் அவர், தம்பெயரை அரங்காச்சாரி என்றே மாற்றி அமைத்துக் கொண்டார்.

டாக்டர் அரங்காச்சாரியார் இளமையிலேயே கற் பனவற்றைக் கசடறக் கற்று அறிவுச் செல்வம் நிரம்பப் பெற்றார். அவரது நுண்ணறிவைக் கண்டோர் பிற்காலத்

தில் அவர் ஒரு சிறந்த அறிஞராவார் எனறு கூறினர். அவர் படிப்படியாகக் கற்றுத் தேறிக் கல்லூரியிற் சேர்ந்தார். அங்கு 'எப். ஏ.' தேர்வில் வெற்றி பெற்ருர்.



அவர் உள்ளம் மக்களுக்குச் சிறந்த முறையில் தொண்டாற்ற வேண்டுமென்று எண்ணியதால், மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற விரும்பினர். ஆனல் பெற்

ஞேர்கள் அதனை விரும்பவில்லை. அவர்கள் பலவாறு தடுத்தும் அரங்காச்சாரியார் பிடிவாதமாகச் சென்னை மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்தார். அவர் மருத்துவத் தேர்வில் முதல்வராகத் தேறினர். பின்னர் கல்லூரியுடன் இணைக்கப்பெற்ற மருத்துவ விடுதியில் ஓராண்டு மருத்துவராக அனுபவம் பெற்ருர்.

முதன் முதலில் அரங்காச்சாரியார் 1906-ஆம் ஆண்டில் **ஐதராபாத்தில்** உள்ள மருத்துவ விடுதியில் உதவி மருத்துவராக நியமிக்கப்பட்டார். அக் காலத்திலேயே அவர் மிகவும் தொழில் திறமை உடையவராக விளங்கினர். அதனால் அவருக்கு நல்ல வருவாய் கிடைத்தது. தொடக்கத்திலேயே அவருக்கு ரூ. 400-க்கு மேல் வருவாய் வந்தது. மருத்துவ விடுதியில் தாம் தொழிலாற்றும் நேரம் தவிர மற்ற வேலைகளிலும் அவர் பிணியாளரைத் தம் இல்லத்தில் கவனித்து மருந்தளித்தார். 'ஆபரேஷன்' என்னும் இரணசிகிச்சையில் அவர் ஒப்புயர்வற்றவராகத் திகழ்ந்தார். அவர் புகழ் நாடெங்கும் பரவிற்று.

ஐதராபாத்தில் பணியாற்றிய அரங்காச்சாரியார் மாயவரத்துக்கு மாற்றப்பட்டார். மாயவரம் மருத்துவ விடுதிக்குச் சென்றதும் தஞ்சை, சிதம்பரம் முதலிய ஊர்களிலிருந்து பிணியாளர் பலர் தம்மூரில் உள்ள மருத்துவ விடுதிக்குச் செல்லாமல் டாக்டர் அரங்காச்சாரி அவர்களையே நாடிவந்தார்கள். விடுதி சிறியதாகையால், சில சமயங்களில் டாக்டர் அவர்களின் வீட்டுத் தாழ்வாரங்களிலும் மருத்துவத்துக்கு வரும் பிணியாளர் படுத்துறங்கினர்கள்.

ஒரு சமயம் அங்குத் தொண்டையில் மீன்முள்

அடைபட்ட செம்படவன் ஒருவன் வந்தான். அஃது அவன் மூச்சுக் குழாயை மூடிக்கொண்டதால் மூச்சு விட முடியாமல் துடித்தான். அவன் பரிதாப நிலையைக் கண்ட மருத்துவர் அரங்காச்சாரியார் சிறிதும் தயங்காமல் இரணசிகிச்சைசெய்து அவன் கழுத்தைத் திறந்து மீன்முள்ளை எடுத்து விட்டார். செம்படவன் தன் உயிரைக் காத்த அவரைத் தெய்வமே என்று மதித்து வணங்கிச் சென்றான். மற்றொருவர் தம்தலைமீது மிகக் கனமான பொருளொன்று தாக்கியதால் மண்டை உடைந்து மருத்துவ விடுதியை அடைந்தார். அவருடைய மண்டை ஓடு உடைந்து அதில் ஒரு துண்டு எலும்பு, மூளையிற் புதைந்து கிடந்தது. நுண்ணறிவும் திறமையும் உடையவரே அந்நிலையில் நோயாளனைக் காக்கவல்லவர். டாக்டர் அரங்காச்சாரியார் அத்தகைய அரியசெயலை இரணசிகிச்சை மூலமாகச் செய்து அவரைக் காப்பாற்றியது கண்டு மக்கள் வியந்தனர். அவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம், தஞ்சாவூர் முதலிய ஊர்களுக்கும் மாற்றப்பட்டார். பினனர் அவருக்குச் சென்னைப் பிரசவ விடுதியின் '**உதவி சர்ஜன்**' பதவி கிடைத்தது.

அவர் பணத்திலேயே கருத்தாயிராமல் பிணியாளரைக் குணப்படுத்துவதையே தமது குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார். பிணியாளர் தம் உழைப்புக்குக் குறைந்த தொகையையே தரினும் அவர் முகம் வாடியதில்லை. ஏழை எளியவர்பால் அவர் அன்பும் இன்சொல்லும் பூண்டொழுகுவார். சில சமயங்களில் அவர்களிடமிருந்து பணம் வாங்க மறுத்தே அவர்களுக்கு மருத்துவம் செய்தார். காளுடுகாத்தான் என்னு

மூரில் ஓர் ஏழைச் சலவைத் தொழிலாளியின் மனைவிக்கு வயிற்றைக் கிறிக் குழந்தையை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதனையறிந்த டாக்டர் தம் சொந்தச் செலவில் ஆகாய விமானத்தில் சென்று தகுந்த மருத்துவம் செய்து தாயையும் சேயையும் காப்பாற்றினார்.

நம் டாக்டர் பிணியாளர் கூறும் செய்திகளைப் பொறுமையுடன் செவிமடுத்து அவர்கள் உளங் கொள்ளுமாறு நல்ல முறைகளைக் கூறிக் கொடிய நோய்களையும் விரைவில் போக்குவதில் வல்லவர். தம் நோய்த்துன்பத்தினால் பிணியாளர் தரும் தொல்லைகளை அவர் ஆத்திரப்படாமல் மகிழ்ச்சியுடன் தாங்கிக்கொள்வார். அவர், காலத்தின் அருமையை உணர்ந்து சிறிது நேரத்தையும் வீணாக்குவதில்லை. தம்மைப் பார்க்க வரும் பிணியாளர் கூட்டம் பெருகிக்கொண்டே இருந்தமையால் அவர் சரியாகத் தூங்குவதுமில்லை; உண்பதுமில்லை; சொந்த வேலைகளையும் கவனிப்பதில்லை. அழுது கொண்டே தம்மிடம் வந்த பிணியாளர் குணமடைந்து சிரித்துக்கொண்டே செல்லும் காட்சியைக்காண அவர் உள்ளம் புளகமடையும். கடுமையான நோயினால் பிணிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் அழைப்பதற்கு முன்பு தாமே சென்று மருத்துவம் செய்வார்.

நோயினர் எந் நேரத்தில் தம்மை அழைப்பினும் அவர் வருவதற்குச் சித்தமாய் இருப்பார். அவர்களுடைய உள்ளத்தையும் நன்குணர்ந்து அவர்களுடன் வேடிக்கையாகப் பேசுவதில் டாக்டர் சமர்த்தர். நோயாளிகளைப் பார்த்தவுடனே அவர்களுக்கு என்ன

நோய் என்று அறிவதிலும் அவருக்கு நிகரானவர் ஒருவரும் அக்காலத்தில் இல்லை. பிணியுற்றோர் மனங் கோணுமாறு அவர் ஒருபோதும் நடப்பதில்லை. டாக்டர் அவர்களுக்குச் சிறந்த நினைவாற்றலும் உண்டு. அவர் தம்பால் வந்து மருத்துவம் பெற்ற ஆயிரக்கணக்கான மக்களின் பெயர்களையும், அவர்களின் சுற்றத்தார் பெயர்களையும் உடல் நலக் குறைபாடுகளையும் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்வார்.

விரைவில் அவர் பிரசவ விடுதியின் தலைமை மருத்துவராகவும் நியமிக்கப்பட்டார். பின்னர் 'ஜெனரல் ஆஸ்பத்திரி என்னும் பெரிய மருத்துவ விடுதியின் 'உதவி சர்ஜன்' என்னும் சிறந்த பதவியை அடைந்தார். அங்கிருந்த வெள்ளைக்கார 'சர்ஜன் ஜெனரல்' அவரைத் தலைமை மருத்துவராக்கும் தகுதி இருந்தும் அங்ஙனம் செய்யவில்லை. 1926-ஆம் ஆண்டில் அரங்காச்சாரியார் தம் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். நாடெங்கும் அவர் சேவையைப் பற்றிப் புகழாதார் இல்லை.

அவர் 1932-ஆம் ஆண்டில் இங்கிலாந்துசென்று அங்குள்ள மருத்துவ விடுதிகளைப் பார்வையிட்டார். அவ்விடத்தில் நடைபெறும் மருத்துவ முறைகளைக் கூர்ந்துணர்ந்து அங்ஙனமே சென்னை எழும்பூரில் இருந்த தம் சொந்த மருத்துவ விடுதியினை இன்னும் விரிவான முறையில் அமைக்க அவாவினார். அதற்கான பல திட்டங்களையும் அறிஞர் பலரிடமிருந்து அறிந்துவந்தார். ஆனால் அங்ஙனம் திட்டமிட்ட மறு ஆண்டிலேயே நம் டாக்டர் அவர்கள் 'டைபாய்டு' சுரத்தால் திடுமென்று காலமானார். டாக்டர் அவர்களின் எதிர்பாராத மறைவு

குறித்து நாட்டு மக்கள் அனைவரும் துன்பக்கடலில் மூழ்கினர். அவருடைய அழியாப் புகழின் சின்னமாகச் சென்னை மக்கள் உருவச்சிலையொன்றை '**ஜெனரல் ஆஸ்பத்திரி**'யின் வாயிலில் நாட்டினர். கவர்ச்சிமிக்க அவர்தம் தோற்றமும் நற் பண்புகளும் ஏனைய மருத்துவர்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

பயிற்சி

பொருளறிக :

மாவட்டம்	கசடற	குறிக்கோள்
பீடு	திகழ்தல்	புளகம்

வாக்கியத்தில் சேர்த்து எழுதுக :

ஈடும் எடுப்புமின்றி, சித்தமாய், கூர்ந்துணர்ந்து, எடுத்துக் காட்டாக, அவாவினுர், பற்பல.

விடை கூறுக :

1. டாக்டர் அரங்காச்சாரியார் எங்கே பிறந்தார்? அவர் முதற் பெயர் யாது?

2. மாயவரத்தில் அரங்காச்சாரியார் செய்த அரிய செயல்கள் யாவை?

3. டாக்டர் அவர்கள் ஏழைகளிடம் இரக்கமுள்ளவர் என்பதைக் காட்டும் நிகழ்ச்சி யாது?

4. டாக்டர் அவர்கள் அருங்குணங்களைச் சுருக்கி எழுதுக.

5. அவர் சிறந்த நினைவாற்றல் உடையவர் என்பது எப்படிப் புலனாகும்?

13. நான் சிறுவனாக இருந்தபோது

நான் சிறுவனாக இருந்தபோது முத்து முதலி தெருக் கோடியிலே ஒரு பள்ளி இருந்தது. அதன் பெயர் 'ஆரியன் பிரைமெரி' பாடசாலை. ஆரியன் பிரைமெரி பாடசாலையில் மூன்றும் வகுப்பில் யான் வாசித்தபோது பராங்குச நாயுடு என்பவர் அடிக்கடி பள்ளிக்கு வருவர்; வகுப்பு வாரியாகப் பரீட்சை செய்வர்; பரிசளிப்பர்.

ஒருமுறை மூன்றும் வகுப்பையும், நான்காம் வகுப்பையும் ஒன்றுசேர்த்து ஒரு கட்டுரைப்பரீட்சை வைத்தார். தென்னை, வாழை, பசு, நாய் இவைகளில் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கட்டுரை வரையுமாறு கேள்வி பிறந்தது.

யான் வாழையை எடுத்துக்கொண்டேன். ஏன்? அந்நாளில் இராயப்பேட்டை வாழைக்குப் பேர் பெற்று விளங்கியது. வாழைச்சூழல் எங்கும் எங்கும் உண்டு. வாழை பயிரிடல், வளர்த்தல், இலை கொய்தல், பட்டை உரித்தல், தண்டுஎடுத்தல், குலைவெட்டல், தாறடுக்கல், பழுக்க வைத்தல், இலை, காய், பழம், பட்டை, நார் முதலியன பயன்படும் விதம் முதலியவற்றை யான் அடிக்கடி பார்ப்பவன்; தோட்டத்தாருடன் பழகுபவன். ஆதலால், யான் வாழையை எடுத்துக் கொண்டேன். அதைப் பற்றிக் கட்டுரை வரைந்தேன். சோதனையில் என் கட்டுரை முதன்மையாக நின்றது. பரிசில் எனக்கே கிடைத்தது. இராயப்பேட்டை முழுவதும் என் பெயர் பரவியது. என் தகப்பனுருக்கு வாழ்த்துக் கூறப்பட்டது.

படிப்பைப் பார்க்கினும் கையெழுத்தின் மீது

அதிகம் கருத்துச் செலுத்துபவர் என் தநதையார். என் கையெழுத்து நன்ருயிராது. என் கையெழுத்தினும் என் தமையனுருடையது நன்ருயிருக்கும்.



'கையெழுத்து அழகில்லாதவன் பரிசில் பெறுவ தால் என்ன பயன்?' என்று தந்தையார் நண்பரிடம் சொல்வர். அச்சொல் என்னை வாட்டும். கையெழுத்

தைப் பண்படுத்த எவ்வளவோ முயன்றேன்: பண் படவே இல்லை. அஃது என் தலையெழுத்துப் போலும்!

ஒருநாள் அறுந்த காற்றாடி ஒன்று காற்றிலே அசைந்து அசைந்து பறந்து வந்தது. இளைஞர் குழாம் அதைத் துரத்துவது போலத் தொடர்ந்தது. அக் காற்றாடி எங்கள் வீட்டுக் கொல்லையிலே உள்ள ஒரு கொன்றை மரத்தில் சிக்கியது. அதை எடுக்கச் சிலர் முயன்றனர்; மரத்தின் மீது ஏறினர் கிளைகள் முறிந்தன. முறிவு கண்டதும், அவர் மேலே ஏறாது திரும்பினர். யான் அதைப் பார்த்த வண்ணமிருந்தேன்.

எல்லாரும் அவ்விடம் விடுத்து அகன்றனர். கீழே தாழப் படர்ந்த கிளைகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு மரமேறப் பார்த்தேன். சிறு சிறு கிளைகள் எனக்குத் துணை புரிவதுபோல, அடுக்கடுக்காக என் கைக்கு எட்டுவனவாக இருந்தன. ஒன்றும் முறியவில்லை. யான் குழந்தையா யிருந்தமையால் சிற்றிளங்கிளைகள் என்னை மகிழ்ச்சியோடு தாங்கின போலும்!

யானும் மகிழ்வுடன் தாவித்தாவி ஏறினேன். அலைந்துகொண்டிருந்த காற்றாடி நூல், தானே வலிந்து வந்து என் கையில் தவழ்ந்தது. அதை யான் பற்றுந் தருவாயில், 'அடா,' 'அடா' என்ற குரல் கேட்டது. அஃது அன்னையாருடையது. அக்குரல் கேட்டதும் யான் நூலை விடுத்தேன்: கிளையை விடுத்தேன்: கீழே வீழ்ந் தேன்: அச்சத்தால் ஓடினேன்: ஒரு சிறு குழியில் பதுங்கினேன்: இரத்தப்பெருக்குக் கண்டேன்: ஒன் றும் தெரியவில்லை.

மக்கள் பேசுவது கேட்டது. என் தந்தையார் என்னை எடுத்துத் தோளில் அணைத்தனர். கண் விழித்துப் பார்த்தேன். இரத்த ஆறு ஓடியது. முறிந்திருந்த கிளைகளில் கூர்மையான ஒன்று இடப்பக்க விலா வழியே அக்குளிலிருந்து இடுப்புவரை நீளமாகக் கீறிக் கிழித்துவிட்டது. பலவிடங்களில் காயம். ஒருவர் தண்ணீர் கொடுத்தார். இளைப்புச் சிறிது நீங்கியது.

தந்தையார் என்னைச் சுமந்து வீட்டுக்குச் சென்று ஒரு பாயில் கிடத்தினர். சூழ்ந்துள்ளவரைப் பார்த்துப் பார்த்து அழுதேன்; தாயார் அழுதார்; தந்தையார் அழுதார்; தமக்கைமார் அழுதார்; தமையனர் அழுதார்; எல்லாரும் அழுதார். திடீரென நாட்டு மருத்துவர் ஒருவர் வந்தார். தோளிலிருந்து இடுப்பு வரைப் பக்கமெல்லாம் பச்சிலை பிழிந்தார். அவ்விலையை அரைத்துப் பூசினர். அதையே காயங்களிளெல்லாம் அப்பினர். ஓரே எரிச்சல்; தாங்கமுடியவில்லை; கதறினேன்; துடித்தேன். மருத்துவரும், எதிர் வீட்டாரும் என் கை கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டனர்.

என் அன்னையார் காய்ச்சிய பால் சிறிது அளித்தார். எரி படிப்படியே குறைந்தது. யான் உறங்கினேன்; கண் விழித்தேன்; கஞ்சி கொடுப்பட்டது. மீண்டும் மாலையில் மருத்துவர் வந்து சிகிச்சை செய்தார். இரவு சிறுவலி தோன்றிற்று. உறங்குவேன்; விழிப்பேன்; 'அம்மா'-'அப்பா' என்பேன்; உறங்குவேன். எப்படியோ இரவு கழிந்தது. மருத்துவரால் பச்சிலை சிகிச்சையே செய்யப்பட்டது. ஏறக்குறைய பத்து நாளில் குணம் உண்டாயிற்று. காயங்களின் வடுக்கள் படிப்படியே மறைந்தன. ஆனல், இடப்பக்கத்

துக் கிறல் வடுமட்டும் மறையவில்லை. அஃது அப்ப டியே நிலைத்தது.

பள்ளி நிலையத்திலுள்ள மரங்களில் பிள்ளைகள் சிலர் ஏறுவர்; இறங்குவர். சிலர் சாய்ந்துள்ள கிளை களைப்பற்றித் தாவித்தாவி ஏறுவர்; இறங்குவர். இது குரங்காட்டம். இவ்வாட்டத்தில் ஒவ்வொரு போது கலப்பேன்.

ஒருநாள் ஒரு கிளையில் யான் தாவியபோது காற்று நன்குக வீசத் தொடங்கிற்று. எனக்குப் பழைய நினைவு தோன்றிற்று. எது? கொன்றை மர நினைவு! நடுக்க முண்டாயிற்று. எச்சரிக்கையுடன் மெல்ல மெல்ல இறங்கினேன். ஒருபோது சந்திரசேகரன் என்ற தோழர் மரத்தினின்றும் வீழ்ந்தார். அவர்தம் கை முறிந்தது. அன்று முதல் குரங்காட்டம் ஒழிந்தது.

அந்நாளில் நகர முழுவதும் பரவியிருந்த ஆட்டம் 'குடுகுடு'. சென்னைப் பள்ளிகளிலெல்லாம் அஃதுஆடப் படும். பள்ளிதோறும் அவ்வாட்டத்துக்கென்று சங்கம் காணப்பட்டது. ஆனால் சங்கம், பள்ளியதிகாரிகள் பார்வையிலோ அங்கீகாரத்திலோ நடைபெறுவதில்லை; மாணுக்கராலேயே நடத்தப்படும்.

முதல் பாரத்தில் யான் பயின்றுவந்தபோது, 'குடு குடு சங்கம்' ஒன்று அமைக்கப்பட்டது. அச் சங்கம் சில ஆண்டுகள் நல்ல வேலை செய்தது. ஒருபள்ளியின் சங்கத்துக்கும், மற்றொரு பள்ளியின் சங்கத்துக்கும் போட்டிகள் நிகழும். வெளிச் சங்கங்களும் போட்டி களில் சேரும். போட்டிகளில் கட்டுப்பாடு கிடையாது. எங்கள் சங்கம் சென்னையிலே பேர் பெற்றவைகளில் ஒன்ருயிற்று.

வெஸ்லி கலாசாலையில் யான் இரண்டாம் பாரத்தில் பயின்று வந்தேன். ஆசிரியர் வேணுகோபாலாச்சாரியார். அப்பொழுது கலாசாலைத் தலைவராயிருந்தவர் ஜே. கூலிங். அவர்கள் இங்கிலாந்து நோக்கினமையால் துணைத் தலைவர் ஸி. பாலர்ட் தலைவரானார். பாலர்ட் கணித நிபுணர். அவர் தலைவராக வந்ததும் கீழ் வகுப்புக்களிலும் அடிக்கடி கணிதப் பரீட்சை வைப்பார்.

எங்கள் வகுப்பு முறை வந்தது. கேள்விகட்கெல்லாம் யான் விடை எழுதினேன். நூற்றுக்கு நூறு எதிர்பார்த்தேன். திருத்தப்பட்ட விடைத்தாள்கள் எங்களுக்கு வழங்கப்பட்டன. மார்க்கைப் பார்த்தவுடன் என் முகம் வாடிற்று. அதை ஆசிரியர் கண்டு, 'என்ன? என்று கேட்டனர். 'ஐந்து மார்க்கு குறைப்பட்டுள்ளன; காரணம் தெரியவில்லை' என்று சொன்னேன். அவர் விடைத் தாள்களை வாங்கிப் பார்த்தார். ஒன்றும்சொல்லவில்லை.

பிற்பகல், தலைவர் வகுப்புக்கு வந்து சில முறைகளை விளக்கினார். முடிவில் அவரை யான் அணுகி, "ஐந்து மார்க்குகள் குறைப்பட்டதற்குக்காரணம்தெரிந்து கொள்ள விரும்புகிறேன்." என்றேன். அவர் தாள்களை வாங்கிப் பார்த்தார். சில இடங்களில் நீலக் கோடுகள் இடப்பட்டிருந்தன. அவைகளைக் காட்டி, 'காரணம் தெரிகிறதா?' என்றார்.

"தெரியவில்லை," என்றேன். "உன்னுடையஎழுத்து வரிகளும் குறிகளும் சிலவிடங்களில் நேராக இல்லை: கோணல் கோணலாக இருக்கின்றன. நீலக்கோடுகள் அவைகளை உணர்த்துவன. அதனால், ஐந்து மார்க்குகள் குறைபட்டன. திருத்திக்கொள்," என்று சொன்னார்.

என் முகம் மாறவில்லை. "நீ எல்லார்க்கும் மேலாக மார்க்கு வாங்கி இருக்கிறாயே: அதில் உனக்குத் திருப்தி இல்லையா?" என்று கேட்டார். அக் கேள்வி எனக்குச் சிரிப்பூட்டிற்று. அன்று தொட்டு, பாலர்ட் துரை குறித்த குறைபாடு நிகழாதவாறு காத்துவரலானேன்.

—திரு. வி. க.

பயிற்சி

பொருளறிக :

சூழல்	தாறடுக்கல்	கிடத்தினார்
கொய்தல்	குழாம்	எச்சரிக்கையுடன்

வாக்கியங்களிற் சேர்த்தெழுதுக :

பற்றுக் கோடாக, அடுக்கடுக்காக, தாவித்தாவி, கட்டுப்பாடு, அன்றுதொட்டு, படிப்படியே.

விடை கூறுக :

1. திரு. வி. க. அவர்களின் பெருமைகள் யாவை ?

2. திரு. வி. க. அவர்கள் சிறுவராக இருந்தபோது கட்டுரைப் போட்டியில் பரிசு பெறக் காரணம் என்ன ? விளக்குக.

3. 'அஃது என் தலையெழுத்துப் போலும்'. எது ? ஏன் ?

4. காற்றுடியால் விளைந்த துன்பங்கள் யாவை ? அத்துன்பம் எப்படி ஏற்பட்டது ?

5. குரங்காட்டம் எவ்வாறு ஒழிந்தது !

6. அக்காலத்தே 'குடு குடு' சங்கம் எவ்வாறு சிறப்புற்றிருந்தது ?

7. 'நீ எல்லார்க்கும் மேலாக மார்க்கு வாங்கி இருக்கிறாயே ; அதில் உனக்குத் திருப்தி இல்லையா ?—இதனைச் சந்தர்ப்பங் கூறி விளக்குக.

இலக்கணம் :

பராங்குச நாயுடு என்பவர் அடிக்கடிப் பள்ளிக்கு வருவர்; பரீட்சை செய்வர்; பரிசளிப்பர். இது **தொடர்வாக்கியம்.**

பராங்குச நாயுடு என்பவர் அடிக்கடி, பள்ளிக்கு வந்து பரீட்சை செய்து பரிசளிப்பார். **இது தனிநிலை வாக்கியம்.**

கீழ் வருவனவற்றைத் தொடர் வாக்கியங்களாக மாற்றுக :

1. அக்குரல் கேட்டதும் யான் நூலை விடுத்தேன் ; கிளையை விடுத்தேன் ; கீழே வீழ்ந்தேன் ; அச்சத்தால் ஓடினேன்.

2. யான் சூழ்ந்துள்ளவரைப் பார்த்து அழுதேன் ; தாயார் அழுதார் ; தந்தையார் அழுதார் ; தமக்கைமார் அழுதார் ; தமையனார் அழுதார்.

3. அதை எடுக்கச் சிலர் முயன்றனர் ; மரத்தின்மீது ஏறினர்.

4. கேள்விகட்கெல்லாம் யான் விடையெழுதினேன் ; நூற்றுக்கு நூறு எதிர்பார்த்தேன்.

5. உன்னுடைய எழுத்து வரிகளும், குறிகளும் சில விடங்களில் நேராக இல்லை ; கோணல் கோணலாக இருக்கின்றன.

அருஞ்சொல் அகராதி

அகம் - உள்ளம்
அஞ்சல் - 'தபால்'
அணங்கு - தெய்வப்பெண்
அமையாமல் - இல்லாமல்
அரங்கு - கூடம்
அலுவல் - வேலை
அல்லல் - துன்பம்
அல்லவை - தீயவை
அவாவினன் - விரும்பினன்
அவை - சபை
ஆட்பட்ட - அடிமையான
ஆனிரை - பசுக் கூட்டம்
இசைவு - ஒப்புதல்
இசைந்து - இணங்கி
இணங்கல் - இசைதல்
இயக்கம் - கழகம்
இவர்ந்து - ஏறி
இறுதி - முடிவு
ஈண்டு - இவ்விடத்தில்
உய்த்துணர - ஆராய்ந்தறிய
உரம் - எரு, வலிமை
உலையா - சலியாது
உழந்து - வருந்தி
உறுப்பினர் - அங்கத்தினர்
உறையுள் - வசிக்குமிடம்
ஊனம் - உறுப்புக் குறைவு
எச்சரிக்கை - முன் குறிப்பு
எடுத்துக்காட்டு - உதாரணம்
ஒருமித்து - ஒன்றுபட்டு
ஓம்புதல் - பாதுகாத்தல்
கசடற - குற்றமற
கனல் - நெருப்பு
காண்டம் - பகுதி
காற்பணம் - கால்வெள்ளி
கிடத்தினர் - படுக்க வைத்தார்
குழாம் - கூட்டம்
குறிக்கோள் - நோக்கம்
கொய்தல் - பறித்தல்
கொற்றவன் - அரசன்
கொற்றவை - காளி
கோடாத - வளையாத (தவறாத)
கோன்முறை - செங்கோல் முறை
சதி - வஞ்சித்தல்
சார்ந்தவர் - சேர்ந்தவர்
சான்று - ஆதாரம்
சூழல் - சுற்றுப்புறம்
செழியன் - பாண்டியன்
தளை - கட்டு

தாறடுக்கல் - குலைகளை அடுக்குதல்
திகழ்தல் - விளங்குதல்
துணித்து - அறுத்து
துறந்த - நீங்கிய
நாட்டம் - விருப்பம்
நிபுணர் - அறிஞர்
நீத்து - விலக்கி
பஞ்சவன் - பாண்டியன்
பரிவாரம் - கூட்டம்
பற்றுக்குறை - போதாமை
பிறழுவில்லை - மாறுபடவில்லை
பீடு - பெருமை
புளகம் - பூரிப்பு
புறம்போக்கு - ஊர்ப் புறத்து விளையா நிலம்
பூத நூல் - நிலம், நீர், தீ முதலியனவற்றைப் பற்றிய விஞ்ஞான நூல்
பெருமிதம் - பெருமையான தோற்றம்
போந்து - அடைந்து
மதிநுட்பம் - புத்திக்கூர்மை
மயானம் - சுடுகாடு
மருத்துவர் - வைத்தியர்
மன்றம் - சபை
மாடப்புரை - மாடத்தின் மேலடுக்குகள்
மற்போர் - மல்யுத்தம்
முனைந்து - முற்பட்டு
வதிகின்றனர் - வாழ்கின்றனர்
வழக்கறிஞர் - சட்ட நிபுணர்
வனப்பு - அழகு
விசுவாசம் - அன்பு
விரதம் - கொள்கை
விருதுப்பெயர் - சிறப்புப் பெயர்
வேதனை - துன்பம்
வேனில் விடுமுறை - கோடை விடுமுறை

இளங்கோ வாசகம்

[இரண்டாம் புத்தகம் - இரண்டாம் படிவம்]

இரண்டாம் பிரிவு

பேராசிரியர் ப. முருகன், M. A.
மாநிலக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை:
முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புக்கள்: மே 1954; ஜுலை, 1955

Approved by the Madras Text Book Committee for class use Vide Page 118 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19-5-'54

சக்தி பிரஸ், சென்னை - 1.

முன்னுரை

‘இளங்கோ வாசகம்’ என்னும் இந்நூல்வரிசை உரிமைபெற்ற நம் திருநாட்டு மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் புதிய பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

‘புதிய கல்விமுறைக்கேற்ற புதிய புத்தகம் வேண்டும்’ என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத்தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

முதற் பிரிவுக்கெனவும் இரண்டாம் பிரிவுக்கெனவும் அரசியலார் குறிப்பிட்டபடி தனித்தனிப் பகுதிகளாக இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது. அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு மேலும் கொடுக்கப் பெற்றுள்ளன. மாணவர்தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தினருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் காணிக்கையாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட்டக் கல்வி ஆணையாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

		பக்கம்
I. கடவுள் வாழ்த்து	...	5
II. நீதிப் பகுதி		
1. நீதிநெறி விளக்கம்	...	7
2. நான்மணிக் கடிகை	...	12
III. கதைப் பகுதி		
1. குருவியும் குடியானவனும்	...	15
2. நல்ல தம்பியர்	...	19
IV. வருணனைப் பகுதி		22
V. நாடும் மொழியும்		
1. எங்கள் தமிழ்	...	24
2. தாய் நாட்டன்பு	...	25
VI. பலவகைப் பாடல்கள்	...	27

உரைநடைப் பகுதி

1. தித்திக்கும் முத்தமிழ்	...	31
2. எவரெஸ்டு வீரன்	...	38
3. தமிழ் ஞாயிறு	...	47
4. சூரியன் மறையாத நாடு	...	55
5. தீபம் ஏந்திய சீமாட்டி	...	64
6. சென்று காண்போம்	...	71
7. மாவீரர் மங்கோபார்க்	...	79
8. வறுமையிற் பெருமிதம்	...	80

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

உலகம் பரவும் பொருளே, என்
 னுறவே, யென்ற னுயிர்க்குயிரே,
இலகம் பரத்தே பரம் பரமாய்
 இன்ப நடஞ் செய் எம்மிறையே,
கலகம் பரவு மனத்தேனைக்
 கைவிட் டிடநீ கருதுதியோ?
திலகம் பரவு நுதற்பாக
 னென்ப(து) அருளின் றிறத்தன்றே? 1

கல்வி வேண்டிய மகன்றனைப் பெற்றோர்
 கடுத்த லோர்சிறு கதையிலு மிலைகாண்!
செல்வம் வேண்டிலேன் திருவருள் விழைந்தேன்
 சிறிய னேனைநீர் தியக்குத லழகோ?
பல்வி தங்களாற் பணிசெயு முரிமைப்
 பாங்கு நல்குமப் பரமுமக் கன்றே?
நல்வி தத்தினர் புகழொற்றி யுடையீர்,
 ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 2

—இராமலிங்க அடிகளார்

குறிப்புரை

இச் செய்யுட்களைப் பாடிய **இராமலிங்க அடிகளார்** பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மருதூரில் தோன்றினர். சமரச நோக்கம் மிக்க இவர் பாடியருளிய பாடல்களின் தொகுப்புக்குத் **திரு அருட்பா** என்று பெயர். இவர் மனுநீதிகண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் முதலிய இனிய

உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார். இவ்விரு பாடல்களும் திருவருட்பாவிலிருந்து எடுக்கப்பட்டவை.

1. பரவும் - வணங்கும். இலகும் - விலங்கும். அம்பரம் - வெட்டவெளி, நடம் - நடனம். திலகம் பரவும் நுதல் - திலகம் உடைய நெற்றியைக் கொண்ட பார்வதி திறத்து அன்றோ ?-தன்மையால் அல்லவா ?

2. கடுத்தல் - கோபித்தல். தியக்குதல் - தடுமாறச் செய்தல். பாங்கு - தன்மை. பரம் - பொறுப்பு. பாரம், ஒற்றி - திருவொற்றியூர். நல்விதத்தினர் - நல்லொழுக்கமுடைய உத்தமர்கள்.

வினாக்கள்

1. இறைவன் தன்மைகளைப்பற்றி இராமலிங்க அடிகளார் கூறுவதென்ன ?

2. அவர் இறைவனை வேண்டுவது யாது ?

3. கல்வி வேண்டிய மகனைப் பெற்றோர் கடிவதில்லை என்னும் உவமை எதற்காகக் காட்டப்பட்டது ?

4. இறைவன் பொறுப்பு யாதென இராமலிங்கர் கூறுகின்றார் ?

பயிற்சி

1. பரவும், உயிர்க்குயிர், கைவிட்டிட, பல்விதங்களால்-இவற்றை நின் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. உயிர்க்குயிர், இலகம்பரம், தியக்குதலழகோ, உமக்கன்றே—இவற்றைப் பதம் பிரித்துக் கூறுக.

3. கீழ்வருவனவற்றைச் சரியாகப்பொருத்தி எழுதுக.

(அ) பரம்பொருளே	...	தன்மையொருமை வினை [முற்று
(ஆ) பரவும்	...	தொழிற் பெயர்
(இ) தியக்குதல்	...	விளிப் பெயர்
(ஈ) விழைந்தேன்	...	பெயரெச்சம்

II. நீதிப் பகுதி

1. நீதிநெறி விளக்கம்

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும் ;
புறங்கடை நல்லிசையு நாட்டும்;—உறுங்கவலொன் (று)
உற்றுழியும் கைகொடுக்கும்; கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்,—நவையஞ்சி
ஈத்துண்ணா ர் செல்வமும், நல்கூர்ந்தா ரின்னலமும்,
பூத்தலிற் பூவாமை நன்று. 2

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்(கு)
எய்த்துப் பொருள்செய் திடல். 3

முற்று முணர்ந்தவ ரில்லை; முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க; சிற்றுளியாற்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னல். 4

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல். 5

கண்ணேக்(கு) அரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு ? 6

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா:—ஆங்கதுகொண்(டு)
ஊரும் எறும்பிங்(கு) ஒரு கோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று. 7

கால மறிந்தாங் கிடமறிந்து, செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து,—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து, துணைமை வலிதெரிந்(து)
ஆள்வினை யாளப் படும். 8

மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்;—செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்புங் கொள்ளார்;
கருமமே கண்ணாயி னார். 9

இனியவர் என்சொலினும் இன்சொல்லே ; இன்னார்
கனியு மொழியுங் கடுவே,—அனல்கொளுந்தும்
வெங்காரம்வெய்தெனினுநோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். 10

—குமரகுருபரர்

குறிப்புரை

நீதியான வழிகளுக்கு விளக்குபோன்ற நூலாகை யால் இதற்கு நீதிநெறி விளக்கம் என்று பெயர். இதன் ஆசிரியர் குமரகுருபரர். இவர் 'திருநெல்வேலி மாவட்டத் தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரிற் பிறந்தார். ஐந்தாண்டு வரையில் ஊமையாக இருந்து முருகன் திருவருளால் பேசும் ஆற்றல் பெற்றார். இவர் மூந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார். மீனாட்சி அம்மை பிள் ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், திருவாரூர் நான்மணி மாலை முதலிய நூல்களும் இவரால் இயற்றப் பெற்றவை.

1. வீடு - மோட்சம், அறமும் பொருளும் என உம்மை சேர்த்துப் பொருள் கொள்க. புறங்கடை - வெளியிடங்களில், இசை - புகழ். உறுங்கவல் - வரக்கூடிய கவலை. கைகொடுக்கும் - துணை புரியும். உற்றுழியும் - வந்த விடத்தும். சிற்றுயிர் - அற்ப வாழ்நாட்களையுடைய மக்கள்.

2. மெய்விதிப்பார் - உடல் நடுங்குவார். ஆகுலச் சொல் - பொருளற்ற ஆரவாரச் சொல். நவை அஞ்சி - குற்றம் நேர்தலை அஞ்சி. இல்நலம் - இல்வாழ்க்கையின் நன்மை. பூத்தல்-உண்டாதல். பூவாமை - இல்லாதிருத்தல்.

3. ஓம்பாது - சிந்திக்காமல். கருந்தனம் - பெரும் பொருள். பரிந்து-வருந்தி, உய்த்துச் சொரிந்திட்டு - மதியாமல் போகவிட்டுவிட்டு, அரிப்பரித்தல் - புழுதியை ஏதேனும் சிறு பொருள் கிடைப்பது கருதி நெடுநேரம் கொழித்தல். எய்த்து - வருந்தி.

4. களியற்க - செருக்கு அடைய வேண்டாம். கல் - மலை. கனங்குழாய் - கனத்த காதணியை உடைய பெண்ணே. கொல் - கொல்லனுடைய. உலைக்கூடம் - உலைக்களத்தில் உள்ள சம்மட்டி.

5. பெருஞ்சுட்டு - பெருமதிப்பு. யாண்டும் - எவ்விடத்தும், எக்காலத்தும். தூற்றி - பலர் அறியச் சொல்லி· புறங்காத்து - அவற்றை வெளியிடாமல் அடக்கி. தாழ்ச்சி- அடக்கத்தைக் காட்டும் சொற்களை.

6. கண் நோக்கு அரும்பா - தொலைவில் யாசிப்போரைக் காணும்போது இனிமையாகப் பார்ப்பதே அரும்பாக· கான் மலர் - அன்றலர்ந்த மலர். வாய்மை - உண்மை· பலமா - பழமாக. நலம் கனிந்த - நற்குணங்கள் மிகுந்த· தீம் காய் - இனிய காய்.

7. கவளம் - வாயளவு கொண்ட உணவு. தூங்கும் - அசையும் இயல்புடைய. களிறு - ஆண் யானைகள். உய்

யும் - உயிர் வாழும். ஆரும் - நிறைந்த. இளை - கற்றம் அயின்று-உண்டு. 'அரசனுடைய வருவாய் சிறிது குறைந் தாலும் அதனால் அரசனுக்குத் துன்பம் உண்டாகாது. ஆனால் அது கொண்டு வேறு பலர் பிழைப்பர்' என்பது கருத்து.

8. காலம் அறிந்து - தமக்கு நன்மை தரும் காலத்தை அறிந்து. மூலம் - காரணத்தை. வினைவறிந்து - பயனை யறிந்து. சூழ்வன - யோசிக்க வேண்டியவற்றை. ஆள் வினை - முயற்சி.

9. மெய் வருத்தம் - உடம்பின் வருத்தத்தை. கண் துஞ்சார் - தூங்கமாட்டார்கள். செவ்வி - காலம். எவ் வெவர் தீமையும் - யார் யார் செய்யும் தீமைகளையும். மேற் கொள்ளார் - கருதமாட்டார்கள்.

10. கனியும் மொழியும் - மனம் கனிந்து கூறும் சொற்களும். கடுவே - விஷத்துக்கு ஒப்பானவையே. வெங்காரம் - ஒருவகை மருந்துச் சரக்கு. மெய்பொடிப்ப - உடம்பில் புளகம் தோன்றும்படி. சிங்கி - விஷம்.

வினாக்கள்

1. கல்வியினால் மக்கள் பெறும் நன்மைகள் எவை?
2. 'பூத்தலிற் பூவாமை நன்று'—எவை? ஏன்?
3. கற்றனவற்றைச் சிந்தியாமல் மேலும் கற்கப் புகுவது எது போன்றது?
4. 'சிற்றுளியால் கல்லும் தகரும்—' இவ்வுவமையால் விளக்கப்படும் நீதி யாது?
5. பிறரால் பெரிதும் மதிக்கப்பட விரும்புவோன் என்னென்ன செய்தல் வேண்டும்?
6. யார் கற்பகத் தருவுக்கு நிகராவர்? எப்படி?
7. 'வாங்கும் கவளத்து' என்னும் செய்யுளின் கருத்து யாது?

8. வினை தொடங்கு முன் என்னென்ன ஆராய்தல் வேண்டும்?

9. கருமமே கண்ணாயினார் இயல்புகள் யாவை?

10. வெங்காரம், சிங்கி இவற்றை ஒப்பார் யாவர்? எங்ஙனம்?

பயிற்சி

1. அறம், இன்பம், ஈத்து, முற்றும், சிறுமை, தாழ்ச்சி, தூற்றி, தீமை, வெய்து—இவற்றின் எதிர்ச்சொற்கள் கூறுக.

2. ஊங்கு+இல்லை, சிறுமை+உளி, நலம்+கனிந்த, வெய்து+எனினும், குளிர்ந்தும்+கொளும் — இச்சொற்களைச் சேர்த்துக் கூறுக.

3. கைகொடுத்தல், உற்றுழி, ஓம்பாது, அயின்று, மேற்கொள்ளார்—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

4. இப்பகுதியில் கல்வியைப்பற்றிக் கூறும் செய்யுட்களின் பொருளைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.

2. நான்மணிக் கடிகை

நிலத்துக் கணி என்ப நெல்லுக் கரும்பும்:
குளத்துக் கணிஎன்ப தாமரை ; பெண்மை
நலத்துக் கணிஎன்ப நாணம்; தனக்கணி
தான்செல் லுலகத் தறம். 1

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்: மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்: அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி? 2

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை ; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருள்இல்லை ; ஈன்றாளின்
எண்ணக் கடவுளும் இல். 3

இன்றுமை வேண்டின் இரவெழுக; இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக;—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 4

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின். 5

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்:
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்:
கிளைஞர்இல் போழ்தில் சினம் குற்றம்;
தமரல்லார் கையகத் தூண். 6

திரியழற் காணின் தொழுப : விறகின்
எரியழற் காணின் இகழ்ப :—ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டும் உலகு. 7

—விளம்பி நாகனார்

குறிப்புரை

நான்கு இரத்தினக் கற்களால் செய்யப்பட்ட அணி உடலுக்கு அழகைக் கொடுப்பதுபோல ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு நீதிகளைக் கொண்ட உரைமணிகளால் சேர்க்கப்பட்ட இந்நூல் உலக வாழ்க்கைக்கு அழகைத் தருவதால் **நான்மணிக் கடிகை** என்று விளங்கும். விளம்பி நாகனார் ஒரு கடைச் சங்கப் புலவர் ஆவர். இவர் இயற்றிய நான்மணிக் கடிகை, கடைச் சங்கத்துப் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாகும்.

1. அணி - அழகு. பெண்மை நலத்துக்கு - பெண் தன்மைக்கு வேண்டிய கற்பாகிய நன்மைக்கு.

2. அகில் - அகிற்கட்டை. ஒள் - பிரகாசமுள்ள.

3. துன்னிய - நெருங்கிய. கேளிர் - உறவினர். ஒண்மையவாய் - ஒளியுடையனவாய்.

4. இன்னாமை - இழிவு. மன்னுதல் - நிலை பெற்றிருத்தல். இசை - புகழ். வெகுளி - கோபம்.

5. மொய் - வலிமை. கலம் - பாண்டம். கூடார் - கூடத்தகாத தீயோர்.

6. வளமிலா - செல்வம் இல்லாத. போழ்தத்து - சமயத்தில். கிளைஞர் - உறவினர். தமர் - தம்மவர், உறவினர். வள்ளன்மை - பிறர்க்குக் கொடுத்தல். ஊண் - உண்ணுதல்.

வினாக்கள்

1. எவ்வெவற்றுக்கு எவை அணியாகும்?

2. 'கள்ளிவயிற்றில்' என்னும் செய்யுளின் கருத்து யாது?

3. எவை எவை எவற்றிற் சிறந்தவை?

4. இன்றைமை, மன்னுதல் வேண்டுவோர் என்னென்ன செய்தல் வேண்டும்?

5. எவை எவை எவற்றால் சிதையும்?

6. குற்றமாவன எவை? அவை எப்போது குற்றமாகும்?

7. திரியழல், விறகின் எரியழல் இவை எவற்றிற்கு உதாரணமாகக் காட்டப்பட்டன?

பயிற்சி

1. நான்மணிக் கடிகை என்னும் நூலின் பெயர்க் காரணத்தை உனக்கு விருப்பமான ஒரு செய்யுளைக் குறிப்பிட்டுப் புலப்படுத்துக.

2. ஐந்தாம் செய்யுளின் எழுவாய்ப் பயனிலைகளைத் தனித்தனியே எடுத்து எழுதுக.

3. உறுப்பு + இல்லை, குளத்துக்கு + அணி, கலம் + சிதைக்கும், தமர் + அல்லார், கையகத்து + ஊன் — இவற்றைச் சேர்த்து எழுதுக.

III. கதைப் பகுதி

1. குருவியும் குடியானவனும்

உழுதொழில் புரிந்து நாளும்
    உடம்பினை வளர்க்கும் தொண்டு
கிழவனும் உழவன் ஓர்நாள்
    கிளர்மணி வயலில் வேலை
கழிந்தபின் சட்டையொன்றைக்
    கழற்றினன் அருகி லுள்ள
விழுமிய குடிசை தன்னில்
    விரும்பியே மாட்டி வைத்தான். 1

மாட்டிய சட்டை தன்னை
    மறந்தனன் சிலமா தங்கள்
நீட்டிய பின்ன ராங்கண்
    நிந்தையில் குருவி யொன்று
நாட்டமாய் வந்து சட்டை
    நலமிகு பையிற் றங்கி
வாட்டமொன் றின்றிப் பன்னாள்
    வளமுற வாழ்ந்த தாமே. 2

பையினில் வாழ்ந்த சிட்டு,
    பாங்குடன் முட்டை யிட்டு
மெய்யழ குடைய பார்ப்பு
    மூன்றுடன் விரும்பிக் கொஞ்சி
வையகந் தன்னில் வாழ
    வானமோர் நாள்க றுத்துப்
பெய்தது மாரி வெள்ளம்
    பெருகிடக் குளிரு மங்கே. 3

குளிரினால் நைந்த அந்தக்
குணமிகும் உழவன் ஓடித்
தளிரிலைக் குடிசை தன்னில்
மாட்டிய சட்டை பற்றி
வெளியிலே எடுத்தான் ஏதோ
வீறிடச் சட்டைப் பையில்
தெளியுமக் குருவிக் குஞ்சு
நிலையினைக் குனிந்து கண்டான். 4

இப்படி உழவன் கையில்
இருக்குமச் சட்டை பார்த்தே
“எப்பெருந் திங்கு தானும்
எமக்குவந் திடுமோ!” வென்ன
ஒப்பிலாப் பார்ப்புந் தாயும்
உயர்மரக் கிளையிற் சென்று
கப்பிய துன்பந் தாழ்ந்து
கதறிய தருவி போன்றே. 5

சிட்டது அரற்ற மிக்க
சீவகா ருணிய முள்ளோன்,
“சட்டையை உனக்கே தந்தேன்:
தவித்திடேல்: சிட்டே, இந்தா
விட்டுநான் செல்வேன்,” என்றான்:
விரைந்தவன் சென்றான். அந்தச்
சிட்டுகள் இறக்கை முற்றிச்
சென்றன வெளியே ஓர்நாள். 6



சென்றவை மீளா தெங்கும்
திரிந்தன இனிதாய் வானில்
வென்றிகொள் உழவன் பின்னுள்
மேவிய சட்டைப் பையில்
பொன்றிகழ் ஆழி கண்டான் ;
பொற்புடைக் குருவி தானும்
ஒன்றையும் காணுன் நன்றி
யொன்றினுல் நலமே பெற்முன். 7

—வித்துவான், தணிகை. உலகநாதன்

குறிப்புரை

1. தொண்டுகிழவன்-பழுத்த கிழவன். இளர்-விளங்கும். விழுமிய-சிறந்த.

2. நீட்டிய பின்னர்-கழிந்த பிறகு. நிந்தை - குற்றம். நாட்டம் - விருப்பம்.

3. பாங்குடன்-நலமுடன். மெய் - உடம்பு. வையகம்-உலகம்.

4. நைந்த - வாடிய. வீறிட - அலறிட. நெளியும் - தவிக்கும்.

5. பார்ப்பு-குஞ்சு. கப்பிய-நிறைந்த. குருவி குடியானவன் தன் குஞ்சுகளை என்ன செய்வானோ என்று பாயும் அருவி 'ஓ' வென்று ஒலிப்பது போல் கதறிற்று.

6. அரற்ற - கதறி அழ. இறகு முற்றி-இறகுகள் வலிமைபெற்று.

7. மீளாது-திரும்பாமல். வென்றி-வெற்றி. பொன்திகழ் ஆழி-பொன்னால் ஆன சிறந்த மோதிரம். பொற்பு - அழகு.

வினாக்கள்

1. குடியானவனின் சட்டை குருவிக்கு எவ்வாறு பயன்பட்டது ?

2. குடியானவன் சட்டையை எடுக்கக் காரணம் என்ன ?

3. அவன் தன் சட்டையை அணியாமல் விட்டுவிட்டதேன் ?

4. குடியானவன் பெற்ற பரிசு யாது ?

5. இக் கதையினால் நீ அறிவது என்ன ?

2. நல்ல தம்பியர்

இலக்குவன் சீற்றம்

அண்ணா, பரதன்படை யதோ வந்து நிற்கிறது.
அண்ணா பழிகாரி யனுப்பினாள் தன் மகனை.
வஞ்சன் பரதனையே மாய்க்காம லென்னுடைய
வஞ்சந்தீ ராதுசற்றே வந்திருங்கள் தூரத்தில். [லாம்
கொஞ்ச நேரத்திற்குள் கொடும்பரதன் சேனையெல்
பஞ்சுபஞ் சாய்க்காற்றிற் பறக்க வடிக்கின்றேன்;
ஆடிக்காற் றிலுதிர்ந்தே யலையுஞ்சருகு போற்கண்
மூடித் திறக்கு முன்னே முனைந்தே யடிக்கின்றேன்;
இரதமும் யானைகளு மிரத்தக் கடலினிலே
விரவியே கப்பலைப்போல் மிதக்க வடிக்கின்றேன்;
புலியானது பசுத்தோல் போர்த்திட்ட பாவனையாய்
சலியாம லேயவனுந் தவவேடந் தான்புனைந்து
உள்ளே பெரும்பகையும் உதட்டில் உறவுங் கொண்டு
மெள்ளவே நம்மையிங்கு வெல்ல வருகின்றான்
தன்தாயுந் தந்தையுமாய்த் தந்தவுல கைவிட்டு,
என்பாணத் தாலவனை யெமலோகம் சேர்த்திடுவேன்.
ஓமென்றே யுத்தர முரைக்காமல் விட்டாலும்
சாமிநீ தான்சற்றே தலையசைத்தால் போதுமென்றான்.

இராமன் தடுத்தல்

தம்பியுரை கேட்டுச் சயராமன் கையமர்த்தி
நம்பி யிலக்குமணா, நலியாதே நீ பொறுப்பாய்.
உனக்கிரே ழுலகுந்தா னொவ்வுமோ? நம்பரதன்
எனக்குப் புவியளிக்க எண்ணியவன் வந்தான்.
பரதனை யற்பமாகப் பதறி வெறுக்காதே :

சுருதியிற் சொல்வதெல்லாம் தூய னவன்செய்கை.
செப்பற் கரியதர்ம தேவதையே அவனாவான்.
ஒப்பும் நடுநிலைமைக் குரையாணி யாவனவன்.
ஆக்கப் பொருத்தவர்க ளாறப் பொறுப்பதுபோல்
தீர்க்க முடனனைத்துந் தெரிவாய் விரைவிலென்றான்.
அண்ணன் மொழிக் கிளையோன் அன்பாகத்தானுருகித்
தண்ணெனவே கோபந் தணிந்து வணங்கினனே.

—ம. தி. பானுகவியடிகளார்

குறிப்புரை

ம. தி. பானுகவியடிகளார் வடார்க்காடு மாவட்டத்தில் திருவத்திபுரம் என்னும் ஊரில் திருநாவுக்கரசு மடாலயத்தில் பல்லாண்டுகள் தங்கிச் சைவமும் தமிழும் தழைக்கச் சிறந்த பணியாற்றியவர். இப்பகுதி இவர் இயற்றிய இராமாயண நங்கைப் பாட்டு என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது. இவர் பற்பல கவிதை நூல்களும், உரை நூல்களும் இயற்றியுள்ளார்.

பழிகாரி-கைகேயியைக் குறிக்கும். வஞ்சம் - சபதம். விரவி - கலந்து. சாமி - தலைவன். உத்தரம் - பதில். நம்பி - ஆடவரில் சிறந்தவன். இதன் பெண்பால் நங்கை. கலியாதே - வருத்தப்பட வேண்டாம். ஈரேழ் உலகம் - பதினான்கு உலகம். ஒவ்வுமோ? - ஈடாகுமோ? புவி - நாடு, பூமி. சுருதி-வேதம். செப்பற்கரிய - சொல்வதற்கு அருமையான. நடுநிலைமை-நேர்மை. உரையாணி - பொன்னின் மாற்று உரைக்கும் உரைகல். தண்ணெனவே-மனம் குளிர. இளையோன் - தம்பி.

வினாக்கள்

1. இலக்குவன் சீற்றம்கொள்ளக் காரணம் என்ன?

2. சீற்றம் கொண்ட இலக்குவன் இராமனை நோக்கி என்னென்ன கூறினான்?

3. பரதன் எதன்பொருட்டு வருவதாக இராமன் கூறினான்?

4. பரதனின் அருங்குணங்கள் யாவை?

5. இலக்குவன், பரதன் இவர்கள் இருவரும் நல்ல தம்பியர் என்பதற்குச் சான்றுகள் தருக.

பயிற்சி

1. பஞ்சு பஞ்சாய், கண்மூடித் திறக்குமுன்னே, சலியாமல், அற்பமாக, செப்பற்கரிய, தீர்க்கமுடன் - இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. 'ஆடிக் காற்றிலுதிர்ந்தே அலையும் சருகுபோல்'
'புலியானது பசுத்தோல் போர்த்திட்ட [பாவனையாய்'
'உள்ளே பெரும் பகையும் உதட்டில் உறவும் [கொண்டு'
'ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுப்பது [போல்'

இவை நும் பாடப் பகுதியில் எடுத்தாளப்பட்ட இடங்களைக் கூறி இவற்றின் பொருளை விளக்குக.

3. பகை, வெல்ல, சற்று, அரிய, அற்பம்—இவற்றின் எதிர்ச் சொற்கள் கூறுக.

4. 'உனக்கீரே மூலகுந்தான் ஒவ்வுமோ?—இஃது என்ன வாக்கியம்? இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றிக் கூறுக.

IV. வருணனைப் பகுதி

காலை அழகு

எடுப்பு

காலை அழகைச் சற்றுக் கண்டாலே-மனக்
கவலை பறந்தோடும் தன்னாலே. (காலை)

மேல் எடுப்பு

வேலிப் புதுமலர் மிகுமணம் வீசிடும் :
மெல்யாழ் விருந்தினைத் தேன்வண்டு தந்திடும் (காலை)

அமைதி

கூட்டிலிருந்து சின்னக் குருவிகள் பாடிடும்.
குதித்துக் குதித்து வெள்ளி கீழ்வானில் தாவிடும்;
வீட்டினுள் சேவலோ விடியலை வாழ்த்திடும்:
மெல்ல இருள் நழுவக் கீழ்த்திசை வெளுத்திடும்;
தொடுவானில் செவ்வண்ணத் தொட்டி உருண்டிடும்.
தோப்பு வயல்களெங்கும் பொன் மழை தூறிடும்:
கடமை மறந்திடாப் பரிதியோ கீழ்வானில்;
கரகர வெனச் சுற்றிச் சிறுநகை பூத்திடும். (காலை)

—கவிஞர் வாணிதாசனார்

குறிப்புரை

இப்பாடலை இயற்றிய கவிஞர் வாணிதாசனார் பல்லாண்டுகளாகப் புதுச்சேரி கல்வே கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர் ; தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கடலூரரைச் சார்ந்தவர்; மொழி, கலை, சமூகம், தொழில்பற்றி இனிய எளிய கவிதைகள் இயற்றுவதில் வல்லுநர். கவிஞர் பாரதிதாசனாரிடம் நீங்காத அன்புடையவர். பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் என்னும் மும்மொழிப் புலவர்.

கீழ்வான் - கிழக்கு வானம். விடியல் - விடியற்காலம். கீழ்த்திசை - கிழக்குத்திசை. செவ்வண்ணம் - செம்மையான நிறம். பரிதி - சூரியன். நகை - புன்முறுவல்.

வினாக்கள்

1. காலைக் காட்சியால் எவ்வாறு மனக்கவலை நீங்கும்?

2. விடியலில் வண்டு, குருவி, சேவல், சூரியன் - இவை என்னென்ன செய்யும்?

3. காலைக் காட்சிகள் யாவை?

V. நாடும் மொழியும்

1. எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ்மொழி எமது—எமக்
இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது !
கனியைப் பிழிந்திட்ட சாறு—எங்கள்
கதியில் உயர்த்திட யாம்பெற்ற பேறு !
தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை !
நனியுண்டு நனியுண்டு காதல்—தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்—(இனிமைத்) 1

தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே—வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே.
தமிழெனில் எம்முயிர்ப் பொருளாம்—இன்பத்
தமிழ்குன்று மேல்தமிழ் நாடெங்கும் இருளாம்
தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு—இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம் நல்ல தொண்டு.
தமிழென்று தோள்தட்டி ஆடு!—நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றேதினம் பாடு !
(இனிமைத்) 2

—பாரதிதாசனார்

2. தாய் நாட்டன்பு

திரைகடல் கடந்து சென்றவ ளுயினும்
தன்னு டுற்ற தருணந் தன்னில்
என்னு டிதுவே என்பிறப் பிடமிதே
என்று தருக்கொடு இயம்பா தவனும்
உளனே? உளனெனில் உணர்வீர் அவன்ருன்
உயிருள னேனும் ஒருநடை பிணமே!
பொன்னும் பதவியும் புகழுடன் கலையும்
என்னுள னேனும் இழிந்தவ னவனே!
தன்னல மொன்றே தன்மையாக் கொண்டவன்
இசைவா ணர்களால் ஏத்தவும் பெருஅன்!
வாழ்நா ளிற்றன் வண்புகழ் மாய்ந்து
'மண்ணில் பிறந்தான் மண்ணில் மாய்ந்தான்'
என்றே பலரும் இகழ்ச்சியே சொல்ல
இரங்குவா ரின்றி ஏத்துவா ரின்றிப்
புலவர் நாவிலும் பொருந்தா தொழிவனே!

— வித்துவான், தணிகை. உலகநாதன்

குறிப்புரை

'எங்கள் தமிழ்' என்னும் பாடற்பகுதி பாரதிதாசன் கவிதைகள் என்னும் நூலிலிருந்து தொகுக்கப் பெற்றது.

பாரதிதாசனுர் தமிழ் நாட்டின் தலை சிறந்த புரட்சிக் கவிஞர்; புதுவையில் வாழ்கிருர். இவர் பாடல்கள் சீர் திருத்தக் கருத்துக்களுடன் இனிமையும் எளிமையும் உடையவை.

வித்துவான், தணிகை. உலகநாதன் அவர்கள் சென்னை ஓறிந்து தியலாஜிகல் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி யாற்றுபவர்; தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியிற் பயின்றவர். இப்பாடல் சர் வால்ட் ஸ்காட்டர்

என்னும் ஆங்கிலக் கவிஞர் எழுதிய பாடலின் மொழி பெயர்ப்பாகும்.

1. கதியில் - வாழ்வில். தனிமை - ஒப்பற்ற. நனி - மிகவும், (உரிச்சொல்) தரம் - திறமை. குன்றுமேல் - குறையுமாயின், தொண்டு - சேவை. வெல்க - வெற்றியுடன் வாழ்க.

2. திரைகடல் - அலைகளை வீசுகின்ற கடல். தருணம் - சமயம். தருக்கு - பெருமிதம். நடைபிணம் - நடக்கும் பிணம். பெறுஅன் - பெறமாட்டான். அளபெடை. மாய்ந்து—நீங்கி.

வினாக்கள்

1. தமிழ் மொழியின் உயர்வைக் குறித்துக் கவிஞர் என்னென்ன கூறுகிறார்?

2. தமிழ் மொழியை உயிராகப் போற்றுவதால் தமிழர் பெறும் நன்மை யாது?

3. தமிழ் மொழி குன்றுமாயின் தமிழ்நாடு அடையும் துன்பம் யாது?

4. நாம் தமிழ் மொழிக்கு என்ன செய்யவேண்டும்?

5. தாய்நாட்டுப் பற்றில்லாதவன் அடையும் தாழ்ச்சிகள் யாவை?

பயிற்சி

1. 'எங்கள் தமிழ்' முதற்பாடலிலிருந்து பண்புப் பெயருக்கு இரண்டு உதாரணங்களும், உரிச் சொல்லுக்கு ஒருதாரணமும் தருக.

2. வாய்த்த, உயர்ந்திட, வேறெங்கும், வாழ்நாளில், நடைபிணம்—இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

VI. பலவகைப் பாடல்கள்

நடராசனைப் பாடியது

நாட்டுக்கு ளாட்டுக்கு நாலுகா லையாநின்
ஆட்டுக் கிரண்டுகால் ஆனாலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனே, இவ் வாட்டை விட்டுப்
போமோசொல் லாயப் புலி ? 1

—காளமேகப் புலவர்

வந்தி பெற்றாளோர் மகன்

காசொன்று மில்லாத கன்னிகையாள் கையில்வெண்
காசொன்று கொண்டு கடைநண்ணி—மாசின்றிப்
பந்திபந்தி யாயிருக்கும் பட்சணஞ்சேர்க் காராப்பூ
வந்திபெற் றாளோர் மகள். 2

—கவியரசர், அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

திருக்குற்றாலக் குறவஞ்சி

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும் ;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்.
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார் ;
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும் ;
கூனல்இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர் ;
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே. 3

—திரிகூட ராசப்பக் கவிராயர்

வீறு பெற்று நில்லடா!

வீறுபெற்று நில்லடா! விதியை மீறிச் செல்லடா!
ஊறும்வீர சக்தியால் உலகைமுற்றும் வெல்லடா!
உச்சமான வானிலே உலாவுங் காற்றை மானவே
அச்சமற் றுலாவு வோம் அமுதவெண் ணிலாவிலே!
பனிமலர் குலுங்கிடும் பவளக் காலைபோலவே
கனிமுறுவல் பூத்துநம் கடமை செய்ய முந்துவோம்.
திருவுடன் உலகெலாம் செழித்திடப் பவனிசெல்.
பருவகாலம் போலவே பயன் பழுக்க வாழுவோம்!
பண்மலர்கள் சூட்டியே பரமனைக் கலந்துநாம்
கண்மலரி லேமனக் கருணைபொங்க வாழுவோம். 4

— சுத்தானந்த பாரதியார்

குறிப்புரை

1. காளமேகப் புலவர் கறுத்த மேகம் நிறைந்த மழையை விரைந்து பெய்வதுபோலக் குறைந்த நேரத்தில் விரைந்து பாடும் ஆற்றலுள்ளவராகையால் இப் பெயர் பெற்ருர். இவர் நகைச்சுவை ததும்பக் கவிபாடுவதிலும், சிலேடைப் பொருளமைத்துக் கவிபாடுவதிலும் வல்லவர். இவரது காலம் 15-ஆம் நூற்ருண்டாகும்.

ஆட்டுக்கு - ஆடு என்னும் பிராணிக்கு; நின் ஆட்டுக்கு - (நடராசப் பெருமானுகிய) உன் நடனத்துக்கு. ஆட்டு - ஆடல், நடனம். சீர் - சிறப்பு. மேவு - பொருந்திய, புலி-நடராசனின் நடனத்தைக் கண்டுகளிக்கும் புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்.)

நடராசப் பெருமானுகிய உன்னை விட்டுப் புலிக்கால் முனிவர் நீங்கார் என்பது இதன் கருத்தாகும்.

'புலி ஆட்டை விட்டுப் போமோ?' என்னும் சொல் நயம் குறிப்பிடத் தக்கது.

2. இச் செய்யுள் சிற்றுண்டி விடுதியொன்றில் தம் நண்பர் ஒருவர் விருப்பப்படிக் கவியரசர் பாடியது. கவியரசர் அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் பல்லாண்டுகளாகத் திருவையாற்று அரசர் கல்லூரியிலும், கரந்தைப் புலவர் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராக இருந்து பணியாற்றியவர். இவர் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், அகநானூறு முதலிய சங்க நூல்களின் சீரிய உரையாசிரியர்.

காசு-குற்றம் (அழுக்கு என்றபடி). காரிகை - பெண், வெண்காசு - வெள்ளிப்பணம், நான்கணு. நண்ணி - அடைந்து. மாசின்றி - குற்றம் இல்லாத. பந்தி - வரிசை. வந்தி - மலடி. மலடிக்கு மக்கட் பேறு இல்லை. ஓர் மகள் காராப் பூவந்தி பெற்றாள் எனக் கூட்டுக. காராப்பூ வந்தி பெற்றாளோர் மகள் என்னும் சொல்நயம் கண்டு அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

3. இறைவனிடம் அன்புகொண்ட தலைவி ஒருத்தியிடம் ஒரு குறத்தி சென்று குறி சொல்வதாகப் பாடப்பட்ட நூலுக்குக் குறவஞ்சி என்று பெயர். இந்நூல் நாடக வகையைச் சேர்ந்தது. இதன் ஆசிரியராகிய திரிகூட ராசப்ப கவிராயர் குற்றாலம் என்னும் ஊரைச் சார்ந்த மேலகரத்தில் பிறந்தவர். இவர் சைவவேளாள குலத்தினர். இவர் காலம் இற்றைக்கு 200 ஆண்டுகட்கு முற்பட்டது.

இப் பாடல் குறத்தி தான் வாழும் மலைவளத்தைப் பற்றிக் கூறுவது.

மந்தி - பெண் குரங்கு. வான் - பெரிய. கவி - குரங்கு. கானவர் - வேடர், கவனசித்தர் - எங்கும் சஞ்சரிக்கும் சித்தர்கள். காயசித்தி - உடலைப் பல காலம் வாழ வைக்கும் ஒரு வித்தை. தேனருவி - ஓர் அருவியின் பெயர், குற்றாலத்தில் உள்ளது. பரி - குதிரை. கூனல் - வளைந்த. வேணி - சடாமுடி, வேணி அலங்காரர் - இச் சொற்றொடர் சிவபெருமானைக் குறிக்கும்.

4. சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் இளமையிலேயே துறவறம் பூண்டு தமிழ்த் தொண்டாற்றி வருபவர். இவர் எளிய நடையில் பல இனிய தமிழ்க் காவிய நூல்களும் உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார். தமிழ், தெலுங்கு, வங்காளம், ஹிந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய பல மொழிகளிலும் அறிவு நிரம்பியவர்; பல்லாண்டுகள் அரவிந்தர் ஆசிரமத்தில் தங்கி அறப்பணி ஆற்றியவர்.

வீறு - பெருமிதம், உவகை-மகிழ்ச்சி. மான - போல. பனிமலர் - குளிர்ச்சி பொருந்திய மலர். திரு - செல்வம். பண் - இசைப் பாடல்.

வினாக்கள்

1. 'ஆட்டை விட்டுப் போமோசொல்லா யப்புலி?'— இவ் வாக்கியத்தின் பொருளை நன்கு விளக்குக.

2. வந்தி மகள் பெற்ற தெப்படி? விளக்குக.

3. திருக்குற்றால மலையின் காட்சிகள் யாவை?

4. சுத்தானந்த பாரதியார் வீரவுரைகள் யாவை?

பயிற்சி

1. நாலுகால், நாட்டமுள்ள, தேனெடுத்து, சிற்றில், செழுங்குரங்கு—இவற்றைப் பதம் பிரித்துக் காட்டுக.

2. நண்ணி, உச்சமான, செழித்திட, அச்சமற்று—இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

3. பல்வகைப் பாடற் பகுதியினின்று பெயரெச்சம், வினையெச்சம் - வினைமுற்றுகட்கு உதாரணங்கள் எடுத்துக் காட்டுக.

உரைநடைப் பகுதி

1. தித்திக்கும் முத்தமிழ்

உலகில் வழங்கும் தொன் மொழிகளுள் நம் தாய் மொழியாகிய தமிழ் மொழி தலை சிறந்தது. மிகப் பழங் காலத்திருந்தே இலக்கண இலக்கிய வளம் படைத்து இலங்குவது தமிழ் மொழியே. தமிழ் மொழி வழங்கும் தென்னாடு தெய்வத் திருநாடு என்று பலராலும் போற் றப்படுகிறது. தமிழுடன் பிறந்த தொன் மொழிகள் பலப்பல. அவற்றில் சில இந்நாளில் பேச்சு வழக்கற்று எழுத்து வழக்காகவே காணப்படுகின்றன. நம் தமிழ் மொழியோ தோன்றிய காலத்திலிருந்தே தன் இள மைத் தன்மை குன்றாமல் கன்னித் தமிழாகவே காட்சி அளிக்கிறது. இவ் வினிய மொழியைத் தாய் மொழி யாக நாம் பெற்ற பேறே பேறு! தமிழ் என்னும் சொல் லுக்கு இனிமை என்றும் ஒரு பொருள் உண்டு.

ஒரு காலத்தில் நம் தமிழ்மொழி இமயம் முதல் குமரிவரை பரவி வழங்கி வந்தது. பிற்காலத்தே தமிழி னின்று கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு என் னும் பல வேறு மொழிகள் தோன்றலாயின. இம்மொழி களில் உள்ள பற்பல சொற்கள் தமிழ்ச் சொற்களுடன் தொடர்புள்ளமையை அறியின், இவ் வுண்மையை நன்கு தெரிந்து கொள்ளலாம். தமிழ் மொழி பிற மொழிகளில் இல்லாத சில தனிச் சிறப்புகளையும் உடையதாகும். நம் நாட்டில் வழங்கும் பிறமொழிகளில் ழ, ற, ன என்னும் ஒலிகள் கிடையா. ஆனால் தமிழ் மொழிக்கே இவ்வெழுத்து ஒலிகள் சிறப்பாக உரியவை.

தமிழ்மொழி பண்டைக்காலத்திலிருந்தே இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பகுதிகளை உடையது. "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்னும் தொடரில் சங்கத் தமிழ் என்பது இம் முத்தமிழையே குறிக்கும். பண்டைக் காலத்திலேயே இம் முப்பெரும் பிரிவிலும் சீரிய இலக்கிய இலக்கண நூல்கள் மலிந்திருந்தன. அக் காலத்திலேயே தமிழ் வேந்தர்களும் வள்ளல்களும் முத்தமிழ்வல்ல புலவர்களைப் பாராட்டிப் பரிசுகள் நல்கி ஆதரித்தார்கள்.

தமிழர்கள்யாவரிடையேயும் பொதுவாக இயங்கும் உரைநடையும் செய்யுளும் இயற்றமிழாகும். இயற்றமிழ் இலக்கணம் இலக்கியம் என இருவகைப்படும். நம் அருமைத் தமிழ்மொழியில் பண்டைக் காலத்திலிருந்தே நூற்றுக் கணக்கான இயற்றமிழ் நூல்கள் தோன்றலாயின. அகத்தியமும், தொல்காப்பியமும் மிகப் பழைய இலக்கண நூல்களாகும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் சங்கநூல்கள் இலக்கியங்களில் முதன்மையாக வைத்து எண்ணக் கூடியவை. சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன ஐம்பெருங் காப்பியங்களாகும். இவற்றுள் வளையாபதி, குண்டலகேசி என்னும் இரு நூல்களும் தற்காலத்தே முழுமையுமாகக் கிடைப்பதில்லை. இடைக் காலத்தில் மேலும் பல சிறந்த காவிய நூல்கள் தோன்றலாயின. கம்பர், ஒட்டக் கூத்தர், புகழேந்திப் புலவர், வில்லி புத்தூர் ஆழ்வார் முதலியவர்கள் இராமாயணம், நளவெண்பா, பாரதம் போன்ற நூல்களை இயற்றியருளியுள்ளனர். மேலும் அவ்வப்போது தோன்றிய புலவர்கள்

பற்பல தல புராணங்களும் பிரபந்தங்களும் பாடியுள்ளனர். நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டி அலங்காரம் முதலிய இலக்கண நூல்களும் பற்பல உரைநடை நூல்களும் பிற்காலத்தே தோன்றலாயின.

இனி, இசைத் தமிழ் என்பது பண்ணும், தாளமும், பூட்டும் கூடி இயங்கும் இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களுமாகும். கீர்த்தனைகள், வரிப் பாட்டுகள், சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தாலாட்டு முதலியனவும் இவ்விசைத் தமிழின் பாற்படும். முற்காலத்தே பெருநாரை, பெருங் குருகு, இசை நுணுக்கம், பஞ்ச பாரதியம், பஞ்ச மரபு, தாள சமுத்திரம் முதலிய இசை நூல்கள் இருந்தன. இடைக்காலத்தில் தேவாரம் திருப்புகழ், கந்த புராணக் கீர்த்தனை, பெரிய புராணக் கீர்த்தனை முதலிய இசைத் தமிழ் நூல்கள் தோன்றின. தற்காலத்திலேயும் அறிஞர்கள் பலர் இசை நூல்கள் எழுதியுள்ளனர். தமிழ் மொழியில் இயற்றமிழும் இசைத் தமிழும் மிக இன்றியமையாதனவாகும்.

இசையில் **பண்** என்றும் **திறன்** என்றும் இரு வகை உண்டு. பண் ஏழு நரம்புகள் கொண்டது. அவற்றைத் தமிழர் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என வழங்குவர். தற்காலத்தே ச, ரி, க, ம, ப, த, நி, என வழங்கும் எழுத்துக்களைப் போலவே பண்டைத் தமிழர் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு நெடிலையும் ஏழு நரம்புகளாகக் கொண்டனர்.

பண்களில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்தும் **பெரும் பண்கள்** எனப்படும்.

காலை, மாலை, நடுப்பகல், இரவு என்னும் தனித்தனிக் காலங்களில் பாடுவதற்கேற்ற தனித்தனி பண்களும் உண்டு. பண்டைக்காலத்தில் இசைக்கருவிகள், தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என நால்வகையாகப் பிரிக்கப்பட்டன. அக் காலத்தே இசை பாடுவதையே தொழிலாகக் கொண்ட **பெரும்பாணர், சிறுபாணர்** என்னும் இனத்தவரும் இருந்தனர். பாடலோடு கூத்து ஆடும் **பொருநர்** என்னும் இனத் தவரும் இருந்தனர். இவர்களில் ஆடவர் பொருநர் என்றும், பெண்கள் **பாடினி, விறலி** என்றும் அழைக் கப்பட்டனர். இவர்கள் பேரரசர்களாலும் குறுநில மன் னர்களாலும் பெரிதும் போற்றப்பட்டனர்.

நாடகத் தமிழ் என்பது இயற்றமிழும் இசைத் தமி ழும் போலல்லாமல் கற்றூரே அன்றிக் கல்லாதவரும் அறிந்து கொள்ளும்வண்ணம் மெய்ப்பாடு தோன்ற நடித்துக் காட்டப்படுவதாகும். எனவே நாடகத் தமிழ் ஒரு தனிச் சுவை உடையதாகும். உலகவியல்பை உள்ளபடியே புனைந்து காட்டும் கண்ணுடியே நாடக மாகும். இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்தே நாட கத் தமிழ் ஆகின்றது. இயற்றமிழும் இசைத் தமிழும் நமக்குக் கேள்வியின்பம் மட்டுமே பயக்கின்றன. ஆனால் நாடகத் தமிழோ கேள்வியின்பத்துடன் காட்சி யின்பமும் தருகிறது. இதனுலேயே மக்கள் நாடகத் தையே பெரிதும் விரும்புகின்றனர்.

நாடகத் தமிழ் **வேத்தியல், பொது இயல்** என் னும் இருவகையாகப் பிரிக்கப்பட்டு அரசர்களாலும் வள்ளல்களாலும் ஆதரிக்கப்பட்டது. சங்கப் புலவர் கள் இயற்றிய பரதம், முறுவல், சயந்தம், குணநூல்

செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் முதலிய அரும்பெரும் நூல்கள் பண்டைக் காலத்தே நாடகத் தமிழ் நூல்களாக விளங்கின. இக்காலத்தே அவை கிடைக்கவில்லை. 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியாரால் பாராட்டப்பட்ட சிலப்பதிகாரம் என்னும் நூலே இக்காலத்தே சிறந்த நாடகக் காப்பிய மாக விளங்குகின்றது. இது முத்தமிழ்ச் சுவையும் விரவிய நூலென்று கூறலாம். மேலும் பிற்காலத்து எழுந்த இராம நாடகம், மீனாட்சியம்மை குறம், குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்களும் இனிய நாடகத் தமிழ் நூல்களாக விளங்குகின்றன.

இங்ஙனம் நம் முன்னோர்கள் முத்தமிழ் மொழியி லும் முன்னேற்றம் கண்டு இன்ப வாழ்வு நடாத்தினர். நம் தமிழ்மொழி வளர்வதற்கு இக்காலத்துத் தமிழ் அறிஞர்கள் மூன்று துறையிலும் பற்பல புது நூல்கள் இயற்றுவதற்கு முன் வரவேண்டும். அரசியலாரும் அதற்கு ஆக்கம் புரியவேண்டும். பொது மக்களும் ஆர்வம் காட்டவேண்டும். மாணவர்கள் இளமையி லிருந்தே தாய்மொழியில் தளரா ஊக்கமுடன் இருந்து கற்பாராயின் அவர்களால் பிற்காலத்தில் மொழியும் வளரும், நாடும் முன்னேறும்.

பயிற்சி

பொருளறிக:

தொன்மொழி	கன்னித்தமிழ்	குறுநிலமன்னர்
தலைசிறந்தது	பேறு	வேத்தியல்
இலங்குவது	நல்கி	
ஆக்கம்	பாணர்	

விடை கூறுக:

1. தமிழ் மொழி மிகவும் தொன்மையானது என்பதை எவ்வாறு அறியலாம்?

2. தமிழ் மொழியின் சிறப்பு யாது?

3. இயற்றமிழ் என்றால் என்ன? உதாரணங்கள் கூறுக.

4. இசைத் தமிழின் இலக்கணம் யாது? மறைந்துபோன தமிழிசை நூல்கள் யாவை?

5. பண் எத்தனை நரம்புகளைக் கொண்டது? அவை எவை?

6. பண்டைத் தமிழர் எவ்வெழுத்துக்களை ஏழு நரம்புகளாகக் கொண்டனர்?

7. பெரும் பண்கள் யாவை?

8. முத்தமிழில் எத்தமிழ் மிகச் சிறப்புடையது? எப்படி?

9. பண்டைக்கால நாடக நூல்கள் யாவை?

இலக்கணம்:

1. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் இவ் வுயிரெழுத்துக்களில் குறுகிய ஓசையுடையவை எவை? நீண்ட ஓசை உடையவை எவை?

(i) அ, இ, உ, எ, ஒ—இவ்வைந்தும் குறுகிய வோசை உடையவை. இவை குற்றெழுத்துக்கள் எனப்படும்.

(ii) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—இவ் வேழும் நீண்ட ஓசை உடையவை. இவை நெட்டெழுத்துக்கள் எனப்படும்.

(iii) மெய்யெழுத்துக்கள் இவ் வுயிரெழுத்துக்களுடன் சேர்ந்து உயிர்மெய்க் குற்றெழுத்தும் உயிர்மெய் நெட்டெழுத்தும் தோன்றுகின்றன.

2. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இவை பதினெட்டும் மெய்யெழுத்துக்கள்.

இவற்றில் வலிய வோசை உடையனவும், மெல்லியவோசை உடையனவும், இடைப்பட்ட வோசை உடையனவும் என மூவகை எழுத்துக்கள் இருப்பதைக் காணலாம்.

(i) க், ச், ட், த், ப், ற் — இவை ஆறும் வல்லோசையுடையவை வல்லெழுத்துக்கள் எனப்படும்.

(ii) ங், ஞ், ண், ந், ம், ன் — இவை ஆறும் மெல்லோசையுடையவை; மெல்லெழுத்துக்கள் எனப்படும்.

(iii) ய், ர், ல், வ், ழ், ள் — இவை ஆறும் இடைத்தரமான ஓசை உடையவை. இவை இடையெழுத்துக்கள் எனப்படும்.

இம் மூவகை மெய்யெழுத்துக்களும் உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து உயிர்மெய் வல்லெழுத்தும், உயிர்மெய் மெல்லெழுத்தும், உயிர்மெய் இடையெழுத்தும் தோன்றுகின்றன.

3. இப் பாடத்தின் இறுதிப் பாராவிலுள்ள குறில், நெடில், வலி, மெலி, இடையெழுத்துக்களைத் தனித்தனியே எடுத்து எழுது.

2. எவரெஸ்டு வீரன்

"மன்னும் இமயமலை யெங்கள் மலையே
மாநில மீதுஅது போல் பிறிதிலையே."

என்று பாரதியார் வீறுடன் பாராட்டிப் பாடிய பெருமை உடையது இமயமலையாகும். இதனை அக் கவிஞரே **வெள்ளிப் பனி மலை** என்று அழகுபடக் கூறுவர். இம் மலை 'அளக்கல் ஆகா அளவும், துளக்கல் ஆகாநிலையும் தோற்றமும்' ஏற இயலா உயரமும் படைத்தது. இம் மலையைக் குறித்துப் புலவர் வள்ளல் நமச்சிவாய முதலியார் அவர்கள்,

"பொன்னின் கோட்டது புனிதவெண் கோட்டது புரைதீர்
மன்னும் மானச வாவியும் உடையது வரைப்பில்
துன்னும் ஆனினம் மானினம் முதலிய துலங்கப்
பன்னு சீரது பேரது பனிவரை இமயம்"

என்று பாடியுள்ளார். செந்தமிழ்ப் புலவர்களில் ஒருவர் **"தென் குமரி வட பெருங்கல்,"** என்று கூறித் தெற்கே குமரியையும் வடக்கே பெரியமலையாகிய இமயமலையையும் குறிப்பிடுகின்றார். இமயமலைத்தொடர் ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு மைல் நீள முடையது. இதன் கொடுமுடிகள் பல உண்டு. அவற்றுள் **தவளகிரி, காஞ்சனசிருங்கம், எவரெஸ்டு** என்பன உலகப் புகழ் பெற்றவை. இவற்றுள் எவரெஸ்டு சிகரமே இப் பனி மலையின் மிக உன்னதமான சிகரமாகும். எவரெஸ்டு சிகரத்தை எட்டிப் பிடிப்பதற்காக இதுகாறும் பலர் முயற்சி செய்தனர். அவருள் பெரும்பாலோர் அரை வெற்றியே கண்டு குறை மனத்துடன் திரும்பினர். சிலர் தங்கள் ஆவியையே இழந்தனர். வெற்றி

கிட்டும் சமயத்தில் திடீரென ஏற்பட்ட பனிக்காற்றினால் இறந்தவர்கள் பலராவர்.

எவரெஸ்டு சிகரம் 29002 அடியாகும். இத்துணை உயர்ந்த மலை உச்சியைக் காண்பது எளிதான செயலா? இங்கே 25,000 அடிக்கு மேலே செல்லுவோர் பிராண வாயுக் கருவியின்றிச் செல்ல முடியாது. இங்குக் காணும் கடும் குளிரும் கொடும்பனியும்பிரயாணிகளின்

இரத்தம் உறையும்படி செய்யும். அவர்களின் உறுப்புக்கள் மரக் கட்டையைப் போல விறைத்து விடும். தண்ணீர் நொடிப் பொழுதில் பனிக்கட்டியாகி விடும். இங்கு நடப்பவர் பனிக் கட்டியில் சிறிது சறுக்கினாலும் ஆழ்ந்த பள்ளங்களில் வீழ்ந்து சிதறுண்டுபோக நேரும்.

இடையில் உள்ள துன்பங்களைக் கவனியாமல் எவரெஸ்டு உச்சியை எங்ஙனமேனும் காணவேண்டும் என்ற ஆர்வம் பல அறிஞர்கட்கு உண்டாயிற்று. முதன் முதலாக 1921-ஆம் ஆண்டில் எவரெஸ்டு சிகரத்தின் உச்சியை அடையவேண்டும் என்னும் முயற்சி துவக்கப்பட்டது. அவ்வமயம் **கர்னல் ஹாவர்டுபெரி**

தலைமையில் புறப்பட்ட பிரிட்டிஷ் குழுவினரால் 23,000 அடி உயரம்தான் ஏற முடிந்தது. அடுத்த ஆண்டில் புறப்பட்ட பிரிட்டிஷ் குழுவினர், 27,000 அடி உயரம் வரை ஏறி அதற்கப்பால் செல்ல இயலாமல் திரும்பினர். 1924-இல் புறப்பட்ட பிரிட்டிஷ் குழுவினரைச் சேர்ந்த **நார்ட்டன், சமர்வெல்** என்னும் இருவரும் 28,100 அடிக்குமேல் போக முடியாமல் வருந்தினர். அதே ஆண்டில் 28,300 அடிக்கு மேல் ஏறிச் சென்ற **மல்லாரி, இர்வின்** என்னும் இருவரையும் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டன. அவர்கள் அவ்விடத்திலேயே இறந்திருக்கக் கூடும். இம் முயற்சிக்குப் பின்னர் இரு பிரிட்டிஷ் குழுவினரும் ஸ்விட்ஸர்லாந்துக் குழுவினரும் முயன்றனர். அவர்கள் முயற்சியும் வெற்றிபெற முடியவில்லை. வெற்றி பெறுவதற்குரிய விளக்கங்களை மட்டும் அவர்கள் கொடுத்துச் சென்றனர்.

ஆனால், அடுத்து முயன்றால் ஆகாதது என்ன இருக்கிறது? முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் அன்றோ? சென்ற 1953-ஆம் ஆண்டு மே மாத இறுதியில் பிரிட்டிஷ் குழுவினர் அடைந்த எவரெஸ்டு வெற்றி உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கும் தன்மையைப் பெற்றுவிட்டது. அக் குழுவினரின் தலைவர் **கர்னல் ஹண்ட்** என்பவர். அக்குழுவினருள் எவரெஸ்டு சிகரத்தில் ஏறியவர் **டென்சிங், ஹில்லாரி** என்னும் இரு வீரர்களாவர்.

இவ்விருவரில் **டென்சிங்** என்பவர் நம் நாட்டவர் என்பதை அறிந்து நம் நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். வழிபோக்கர்களுக்

குப் பணியாளராக இருந்த டென்சிங் இன்று உலகம் புகழும் உயர்ந்த வீரராகக் காணப்படுகிறார். அவருடைய தளராத முயற்சியும், அஞ்சாத நெஞ்சமும், புதுமை காணும் ஆர்வமுமே, அவரது உலகப் புகழுக்குக் காரணமாகும். டென்சிங் வாழ்க்கை, பயங்கரமும் அற்புத நிகழ்ச்சிகளும் நிறைந்த வரலாருகும். அவர் நேப்பாள தேசத்தில் பிறந்தாரயினும் 1933-இல் இந்தியாவுக்கு வந்து இங்கேயே குடியேறி விட்டார்.

டென்சிங்கின் முழுப் பெயர் **டென்சிங் நார்க்கே** என்பதாகும். தற்காலத்தே டென்சிங் குடும்பத்தினர் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த **டார்ஜிலிங்** மாவட்டத்தில் **டூன்ஸஅங்** என்னும் கிராமத்தில் வதிகின்றனர். டென்சிங் சின்னஞ் சிறுவனுக இருந்த போதே மலைகளின் தோற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைவார். பனிக் குன்றுகளைப் பார்த்துப் பரவசப்படுவார். அக் குன்றுகளின மேல் ஏறி அங்கும் இங்குமாக ஓடி ஆடுவார். என்ருவது ஒரு நாள் எவரெஸ்டின் மேல் ஏற வேண்டுமென்று அவர் விரும்பி இருந்தார்.

டென்சிங் இளைஞராக இருந்த சமயம் ஒருநாள் பெற்ருேரிடம் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியே ஓடி விட்டார். ஓடியவர் சிக்கிம்மிலுள்ள உயர்ந்த இமாலய சிகரம் ஒன்றைக் கண்டுபிடிக்கச் சென்ற மலையேறும் கோஷ்டியில் ஒரு சாதாரண கூலியாளாகச் சேர்ந்தார். அச் சமயத்தில் ஓர் அழகிய டார்ஜிலிங் பெண்மணியை மணம் புரிந்து கொண்டார்.

மலை ஏறுபவர்களின் பொதிகளைச் சுமந்து செல்லல், அவர்களுக்கு உணவு சமைத்தல், அவர்கள் சாப்பிடும் தட்டுகளைக் கழுவுதல், கூடாரங்களை அடித்தல்

போன்ற சாதாரண வேலைகளையே அவர் செய்து வந்தார். அவற்றை அவர் இழிந்த தொழிலாகக் கருதாமல் உற்சாகமாகப் புரிந்துவந்தார். மலை ஏறுபவர்களுடன் அவர் அடிக்கடிச் சென்று பல சிகரங்களைக் கண்டார். மலையேறும் தந்திரங்கள் பலவும் அவர் அறிந்து கொண்டார். இளமைப் பருவத்துப் பயிற்சியே அவரை எவரெஸ்டின் உச்சியிற் கொண்டு போய்ச் சேர்த்தது.

டென்சிங் பள்ளிக்கூடத்தில் பயிலாதவர். அனுபவ அறிவினாலேயே அவர் மலையேறும் வழிகளைக் குறைவின்றி அறிந்து பிரிட்டிஷ் குழுவினருக்கே வழிகாட்டியாக இருந்தார். 1935-ஆம் ஆண்டில் எவரெஸ்டு சிகரத்தைக் கண்டுபிடிப்பதற்காக நடைபெற்ற முயற்சியில் மலையேறுவதில் உலகப் புகழ் வாய்ந்த **எரிக் ஷிப்டன்** என்ற வெள்ளையருடன் டென்சிங் ஏற்கனவே 24,000 அடிவரை ஏறியுள்ளார். இந்த முயற்சி ஆறுமாதமாக நடந்தது. அவர்கள் சிக்கிம் வழியாகச் சென்று 20,000 அடி உயரத்தில் **வில்ஸன் பனிக் குன்றைக்** கண்டார்கள். 1950-இல் டென்சிங் தன்னுடைய பழைய நண்பர் **தில்மேன்** என்பவருடன் நேபாளத்துக்குச் சென்று **லாங்டன்** சிகரத்தைக் கண்டு பிடிக்க முயன்றார். அம் முயற்சியில் அவர் தோல்வியே அடைந்தார். பின்பொரு சமயம் ஏழாவது கூர்க்க படையைச் சேர்ந்த **கேப்டன் தாங்க்லு, கிரேஷ்** ஆகியோருடன் **நங்காபால்பாட்** சிகரத்தைக் கண்டு பிடிக்க முயன்றார். ஆனால் எதிர்பாராதவண்ணம் டென்சிங், மலை ஏறிக்கொண்டிருக்கும் போது இவ்விரு நண்பர்களும் இறந்து விட்டனர்.

ஆயினும் நம் டென்சிங் அவர்கள் மனத்தளர்ச்சி யடைய வில்லை. தோல்விகளே அவர்தம் வெற்றிக்குப் படிக்கட்டுகளாக உதவின. அச் சிகரத்தைக் கண்டு பிடிக்க மீண்டும் மீண்டும் முயற்சி செய்து வந்தார். ஒரு சமயம் **டிப்ளக்ஸ்** என்னும் பிரெஞ்சுக்காரர் **நந்தாதேவி** என்னும் சிகரத்தைக் கண்டு பிடிக்க முயன்றார். அவருக்குத் துணையாக டென்சிங்கும் உடன் சென்றார். ஆனால் அம் முயற்சியில் **டிப்ளக்ஸ்** இறந்தார். 1952-ஆம் ஆண்டின் கோடை காலந்தான் டென்சிங் வாழ்க்கையில் நடந்த அற்புத நிகழ்ச்சியைக் குறிப்பதாகும்: அம் முயற்சியில் அவர் ஸ்விட்ஸர்லாந்துக் குழுவின் தலைவரான **ரைமண்ட் லாம்பர்ட்** என்பவருடன் மலையேறினர். பிராணவாயு சாதன மில்லாமலேயே இருவரும் இருபத்தெட்டாயிரத்து இருநூற்றுப்பத்து அடி வரை ஏறினார்கள். அதற்கு மேல் அவர்களால் ஏற முடியவில்லை. எனினும் முன்னர் முயற்சி செய்தவர்களை விட இவ்விருவரும் அதிக உயரத்தில் சென்றார்கள்

என்னும் பெருமை கிடைத்தது. 1953 மே மாத இறுதியில் திண்ணிய உள்ளம் படைத்த டென்சிங் பிரிட்டிஷ் குழுவினருடன் சென்று எவரெஸ்டு முடியில் இந்தியக் கொடியை நாட்டினார். இன்று டென்சிங் புகழ் உலகின் மூலை முடுக்குகளெல்லாம் பரவி விட்டது. உலகமக்கள் அவரைப் **பனிமலைப்புலி** என்று போற்றுகின்றனர். அவருடைய விடாமுயற்சியை மிகவும் பாராட்டுகின்றனர். எவரெஸ்டு என்னும் பெயரையே மாற்றி டென்சிங் சிகரம் என்று பெயர் கொடுக்கவேண்டும் எனப் பலர் கூறுகிறார்கள். முதலில், 1841-ஆம் ஆண்டில், இந்தியாவில் பிரிட்டிஷ் சர்வேயர் ஜெனரலாக இருந்த சர் ஜார்ஜ் எவரெஸ்டு என்ற பிரமுகர் இமய மலையில் உள்ள மகோன்னதமான சிகரத்தின் உயரம் 29, 141 அடி என்று கணக்கிட்டுக் கூறினார். அதிலிருந்துதான் அந்தச் சிகரத்துக்கு எவரெஸ்டு என்று பெயர் வழங்கலாயிற்று.

டென்சிங் புத்த சமயத்தைச் சார்ந்தவர். அவர் புகை பிடிக்கமாட்டார்; மது அருந்தமாட்டார். காபி என்றால் அவருக்கு உயிர். டென்சிங்கின் மனைவி பெயர் ஆங்லஹ்மு. அவருக்கு இரு பெண்கள் இருக்கிறார்கள். பெம்பெம் என்பது மூத்தவளின் பெயர். நிமா என்பது இளையவளின் பெயர். அவருக்கு நாய் வளர்ப்பதில் விருப்பம் அதிகம். திபெத்திலிருந்து கொண்டுவந்த நாய் ஒன்று இன்னும் செல்வமாக அவருடன் வளர்ந்து வருகிறது. எவரெஸ்டு வீரர்களை இந்திய அரசாங்கத்தார் தகுந்தபடி பாராட்டினர். வேறு பல நாட்டினரும் பாராட்டுக்கள் வழங்கினர். டென்சிங்கிற்கு இமயத்தின் உருவமமைந்த தங்கப் பதக்கம் ஒன்று ஜனாதிபதி

இராஜேந்திர பிரஸாத் அவர்களால் வழங்கப் பெற்றது. எத்துணைத் துன்பம் வந்தாலும் மனந் தளராமல் முயல்பவர் இறுதியில் வெற்றியே பெறுவர் என்பதற்கு டென்சிங் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

பயிற்சி

பொருளறிக:

மன்னும்	கோடு	குழுவினர்
வீறுடன்	பன்னும்	வாய்ந்த
துளக்கல்	கொடுமுடி	இறுதியில்
வாவி	விரைத்துவிடும்	எத்துணை

சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

படைத்தது, இதுகாறும், திணறி, எங்ஙனமேனும், இறுதியில், வழங்கலாயிற்று.

விடை கூறுக :

1. இமயத்தின் பெருமைகள் யாவை?
2. இமய மலையில் உள்ள மிகவுயர்ந்த சிகரங்கள் யாவை?
3. எவரெஸ்டு மீது ஏறுபவர் அடையும் இடையூறுகள் யாவை?
4. எவரெஸ்டின் உச்சியைக் காண முயன்ற அறிஞர்கள் யாவர்? அவர்கள் அடைந்த பயன்கள் யாவை?
5. டென்சிங் என்பவர் யாவர்? அவர் இளமையிலேயே மலையேறும் முயற்சியுடையராயிருந்தார் என்பதற்குச் சான்றுகள் தருக.

6. டென்சிங் எவரெஸ்டு முயற்சிகளைப் பற்றி விளக்குக.

7. எவரெஸ்டு வெற்றியினால் டென்சிங் அடைந்த சிறப்புக்கள் யாவை?

இலக்கணம் :

1. (i) ஓடித்தான்—இஃது ஒருவினைச் சொல். இதில் ஓடி என்பது பகுதி—இச் சொல்லில் உள்ள தொழில் ஓடித்தல். இத்தொழிலைச் செய்தது யார்? அவன்—ஆண் பால். ஆண்பால் என்பதனை எவ்வாறு அறிகிறோம். ஓடித்தான் என்னும் சொல்லில் இறுதியில் உள்ள ஆன் என்னும் எழுத்துக்களால் அறிகிறோம். இவ்வாறு தொழில் செய்த பொருளை அறிவிப்பது பகுதி ஆகும். ஆன் என்பது ஆண் பால் வினைமுற்று விகுதி.

(ii) ஓடித்தான் என்னும் சொல்லில் மேற்கூறிய வண்ணமே ஆராயின் ஆள் என்பது பெண்பால் வினை முற்று விகுதியாகும்.

(iii) ஏறினர் என்பதில் அர் பலர்பால் வினைமுற்று விகுதியாகும்.

(iv) உறைந்தன என்பதில் அ என்பது பலவின் பால் விகுதியாகும்.

(v) உறைந்தது என்பதில் து என்பது ஒன்றன் பால் வினைமுற்று விகுதியாகும்.

இங்ஙனம் வினைச் சொல்லில் விகுதி தொழில் செய்யும் கருத்தாவைக் காட்டும்; பகுதி தொழிலை உணர்த்தும்.

2. கூறினான், உண்டாயிற்று, இருந்தார், சேர்த்தது, இறந்தனர்—இவற்றின் பகுதி விகுதிகளை எடுத்துக் கூறுக.

3. இத்துணை உயர்ந்த மலையின் உச்சியைக் காண்பது எளிதான செயலா?—இது வினா வாக்கியம். இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

3. ‘தமிழ் ஞாயிறு’

‘தமிழ் ஞாயிறு’ என்னும் இச் சிறப்புப் பெயர் தமிழ்த் தென்றலாக விளங்கிய திரு. வி. கலியாணசுந்தரனாரால் ஆசிரியர் திரு. **கோ. வடிவேல் செட்டியார்** அவர்களுக்கு வழங்கப்பெற்றது. தமிழ் அறிஞர் உலகத்தில், செட்டியார் அவர்களின் திருப்பெயர் என்றும் மறையாத மணிவிளக்காகும். தம் வாழ்நாள் முழுமை

யும் தமிழ்ப் பணிக்கே ஒப்படைத்தவர் வடிவேலர் ஆவர். சென்னையில் புகழ்வாய்ந்த இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் முப்பத்தேழு ஆண்டுகளாகத் தமிழாசிரியராய்த் தொடர்ந்து பணியாற்றிய அறிஞர் செட்டியார் அவர்களே யாவார்கள். வெறும் ஆசிரியராக மட்டும் இராமல் அவர் சென்னை வேதாந்த சங்கத்தினை

நிறுவிச் சொற்பொழிவுகள் புரிதல், தமிழ்ப்பாட நூல்கள் இயற்றுதல், உரை நூலாக்குதல், வடமொழியிலிருந்து பல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தல், கைம்மாறு கருதாமல் மாணவர்கட்குத் தனியே தமிழ்ப் பாடங் கற்பித்தல் முதலிய அறிய பணிகளை ஆற்றி வந்தார்.

ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் அவர்கள் 1863-ஆம் ஆண்டு சென்னையிலுள்ள கோமளேஸ்வரன் பேட்டையில் தோன்றினர். அவருடைய பெற்றோர் சுப்பராய செட்டியாரும் தனகோடி அம்மையாரும் ஆவர். அவர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து ஐந்தாம் அகவையில் கல்வி கற்கத் தொடங்கினர். அவர் தம் பத்தாவது வயது வரை திண்ணைப் பள்ளிக்கூடத்தில்தான் பயின்றார். பின்னர் பதினேராம் வயதுமுதல் இருபத்தாருவது வயதுவரை தம் குலத்தொழிலாகிய வாணிபத்தில் ஈடுபட்டார். பலசரக்கு மளிகை வைத்து, ‘கொள்வதும் மிகை கொளாது. கொடுப்பதும் குறைகொடாது’ சீரிய முறையில் வாணிபம் நடத்தி வந்தார்.

செட்டியாரவர்களுக்குத் தக்க பருவத்தில் திருமணம் நடைபெற்றது. பூங்காவனம் என்னும் மங்கை நல்லாள் அவர்தம் வாழ்க்கைத் துணைவியாக விளங்கினர். இருவர்தம் இல்லறத்தின் பயனாக நான்கு பெண்மணிகளும், ஓர் ஆண்மகனும் தோன்றினர். ஆசிரியர் அவர்களின் திருமகனர் உயர்திரு கோ. வ. முத்துக்குமார சுவாமிச் செட்டியார் இன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி வருகின்றார்.

செட்டியார் அவர்களுக்கு, வாழ்நாளின் பிந்திய நாட்களிலேயே செந்தமிழ் கற்க வேண்டுமென்ற ஆர்வம் தோன்றியது. அவர்தம் இருபத்தேழாம் வயதில் இராமானுச நாயக்கர் என்னும் பெரும் புலவரிடம் தமிழ் பயிலத் தொடங்கினர். அவர்பால் ஏழு ஆண்டுகள் பயின்றார். பின்னர் மகா வித்துவான் இராமசாமி நாயுடு, மயிலை. சண்முகம் பிள்ளை முதலிய பேரறிஞர்களுடன் பழகித் தமது தமிழறிவை வளப்படுத்திக் கொண்டார். இரத்தின செட்டியார் என்னும் பெரியாருடன் பன்னிரண்டு ஆண்டுகள் பழகி வேதாந்த சாத்திரத்தை நன்குணர்ந்தார். தருக்க சாத்திரத்திலும் தகுந்த பயிற்சி பெற்றார்.

இங்ஙனம் விடாமுயற்சியால் விற்பன்னராகிய பெரியார் முற்கூறிய உயர்நிலைப்பள்ளியில் 1896-ஆம் ஆண்டு முதல் 1933-ஆம் ஆண்டுவரை தமிழாசிரியராகப் பணியாற்றினார். அவர்தம் நெடுங்கால உண்மைத் தொண்டை பாராட்டிய பள்ளித் தலைவர்கள் அவர் ஓய்வுபெற்ற பின்னரும் உபகாரச் சம்பளம் கொடுத்து உதவிபுரிந்தனர்.

அவர் 1896-ஆம் ஆண்டு முதல் சென்னையில் குறிப்பிட்ட பல இடங்களில் இலக்கிய இலக்கண தருக்க வேதாந்த பாடங்களைப் பலருக்குக் கற்பித்து வந்தார். அவரிடம் படித்த மாணவர் பலராவர். அவர்களில் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும், புலவர். ச. கந்தசாமி முதலியாரும், பேராசிரியர் மொ. க. துரையரங்கனாரும் குறிப்பிடத் தக்கோராவர். அவர் 1911-ஆம்வருடம் முதல் பத்தாண்டு "லோகோபகாரி" என்னும் வாரப் பத்திரிகையைப் பதிப்பாசிரியராக

இருந்து நடத்தினர். அங்ஙனமே "சக்கரவர்த்தினி" என்னும் மாதப் பத்திரிகையையும் ஐந்தாண்டு நடத்தினர்.

தமிழறிஞர் செட்டியாரவர்கள் உலகப் பொது மறையாம் திருக்குறளைத் தெளிபொருள் விளக்கவுரையுடனும் பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் வெளியிட்டார். தமிழ் மக்கள் யாவரும் இந்நூலைப் பொன்னேபோல் போற்றுவாராயினர். கைவல்ய நவநீதம், வேதாந்த சூடாமணி, பகவத் கீதை, சிவஞான போதம் முதலிய நூல்களுக்கும் அவர் அரிய விளக்க உரை நூல்கள் ஆக்கியுள்ளார். அவர்தம் நூல்கள் சொல்லழகும் பொருளழகும் வாய்ந்து படிப்பவர்க்கு இன்பம் பயப்பனவாகும்.

தமிழ் நாட்டில் செட்டியாரவர்கள் ஆற்றிய பிற தொண்டுகளும் அளவில்லாதவை. அவர் சென்னை வேதாந்த சங்கத்தைப் பல ஆண்டுகள் செம்மையாக நடத்தி வந்தார். தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் முன்னேற்றம் கருதி உழைத்தார். திருவொற்றியூர் வட்டப்பாறை நாச்சியார் முன்பு நிகழ்ந்த எருமைப்பலியைத் தடுக்க அரும்பாடுகள் பட்டார். திருமுறைகள் பாராயணம், ஆலய வழிபாடு முதலியனவற்றில் மக்களின் ஆர்வத்தைப் பெருக்கினர். தமது தளர்ந்த முதுமைப் பருவத்தும் தமிழ்ப் பணியும் சமயப் பணியும் தளராது புரிந்தவர் செட்டியாரவர்களே ஆவர். ஆசிரியரின் அருங்குணங்களைப் புகழ்ந்த திரு. வி. க. அவர்கள், "இத் தமிழ்ஞாயிறு இலக்கியம், இலக்கணம், தர்க்கம், வேதாந்தம், பொதுமை, ஒழுக்கம், ஒப்புரவு, முதலிய கதிர்கள் கான்றிய வண்ணமாயிருந்தது. ஒரு விதக் கலையில் பலர் புலவர் ஆகலாம். பலவிதக் கலை

யில் பலர் புலவராதல் அருமை. மிகச் சிலரே பல்கலைப் புலவராகின்றார். இப்பேறு அறிஞர் வடிவேல் செட்டியார்க்கு வாய்த்திருந்தது. செட்டியார் பல கலைப் புலவர். கலைகள் செட்டியார் உள்ளத்தில் ஒன்றி, அவர் தம் உள்ளமாய், ஊனாய், உடலாய்ப் பரிணமித்திருந்தது. கலைகளே செட்டியார் ; செட்டியாரே கலைகள். செட்டியார் ஒரு பல்கலைக் கழகம்போல் விளங்கினார்," என்று அழகுபடக் கூறியுள்ளார்.

"நிறைந்த கல்வி, சிறந்த ஒழுக்கம், தளரா ஊக்கம், சலியா உழைப்பு, பொறுமை விளங்கும் முகம், அன்பு ததும்பும் மொழி ஆகிய இவ் வனைத்தையும் ஒருங்கே காணும் பொருட்டாகவே ஆசிரியர் அவர்களிடம் நான் பன்முறையும் சென்றிருக்கிறேன். என்னிடம் உள்ள குறைகளைப் போக்கிக்கொள்வதற்கு இவருடைய தூய குணங்களை நினைத்துப் பார்த்தலே உயரிய மருந்தாக இருக்கும் உண்மையை எனது வாழ்க்கையில் பல முறை கண்டிருக்கிறேன்," என்று பேராசிரியர் டாக்டர். மு. வரதராசனார் அவர்கள் இவர்தம் அரிய பண்பைப் பாராட்டிக கூறியுள்ளார். இவர் குளித்துக்கொண்டும் உணவருந்திக்கொண்டும் இருக்கும் நேரங்களில்கூட தம்மை நாடிவரும் மாணவர்களின் ஐயங்களைத் தீர்த்துத் தெளிவுறுத்தி அனுப்புவார்.

செட்டியாரவர்கள், போருக்கஞ்சாத பேராண்மை வாய்ந்த வில்லேருழவரைப்போல், பல்லாயிரவர் நிறைந்த சபையிலுஞ் சிறிதும் அஞ்சாது தாம் கருதியன வற்றைச் சொல்லி நிறுத்துஞ் சொல்லேருழவர் ஆவார். ஆனால் தம்பால் கருத்து வேற்றுமை உள்ளவர்களிடத்தும் அன்போடு நடந்துகொள்ளும் பண்பாடு நம் செட்டி

யாரவர்களிடம் உண்டு. இவர் குழந்தையின் மனம் உடையவர்; ஞானியின் பேச்சுடையவர்; தியாகியின் செயலுடையவர்.

செந்தமிழ் வளர்த்த வடிவேலரின் அரிய சேவைகளைப் பாராட்டி அவர் வாழ்நாளிலேயே பல அறிஞர்கள் ஒருங்கு கூடி நிதி திரட்டி, அவரது சிலை ஒன்றைச் சென்னை வேதாந்த சங்க நிலையத்தில் அமைத்து மகிழ்ந்தனர். அவர்தம் புகழ் உரைகளை நினைவுமலர் ஒன்றினால் வெளியிட்டனர்.

பொது மக்களின் அன்பும், புலவர்களின் பெருமதிப்பும் ஒருங்கே பெற்ற அருள் வடிவினராகிய செட்டியார் அவர்கள் 1936-ஆம் ஆண்டில் தம் எழுபத்து மூன்றும் வயதில் அமர வாழ்வை அடைந்தார். எனினும் அவர் தந்நலமற்ற தமிழ்ப் பணியாலும் சமூக சேவையாலும் நம்மிடையே அழியாச் சுடராகக் காட்சியளிக்கிறார். அவர் திருப்பெயரைத் தமிழுலகம் என்றென்றும் மறவாது. வள்ளல் வடிவேலர் திருப்பெயர் வாழ்க.

பயிற்சி

பொருளறிக :

ஞாயிறு	பயிலுதல்	நிறுவி
மணிவிளக்கு	பொதுமறை	பண்பாடு
அகவை	சமயப்பணி	விற்பன்னர்
கைம்மாறு	பல்கலைப் புலவர்	ஊன்
சீரிய	சவியா உழைப்பு	அமரவாழ்வு
உயர்நீதி மன்றம்	வில்லேர் உழவர்	
வழக்கறிஞர்	சொல்லேர் உழவர்	

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

காரொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, பொன்னேபோல் போற்றி, அரும் பாடு பட்டு, சலியா உழைப்பு, மணி விளக்கு, சொல்லேர் உழவர், வில்லேர் உழவர்.

விடை தருக :

1. 'தமிழ் ஞாயிறு' என்னும் பெயர் வடிவேல் செட்டியாருக்கு எப்படிப் பொருந்தும்?

2. வடிவேல் செட்டியார் ஆற்றிய தமிழ்த் தொண்டுகள் யாவை?

3. செட்டியார் அவர்கள் முதுமைப் பருவத்து கல்வியில் ஆர்வமுடையார் என்பதை எப்படி அறியலாம்?

4. செட்டியார் அவர்கள் யார் யாரிடம் கல்வி பயின்றார்?

5. வடிவேலர் அவர்கள் எழுதிய நூல்கள் யாவை? அவை எவ்வாறு சிறப்புடையன?

6. வடிவேலர் அவர்களின் சிறந்த குணங்கள் யாவை?

இலக்கணம் :

1. (i) படித்தான்—இவ்வினைச் சொல் இறந்தகாலத்தைக் காட்டுகிறது. படி+த்+த்+ஆன் என்பதில் த் என்னும் இடைநிலையினால் இதனை இறந்தகாலம் என்று அறிகிறோம். இறந்த காலம் செயல் நடந்ததைக் காட்டுவது.

(ii) படிக்கிறான்—படி+கிறு+ஆன்—இதில் கிறு என்பது நிகழ்காலம் காட்டும் இடைநிலையாகும்—நிகழ்காலம் செயல் நிகழ்கின்றதைக் காட்டும்.

(iii) படிப்பான்—படி+ப்+ப்+ஆன்—இதில் ப் என்பது எதிர்காலம் காட்டும் இடைநிலையாகும். எதிர்காலம் செயல் இனி நடைபெறுவதைக் காட்டும்.

2. (i) த், ட், ற்; இன்—இவை இறந்தகால இடைநிலைகள்.

(ii) கிறு, கின்று, ஆநின்று—இவை நிகழ்கால இடைநிலைகள்.

(iii) ப், வ்—இவை எதிர்கால இடைநிலைகள்.

3. இப் பாடத்தில், இறுதிப் பாராவிலுள்ள வினைச் சொற்களை எடுத்துக்காட்டி அவற்றின் பகுதி விகுதி இடைநிலைகளைக் கூறுக.

4. சூரியன் மறையாத நாடு

ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்கில் **ஸ்காண்டி நேவியா** என்னும் தீபகற்பமொன்று உண்டு. அந்தத் தீபகற்பத்தில் நார்வே, ஸ்வீடன் என்னும் இரண்டு



நாடுகள் அடங்கியுள்ளன. அவைகளுக்கு வடக்கே **லாப்லாந்து** என்னும் தேசமும் இருக்கிறது. அப் பிர தேசம் மலைப் பாங்கானது. எப்பக்கம் நோக்கினும் மலைகளே நம் கண்களுக்குப் புலப்படும். அங்குள்ள மலைகள் மேக மண்டலத்தையும் முட்டி வானளாவ

வளர்ந்து தோன்றுகின்றன. கோடை காலத்திலும் அங்குள்ள மலை முகடுகளில் பனிப்படலம் மூடி இருப்பதைப் பார்க்கலாம். அம்மலைகளினின்று எண்ணிறந்த நீர்வீழ்ச்சிகள் வீழ்வதையும் காணலாம். அவை மலைக் பக்கங்களில் சிற்றோடைகளாக ஓடும் காட்சி மிக அழகாக இருக்கும். மலைகளுக்கிடையே கண்ணைக் கவரும் வனப்பு வாய்ந்த பள்ளத் தாக்குகளும் உண்டு. அங்குமிங்குமாகச் சில பசும் புல்வெளிகளையும் காணலாம். வேனிற் காலத்தில் அங்குப் புற்கள் தழைத்து வளரும்; மலர்கள் பூத்துக் குலுங்கும்.

அந் நாடுகளில் பகலிலும் இரவிலும் சூரியன் இடைவிடாமல் பிரகாசிப்பதுண்டு. ஆனால் பனிக் காலத்தில் மலைகள், பள்ளத் தாக்குகள், ஆறுகள் எல்லாம் பனியால் மூடப்பட்டு இரவுபோல் தோன்றும். அங்கு ஜனநெருக்கம் குறைவு: விலங்கினங்களும் சொற்பமே. அங்கு உறையும் பறவைகளும் குளிர் காலங்களில் உணவுப் பொருள் கிடைக்காமையால் தெற்கில் உள்ள நாடுகளுக்குப் பறந்து போய்விடுகின்றன. அங்குக் கோடையில் பகல் நேரம் அதிகமாக இருப்பது போலவே குளிர் காலத்திலும் இரவு நேரம் அதிகமாக உள்ளது. கோடையில் இரவு நேரத்திலும் சூரியன் பிரகாசித்துக் கொண்டே இருப்பதால் அங்குள்ளவர் தூங்கும் நேரம் சிறிது நேரமேயாகும்.

கோடைகால மென்றாலே அங்குள்ள மாடு மேய்க்கும் சிறுவர்களுக்கு மிகவும் கொண்டாட்டம். ஏப்ரல்

மாதத்தில்தான் நார்வேயில் கோடைகாலம் தொடங்கும். கோடை தொடங்கியதும் எங்கும் தாவரங்கள் தழைத்துப் பச்சைப் பசேல் என்று காட்சி அளிக்கும். சிறுவர்களும், சிறுமிகளும் தங்கள் ஆடுமாடுகளை மலைச்



சாரலில் உள்ள புல் வெளிகளுக்கு ஓட்டிச் செல்வார்கள். அங்கு அவர்கள் கல்லினால் குடிசைகள் அமைத்துக்கொண்டு கோடைகாலம் முடியும் வரையில் தங்கி இருப்பது வழக்கம். மாடு மேய்த்தல், பால் கறத்தல், பாலிலிருந்து வெண்ணெய் எடுத்தல், பாலடைக்கட்டி செய்தல் போன்றவை அவர்களுடைய முக்கியமான தொழில்களாகும். ஒன்றும் விளையாத பனிக்காலத்தில் ஆடுமாடுகளின் உணவுக்கு என்ன செய்வது? அதற்காகச் சிறுவர் சிறுமியர் கோடை காலத்தில் புல்லை வளர்த்து வைக்கோலாக ஆக்கித் தத்தம் வீடுகளுக்கு அனுப்புவார்கள். சிலர் தோட்டங்களுக்குச் சென்று தம் பெற்றோர்களுக்கு உதவி செய்வார்கள்.

அப் பிரதேசத்தில் வாழும் மக்கள் எஸ்கிமோயர்கள். அவர்கள் கோடையில் வேட்டையாடும் தொழிலையும், மீன் பிடிக்கும் தொழிலையும் மேற்கொள்கிறார்கள். அவர்கள் சிறப்பாகக் **கரிபோ** என்னும் மிருகங்களையும் மலை ஆடுகளையும் வேட்டை யாடுகிறார்கள். பறவை

கள் அகப்படும் இடங்களை நாடி அவற்றைக் கண்ணி வைத்துப் பிடிப்பார்கள். அவற்றை வேட்டையாடு வதற்கு வேண்டிய கருவிகளை வேனிற்காலம் தொடங்கு வதற்கு முன்னரே சேகரித்துக் கொள்வார்கள். அங்கு மீன் பிடிக்கும் தொழில் மூன்று மாதம் நடைபெறும். மீன்களை உப்பிட்டு, உலர்த்தி அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். **காட்** என்னும் ஒரு வகை மீனிலிருந்து **காட்லீவர் ஆயில்** என்னும் எண்ணெய் எடுத்து அயல் நாடுகளுடன் வாணிபம் செய்கிறார்கள்.

அப் பிரதேசங்களில் கலைமான் என்னும் ஒருவகை மான் துாந்திர வெளிகளிலிருந்து கொண்டுவரப்பட்டு வளர்க்கப்படுகின்றது. அவர்கள் அதன் தோலைச் சட்டை தைப்பதற்குப் பயன்படுத்துவர்; கூடாரங்கள் செய்வதற்கும் உபயோகப்படுத்துவர். மேலும் அந் நாட்டு வியாபாரப் பொருள்களில் கலைமான் தோலும் ஒன்றாகக் கருதப்படுகிறது. பெற்றோர்கள் செய்யும் வேலைகளையெல்லாம் பிள்ளைகளும் கற்றுக்கொண்டு அவர்களுக்கு உதவிபுரிவார்கள்.

ஆகஸ்டு மாதத்தில் அங்குப் பனிக்காலம் தொடங் கும். எங்கும் ஒரே பனி மயமாக இருக்கும். மக் கள் வெளியே எங்கும் செல்லமுடியாமல் அவரவர்கள் வீடுகளில் அடங்கிக் கிடப்பார்கள். கோடைகாலத்தில் கூடாரங்களில் வசிக்கும் அப்பிரதேச மக்கள், குளிர் காலத்தில் தேன்கூடுபோன்ற பனிக்கட்டி வீடுகளில் வசிப்பார்கள். அவ்வீடுகளுக்கு இக்லூ (Igloo) என்று பெயர். இவை யெல்லாப் பக்கங்களிலும் மூடப்பட்டு, ஒரு மனிதன் மட்டும் போகக்கூடிய துவாரத்துடன் அமைந்திருக்கும். வீட்டினுள்ளே செல்பவர்கள்

ஊர்ந்தே போகவேண்டும். அத்தகைய அமைப்பினல் அவர்களுக்கு இரண்டு நன்மைகள் ஏற்படுகின்றன. ஒன்று அந்நாடுகளில் எதேச்சையாகத் திரிந்து வரும் கரடிகள் வீட்டிற்குள் நுழைய மாட்டாமல் இருக்கும். மற்ருென்று, வீட்டின் உட்புறம் அதிகக் குளிர்ச்சி இல்லாமல் கதகதப்பாய் இருக்கும்.

குளிர் காலத்தில் எஸ்கிமோக்கள் வெளியே செல்வதற்கு உதவும் பிராணி நாய். அங்குள்ள நாய்கள் அடர்ந்த ரோமம் உடையனவாயும் குளிரைத் தாங்கும் ஆற்றல் பொருந்தினவாயும் இருக்கும். ஸ்லெட்ஜ் என்னும் சக்கரமில்லா வண்டிகளில் இந் நாய்களைப் பூட்டி மூன்று அல்லது நான்கு பேர்கள் ஏறிச் செல்வார்கள். ஒரு வண்டியை இழுப்பதற்குப் பத்து நாய்கட்குக் குறையாமல் இருத்தல்வேண்டும். அவை வேலையற்ற சமயங்களில் குளிரையும் பொருட்படுத்தாமல் பனிக் கட்டிகளின்மீதே படுத்துறங்குவதுண்டு.

லாப்லாந்தில் கலைமான் அந்நாட்டு மக்களின் செல்வமாகக் கருதப்படுகிறது. எஸ்கிமோக்கள் வண்டியை இழுப்பதற்கு நாய்களை உபயோகிப்பதுபோல் லாப் மக்கள் கலைமான்களைக் கொண்டு வண்டியை ஓட்டுகிருர்கள். அப்பிராணிகள் மக்களின் பாரத்தைச் சுமப்பதுமல்லாமல், அவற்றின் மாமிசமும், பாலும் அவர்கட்குச் சிறந்த உணவாகப் பயன்படுகின்றன. அவற்றின் கொம்புகளாலும், எலும்புகளாலும் ஆயுதங்கள் செய்கிருர்கள். லாப் மக்கள், தாம் வளர்க்கும் கலைமான்களிடம் மிகவும் அன்பாக நடப்பார்கள்.

இப் பிரதேசங்களில் வாழும் சிறுவர்கள் குளிர் காலத்தில் ஆடும் ஒரு விளையாட்டு மிகவும் வேடிக்கை

யாக இருக்கும். அவர்கள் காலில் ஸ்கீ (Ski) என்னும் ஒருவகைக் கட்டைகளைப் பொருத்தி இரண்டு தடிகளைக் கையால் ஊன்றிக்கொண்டு மலைச்சரிவின் வழியாக 'விர்'ரென்று சறுக்கிவரும் காட்சி வியப்பாக இருக்கும். ஸ்லெட்ஜ் என்னும்



வண்டியை அச் சிறுவர்கள் விளையாட்டாக இழுத்துச் செல்வதும் உண்டு. சறுக்கிச் சறுக்கி விளையாடுவதில் அவர்கட்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அந்நாட்டு மக்களுக்கு உணவுப் பொருள்கள் கெட்டுவிடும் என்னும் அச்சம் ஒருநாளும் ஏற்படுவதில்லை. பனிக்கட்டியின் அடியில் வைக்கும் பொருள்கள் கெடமாட்டா. எனவே அவர்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருளையும் ஒரே சமயத்தில் சமைத்து வைத்துக்கொள்வதுண்டு. நார்வேயில் மக்கள் தங்களுக்கு ஐந்தாறு மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், விறகு முதலியனவற்றையும் சேகரித்துத் தனித்தனி அறைகளில் வைத்துக்கொள்வார்கள். அவர்கள் எப்போதும் வீட்டைச் சுத்தமாகவே வைத்துக்கொள்வார்கள்.

அப்பிரதேசங்களில் உறையும் மாந்தர் பிறநாட்டாருடன் அவ்வளவாகத் தொடர்பு உடையவர்களல்லர். பிறநாட்டினரின் வாழ்க்கையைப்போல் அவர்களுடைய வாழ்க்கை எளியதன்று. ஆயினும் அவர்கள் ஏனைய நாட்டினரைக் காட்டினும் வலிமை வாய்ந்தவர்கள்;

ஊக்கத்துடன் உழைப்பவர்கள்: இடையூறுகள் பல வரினும் மனந்தளராதவர்கள். அவர்களிடம் பொறுமையும் தன்னடக்கமும் நிறைந்திருக்கும். சாதி சமயப் பூசலும் அரசியல் அதிகார வெறிகளும் அவர்களிடையே காணப்படா. அவர்கள் வாழும் இடமும் அமைப்பும், நடையுடை பாவனைகளும் சிந்தித்துப் பார்ப்பின் நமக்கு வியப்பும், நகைப்பும் ஏற்படுகின்றன வல்லவா ?

பயிற்சி

பொருளறிக :

திபகற்பம்	ஊர்ந்து	ஏனைய
புலப்படும்	எதேச்சையாக	தன்னடக்கம்
முகடு	கதகதப்பு	
சொற்பம்	மட்டற்ற	
நாடி	தொடர்பு	

கீழ்வரும் சொற்றொடர்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

எண்ணிறந்த, அங்குமிங்கும், பச்சைப் பசேலென்று, மேற்கொள்கிறார்கள், சேகரித்து.

எதிர்ப்பதம் கூறுக:

கோடைகாலம், சொற்பம், எதேச்சையாக, உட்புறம், அயல் நாடு.

விடை தருக:

1. ஸ்காண்டிநேவியாவின் இயற்கை அமைப்பைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

2. நார்வே ஸ்வீடன் நாடுகளில் குளிர்காலக் காட்சிகள் எப்படி இருக்கும்?

3. நார்வே நாட்டுச் சிறுவர்களின் தொழில்கள் யாவை?

4. எஸ்கிமோக்கள் எவ்வாறு பிழைக்கிறார்கள்?

5. குறிப்பு எழுதுக: இக்லூ, ஸ்லெட்ஜ், ஸ்கீ.

6. கலைமான்கள் எஸ்கிமோக்களுக்கு எவ்வாறு பயன் படுகின்றன?

7. 'துருவப் பிரதேசங்களில் உணவுப் பொருள்கள் நெடுநாட்கள் கெடுவதில்லை' ஏன்?

8. துருவப் பிரதேசத்தில் வாழும் மக்களிடம் காணப்படும் நற்குணங்கள் யாவை?

கட்டுரைப் பயிற்சி:

1. 'எஸ்கிமோக்களின் வாழ்க்கை' என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. உன்னை ஒரு துருவப் பிரதேசத்துச் சிறுவனாக நினைத்து அங்கு உன் அன்றாடவாழ்க்கையைப்பற்றி நீயே நேரில் கூறுவதுபோல் ஒரு சிறு கட்டுரை வரைக.

இலக்கணம்:

1. சிறுவன் ஓடினான். மலர் உலர்ந்தது—இவ் வாக்கியங்களில் உள்ள சொற்களைக் கவனி. இவை தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ளவர் யாவரும் புரிந்து கொள்ளுமாறு பேசும் தமிழ். இவை செந்தமிழ்ச் சொற்கள் எனப்படும்.

2. தந்தை—இது செந்தமிழ்ச் சொல். மலை நாட்டார் இதனை அச்சன் என்று கூறுவர். இஃது ஒரு நாட்டிலுள்ளவர் மற்ற நாட்டிலுள்ளவர்கட்குப் புரியாமல் பேசிக் கொள்ளும் தமிழ். இதுபோன்ற சொற்கள் கொடுந்தமிழ்ச் சொற்கள் எனப்படும். செந்தமிழ்ச் சொற்கள் தமிழ் நாடெங்கும் உணரக்கூடும். கொடுந்தமிழ்ச் சொற்கள் அவ்வவ் வட்டாரத்தினராலேயே அறியக்கூடும்.

செந்தமிழ்	—	**கொடுந்தமிழ்**
சோறு	—	சொன்றி
தாய்	—	தள்ளை
கழனி	—	செய்
சிறுகுளம்	—	பாழி
தோழன்	—	எலுவன்
தோழி	—	இருளை
தண்ணீர்	—	வெள்ளம்

3. உங்கள் ஊரில் நீ கேள்விப்படும் கொடுந்தமிழ்ச் சொற்களை எடுத்துக்காட்டி அவற்றிற்குரிய செந்தமிழ்ச் சொற்களைச் சேர்த்துக் கூறுக.

5. தீபம் ஏந்திய சீமாட்டி

மனிதன் ஒருவன் பெருமை யடைதற்குரிய வழிகள் பல உள்ளன. சாதாரணமாகச் செல்வம் மிக்கிருப்பின் சிறப்படையலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். நிறையப் படித்தால்தான் புகழ் பரவும் என்று சிலர் நினைக்கின்றனர். இன்னும் சிலர் அரசியலில் ஈடுபட்டால்தான் கீர்த்தி நிலவும் என்று கருதுகின்றனர்.



இவை எல்லாவற்றையும் ஒருவன் எளிதாக அடைய முடியாது. இவற்றைப் பெற்றாலும் பெருமை அடைகின்றான் என்று சொல்லுவதற்கும் இல்லை. ஆனால் புகழ் தானாக நம்மை அடைய எளிய வழியொன்றுண்டு. அது தான் பிறர்க்குத் தொண்டு செய்தலாகும். இங்ஙனம்

பிறர்க்குச் சேவை செய்து புகழ்பெற்ற பெருமாட்டியார் **பிளாரன்ஸ் நைட்டிங்கேல்** என்பவர்.

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் 1828-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் பிறந்த குடும்பம் செல்வம் மிக்க ஒரு பிரபுவின் குடும்பமாகும். இவர் அக்குடும்பத்தில் இரண்டாவது மகளாகத் தோன்றினர். அம்மையார் **பிளாரன்ஸ்** என்னும் இடத்திற்கருகில் பிறந்தமையினல் இவருக்குப் **பிளாரன்ஸ்** என்று திருப்பெயர் சூட்டினர். **நைட்டிங்கேல்** என்பது இவரது குடும்பப் பெயர்.

இவர் இளமையிலேயே அறிவுத்திறன் படைத்தவராக விளங்கினர். மேல்நாட்டு மொழிகள் பலவற்றைக் கற்ருர்; கணித நூலைக் கற்றுத் தேர்ந்தார்; இசையில் நல்ல தேர்ச்சி பெற்ருர். இவருடைய தந்தையார் இவ்வம்மையாரை நல்ல கல்வியறிவுடையவராக்குவதில் முழுக் கவனத்தையும் செலுத்தினர். பள்ளிப் படிப்பு மட்டுந்தான் படிப்பு என்று கொள்ளாமல் உலகியல் அறிவையும் பெறுவதற்காக, இவர் தந்தை இவரை அயல் நாடுகளுக்கெல்லாம் அழைத்துச் சென்ருர். அம்மையார் பல நாடுகளைக் கண்டார். பல நகரங்களில் சென்று பல திறப்பட்ட மக்களோடு கலந்து பேசி அறிவை விருத்தி செய்து கொண்டார்.

பிளாரன்ஸ் அம்மையாரின் மனம் உலக இன்பத்தில் ஈடுபடவில்லை. எங்கும் மக்கள் படும் துன்பமே இவர் கண்ணுக்குத் தோன்றிற்று. அவர்கள் வருத்தத்தைப் போக்க வேண்டும் என்று ஆசை கொண்டார். சிறுமியாக விளையாடிக் கொண்டிருந்த நாள் தொட்டே இவர் பிறர் துன்புறுவதைக் கண்டு சகியார்; ஏழை

எளியவர் வீடு செல்லுவார்; அவர்கள் நல்வாழ்வுபெற உதவுவார்; கிராமங்களுக்கு விரைந்தோடுவார்; அங்கே கிராம மக்கள் சுகாதாரமற்ற முறையில் வாழ்வது கண்டு மனம் நொந்து அவர்கள் தூய முறையில் வாழ வழிகாட்டுவார்: அங்கே ஏழை மாணவர்களுக்குக் கல்வி போதிப்பார்.

இங்ஙனம் காலை முதல் மாலை வரையிலும் பிறர்க்குத் தொண்டு புரிவதில் இவருக்கு எல்லையற்ற இன்பம் உண்டு. இதனை நன்குஅறிந்துகொள்ளாத இவர் தந்தை இவரை இலண்டனுக்கு அழைத்துச் சென்று இராணியின் கீழ்த் தொண்டு புரியுமாறு செய்தனர். ஏழைக்குத் தொண்டு செய்ய நாட்டமுள்ள மனம் எங்ஙனம் அரசிக்குத் தொண்டு செய்ய இசையும்? அம்மையாருக்குத் அத்தொழில் பிடிக்கவில்லை; இலண்டனிலிருந்த காலத்தில் பல சேவாசங்கங்களில் தொண்டுபுரியலாயினார். இச் சமூக சேவை இவரை ஐரோப்பிய நாடுகளுக்குப் போமாறு செய்தது. 1851-ஆம் ஆண்டில் செல்வச் சீமாட்டியாராகிய நைட்டிங்கேல் ஒரு தாதியாக மாறினார். தாதித் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கு ஜெர்மனி சென்றார். **கைஸர்வராத்** என்னும் நகரத்திலுள்ள மருத்துவ சாலையில் தாதியாகப் பயின்றார். அங்கே அத் தாதித் தொழிலில் சிறப்புற்று வருங்கால் அவரது உடல் நலம் குன்றியது. அதனால் அம்மையார் தம் தாய்நாடு திரும்பினார்.

உடம்பு நலமுற்றதும் இலண்டன் நகரில் செல்வச் சீமாட்டிகளுக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த மருத்துவ சாலையில் இவர் தாதியாக அமர்ந்தார். இவர் தொழில் திறத்தைக் கண்டு எல்லோரும் வியந்தனர். இவர்

நோயாளிகள் பக்கம் சென்று அவர்கள் நோய் நீங்கும் வகையில் இனிமையாகப் பேசுவார். இவர் முகம் எப் போதும் புன்முறுவல் தவழும் இன்முகமாகத் திகழும். நோயாளிகள் என்ன கேட்டாலும் இவருக்குக் கோபமே வராது. கடுஞ் சொல்லும், கோபமும் உடையவர்கள் தாதித் தொழிலுக்கு ஏற்றவர் ஆகார்.

இலண்டனில் தாதித் தொழில் பார்த்து வருகையில் இங்கிலாந்துக்கும் ரஷ்யாவுக்கும் போர் மூண்டது. ஆங்கிலேயருடன் பிரெஞ்சுக்காரரும் சேர்ந்தனர். கடும் போர் நிகழ்ந்ததால் காயமடைந்தோர்க்குக் கணக்கே இல்லை. கை போனவர் ஒரு பால்; கால் உடைந்தவர் ஒரு பால்; காயமடைந்தவர் ஒரு பால்; தண்ணீர் தண் ணீர் என்று கதறி உயிர் விடுவோர் ஒரு பால். அப் போர்க் காட்சியை நினைத்தாலும் நம் மனம் திடுக்கிடும். படை வீரர்கள் போர்க்களத்தில் படும் துன்பத்தை அறிந்து அதனைப் போக்க நைட்டிங்கேல் அம்மையார் பெருங் குடியில் பிறந்த முப்பத்தேழு பெண்களுடன் தாதித் தொழில் செய்யப் புறப்பட்டார். அவர்கள் போர்க்களத்தில் ஏற்படும் அபாயங்களை உணர்ந்தவர் கள். ஆனால் அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. தங்கள் உயிரினும் பிறர் உயிர் சிறந்தது என்று எண்ணி னர். அவர்கள் எல்லோரும் குட்டேரி எனும் நகரத் தில் அமைக்கப்பட்டிருந்த ராணுவ மருத்துவமனையைச் சேர்ந்தனர்.

அம் மருத்துவமனை சீர்கேடான நிலையிலிருந்தது. அதனைச் சீர்திருத்தி அமைப்பதே தம்முடைய முதல் கடமை என நைட்டிங்கேல் அம்மையார் கருதினர். அதனைச் செவ்விய முறையில் அமைத்தார். அங்கு

வரும் நோயாளிகள் அனைவரையும் நன்முகக் கவனித்து வந்தார். எல்லாம் அவர் மேற்பார்வையிலேயே நடந்து வந்தன. தாமே ஒவ்வொரு நோயாளியிடமும் சென்று என்ன வேண்டும் என்று கேட்பார். தன் நலத்தைக் கவனியாமல், இரவெல்லாம் தூங்காமல் கையிலே விளக்கு ஏந்தி நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வார். பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு காயமடைந்த படை வீரர்களைத் தன் மெல்லிய கரங்களால் தடவுவார்; இன்சொல் கூறுவார்; நோயாளிகளுக்கு இவர்தம் இன்சொல்லே மருந்தாக அமைந்தது. எல்லோரும் நைட்டிங்கேல் அம்மையாரிடம் சிகிச்சை பெறுவது பெரும் பேறு என்று எண்ணினர்.

நாளடைவில் இவ் வம்மையாரின் அருந் தொண்டின் பெருமை உலகெங்கும் பரவிற்று. இதனை விக்டோரியா மகாராணியாரும் அறிந்தார். இராணியார் இவருக்கு ஓர் இரத்தினப் பதக்கத்தைப் பரிசாக அளித்தார். துருக்கிநாட்டு மன்னனாகிய சுல்தானும் இவருக்கு ஓர் இரத்தின மாலையைப் பரிசாக அளித்தான். மக்கள் இவருடைய சேவையைப் பாராட்டி **"நைட்டிங்கேல் நிதி"** என்று ஒரு நிதி திரட்டி இவரிடம் கொடுத்தனர். ஆனால் இவர் அந்நிதியினைத் தன் சொந்த நலத்திற்கு உபயோகித்துக் கொள்ளாமல் தாதித் தொழிலைப் போதிக்க ஒரு கல்லூரி நடத்துவதற்குக் கொடுத்துதவினார்.

அம்மையார் தம் வாழ்நாள் முழுமையும் சேவை செய்தலிலேயே காலம் கழித்து 1856-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். இவர் மறைந்து பல ஆண்டுகள் ஆயின. ஆனால் இவர் புகழ் மாயாது.

இன்றும் தாதிகள் பலரும் நைட்டிங்கேல்போல் தொண்டு செய்யவேண்டும் என்று விரும்புகின்றனர்.

பயிற்சி

பொருளறிக :

அறிவுத்திறன்	சகியார்	நிலவுதல்
கடும்போர்	சீர்கேடான	நீத்தார்
கூர்மை	சூட்டுதல்	பால்
கசிந்துருகல்	திகழ்தல்	

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

எல்லையற்ற, உள்ளளவும், நாளடைவில், நல்வாழ்வு வாழ.

விடை கூறுக :

1. பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாருக்கு அப் பெயர் வரக் காரணமென்ன ?
2. பிளாரன்ஸ் அம்மையார் இளமையிலிருந்தே எவ்வாறு நல்லறிவு வாய்க்கப் பெற்றார் ?
3. அம்மையாரின் மனம் ஏன் உலக இன்பத்தில் ஈடுபடவில்லை ?
4. சிறுமியாக இருக்கும்போதே அம்மையார் செய்த அரும்பணிகள் யாவை ?
5. தாதித் தொழிலில் அம்மையாரிடம் காணப்பட்ட நற்பண்புகள் யாவை ?
6. இங்கிலாந்து - ரஷ்யப் போரில் மக்களுக்கு நேர்ந்த துன்பங்கள் யாவை ?
7. குட்டேரி ராணுவ மருத்துவ மனையில் அம்மையார் செய்த தொண்டுகள் யாவை ?

இலக்கணம் :

எங்கள் குதிரை கன்று போட்டது—இவ்வாக்கியத்தைக் கவனி. கன்று என்று கூறுவது வழு (தவறு). குட்டி என்றே கூறுதல் வேண்டும். பசுவின் கன்று என்று கூற வேண்டும். பசுவின் குட்டி என்று கூறலாகாது.

இங்ஙனம் முன்னோர்கள் எப்பொருளை எச் சொல்லால் வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் கூறுவது மரபு எனப்படும். மரபுக்கு மாறாக வழங்கும் சொற்கள் மரபுவழு வாகும். பசுவின் கன்று, குதிரைக் குட்டி என்று மரபு வழுவாமல் கூறுவது மரபு வழாநிலை யாகும்.

ஆனால் சிலர் தம் மகனை 'அப்பன் வந்தான்' என்றும், மகளை 'என் அம்மை வந்தாள்' என்றும் கூறுவதுண்டு. இவை அன்பு மிகுதியால் கூறப்படுவதால் மரபு வழுவமைதியாகக் கருதப்படும்.

1. கீழ் வருவனவற்றில் கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்து எழுதுக:

(1) கண்ணன் கடலை......(உண்டான், தின்றான்.)

(2) எங்கள் தோட்டத்தில் ஒரு மா......நட்டேன். (செடி, பிள்ளை)

(3) சிங்கம்...............(உறுமுகிறது, பிளிறுகிறது, முழங்குகிறது.)

(4) மயில்............(கூவுகிறது, கரைகிறது, அகவுகிறது.)

2. கீழ் வருவனவற்றைத் திருத்தி எழுதுக:

(1) அகாரணமாய் வண்டியை நிறுத்துபவருக்கு அபருதம் ஐம்பது ரூபா.

(2) இங்கே சுத்தமான வெண்ணெய் விற்கப்படும்.

(3) பிரதி ஞாயிறு தோறும் விடுமுறை.

(4) வண்டி நிறைந்து விட்டது. யாரும் ஏரக்கூடாது.

(5) உத்திரவின்றி உள்ளே வறக்கூடாது.

6. சென்று காண்போம்

அரசர்கள் உறையும் இடத்துக்கு அரண்மனை என்று பெயர். அரண்மனை என்ற சொற்றொடர்க்குக் **காவலமைந்த வீடு** என்பது பொருள். அரண் நான்கு வகைப்படும். அவை மலையரண், காட்டரண், நீரரண், மதிலரண் என்பனவாகும். பண்டைக்கால அரசர்கள் இத்தகைய நான்கு அரண்களையும் உடையனவாகத் தம் இருப்பிடத்தை அமைத்துக்கொள்வர். இவ்வகை நான்கு அரண்களையும் சிறப்பாகப் பெற்றது செஞ்சிக் கோட்டையாகும். தென்னாட்டு வீரன் தேசிங்கு மன்னன் சீரும் சிறப்பும் நிறைந்து வாழ்ந்த இடமே செஞ்சிக் கோட்டையாகும். அவன் ஆர்க்காட்டு நவாபுடன் பெரும்போர் புரிந்த தலைசிறந்த வீரனாவான்.

இற்றைக்கு ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன் செஞ்சி நகரம் ஒரு பாளையப்பட்டின் தலைநகராக விளங்கி இருந்தது. இன்று அது சீர்குலைந்து ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. அங்குள்ள குன்றுகளின் மேல் கட்டப்பட்டுப் பாழடைந்துள்ள கோட்டைகளைக் காணின், ஒரு காலத்தில் அவை பேராற்றல் வாய்ந்த மன்னர்களின் உறைவிடமாக இருந்திருக்க வேண்டுமென்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெளிவாக அறியலாம்.

சென்னையிலிருந்து செஞ்சிக்குச் செல்வோர் தெற்கு நோக்கி விழுப்புரம் செல்லும் புகைவண்டியிற் புறப்படவேண்டும். இடையே திண்டிவனத்தில் இறங்கி மோட்டார் வண்டியில் ஏறிச் செஞ்சியை

அடையலாம். இவ்வூர் தென்னூர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தது.

செஞ்சிக் கோட்டையானது மூன்று மலைகளை இணைத்துக் காவலுக்குச் சிறந்த அரணாகக் கட்டப்பட்டது. தெற்கில் **சந்திரகிரியும்**, தென்மேற்கில் **இராஜகிரியும்**, வடக்கில் **கிருஷ்ணகிரியுமாக** ஏறக்குறைய ஐந்து மைல் சுற்றளவில் இக்கோட்டை அமைந்துள்ளது. இங்ஙனம் வியத்தகு முறையில் மலையரண் அமைத்த தேசிங்கு போன்ற மன்னர்களின் அறிவு நுட்பம் பாராட்டுதற்குரியதன்றோ?

இராஜகிரியின் உச்சி செங்குத்தானது. அதன் சரிவு பிளவுள்ளது. அப்பிளவு 20 அடி அகலமும் 100 அடி ஆழமும் கொண்டது. இக்காரணங்களால் அதன்மீது அமைக்கப்பட்டுள்ள அரணே செஞ்சிக் கோட்டை முழுவதற்கும் உயிர் நிலையாக விளங்கிற்று. இராஜகிரியின்மீது ஏறிச் செல்வதற்குக் கருங்கற்படிகள் கட்டப்பட்டுள்ளன. அக்குன்றில் முக்காற்பங்கு ஏறினால் ஒரு பரந்த இடத்தைக் காணலாம். அவ்விடத்தே கமலக்கண்ணி கோயிலும் ஒரு நீர்ச்சுனையும் உண்டு. அந்நீர்ச்சுனையின் பரப்பு 200 சதுர அடியாகும். அதன் நீர் எப்போதும் தண்மை உடையது. தேசிங்கு இச்சுனையில் தான் நீராடுவது வழக்கம். சுனையைச் சுற்றிலும் மேடைகளும் திண்ணைகளும் ஒழுங்காகக் கட்டப்பட்டுள்ளன. கமலக்கண்ணி கோயிலையடுத்து ஒரு சிறிய ஆலயமும் காணப்படுகிறது. ஆனால் உள்ளே தெய்வச்சிலை ஒன்றும் இல்லை. கமலக்கண்ணி கோயிலின் முன்புறத்தில் ஒரு கற்பாறை உள்ளது. அதில் வில், ஐந்து அம்புகள், எருமைக்கடா, செம்மறிக்

கடா, மனிதர் தலைகள் ஆகிய உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன.

சுனையினின்று மலையுச்சியை யடையக் கற்படிகள் இல்லை. நன்கு செப்பனிடப்படாத மரப்படிகளே



உண்டு. அவற்றில் ஏறிச்செல்வது சற்றுத் துன்ப மாகவே இருக்கும். அங்கே அரசமாதர்கள் அமைதி யாகவும் இன்பமாகவும் வாழ்ந்துவந்த அந்தப்புரம் உள்ளது. அதைச் சுற்றிலும் மதிற்சுவர்கள் எழுப்பப் பட்டுள்ளன. எண்கோண வடிவமான இரண்டு மண்ட பங்கள் அங்கே உள்ளன. மண்டபங்களைச் சுற்றிச் சிறு சிறு அகழ்கள் வெட்டப்பட்டுள்ளன.

மேற்கூறிய வனைத்தும் கண்டோர் இராஜகிரிக்கு அடிவாரத்தில் பாழ்பட்ட பல அற்புதமான சின்னங் களையும் காணலாம். அங்கு, 'கலியாண மஹால்' என் னும் ஏழடுக்குச் செங்கற்கட்டடம் காணப்படும். அக் கட்டடம் பார்ப்பவரின் கண்களுக்கு நல் விருந்தளிக்கும்

காட்சியை உடையது. அக்கட்டடத்தில் ஒன்றன்மேல் ஒன்ருகக் கட்டப்பட்ட ஏழு அறைகளும் தென்றிசையை நோக்கி அமைந்துள்ளன. இக்கட்டடத்தில் மிகவும் வியப்பான அமைப்பு ஒன்று உண்டு. ஏறக்குறைய மூன்று பர்லாங்குத் தொலைவிலுள்ள சக்கரக் குளத்தி லிருந்து கலியாண மஹாலின் மேல் மாடங்களுக்குத் தண்ணீர் கொண்டுபோக மட்குழாய்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. கலியாண மஹாலுக்கு எதிர்ப்புரத்தி லும், மேற்றிசையிலும் வரிசை வரிசையாக அமைக்கப் பட்டுள்ள மிகப் பெரிய குதிரை இலாயங்கள் இருக் கின்றன. இவற்றிற்கருகே ஆடவர் வசித்துவந்த அரண் மனை இப்பொழுது மண்மேடாகக் காட்சியளிக்கிறது. இவ்வரண்மனைக்கும் அந்தப்புரத்துக்கும் இடையே சுரங்க வாயில்கள் உள்ளன. இம் மண்மேட்டுக்குத் தெற்கில் அழகிய மண்டபத்தோடு கூடிய ஆனைக் குளம் என்னும் குளம் ஒன்று அமைந்துள்ளது. அக் குளத்தின் ஒரு மூலையில் அரண்மனைக்குச் செல்லும் இரகசிய வழி ஒன்று இருக்கின்றது.

ஆனைக் குளத்துக்கு அருகில் சிலம்பக்கூடம் காணப்படுகிறது. அங்குத்தான் தேசிங்கு சிலம்பம் பயின்ருன். சிலம்பக் கூடத்துக்கு மேற்கே மாபெரும் நெற்களஞ்சியம் ஒன்றைக் காணலாம். அக் களஞ்சி யத்தில் நெல், கம்பு, கேழ்வரகு என்னும் மூவகைத் தானியங்களையும் சேர்த்து வைப்பதற்கென மூன்று அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப் பெருங் களஞ்சியங்களின் அமைப்பை நோக்கத் தேசிங்கு தன் ஆட்சியில் தன் வீரர்கட்கும் பணியாளர்கட்கும் உண வுப்பொருள்களையே ஊதியமாகக் கொடுத்திருக்க

வேண்டுமென எண்ணலாகும். இன்னும் அங்கே வெடி மருந்துக் குழிகள், வேணுகோபால சுவாமி கோயில், பஜனைக்கூடம், படைத்தலைவர்கள் உறைவிடங்கள் முதலியனவற்றையும் காணலாம்.

இராஜகிரிக்கு வடக்கே கிருஷ்ணகிரி உள்ளது. இரண்டுக்கும் இடையே 100 அடி உயரமும் 20 அடி அகலமும் உள்ள ஒரு கருங்கற் சுவர் செல்கிறது. அச்சுவர் மீது தேசிங்கு மன்னன் அடிக்கடி குதிரைச் சவாரி செய்வானும். கிருஷ்ணகிரி ஏறக்குறைய முந்நூற்று எழுபது அடி உயரமுள்ளது. கிருஷ்ண கிரியின் உச்சியை அடைய இருவழிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை பொது மக்களும் போர் வீரர்களும் தனித்தனியே செல்வதற்காக ஏற்படுத்தப்பட்டனவென்று கூறுகிருர்கள்.

கிருஷ்ணகிரியின் உச்சியில் அரசன் அரசியல் நடத்துவதற்குரிய அழகிய மண்டபம் ஒன்று கட்டப் பட்டிருக்கிறது. அம் மண்டபத்தில் அரசனும் அமைச்சர்

களும் அமர்வதற்குரிய இருக்கைகள் இருக்கின்றன. அரசன் அமரும் வசதியான கல்லூஞ்சல் ஒன்றையும் அங்கே காணலாம். அவ்வூஞ்சல் வனப்பு வாய்ந்தது; வேலைப்பாடு மிக்கது. அதன்கண் சங்கிலி பூட்டுவதற் கான இரண்டு வளையங்களும் கல்லினாலேயே செய்யப் பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ணகிரியின் உச்சியிலும் நெற்களஞ்சிய மொன்று இருக்கிறது. அதனருகே பாழடைந்த எண் ணெய்க் கிணறொன்றும் நெய்க்கிணறொன்றும் இருக் கக் காணலாம். கிருஷ்ணகிரிக்கு வடக்கே அரங்க நாதர் ஆலயமொன்று காணப்படுகிறது. அவ்வாலயத் தில் திருமால் படுத்த திருக்கோலத்தில் காட்சி அளிக்கி றார். அப்பெருமானின் உருவம் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கொண்டதுபோல அமைக்கப் பெற்றுள்ளது. இறைவன் அங்ஙனம் திரும்பி இருப்பதற்கு ஒரு கார ணம் கூறுகிறார்கள். ஒரு சமயம் ஆர்க்காட்டு நவாபு செஞ்சியின்மீது படையெடுத்து வந்தான். தேசிங்கு போருக்குச் செல்வதற்குமுன் அரங்கநாதரை வணங்கி விடை கேட்டான். அரங்கநாதர், "இன்று தங்கி நாளை செல்லின் நன்மையாகும்" என்று கூறினார். தேசிங்கு உளம் வருந்தித் திரும்பிவிட்டான். அதனால் திருமால் தம் திருமுகத்தை மேற்குப் பக்கம் திருப்பிக்கொண் டாராம்.

செஞ்சிக்கோட்டை பாழடைந்து போயினும் அங்கு உள்ள சின்னங்கள் நம் பண்டைப் பெருமைக்குச் சான்றுகளாகத் தோன்றுகின்றன. கற்றோர்க்கும் மற் றோர்க்கும், கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும்

செஞ்சி நகரை மாணவர் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் ஒரு முறையேனும் சென்று காணவேண்டும்.

பயிற்சி

பொருளறிக :

அரண்	அகழ்கள்	ஆடவர்
இற்றைக்கு	சின்னங்கள்	மாபெரும்
பேராற்றல்	திருமுழுக்கு	என்ஞான்றும்
அந்தப்புரம்	தென்றல்	சுனை

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

சீரும் சிறப்பும், தலைசிறந்த, சீர்குலைந்து, இற்றைக்கு, உள்ளங்கை நெல்லிக்கனிபோல், கைப்பற்ற, கண்ணுக்கும் கருத்துக்கும்.

விடை தருக :

1. நால்வகை யரண்கள் யாவை?

2. சென்னையிலிருந்து செஞ்சி நகருக்குச் செல்லும் வழியை விளக்குக.

3. செஞ்சிக் கோட்டை அமைந்துள்ள மூன்று மலைகள் யாவை?

4. இராஜகிரியைப் பகைவர் கைப்பற்ற முடியாமைக்குக் காரணம் கூறுக.

5. கமலக்கண்ணி கோயிலைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

6. கலியாண மஹாலில் காணப்படும் அற்புதங்கள் யாவை?

7. தேசிங்கு தன் படைவீரர்கட்கும் பணியாளர்கட்கும் உணவுப் பொருளையே ஊதியமாகக் கொடுத்தான் என்பதை எவ்வாறு அறியலாம்?

8. கிருஷ்ணகிரியின் சிறப்புகள் யாவை?

9. அரங்கநாதர் முகம் சுவர்ப்புறமாகத் திரும்பி இருக்கக் காரணம் என்ன?

இலக்கணம்:

(i) தேசிங்கு செஞ்சியில் வாழ்ந்தான். அவன் ஆர்க்காட்டு நவாபுடன் பெரும் போர் புரிந்தான்.

(ii) இராஜகிரியின் உச்சி செங்குத்தானது. அது மிக உயரமுள்ளது.

(iii) கமலா வந்தாள். அவள் ஒரு பாட்டுப் பாடினாள்.

(iv) புறாக்கள் பறந்தன. வழியில் அவை தானியங்கள் சிந்திக் கிடப்பதைப் பார்த்தன.

(v) பாரியும் புகழேந்தியும் தோட்டத்துக்குப் போனார்கள். அவர்கள் பழங்களைப் பறித்துத் தின்றார்கள்.

இவ் வுதாரணங்களில் அவன், அது, அவள், அவை, அவர்கள் என்னும் சொற்கள் முறையே தேசிங்கு, இராஜகிரி, கமலா, புறாக்கள், பாரியும் புகழேந்தியும் என்னும் பெயர்களைக் குறித்து நிற்கின்றன. இவை குறிப்புப் பெயர்கள் எனப்படும். தமிழிலக்கண முறைப்படி இவற்றைச் சுட்டுப் பெயர்கள் என்பர்.

இப்பாடத்தில் வந்துள்ள குறிப்புப் பெயர்களை எடுத்துக் காட்டி அவை குறிப்பிடும் பெயர்களைக் கூறுக.

7. மாவீரர் மங்கோபார்க்

ஆப்பிரிக்காக் கண்டத்தை ஏறக்குறைய இரண்டு நூற்றுண்டுகட்கு முன் **இருண்ட கண்டம்** என்று மக்கள் அழைத்தனர். அதுகாறும் இக் கண்டத்தின் உட்பகுதிகள் ஆராயப்படாமல் இருந்ததே இதற்குக் காரணமாகும். அதன் உட்பகுதிகளை அறிவதில் மக்கட்கு நேர்ந்த இன்னல்கள் பலவாகும். அங்குக் கடற்கரையோரங்களில் வெப்பக்காடுகள் அதிகம். அக் காடுகளில் கொடிய விலங்குகள் உண்டு. அங்கு வாழ்ந்த முரட்டு மக்கள் பார்க்க வருவோரைப் பற்பல தொல்லைகளுக்கு உள்ளாக்கினர். அங்குச் செல்வோருள் சிலர், பிணி வாய்ப்பட்டு வருந்திஞர்கள்.

ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளைக் காண்பதில் நேரும் துன்பங்கள் இவ்வளவாயினும் அதனை ஆராயும் நோக்கத்துடன் ஆங்கிலேயரில் சிலர் ஒரு கழகம் ஏற்படுத்தினர். அதற்கு. '**ஆப்பிரிக்கக் கழகம்**' என்று பெயர். அக் கழகத்தினர் ஆப்பிரிக்காவின் வடபாதியின் மேற்கில் **நைஜர்** என்னும் ஒரு நதி பாய்கிறதென்றும், அந் நதிப்படுகையில் பொற்குவியல்கள் நிறைந்த **டிம்பக்டூ** என்னும் வாணிபத் தலமொன்று இருப்பதாகவும் கேள்விப்பட்டனர். அப்பகுதியைக் கண்டு வரத் தக்கார் ஒருவரை அங்கனுப்ப விழைந்தனர்.

இவ் வரிய முயற்சியில் ஈடுபட முன்வந்தவர் **மங்கோபார்க்** என்னும் இளைஞராவார். அவர் இருபத்து நான்கு வயதும் நிரம்பாத கட்டிளங்காளையாக விளங்கிஞர். அவர் ஒரு **ஸ்காட்லந்துக்** குடியானவரின் மகன்:

கி. பி. 1771-இல் அங்குள்ள செல்கர்க் ஷயர் என்னு மிடத்தில் தோன்றினர்.

ஆப்பிரிக்கக் கழகத்தாரின் விருப்பப்படி 1798-ஆம் ஆண்டு மங்கோபார்க் கப்பலேறி இங்கிலாந்தி

விருந்து புறப்பட்டார். புறப்பட்ட ஒரு மாதங்கழித்து ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையில் உள்ள கேம்பியா

நதியின் கழிமுகத்தை அடைந்தார். அங்கிருந்து உள் நாட்டில் 200 மைல் தொலைவிலுள்ள **டாக்டர் லெயிட்லி** என்னும் கிறித்தவப் பாதிரியார் வாழும் பைசானி எனப்பெறும் ஊரையடைந்தார். அவருடன் சில நாட்கள் விருந்தினராக இருந்தார். அங்கு அவர் உடல் நலமின்றிச் சில மாதங்கள் தங்கினார்.

பாதிரியாரின் உதவியால் மங்கோபார்க் பண்டமாற்றுக்காக மணிகள், புகையிலை, குடை, திசைகாட்டும் கருவி, வெப்பமானி, துப்பாக்கிகள் முதலியவற்றை இரண்டு கழுதைகளின்மேல் ஏற்றிக்கொண்டு இரண்டு நீக்ரோப் பணியாளருடன் உள் நாட்டிற்குப் பயணமானார்.

மூன்று நாட்கள் பயணத்துக்குப் பின் மங்கோ பார்க் தன் பணியாளர்களுடன் '**மதினு**' என்னும் சிறு நகரை அடைந்தார். பார்க் அதற்கப்பால் சென்ற போது ஒரு மரத்தின் கிளைகளில் துணிக் கந்தைகள் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு, "இஃது என்ன? துணி காய்க்கும் மரமோ?" என்று வியந்தனர். நீக்ரோக்கள் பாலைக் கடவுளுக்குக் காணிக்கையாக இங்ஙனம் கட்டுவது வழக்கமென்றுணர்ந்து நகைத்தார். பின்னர் தம் பயணத்தைத் தொடர்ந்தார்.

'**கேம்பியா** நதிக்கும் **செனிகல்** நதிக்கும் இடையில் உள்ள நிலப்பகுதியைக் கடந்து செல்லும் போது வழியில் சில சுதேசிகள் பார்க்கைப் பார்த்து 'இஃதொரு பேயோ! பூதமோ!' என்றஞ்சினா. பார்க் அவர்களுடன் அன்பாகப் பழகி அவர்கள் அச்சத்தை நீக்கினார். பின்னர் செனிகல் நதியின் எதிர்க்

கரையிலிருக்கும் **கார்டா**வை அடைந்தார். அங்கிருந்து **மூர்** என்னும் இனத்தவரின் பதியாகிய லூடமார் நாட்டை அடைந்தார்.

லூடமார் நாட்டுத் தலைவனான **அலி**, ஐரோப்பியர் தம் நாட்டில் புகுந்து வாணிபம் நடத்துவதை மிகவும் வெறுத்தான். மேலும் அவர்கள் நீக்ரோக்களை அடிமைப்படுத்துவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. பார்க் தன் நாட்டுக்கு வந்த செய்தியறிந்து உடனே அவரைக் கைது செய்து சிறையிலிட்டான். பின்னர் பார்க் அந் நாட்டின் அரசியால் விடுதலைபெற்று '**ஜாரா**' என்னும் ஊருக்குச் சென்றார். ஆனால் அவரை மீண்டும் கைது செய்யுமாறு லூடமார் தலைவன் தன் ஏவலருக்குக் கட்டளையிட்டான். தம்மைச் சிறைபிடிக்க வந்த வீரர்கள் உறங்கும் சமயம் பார்த்து, மங்கோபார்க் தம் குதிரைமீதேறி அவ்விடம் விட்டகன்றார். இரவு முழுவதும் செய்த பயணத்தால் அவர் மிகவும் களைப்படைந்தார். மிகுந்த நீர்வேட்கை கொண்டார். இறைவன் திருவருளால் அவ்வமயம் மழையும் பெய்தது. மங்கோபார்க்கின் நீர் வேட்கை தீர்ந்தது.

பின்னர் அவர் பாம்பாரா நாட்டின் எல்லையை அடைந்தார். அங்கிருந்த நீக்ரோக்கள் அவருக்கு உண்ண உணவும் இருக்க உறைவிடமும் கொடுத்து ஆதரித்தனர். அவர் அந் நாட்டரசன் உறையும் நகரமாகிய **செக்கோ**வை நோக்கிச் சென்றார். வழி இடையில் அவருடன் சென்றவர்கள், "அதோ பார் **ஜொலிபா**," என்று உரக்கக்கூவினர். அவர்கள் மொழியில் **ஜொலிபா** என்னும் சொல்லுக்குப் **பெருநீர்** என்று பொருள். உடன் வந்தவர்கள் குறிப்பிட்டது

நைஜர் ஆற்றைத்தான் என்பதை உணர்ந்தார் மங்கோ பார்க். வறிஞன் பொற்குவியல் கண்டதுபோல அவர் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. நைஜர் பேராறு தன் அலைகளாகிய கைகளை வீசிக்கொண்டு பெருமிதத்துடன் ஓடும் இயற்கைக் காட்சி அவருடைய கண்களுக்கு விருந்தாகியது. எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகூறி வணங்கிச் செக்கோ நகரை அடைந்தார்.

மங்கோபார்க் ஒரு தூதன் மூலம் தம் வருகையை அம் மன்னனுக்குச் சொல்லி யனுப்பினார். அவ்வரசனோ பார்க்கைப் பார்க்க விரும்பாதவனாய்த் தன் நாட்டு நாணயங்கள் ஐயாயிரத்தை அவருக்குப் பரிசாக அனுப்பி நாட்டு எல்லையினின்று உடனே திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டான். மன்னன் கட்டளையை மீற மனமில்லாத மங்கோபார்க் தம் நாட்டுக்குத் திரும்பி வரும் வழியில் பொல்லாத கொள்ளைக்கூட்டத்தினர் சிலர் அவரைத் தாக்கி அவரிடமிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் பறித்துச் சென்றனர். அன்றியும் அவர் பொன்னேபோல் போற்றிவந்த குறிப்புப் புத்தகமொன்றையும் பிடுங்கிக்கொண்டனர். ஆனால் அது வெறும் காகிதமாக இருக்கக்கண்ட கொள்ளையர் தலைவன் அதனை வீசி எறிந்துவிட்டான். பார்க் அடைந்த இன்பத்துக்கு அளவே இல்லை. அவர் அப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்த வழியாகவே சொந்த நாட்டை அடைந்தார். ஆப்பிரிக்கக் கழகத்தாருக்குத் தாம் கண்ட உண்மைகளை ஒரு நூலாக எழுதிக் கொடுத்தார்.

நாடு திரும்பிய மங்கோபார்க் டாக்டர் ஆண்டர்சன் என்பவர் மகளைத் திருமணம் செய்துகொண்டார். அவர் ஏழாண்டு காலம் இல்லறமென்னும் நல்

லறத்தை இனிது நடத்தி மகிழ்ந்தனர். மீண்டும் நைஜர் நதியின் முழுப்போக்கையும் காணவேண்டும் என்னும் ஆவல் பார்க்கைப் பிடர் பிடித்து உந்தியது. 1905-ஆம் ஆண்டில் அவர் மீண்டும் ஆப்பிரிக்காவுக்குப் புறப் பட்டார்.

ஆப்பிரிக்காவை அடைந்த மங்கோபார்க், தம் பழைய நண்பர்களிடம் அளவளாவிக்கொண்டு இடை யில் உள்ள பல நாடுகளையும் கடந்து செக்கோ நகரை எய்தினார். அந்நகரை அடைவதற்குள் அவருடன் புறப் பட்ட தோழர்கள் நாற்பத்து நால்வரில் எஞ்சியவர் நால்வரே. ஏனையோர் மடிந்தனர். உடன்வந்தவர் மடிந்தது கண்டு மங்கோபார்க் உள்ளம் கலங்கவில்லை. அவர், "நைஜர் நதியின் முடிவைக் காணுமல் மீளேன். அதனைக் காணவில்லையேல் ஈண்டே உயிர் துறப்பேன்." என்று உறுதிகொண்டார்.

செக்கோ நகரில் நைஜர் பயணத்துக்குத் தேவை யான கலம் ஒன்றை அமைத்தார். அதில் தம் தோழர் களுடன் ஏறிப் புறப்பட்டார். இடையிடையே அவர் அடைந்த இன்னல்களுக்கு அளவில்லை. நைஜர் ஆற்றில் வாழ்ந்த முதலைகளும், நீர் யானைகளும் அவருக்குப் பெருந்துன்பம் அளித்தன. அன்றியும் பார்க்கை மட்டும் துன்புறுத்திய வெப்புநோய் அவருடைய நண்பர்களையும் நலியுமாறு செய்தது. கரைகளில் இருந்த சுதேசநாட்டு முரடர்கள் சிலர் புதிய மனிதர்களைக்கண்டு அம்பு மழை பொழிந்து அலக்கழித்தனர்.

துன்பங்கள் பலவற்றையும் சலிப்பின்றித் தாங்கிய மங்கோபார்க் டிம்பக்டூ நகரை அடைந்தார். அதற்கும் அப்பால் நைஜர் நதியில் ஆயிரம் மைல் தொலைவு பயண

மானூர். முடிவில் அவர் புஸ்ஸா என்னும் நகரை அடைந்தார். அங்கு வாழ்ந்த கல்லாக் களிமக்கள் பார்க்கையும் அவர் தோழர்களையும் அம்பு, ஈட்டி முதலியவற்றால் ஓயாமல் தாக்கினார்கள். துன்பத்தின்மேல் துன்பமாக அவர்கள் ஏறிச்சென்ற மரக்கலம் ஒரு பாறைமீது மோதியது. உயிர் தப்புவதற்காகப் பார்க் திடுமென்று ஆற்றில் குதித்தார். ஆற்றில் குதித்துக் கரையேற எண்ணினார்போலும். ஆனால் தன் போக்கைக் காணவந்த அச் சான்றோரை நைஜர் நதி ஆட்கொண்டது. அவர் மீளவே இல்லை.

மங்கோபார்க் மறைந்த செய்தி பல ஆண்டுகளுக்குப் பின்னரே ஒரு பணியாளன் வாயிலாக ஆங்கிலேயருக்குத் தெரிந்தது. அவர்கள் அஞ்சாநெஞ்சர் மங்கோபார்க்கின் விடாமுயற்சியையும் உறுதியையும் பாராட்டிச் செல்கர்க் ஷையரில் அவருடைய சிலையொன்றை நாட்டினர். பிற்காலத்தில் நைஜர் நதியில் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட பாலம் ஒன்று **மங்கோபார்க் நினைவுப் பாலம்** என வழங்கப்பட்டது.

பயிற்சி

பொருளறிக :

அதுகாறும்	வறிஞர்	அலக்கழித்தல்
நேர்ந்த	மரக்கலம்	தொலைவு
இன்னல்கள்	பிடர்	சான்றோர்
பிணிவாய்ப்பட்டு	உந்தியது	
கழிமுகம்	நலியுமாறு	

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

அஞ்சா நெஞ்சம், விடா முயற்சி, துன்பத்தின் மேல் துன்பம், பிடர் பிடித்து உந்தியது, வறிஞன் பொற்குவியல் கண்டதுபோல.

விடை தருக :

1. இருண்ட கண்டம் என்ற எக்கண்டத்திற்குப் பெயர்? ஏன் அப்பெயர் வந்தது?

2. ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளைக் காண்பதில் நேரிடும் துன்பங்கள் யாவை?

3. 'ஆப்பிரிக்காக் கழகம்' எதற்கு நிறுவப்பட்டது?

4. பாதிரியார், மங்கோபார்க்குக்கு எவ்வாறு உதவி புரிந்தார்?

5. மங்கோபார்க்குக்கு ஆப்பிரிக்கா நாட்டு மக்கள் விளைவித்த துன்பங்கள் யாவை?

6. சந்தர்ப்பம் கூறுக. இஃதென்ன துணி காய்க்கும் மரமோ?

7. மங்கோ எண்ணியதை எண்ணியபடியே முடிக்க வல்ல ஆற்றல் பெற்றவர் என்பதை உன்னுடைய சொல்லால் எழுது?

இலக்கணம் :

இவற்றைப் படி.

1. கண்ணன் ஒரு கதை எழுதினன்.
2. கண்ணன் எழுதிய கதை இது.
3. கண்ணன் ஒரு கதையை எழுதி முடித்தான்.

இவ் வாக்கியங்களில் எழுதினன், எழுதிய, எழுதி முடித்தான் என்பவை வினைச் சொற்கள். இவற்றில் எழுதினன், முடித்தான் என்பவை பொருள் முடிந்து நிற்கின்றன. இவை வினைமுற்றுக்கள். எழுதிய, எழுதி என்பவை பொருள் முடியாமல் குறையாய் இருக்கின்றன. இவை எச்சவினைகள் எனப்படும்.

எழுதிய என்னும் எச்சவினை கதை என்னும் பெயரைச் சேர்ந்து பொருள் முடிகிறது. இங்ஙனம் எச்சவினை

பெயர்ச் சொல்லால் பொருள் முடியுமாயின் பெயரெச்சம் எனப்படும்.

எழுதி என்னும் எச்சவினை முடித்தான் என்னும் வினைச் சொல்லால் பொருள் முடிகிறது. இங்ஙனம் வினையால் பொருள் முடியும் எச்சவினை வினையெச்சம் எனப்படும்.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் முதலியனவற்றைத் தனித்தனியே எடுத்து எழுது.

1. தம்மைச் சிறைபிடிக்க வந்த வீரர்கள் உறங்கும் சமயம் பார்த்து மங்கோபார்க் தம் குதிரைமீது ஏறி அவ்விடம் விட்டகன்றார்.

2. பார்க் தாம் கண்ட உண்மையை ஒரு நூலாக எழுதினார்.

3. நீ நேற்றுப் படித்த புத்தகத்தைக் கொடு.

4. அழுகிய வாழைப்பழம் நழுவிக் கீழே விழுந்தது.

5. காலமறிந்து பெய்யாத மழையும் வேலை கண்டு உண்ணாத உணவும் வீண்.

8. வறுமையிற் பெருமிதம்

நம் தமிழகத்தில் பண்டைக் காலத்தில் பல செந்நாப் புலவர்கள் பெருமித வாழ்வுடன் வாழ்ந்து வந்தனர். அவர்கட்கு நாட்டில் பெருமை நிறைந்திருந்ததைப் போல வீட்டில் வறுமை நிறைந்து இருந்தது. அவர்களை ஆதரிக்கும் வள்ளல்கள் பலர் அக்காலத்தே இருந் தனர். எனினும் புலவர்கள் அவர்களிடமிருந்து பெறும் பொருளைத் தமக்கெனச் சேர்த்து வையாமல் தம் உற வினர்க்கும் நண்பர்க்கும் பகுத்துக் கொடுத்துவிடுவர். இக்காரணத்தால் வறுமை எக்காலத்தும் அவர்கட்கு உரிமையாக இருந்தது. எத்தகைய வறுமை நேரினும் புலவர்கள் தம் நிலையில் தாழ்ந்ததில்லை; செம்மையி னின்று பிறழ்ந்ததில்லை.

பெருஞ்சித்திரனார் என்பவர் கடைச்சங்கப் புல வர்களில் ஒருவர். அவர் அருட்செல்வம் மிகுதியாகப் பெற்றிருந்தனரேயன்றிப் பொருட்செல்வம் பெற்றிருந் தாரல்லர். அவர் உண்ண உணவும் உடுக்க உடையு மின்றிப் பல நாட்கள் துன்புற்றார். அவர்தம் பால்மணம் மாறாத பச்சிளஞ் சிறுவன் ஒருவன் பாலின்றி வாடினான். சோறாவது கிடைக்குமா என்று சமையலறைக்குச் சென் றான். சமையலறையில் வெறும் பானைகளே இருந்தன. அவன் பசித்துன்பத்தால் அழுதான். தாய்க்கு ஒன் றும் புரியவில்லை. அவள் அக்குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்காக, "அதோ புலி வருகிறது!" என்று அச் சுறுத்தினாள். சிறுவன் அழுகை ஓயவில்லை. வானத் தைக்காட்டி, "அம்புலி, வா, வா," என்று விளையாட்டுக் காட்டினாள். அப்போதும் அவன் அழுகை நிற்கவில்லை.

பின்னர், அவள், "கண்ணே, என்னைப்பார், உன் தந்தை வந்தால் நீ எவ்வாறு அவரைச் சினந்து பார்ப்பாய்? ஏதோ உன் முகத்தைக் காட்டு," என்று கேட்டாள். அதற்கும் சிறுவன் ஓயவில்லை. இந் நிலைமையை வருணித்துப் பெருஞ்சித்திரனாரே பாடியுள்ளார்.

இங்ஙனம் வறுமையால் வாடிய பெருஞ்சித்திரனார் தகடூரில் பெருவள்ளலாக விளங்கிய **அதியமான் நெடுமானஞ்சி**யை அடைந்தார். அதியமான புலவரைப் போற்றும் புரவலன். கடையெழு வள்ளல்களில் ஒருவன். பெருஞ்சித்திரனார் தம் வருகையை ஒரு காவலன் வாயிலாக அரசனுக்குச் சொல்லி யனுப்பினார். அவ்வமயம் அரசன் இன்றியமையாத அரசியற்காரியமொன்றில் ஈடுபட்டிருந்தான். அதனால் அவன் புலவரை நேரிற்கண்டு அளவளாவிப் பரிசில் கொடுக்க முடியவில்லை. எனவே அவருக்குப் பரிசளித்தனுப்புமாறு தன் அமைச்சரை விடுத்தான்

அரசனைக் காணமல் அமைச்சரைக் கண்ட புலவர் ஆத்திரங்கொண்டார். அவர் பெருமிதத்துடன் அமைச்சரைப்பார்த்துப், "புலவரின் அருமை அறியாத அரசனின் அமைச்சரே, நான் மன்னனைக் கண்டு, எனது தமிழ்ப் பாட்டைக்கூறி, அவனை மகிழ்வித்து அவன் விருப்பத்துடன் தரும் பரிசிலைப் பெறுவதற்காகவே ஈண்டு வந்தேன். பலப்பல குன்றுகளையும் மலைகளையும் கடந்து யான் வந்தமை அரசனைக் காணும்பொருட்டே யாகும். மன்னன் என்னை மதித்தானல்லன், கண்டானல்லன். என் தகுதியை அவன் அறியவில்லை; பரிசில் கொடுத்தனுப்புமாறு நின்னை ஏவினன். என்னைப் பாராமலும் என் பாடலைக் கேளாமலும், என் தகுதியை உணரா

மலும் கொடுத்தனுப்பிய இப்பரிசில் எனக்கு வேண் டாம். யான் வாணிகப் பரிசிலன் என்று நும் அரசன் கருதினன் போலும். இத்தகைய வாணிகப் பரிசிலை நான் வேண்டேன். என் புலமையின் தகுதியறிந்து கொடுக் கும் பொருள் சிறிதேயாயினும் அதனை மகிழ்வுடன் ஏற்பேன். அப்பொருளே எனக்கு மகிழ்ச்சியைத் தர வல்லது," என்று கூறிப் புறப்பட்டார்.

பின்னர் புலவர் தம் வறுமையைப்போக்க விரும்பி, **வெளிமான்** என்னும் வள்ளலைக் காணச் சென்றார். ஆனால் அவ்வமயம் வெளிமானைக் காண இயலாமல் அவன் இளவலாகிய **இளவெளிமானைக்** கண்டு தம் வறுமை நிலையை விளக்கிக் கூறினார். இள வெளிமானோ தன் அண்ணனைப்போல் அருட்குணம் வாய்ந்தவ னல்லன். அவன் லோபத்தனம் மிக்கவன். அவன் புலவரை மதியாமல் செருக்குடன் ஏதோ சிறிது பொருள் கொடுத்துப் போமாறு கூறினான்.

ஆணவத்துடன் அளித்த பொருளை புலவர் பெற விரும்பவில்லை. அவர் அரசனை நோக்கி, "உலகமோ மிகவும் பெரியது. என்னை விரும்புவோரும் பலர். புலி, யானையொன்றை இலக்கு வைத்துப் பாய்நதது. யானை தப்பிவிட்டால் புலி என்ன செய்யும்? யானை ஓடிவிட் டதே என்று எலியைப் பிடித்துத் தின்னுமோ? எம்மை மதியாது தரும் பொருளை யாம் ஏற்கமாட்டோம். புலவர் கள் வறுமையிலும் செம்மையுடையோராவர்," என்று கூறி வெளியேறினார்.

இளவெளிமானைப் பிரிந்த புலவர் முதிரமலைக்குத் தலைவனான **குமணன்** என்னும் வள்ளலைக் கண்டார். அவனிடம் புலவர் தம் ஏழ்மை நிலையை விளக்கினார்.

குமணன் புலவரை அகமும் முகமும் மலர வர வேற்ருன். தேனினும் இனிய அவர்தம் செந் தமிழ்ப் பாடல்களைக் கேட்க விரும்பினன். ஆனல் புலவரோ வறுமையினல் வாடிக்கிடக்கும் தம் மனைவி மக்களைக் காண விரைந்து செல்ல விரும்பினர். ஆத லால் குமணன் அவருக்குச் சிறந்த ஆடை ஆபரணங் களும் கொடுத்து மலைபோன்றதொரு யானைமீதேற்றிப் பெருஞ் சிறப்புச் செய்தான். பெருஞ்சித்திரனர் குமண னின் கொடையை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தி விடை பெற்ருர்.

பெருஞ்சித்திரனர் குமணன் தந்த பலவகைப் பொருள்களுடன் தம்மூருக்குத் திரும்புகையில் இள வெளிமானைக் கண்டு அவனுக்கு அறிவுபுகட்ட விரும்பி இளவெளிமான் ஊரையடைந்தார். அவனது காவல் மரத்தில் தாம் இவர்ந்து வந்த யானையைக் கட்டினர். பின்னர் இளவெளிமானிடம் சென்று, "மன்னர் பெரும, இரவலரைக் காப்பவன் நீ ஒருவனே அல்லன். இரவலரைப் போற்றுவோர் இவ்வுலகில் இல்லாமலும் இல்லை. இரப்போர் இருப்பதையும் அவர்களைப் புரப் போர் இருப்பதையும் குமணவள்ளலைக் கண்டு தெளி வாயாக. அவன் என்னை அகமலர்ந்து வரவேற்ருன்: உணவு அளித்தான்; சிறந்த ஆடை ஆபரணங்களை வழங்கினன்; அவன் பரிசாகக்கொடுத்த பெரிய யானை யொன்றை நின் ஊரில் உள்ள காவல் மரத்தில் கட்டி யுள்ளேன், காண்பாயாக. இனி யான் செல்வேன்," என்று பெருமிதத்தோடு கூறி அவ்விடம் விட்டகன்ருர்.

குமணனிடம் பரிசிலாகப் பெற்றுவந்த பொருளைப் புலவர் தம் மனைவியிடம் கொடுத்தார். அவர் அவளை

நோக்கிப், "பெண்ணே! குமணன் தந்த பெருஞ் செல்வத்தை நாம் மட்டுமே உண்டு வாழ்தல் கூடாது. இவற்றை உன் விருப்பம்போல் உன்னை விரும்பிய பெண்களுக்கும் நீ விரும்பும் பெண்களுக்கும் வேண்டும் வரையில் கொடு. உறவினருக்கும் உதவு. கடன்காரர்களுக்கு உரிய பொருளைத் திருப்பிக் கொடுத்து விடு. யாருக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று என்னைக் கேட்க வேண்டாம். எல்லோருக்கும் எவ்வளவு வேண்டுமாயினும் கொடு," எனக் கூறினார்.

இங்ஙனம் பெருஞ்சித்திரனார் வறுமையிலும் பெருமிதம் உடையவராக இருந்தார். தம்மை மதியாத அரசரைக் கண்டு அஞ்சாத ஆண்மை உடையவராக விளங்கினார். தாம் பெற்ற செல்வத்தைப் பிறர்க்கும் கொடுத்துதவுவதே செல்வத்தின் பயனாக மதித்தார். இவ்வருங்குணங்கள் வாய்ந்த புலவர் மணியைத் தமிழர் எந்நாளும் மறப்பதில்லை.

பயிற்சி

விடை கூறுக :

பெருமிதம்	புரவலன்	பரிசில்
பிறழ்தல்	காவலன்	ஆண்மை
அருட்செல்வம்	ஈண்டு	இரவலர்

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

பச்சிளம், பால் மணம்மாறாத, வருணித்து, இன்றியமையாத, அறிவு புகட்ட.

விடை தருக :

1. பண்டைக் காலப் புலவர்கள் வள்ளல்களின் ஆதரவு பெற்றிருந்தும் வறுமை அடையக் காரணம் என்ன?

2. பெருஞ்சித்திரனுர் தம் வறுமை நிலையை எவ்வாறு விளக்கிக் கூறுகிருர்?

3. அதியமான் செய்த தவறு யாது?

4. புலவர் அதியமானின் அமைச்சரை நோக்கி என்ன கூறினுர்?

5. இளவெளிமான் எப்படிப் பட்டவன்?

6. புலவர் இளவெளிமான் மீது சினம் கொள்ளக் காரணம் என்ன? சினந்து அவனை நோக்கி என்ன கூறினுர்?

7. குமணன் புலவரை எவ்வாறு உபசரித்தான்?

8. குமணனிடம் பரிசு பெற்ற புலவர் இளவெளிமானை அடைந்து என்ன கூறினுர்?

9. குமணன் தந்த பரிசில்களைப் பெருஞ்சித்திரனுர் யாரிடம் தந்து என்ன கூறினுர்?

10. பெருஞ்சித்திரனுரின் அருங்குணங்கள் யாவை?

இலக்கணம் :

கிளி பாடிற்று—இயல்பால் நிற்கும் பெயர்.—முதல் வேற்றுமை.

கண்ணன் பூனையை அடித்தான்.—(பூனை+ஐ) இரண்டாம் வேற்றுமை.

நூலால் துணி நெய்தான்.—(நூல்+ஆல்) மூன்ரும் வேற்றுமை.

கூலிக்கு வேலை செய்தான்.—(கூலி+கு) நான்காம் வேற்றுமை.

ஊரின் நீங்கினுன். — — (ஊர்+இன்) ஐந்தாம் வேற்றுமை.

வேலனது புத்தகம். (வேலன்+அது)—ஆறும் வேற்றுமை.

நாட்டில் வாழ்கிறோம். (நாடு+இல்)—ஏழாம் வேற்றுமை.

கண்ணா வா—அழைக்கும் பெயர். எட்டாம் வேற்றுமை.

1. இப்பாடத்தின் இரண்டாம் பாராவில் காணப்படும் வினைமுற்றுக்களை மட்டும் எடுத்துக் காட்டி அவற்றின் காலங்களைக் கூறுக.

2. இப்பாடத்தின் நான்காம் பாராவில் காணப்படும் பெயர்களை எடுத்தெழுதி அவற்றின் திணை, பால், எண் இவைகளைக் கூறுக.

3. குமணன், புலவர், புலி, வள்ளல்—இவற்றை எட்டு வேற்றுமையிலும் அமைத்து வாக்கியங்கள் கூறுக.

அருஞ்சொல் அகராதி

அகவை - வயது
அகழ்கள் - அகழிகள்
அதுகாறும் - அது வரையிலும்
அந்தப்புரம் - அரச மகளிர் வாழும் இடம்
அமர வாழ்வு - தெய்வீக வாழ்வு
அரண் - பாதுகாவல்
அருட்செல்வம் - அருளாகிய செல்வம்
அலக் கழித்தல் - துன்பப் படுத்துதல்
அறிவுத் திறன் - புத்திக் கூர்மை
ஆக்கம் - செல்வம்
ஆடவர் - ஆண் மக்கள்
ஆண்மை - வீரம்
இரவலர் - யாசிக்கின்றவர்
இலங்குவது - விளங்குவது
இவர்ந்து - ஏறி
இறுதி - முடிவு
ஈண்டு - இங்கு
உந்த - செலுத்த
உயர் நீதி மன்றம் - 'ஹைகோர்ட்டு'
ஊர்ந்து - ஏறி
ஊன் - தசை
எஞ்ஞான்றும் - எப்போதும்
எதேச்சை - தன் விருப்பப் படி
ஏனைய - மற்றைய
கசிந்துருகி - மிக உருகி
கத கதப்பு - மதி வெப்பம்
கடும்போர் - கொடிய போர்
கழிமுகம் - கடலுடன் ஆறு சேருமிடம்
கன்னித் தமிழ் - என்றும் இளமை மாறாத தமிழ்
காவலன் - அரசன்
குழுவினர் - கூட்டத்தினர்
குறு நில மன்னன் - சிற்றரசன்
கைம்மாறு - உதவிக்கு உதவி
கொடுமுடி - மலையுச்சி
கோடு - சிகரம்
சமயப்பணி - மதத்தொண்டு
சலியா உழைப்பு - தளரா உழைப்பு
சான்றோர் - உத்தமர்
சின்னங்கள் - அடையாளக் குறி
சீரிய - சிறந்த
சீர் கேடான - நிலை குலைந்த
சூட்டுதல் - அணிதல்
சொல்லேருழவர் - புலவர்
சொற்பம் - குறைவு
ஞாயிறு - சூரியன்
தலை சிறந்தது - மிகச் சிறந்தது
திகழ்தல் - விளங்குதல்
திருமுழுக்கு நீர் - திருமஞ்சன நீர்

துளக்கல் - விளக்கல்
தொலைவு - தூரம்
தொன் மொழி - பழைய மொழி (தமிழ்)
நலியுறுமாறு - துன்பப்படுமாறு
நல்கி - கொடுத்து
நாடி - ஆராய்ந்து
நிலவுதல் - விளங்குதல்
நீத்தார் - உயிர் துறந்தவர்
நேர்ந்த - பொருந்திய
பண்பாடு - சிறந்த ஒழுக்கம்
பயிலுதல் - பழக்கம் செய்தல்
பரிசில் - பரிசு
பன்னும் - சொல்லும்
பாணர் - இசைபாடுவோர்
பால் - பகுதி
பிடர் பிடித்து - கழுத்தைப் பிடித்து
பிணிவாய்ப்பட்டு - நோய்க்கு ஆளாகி
பிறழ்தல் - மாறு படுதல்
புரவலன் - வள்ளல்
புலப்படும் - விளங்கும்
பெருமிதம் - பெருமிதமான தன்மை
பேறு - பாக்கியம், செல்வம், நற்பயன்
பொது மறை - பொதுவான வேதம், (திருக்குறள்)
பொது வியல் - வேத்தியலுக்கு மாறாக ஆடும் கூத்து வகை
மட்டற்ற - எல்லையற்ற
மணி விளக்கு - மாணிக்கத்தினலாகிய விளக்கு
மரக்கலம் - படகு
மன்னும் - நிலைபேற்ற
மாபெரும் - மிகப் பெரிய
வறிஞர் - பணமில்லாதவர்
வாய்ந்த - பொருந்திய
வாவி - குளம்
வில்லேர் உழவர் - அரசர்
விரைத்து விடும் - மரத்துப் போகும்
விற்பன்னர் - புலவர்
வீறு - பெருமை
வேத்தியல் - அரசர் முன் ஆடும் கூத்து வகை

இளங்கோ வாசகம்

[மூன்றும் புத்தகம் - மூன்றும் படிவம்]

முதற் பிரிவு

ப. முருகன், M. A.
மாநிலக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை

முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புக்கள்: மே 1954, ஜூன், 1955

Approved by the Madras Text Book Committee for class use Vide Page 11 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19-5-'54

சாந்தி பிரஸ், சென்னை - 1.

முன்னுரை

'இளங்கோ வாசகம்' என்னும் இந் நூல்வரிசை உரிமைபெற்ற நம் மாநில மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

'புதிய கல்விமுறைக்கேற்ற புதிய புத்தகம் வேண்டும்' என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத்தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு மேலும் கொடுக்கப்பெற்றுள்ளன. மாணவர்தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தினருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் கலங்கரை விளக்கமாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட்டக் கல்வி அலுவலாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

எண்		பக்கம்
I.	கடவுள் வாழ்த்து	... 1
II.	நீதிப் பகுதி	
	1. நீதிநெறி விளக்கம்	 6
	2. சிறுபஞ்ச மூலம்	... 9
	3. நன்னூல்	... 12
	4. திருக்குறள்	... 14
III.	வரலாற்றுப் பகுதி	
	1. அசோகன்	... 23
	2. முயற்சி திருவினை ஆக்கும்	... 25
IV.	கதைப் பகுதி	
	நளவெண்பா	... 34
V.	வருணனைப் பகுதி	... 39
VI.	பலவகைப் பாடல்கள்	... 42

உரைநடைப் பகுதி

1.	தமிழ்த் தென்றல்	... 49
2.	வில் வீரன்	... 61
3.	அடிமை நீக்கிய அண்ணல்	... 70
4.	வானொலி நிலையம்	... 79
5.	மலை கலங்கினும் நிலை கலங்காதவர்	... 88
6.	செங்குட்டுவன் அரசியல்	... 97
7.	மேழிச் செல்வம்	... 105
8.	கொடியைக் காத்த குமரன்	... 112
9.	சந்தச் சாமியார்	... 119
10.	பயணக் கடிதம்	... 126
11.	கவிக் குயில்	... 137
12.	குடிசைத் தொழில்கள்	... 144
13.	நான் சிறுவனாக இருந்தபோது	... 150
	அரும்பொருள் அகராதி	... 158

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

உலகெலாம் படைத்துக் காத்து,
உருவிலா தழித்து, நாளும்
உண்மையாய் எண்ண மான
ஒருவனுய் அருவ ளுகி,
சலமிலா தெண்ணு வோர்க்குச்
சத்திய மயமே யாகித்
தனித்தனி பிரித்த போதும்
தானதிற் பிரியா ளுகி
மலரின் மேல் தேவ ளுகி
மாதொரு பாக ளுகி
மாலொடு புத்த ளுகி
மகம்மதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப்
பற்பல மதங்க ளாகிப்
பக்குவப் படியே தோன்றும்
பரமனுர் பெருமை போற்றி ! 1

— நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையும் அன்றே. 2

—திருநாவுக்கரசர்

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே ! 3
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே !

—இளங்கோவடிகள்

மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்
இந்நிலத் தினும்பிறி திலையென் றேமறை
பன்னியேத் தெடுப்பது பாவ சீவருக்(கு)
இன்னமு தாயது ஏசு நாமமே. 4

—எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை

தமிழ்த்தாய் வாழ்த்து

ஆற்றிடினும் தீயிடினும்
அன்பர்தமைக் காத்தே
அவர்வேண்டும் பேறருளும்
அன்பே !புன் மாக்கள்
போற்றிடினும் தூற்றிடினும்
பொருள் செய்யாப் பொறையே !
பூவில்இணை யாருமிலாப்
பொலிவுடைய பொற்பே !
மாற்றறியாப் பொன்னே !நன்
மணியே !செஞ் சுடரே !
வாடாத மணமலரே !
மணந்தருதென் காலே !
ஏற்றவிளங் கோலமுடன்
என்றென்றும் வாழ்வாய் !
எங்கரந்தைத் தமிழ்ச்சங்கத்
தினிதுறைசெந் தமிழே ! 5

— கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

குறிப்புரை

1. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் சிறந்த நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உடையவர். இவர் அரசவைக் கவிஞர் என்னும் பெருமையைப் பெற்றவர்; சமரச நோக்கம் உடையவர்; மகாத்மா காந்தியடிகளிடம் மிக்க அன்புடையவர்; இவர் பாடல்கள் இனிய எளிய நடையில் அமைந்தவை.

அருவனாகி - உருவமில்லாதவனாகி. சலம் - சஞ்சலம், சூது. மலரின்மேல் தேவன் - பிரமன். மாதொரு பாகன் - சிவபிரான். மால் - திருமால். பரமனார் - இறைவன்.

2. இப் பாடல் திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்து எடுக்கப்பெற்றது. 4, 5, 6 திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடியவை. இவருக்கு அப்பர் என்றும் வேறு பெயர் உண்டு. இவர் சைவ சமயாசாரியர் நால்வரில் ஒருவர். திருவாமூரில் பிறந்தார். இவர் காலம் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு.

மெய்ம்மை - உண்மை. விருப்பு - அன்பு, பக்தி. பொறை - சாந்தம். தம்மையும் - சிவபெருமானையும். கண்டு - கண்டு வணங்கி. தகவு - தக்க குணங்கள். செம்மை - அறநெறி.

3. இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் இளவல். இவர் இளமையிலேயே துறவு பூண்டார். இவரே சிலப்பதிகாரம் என்னும் காவியத்தை இயற்றியவர். சிலப்பதிகாரம் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இது கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறும்.

பெருமை + உலகம் = பேருலகம். கமல உந்தி - தாமரையை உடைய உந்தி. தாமரையைப்போலவே கண்களும், வாயும், பாதங்களும் சிவந்திருத்தலின் இங்ஙனம் கூறினர்.

4. கிருஷ்ணப் பிள்ளை சிறந்த தமிழறிஞர். இவர் கிறிஸ்துவ மதத்தினர். இவர் எழுதிய 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் நூலிலிருந்து இப் பாடல் எடுக்கப்பட்டது.

மன்னுயிர் - நிலைபெற்ற உயிர்கள். ஈடேற - உயர்ந்த வாழ்வு பெற. பன்னி - கூறி.

வினுக்கள்

1. இறைவன் தன்மைகளைப் பற்றி நாமக்கல் கவிஞர் என்ன கூறுகிறுர்?

2. சிவகதிப் பயிரை எவ்வாறு விளைத்தல் வேண்டும்?

3. திருமாலின் அழகை இளங்கோவடிகள் எவ்வாறு வருணிக்கிறார்?

4. ஏசு நாமம் இன்னமுதாவது எப்படி?

5. தமிழ்த்தாயின் பெருமைகள் யாவை?

பயிற்சி.

1. வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

தனித்தனி, பற்பல, வெளியிட்டு, கண்ணிமைத்து, என்றென்றும்.

2. பிரித்துக் கூறுக:

உருவிலா, விருப்பெனும், மன்னுயிர், பொலிவுடைய கண்மணி, செஞ்சுடர், என்றென்றும்.

3. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் காணப்படும் வரலாற்றுப் பகுதியை விளக்கித் தமிழன் பெருமையைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

4. எதிர்ப்பதம் தருக:

படைத்து, அருவம், பொய்ம்மை, போற்றுதல், வாடாத.

II. நீதிப் பகுதி

1. நீதிநெறி விளக்கம்

எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்(து)
உய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனின் என்னாகும்? அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து. 1

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க்கொவ்வான்; மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா; புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. 2

கற்றார்க்குக் கல்வி நலனே நலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரோ
அழகுக்(கு) அழகுசெய் வார். 3

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்(று) அகமகிழ்க!—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெலாம்
எற்றே இவர்க்குநா மென்று. 4

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம். 5

கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்(கு)
உண்டோ உணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து. 6

குறிப்புரை

நீதியாகிய வழிகளுக்கு விளக்குப்போன்று உதவுதலின் இந் நூலுக்கு நீதிநெறி விளக்கம் என்று பெயர். குமர குருபரர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண் டத்தில் தோன்றியவர். முருகன் திருவருள் பெற்றவர்; 800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார்.

1. இடமறிந்து - நூலில் நயம் நிறைந்த இடங்களை அறிந்து. உய்த்துணர்ந்து - மதிநுட்பத்தால் ஆராய்ந் தறிந்து.

2. முகம் என்றது நாவை. இவர் - இங்கே புலவரைக் குறிக்கும். மலரவன் பிரமன்.

3. நலன் - அழகு. மணிப்பூண் - இரத்தினத்தால் செய்யப்பட்ட ஆபரணம்.

4. மெலியார் - செல்வத்தில் தாழ்ந்தவர். கருத்து அழிக - உள்ளத்தில் வருந்துக. எற்றே - எம்மாத்திரம்.

5. தற்புகழ்தல் - தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளு தல். தீச்சுடர் - விளக்கை. நயவாமை - விரும்பாமலிருத் தல். நலம் - இன்பம்.

6. உணர்ச்சி - அறிவு. எரி - நெருப்பு. மாசுணம் - பெரிய மலைப்பாம்பு. 'மாசுணம் பேராவாய்க் கண்துயில்வ' என்று கூட்டுக.

வினாக்கள்

1. 'பொன் மலர் நாற்றமுடைத்து'—இவ் வுவமை யால் விளக்கப்படும் நீதி யாது?

2. தமிழ்ப்புலவர் எவ்வாறு மலரவனைவிட உயர்ந்தோராவர்?

3. கற்றார்க்கு அணியாவது யாது? எதுபோல?

4. எப்போது அகம் மகிழவேண்டும்? எப்போது கருத்தழிய வேண்டும்?

5. கீழ்மக்கள் தன்மை யாது? இதற்குக் காட்டப் பட்ட உதாரணத்தை விளக்குக.

பயிற்சி

1. இப் பகுதியில் கல்வியின் பெருமையைக் கூறும் செய்யுட்களின் கருத்தைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.

சேர்த்து எழுதுக:

2. இடம்+அறிந்து, கலன்+அல்லால், கருத்து+அழிக, நன்மை+நீர், கண்+துயில்வ.

3. ஆறாம் செய்யுளின் உவமான உவமேயங்களைத் தனித்தனியே எடுத்துக் கூறுக.

4. இரண்டாம் செய்யுளின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் கூறுக.

5. 'உய்த்துணர்ந்தும் சொல்வன்மை இன்றெனின் என்னாகும்?'—இஃது என்ன வாக்கியம்? இதனைப்பொருள் மாறுபடாதவாறு செய்தி வாக்கியமாக மாற்றுக.

2. சிறுபஞ்ச மூலம்

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வது நன்று. 1

பூவாது காய்க்கு மரமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார்—தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்
குரையாமை செல்லு முணர்வு. 2

பூத்தாலுங் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலு மூவார்நூ றேற்றாதார்—பாத்திப்
புதைத்தாலு நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு. 3

ஒருவ னறிவானு மெல்லாம்யா தொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமில் லானும் ஒருவன்
கணனடங்கக் கற்றானு மில். 4

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. 5

நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்து
ஒல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி—ஒல்லுமெனின்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தான்
ஆயின் அழிதல் அறிவு. 6

குறிப்புரை

சிறு பஞ்சமூலம் பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்தது. இதனை இயற்றியவர் காரியாசான் என்பவர். இவர் சைன மதத்தினர். கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர் ஆகிய ஐந்து வேர்கள் மக்களின் நோயைத் தீர்ப்பதுபோல இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் அடங்கியுள்ள கருத்துக்களும், அறியாமையை நீக்கப் பயன்படுவன. இந் நூலின் சிறப்புப்பற்றி இதனை 'மாமூலம்' என்பர்.

1. பெருமை பிழைத்தல் பொறுத்தல் எனப் பிரித்துப் பொருள் கொள்க. பல பொருளார் - மிக்க பொருளை யுடைய செல்வர். நகைகெட - இகழ்ந்துரைப்பது நீங்க.

2. மூவாது மூத்தவர் - வயதினால் மூத்தவர்களாக ஆகாது போனாலும் அறிவினால் மூத்தவர்கள் ஆவார்கள். தாவா - கெடாத. மேதைக்கு-அறிவுள்ளவனுக்கு. நாறுவ - முளைப்பன. நாறல் - முளைத்தல்.

3. மூவார் - அறிவினால் முதிர்ந்தவர் ஆகார். உணர்வு - அறிவு.

4. கணன் - கணம். தொகுதி, அடங்க - முழுமையும். எல்லாமறிந்தவனும், ஏதுமறியாதவனும், கல்வியே இல்லாதவனும், குற்றமே இல்லாதவனும், எல்லாம் கற்றவனும் உலகத்தில் இல்லை என்பதே இந்தப் பாட்டின் திரண்ட கருத்தாகும்.

5. வழக்கறிந்து - செலவு செய்தலைத் தெரிந்து. வெருவுதல் - பயந்து செல்லுதல். வீழ்ந்து - விரும்பி. ஓம்பி - பாதுகாத்து. திரு ஆக்கும் செல்வத்தை அதிகப்படுத்தும். இல்வாழ்க்கைத் துணைவியின் குணம்பற்றிக் கூறுகின்றார்.

6. நல்ல - நல்லனவற்றை. வெளிப்படுத்து - பிறர்க்கு எடுத்துரைத்து. ஒல்லும் - முடியும். ஒல்லா -

விரைவு. ஊற்றங்கோல் - ஊன்றுகோல். மாயம் - வஞ்ச னைச் செயல். மாற்றுக - நீக்குக, ஒழித்திடுக.

வினாக்கள்

1. பெருமையும் சிறுமையும் யாவை?

2. மூவாவது மூத்தவர் யார்?,அவர் எதுபோன்றவர்?

3. மூத்தாலும் மூவார் யார்? அவருக்குக் காட்டப் பட்ட உவமையை விளக்குக.

4. 'ஒருவனறிவானும்' என்னும் செய்யுட் கருத்தை எழுதுக.

5. பெண்டிர்க்குரிய சிறப்புகள் யாவை?

6. 'நல்ல வெளிப்படுத்து' என்னும் செய்யுளில் கூறப்படும் நீதிகளைத் தொகுத்து எழுதுக.

3. நன்னூல்

மாணாக்க ரிலக்கணம்

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம்ஆ டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடை மாணாக்கர். 1

மாணாக்கராகாதவ ரிலக்கணம்

களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே. 2

பாடங் கேட்டலின் முறை

கோடல் மரபே கூறுங் காலை
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர். 3

மாணாக்கர் வழிபாடு செய்யும் விதம்

அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமொடு
எத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே. 4

குறிப்புரை

நன்னூலைப்பற்றி யறியாத தமிழ்வாணர்களே இரார். இதனை இயற்றியவர் பவணந்தி முனிவர். இவர் சைனர். தொண்டை மண்டலத்தில் சனகாபுரத்தில் பிறந்தார். சீயகங்கனின் வேண்டுகோளுக்கு இணங்கி எல்லோருக்கும் பயன்படும் வகையில் நன்னூலை இயற்றியருளினார்.

1. இல்லிக்குடம் - ஓட்டைக்குடம். செய்யரி - பன்னாடை.

2. களி - கள் குடிக்கின்றவன். மடி - சோம்பேறி. மானி - அகங்காரம் பிடித்தவன். பிணியன் - நோயாளி. தொன்னூல் - பழைய நூல்கள். படிறன் - பொய் பேசுகின்றவன்.

3. முனிதல் - வெறுத்தல். பருகுவனன்ன ஆர்வத்தனாகி - தாகத்தால் துன்பப் படும்போது தண்ணீரைக் கண்டு உடனே குடித்துவிடலாமா என்று எண்ணுவதைப் போல மிக்க ஆர்வம் கொண்டு. களம் - இடம்.

வினாக்கள்

1. மாணாக்கர் எத்தனை வகைப்படுவர்? அவர் எவை போல்வர்?

2. எவரெவர்க்குப் பாடம் சொல்லுதல் கூடாது?

3. பாடங் கேட்டலின் முறையை விளக்கி எழுதுக.

4. மாணாக்கர் எவ்வாறு வழிபாடு செய்தல் வேண்டும்?

4. திருக்குறள்

(அரசியலாரால் குறிப்பிடப் பட்டவை)

மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 1

செயற்குஅரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார். 2

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல்; அனைத்துஅறன்
ஆகுல நீர பிற. 3

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 4

தந்தை மகற்குஆற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல். 5

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. 6

மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 7

இனிய உளஆக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. 8

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 9

நன்றே தரினும் நடுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 10

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு. 11

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 12

பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று. 13

இலம்என்று வெஃகுதல் செய்யார், புலம்வென்ற
புன்மைஇல் காட்சி யவர். 14

கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல். 15

சொல்லுக சொல்லில் பயனுடைய; சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல். 16

தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். 17

இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர். 18

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். 19

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்? 20

மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்தது ஒழித்து விடின். 21

களவினால் ஆகிய ஆக்கம், அளவுஇறந்து
ஆவது போலக் கெடும். 22

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 23

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற? 24

இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல். 25

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். 26

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை. 27

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். 28

கற்றிலன் ஆயினும் கேட்க: அஃதுஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை. 29

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 30

சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. 31

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 32

இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரோ
கெடுக்கும் தகைமை யவர்? 33

மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து. 34

எண்ணித் துணிக கருமம்: துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. 35

உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர். 36

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின். 37

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா ; எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின். 38

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 39

அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குஉடையான் கட்டே தெளிவு. 40

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 41

அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு 42

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 43

அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் நீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை ? 44

கடுஞ்சொல்லன் கண்இலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும். 45

சிதைவுஇடத்து ஒல்கார் உரவோர் ; புதையம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு. 46

மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு. 47

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 48

இடுக்கண் வருங்கால் நகுக: அதனை
அடுத்துஊர்வது அஃதுஒப்பது இல். 49

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. 50

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. 51

சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ அற்று. 52

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை. 53

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும். 54

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல். 55

அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். 56

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு. 57

கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை. 58

விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்திமைப்பின்
ஓட்டுஅன்றோ வன்க ணவர்க்கு. 59

முகம்நக நட்பது நட்புஅன்று; நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு. 60

உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. 61

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 62

அமர்அகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரில் தனிமை தலை. 63

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க; வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 64

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 65

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 66

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 67

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். 68

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் 69

இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும். 70

குறிப்புரை

1. மலர் மிசை - (மனமாகிய தாமரை) மலர்மேல். ஏகினான் - சென்று தங்கினவன். மாண் - மாட்சிமை.

3. மாசு - குற்றம். ஆகுலம் - ஆரவாரம். நீர - தன்மையன.

5. அவை - சபை.

6. சார்பு - துணை. மறத்திற்கும் - பாவத்துக்கும்.

7. அனிச்சம் - ஒருவகையான மலர்.

8. இனிய - இனிய சொற்கள். இன்னாத - கடுஞ்சொற்கள்.

9. வையகமும் - உலகமும்.

10. நடு - நடுநிலைமை. இகந்து - தவறி. ஆக்கம் - செல்வம்.

11. சோகாப்பர் - துன்புறுவர். இழுக்கு - குற்றம்.

12. உலகம் - உலகத்திலுள்ள மக்கள். ஒட்ட - பொருந்த.

13. இறப்பினை - செய்த தீமையே.

14. இலம் - செல்வம் இல்லை என்று. வெஃகுதல் - பிறர் பொருளைக் கொள்ளக் கருதுதல். புலம் - ஐம்புலன்கள், காட்சி - அறிவு.

15. கண்ணற - இரக்கம் இல்லாமல்.

17. துன்னற்க - செய்யாதொழிக.

18. கடன் - கடமை. இடனில் - செல்வம் இல்லாது. பருவம் - காலம்.

19. ஆற்றுவார் - தவம் செய்வார். ஆற்றல் - வன்மை. மாற்றுவார் - பசியைப் போக்கும் இல்லறத்தார்.

20. பட - தோன்ற. நோவது - இகழ்வது.

21. மழித்தலும் - மொட்டையடித்துக்கொள்ளலும்.

22. ஆக்கம் - செல்வம்.

23. பொய்யற்க - பொய் சொல்லாதே.

24. நகை - முகமலர்ச்சி.

25. ஒறுத்தல் - தண்டித்தல். நன்னயம் - நன்மை.

26. இறை - கடவுள். வைக்கப்படும் - எண்ணப்படும்.

27. விழுச் செல்வம் - பெருமையுடைய செல்வம். மாடு - செல்வம்.

28. இலங்கு - அறிவானது விளங்கும்.

29. ஒற்கத்தின் - தளர்ச்சியடையும் நேரத்தில்.

30. மெய்ப்பொருள் - உண்மையான பொருள், உண்மை.

31. ஓரீஇ - நீக்கி.

33. இடிக்கும் - குற்றம் கண்டவிடத்து இடித்துக் கூறும்.

34. சான்றோர்க்கு - அறிவுடையவர்க்கு. ஏமாப்பு - பாது காவல்.

35. கருமம் - செயல்.

36. உடைத்தம் - தம்முடைய. ஊக்கத்தின் - மன வெழுச்சியால். இடைக்கண் - பாதியில்.

37. ஞாலம் - உலகம். கைகூடும் - கிட்டும்.

38. எஞ்சாமை - குறையாதபடி.

39 நாடி - ஆராய்ந்து. மிகை - அதிகமானதை.

40. தேற்றம் - தெளிவு. தெளிவு - நம்பிக்கை.

42. அரண் - பாதுகாவல். பொச்சாப்பு - மறதி.

43. குடிதழீஇ - குடிகளை அன்புடன் ஆதரித்து. கோல் - செங்கோல். அடிதழீஇ - அரசனது பாதங்களைத் தழுவி.

44. அல்லல் - துன்பம். படை - ஆயுதம்.

45. கண் - இரக்கம். நீடு - நீண்டகாலம்.

46. சிதைவு - தளர்ச்சி. ஒல்கார் - பின் வாங்கார். பாடு - பெருமை. உரவோர் - வலிமையுடையோர் (மன உறுதி யுடையோர்.)

47. மடி - சோம்பல். அடி அளந்தான் - திருமால்.

48. கூலி - பயன்.

49. இடுக்கண் - துன்பம். நகுக - சிரித்திடுக.

52. ஏமார்த்தல் - பாதுகாத்தல்.

53. தைரியம் - துணிவு.

54. தெறும் - அழிக்கும்.

55. ஐயப்படாது - சந்தேகப்படாமல். அகம் - மனம்.

56. அவை - சபை.

57. பொறை - சுமை. இறைவற்கு - அரசனுக்கு. இறை - கப்பம். நேர்வது - தருவது.

58. கூற்று - எமன். உடன்று - கோபித்து.

59. ஓட்டு - தோல்வி. வன்கணவர்க்கு - வீரர்க்கு.

60. முகநக - முகம் மலரும்படி. அகம் - மனம்.

61. உள்ளற்க - எண்ணாது ஒழிக. அல்லல் - துன்பம்.

62. அழிவந்த - கெடுதிகளை. அறூர் - நீக்கார்.

63. அமர் அகத்து - போரில். ஆற்றறுக்கும் - கீழே தள்ளிவிட்டுச் செல்லும். கல்லாமா - போர்த் தொழிலைக் கல்லாத குதிரை.

64. ஒன்னார் - பகைவர்.

65. இழுக்கார் - தவறமாட்டார்கள்.

66. குன்றின் அனையார் - மலைபோல் உயர்ந்தவர். குன்றுவர் - சிறுமையடைவர். குன்றி அனைய - குன்றிமணி அளவு சிறிய.

67. ஆற்றுவர் - செய்வார்கள்.

68. ஊழி - ஊழிக்காலம். ஆழி - கடல்.

69. குடிசெய்வல் - தான் பிறந்த குடியினை முன்னேறச் செய்வேன். மடி - சோம்பல். தற்று - வரிந்து கட்டி.

70. இலம் - பொருள் இல்லை என்று. அசைஇ - சோம்பல் கொண்டு. நகும் - சிரிப்பாள்.

III. வரலாற்றுப் பகுதி

1. அசோகன்

சந்திர குப்தன்மகன்—பிந்து
சாரன் புகழ்சிறந்தான்.
வந்தனன் அவன் மகனும்—அசோகன்
வளர்பிறைச் சந்திரன்போல். 1

'மன்னன் எனில் இவனே'—என
மன்னுயிர் போற்றியவன்
பொன்முடி புனைதுறவி—அசோகன்
புகழினைக் கேளடியோ! 2

வலமிகு வாலிபத்தில்—பெரு
மல்லனிவன் படையால்
கலிங்கத்தை வென்றதுவும்—போர்க்
களத்தினைப் பார்த்தயர்ந்தான். 3

எத்தனை பேரைக்கொன்றேன்!—அந்தோ
ஏதுக்கிப் போரெனவே
கத்தியை விட்டெறிந்து—புத்தர்
கருணையைச் சரண்புகுந்தான். 4

நாட்டி லெங்குந்தூண்கள்—மிக
நாட்டியே நல்லுரைகள்
ஏட்டைப் போலத்திட்டி—அறம்
இலகிட நீதிசெய்தான். 5

— சுத்தானந்த பாரதியார்

குறிப்புரை

இப் பாடலின் ஆசிரியர் சுத்தானந்த பாரதியார். இயற் பெயர் வேங்கடராம ஐயர் என்பது. இவர் திருச்சிராப் பள்ளிக்கு மேற்கில் உள்ள காட்டுப் புத்தூரிற் பிறந்தவர். இவர் பல எளிய இனிய உரைநடை நூல்களும், செய்யுள் நூல்களும் இயற்றியுள்ளார். இந்தியப் பேரரசனாகிய அசோகன் வரலாறு இப் பாடல்களில் மிகச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பிந்துசாரன் - அசோகருடைய தந்தை. மன்னுயிர் போற்றி - பிறவுயிர் காத்து. புனை - அணி. வலம் மிகு வெற்றி மிக்க. அயர்ந்தான் - மயங்கினான். மல்லன் - வீரன் கலிங்கம் - கலிங்க தேசம். இலகிட - விளங்க. அறம் - நீதி

வினாக்கள்

1. அசோகர் யாருடைய மகன்?
2. அசோகர் எந்த நாட்டின்மேல் படையெடுத்தார்? அதன் முடிவு யாது?
3. அவர் புத்தமதத்தைத் தழுவக் காரணம் என்ன?
4. புத்தமதம் எங்கும்பரவ அசோகர்என்னசெய்தார்?
5. அசோகர் பெருமைகளைப்பற்றி ஒரு குறிப்பு வரைக?

பயிற்சி

1. தேசப் படத்தைப் பார்த்துக் கலிங்கநாடுள்ள பகுதியைக் கண்டுபிடி.
2. இப்பகுதியை உன் சொந்த வாக்கியங்களில் உரை நடைப் படுத்திக் கூறுக.
3. வளர் பிறைச் சந்திரன்போல், மன்னுயிர், அயர்ந் தான், சரண் புகுந்தான், இலகிட—இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. முயற்சி திருவினை ஆக்கும்

தொண்டைநன் னாட்டைச் சார்ந்த
தொல்புகழ் களத்தூர் தன்னில்
பண்டைநற் றவத்தி னாலோர்
பாலகன் பிறந்தான்; மற்றுக்
கண்டவர் கலக்க முற்றார்
கண்ணிலாக் குழவி யென்றே!
மண்டலம் புகழ வந்த
மாதவச் சேயி தாமே. 1

தந்தையாம் வடுக நாதர்
தநயனைக் காணுந் தோறும்
சிந்தைநைந் தயர்ச்சி கொள்வார் :
செய்வகை யாதோ என்பார்.
'எந்தையே! ஈசா!' என்றே
இறைவனை இறைஞ்சி நிற்பார் ;
மைந்தனும் மாசில் வீர
ராகவன் மகிமை ஓரார். 2

மந்திரம் தந்தி ரங்கள்
மருத்துவம் முதலா வுள்ள
முந்தையோர் முறைகள் யாவும்
முயன்றனர் வடுக நாதர் ;
சுந்தரச் சிறுவன் கண்தாம்
சுகமுறக் காண வில்லை!
'விந்தையோ! வினையோ!' என்றே
விம்மினள் அன்னை அந்தோ! 3

விலையிலா மணியாய் வந்த
வீரரா கவன்தன் பேச்சாம்
வலையினால், அன்பால், இன்பால்,
வயங்குநற் செயல்கள் தம்மால்
நிலைதிரிந் திருந்த பெற்றோர்
நீங்கினர் துன்பம் அம்மா!
மலையெனும் துன்ப மேனும்
மறந்திடல் இயற்கை யன்றோ? 4

எழுத்தறி பருவத் தோர்நாள்
இராகவன் தன்பெற் றோரை
அழைத்தக மலர்ந்து, ' கல்வி
அறிந்திட ஆசை,' என்றே
வழுத்திடத் தந்தை தாயர்
வாட்டம துளத்திற் கொண்டு
விழித்திட லானார், 'என்னே
விளம்புவ திவனுக்' கென்றே. 5

"அம்மையே அப்பா, என்னை
அன்புடன் கல்விச் சாலைக்(கு)
இம்மையே அனுப்பு வீரேல்
என்றனா சிரியர் தம்மை
மும்முறை எழுத்தை எல்லாம்
முதுகினில் எழுதச் சொல்லிச்
செம்மையே கற்பன்," என்றே
செப்பினன் செல்வ மைந்தன். 6

மதலைதன் மாற்றங் கேட்டே
    மகிழ்ந்தனர் தந்தை தாயர்
சுதனுமவ் வாறே சென்று
    சூழ்ச்சியிற் கற்க லானன்
நிதமுமவ் வாசான் சொல்லும்
    நீதிநூல் நிகண்டந் தாதி
சதகநூற் புராண மோடு
    சாத்திரத் தொகுதி எல்லாம். 7

முதுகினில் எழுதக் கற்றும்
    முறைமையிற் சொல்லக் கேட்டும்
மதுகையாற் பாடல் யாவும்
    மனத்தினிற் பாடஞ் செய்தும்
எதுகையும் மோனை யுங்கொள்
    இனியநற் பாடல் யாத்தும்
சதுரராய்த் திகழ லானார்
    சற்குணச் செல்வர் அம்மா! 8

வேளிர்தம் குலத்து வந்த
    வீரரா கவராம் செம்மல்
காளையாம் பருவ முற்றார்;
    கடிமண மதுவும் பெற்றார்.
வாளைபாய் வயல்கள் நீடு
    வளத்தின்ஆர் களத்தூர் தன்னில்
கேளிரும் நட்புஞ் சூழக்
    கேண்மையின் வாழ்ந்து வந்தார் 9

இன்சொலும் ஈகை யுங்கொண்
டிருவரும் வாழும் போது
நன்சொலே ஆய்ந்து கூறும்
நங்கைவாய் தவறி ஓர்நாள்
புன்சொலொன் றியம்பி னால்
புலவரும் பொறுக்க லாற்றார்
"நின் சொலே காப்பன்," என்றே
நீங்கினார் ஊரை விட்டே. 10

கண்ணிலாக் குறையி னாலே
காதலி அவம தித்தாள்
பெண்ணவள் பகர்ந்த வண்ணம்
பெருவள நாடு வேழம்
திண்ணம் நான் கொணர்ந்த பின்னே
திரும்புவன் களத்தூர் என்றார்.
எண்ணுவார் எண்ணிச் செய்யின்
இயற்றலாம் யாவும் அன்றே? 11

நூலெலாம் ஆய்ந்து கற்ற
நுண்ணறி வுடைய ரேனும்
மாலுலாம் உலகம் என்றும்
மதிக்குமோ பொருளி லாரை?
கோலினால் குறிக்கொண் டேனும்
கொணர்தலே தகுதி என்றே
காலினால் நடந்து சென்றார்
கல்வியில் வீர ரானார். 12

அந்தகர் இவர்தாம் என்றே
அவமதித் திருந்தோ ரெல்லாம்
சுந்தரப் பாடல் கேட்டே
சொல்லொணு வியப்பில் நின்ருர்;
வந்தவர் புலமை கண்டே
வழங்கினுர் பரிசை மன்னர்.
தந்தஅப் பரிசில் பெற்றே
தாமும்ஊர் திரும்பி ஞரே. 13

புண்ணியப் புலவர் தாமும்
புகழ்பெறு களத்தூர் வந்தே
"எண்ணி நீ உரைத்த வாறே
யானையும் நாடும் பெற்றேன்.
பெண்மணீ பாராய்," என்னப்
பேதைஅம் மனைவி தானும்
கண்ணினில் அருவி பாயக்
கணவனுர் காலில் வீழ்ந்தாள். 14

"பெற்றஇச் செல்வ மெல்லாம்
பேசில்நின் மொழியா லன்ருே?
குற்றமொன் றில்லை," என்றே
கூறினுர் புலவர் தாமும்
கற்றனம் பலவே நீதி
கவிஞர்தம் சரிதத் தாலே
முற்றும்நீர் முயன்று சொல்வீர்
முழுமனப் பொறுமை கொண்டே. 15

—பேராசிரியர் மயிலை. சிவ முத்து

குறிப்புரை

பேராசிரியர் மயிலை. சிவ. முத்து அவர்களைத் தமிழ் நாடு நன்கு அறியும். எழுத்தாலும், பேச்சாலும் தமிழுக்கும் சமூகத்துக்கும் ஓயாமல் உழைப்பவர். இவர் சென்னையில் உள்ள மைலாப்பூரில் பிறந்தார். சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றி வருகிறார். சென்னை மாணவர் மன்றமும் இவரால் பெரிதும் போற்றப்படுகிறது.

ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகட்குமுன்னே செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த பொன் விளைந்த களத்தூரிலே வடுகநாத முதலியார் என்னும் வேளாளர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பிறவிக் குருடாக ஒரு புதல்வர் பிறந்தார். அப் புதல்வர் பெயர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பது. அவர் எழுத்துக்களைத் தம் முதுகில் எழுதச் சொல்லிக் கற்றுக் கொண்டாராம். பல அரிய பெரிய நூல்களையெல்லாம் பிறர் வாயினாற் சொல்லக் கேட்டே நெட்டுருப் போட்டுப் பெரும் புலவராக விளங்கினார் நமது முதலியார்.

வீரராகவ முதலியார் ஒருமுறை எங்கோ சென்றிருந்து தம் இல்லம் திரும்புதல் கண்ட சிலர், "முதலியார் வருகின்றார்," என்று அவர்தம் மனைவிக்கு அறிவிக்க, அவ்வம்மையார், "வந்தால் என்ன? அவர் யானைக்கன்றும் வளநாடும் பெற்று வந்தாற்போல் கூறுகின்றீர்களே!" என்று பரிகாசமாகச் சொல்ல, முதலியார் அதனை இகழ்ச்சிக் குறிப்பாக எண்ணி, "அப்படியானால் யானைக் கன்றும், வளநாடும் பெற்ற பின்னரே நான் இல்லம் புகுவேன்," என்று சூளுரைத்து யாத்திரை செய்யப் புறப்பட்டார். ஈழநாட்டு அரசனாகிய பரராச சிங்கம் என்பவன் இவருக்கு யானைக் கன்றும், வளநாடும் அளிக்க அவைகளைப் பெற்ற பின்னரே இவர் இல்லம் சென்றனர் என்பர் சிலர். இவர்தம் தமயனார்

மனைவி இவ்விதம் புகன்றதாகவும், அதன் பின்னரே இவர் படித்துப் பரிசுகள் பலவும் பெற்றதாகவும் கூறுவர்.

இயற்கையிலேயே குருடராகப் பிறந்தும் தமது முயற்சியினால் பெரும் புலவராகிப் பல அரிய நூல்களை இயற்றிய இப்பெரியார் சரிதத்தை மாணவர் என்றும் தம் மனத்தில் கொண்டிருத்தல் வேண்டும்.

1. பண்டை - பழமை. மண்டலம் - பூமி. சேய் - குழந்தை. தநயன் - புதல்வன் (தநயை பெண்பால்)

2. அயர்ச்சி - துன்பம். மாசு + இல் (மாசு - குற்றம்) இறைஞ்சி - வணங்கி. ஓரார் - எண்ணார்.

3. முந்தையோர் - முன்னோர். விந்தை - புதுமை.

4. வயங்குதல் - விளங்குதல்.

5. வழுத்திட - சொல்ல.

6. இம்மை - இப்பொழுது.

7. மாற்றம் - சொல். சுதன் - மகன். நிதம் - தினந்தோறும்.

8. மதுகை - ஆசை. யாத்தல் - கட்டுதல். சதுரர் - வல்லவர்.

9. வேளிர் - வேளாளர்.

10. செம்மல் - பெரியோன். கடி - சிறப்பு. கேளிர் - சுற்றத்தார். கேண்மை - நட்பு. நங்கை - பெண். புன்சொல் - இழிவான சொல்.

11. பகர்ந்த - சொன்ன. வேழம் - யானை. திண்ணம் - நிச்சயம். கொணர்ந்த - கொண்டு வந்த.

12. மால் - அறியாமை. குறிக்கொண்டு - அடையாளமாகக் கொண்டு.

13. அந்தகர்-குருடர். வியப்பு-ஆச்சரியம். வரிசை-பரிசு.

14. அருவி பாய - சிறிய ஆறுபோல் கண்ணீர் வழிந்தோட.

15. கவிஞர் - புலவர்.

வினாக்கள்

1. வீரராகவ முதலியார் எவ்வூரில் பிறந்தார்? அஃது எந்த மாவட்டத்தைச் சார்ந்தது?

2. பிறந்த மகனைக் கண்டு பெற்றோர் வருந்தக் காரணம் என்ன?

3. பெற்றோர் எங்ஙனம் துன்பம் நீங்கினர்?

4. வீரராகவ முதலியார் எங்ஙனம் கல்வி கற்பதாகப் பெற்றோரிடம் கூறினார்?

5. முதலியார் எவ்வாறு புலவர் ஆனார்?

6. 'நங்கை வாய் தவறி ஓர் நாள் புன் சொலொன்றியம்பினாள்'—நங்கை யார்? புன்சொல் யாது?

7. 'உலகம் மதிக்குமோ பொருளில்லாரை?'—இடங் கூறி விளக்குக.

8. புலவர் வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் என்ன செய்தார்?

9. இப் பாடத்தால் அறியும் நீதிகள் யாவை?

பயிற்சி

1. இப் பாடத்தில் காட்டப்பட்ட படம் இவ் வரலாற்றில் எந்த நிகழ்ச்சியைக் குறிக்கிறது?

2. சார்ந்த, தொல்புகழ், அயர்ச்சி, நிலைதிரிந்து, வழுத்திட, விழித்திட, குறிக்கொண்டு - இவற்றை நும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

3. இப் பாடத்திலிருந்து வினைப் பெயர், ஏவல் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் இவைகட்கு உதாரணங்கள் தருக.

4. பன்னிரண்டாம் செய்யுளின் முதலிரண்டடிகளைச் செய்தி வாக்கியமாக மாற்றிக் கூறுக.

IV கதைப் பகுதி

நள வெண்பா

கலி நளனைவிட்டு நீங்குதல்

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி. 1

தேர் செலுத்திவந்த நளனிடம் தமயந்தி தன் மக்களை அனுப்ப, அவன் அவர்களைத் தழுவி வினவுதல்

மக்களை முன்காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள் நீர்
"என்மக்கள் போல்கின் றீர் யார்மக்கள்?" என்றுரைத்தான்
வன்மக் களியானை மன். 2

பிள்ளைகள் கூறுதல்

" மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம் ; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்," என்றார் அழுது. 3

நளன் வினா

"உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ?—செங்கை
வளவரசே !" என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து. 4

மக்கள் விடை

"நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா(து)
அஞ்சாரோ மன்னர் அடுமடையா!—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய்! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 5

நளன் கூறுதல்

"மன்னர் பெருமை மடையர் அறிவரோ?
உன்னை அறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல்," என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். 6

நளனை இன்னாரென்று தம் மக்கள் கூறிய செய்திகளால் அறிந்து தமயந்தி வீமனிடம் சொன்னாள்.

அவன் நளனிடம் வருதல்

போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகண் டேறும் வளநாடன் தன்னைத்
தெரிவரிதா நின்றான் திகைத்து. 7

வீமன் நளனை நோக்கிக் கூறுதல்

" பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்கும் திருநாடா ! உன்னை
ஒளியாது காட்டுன் உரு." 8

நளன் மாறுவேடம் நீங்கல்

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோல் போயிற்றே—அக்காலங்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. 9

வீமன் விருந்து செய்தல்

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையும் மக்களையும் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலைவேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. 10

— புகழேந்திப் புலவர்

குறிப்புரை

நிடத நாட்டரசன் நளனுடைய கதையை வெண்பாக்களினால் கூறுதலின் இந்நூல் 'நள வெண்பா' எனப் பெயர் பெறும். புகழேந்திப் புலவர், தொண்டை நாட்டுக் களத்தூரிலே, பனிரண்டாம் நூற்றாண்டில் பிறந்தார். இவரை ஆதரித்த வள்ளல் சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனுவான்.

நள வெண்பா, சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என்னும் முப்பிரிவுகளுடையது.

1. வண்டார் - வண்டுகள் நிறைந்த. மள்ளுவ நாட்டு எங்கோமான் - மள்ளுவ நாட்டை யாண்டுவந்த சந்திரன் சுவர்க்கி. தண்டார் - குளிர்ச்சி பொருந்திய மாலை.

2. வெய்துயிரா - பெருமூச்சு விட்டு. புயம் - தோள். வன்மம் - பகைக் குணம்.

3. அன்னை - தமயந்தி. கான் - காட்டில். மற்றொருவன் - புட்கரன்.

4. இழுக்கன்றோ?-தாழ்வல்லவா? இளவரசு - இந்திரசேனன்.

5. அடுதல் - சமைத்தல். மடையா - சமையற்காரனே. எஞ்சாது - குறையாது.

7. போது - அரும்பு. கண்ணி - மாலை. ஓதம்-குளிர்ந்த நீர். வளநாடன் - நளன்.

8. பைந்தலை - பசியதலை. பணம் - படம். பூகம் - கமுகு. மந்தி - பெண் குரங்கு.

9. மிக்கோன் - திருமால். சார்வாக - பற்றாக. மான் அகத்தேர் - குதிரைகள் பூட்டப்பட்டுள்ள தேர்.

10. வாழுவா - நீங்காத. விதையக் கோன் - விதர்ப்ப தேசத்திற்கு அரசனான வீமன்.

வினாக்கள்

1. புகழேந்திப் புலவர் நன்றி மறவாதவர் என்பதை எவ்வாறு உணரலாகும்?

2. நளன் மக்களைப் பார்த்து என்ன வினவினான்?

3. யார் என்று வினவிய நளனைப் பார்த்துப் பிள்ளைகள் என்ன கூறினார்கள்?

4. 'உங்களரசொருவன் ஆளநீர் ஓடிப்போந் திங்கண் உறைதல் இழுக்கன்றோ?'—இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.

5. 'தீமையே கொண்ட சிறு தொழிலாய்' என்று நளனை மக்கள் இகழ்ந்துரைக்கக் காரணம் என்ன?

6. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ'—இதனைக் கூறியவன் யார்? எப்போது?

7. 'ஓதம் வரிவளை கண்டேறும் வள நாடன்'—இச் சொற்றொடரை விளக்குக.

8. 'பைந்தலைய நாகத்தின்'—இச் செய்யுளால் குறிப்பாகக் கூறப்படுவது யாது?

9. நளன் மாறுவேடம் நீங்கியமை எது போன்றிருந்தது?

பயிற்சி

1. எங்கோமான், வெய்துயிரா, வளநாடு, சிறுதொழிலாய், முனிந்தருளல், கரந்துறையும் - இவற்றைப் பதம் பிரித்து எழுதுக.

2. நளனுக்கும் அவன் மக்களுக்கும் நடந்த உரையாடலை உரைநடைப் படுத்திக் கூறுக.

3. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ?'—இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

V. வருணனைப் பகுதி

புறாக்கள்

வீட்டுக்கு வெளிப் புறத்தில்
வேலன்வந் தேபு றாவின்
கூட்டினைத் திறக்கு முன்பு
குடுகுடு எனக்கு நித்தல்
கேட்டது காதில்! கூட்டைத்
திறந்ததும் கீழ்ச்ச ரிந்த
கோட்டுப்பூப் போற்பு றாக்கள்
குதித்தன கூட்டி னின்றே!



இட்டதோர் தாமரைப்பூ
 இதழ்விரித் திருத்தல் போல
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
 இரையுண்ணும் ; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை ; குத்து மில்லை :
 வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை ; கீழ்மேல் என்னும்
 கண்மூடி வழக்க மில்லை. 2

தாய்இரை தின்ற பின்பு
 தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும் ; குஞ்சு
 தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கைத்
தாய்அருந் தியதைக் கக்கித்
 தன்குஞ்சின் குடல் நிரப்பும் ;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்
 அன்புக்கோர் எடுத்துக் காட்டாம். 3

—பாரதிதாசனார்

குறிப்புரை

பாரதிதாசனூர் சீர்திருத்தக் கவிதைகள் எழுதுவதில் வல்லுநர். இவர் கவிதைகள் இனிய நடையும் எளிமையும் உடையவை; புதுமைக் கருத்துக்கள் நிறைந்தவை. இவர் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பது. புதுவை இவரது பிறப்பிடமாகும். இப்பாடல்கள் அழகின் சிரிப்பு என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

கீழ்ச்சரிந்த - கீழே தாழ்ந்த. கோட்டுப்பூ - கிளைகளில் பூக்கும் மலர். வெட்டில்லை - சண்டை சச்சரவுகள் இல்லை என்றபடி. கட்டில்லை-சுதந்திரமாக இருக்கின்றன என்பது கருத்து. கீழ் மேல் - தாழ்வும் உயர்வும் ஆகிய வேற்றுமை. கண்மூடி வழக்கம் - மூடப் பழக்கம். மூக்கு - அலகு. குடல் - வயிறு. எடுத்துக்காட்டு - உதாரணம்.

வினாக்கள்

1. வேலன் கூட்டைத் திறப்பதற்குள் புறாக்கள் என்ன செய்தன?

2. புறாக்களின் வாழ்வில் காணப்படும் நற்பண்புகள் யாவை?

3. தாய்ப்புறா அன்புக்கோர் எடுத்துக் காட்டாவது எப்படி?

பயிற்சி

1. (1) கூட்டைத் திறந்ததும் புறாக்கள்........................... போல குதித்தன.

(2) ....போல வட்டமாகப் புறாக்கள் கூடி இரை உண்ணும்.

2. அவற்றின் வாழ்வில் வெட்டில்லை; கண்மூடி வழக்கமில்லை.—இதனைத் தனிவாக்கியமாக மாற்றி எழுதுக.

VI. பலவகைப் பாடல்

நாரை விடு தூது

நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே
"எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து

கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்," எனுமே. 1

— சத்திமுற்றப் புலவர்



பாம்புக்கும் எலுமிச்சம்பழத்திற்கும் சிலேடை

பெரியவிட மேசேரும் : பித்தர்முடி யேறும் :
அரியுண் ணும் : உப்புமே லாடும்—எரிகுணமாம் :
தேம்பொழியும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். 2

— காளமேகப் புலவர்

அற்புதங்கள்

பூநக்கி ஆறுகால் ; புள்ளினத்துக் கொன்பதுகால் ;
ஆனைக்குக் கால்பதினே ழானதே—மானேகேள்
முண்டகத்தின் மீது முழுநிலம் பூத்ததனைக்
கண்டதுண்டு கேட்டதில்லை காண். 3

— காளமேகப் புலவர்

பாக்குவெட்டி

விறகு தறிக்கக் கறிநறுக்க
வெண்சோற் றுப்புக் கடகுவைக்கப்
பிறகுபிளவு கிடைத்த தென்றால்
நாலாறுகப் பிளந்து கொள்ள
பறகு பறவென் றேசொறியப்
பதமா யிருந்த பாக்கு வெட்டி
இறகுமுளைத்துப் போவ துண்டோ?
எடுத்தி ராயிற் கொடுப்பீரே. 4

—இராமச்சந்திரக் கவிராயர்

ஊரின் பேர்

முன்னொரு ஊரின் பேராம்
முதலெழுத் தில்லா விட்டால்
நன்னகர் மன்னர் பேராம்
நடுவெழுத் தில்லா விட்டால்
கன்னமா மிருகத்தின் பேர்
கடையெழுத் தில்லா விட்டால்
உன்னிய தேனின் பேராம்
ஊரின்பேர் விளம்பு வீரே.

— இராமச்சந்திரக் கவிரா

நூல் தோற்றம்

நிலம்வளி நீர் வானம்
நிலவிய உலகில் உள்ள
பலபொருள் பொருளின் ஆக்கம்
பொறியினுல் பகுத்தா ராய்ந்து
விலக்குதல் விலக்கி மக்கள்
விலககாத மேன்மை ஒன்றே
உலகினுக் களித்த ஆன்ருேர்
உள்ளமே உயர்நூ லாகும். 6

— கவிஞர் வாணிதாசனுர்

நூல் வளர்ச்சி

கருத்தினில் பிறந்து, மக்கள்
காதினில் தவழ்ந்து. தாளிக்
குருத்தினில் வளர்ந்து. தோலில்,
குன்றினில் துள்ளி யாடிப்
பெருந்தோலும் உழுந்து கெற்று
மீசையும பெற்று, நூலே!
விருந்தூட்டு கின்ருய் இன்று
வெள்ளைத்தாள் கோட்டைக் குள்ளே. 7

—கவிஞர் வாணிதாசனுர்

குறிப்புரை

இப் பகுதியில் முதலேந்து பாடல்களும் தனிப்பாடல் திரட்டினின்று எடுக்கப்பட்டவை. பிற பாட்டுக்களுடன் தொடர்பு இல்லாமல் அவ்வப்போது புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்புக்குத் தனிப் பாடல்கள் என்று பெயர். இவை தனிப்பாடற் றிரட்டு, தனிச் செய்யுட்

சிந்தாமணி, தமிழ் நாவலர் சரிதை போன்ற நூல்களில் அமைந்துள்ளன.

1. வழுதி - பாண்டியன். வாடை - வாடைக்காற்று. தழீஇ - மூடி. பேழை - பெட்டி. உயிர்க்கும் - பெருமூச்சு விடும்.

2. சிலேடை - இருபொருள் வரும்படி பாடுதல். பாம்பு:—விடம் - விஷம், பித்தர் - சிவபெருமான். அரி-காற்று. உப்பும் மேலாடும் - மேலே உயர்ந்து ஆடும். எலுமிச்சம்பழம்:—பெரிய இடமே சேரும் - பெரியவர் களிடத்திற் சேரும். பித்தர் - பைத்தியம் பிடித்தவர். அரியுண்ணும் - அரியப்படும்.

3. பூநக்கி - பூவை நக்கும் வண்டு. வண்டுக்கு ஆறு கால் உண்டு. புள் இனம் - பறவை இனம். ஒன்பதுகால் - ($9 \times \frac{1}{4} = 2\frac{1}{4}$) இரண்டேகால். பதினேழுகால் ($19 \times = 4\frac{1}{4}$) நாலேகால். முண்டகம் - தாமரை மலர். நீலம் - குவளை.

4. தறிக்க - பிளக்க. பிளவு - பாக்கு.

5. ஊரின் பெயர் - மதுரை. முதலெழுத்து இல்லையேல் துரை. (மன்னர் பெயர்) நடுவெழுத்து இல்லையேல் மரை. (மான்) இறுதி எழுத்து இல்லையேல் மது. (தேன்) கன்னம் - பெருமை. மிருகம் - மான்.

கவிஞர் வாணிதாசனார் பல்லாண்டுகளாகப் புதுவைக் கல்வே கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கடலூரைச் சார்ந்தவர்; மொழி, கலை, சமூகம், தொழில் பற்றிய புதுக் கருத்துக்கள் அமைந்த இனிய எளியவி கதைகள் பாடுவதில் வல்லவர்; கவிஞர் பாரதிதாசனாரிடம் நீங்கா அன்புடையவர். பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் என்னும் மும்மொழிப் புலமையும் உடையவர்.

வினாக்கள்

1. நாரையின் அலகு எவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளது?

2. புலவர் நாரையிடம் கூறிய செய்தி யாது?

3. 'பாம்பு எலுமிச்சம் பழத்தைப் போன்றது, எப்படி?

4. 'பூநக்கி ஆறுகால்; புள்ளினத்துக்கு ஒன்பதுகால்; ஆனைக்குப் பதினெழுகால்'—எப்படி? விளக்குக.

5. 'முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்தது' - எப்படிப் பொருந்தும்?

6. பாக்குவெட்டி புலவருக்கு எங்ஙெந்த வகையில் பயன்பட்டது?

7. மதுரை என்னும் பெயர் ஒவ்வோரெழுத்தில்லாவிடில் எங்ஙனம் பொருள் மாறுபடும்?

8. உயிர் நூலாவது யாது?

9. நூல் வெளியீட்டு முறை எவ்வாறு வளர்ச்சியடைந்தது?

பயிற்சி

1. கூர்வாய், கேட்டதிலை, நாலாறு, விருந்தூட்டுகின்றுய், பெருந்தோல்—இவற்றைப் பிரித்துக் கூறுக.

2. 'நாரை விடு தூது' என்னும் பகுதியை உரைநடைப் படுத்தி எழுதுக.

3. ஏழாவது செய்யுளில் உள்ள வினையெச்சங்களை எடுத்துக் கூறுக.

உரைநடைப் பகுதி

தமிழ்த் தென்றல்

நம் தண்டமிழ் நாட்டின் தலைவராகவும், தமிழ்த் தாயின் தவமைந்தராகவும் விளங்கிய **திரு. வி. கலியாணசுந்தரனாரை** அறியாத தமிழ் மக்கள் எவரும் இரார். அவர் எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைத்த ஏந்தல் ஆவார். அவர் தமிழ் எழுத்தாளர் உலகத்துக்கே தந்தையாக விளங்கினார். தொழிலாளர் குலத்துக்குத் தாயாக இருந்தார். தூய்மையும், எளிமையும், பொதுமையும் கலந்த அறநெறி வாழ்வு வாழ்ந்த அண்ணலாரைத் தமிழர்கள் **திரு. வி. க.** என்றே செல்வமாக அழைத்துக் கொண்டாடினர்.

அவர் முன்னோர்களின் ஊர் திருவாரூர். திரு என்னும் அடைமொழி திருவாரூரையே குறிப்பதாகும். திரு. வி. க. அவர்கள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் கொள்கையுடையவராய்த் தம் வாழ்வின் இறுதிக்காலம் வரை பிறர்க்குரியாளராகவே வாழ்ந்தார். அவர் வாழ்க்கை இயற்கையோடு இயைந்ததாகும். சுருங்கக் கூறின் அவர் மனித வாழ்வின் கலங்கரை விளக்கமாக இருந்தார் என்றே கூறலாம்.

திரு. வி. க. அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த துள்ளம் என்னும் கிராமத்தில் 1883-ஆம் ஆண்டில் தோன்றினார். அவருடைய

பெற்ரோர் விருத்தாசல முதலியாரும் சின்னம்மாளு மாவர். விருத்தாசல முதலியார் வாணிப சம்பந்தமாகச் சென்னையைச் சார்ந்த இராயப்பேட்டையில் வந்து தங்கி இருந்தார். கலியாணசுந்தரனாரின் தமயனார் திரு. வி. உலகநாதர் என்பவர். இருவரும் இளமையி லிருந்தே உயிரும் உடலும்போல இணைபிரியாது அன் புற்று இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

முதுமைப் பருவத்தில் மிக மெலிந்த உடலோடு காட்சியளித்த நம் திரு. வி. க. இளமைப் பருவத்தில் 'திண்ணன்' என்று பலரும் கூறும் வண்ணம் நல்ல உடற்கட்டு வாய்க்கப் பெற்றிருந்தார். அவர் சிறுவராக இருந்தபோதே யாருக்கும் அஞ்சாத துணிவுடையவ ராக விளங்கினார். 'விளையும் பயிர் முளையிலே தெரி யும்' என்னும் பழமொழிக்கிணங்க இளமையிலேயே அவரிடம் அருங்குணங்கள் அரும்பிக் கிடந்தன.

அவர் ஆறு வயதுச் சிறுவராக இருந்தபோது ஒரு நாள் தம்மையொத்த சிறுவர்களுடன் தெருவில் விளையா டிக்கொண்டிருந்தார். அவ் வமயம் அமீனா **முனிசாமிப் பிள்ளை** என்பவர் சலங்கைகள் கட்டப்பட்ட தமது இரட்டை மாட்டு வண்டியில் இவர்ந்து சென்ரார். அக் காலத்தே அமீனா முனிசாமிப் பிள்ளை என்ரால் சிறி யோர்க்கும் பெரியோர்க்கும் அச்சமாக இருக்கும். அவர்கள் மரியாதையுடன் ஒருபுறமாக ஒதுங்கிக்கொள் வார்கள். எனவே அன்று கலியாணசுந்தரனாருடன் விளையாடிய பிள்ளைகள் வண்டியின் 'கலகல' வென்ற ஒலி கேட்டு, ''ஐயோ! அமீனா வருகிரார்,'' என்று கூறிக் கொண்டே ஓடத்தொடங்கினார்கள். ஆனால் கலியாண சுந்தரரோ அச்சம் சிறிதுமின்றி ஓடும் நண்பர்களைப்

பார்த்து, "ஏன் இப்படிப் பயந்து ஓடுகிறீர்கள்? அமீனு தலையில் கொம்பு முளைத்தவரோ?" என்று கேட்டார். விளையாடும் சிறுவரின் பேச்சை அமீனு செவிமடுத்தார்.



அதற்காக அவர் வருத்தப்படவில்லை. வண்டியைவிட் டிறங்கினார். கலியாணசுந்தரரைக் கையில் பற்றிக் கொண்டு அவர் தம் தந்தையாரை அடைந்தார். தந்தை

யார் விருத்தாசல முதலியாரைப் பார்த்து, "இச்சிறுவன் பிற்காலத்தில் பேரறிஞனாக வரக்கூடியவன். இவனை நீங்கள் நல்ல முறையில் வளர்த்தல் வேண்டும்," என்று கூறிச் சென்றார்.

திரு. வி. க. வும் அவர்தம் அண்ணலாரும் இராயப் பேட்டையில் உள்ள வெஸ்லி பள்ளியில் நான்காம் வகுப்பில் சேர்ந்து பயின்றனர். கலியாணசுந்தரனார் அப்பள்ளியில் ஆறும் படிவம் வரையில் படித்தார். அவ் வமயம் அப்பள்ளியில் யாழ்ப்பாணம். நா. கதிரை வேற் பிள்ளை என்னும் பேரறிஞர் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்தார். அவரது தோற்றப்பொலிவும், பேச்சுவன்மையும் கலியாணசுந்தரரைப் பெரிதும் கவர்ந்தன. தமிழில் அவரது நுண்மாண் நுழை புல மையைக் கண்டு வியந்தார். தாமும் அவரைப்போலவே தமிழ்ப்புலமை நிறைந்து விளங்க வேண்டுமென விழைந்தார். அவர் ஆறும் படிவ அரசாங்கத் தேர்வுக் குச் செல்லும் சமயத்தில், தம் தமிழாசிரியர் மீது அருட் பாவைக் குறித்து நடந்த ஒரு வழக்கின்பொருட்டுச் சான்று பகரவேண்டியவரானார். தேர்வு நடைபெற வேண்டிய நாளிலேயே சான்றுக்குச் செல்லவேண்டும். சான்றுக்குச் செல்வதா? தேர்வுக்குப் போவதா? இரண்டு எண்ணங்களும் அவரை மாறிமாறி வாட்டின. ஒரு பக்கம் தம் ஆசிரியர்; மற்றொரு பக்கம் வாழ்வு. அவர் தம் ஆசிரியர்பால் இருந்த அன்பே விஞ்சியது. மறுநாள் நீதிமன்றத்துக்குச் சான்று கூறச் சென்றார். தேர்வுக்குச் செல்லவில்லை. அத்துடன் அவர் பள்ளிப் படிப்பு முற்றுப்பெற்றது. இங்ஙனம் திரு. வி. க. விடம் தியாக உணர்வு இளமையிலேயே ஊறிக் கிடந்தது.

சில நாட்களுக்குப் பின்னர் கதிரைவேற் பிள்ளை காலமானார். நம் சுந்தரனார் மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரை அடைந்தார். அவர்பால் தமிழிலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கண்ணுங் கருத்துமாகக் கற்றறிந்தார். அவர் தமிழ்மொழியே யன்றித் தனிமையில் ஆங்கிலமும் நன்கு பயின்றார். பாதிரிமார்கள் பலருடன் அடிக்கடி அளவளாவிக் கிறித்தவ சமயத்தின் சீரிய கருத்துக்களைத் தெளிவுறக் கற்றார். மற்றும் பலப்பல அறிஞர்களின் நூல்களைப் பயின்றும், சொற்பொழிவுகளைக் கேட்டும் தம் பொது அறிவைக் கடல்போலப் பெருக்கிக்கொண்டார்.

1906-இல் கலியாணசுந்தரனார் ஸ்பென்ஸர் கம்பெனியில் இரண்டாண்டுகள் பணியாற்றினார். பின்னர் ஆயிரம் விளக்கு என்னுமிடத்திலிருந்த வெஸ்லி பள்ளிக்கூடத்தில் முதற் படிவ ஆசிரியராக இருந்தார். ஆறு ஆண்டுகட்குப்பின் வெஸ்லி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரானார். ஆனால் அப் பதவியில் அவர் நீடித்துப் பணியாற்ற விரும்பவில்லை. ஒன்றரையாண்டுகளே ஆசிரிய சேவை புரிந்தார். நம் அருமைத் தாய்நாடு பரம்பரை பரம்பரையாக அடிமைத் தளையிற் சிக்கி இருக்கும் அவல நிலையை எண்ணி எண்ணி ஏங்கினார். 'நம்முடைய நாட்டை நாமே ஆள வேண்டும். வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்ற வேண்டும்' என்பனபோன்ற கருத்துக்கள் அவ்வமயம் நாட்டில் உலவின. அக் கருத்துக்கள் நம் பெரியாரை ஈர்த்தன. 1917-ஆம் ஆண்டில் **தேசபக்தன்** என்னும் வெளியீட்டைத் துவக்கினார். அவ் வெளியீட்டுக்குப் பின் **நவசக்தி** என்னும் வாரத்தாளை

நடத்தி மக்களினிடையே நாட்டுப்பற்றை வளர்த்தார்.

இவற்றுக்கிடையே நம் பெரியார் **கமலாம்பிகை** என்னும் பெண்மணியை மணந்து ஆறு ஆண்டுகளே இல்லறம் நடத்தினர். அவ் வம்மையார் 1918-இல் மண்ணுலக வாழ்வை நீத்தார். அவருக்குப் பிறந்த இருகுழந்தைகளும் பிறந்த சின்னளிலேயே மறைந்தன. நம் பெரியார் துணைவியை இழந்த பின்னர் மறுமணம் செய்து கொள்ளாமல் இல்லறத் துறவியாக வாழ்ந்து வந்தார். இளம் பருவத்தே மனைவியைத் துறந்த அவர் தமிழ்ப்பற்றும் தாய் நாட்டுப் பற்றுமே நிறைந்து ஒல்லும் வகையில் அறப்பணியாற்றி வந்தார். இவ்வருங்குணங் கருதி அவரைத் தமிழர்கள் **தமிழ்** முனிவர் என்றழைக்கலாயினர்.

தொழிலாளர் நிலை உயரவேண்டும் என்னும் எண்ணமும் திரு. வி. க. அவர்களிடம் நிலைத்திருந்தது. அதனல் தொழிலாளர் சங்கமொன்றை நிறுவி அவர்கள் ஒற்றுமைக்கு அடிகோலினர். அவர்கள் உரிமையைக் காப்பதற்காகப் பெரும் போராட்டங்கள் பல நடத்தினர். ஒரு சமயம் பக்கிங்காம் கர்னடிக் பஞ்சாலையில் மிகப்பெரிய வேலைநிறுத்தம் ஏற்பட்டது. ஆங்கில ஆட்சியினரால் தொழிலாளர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கலியாணசுந்தரனர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவரை அரசியலார் நாடு கடத்த உத்தரவிட்டனர். அதற்காக அறிஞர் திரு. வி. க. சிறிதும் அஞ்சவில்லை. தொழிலாளரின் சிறந்த துணைவராக இருந்து அவர்களுக்கு ஊக்கமளித்தார். அவ் வமயம் முதலமைச்சராக இருந்த **பானகல்**

மன்னர் நாடு கடத்தும் உத்தரவை எதிர்த்துப் போராடினார். அவர் முயற்சியால் அவ் வுத்தரவு நீக்கப் பெற்றது.

திரு. வி. க. தமிழ்மொழி, சமயம், சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம், இளைஞர் இயக்கம் முதலிய துறைகளிலும் பெரும்பணி யாற்றினார். இத்துறைகளில் அவர் சற்றேறக்குறைய ஐம்பது நூல்களை இயற்றி யுள்ளார். அந் நூல்கள் அனைத்தும் இனிய செந் தமிழ் நடையில் இயன்றவை. படிக்கப்படிக்கத் தெவிட் டாத சொல்லழகும் பொருளழகும், தொடையழகும் நடையழகும் வாய்ந்தவை. தமிழ் உரைநடை நூல் களே யன்றிப் பலப்பல கவிதை நூல்களும் ஆக்கி யுள்ளார்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் எழுதிய நூல்களில் 'முருகன் அல்லது அழகு,' 'பெண்ணின் பெருமை,' 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என் னும் உரைநடை நூல்கள் குறிப்பிடத்தக்கவை. முரு கன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், பொதுமை அருள் வேட்டல் முதலிய கவிதை நூல் கள் பொருட் செறிவு வாய்ந்தவை. அவர் சைவ சித் தாந்த சமாஜ மகாநாடுகளுக்கு மும்முறை தலைமை தாங்கியுள்ளார். அவர் காந்தியடிகளாரிடம் நீங்காத அன்புடையவர். காந்தியடிகளின் கொள்கைகளையே தம் நூல்கள் பலவற்றிலும் விளக்கிக் காட்டியுள்ளார். மேடைகளில் தாம் பேசும் போதும் காந்தியக் கொள்கைகளையே வற்புறுத்திப் பேசுவார். அவர் போலித் துறவையும் ஆடம்பரமான வாழ்க்கையையும் அறவே வெறுப்பவர். திருவள்ளுவர் கருத்துக்களே

உலகில் எங்கும் பரவி நிலவவேண்டும் என்பது அவர் தம் நோக்கம். மக்கள் உலகத்தை ஒரே குடும்பமாகக் கருதி வாழவேண்டுமென அவர் விரும்பினார். அவர் தம் பேருரைகளின் தொகுப்புக்குத் **தமிழ்த் தென்றல்** என்று பெயர்.

திரு. வி. க. அவர்கள் இளைஞர்களின் முன்னேற்றத்துக்காகப் பெரிதும் உழைத்தவர். மாணவர்கள் அவர்தம் சொற்பொழிவைக் கேட்கத் தேனீப்போலச் சூழ்ந்துகொள்வர். இளைஞர்களால்தான் இந்த வுலகம் ஈடேறும் என்னும் உறுதியான நம்பிக்கையே அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. பற்பல மாநாடுகளிலும் பிற இடங்களிலும் இளைஞர்களை ஊக்கும் வீரவுரைகளையே முழங்கினார். தமிழிளைஞர்களிடம் அவருக்குத் தணியாத அன்பு உண்டு.

தமிழ்ப் பெரியாரின் இறுதி வாழ்க்கை மிகவும் உருக்கமானது. அவர் இறுதிக்காலத்துக்கண்ணொளியை இழந்தபோதும் கருத்தொளியை இழக்காமல் அறவுரை நூல்கள் பல ஆக்குவதில் முனைந்திருந்தார். அவர் பார்வை இழந்த அச் சமயத்திலும் இருளில் ஒளி, இருமையும் ஒருமையும், அருகன் அருகே, முதுமை உளறல் முதலிய நூல்களை இயற்றினார். மரணப்படுக்கையிலும் படுக்கைப் பிதற்றல் என்னும் நூலை ஆக்கினார். என்னே அவர்தம் தியாகத் திறன் !

மொழிக்கும் நாட்டுக்கும் விழுப்பணியாற்றிய தமிழ்த் தந்தையார் திரு. வி. க. சில திங்கள் உடல் நலமின்றி 17-9-1953 வியாழக்கிழமையன்று தமிழ்நாட்டுப் பேரறிஞர்களும், ஆடவரும், மகளிரும், இளைஞரும், முதியோரும், உற்றாரும், உறவினரும் கதறி

அழ இராயப்பேட்டையில் உள்ள தமது இல்லத்தில் மறைந்தார். தமிழன்னை தன் கண்மணியை இழந்து கண்ணீர்விட்டாள். நாடெங்கும் உள்ள தமிழ் மக்களனைவரும் ஒப்புயர்வற்ற அரிய தலைவரை இழந்துவிட்டோமே என்று தவிக்கலாயினர். தமிழ்ப் பெரியாரின் சடலம் பிரம்பூரிலுள்ள தொழிலாளர் சங்கத்திலிருந்து ஒரு மைல் நீளமுள்ள வெள்ளம் போன்ற மக்கள் ஊர்வலத்துடன் மயிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக்கடன் ஆற்றப்பெற்றது. ஊர்வலத்தில் அன்று பெய்தபெருமழையையும் மக்கள் பொருட்படுத்தவில்லை. தமிழ்ப் பெரியாரின் பொன்னுடல் மறைந்தது. ஆயினும் அவர்தம் புகழுடல் தமிழ் மொழியும், தமிழ் நாடும் உள்ளளவும் நிலைபெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

திரு வி. க. அவர்கள் அன்பே உருவமானவர்; தூய உள்ளம் படைத்தவர்; எளிய வாழ்க்கை உடையவர். அவர் என்றும் செல்வத்தைப்பற்றியே சிந்தித்ததில்லை. பிறர் நலம் போற்றுவதிலேயே அவர் நாட்டம் சென்றது. அவர் சமரச சன்மார்க்க நிலை கண்டவர். அறத்தன்மை பூண்ட அந்தணர். நேர்மைக்கு உறைவிடமானவர். மரணத்துக்கும் அஞ்சாத மாவீரர். தமது மரணப்படுக்கையிலும் அவர் தமிழர் வாழ்வின் உயர்வைப்பற்றியே எண்ணியும் பேசியும் வந்தார். அவர் தம் இறுதி வேண்டுகோளும், தமிழகத்தின் எதிர்காலத்தைப்பற்றி அவர்கூறிய உறைகளும் இன்னும் நம் காதுகளில் எதிரொலிக்கின்றன. அவர், "என் உயிர் உடலைவிட்டு நீங்கிய பிறகு எடுத்துவந்து சாது அச்சக முன்றிலில் கிடத்துங்கள். எலலோரும் வந்து பார்க்கட்டும்,

அப்போது எனக்காக எவரும் அழலாகாது. பின்னர் இடுகாடு சென்று எரியூட்டி விடுங்கள். உங்கள் கடன் அன்றோடு ஒழிந்தது. அதன்பின் எனக்காக எத்தகைய சடங்குகளும் கூடா. மீறிச் செய்பவரை என் ஆவி சபிக்கும்," என்றார்.

தமிழகத்தின் எதிர்காலத்தைப்பற்றிக் கூறுகையில், அவர், "மரணம் என்னைத் தழுவ நிற்கின்றது என்பதை அறிந்து மனமகிழ்கிறேன். எல்லோரையும் போல மரணம் கண்டு எனக்கு அச்சம் எழவில்லை. எத்தனையோ பேருடன்—பலதுறை அன்பர்களுடன்—பழகினேன். ஆனால் இப்போது தமிழ்த்துறை அறிஞர்களே அடிக்கடி நினைவில் வந்து நிற்கிறார்கள். நான் நல்ல முறையில் வாழ்ந்துவிட்டேன். இன்று தமிழக ஞாயிற்றைக் கரிய மேகக்கூட்டங்கள் மூடிக் கொண்டிருக்கலாம். ஆனாலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இருட்படலம் விலகும். இளஞாயிறு எழுந்து கதிர் பரப்பும்: தமிழகத்துக்கு நல்ல எதிர்காலம் உண்டு, தாழ்வு வேண்டா," என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வுரைகளைக் கூர்ந்து நோக்கின தமிழ்த் தந்தையார் திரு. வி. க. வின் தமிழ் மாண்பை நன்கு அறியலாம். இளைஞர்கள் அவர் தம் நூல்களைக் கற்று, வாழ்வைப் பின்பற்றி வளமுற வேண்டும். அவர்தம் வாழ்க்கை யாவருக்குமே படிப்பினையாக இருக்கவேண்டும்.

பயிற்சி

பொருளறிக :

ஏந்தல்
தூய்மை
எளிமை
பொதுமை
இறுதி
திண்ணம்
அரும்பி
இவர்ந்து
பேரறிஞன்
பொலிவு
சான்று
விஞ்சியது
ஆதிக்கம்
ஒல்லும் வகை
காந்தியம்
விழுப்பணி
ஞாயிறு
முன்றில்
கதிர்

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

சுருங்கக் கூறின், உயிரும் உடலும்போல, வாய்க்கப் பெற்று, மாறி மாறி, எண்ணி எண்ணி, வெளியேற்ற, ஈடேறும்.

விடை கூறுக :

1. திரு. வி. க. அவர்களுக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

2. கலியாணசுந்தரனாரின் பிறப்பிடம் யாது? பெற்றோர்கள் யாவர்?

3. கலியாணசுந்தரனார் யாருக்கும் அஞ்சாத துணிவு உடையவர் என்பதை இளமையிலேயே எவ்வாறு புலப்படுத்தினார்?

4. திரு. வி. க. அவர்களின் எதிர்காலம்பற்றி அமீனா முனிசாமிப் பிள்ளை என்ன கூறினார்?

5. அவர்தம் ஆசிரியர்பால் நீங்காத அன்புடையவர் என்பதைக் குறிப்பிடும் நிகழ்ச்சியை விளக்குக.

6. அவர் யார் யாரிடம் கல்வி பயின்றார்?

7. திரு. வி. க. அவர்கள் ஆற்றிய உத்தியோகங்கள் யாவை?

8. தமிழ் முனிவர் என்னும் பெயர் அவருக்கு எவ்வாறு பொருந்தும்?

9. திரு. வி. க. அவர்கள் தொழிலாளர்களுக்குச் செய்த தொண்டுகள் யாவை?

10. அவர் இயற்றிய தமிழ்த் தொண்டுகள் யாவை?

11. தமிழ்ப் பெரியார் இளைஞர்களிடம் மிகவும் பற்றுடையவர் என்பதைப் புலப்படுத்துக.

12. திரு. வி. க. அவர்களின் தியாகத்தைக் குறிக்கும் சான்றுகள் யாவை?

13. தமிழகத்தின் எதிர்காலம்பற்றி அவர் என்ன கூறியுள்ளார்?

இலக்கணம்:

1. கலியாணசுந்தரனார் ஓடும் நண்பர்களைப் பார்த்து, "ஏன் இப்படிப் பயந்து ஓடுகிறீர்கள்? அமீனா தலையில் கொம்பு முளைத்தவரோ?" என்று கேட்டார்.—இதனை அயற்கூற்று வாக்கியமாக மாற்றிக் கூறுக.

2. ஆசிரியர்பால் இருந்த அன்பே விஞ்சியது. மறுநாள் நீதிமன்றத்துக்குச் சான்று கூறச் சென்றார்.—இத் தனி நிலை வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாகச் சேர்த்து எழுது.

2. வில் வீரன்

அவன் சொந்தமாக ஓர் ஆட்டு மந்தை வைத்திருந்தான். தினந்தோறும் அந்த மந்தையைப் புல்வெளிகளுக்கு ஓட்டிச்சென்று மேய்த்து வருவான்; மிகவும் துன்பப்பட்டு வேலை செய்வான்; சிக்கனமாகச் செலவு செய்வான்; ஆகையால் உணவுக்குக் கவலையே இல்லாமல் அமைதியாக வாழ்ந்து வந்தான்.

அவனுக்கு ஆடுமாடு மேய்க்க மட்டுந்தான் தெரியும் என்று நினைக்க வேண்டா. வில் வித்தையிலும் அவன் கெட்டிக்காரன். அவனை ஒரு சிறந்த வில்வீரன் என்று சொல்லலாம். அவன் பெயர் **வில்லியம் டெல்.** அவன் சொந்த நாடு ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள ஸ்விட்ஸர்லாந்து. வில்லியம் டெல்லுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் வயதில் சிறியவன். அழகான உடல்; சிரித்த முகம்; தூய்மையான மனம்; சுருள் சுருளாக வளர்ந்த தலைமயிர்—இவற்றுடன் அவன் எப்போதும் ஆடிப்பாடிக் கொண்டு இன்பமாகத் திரிவான்.

ஆட்டு மந்தையிலுள்ள ஆடுகளெல்லாம் அவனுடைய தோழர்கள். ஆட்டுக் குட்டிகளுடன் அவன் குதித்து ஓடி விளையாடுவான். ஒவ்வொரு ஆட்டுக் குட்டிக்கும் அவன் ஒவ்வொரு பெயர் வைத்து அழைத்து வந்தான்.

இங்ஙனம் தந்தையும் மகனும் இன்பமாகவும், அமைதியாகவும் காலங்கழித்து வந்தனர். அந்தச் சமயம் அவர்களுடைய நாட்டை அந்நியர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் மக்களை மிகவும் இழிநிலையில் நடத்தி வந்தனர். அங்கே செங்கோல் செத்துக்கிடந்தது!

கொடுங்கோல் குதித்து ஆடியது ! அப்போது, ஸ்விட்ஸர்லாந்தைஅந்நியர்களின் பிரதிநிதியாக இருந்து ஆண்டு வந்தவன் மிகவும் பொல்லாதவன்; இரக்கம் என்பதே இல்லாத அரக்கனைப் போன்றவன்: ஆணவம் மிகுந்தவன்: ஆடம்பரப் பிரியன்.

ஒருநாள், அவன் தன்னுடைய தொப்பியை உயரமான ஓரிடத்தில் மாட்டி வைத்தான். "இங்குள்ள அடிமைகளுக்கெல்லாம் ஓர் ஆணை. இங்கு வரும் ஒவ்வொருவரும் என்னுடைய தொப்பிக்குத் தலைகுனிந்து வணக்கம் செலுத்தவேண்டும். இல்லையேல் அவர்கள் உயிர் துறக்க நேரும்," என்று தன்னுடைய அதிகாரத் திமிரைக் காட்டினன், அந்தப் பிரதிநிதி !

* * *

அன்று காலை நேரம். வில்லியம் டெல்லும். அவனுடைய மகனும் குடிசையை விட்டுக்கிளம்பினர். போகும் போது வழக்கம் போல் வில்லைக் கையிலே எடுத்துக் கொண்டான் வில்லியம் டெல். தந்தையும் மகனும் ஆடுகளை ஓட்டிக் கொண்டு சென்றனர்.

செல்லும் வழியிலே ஓரிடத்தில் மக்கள் திரள் திரளாக நின்றனர். அவர்களுக்கு இடையிலே, ஓர் உயரமான இடத்தில் ஒரு தொப்பி தொங்கிக்கொண்டிருந்தது. அத்துடன் அங்கு நின்ற காவலர்கள். "ஏ அடிமைகளே, வணக்கம்

செலுத்துங்கள். தொப்பிக்கு வணக்கம் செலுத்துங்கள்." என்று அந்தக் கூட்டத்தாரைப் பார்த்துக் கத்தினார்கள்.

வில்லியம் டெல் இந்தக் காட்சியைக் கண்டான். தொப்பிக்கு அண்மையில் வந்து நின்றான். ஆனால், வணக்கம் செலுத்தவில்லை. இதைப் பார்த்த காவலர்கள், "வணங்கு. உம், தலை குனிந்து வணங்கு!" என்று உரக்கக் கத்தினர்.

டெல் அப் பேச்சைக் கேட்டு அணுவளவும் அச்சமின்றிக் குன்றுபோல் நிமிர்ந்து நின்றான். அவன் காவலரைப் பார்த்து, "முடியாது! வணக்கம் செலுத்த முடியாது! எல்லாம் வல்ல இறைவனைத்தான் நான் வணங்குவேன். என்னை இவ் வுலகில் படைத்துக் காப்பவன், இறைவனேயாவான். என்னுடைய உயிர் அந்நியர் கையிலே இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால், என் மனச்சான்று என்னிடத்தில் தான் இருக்கிறது." என்று அமைதியாகப் பதிலளித்தான்.

இதைச் செவியுற்றதும் அங்கிருந்த மக்கள் மலைத்தனர். காவலாளிகள் கடுங்கோபம் கொண்டனர். அந்தக் கொடுங்கோலன் கோபங்கொண்டான். நாகம்போல் சீறினான்.

"ஆ! அவனுக்கு அவ்வளவு ஆணவமா? என்னுடைய ஆணையை அவன் கேலி செய்கிறானா? அவனை விடாதீர்கள். பிடித்து வாருங்கள். அரசனையே எதிர்த்த அவனை வாளா விடக்கூடாது. உயிரைப்போக்கவேண்டியதுதான்." என்று கண்களில் கனற்பொறி பறக்கக் கூறினான்.

உடனே, வில்லியம் டெல்லைப் பிடிக்கக் காவலர்கள் வந்தனர். அவர்களைக் கண்டு டெல் ஓடவில்லை: ஒளியவில்லை; நின்ற இடத்திலேயே ஆடாமல் அசையாமல் நின்றான்! அதனால் அவனை எளிதில் கைது செய்துவிட்டனர்.

டெல், கொடுங்கோலன் முன்னால் கொண்டு வரப்பட்டான். அவனைப் பார்த்ததும் அந்தக் கொடுங்கோலன், "சிறிது பொறுங்கள். ஸ்விஸ் தேசத்தவர் குறி தவறாது அம்பு எய்பவர்கள் என்று எல்லோரும் கூறுகிறார்கள்: அதை இப்பொழுது பார்த்துவிடலாம்," என்று கூறிக் காவலர்களிடம் ஓர் ஏற்பாட்டைச் செய்யும்படி கூறினான்.

அந்த ஏற்பாட்டின்படி பணியாளர்கள் வில்லியம் டெல்லின் அருமை மகனை அழைத்துச் சென்றனர். அங்கிருந்த ஒரு கிச்சிலி மரத்தில் அவனைப் பிணித்தனர். பிறகு, அவன் தலையிலே ஓர் ஆப்பிள் பழத்தை வைத்தனர். அந்தச் சிறுவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இங்குமங்கும் பார்த்துக்கொண்டே நின்றான்.

சிறுவனுக்கு ஐம்பதடி தூரத்தில் டெல்லைக் கொண்டு வந்து நிறுத்தினர். நிறுத்திய பிறகு, "உம், இப்போது நீ என்ன செய்யவேண்டும். தெரியுமா? அதோ, அந்தச் சிறுவனின் தலைமேல் இருக்கிறதே ஆப்பிள் பழம், அதைப்பார்த்து அம்பெய்தல் வேண்டும். நீ விடும் அம்பு, அந்த ஆப்பிளை இருதுண்டாகப் பிளந்து விடவேண்டும். அப்படிச் செய்யின் உனக்கு விடுதலை கிடைக்கும். எங்கே, உன் வில்வித்தையைக் காட்டு, பார்க்கலாம்;" என்று கடுமையான குரலில் கூறினான் அந்தக் கொடுங்கோலன்.

டெல் திடுக்கிட்டான். ஆ! இஃது என்ன தண்டனை! நான் ஏதோ பெருங்குற்றம் செய்துவிட்டதாகக் கூறுகிறீர்கள். சரி, அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் குற்றம் செய்தவனுக்குத்தானே தண்டனை கொடுக்கவேண்டும்? எதற்காக ஒரு பாவமும் அறியாத இந்தச் சிறுவனைப் பழிவாங்க வேண்டும்? ஐயோ! என் மகனை விட்டுவிடுங்கள்," என்று அரற்றினான்.

அதற்குக் கொடுங்கோலன், "என்னால் உன் மகனுக்கு ஒருவிதத் தீங்கும் இல்லை. ஆனால் அவன் உயிர் உன் கையில்தான் இருக்கிறது. நன்றாகக் குறி பார்த்து அம்பு விடவேண்டும். தவறிப்போய் உன் மகன்மீது அம்புபட்டு, அதனால் ஒரு சொட்டு இரத்தம் வெளிவந்தால் நீயும் பிழைக்கமாட்டாய். உன் உயிரை வாங்கி விடுவோம். உன்னுடைய வில்லைக் கையில் எடு. அதில் அம்பைப் பூட்டிச் சரியாகக் குறிபார்த்து விடு. ஆப்பிள் பழந்தான் உன்னுடைய இலக்கு. அது தான் உனக்கு விடுதலை அளிக்கப்போகிறது. தயங்காதே!" என்று முழங்கினான்.

இவற்றைக் கேட்டதும் அங்கிருந்த மக்களில் சிலர் அடங்காத சினங்கொண்டனர்: சிலர் மனமுருகினர்; சிலர் அந்தக் கொடுங்கோலனை மனத்திற்குள் வைதனர். பெண்கள் வாய்விட்டுக் கதறி அழுதனர்.

டெல், சிறிதுநேரம் ஒன்றும் புரியாமல் அப்படியே சிலைபோல நின்றான். பிறகு வில்லைக் கையிலே எடுத்து அதில் நாணேற்றினான். அப்படியே வாயை மூடிக் கொண்டு அசையாமல் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தான்.

இக காட்சியைக் கண்ட மக்கள் கண்ணீர் விட்ட

னர். அவர்கள் ஏற்கனவே அந்நியர்களால் அளவுக்கு மிஞ்சிய துன்பங்களை அடைந்திருக்கின்றனர். அவை யெல்லாம் போதாவோ? இந்த இரக்கமான காட்சியையுமா பார்க்கவேண்டும்?

அசையாமல் நிற்கும் தந்தையை மகன் பார்த்தான்.

"தந்தையே! ஏன் தயங்குகிறீர்? நேராக அம்பை விடுங்கள். உங்கள் குறி என்றுமே தவருது. இன்றும் அது தவறப் போவதில்லை." என்று உரக்கக் கூறினன்.

" மகனே, உன்னைக் கடவுள் காப்பாற்றுவார். உன் வீரத்தைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்," என்று கூறிக்கொண்டே வில்லியம் டெல் ஆப்பிள் பழத்தை நோக்கிக் குறி வைத்தான்.

மறுகணம் அம்பு விர்ரெனப் பறந்து சென்றது. நேராகச் சென்று ஆப்பிள் பழத்தில் பாய்ந்தது; உடனே ஆப்பிள் பழம் இரண்டாகப் பிளந்து மரத்தடியில் விழுந்தது !

"நன்று! நன்று! அருமை மைந்தன் தப்பிவிட்டான் !" என்று அங்குக்கூடி நின்றவர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்.

வில்லியம் டெல்லின் வில்லின் திறமையைக் கண்ட கொடுங்கோலனுக்கு என்ன சொல்வது, என்ன

செய்வது என்றே தெரியவில்லை. அவன் நாணத்தால் தலை கவிழ்ந்தான். எனினும் அவன் டெல்லை நோக்கி,

"வில் வீரனே! நீ தைரியமாக நான் இட்ட கட்டளையைநிறைவேற்றிவிட்டாய். ஆகையால், நானும் என்னுடைய வாக்கை நிறைவேற்றுகிறேன். நீயும் உன் மகனும் ஆடுகளுடன் வீடு செல்லலாம். உங்களுக்கு விடுதலை!" என்றான்.

வில்லியம் டெல், "அப்படியா! சரி, எனினும் உங்களுக்கு நான் இப்போது நன்றி செலுத்தப் போவதில்லை. கடவுள் ஒருவருக்குத்தான் நான் நன்றி செலுத்துவேன். அவருக்குத் தான் நான் மனமார நன்றி செலுத்தக் கடமைப் பட்டவன். ஆனால் ஒன்று மட்டும் நீர் தெரிந்துகொள்ள வேண்டும். நான் எய்த அம்பு, குறி தவறி என் மகன் மீது பட்டு, அவன் இறந்திருப்பின் அதே நேரத்தில் என் அடுத்த அம்பு உமது உயிரைப் போக்கியிருக்கும். இதோ பாருங்கள். இந்த இரண்டாவது அம்பை நான் சித்தமாகவே வைத்திருந்தேன். நல்ல வேளை, கடவுள் உம்மைக் காப்பாற்றினார். அவரை நீர் மனமாரப் போற்ற வேண்டும்; வாயார வாழ்த்தவேண்டும்."

இறைவன் நேர்மையானவர்களுக்கு உதவி புரிகிறார்: பாவிகளுக்கு மன்னிப்பு அளிக்கிறார்; வலியவர்களிடமிருந்து எளியவர்களைக் காப்பாற்றுகிறார்; செருக்கு

உடையவர்களைத் தலை குனிய வைக்கிறார். அவரையே நான் போற்றுவேன். அவருக்கே நான் மரியாதை செலுத்துவேன்."—இங்ஙனம் உரக்கக் கூறிக் கொண்டே வில்லியம் டெல், தன்னுடைய அருமை மகனுடன் ஆட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

அவர்கள் செல்லும் திசையையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றான், அந்தக் கொடுங்கோலன். டெல் சொன்ன ஒவ்வொரு சொல்லும் அவன் செவிகளில் வினாடிக்கு வினாடி விடாமல் ஒலித்துக்கொண்டே இருந்தது.

பயிற்சி

பொருளறிக :

துறக்க	*மலைத்தல்*	*கனல்*
திரள்	*ஆணை*	*பிணைத்தனர்*
மனச்சான்று	*வாளா*	*எய்தல்*

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

திரள் திரளாக, எல்லாம் வல்ல, மலைத்தனர், நாகம் போல் சீறி, ஒரு பாவமும் அறியாத.

விடை கூறுக :

1. வில்லியம் டெல்லின் அருங்குணங்கள் யாவை?
2. ஸ்விட்ஸர்லாந்துக் கொடுங்கோலன் புரிந்துவந்த அநீதி யாது?

3. வில்லியம் டெல் தொப்பிக்குத் தலை வணங்க மறுத்ததேன்? அவன் கூறிய வீர வுரைகள் யாவை?

4. கொடுங்கோலன் வில்லியம் டெல்லுக்கு இட்ட கட்டளை யாது?

5. வில்லியம் டெல்லின் வில்லாற்றலைப் புலப் படுத்துக.

6. இப் பாடத்தால் நீ அறியும் நீதி யாது?

இலக்கணம் :

1. (i) அவன் தன்னுடைய தொப்பியை உயரமான இடத்தில் மாட்டி வைத்தான்.

(ii) ஒவ்வொரு ஆட்டுக்குட்டிக்கும் ஒவ்வொரு பெயர் வைத்து அழைத்து வந்தான்.

— இவ் வாக்கியங்களில் செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றி எழுதுக.

2. ஆ! இஃது என்ன தண்டனை!—இஃது என்ன வாக்கியம்? இதனைப் பொருள் மாறாதபடி செய்தி வாக்கிய மாக மாற்றிக் கூறுக.

3. அடிமை நீக்கிய அண்ணல்

அமெரிக்காவில் **கெண்டகி** மாகாணத்தில் **நியூ ஆர்லியான்ஸ்** என்னும் நகரமொன்று உள்ளது. அதற்கண்மையில் **ராக்ஸ்பிரிங்** என்னும் ஒரு சிற்றூரில் ஒருநாள் காற்றாலும மழையாலும் சிதைந்து கிடந்த குடிசையினின்றும் சிறுவனொருவன் விறகுக் கட்டைத் தலையிற் சுமந்து வெளியே சென்றான். ஒட்டிய கன்னங்களும், உருக்குலைந்த மேனியும், கந்தலாடையும் உடைய அச் சிறுவன் அந் நகரின் சந்தையில் விறகுச் சுமையை விற்றுவிட்டு வீடு திரும்பினான்.

வரும் வழியில் ஒரு வணிகன் சில நீக்ரோ மக்களை ஏலத்தில் விற்றுக் கொண்டிருந்தான். நகர மக்கள் திரளாகக்கூடி ஏலத்தில் எடுத்த அடிமை நீக்ரோக்களை ஆடு மாடுகளைப்போல் கடத்திச் சென்றனர். அவர்கள் அவ்வடிமைகளைத் தம் விருப்பம்போல் கடுமையாக நடத்தி வந்தனர். அந் நிலையை உணர்ந்த சிறுவன் கடிதில் தன் இல்லம் அடைந்து தந்தையிடம் நடந்ததைக் கூறி, "மனிதனை மனிதன் மாடுபோல் நடத்துவது இந் நாட்டவர்க்குத் தகுந்த செயலோ?" என்றான். அதற்கு அவர், "இதிலொன்றும் வியப்பில்லை. இது பரம்பரை பரம்பரையாக நடந்து வரும் நிகழ்ச்சிதானே?" என்றார். அது கேட்ட மகன் ஆத்திரத்துடன், "அப்பா, என்றேனும் ஒருநாள் நான் ஆட்சிப் பீடத்தின் அதிபதியாக வரும்போது இந்த அடிமை வாணிபத்தை அழிப்பது தான் என் முதல் வேலையாகும்," என்று கூறினான். வறுமையால் வாடும் தந்தை தன் மைந்தனின் வீரவுரைகள் வெற்றுரைகளேயெனக் கேலிச் சிரிப்புச் சிரித்தார்.

தந்தையின் ஏளனமும், ஏழ்மையும், கல்வியின்மையும் சூழ்ந்த அச் சிறுவன் அன்று கூறிய தன் சூளுரைப் படியே பிற்காலத்தில் அமெரிக்கக் குடியரசுத் தலைவ ஞகி அடிமை வாணிபத்தை, சட்டத்தின் அடிப்படை



யில் அழித்தொழித்தான். மனிதனை மனிதன மதிக்கும் மனப்பான்மை உண்டாக்கிய அம் மாவீரன் உலகம் போற்றும் உத்தமஞக விளங்கினுன்.

இத்துணைப் பெருமைகளுக்கு உரியவராக இருந்தவரே **அபிரகாம் லிங்கன்** என்பவர். அவர் கி. பி. 1809-ஆம் ஆண்டில் **தாமஸ் லிங்கன்** என்னும் ஓர் ஆங்கிலேயருககும் **நான்சி ஹாங்க்ஸி** என்னும் ஓர் அம்மையாருக்கும் நன் மகனாகப் பிறந்தார். அவரை இளமையில் பள்ளியிற் படிக்கவைக்கத் தக்க செல்வ நிலை இல்லாமையால் அவர் தாயாரே எழுத்துக்களை மட்டும் நன்ருக எழுதக் கற்றுக்கொடுத்தார். அவரது பத்தாம் அகவையில் அவ் வம்மையார் காலமானார். தாயின் பிணத்தைத் தக்க சடங்குகளுடன் புதைக்கவும் செல்வமின்றித் தந்தை யொருபுறம் பிடிக்கத் தான் ஒரு புறம் தூக்கிச் சென்று இடுகாட்டில் புதைத்தனர்.

பள்ளியிற் படிக்கும் பேறு இல்லையே என்று வருந்திய அபிரகாம், அக்கம் பக்கங்களிற் படித்தவர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள்பால் சென்று புத்தகங்களை இரவலாகப் பெற்றுத் தாமே பயின்ருர். அவர் அவற்றைப் பன்னிப்பன்னிப் படித்து அவற்றில் உள்ள நயங்களை உணர்வார். தாம் அறிந்த கதைகளைத் தம்மை யொத்த பிற சிறுவர்களுக்கும் கூறி மகிழ்விப்பார். ஒரு சமயம் அபிரகாம் ஒரு பண்ணை முதலாளியிடம் வாங்கிய புத்தகம் நீரில் நனைந்து விட்டது. அவர் புத்தக உரிமையாளரிடம் என்ன சொல்வதென்று தோன்ருமல் திகைத்தார். பண்ணை முதலாளி அவரைப் பார்த்து, "தம்பி, நீ என் வயலில் மூன்று நாட்கள் வேலை செய்துவிடின் அப் புத்தகத்தை நீயே சொந்தமாக்கிக் கொள்ளலாம்," என்ருர். அபிரகாம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர் அங்ஙனமே வயல்

வேலையைச் செய்து முடித்துப் புத்தகத்தைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டார். புத்தகத்தில் அவருக் கிருந்த ஆர்வத்தினை என்னென்று புகழ்வது !

லிங்கன் சிறுவயதில் வறுமையாற்பட்ட துன்பத் துக்கு எல்லையில்லை. வயிற்றுக் கொடுமையைப்போக்க அவர் சில நாட்கள் விறகுக் கட்டைச் சுமந்து விற்று வந் தார் ; சில் நாட்கள் படகோட்டும் தொழிலில் ஈடு பட்டார் ; பின்னர், கடிதங்கள் எடுத்துச் செல்லும் தபாற்சேவகனுக இருந்தார். அவரது அறிவும் திறமை யும் அறிந்த ஒரு வணிகன் தனது பலசரக்குக் கடை யினை நடத்துமாறு அமர்த்தினுன். ஆனால் அவர் கடையினைச் சரியாகக் கவனிக்காததால் வாணிபம் குறைந்தது : கடையும் மூடப்பட்டது. பின்னர் நியூ ஸலாம் என்னுமிடத்தில் இருந்த அபிரகாமின் நண்ப ஞெருவன் பல சரக்குக் கடையொன்று வைத்து அதை நடத்தி வரும்படி கூறினுன். அங்கு அபிரகாமுக்கு மக்களிடம் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது. கடைக்கு வருவோரிடம் எப்போதும் அபிரகாம் ஏதாவதொரு பொருள்பற்றி விவாதித்துக்கொண்டே இருப்பார். மக்க ளிடம் அவருக்கு நன் மதிப்பும், பழக்கமும் ஏற் பட்டனவே யன்றி வியாபாரம் வழக்கம்போலவே நசித்து விட்டது.

அபிரகாம் தம்பால் மக்கள் கொண்டிருந்த நன் மதிப்பைப் பயன்படுத்திக்கொண்டு அரசியலில ஈடுபட லானுர். அக காலத்தே அவர் பலருடன் பழகிய அனுப வத்தால் அறிவும் ஆராய்ச்சித் திறனும் மிக்கவராக இருந்தார். 1832-ஆம் ஆண்டில் இல்லினுய்ஸ் என்னும் மாகாணத்தின் சட்டசபை உறுப்பினர் தேர்

தலுக்கு நின்றார். அப்போது அவர் மிக்க இளமை யுடையவராக இருந்தனராதலின் அவருக்கு அனுபவம் போதாதென மக்கள் எண்ணினர். அதனால் தேர்தலில் அவர் வெற்றிபெற இயலவில்லை.

தேர்தலில் தோல்வியுற்ற லிங்கன் பின்னர் வழக் கறிஞரான ஒரு நண்பரின் தூண்டுதலால் சட்டக்கல்வி பயின்று தாமும் வழக்கறிஞரானார். வழக்கறிஞர் தொழி லில் தம் நுண்ணறிவால் லிங்கன் ஒப்புயர்வற்று விளங்கி னார். சட்டங்களைப் பற்றிய நுட்பமான செய்திகளை அவர் நன்கு அறிந்திருந்தமையினாலும், சொல்லாற்றல் படைத்தவராயிருந்தமையினாலும் விரைவில் அவர் புகழ் நாடெங்கும் பரவிற்று. அவர் தம்மிடம் வரும் வழக்கு களை உண்மையானவைகளா என்றுணர்ந்த பின்னரே அவற்றிற்காக நீதிமன்றங்களில் வாதாட இசைவார். பொய்வழக்குகளால் எவ்வளவு பொருள் கிடைப்பதா யினும் அவற்றை லிங்கன் துரும்பென மதித்தார்.

வழக்கறிஞர் லிங்கன், 1830-ஆம் ஆண்டில் இல் லினொய்ஸ் மாகாணத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலுக் கும் உறுப்பினராக நின்றார். அவர்தம் நாட்டுப்பற்றி னாலும், நேர்மையினாலும், சொல்லாற்றலினாலும் இம் முறை தவறாது வெற்றி பெற்றார். 1840-இல் நடந்த தேர்தலிலும் மீண்டும் வெற்றி பெற்றார். தாம் நெடு நாளாகக் கொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்ற விரும்பிய லிங்கன் சட்டசபைக் கூட்டங்களில் நீக்ரோக் களின் அடிமைத்தளையை நீக்கும் திட்டங்களைச் சமயங் கிடைத்த போதெல்லாம் வற்புறுத்திப் பேசினார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட பகுதி மாகா ணங்களில் வாழும் மக்கள் அடிமை வாணிபத்தை

ஒழிக்கவேண்டு மென்னும் கொள்கையை மனமார ஆதரித்தனர். ஆனால் தென் பகுதி மாகாணங்களில் வாழ்ந்தோர் அடிமை வாணிபத்தையே விரும்பினர். அதனை நாகரிகமாகவும் கருதினர். "அடிமைகள் எமக்கு உழைக்கப் பிறந்தவர்கள்; அவர்களை எம் விருப்பம் போல் விற்கவும் வாங்கவும் எமக்கு உரிமையுண்டு," என்று அவர்கள் கூறினர். தென்னாட்டார் மனப்பான்மையை அறிந்த லிங்கன் மனம் வருந்தினார். அடிமை வாணிபத்தை ஒழிப்பதற்காக அவர் ஐக்கிய அரசியல் மன்றத்திற் கொண்டுவந்த தீர்மானமும் தோற்று விட்டது. எனினும் அவர் வாளா இருந்து விடாமல் நாடெங்கும் சுற்றுப்பயணங்கள் செய்து அடிமை வாணிபத்தை ஒழிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பிரசாரங்கள் புரிந்து வந்தார்.

அவருடைய பேச்சாற்றலும் உண்மைக் கருத்துக்களும் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. வட நாட்டாரின் முழு ஆதரவும் லிங்கனுக்குக் கிடைத்தது. 1857-ல் நடைபெற்ற குடியரசுக் கட்சி மாகாட்டில் அபிரகாம் லிங்கனையே அடுத்துவரும் தேர்தலில் குடியரசுத் தலைவராக ஆக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அத்தீர்மானத்திற் கிணங்க 1861-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் அபிரகாம் லிங்கனே பெருவாரியான வாக்குறுதிகள் பெற்று வெற்றியடைந்தார். லிங்கன் குடியரசுத் தலைவரானதைத் தென்னாட்டார் விரும்பவில்லை. அடிமை வாணிபத்தைப்பற்றி அவர்களுக்குள் ஏற்பட்ட குழப்பத்தை லிங்கன் அடக்கினார். ஐக்கிய நாடுகளினின்று பிரிந்து தனியாட்சி அமைக்க முயன்ற தென்னாட்டார்க்குப் பல

சமாதானங்கள் கூறியும் பயனில்லை. இறுதியில் வட நாட்டார்க்கும் தென்னாட்டார்க்கும் பெரும்போர் மூண்டது. அபிரகாம் எதற்கும் அஞ்சாமல் 1-1-1862-ஆம் நாளில் வடநாடு, தென்னாடு என்னும் இருபகுதிகளிலும் வாழ்ந்து வந்த அடிமைகள் யாவருக்கும் விடுதலையளிக்கும் சட்டத்தை நிறைவேற்றிவிட்டார். அடிமைகளை விடுதலை செய்யும் முதலாளிகளுக்கு ஐக்கிய அரசாங்கத்தினரால் சிறிது நஷ்ட ஈடும் வழங்கப் பெறும் என்னும் அறிக்கையை வெளியிட்டார். இதனால் லிங்கன்,

'எண்ணிய எண்ணியாங்(கு) எய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்னும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். விடுதலையறிக்கையை உணர்ந்த தென்னாட்டு அடிமைகள் தத்தம் முதலாளிகளிடமிருந்து தப்பியோடி வட நாட்டினருடன் சேர்ந்து கொண்டனர். வரவரத் தென்னாட்டாரின் வலிமை குன்றியது.

மீண்டும் 1865-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் தேர்தல் நிகழ்ந்தது. அத் தேர்தலிலும் நம் லிங்கனே பெருவாரியான வாக்குகள் பெற்று வாகை சூடினார். அதற்குள் தென்னாட்டார் தமக்கு அடுத்தடுத்து உண்டான தோல்விகளால் மனமுடைந்து மேலும் போரைத் தொடர்ந்து நடத்துவது வீணேயென உணர்ந்து வட நாட்டாரிடம் சரணடைந்தனர். லிங்கன் மட்டிலா மகிழ்ச்சி யடைந்தார். அவர் கண்ட கனவு பலித்தது. அடிமை வாணிபம் அடியோடு தொலைந்தது.

அபிரகாம் லிங்கனின் வெற்றியைக் கொண்டாட 1865-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாளிரவு வாஷிங்டன் நகரில் போர்டு (Ford) கொட்டகையில் ‘ நம் பங்காளிகள் ’ என்றொரு நாடகம் நடத்த ஏற்பாடு செய்யப்பெற்றது. அபிரகாம் லிங்கன் தம் மனைவி மக்களுடனும் நண்பர்களுடனும் நாடகத்தைப் பார்த்துக் களித்துக்கொண்டிருந்தார். அவ் வமயம் திடுமென்று அவர் தலைமீது பின்புறமாக இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. அடிமை நீக்கிய அண்ணல் அப்படியே தரையிற் சாய்ந்து உயிர் விட்டார். அவர் கொள்கையில் வேறுபட்ட ஒரு கல்லாக் களிமகன் எங்கிருந்தோ வந்து அண்ணலின் உயிரைப் பிரித்துவிட்டான். ஆனால் அவர் புகழ் உலகம் முழுவதும் பரவி நிலைபெற்றது.

உலகைத் திருத்திய உத்தமர் அபிரகாம் லிங்கனின் செயற்கரும் செயல் உலக மக்களால் என்றும் மறக்கப் படுவதன்று. அவர் தம் அஞ்சா நெஞ்சமும், விடா முயற்சியும், ஏழைகட் கிரங்கும் இயல்பும், ஆட்சி முறையும் எல்லோராலும் பாராட்டப்படுவனவாம்.

பயிற்சி

பொருளறிக :

கடத்தி	வெற்றுரை	அகவை
அதிபதி	குளுரை	திண்ணியர்

சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

உருக்குலைந்த, பன்னிப்பன்னி, துரும்பென, ஈடுபட

விடை தருக :

1. அடிமை வாணிபத்தை ஒழிக்கவேண்டுமென்னும் எண்ணம் அபிரகாம் மனத்தில் எப்போது ஊன்றிற்று?

2. லிங்கன் இளமையில் எவ்வாறு கல்வி கற்றார்?

3. லிங்கன் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டுச் செய்த வேலைகள் யாவை?

4. தென்னாட்டார் லிங்கனை வெறுத்த காரணம் என்ன?

5. அபிரகாம் லிங்கன் குடியரசுத் தலைவரானவுடன் செய்த முதல் வேலை யாது?

6. வடநாட்டாருக்கும் தென்னாட்டாருக்கும் ஏற்பட்ட போர் எவ்வாறு அடங்கிற்று?

7. லிங்கன் எவ்வாறு இறந்தார்?

8. அபிரகாம் லிங்கனின் அருங்குணங்கள் யாவை?

இலக்கணம்:

1. லிங்கன் சிறு வயதில் வறுமையாற்பட்ட துன்பங்களுக்கு எல்லை இல்லை.—இதனை உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக.

2. அடிமை வாணிபத்தை அழிப்பதுதான் என் முதல் வேலை யாகும்.—என் என்னும் சொல் என்னால் என்று வருமாறு வாக்கியத்தை மாற்றிக் கூறுக.

கட்டுரைப் பயிற்சி ;

இப்போது நம் நாட்டுக் குடியரசுத் தலைவராக இருப்பவர் யார்? அவரைப்பற்றி இரண்டு பக்கங்களில் ஒரு கட்டுரை எழுதுக.

4. வானொலி நிலையம்



விஞ்ஞான அற்புதங்கள் மலிந்த இக்காலத்தே வானொலியை அறியாதவர்கள் யார் இருக்கிருர்கள்? வானொலி மூலம் கதைகளும், நாடகங்களும், பாடல் களும் கேட்க விரும்பாத சிறுவர் சிறுமியர் உளரோ? வானொலி கேள்விச் செல்வத்தை நமக்கு அளிக்கின் றது. 'கற்றலில் கேட்டல் நலம்' அல்லவா?

'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை'

என்பது திருவள்ளுவரின் திருவாக்கன்ருே?

வானொலிப் பெட்டிக்கும் நம்மைப் போலவே காது. மூளை, வாய் என்னும் உறுப்புகள் உண்டெனில் உங்களுக்கு வியப்பாக இருக்கிறதல்லவா? ஒருவர் ஓரிடத்தில் நின்று பாடுவதையும், பேசுவதையும் **ஏரியல்** என்னும் செவியாற் கேட்டு, **வால்வு** என்னும் மூளைக்குக் கொண்டு வந்து, **ஒலிபெருக்கி** என்னும்

வாயின்மூலம் வானொலி நம்மைக் கேட்கச் செய்கின்றது. மக்களின் பொது அறிவைப் பெருக்குதற்கு வானொலியைவிடச் சிறந்த சாதனம் வேறொன்றும் இல்லை எனலாம்.

வேலன் மூன்றும் படிவத்திற் படிக்கும் மாணவன். அவன் வானொலி நிலையத்தின் அமைப்பையும், அது வேலை செய்யும் விதத்தையும் காணவேண்டுமென்று விரும்பினான். சென்னை வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகளை நடத்தும் அலுவலாளருக்குத் தான் நிலையத்தைப் பார்க்க விரும்புவதாக ஒரு கடிதம் எழுதினான். வேலனை வருமாறு வானொலி நிலையத்துச் சிறுவர் நிகழ்ச்சித் தலைவர் வானொலி மூலமாகவே அறிவித்துவிட்டார். அவன் மிகவும் இன்பமடைந்து எழும்பூரில் உள்ள வானொலி நிலையத்தை அடைந்தான்.

சிறுவர் நிகழ்ச்சி அலுவலரை அவன் சந்தித்தான். அவரைப் பார்த்து முதற்கேள்வியாக, "ஏன் ஐயா, வெகு தொலைவில் இருக்கும் இடங்களுக்கெல்லாம் சென்னையிலிருந்து பாடினால் நன்றாகக் கேட்கிறதே: ஆனால் என் வீட்டிலிருந்து என் தங்கை பாடுவது ஏன் வானொலியிற் கேட்கக் கூடாது?"

சிறுவர் நிகழ்ச்சி அலுவலர்: தம்பி, வானொலியை எங்கு வேண்டுமாயினும் வைத்துக் கேட்கலாம். ஆனால் பாடுவதும் பேசுவதும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்துதான் நடைபெறுதல் வேண்டும். அதனால் ஏற்படும் ஒலி மின் ஒலிகளின் மூலம் காற்றலைகளில் கலக்கப்படும் காற்றில் கலந்து செல்லும் அம் மின் அலைகள் **ஏரியலால்** இழுக்கப்பட்டு, 'வால்வி'ன் மூலம் மீண்டும் ஒலி அலைகளாக மாற்றப்படுகின்றன.

அப்போதுதான் நாம் அதை வானொலி மூலம் கேட்க முடியும். நீ அவற்றைப் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் வானொலி நிலையத் தின் அமைப்பு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வா காட்டுகிறேன். (என்று வேலனை அழைத்துச் சென்றார்.)

அலுவலர் : முதலில் இருப்பதுதான் வரவேற்பு அறை. இங்குத்தான் வருகிறவர்களை அழைத்து உட் கார வைத்து, அவர்கள் கேட்கும் வினாக்கட்குப் பதில் சொல்லி அனுப்புவார்கள். அடுத்துள்ள சில அறைகள் வானொலி நிலையத்தில் ஒலிபெருக்குவது பற்றிப் பயிற்சி நடத்தும் தனி இடங்கள். அங்கே பயிற்சி கொடுத்துப் பாடுவது, பேசுவது முதலியவைகளை மற்றொரு அறையி லிருந்து கேட்பார்கள். அடுத்தபடியாக, நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப நாலைந்து அறைகள் (ஸ்டுடியோக்கள்) உள் ளன. (அலுவலர் ஒவ்வொரு இடத்தையும் காட்டிய படியே பேசிக்கொண்டு போனார்.)

வேலன் : (இடைமறித்து) ஒரே சமயத்தில் ஒரு நிகழ்ச்சி தானே ஒலிபரப்பப்படும். அதற்கு நான்கைந்து அறைகள் ஏன்?

அலுவலர் : நீ வானொலியில் தொடர்ந்து நிகழ்ச்சி களைக் கேட்கிறாய் அல்லவா? ஓர் அறையில் ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போதே, மற்றொரு அறையில் அடுத்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும். ஆகவே இடையில் காலதாமதம் ஏற்படாமல் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறும்.

அலுவலரும் வேலனும் ஓர் ஒலிபரப்பும் அறை யைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். வேலன்

அறையின் சுவரிலே பதிக்கப்பட்டிருந்த கண்ணுடியின் வழியாக உள்ளே பார்த்தான். உள்ளே ஓர் இசைக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. உள்ளே பாடியது வேலன் செவிகளில் விழவேயில்லை. ஆனால் வாய சைப்பு மட்டும் நன்ருகத் தெரிந்தது.

வேலன் : ஏன் ஐயா, உள்ளே பாடுவது சிறிது கூட என் செவிகளில் விழவில்லையே.

அலுவலர்: வேலா, 'ஸ்டுடியோ' என்று அழைக் கப்படும் இவ்வறைகள், சாதாரணமாக நம் வீட்டு அறைகள் போன்றவை அல்ல. இவற்றின் சுவர்கள் எதிரொலி ஏற்படாதவண்ணமும், வெளியில் ஏற்படும் ஒலிகள் உட்புகாவண்ணமும், நடக்கும் நிகழ்ச்சிகள் வெளியே கேட்காதவாறும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வேலன் : ஐயா, இப்படிக் கெட்டியாக மூடப்பட்ட அறைகளில் நிகழ்ச்சிகளை நடத்துபவர் காற்றில்லாமல் மிகவும் துன்பப்படுவார்களே! அதற்கு என்ன செய்வது ?

அலுவலர் : இந்த அறைகளுள் ஒன்று மின்சார சாதனங்களைக்கொண்டு குளிர்ச்சியாக (Air-Conditioned) ஆக்கப்பட்டிருக்கிறது. நல்லகாற்றைத் தூசு இல்லா மல் சரிப்படுத்தி உடல் நலத்துக்குப் போதுமான அளவு குளிர்வித்து உள்ளே புகவிடுவர். இது போன்ற அறை ஒன்றில்தான் உங்களுக்கான சிறுவர் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

வேலன் : ஐயா, எனக்கு ஐயம். இந்த அறைகள் மிகச் சிறியனவாக இருக்கின்றன. திருவிழா போன்ற ஏதாவது நல்ல நாட்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பலப்பல உறுப்பினர் கலந்து கொள்ளுகிருர்களே,

அவ்வளவு பேர்களும் இந்தச் சிறிய அறைக்குள் எப்படி அடைபட முடியும்?

அலுவலர்: சரியான கேள்வி கேட்டாய், வேலா. நிகழ்ச்சிகள் இந்த அறைகளில்தான் நடக்க வேண்டு மென்பதில்லை. ஒரு பெரிய கொண்டாட்டம்; காந்தி பிறந்த நாள், சுதந்திரத் திருநாள் போன்ற முக்கிய நாட்களில் சிறுவர் சிறுமியர் பலர் கூடுவதால் அந் நிகழ்ச்சிகள் திறந்த வெளியிலேயே நடைபெறுகின்றன.

வேலன்: ஐயா, அந்த இடங்களில் நடக்கும் பாட் டும் பேச்சும் எப்படி வெளியே கேட்கமுடியும்? அதற்கு ஏதேனும் சாதனம் உண்டோ?

அலுவலர்: தம்பி, பாடுவதையும் பேசுவதை யும் கிரகித்து வெளிவிடுவதற்கான சாதனம் **மைக்** எனப்படும் ஒலிபெருக்கியாகும். அதனால்தான் இந்த அறைக்குள் நடக்கும் நிகழ்சசிகள் ஒலி பரப்பப்படுகின் றன.

வேலன்: ஐயா, இவ்வொலி பெருக்கியால் எல்லாத் திசைகளிலும் ஒலி பரவுமோ?

அலுவலர்: இங்கு மூன்று வகையான ஒலி பெருக்கிகள் பயன்படுகின்றன. அவை, ஒரு திசையி லிருந்து மட்டும் ஒலியை இழுக்கக் கூடியது, இரண்டு திசைகளிலிருந்தும் ஒலியை இழுக்கக் கூடியது, எல்லாத் திசைகளிலிருந்தும் ஒலியை இழுக்கக்கூடியது என மூன்று வகைப்படும். சிறுவர்கள் பலர் கூடியிருக்கும் போது எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒலியை இழுக்கக் கூடிய ஒலிபெருக்கியே உபயோகப்படும்.

வேலன்: ஏன் ஐயா, நாடகங்களிலும் சிறுவர் நிகழ்ச்சிகளிலும் இடி, புயல், குதிரை ஓடும் ஓசை, கிளி

கத்தும் ஒலி முதலியவற்றைக் கேட்க முடிகிறதே, அஃது எப்படி? கிளியையும் குதிரையையும் ஒலிபரப்பும் நிலேயத்துக்கு எப்படிக் கொண்டுவர முடியும்?

அலுவலர்: இப்போது கேட்டாயே, அதுதான் நல்ல கேள்வி. சொல்லுகிறேன் கேள். நீ இசைத் தட்டுகள் பார்த்திருக்கிருய் அல்லவா? அவற்றைப் போல் இங்கேயும் ஒலிப்பதிவு செய்து கொள்ளும் சாதனங்கள்



இருக்கின்றன. சில சமயங்களில் பெரிய அறிஞர்களும், அமைச்சர் போன்றவர்களும் பேசவேண்டி வரும். சில இன்றியமையாத நிகழ்ச்சிகளேயும் அறிவுரைகளேயும் கூற அவர்களேக் கேட்டுக் கொள்ளுகிரும். பல அலுவல்களில் சிக்கியிருக்கும் அவர்களே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வந்து பேசும்படி அழைத்தால் அவர்களால் இயலாமல் போகலாம். ஆகையால், மெழுகிஞல் ஆக்கப்பட்ட ஒருவகைத் தட்டு

களில் அவர்கள் பேசும்போது, அப் பேச்சைப் பதிவு செய்து கொண்டு, குறிப்பிட்ட நேரத்தில் ஒலிபரப்புகிறோம். அதைப் போலவே, நாடக நேரத்தில் இடியை யும் புயலையும் ஏற்படுத்த முடியாது. ஆகையால், அவை இயற்கையாக நிகழும் சமயங்களில் அவற்றை ஒலிப் பதிவு செய்து கொண்டு, பிறகு வேண்டும்போது மின் சார இசைத்தட்டு இயக்கியில் வைத்து ஒலி பரப்பு வார்கள்.

வேலன் : ஐயா, வானொலியில் **மத்திய அலை, சிற்றலை** என்று வழங்குகின்றார்களே, தயவுசெய்து அவற்றைப்பற்றி விளக்கிக் கூறுங்கள்.

அலுவலர் : வானொலியில் நடத்தப் பெறும் நிகழ்ச் சிகள் எல்லாமே எல்லோருக்கும் பிடிக்கும் என்ப தில்லை. எவருக்கு எது தேவையோ அதைக் கேட்டுக் கொள்ளும் பொருட்டு இரண்டு வகையான நிகழ்ச்சி களை ஒரே நேரத்தில் நடத்துகிறோம். அதற்காக **மத்திய அலை** என்றும், **சிற்றலை** என்றும் இரண்டு இடங் களில் காற்றில் ஒலி கலக்கப்படுகிறது. நம் நாட்டில் பல மொழிகளிலும் பேசுபவர்கள் இருக்கிறார்கள். அவர் களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை அவரவர் மொழி யில் நடத்துகிறோம். செய்திகளும் பல மொழிகளில் ஒலி பரப்பப்படுகின்றன.

வேலன் : அது சரி, ஐயா, மின்சாரத்தினால் வானொலி எவ்வாறு இயங்குகின்றது? நம் மாகாணத் தில் சென்னையைத் தவிர வேறிடங்களிலும் வானொலி நிலையங்கள் உண்டோ?

அலுவலர் : தம்பி, பேசுவதும், பாடுவதும் மின் சார ஆற்றலினால் கம்பிகள் மூலம் கொண்டு செல்லப்

பட்டு, ஒலியற்ற ஓர் இடத்திலே காற்றில் கலக்கப்படு கின்றன. நமது மாகாணத்தில் சென்னையைத் தவிர திருச்சி, திருவிதாங்கூர், கோழிக்கோடு ஆகிய இடங் களில் இந்த வானொலி நிலையங்கள் இருக்கின்றன. சென்னை நிலையத்திலிருந்து நடத்தப்பெறும் நிகழ்ச்சிகள் கிண்டியில் காற்றோடு கலக்கப்படுகின்றன. திருச்சி நிலைய நிகழ்ச்சிகள் அருகிலிருக்கும் திருவெறும்பூரில் காற்றுடன் கலக்கப்படுகின்றன.

வேலன் : ஐயா, தங்களால் நான் வானொலியைப் பற்றிப் பல அற்புதமான செய்திகளை அறிந்து கொண் டேன். வானொலி மிகவும் பயனுடைய சாதனமே.

அலுவலர் : ஆமாம். மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு உணவும், உடையும் எவ்வளவு தேவையோ, வானொலி அவ்வளவு தேவையாக இருக்கிறது. அன்றாடச் செய்திகளை அறியவும், பாட்டு நாடகம் போன்றவைகளைக் கேட்டுக் களிப்படையவும் உதவும் சாதனம் இது என்பதில் ஐயமில்லை.

தம்பி. நீ நாடோறும் வானொலி கேட்கிறாய் அல் லவா? உன்னால் முடிந்த வரையில் அதன் மூலம் வெளிவரும் செய்திகளையும், பாட்டுகளையும் கேள். அரிய, பெரிய விஷயங்களைச் சிந்தையில் வைத்து அதன்படி நட. அது உனக்கு என்றும் பயன் தரும்.

வேலன் : நல்லது ஐயா, வணக்கம்.

பயிற்சி

பொருளறிக :

வாக்கு	நிகழ்ச்சிக்கு
சாதனம்	ஒலியற்ற

விடை கூறுக :

1. வானொலிக்கும் நம்மைப் போலவே காது, மூளை, வாய் முதலிய உறுப்புகள் இருக்கின்றன வென்பதை விளக்குக.

2. வரவேற்பு அறை, நிகழ்ச்சி அறை - இவற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

3. நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதற்காகச் செய்துள்ள ஏற்பாடு யாது?

4. நிகழ்ச்சி அறைகளுக்கு வெளியில் சிறிதும் ஒலி ஏற்படாததற்குக் காரணம் என்ன?

5. திறந்த வெளிகளில் நடக்கும் நிகழ்ச்சிகள் எவ்வாறு ஒலிபரப்பப் படுகின்றன?

6. இடி, புயல் முதலிய ஒலிகள் எவ்வாறு வானொலியில் கேட்கும்படி செய்கிறார்கள்?

7. மத்திய அலை, சிற்றலைகளின் நன்மை யாது?

8. வானொலியால் நாம் அடையும் நன்மைகள் யாவை?

இலக்கணம் :

1. சிற்றலை, வாயசைப்பு, வானொலி, நிகழ்ச்சியறை - இவற்றைப் பதம் பிரித்துக் கூறுக.

2. ஒலி, ஒளி; அலை, அளை; எரி, எறி; அரை அறை; பரந்து, பறந்து - இச் சொற்களின் வேற்றுமை விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

கட்டுரை :

'வானொலி மூலம் ஒலி பரவுதல்' என்பது குறித்துச் சுருக்கமாக ஒரு கட்டுரை எழுதுக.

5. மலை கலங்கினும் நிலை கலங்காதவர்

சிலவாண்டுகட்கு முன்னர் நம் தேசத் தலைவர் ஜவஹர்லால் நேருவின் வலக்கை போன்றிருந்த



சர்தார் வல்லபாய் படேல் மறைந்த செய்தி கேட்டு இமயம் முதல் குமரிவரை நாட்டு மக்கள் அனைவரும் துயரக்கடலில் மூழ்கினர். அவருடைய பிரிவு நாட்

டுக்குப் பெரிய இழப்பாகும் என்று தலைவர்கள் பலரும் கலங்கினர். அவர்தம் உடலைச் சந்தனச் சிதையில் இட்டதும் 'சுதந்திர இதிகாசத்தில் ஒரு மாவீரன் கதை முடிந்ததே!' என்று ஜவஹர் மனம் வருந்திக் குறிப்பிட்டார். சர்தார் படேல் காந்தியடிகளாரின் கொள்கைகளைப் பின்பற்றி நாட்டு உரிமைக்காக இடைவிடா துழைத்த பெரியார். அவர்தம் ஆண்மையும், உறுதி படைத்த உள்ளமும், செயலாற்றும் திறமையும், தியாக உணர்ச்சியும் கண்டவர்கள் அவரை **'வீரமலை'** யென்றும், **'இரும்பு மனிதர்'** என்றும் கூறுவதுண்டு.

சர்தார் வல்லபாய் படேல் எளிய குடியானவரினத்தில் பிறந்தவர். அவர் 1875-ஆம் ஆண்டில் அக்டோபர் 31-ஆம் நாள் கூர்ஜர நாட்டைச் சேர்ந்த **கரம்சாத்** என்னுமூரில் தோன்றினர். அவர் தந்தையார் **ஜாவேரி பாய் படேல்** என்னும் குடியானவர். அவருக்குச் சகோதரர்கள் நால்வரும், சகோதரி ஒருத்தியும் இருந்தனர். வல்லபாய் தம் தந்தையாருடன் அடிக்கடி வயல்களுக்குச் சென்று வருவார். அச் சமயங்களில் தந்தையார் தம் மைந்தர்க்கு அறிவை வளர்க்கும் கதைகளையும், வீரர் வரலாறுகளையும் கூறுவதுண்டு. தந்தையார் எளிய குடியானவராயிருந்தும் 1857-ஆம் ஆண்டில் இந்தியச் சிப்பாய்கள் நடத்திய உரிமைப் போராட்டத்தில் கலந்துகொண்டவ ராதலால் அவர் கூறும் செய்திகள் படேலுக்கு நாட்டுப் பற்றும் வீர உணர்ச்சியும் ஊட்டுவனவா யிருந்தன. அவர்தம் மூத்த சகோதரர் வித்தல்பாய் படேலும் காந்தியடிகளின் இயக்கத்துக்குப் பேருதவியாய் இருந்தார். இத்தகைய சூழ்நிலையில் தோன்றிய நம் வல்லபாய் படேல் நாட்டுச் சுதந்திரப்

போராட்டத்தில் கலந்துகொண்டதில் வியப்பொன்று மில்லை.

வல்லபாய் படேல் இளமையில் தம் கிராமத்தினின்று மூன்று கல் தொலைவிலுள்ள பெத்லத் என்னுமூரில் தொடக்கப்பள்ளியில் பயின்று வந்தார். அவர் அங்கேயே தங்கித் தம் உணவைத் தாமே சமைத்து உண்பார். சமையலுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை ஒவ்வொரு ஞாயிறுதோறும் தமது கிராமத்துக்குச் சென்று கொண்டுவருவது வழக்கம். பள்ளியில் படிக்கும்போதே வல்லபாய் தளராத உழைப்பும், உறுதியும் உடையவராக இருந்தார். அவர் யாருக்கும் அஞ்சுவதில்லை. வகுப்பில் குறும்புகள் செய்வதிலும் சமர்த்தராக இருந்தார். அவர் சிறு வயதிலேயே பிடிவாத குணமுடையவராகக் காணப்படினும் உண்மையும், நேர்மையுமுடைய கொள்கைகளைத் தலைவணங்கி ஏற்றுக்கொள்வார். அவர் வெறும் ஏட்டுப்படிப்பில் மட்டும் தேர்ச்சியுறாமல் உடற்பயிற்சியிலும் வல்லுநராய்த் திகழ்ந்தார்.

1901-ஆம் ஆண்டில் படேல் 'மெட்ரிகுலேஷன்' தேர்வில் வெற்றி பெற்றார். பின்னர் அவர் வழக்கறிஞர் தேர்விலும் வெற்றிபெற்றுக் 'கிரிமினல்' வழக்குகளை நடத்துவதில் தேர்ந்தவராக இருந்தார். அக்காலத்தே படேல், வழக்கை வாதிக்க வருகிறார் என்றால் எதிர்க்கட்சிக்காரர்கட்கு மிக்க நடுக்கம் ஏற்படும். நீதிபதிகளும் அவரைக் கண்டு அஞ்சினரெனில் அவர்தம் வழக்கறியும் திறமையை என்னெனப் புகழ்வது! அவர் பார்சாத் என்னுமூரில் வழக்கறிஞராக இருந்தபோது அவருக்கு அஞ்சி ஒரு நீதிபதி தம் வழக்கு மன்றத்தை

வெளியூருக்கு மாற்றிக்கொண்டார். ஆனால் நம் படேல் அவர்கள் அவ்வூருக்கும் சென்று வழக்காட முனைந்து நின்றதால் வழக்குமன்றம் மீண்டும் பார்சாத்துக்கே மாற்றப்பட்டது. படேல் தமது சட்டப்படிப்பை வளர்த்துக்கொள்ள விழைந்து லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் தேர்விலும் முதல்வராய்த் தேறினார்.

நீதிமன்றத்தில் அவர் ஒரு வழக்குக்காகச் சென்றிருந்தார். தீவிரமாக வாதாடி வழக்குரைத்துக்கொண்டிருந்தார். அச் சமயம் தந்திச் சேவகன் ஒருவன் அவசரமாக வந்து ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டுச் சென்றான். படேல் அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். உடனே மடித்துச் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, தமது வழக்கைத் தொடர்ந்து வாதித்தார். நீதிமன்றம் கலைந்ததும் அவரது உள்ளம் துடித்தது. அண்மையிலிருந்தவர்கள், "என்ன தந்தி?" என்று கேட்க, அவர் கண்ணீர்விட்டு, "என் மனைவி இறந்துவிட்டாள்." என்று தெரிவித்தார். இங்ஙனம், நம் படேல் உறுதி உள்ளமும், உருகும் உள்ளமும் உடையவராக இருந்தார்.

பாரிஸ்டர் படேல் ஆமதாபாத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றியபோது காந்தியடிகளாரைச் சந்திக்கும் பேறு கிடைத்தது. அதற்கு முன்னர் அவர் ஆங்கில நாகரிகத்தில் மூழ்கி இருந்தார்; ஆங்கிலேயரைப் போலவே ஆடம்பரமான நடையுடைகளைப் பெற்றிருந்தார். அடிகளாரின் எளிய வாழ்க்கையையும் உண்மைக் கொள்கைகளையும் கூர்ந்தறிந்த பின்னர் படேலின் உள்ளம் அடிகளாரிடம் ஈடுபட்டது. 1918-ஆம் ஆண்டில் குஜராத்தில் பருவ மழை தவறியதால் மக்கள் வரி

கொடுக்க மறுத்தனர். வெள்ளையர் அரசாங்கம் அவர்களைத் துன்புறுத்திற்று. அவ்வமயம் நம் படேல் அவர்கள் முன்னின்று **வரிகொடா இயக்கத்தை** வெற்றிபெறுமாறு நடத்தினார். அதனால் அவர் புகழ் நாடெங்கும் பரவிற்று. 1920-ஆம் ஆண்டில் நாகபுரி மகாநாட்டுத் தீர்மானத்தின்படி தம் பாரிஸ்டர் பதவியைத் துறந்து தேச விடுதலைக்குப் போராட முன்வந்தார்.

ஒரு சமயம் குஜராத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டு மக்கள் வீடிழந்து பொருளிழந்து தவித்தனர். வெள்ளத்தால் தொல்லையடைந்த மக்களைப் படேல் செல்வர்களிடம் பொருளுதவி பெற்றுக் காப்பாற்றினார். 1924-ஆம் ஆண்டில் வல்லபாய் படேல் நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928-ஆம் ஆண்டு **பர்தோலி** மக்கள் வரிகொடுக்க மறுத்தனர். அவர்கள் அதிகாரிகளால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அச் சமயம் படேல் அவர்கள் அரியேறு போல முன்வந்து மக்களையெல்லாம் ஒருங்குத் திரட்டிப் போரிட்டு வரியைக் குறைக்கும்படி செய்தார். அவரது அஞ்சாநெஞ்சும், ஆண்மையும் கண்ட காந்தியடிகள் **'சர்தார்'** என்னும் பட்டத்தைச் சூட்டினார். சர்தார் என்னும் சொல்லுக்குத் தளபதி என்பது பொருள். அன்றுதொட்டுப் பாரிஸ்டர் படேல், **சர்தார் படேல்** என்று மக்களால் அன்பு ததும்ப அழைக்கப் பெற்றார். அவர் 1930-இல் உப்புச் சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து சிறைப்பட்டார்.

தேசிய இயக்கத்திற் சேர்ந்ததன் பலனாகச் சர்தார் படேல் பலமுறை சிறைபுகுந்தார். 1935-ஆம் ஆண்டில் நடந்த தேர்தல்களிலே காங்கிரஸ் சபை கலந்து வெற்றி

பெற்றது. அச்சமயம் அவர் ஆட்சிக்குழுவின் தலைவராய் (Parliamentary Board) இருந்து சட்டசபைகளின் நடவடிக் கைகளைத் திறம்பட நடத்தினார்; சமஸ்தான மக்களின் உரிமைப் போருக்கு வழிகாட்டியாகவும் இருந்தார். 1939-இல் தொடங்கிய இரண்டாம் உலகப் பெரும் போர் நடந்தபோது 'போரில் அரசாங்கத்துக்கு உதவி செய்யாதீர்கள்' என்று கூறியதால் தலைவர்கள் பலரும் சிறையிலிடப்பட்டனர். 1940-ஆம் ஆண்டில் படேல் சிறைப்பட்டு உடல் நலமின்மையால் மறு ஆண்டில் விடு தலை செய்யப்பட்டார்.

1942-இல் 'வெள்ளையனே! வெளியேறு' என் னும் ' இயக்கம் வலுக்கத் தொடங்கியது. அதனால் சர்தார் படேல் மூன்றாண்டுகள் ஆமத் நகர்க் கோட்டை யில் சிறைப்பட்டிருந்தார். அவர் 1945-இல் விடுதலை யானதும் தேசிய விவகாரங்களில் தீவிரமான பங்கு கொண்டு உழைத்தார். 1945-இல் ஆங்கிலேயர் இந்தி யாவுக்கு ஆட்சியுரிமை தர முன்வந்தனர். அதற்காக அப்போது இந்தியாவின் வைசிராயாக இருந்த வேவல் பிரபு கூட்டிய சிம்லா மகாநாட்டிலும், ஆங்கில மந்திரி சபைத் தூதுக் குழுவினரின் உரையாடல்களிலும் படேல் பெரும்பங்கு எடுத்துக்கொண்டார்.

1946-ஆம் ஆண்டில் இடைக்கால அமைச்சர் குழு வில் சர்தார் படேல் உள்நாட்டு அமைச்சரானார். 1947-ல் நம் நாடு விடுதலை பெற்றதும் ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியானார். அவர்தம் நெருங்கிய துணைவ ரான வல்லபாய் படேல் உதவிப் பிரதம மந்திரியாகப் பதவியேற்றார். அக்காலத்தே சிதறிக் கிடக்கும் சமஸ் தானங்களை ஒன்றாக்கி அந்தந்த மாகாண ஆட்சியுடன்

இணைக்கும் செயற்கரும் செயலில் ஈடுபட்டுப் பெரு வெற்றி கண்டார். அவர்தம் அறவுரை கேட்டு அறு நூற்றுக்கு மேற்பட்ட சமஸ்தான மன்னர்கள் ஆட்சிப் பொறுப்பினை விட்டு இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைக்கலாயினர். இங்ஙனம் எத்தகையவர் சினத்தையும், பகையையும் பொருட்படுத்தாமல் தலைவர் படேல் அவர்கள், வெள்ளையர் ஆட்சியில் இருந்த இந்தியாவின் அரசியல் அமைப்புப் படத்தையே மாற்றிவிட்டார். அவர்தம் பேரறிவைக் கண்டு பலரும் வியந்து பாராட்டினர். அவர் கலங்கா உறுதியுடன் நாட்டை நேர்வழியில் நடத்துவதில் தம் உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்தார் என்று கூறலாம்.

ஐதராபாத் சமஸ்தானம் மட்டும் இந்திய ஆட்சிக் கடங்க மறுத்தது. அந் நாட்டு மன்னர் **ரஸாக்கர்கள்** என்னும் கூட்டத்தினரால் அடக்கப்பட்டிருந்தார். அங்கு வாழ்ந்த இந்துக்களும் குறிப்பாகச் சமஸ்தான காங்கிரஸ்காரர்களும் ரஸாக்கர்களின் தாங்கொணு அட்டூழியங்களுக்கு ஆளாயினர். படேல் இக் கொடுமையைக் கண்டு வாளா இருப்பாரா? அவர் துணிவுடன் இந்தியப் படைகளை ஐதராபாத் சமஸ்தானத்தில் ஏவி, ரஸாக்கர்களை அடக்கினர். ஐதராபாத் அரசாங்கம் இந்திய ஆட்சிக்குப் பணியுமாறு செய்தார். இவ்வாறு நாட்டுக்காக அரிய பெரிய செயல்களை ஆற்றிய சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் உடல் நலம் குன்றி 1950-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். இந்தியாவின் இணையற்ற வீரர் மறைந்தமை யறிந்து நாட்டுத் தலைவர்களும், மக்களும் கண்ணீர் சோரக் கவன்றனர்.

சர்தார் வல்லபாய் படேல் அருங்குணங்களுக்கு உறைவிடமானவர். தமக்குச் சரியென்று தோன்றும் கொள்கையை அவர் எத்தகையோரின் பாராட்டுதலுக்கும், பகைக்கும் அஞ்சாமல் எடுத்துக் கூறும் இயல்பு வாய்ந்தவர். அவர் வைரம் போன்ற உறுதி படைத்தவர்; ஆழ்ந்த அறிவு படைத்தவர், சீர்திருத்தக் கருத்துக்கள் உடையவர். அவரிடத்தில் இடையறாத தெய்வ பக்தியும் உண்டு. எத்தகைய துன்பம் நேரினும் அவர் கட்டுப்பாட்டை மீறி நடக்க மாட்டார். அதுபோலவே பிறர் கட்டுப்பாட்டை மீறி நடப்பதையும் அவர் அறவே வெறுப்பார். இத்துணை நற்குணங்களை உடைய அண்ணல் மறைந்து விட்டார். ஆனால் இன்று அவர் அழியாப் புகழ்பெற்ற அமரராக நம்மிடையே நிலவுகிறார். நம் நாட்டு மக்கள் என்றும் ஒன்றுபட்டுப் பணியாற்றுவதே அவருக்கு நாம் செலுத்தும் அன்புக் காணிக்கையாகும்.

பயிற்சி

பொருளறிக :

சிதை	கூர்ந்தறிந்து	தாளாண்மை
சூழ்நிலை	அரியேறு	அமரர்
நேர்மை	ஈடுபட்டு	

வாக்கியத்திற் சேர்த்தெழுதுக :

பின்பற்றி, இடைவிடாது, வழக்காட, தீவிரமாக, கூர்ந்தறிந்து, முன்னின்று.

எதிர்ப் பதம் கூறுக :

எளிய, வாதி, துறந்து, மதிக்கப்பட்டு, சரியோர்.

விடை கூறுக :

1. சர்தார் படேலின் ஆண்மையைக் குறிக்கும் சொற்றொடர்கள் யாவை?

2. படேலின் கல்விப் பயிற்சியைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

3. அவர் சிறந்த வழக்கறிஞர் என்பதற்குச் சான்றுகள் தருக.

4. சர்தார் படேல் 'மலை கலங்கினும் நிலை கலங்காதவர்' என்பதை விளக்கும் நிகழ்ச்சி யாது?

5. படேல் அவர்கள் நாட்டுக்குச் செய்த நற்பணிகள் யாவை?

6. ஐதராபாத் குழப்பத்தை அவர் எவ்வாறு அடக்கினார்?

7. வல்லபாய் படேலின் அருங்குணங்கள் யாவை?

இலக்கணம் :

1. அவர் வெறும் எட்டுப்படிப்பில் மட்டும் தேர்ச்சியுறாமல் உடற் பயிற்சியிலும் வல்லவராக இருந்தார்.—இதனை இரண்டு தனிநிலை வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

2. ஒரு நீதிபதி தம் வழக்கு மன்றத்தை வெளியூருக்கு மாற்றிக்கொண்டார்.—வழக்குமன்றம் எழுவாயாக வருமாறு வாக்கியத்தை மாற்றிக் கூறுக.

3. அண்மையிலிருந்தவர்கள், 'என்ன தந்தி?' என்று கேட்க, அவர் கண்ணீர் விட்டு "என் மனைவி இறந்துவிட்டாள்," என்று கூறினார்.—இதனை அயற்கூற்றாக மாற்றிக் கூறுக.

6. செங்குட்டுவன் அரசியல்

சங்க நூல்களில் நம் பண்டைக்காலத் தமிழரசர் களின் ஆட்சிமுறையை அறியலாம். அவற்றிற் கூறப் பட்ட அரசியல் முறை யெல்லாம் பொதுவாகச் சேர மன்னருக்கும் உரியனவேயாகும். சங்க காலத்தில் முடி யாட்சியே தமிழ்நாட்டில் நிலவி இருந்தது. குடியாட்சியில் நாம் மேற்கொள்ளும் நன்மைகளுள் பல கோனாட்சியி லும் பின்பற்றப்பட்டன. அந்நாளைய அரசன் தன் விருப் பம்போல் ஆளாமல் குடிகளின் கருத்தறிந்தே தன் னாட்சியை நடத்தினான். அதனால்தான் சேர மன்னர் களில் பலரும் இருபது முதல் ஐம்பது ஆண்டுகள் வரை உள் நாட்டில் கலகம் எதுவுமின்றி அமைதியாக அரசாள முடிந்தது. சேரன் செங்குட்டுவன் ஆட்சிக் காலமும் ஐம்பது ஆண்டுக் காலம் நிலவி வந்தது. அன்றியும் செங்குட்டுவன் வடநாட்டுப் போர்களையெல் லாம் முடித்து வெற்றி வீரனாய்த் திரும்புவதற்குட்பட்ட முப்பத்திரண்டு மாதங்கள் வரையில் தலைநகரில் இல்லாமலிருந்தும், சேர நாட்டில் யாதொரு உள் நாட்டுக் கலகமும் தோன்றாமல் அமைதியாக அரசியல் நிலை கலங்காமல் நடந்து வரவும் முடிந்தது. இத்தகைய அமைதியான ஆட்சியை நடத்திய சேர அரசனது அரசியல் முறையைப்பற்றி இங்கே தெரிந்து கொள் வோம்.

செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள் அர சியலை வெறுத்துத் துறவியலை மேற்கொண்டு அருளாட்சி புரிந்ததை நீங்கள் அறிவீர்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு நற்சோணையின் மணிவயிற்றில்

பிறந்த இவ் விருபெருவீரரும், அரசாட்சியும் அருளாட்சியும் நடாத்தி எதிர்காலத் தமிழகத்துக்கு ஏற்றமும் புகழும் ஏற்படச் செய்தமைபோல வேறெந்தத் தமிழ் மன்னரும் செய்யவில்லை எனில், அது மிகையாகாது.

செங்குட்டுவன் அரசியலில், முற்கால முறைப்படி ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும் அரசியற் செயற் குழுவாகச் சிறப்புற்றிருந்தன. ஐம்பெருங் குழுவில், அமைச்சர், புரோகிதர், சேனைபதியர், தூதுவர், ஒற்றர்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர். கரணத்து இயலவர் எனப்படும் கணக்கர்களும், கருமவிதிகள் எனப்படும் அரசன் ஆணை நிறைவேற்றும் அதிகாரிகளும், கனகச் சுற்றம் எனப்படும் பண்டாரம் காப்போர்களும், கடை காப்பாளர் எனப்படும் அரண்மனைக் காவலர்களும், நகரமாந்தர்களும், படைத்தலைவர்களும் யானை வீரர் களும், குதிரை வீரர்களும் எண்பேராயத்தில் அடங்கி யிருந்தனர். இவரன்றிக் கரும வினைஞர், கணக்கியல் வினைஞர், தரும வினைஞர், தந்திர வினைஞர், பெருங்கணி யென ஐந்து பேரடங்கிய குழுவும் அன்றுட அரசியலைச் செயற்படுத்த உதவினர்.

சேரன் செங்குட்டுவன் ஆட்சியில் இவரெல்லாம் அரசனுடைய மந்திராலோசனைக்கு உரியவர்களாக மதிக்கப்பட்டனர். செங்குட்டுவனது தரைப்படைக்கு வீரன் **வில்லவன்கோதை** தலைமை வகித்தான். இவனே சேரன் வடவரொடு செய்தபோரில் படை நடத்திச்சென்று வெற்றி பெற்றவன். நாட்டு வருவாயின் தலைமை, **அழும்பில்வேள்** என்ற அமைச்சனைச் சார்ந் திருந்தது. இவன் வரும்பொருள் அறிந்து செங்குட்டு வனுக்குத் தக்க இடத்தில் சூழ்ச்சி புரைக்கும் மாட்

சிமை உடையவன். குட்டுவன் ஆட்சியில் தூதுவர்க ளாக ஆயிரம்பேர் பணிபுரிந்தனர். அவர்களுக்குச் **சஞ்சயன், நீலன்** என்ற இரண்டு பேரறிவாளிகள் தலைமை வகித்தனர். அவர்கள் அரசர்களிடம் அடுத்தடுத்துச் சென்று வருவோராதலால் எஞ்ஞான்றும் சட்டையும் தலைப்பாகையும் தரித்திருப்பது வழக்கம். இத் தூதுவர் களைக் **கஞ்சுக முதல்வர்** எனவும் அழைப்பதுண்டு.

செங்குட்டுவனது ஆட்சியில் பகைவர்கள் நன்கு ஒடுக்கப்பட்டனர். சேரன் கப்பற்படையை வலிமை மிக்கதாக வைத்திருந்தான். கடல் வழியாகப் புகுந்த பகைவர்களைக் கடல் வழியாகவே நெடுந்தூரம் துரத்திச் சென்றழித்ததனுல் செங்குட்டுவனைக் **கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன்** என்று யாவரும் அழைத தனர். வட நாட்டரசர்களையும் இருமுறை செங்குட்டு வன் தம் முன்னோர்களைப்போலவே அடக்கியுள்ளான். ஆயினும், பகைவர்களுக்கு அருளும் கருணையுள்ளம் சேரர்களுக்கு இயல்பாக அமைந்திருந்தது. இதைச் செங்குட்டுவன் தன் பகைவர்களான கனகவிசயரைப் பத்தினி விழாவின்போது மன்னித்து விடுதலையளித்து சிறப்புச் செய்ததால் அறியலாம்.

செங்குட்டுவன் ஆட்சிக்குச் சோழ பாண்டிய நாடு களும் உட்பட்டிருந்தன. அதனுல் குட்டுவன் தன் அர சாங்க முத்திரைச் சின்னமாக வில், புலி, கயல் ஆகிய மூவேந்தரின் முக்கொடிகளையும் ஒன்ருக்கி அமைத்த தமிழ்க்கொடியையே கொண்டிருந்தான்.

அந் நாளைய வழக்கங்களில் சில இந் நாள் வழக் கில் இல்லை. எவரேனும் அரசரிடம் வந்து ஏதேனும் கூறப் புகுமுன்னும் கூறியபின்னும், "அரசே, நீடு

வாழ்க!" என வாழ்த்துதல் வழக்கம். திருமுகம் எழுதுவோர் **கண்ணெழுத்தாளர்** எனப்பட்டனர். கண்ணெழுத்து என்னும் வட்டெழுத்து அந் நாளில் பழந்தமிழ் எழுத்தாய்ச் சாசனங்களில் மட்டும் வழங்கப் பட்டது. இதனைச் சிலர் சித்திர எழுத்தென்றும், கோலெழுத்தென்றும் வழங்குவர். செங்குட்டுவன் திருவோலக்கத்தில் அரசியாகிய கோப்பெருந்தேவியும் அரசனோடு அமர்ந்து ஆலோசனைகள் கூறுவது வழக்கம். அரண்மனையிலும், கோயில்களிலும், படைவீரர் பகைவர்மேற் செல்லுங்கால் தங்குமிடங்களிலும், கூத்தரும் பாணரும் ஆடியும் பாடியும் மகிழ்விப்பது அந் நாளைய வழக்கம். அரசவையில் ஆடும் கூத்துக் களில் சாக்கைக் கூத்து மிகவும் புகழ்பெற்றது.

சிற்றரசர்கள் திறை செலுத்தக் காலைவேளையில் முரசம் முழங்கும். இஃதன்றிக் கொடை முரசு, படை முரசு, மணமுரசு ஆகிய மும்முரசுகளும் தலை நகரங் களில் காலந்தோறும் முழங்கின. குடிகள் அரசன் பிறந்த நாளைப் பெருநாளாகக் கொண்டாடினர். இதனைப் **பெருமங்கலம்** என்பர். அந்நாளில் அரசன் கருணைக்கு அறிகுறியாக மங்கலவண்ணமாகிய வெள் ளணி அணிந்து வறிஞர்க்கு வேண்டியவற்றை மாறா மல் வழங்குவான். சிறைப்பட்டவர்களையும் விடுதலை செய்வான். கலைஞர்களையும் புலவர்களையும் வீரர்களை யும் சிறப்பிப்பான். சேர நாட்டில் இந் நாளிலும் இவ் வழக்கம் நிகழ்தல் இதனை மெய்ப்பிக்கும். தக்க அந்தணர்க்குத் தன் எடையளவுப் பொன்னை நிறுத்துத் துலா பார தானமும் நடத்துவதுண்டு.

போரில் இறந்துபட்ட வீரர்களின் பரம்பரையின

ருக்கும், இறவாமல் அடிபட்டுத் திரும்பிய வீரர்களுக்கும், போரில் தத்தம் திறமையை வெளிப்படுத்திய வீரர்களுக்கும் அரசனே நேரில் அழைத்துப் பரிசும் பட்டமும் தந்து சிறப்புச் செய்வான். இந்நாளில் ஆங்கில அரசினரும், நம் அரசியலாரும் ‘விக்டோரியா கிராஸ்’, வீரச்சக்கரம் முதலிய பட்டங்களை முறையே வீரர்கட்கு வழங்குவதை நீங்களும் அறிந்திருப்பீர்கள். படைவீரர்கள் படைமேற் செல்லுங்கால் அரசன் உடனிருந்து வீரர்களை ஊக்குவித்தும் விருந்துபசரித்தும் அனுப்புவான். இதனைப் **பெருஞ்சோற்று நிலை** எனக் கூறுவர். பகைமேற் செல்லுமுன் நல்லநாளில் அரசன் குடையையும் வாளையும் விழாச்செய்து தன் னாட்டு எல்லைக்கு அப்பால் சிறப்புடன் அனுப்பி வைத்துப் பிறகு வாய்ப்பான நாளில் தான் போரில் கலந்து கொள்வது வழக்கம்.

இறந்துபோன வீரர்களுக்கும் வீரக் கற்பில் சிறந்த கற்புடைப் பெண்டிர்களுக்கும் **நடுகற்கள்** எடுத்து விழாக் கொண்டாடுவது அந்நாள் மரபாகும். இவ்விழா இந்நாளில் சிறந்தோர்களுக்குச் சிலை திறப்புவிழாச் செய்வதைப்போன்றது. பத்தினிச் சிலைக்குரிய கற்களை இமயமலையிலோ பொதியமலையிலோ வெட்டி எடுப்பர். கங்கையிலோ அன்றிக் காவிரியிலோ நீராட்டித் தூய்மை செய்வர். பிறகு சிலையாக்குவர். முடிவில் நடுகல் விழா நடைபெறும்.

சேர அரசாட்சி உரிமை முறை மக்கள் தாயமாய்—அரசனின் மூத்த மகனுக்கு உரிமையாய்—வந்ததாகும். ஆனால் இந்நாளில் அது சேரநாட்டில் மருமக்கள் உரிமையாய் மாறியுள்ளது. சேர மன்னர்களுள் முன்னோன்

ஒருவன் அரசர் எழுவரை வென்றதன் அறிகுறியாக "எழு முடியாரம்" என்னும் ஒரு மாலை அணிந்திருந்த வழக்கத்தைப் பின்பற்றிச் செங்குட்டுவனும் எழு முடியாரம் அணிந்திருந்தது குறிப்பிடத் தக்கது. எழு முடியாரம் என்பது ஏழு அரசர்களது முடிகளினின்று சிறிதளவு பொன்னெடுத்து உருவாக்கிய மாலையாகும். அரசன் நாட்டுவளம் காணச் செல்லும்போது அந்நாட்டுக் குடிகள் விலையுயர்ந்த பொருள்களைக் காணிக்கையாக்கி ஆடியும் பாடியும் அரசனை மகிழ்விப்பர். அரசனும் அவர்களைச் சிறப்பிப்பது வழக்கம். இவ்வழக்கம், இந்நாளில் அஸ்ஸாம் மலைப்பிரதேசங்களுக்கு நம் இந்திய முதலமைச்சர் சென்றபோது அந்நாட்டுக் குடிகள் அவரைச் சிறப்புற வரவேற்றுக் காணிக்கை தந்தும், களி நடமாடியும், மகிழ்வித்ததுபோல் உள்ளதல்லவா?

செங்குட்டுவன் மற்றைத் தமிழரசர்களைப்போலவே செந்நாப் புலவர்கள் பொன்னுரைகளை ஏற்றுக்கொண்டு சிறப்பித்துள்ளான். பிற அரசர்களைப்போலின்றித் தன் ஒரே மனைவியுடன் இறுதிவரைக்கும் வாழ்ந்து பெருமை பெற்றுள்ளான். இவனுட்சியில் பெண்ணுரிமை மிகவும் போற்றப்பட்டு வந்திருத்தல் வேண்டும் என்பது, கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடியதாலும், தன் மனைவியையும் அரசியலில் பங்குகொள்ளுமாறு அனுமதித்ததாலும் விளங்குகிறது. செங்குட்டுவன் ஆட்சிக்காலம், தமிழராட்சியிலேயே ஒரு **பொற்காலம்** என்று அழைப்பதில் தவறுண்டோ?

பயிற்சி

பொருளறிக :

நிலவி	நஞ்சுகம்	நடுகல்
துறவியல்	மக்கள் தாயம்	காணிக்கை
அருளாட்சி	திருமுகம்	
மிகை	திருவோலக்கம்	

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

மேற்கொள்ளும், அறிகுறியாக, விலையுயர்ந்த, இறுதி வரை.

விடை தருக :

1. செங்குட்டுவன் ஆட்சியில் தலைநகரில் அரசன் இல்லாதபோதும் அமைதி நிலவி இருந்தது என்பதற்குச் சான்று கூறுக.

2. செங்குட்டுவனின் பெற்றோர் யாவர்?

3. ஐம்பெருங் குழு, எண்பேராயம், கஞ்சுக முதல்வர், பெருமங்கலம், பெருஞ்சோற்று நிலை, எழுமுடியாரம்—இவற்றை விளக்குக.

4. செங்குட்டுவன் படை வலிமையைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

5. செங்குட்டுவன் பகைவரிடமும் அன்பு காட்டும் பண்புள்ளவன் என்பதை எதனாலறியலாம்?

6. அரசன் போர் வீரர்களுக்கு எவ்வாறு சிறப்புச் செய்தான்?

7. நாட்டுவளம் காணவரும் மன்னனைக் குடிகள் எங்ஙனம் வரவேற்றார்கள்?

8. குட்டுவன் காலத்தில் பெண்ணுரிமைக்கு உயர்வான இடம் வழங்கப்பெற்றதென்பதைச் சான்றுகளுடன் விளக்குக.

9. செங்குட்டுவன் காலத்தைத் தமிழாட்சியின் பொற்காலம் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

இலக்கணம்:

1. கோள்+ஆட்சி, முன்+காலம், செயல்+குழு, அரசன்+அவை, பொன்+காலம்—இவற்றைச் சேர்த்து எழுதுக.

2. அரசே, நீ நீடு வாழ்க.—இவ் வாக்கியத்தில் வாழ்க என்பது வியங்கோள் வினைமுற்று.

வியங்கோள் வினைமுற்று வாழ்த்தல், வைதல், கட்டளை இடுதல், வேண்டிக்கொள்ளுதல் என்னும் பொருள்களில் வரும்.

நீ வாழ்க!—வாழ்த்தல்.
அவன் கெடுக!—வைதல்.
தம்பி வருக!—கட்டளை.
தாயே தருக!—வேண்டல்.

இப்பாடப் புத்தகத்தில் பிறபாடங்களில் வியங்கோள் வினைமுற்றுகளிருப்பின் அவற்றை எடுத்துக் கூறுக.

7. மேழிச் செல்வம்

"*மேழிச் செல்வம் கோழை படாது*" என்பது ஒரு பழமொழி. 'மேழி' என்னும் சொல் ஏரைக் குறிக்கும். கல்விச் செல்வம், பொருட் செல்வம், செவிச் செல்வம் போல மேழியையும் கீழ்மையடையாத செல்வமாக நம் ஆன்றோர் போற்றி வந்தனர்: வருகின்றனர். ஏன்? பார் முழுதும் ஏர் முனையிலே இன்றும், அன்றும், என்றும் அடங்கியுள்ளமையால்தான் 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்னும் பழமொழியும் உண்டாயிற்று. ஏர் என்ற சொல்லுக்கு அழகு என்ஞெரு பொருளும் உண்டு. அழகை விரும்பாதார் யார்? ஆகவே, உலக மக்கள் அனைவரும் ஏரை விரும்புவதில் வியப்பில்லையன்றே?

> "*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்; அதனால்*
> *உழந்தும் உழவே தலை*"

என்று வள்ளுவரும் கூறியுள்ளது இங்குக் கருதத்தக்கது. ஏர்த் தொழிலில் எவ்வளவோ இடையூறுகள் இருக்கின்றன. எனினும், செய்யுந் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால், உய்யுந் தொழிலாய் உயர்வது உழவேயாகும். இத்தகைய உழவுத் தொழிலைப் பற்றி இந்நாளைய இளைஞர்கட்கு அவ்வளவாக ஆர்வம் ஏற்படவில்லை.

உலகில் தோன்றிய பல்வேறு உயிரினங்களுக்கும் உரிய உணவுப் பொருள்கள் இயற்கையாகவே வளர்கின்றன. ஆனல் மனிதனுக்கு வேண்டிய உணவுப் பொருள்மட்டும் உழுது பயிரிட்டு உழைத்தால்

ஒழிய இயற்கையாக உண்டாவதில்லை. எனவே ஒவ்வொருவரும் உணவைப் பெற உழுதொழில் புரிவது இன்றியமையாதது. 'உழவே உலக முதல் தொழில் ஆகும்,' என்னும் ருஷ்யஞானி டால்ஸ்டாயின் பொன்னுரையை அறிந்த எவரும் உழவுத் தொழிலை இழிவாக எண்ண மாட்டார்கள். பெருஞ் செல்வராயிருந்த டால்ஸ்டாய் பிரபுவே தம் முதுமைக் காலத்தில் இவ்

வுண்மையை உணர்ந்து தம்செல்வ வாழ்வை ஒழித்து ஏழை உழவனாய் மாறி உழுதுண்டு வாழ்ந்தார். ஆங்கிலக் கல்வி சிறிது கற்றவுடனேயே காலில் சேறுபடக் கூசும் இந்நாளைய இளைஞர்கள் இவ்வுண்மையை உணர்ந்துழைப்பது நலம். பழைய நாளில் சீனாவில் சீனப் பேரரசரே ஒரு நாள் பொன்னேர்ப் பூட்டிப் புதுவுழவைத் தொடங்கி வைப்பாராம். நம் நாட்டிலும்

ஔவையார் என்ற தமிழன்னையும் 'வரப்புயர!' என்ற மந்திரத்தைத் தம்மை வணங்கியவர்க்கெல்லாம் ஓதி வந்ததும் ஏன் என்பதை உன்னுக. குடபுலவியனார் என்ற சங்கச் சான்றோர் ஒருவரும், உழவுத் தொழிலைப் போற்றுமல் போர்த் தொழிலையே பேணிவந்த தலையா லங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு உழவின் மேன்மையை அவன் உளங் கொள்ளும் வழிச் சொல்லித் திருத்தியுள்ளார். உழவின் வளர்ச்சியைக் கருதியே சோழ வளநாட்டைச் சோறுடைத்தாக்கக் கரிகாற் சோழன் காவிரிக்குக் கரைகட்டித் திருமாவளவன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். ஆகவே சங்க காலத்துக்கு முன்னிருந்து இன்றுவரை உழவு இன்றியமையாத தொழிலாக உள்ளது. தொழுதுண்டு வாழும் தொழில்களுக்குப் பழுது உண்டாகலாம்; ஆனால் உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பேது? பழுதேது?

இவ்வாறு பாவலராலும் காவலராலும் பாராட்டப் பட்டுப் பாதுகாக்கப்பட்டுவந்த உழவுத் தொழில் இந் நாள் வளங்குன்றிப் போனதேன்? இதற்கு எத் துணையோ காரணங்கள் இருக்கின்றன. எனினும் கீழ் வருவனவற்றைத் தலையாய காரணங்களாகக் கூற லாம்: 1. நாட்டின் மக்கள் தொகை மிகுதி, 2. பண் படாத பூமிகள், 3. உழவர்களின் ஏழ்மை, அறியாமை, கடன் சுமை முதலியவை, 4. விஞ்ஞான முறையில் பயிர்த் தொழில் செய்யாமை, 5. பருவ மழைகள் தவறுங்கால் நிலையான நீர் வசதியின்மை, 6. நிலவளம் பெருக்கப் படாமை முதலியன.

நம் நாட்டில் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ முக்கால் கோடிபேர் மக்கள்தொகையில் கூடுதலாகின்றனர். அது

போல் பயிரிடத்தக்க நிலப்பரப்பும் வளரவில்லை. குடும்பத்துள் பிள்ளைகள் பெருக்கத்தால் பாகப் பிரிவினை மூலம் நிலம் சிறு சிறு துண்டுகளாகின்றன. இவற்றால் பெரிய அளவில் பயிரிடமுடியாமல் ஊக்கம் குறைந்து உழவுத் தொழில் புறக்கணிக்கப்படுகிறது. நம் நாட்டில் 320 இலட்சம்ஏகர் நிலமே பயிராகிறது. ஆனால், எட்டுக் கோடி ஏகர் நிலம் உள்ள இம் மாநிலத்தில், காடுகளும், சாகுபடிக்குதவாத வெற்று நிலங்களும் போக 205 இலட்சம் ஏகர் நிலம் பயிரிடப்படாமல் உள்ளன. இவ்வளவு பரந்த நிலத்தைப் பண்படுத்தாமல் விட்டிருப்பது நம் குறையேயாகும். உழவர்களுக்கு ஏழ்மையும் அறியாமையும் என்று ஒழியுமோ அன்றே நம் நாட்டு உழவுத் தொழிலுக்கு ஒரு நல்ல வழி ஏற்படும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் அரசாங்க ஆதரவாலும் உழவர்களுக்குள்ள குறைகளை விரைவில் களையவேண்டும்.

அறிவியற் கலைகளின் ஆக்கத்தால் 'டிராக்டர்கள்' போன்ற புதிய கருவிகள் பல பயிர்த்தொழிலை வளப்படுத்த வந்துள்ளன. உழுதல், விதைத்தல், களை எடுத்தல், நீர் பாய்ச்சுதல், செடிகளுக்கு நோய் வராமல் தற்காப்புக்குரிய மருந்து தூவுதல், அறுத்தல் முதலிய பல தொழில்களுக்கும் இக்காலத்தில் இயந்திர உதவி எளிதில் கிடைக்கிறது. வீணுகப் பழமை, பழமை என்று பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இன்னும் கவலை ஓட்டிக்கொண்டிருந்தால் நம் கவலைதான் பெருகும்: ஏற்றமே இறைத்துக் கொண்டிருந்தால் நமக்கு ஏற்றம் வந்துவிடாது என்பதை உழவர்கள் உணரச் செய்யவேண்டும். புதிய கருவிகளில் டிராக்டர்களை (Tractors) உழுவதற்கும், நீர் இறைக்கும் பொறிகளை

(Oil Engines) நீர் பாய்ச்சுவதற்குமாவது நாம் பயன் படுத்தவேண்டும். பலர் கூடியோ, அல்லது அரசாங் கத்தார் மூலமோ வாடகைக்கு வாங்கியோ இவற்றைப் பயனுக்கிக் கொள்ளுதலே பகுத்தறிவாகும்.

துண்டு நிலங்களை டிராக்டர்களால் உழுதல் இய லாது. ஆகவே, துண்டு நிலங்களை உடையோர் ஒன்று சேர்ந்து ருஷ்யாவில் நடப்பதுபோல் கூட்டுப் பண்ணை கள் ஏற்படுத்தி இயந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். விளைவால் வந்த பயனை அவ ரவர் நில விகிதப்படிப் பிறகு பிரித்துக்கொள்ளுதல் நல்லது.

பருவ மழை தவறுங்கால் மழை பொழிவிக்கும் விஞ்ஞான முறையையும் மேற்கொள்ளுதல் நல்லது. ஆனல் ஏழைகள் மிக்க இந்தியாவில் இஃது இயலுவ தன்று. ஆகவே, வீணே கடலில் கலக்கும் வற்றாத காவிரி, கோதாவரி, கிருஷ்ணு, கங்கை முதலிய ஆறு களில், மேலும் பற்பல அணைகள் கட்டி நீரைத் தேக்கு தல் இன்றியமையாதது. இம் முறையில் நாம் ஓரளவு தான் முன்னேறியுள்ளோம். பயிர்த் தொழிலுக்கு மின்சார சக்தி சிறந்த ஊழியனாய் உதவும். ஆகவே அணைகள் மூலம் மின்சார உற்பத்தி நிலையம் ஏற்படுத்த வும் அரசியலாருடன் நாம் உழைக்கவேண்டும்.

நிலத்துக்கு உரியவன் நாள்தோறும் நிலத்தை ஓம்பி வரவேண்டும். நிலவளம் குறைந்து போகாதபடி தக்க வல்லுநர்களை உசாவி, நிலத்தில் எந்தச் சத்துக் குறைந்திருக்கிறதோ அந்தச் சத்தை இயற்கை உரங் களாகிய தழை, பிண்ணுக்கு, சாணம், எரு முதலிய வற்றாலும், செயற்கை உரங்களாகிய அம்மோனிய

உப்பு, பொட்டாஷ் உப்பு போன்ற உரங்களாலும் வளங் குன்றுதபடி காத்தல் வேண்டும்.

நாட்டைக் காப்பதற்காக நாட்டின் விரோதிகளை அரசன் எப்படிக் கடுமையாகத் தண்டித்து அடக்கு வானோ அப்படியே உழவனும், தன் நிலத்தில் பயிர் ஏறியுள்ளபோது, பயிரை அழிக்கும் களைகளையும், புழு, வண்ணுத்திப்பூச்சி, வெட்டுக்கிளி, அரிசி மூட்டைப்பூச்சி, எறும்புச் சிங்கம் முதலியவற்றை ஒழிக்கவும், வரா மல் தடுக்கவும் முயலவேண்டும். சிறந்த வித்துக் களைத் தேர்ந்து எடுத்துப் பருவத்தே பயிர் செய்ய வேண்டும்.

இவ்வளவுக்கும் மேலாக, நாம் பிறநாட்டு நல்ல றிஞர் புதிது புதிதாகக் காணும் உண்மைகளையும் அவ் வப்போது அறிந்துகொள்ள வேண்டும். எடுத்துக் காட்டாக ஜப்பான் நாட்டில் நெல் பயிரிடுமுறையைக் கூறலாம். இஃது ஒரு தனி வகை. இம் முறையினால் நம் நாட்டைவிட ஒன்பது மடங்கு நெல் அதிகம் உற் பத்தி செய்யமுடியுமாம். இதைப்போலவே ருஷ்யா விலும் அமெரிக்காவிலும் மேற்கொண்டுள்ள முறை யால் அக் நாடுகள் உணவு உற்பத்தியில் உலகின் முன் னிலையில் நிற்கின்றன. நெல்வேலி, நெற்குப்பை, நெல் வாய், நெல்லூர், நெல் மலி என்றெல்லாம் ஊர்களுக்குப் பெயர்வைத்த தமிழ்நாடு இன்று உணவுப் பொருளுக் காகப் பிறநாட்டை எதிர்பார்க்கும் நிலையை எண்ணிப் பாருங்கள். நம் நாட்டுக்கு வேண்டிய உணவை நாமே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் பழம் பெருமை பேசிக்கொள்வதில் பொருளுண்டு. இளைஞர்களே! எதிர்காலம் உங்கள் கையில்தான் உள்

ளது! பயிர்த் தொழிலாளன் என்று சொல்லிக்கொள்வதில் உவகைகொண்டு உழையுங்கள்.

> ஏரும் இரண்டுளதாய், இல்லத்தே வித்துளதாய்,
> நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
> சென்றுவர எளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்பின்
> என்றும் உழவே இனிது.

பயிற்சி

பொருளறிக :

மேழி	பாவலர்	ஓம்பி
பொன்னுரை	காவலர்	முன்னணி
ஆர்வம்	பழுது	

சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

சீர் தூக்கி, இந்நாளைய, தலையாய, புறக்கணிக்க.

விடை தருக :

1. உழவின் சிறப்பைக் கூறும் பழமொழிகள் யாவை?

2. உழவுத் தொழிலைப்பற்றி டால்ஸ்டாய் கூறும் பொன்னுரை யாது?

3. உழவுத் தொழிலின் உயர்வு பற்றிப் பாடிய புலவர்கள் யாவர்?

4. நம் நாட்டில் பயிர்த்தொழில் வளங்குன்றியதற்குக் காரணங்கள் யாவை?

5. பயிர்த்தொழில் முன்னேற்றத்துக்கு நாம் செய்ய வேண்டுவன யாவை?

இலக்கணம் :

1. அழகை விரும்பாதார் யார்?—இதனைச் செய்தி வாக்கியமாக மாற்றிக் கூறுக.

2. இப் பாடத்தின் முதல் பாராவில் உள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சங்களைத் தனித் தனியே எடுத்துக் கூறுக.

8. கொடியைக் காத்த குமரன்

கோவை மாவட்டத்தில் சென்னிமலை என்னும் ஊர் இயற்கை எழில் மிக்க ஊராகும். ஆண்டுச் செல்வராய் இருந்து பின்னர் ஏழ்மை நிலையை எய்தியவர் **நாச்சியப்ப முதலியார்** என்பவர். நாச்சியப்பரின் நற்றவப் பயனாய் 1904-ஆம் ஆண்டில்,குமாரசாமி என்னும் நன்மகன் அவதரித்தார். அவர்தம் வீர அன்னையின் பெயர் **கருப்பாயி யம்மாள்**. குமாரசாமிக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு. மூவரில் குமாரசாமியே இளையவர் ஆவர். சின்னஞ் சிறு பிராயத்திலேயே குமாரசாமி நற்குணங்கள் பலவற்றுக்கும் உறைவிடமாய் விளங்கினார். ஏழைக் குடும்பத்தில் பிறந்திருப்பினும் அவர் கல்வியில் கருத்தாக இருந்து ஆண்டு தோறும் தேர்வில் வெற்றி பெற்று வல்லவராக விளங்கினார். ஆரம்பப்பள்ளிப் படிப்புடன் குமாரசாமி தம் பயிற்சியை நிறுத்த வேண்டியதாயிற்று.

குடும்பத்தைக் காக்கப் போதிய வருவாய் இல்லாத நாச்சியப்பர் தம் மகனை நெசவுத் தொழிலை மேற்கொள்ளச் செய்தார். அதனால் வரும் சிறு ஊதியத்தைக் கொண்டு தம் எளிய குடும்பத்தைச் சீரிய முறையில் நடத்தி வந்தார். அறிவாற்றல்களில் சிறந்த குமாரசாமி உயர்நிலைப் பள்ளியிற் சென்று பயிலவேண்டும் என்னும் அவாக்கொண்டவராயினும், தம் குடும்ப நிலை கண்டு மனந்தளர்ந்து தம் பத்தாம் வயதிலேயே தறி நெய்வதில் ஈடுபட்டார். தொழிலில் கண்ணுங் கருத்துமாக விளங்கினார்.

அவர்தம் பதினொன்காம் வயதில் பள்ளிப் பாளையம் என்னும் ஊரில் உள்ள தம் மாமன் வீட்டை அடைந்தார். அங்கு மூன்று ஆண்டுகள் தங்கி நெசவுத் தொழிலில் சிறந்த தேர்ச்சி பெற்றார். பின்னர், தம் பதினேழாம் வயதில் மீண்டும் சென்னிமலைக்கு வந்தார்.

1926-இல் குமாரசாமி தன் குடும்பத்துடன் கோவைக் கடுத்த திருப்பூரிற் குடியேறினார். அங்கே பருத்தி வாணிபம் நடத்திய முதலாளிகளிடம் ஊழியஞ் செய்துவந்தார். திருப்பூருக்குச் சென்ற நாளிலிருந்து குமாரசாமி நாட்டின் விடுதலைக்காகத் தலைவர்கள் புரியும் தொண்டுகளைக் கவனித்தார்; அவர்கள் பேசும் பேச்சுக்களை உற்றுக் கேட்டார். அவர் உள்ளத்தில் நாட்டுப்பற்று வேரூன்றத் துவங்கியது. நாட்டுரிமைக் கிளர்ச்சியில் நாட்டங் கொண்ட குமாரசாமி, 1930-ஆம் ஆண்டில் தீவிரமான தேசாபிமானியாகத் திகழ்ந்தார். அண்ணல் காந்தியடிகளின் அறவுரைகளைக் கடைப் பிடித்துத் தம்மால் இயன்றமட்டும் நாட்டுப் பணியாற்றி வந்தார். அயல் நாட்டுத் துணியை அறவே வெறுத்தார்; சொந்த நாட்டுக் கதர் அணிந்து தூய உள்ளத்தினராய் வாழ்ந்து வந்தார்.

ஆங்கில அரசியலார், மகாத்மா காந்தி, ஜவஹர் முதலிய தேசத் தலைவர்களின் கிளர்ச்சிகளைக் கண்டு இந் நாட்டுக்கு எத்தகைய ஆட்சியுரிமை நல்கலாம் என்பதை உணர்வதன் பொருட்டு, ஸர் ஜான் ஸைமன் தலைமையில் 1928-இல் இந்தியாவுக்கு ஒரு குழுவினை அனுப்பினார். மகாத்மா காந்தியடிகளாரின் விருப்பப் படி ஸைமன் குழு புறக்கணிக்கப்பட்டது. திருப்பூர்க்

குமரன் இல்லமறை காய் போல் இருந்து தேசிய இயக்கத்துக்கு வேண்டிய உதவிகள் புரிந்தார். அவ்வமயத்தில்தான் முதலாவது சட்டமறுப் பியக்கம் நாடெங்கும் நடைபெற்றது. குமரனின் மனம் குடும்பத் தொல்லையிலும், சட்ட மறுப்பு இயக்கத்திலுமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. முடிவாக நாட்டின் விடுதலைக்காக எத்தகைய தியாகத்துக்கும் முன் வருவதெனத் தீர்மானித்தார். அக் காலத்தில் அவர் தந்தையார் நாச்சியப்ப முதலியாரும் காலமானார். குமரன் குடும்பத்திலிருந்து விலகினார். ஆனால் அவர் அறப்போரில் சேரத் தலைவரின் இசைவு கிடைக்கவில்லை. அதனால் மனமுடைந்த குமரன் சில நாட்கள் உண்ணா நோன்பு பூண்டார். அச்செயலின் மூலம் மக்கள் குமரனின் தியாக சிந்தனையையும் நாட்டுப் பற்றையும் நன்கு அறிந்தனர்.

மீண்டும் ஓர் அறப்போர் விரைவில் தொடங்க வேண்டுமெனக் குமரன் இறைவனை இறைஞ்சி வந்தார். 1930-ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியடிகள் சட்டமறுப் பியக்கத்தை மறுபடியும் துவக்கினார். அந்நியர் நாட்டுத் துணிமறியல் நடைபெற்றது. அச்செய்தியைக் கேள்வியுற்ற குமரன் இன்பக் கடலில் திளைத்தார். குடும்பக் கவலையைச் சிறிதும் நினையாமல் அறப்போரில் சேர உறுதி கொண்டார். 10—1—32 ஞாயிற்றுக் கிழமையன்று தன் அருமை அன்னையாரிடமும் வாழ்க்கைத் துணைவியாரிடமும் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். குமரனின் துணிவைக் கண்டு அவ்விருவரும் பெரிதும் மனம் வருந்தி ஒருவாறு இசைவு தந்தனர்.

பொழுது புலர்ந்தது. குமரன் வைகறையில் தன் படுக்கையை விட்டு எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டார் ; புத்தாடை அணிந்தார் : காலை எட்டு மணிக்கெல்லாம் உணவுண்டு காங்கிரஸ் சபையின் அறப்போர் அலுவலகத்துக்குச் சென்றார். குமரனின் உண்மை உள்ளத்தை உணராத சத்தியாக்கிரகத் தளபதி அவரை அறப் போரில் சேர்த்துக்கொள்ள இயலாது எனத் தெரிவித்து விட்டார். என் செய்வார் குமாரசாமி? எண்ணிய எண்ணத்தில் இடி விழுந்ததே எனத் துடித்தார். அங்கு வந்திருந்த மற்றத் தொண்டர்கள் குமாரசாமியின் உண்மை நாட்டுப் பற்றையும் ஆர்வத்தையும் அறப்போர்த் தளபதிக்கு விளக்கி அவரையும் தம்முடன் அறப்போர் மறியலில் சேரும்படி செய்தனர். தொண்டர்கள் அந்நிய நாட்டுத் துணி மறியலுக்குப் புறப்படச் சித்தமாய் இருந்தனர்.

மணி ஒன்பது அடித்தது. சர்வாதிகாரியின் ஆணைப்படி தொண்டர்கள்,

"சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி அஞ்சிடோம்"

என்னும் புரட்சிக் கவிதையைப் பாடிக்கொண்டே அந்நிய நாட்டுத் துணி மறியலுக்குப் புறப்பட்டனர். அமைதியுடனும் உணர்ச்சியுடனும் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. அவர்கள் பாடிய தேசிய கீதங்களும், முழங்கிய வீர உரைகளும் விண்ணையும் மண்ணையும் அதிரச் செய்தன. அவர்கள் போக்கு சகிக்க முடியாதென உணர்ந்த போலீஸ் அதிகாரி அவர்களைக் கலைந்து போகுமாறு குறுந்தடி கொண்டு தாக்கினர். தொண்டர் படை சின்ன பின்னமாகச் சிதறியது.

ஆனால் வீர உள்ளம் படைத்த குமரன் மட்டும் நின்ற இடத்தை விட்டு அணுவளவும் அப்புறம் போகவில்லை. கையில் பிடித்த தேசியக் கொடியைத் தாழ விடவில்லை. குறுந்தடியினால் கொடுமையாகத் தாக்கப்பட்டபோதும் கொடியை இறுகப் பற்றி நின்றார் குமரன். போலீசார் தங்கள் கை ஓயும் வரையில் நம் குமரனைத் தடியினால் தாக்கினார்கள். தலையில் ஓரடி பலமாக விழுந்தது. அந்தோ! குமரன் கொடியைக் கைவிடாமல் குற்றுயிராய் மண்ணில் சாய்ந்தார். 'உச்சி மீது வானிடிந்து விழுந்துவிட்ட போதிலும் அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமில்லை!' என்னும் பண்டைத் தமிழர் வீர மரபைச் சார்ந்த குமரனின் ஆண்மையையும், அறிவு நுட்பத்தையும், தேசப் பற்றையும் கண்டு அனைவரும் வியந்தனர். அவருக்கு நேர்ந்த இடுக்கண் கண்டு ஆறாத்துயரில் ஆழ்ந்தனர்.

குமரனின் உடல் சிகிச்சைக்காக மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மறுநாள் காலை குமரன் இவ்வுலக வாழ்வை நீத்தார். அன்னையின் விடுதலைக்காக அவர் இன்னுயிரையே பலியாக்கினார். என்னே அவர்தம் தியாகம்!

ஒரு நாட்டுக்கும் சமூகத்துக்கும் உள்ள வலிமையின் அறிகுறியாக விளங்குவதே அந் நாட்டில் விறுடன் பறக்கும் கொடியாகும். தம் கொடி தாழுமாறு எந்த நாட்டினரும் விரும்பமாட்டார்கள். வீரர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பது தாய் நாட்டின் கொடியேயாகும். தம் உயிரையும் பொருட்படுத்தாது கொடியினைக் காத்து நின்ற குமரன் பெயரால் தற்காலத்தில் ஆங்காங்கே சில கழகங்களும் படிப்பகங்களும் ஏற்

புட்டுள்ளன. வீரத் தியாகி குமரன் புகழ் என்றும் மங்காமல் இருக்க நினைவுச் சின்னமொன்று அமைப் பது தமிழர்களாகிய நமக்கு உற்ற கடமையாகும்.

பயிற்சி

பொருளறிக :

வாய்ப்பு	இயக்கம்	இடுக்கண்
சிந்தனை	துஞ்சிடோம்	ஆருத்துயர்
உறைவிடம்	குறுந்தடி	குற்றுயிர்
நாட்டம்	தளபதி	

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

சின்னஞ் சிறு, இலைமறை காய் போல், ஊசலாடி, மன முடைந்து, கண்கொள்ளாக் காட்சியாக, கண்ணும் கருத்து மாய்.

விடை தருக :

1. திருப்பூர்க் குமரனின் பெற்றோர்கள் யாவர்?

2. குமாரசாமியின் உள்ளத்தில் நாட்டுப்பற்று வேரூன்றி வளர்ந்த விதத்தைப்பற்றி விளக்குக.

3. குமரன் அறப்போரில் சேர்ந்து கொள்வதற்குச் செய்த முயற்சி யாது?

4. குமரனைக் 'கொடியைக் காத்த குமரன்' என்று போற்றுவது எப்படிப் பொருந்தும்?

5. குமரன் வாழ்க்கையால் நாம் அறிவது யாது?

இலக்கணம் :

சொல்லிலக்கணம் கூறுதல் :

1. **குமரன் கொடியைக் காத்தார்.**

குமரன் : பெயர்ச் சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை யெண், படர்க்கை இடம், எழுவாய் வேற்றுமை. காத்தார் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

கொடியை : பெயர்ச் சொல், அஃறிணை, பலவின்பால், பன்மை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, செயப்படுபொருளாகி, காத்தார் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

காத்தார் : வினைமுற்று, உயர்திணை, ஆண் பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம். குமரன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.

2. **பாடிய பெண்.**

பாடிய—உடன்பாட்டுப் பெயரெச்சம். பெண் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தது.

3. **பாடி ஆடினாள்.**

பாடி—உடன்பாட்டு வினையெச்சம்; ஆடினாள் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

4. மேற்கூறியவாறு கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக.

(i) சென்னிமலை எழில் மிகுந்த ஊராகும்.

(ii) அவர் உள்ளத்தில் நாட்டுப்பற்று வேரூன்றத் தலைப்பட்டது.

9. சந்தச் சாமியார்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைக் காலத்தில் இராமநாதபுரத்தை முத்துராமலிங்க சேதுபதி என்பவர் ஆண்டுவந்தார். அவருடைய அண்ணலார் பொன்னுசாமித் தேவர் சிறந்த தமிழறிஞர். அவர் தம்பிக்கு அமைச்சராயிருந்து ஆட்சியைச் செவ்வனே நடத்தி வந்தார். பொன்னுசாமித் தேவர் புலவர்கள் பலர்க்கும் அவர்தம் வரிசை யறிந்து பரிசுகள் வழங்கி ஆதரிக்கும் அருங்குணம் படைத்தவர். சங்ககாலத்து அரசர்களைப் போலவே சகோதரர்களிருவரும் தமிழில் சிறந்த கவிகள் பல பாடியுள்ளனர்.

பொன்னுசாமித் தேவரவர்கள் தாமே புலவர்களிடம் பல துறைகளைக் கூறியும், அடி எடுத்துக் கொடுத்தும், பாடச் செய்து, சோதித்தறிந்து அவர்கள் புலமையைச் சுவைத்து மகிழ்வார். இம்முறையினுல், பொன்னுசாமித் தேவரிடம் செல்லும் அரை குறைப் புலவர்களும், போலிக்கவிஞர்களும் அவமானமடைந்து திரும்புவது வழக்கம். அங்ஙனம் அவமதிப்புற்றுத் திரும்பியவர் பலர். அவர்களுள் சந்தச் சாமியார் என்பவரும் ஒருவர் ஆவார்.

சந்தக்கவிகள் பாடுதல் எளிதன்று. அதற்கு நிரம்பத் தமிழ்ப் பயிற்சி வேண்டும். சந்தச் சாமியார் சந்தக் கவிகள் பாடுவதில் திறமையுடையவரா யிருந்தார். ஆனுல் அவர் ஆணவமும் தற்பெருமையும் உடையவராகவும் இருந்தார். சந்தச் சாமியார் தம்மை முருகன் அவதாரம் என்றும். வேண்டியவர்க்கு வேண்டிய வரங்

களைத் தர வல்லவர் தாம் என்றும் கூறி விளம்பரஞ் செய்து வந்தார். தம் மாணவர்களுடனும், பல விருதுகளுடனும் செல்வர்களையும், நிலக்கிழார்களை. யும், வள்ளல்களையும் சந்தித்து அவர்கள்மேல் சந்தக் கவிகள் பாடி முருகன் தம்மேல் ஆவேசித்துள்ளதாகப் புகன்று, பொய்யாக வெறியாடுவார். அப்பெருமக்கள் அவர் ஆரவாரத்துக்கு அஞ்சி அளிக்கும் அளவற்ற பொருளைக் கொண்டு தம் வாழ்க்கையைச் சிறிதும் துன்பமின்றி இன்பமாக நடத்தி வந்தார்.

ஒரு நாள், சந்தச் சாமியார் இராமநாதபுரம் போந் தார். சேதுபதியையும் பொன்னுசாமித் தேவரையும் கண்டு தம் திறமையைக் காட்ட எண்ணினார். சாமி யார் வருகையை முன்னதாகவே தேவர் அவர்கள் அறிந்து கொண்டார். சாமியாரின் போலித் தன்மையை வெளிப்படுத்தத் தேவரவர்கள் மனங் கொண்டார்.

மறுநாள் வழக்கம்போலத் தேவரவர்களின் புலவர் திருச்சபை கூடிற்று. தேவர் அவர்கள் புலவர்கள் சூழ வீற்றிருந்து, அவர்கள் பாடி வந்த புதிய கவிகளைக் கேட்டு மகிழ்ந்தார். சிலர் பழங்கவிகளுக்கு விரிவுரை களை விளக்கிக் கூறக் கேட்டு உவந்தார். தேவரவர்கள் இவ்வாறு அருங்கவி நயத்தைச் சுவைப்பதில் ஈடு பட்டி ருந்த வேளையில், கையில் வேல் ஏந்தியவாறு சந்தச் சாமியார் அங்கு வந்து சேர்ந்தார். "முருகா! முருகா!" என்று உரக்க ஓசையிட்டவாறு அவைக்குள் நுழைந்த சாமியாரைத் தேவர் வரவேற்க வில்லை. எனினும் சபையை ஊடறுத்துக்கொண்டு தாமே சென்று தேவ ரவர்கள் அருகில் காலின்மேல் கால் போட்டவாறு, சிறிதும் மரியாதை இல்லாமல் செருக்குடன் அமர்ந்து

கொண்டார். சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு ஏதோ முணு முணுத்துக் கொண்டார். தேவர் இவற்றை யெல்லாம் கண்டும் வாய் மூடி மௌனி யாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இதை யறிந்த சாமியார் தம்மைத் தேவர் அவமதித்ததாகக் கருதி ஆவேச முற்றவர்போல் எழுந்து நின்று, கைகளை வீசிக் கொண்டும், கண்களை மிரள மிரள விழித்துக் கொண் டும். அவையோர்க்கு அச்சம் உண்டாகும்படி இங்கு மங்கும் அலைந்தார்.

சபையோர் காணாததைக் கண்டவர்போல் வியப்புற் றும் திகைப்புற்றும் தேவரையும் சாமியாரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந் நேரத்தில் சாமியார், "அடா, நம்மை யார் என்று தெரிந்து கொள் ளாமல் அகந்தை மேலிட்டு அவமதித்தாய். நாமே சூரனைக் கொன்ற வீரக்கடவுள் முருகன். பன்னிருகை யுடைய பழனிவேலன். ஆறுமுகம் படைத்த ஐயன் யாமே என்பதறிக. இனியாவது முறையறிந்து நடந்து கொள்வாயாக. நீ எம் மெய்யன்பன் என்று இரக்கம் கொண்டு நினக்கு அருள்புரிய யாமே வலிய வந்தோம் அன்றி வேறில்லை." என்று கணகளில் கனல் பறக்கக் கூறி அமர்ந்தார். சபையினர் சந்தச் சாமியின் கடுஞ் சொற்களைக் கேட்டுத் திடுக்கிட்டனர். அப்பொழுது, தேவர் சபையினரை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, "அடா! அடா! அறிந்து கொண்டேன்: அடியேனைப் பொறுத்தருள வேண்டும்," என்று புகன்றார்.

தேவர் குரலைக்கேட்ட சாமியார், "சரி, உன் வேண்டு தலை ஏற்றுக்கொண்டோம். நீ செய்த பிழையை மன் னித்து விடுகிறோம். இனிமேலாவது எம்போன்ற பெரி

யோர்களை அவமதித்து அவதிப்படாதே," என்று சொல்லி மேலும் பல அறிவுரைகளைக் கூறலானார். அச்சமயம் சபையின் ஒரு கோடியிலிருந்து 'முசு முசு' வென்று ஓரோசை சிறிதாகக் கிளம்பிப் பெரிதாக வளர்ந்தது. மேலும், மாளிகை முற்றும் எதிரொலிக்குமாறு வளர்ந்தது. சிறிது நேரத்தில் ஓசை வந்த பக்கமிருந்து கருத்துப்



பருத்த ஓர் உயர்ந்த உருவம், வெடிபடச் சிரித்து, இடி போன்ற கடுங்குரலில், "அடா, அடா, என்ன விந்தை! என்ன மாயம்!" என்று குமுறிற்று. அந்த ஆவேச மூர்த்தி தேவர் எதிரே தோன்றிற்று. சுற்றுமுற்றும் பார்த்து முடிவில் சாமியாரை நோக்கி வெறிகொண்டு நகர்ந்தது. "எங்கே அவன்?" என்று சாமியாரைத் தேடுவதுபோல் இங்குமங்கும் தேடிவிட்டு அவரை நோக்கி,

"ஆ! இங்கேயா இருக்கிருய்?" என்று கூறி எட்டிப் பாய்ந்து சாமியார் கையிலிருந்த வேலைப் பறித்துத் தன் கையில் பிடித்துக்கொண்டது. சாமியாரை அசையவிடா மல் அவர் முதுகின்மீது ஏறி நன்ருக அமர்ந்து, "அடா! மோசக்காரனே, உன் பொய்யை வெளிப்படுத்த நாமே நேரில் வந்துவிட்டோம். நீ புளுகுவதெல்லாம் எமக்குத் தெரியாதென்று நினைத்தாய்? நீ நம்மைப் பழனியில் வந்து அடுத்ததனுல், நம்மன்பர் தேவரவர்களிடம் போய்ச் சந்தக்கவி பாடி, வந்த பரிசைக்கொண்டு மகிழ்ந்து வாழ்க என்று சொல்லி யனுப்பினேம். இங்கே வந்து நாமே நீயென்றும், வேண்டியது அருளவல்ல வன் என்றும் இப்படியா புளுகுவாய்?" என்று முழங்கி யது. சந்தச் சாமியார் மூச்சுவிட முடியாமல் திணறினர். மேலும் அந்த உருவம், "அடா, மூடா! நம் பெயருக்கு இழுக்குத் தேடி வைத்தாய். பாதகா, உன்னை என்ன செய்தாலும் தகும். ஆனல் எம் மேல் சந்தக் கவிகள் பல பாடியுள்ளாய். அதனுல் உன் குற்றத்துக்குத் தண் டனையாகப் பொய்கூறிய உன் நாவை அறுக்காமல் மன்னித்துவிடுகிறேன். இனி இப்படிப்பட்ட ஏமாற்றுத் தொழிலில் ஈடுபடுவதில்லை என்று சத்தியம் செய். இன்றேல் உன்னை விடமாட்டோம். என்ன சொல் கிருய்?" என்று கேட்டது. வேலால் சாமியாரை இடித்து விலா முறியும்படி அழுத்தி அமுக்கியது. சணப்பன் வீட் டுக் கோழி தானே வலையில் சிக்கிக்கொண்டது போல ஆபத்தில சிக்கி அவதிப்படும் சாமியார், 'எப்படித் தப்பு வது?" என்பது தெரியாமல், "முருகா, பிரபுவின் அரு மையை அறியாமல்போனேன்," என்று கதறினர். அவை யோரில் சிலர் எழுந்து அக்கரிய உருவத்தைப் பணிந்து

நோக்கி, "சுவாமி, தேவர் அவர்களின் தகுதி அறியாது தவறிழைத்த இப் போலிச் சாமியை மன்னித்து விடுங்கள்; இவர் கூறிய கொடுஞ் சொற்களை யும், ஏமாற்ற முயன்ற செயலையும் பொருத்தருள் புரியுங்கள். சிறியோர் செய்த சிறு பிழையை மட்டுமே பெரியோர் பொறுப்பது முறையோ? தெரியாமல் சிறியோர் பெரும் பிழை செய்தால் அதையும் அருள் கூர்ந்து மன்னிக்கத்தான் வேண்டும்." என வேண்டினர். சாமியாரும் சமயோசிதமாக, "ஆம், சுவாமி. அடியேனை இம்முறை மன்னித்தருள்க. இனி இவ்வாறு நடவேன். இப்பக்கம் இனித் திரும்பியும் பாரேன்," என வேண்டினார்.

அந்த உருவம், "அடா அறிவு வந்ததா? பிழைத்துப் போ. உன்னை மன்னித்தோம்," என்று கூறிச் சாமியாரை விட்டு இறங்கியது. தப்பியது தம்பிரான் அருள் என்று சந்தச் சாமியார் அச்சம் மிக்கவராய் ஓடிப்போனார்.

தேவர் அப் போலிச்சாமியாரை அடக்க விரும்பியே முன்னர் அவையைச் சுற்றி உற்றுப் பார்த்தார். அவர் குறிப்பை உணர்ந்த மீனாட்சிசுந்தர குருக்கள் என்ற அறிஞரே அவ்வாறு ஆவேச மூர்த்தியாக நடித்துப் போலிச் சாமியாருக்குப் புத்தி புகட்டினார். இச் செய்தியை அறிந்த சபையினர் யாவரும் தேவரின் அறிவு நுட்பத்தை வியந்து பாராட்டினர்.

பயிற்சி

பொருளறிக:

சந்தக்கவி	விருந்து	விலா
செவ்வனே	துறை	
வரிசை	அகந்தை	

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

வரிசை யறிந்து, வெளிவேடம், முணுமுணுத்து, மிரள மிரள, உற்றுப் பார்த்து, இங்குமங்கும்.

விடை தருக:

1. பொன்னுசாமித் தேவரின் அருங்குணங்கள் யாவை?

2. போலிப் புலவர்பால் பொன்னுசாமித் தேவர் எங்ஙனம் நடந்துகொண்டார்?

3. சந்தச் சாமியார் ஆணவத்தைக் குறிக்கும் நிகழ்ச்சியைச் சுருக்கி எழுதுக.

4. "அடா அடா! என்ன விந்தை! என்ன மாயம்"— இதனை இடஞ்சுட்டி விளக்குக.

5. சந்தச் சாமியாரின் செருக்கு எவ்வாறு அழிந்தது?

6. ஆவேச மூர்த்தியாக நடித்தவர் யார்? அவர் ஏன் அங்ஙனம் நடித்தார்?

7. இப் பாடத்தால் நீ அறியும் நீதிகள் யாவை?

இலக்கணம்:

1. சாமியாரும் சமயோசிதமாக, "ஆம் சுவாமி, அடியேனை இம்முறை மன்னித்தருள்க; இனி இவ்வாறு நடவேன்; இப்பக்கம் இனித் திரும்பியும் பாரேன்," என வேண்டினார். —இதனை அயற்கூற்றாக மாற்றிக் கூறுக.

2. ஓர் உயர்ந்த உருவம் வெடிபடச் சிரித்து இடிபோன்ற கடுங்குரலில் அடடா என்ன விந்தை என்ன மாயம் என்று குமுறிற்று. —இவ்வாக்கியத்தில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடுக.

10. பயணக் கடிதம்

135, பவழக்காரத் தெரு,
சென்னை,
27-1-'51.

அன்பே உருவமான புகழேந்தி,

வணக்கம். உன் அன்புமடல் வரப் பெற்றேன். சென்ற ஐந்து நாட்களாக நான் சென்னையில் இல்லை. அதனால்தான் உன் கடிதத்துக்கு உடனே மறு கடிதம் எழுதவில்லை. மன்னிக்க வேண்டும்.

சென்ற வாரம் என் வாழ்நாளில் ஒரு பொன்னான வாரம் என்றே கூறுவேன். ஜனவரித் திங்கள் 22-ஆம் நாள் முதல் 26-ஆம் நாள் முடிய எங்கள் பள்ளிக்கூட ஆசிரியர்களும், மாணவர்களும், பழைய மாணவர்களு மாகச் சேர்ந்து ஏறக்குறைய 350 பேர் தமிழ் நாட்டு நெற்களஞ்சியமெனப் போற்றப்பெறும் தஞ்சை, கும்ப கோணம் முதலிய நகரங்களைப் பார்த்து மீள்வதெனப் புறப்பட்டனர். அக் குழுவினருள் நானும் ஒருவனாகக் கலந்து பெரும் பயனடைந்தேன். தென்னாட்டில் நான் கண்ட இயற்கைக் காட்சிகளையும் கலைச் செல்வங்களின் கவினுறு தோற்றங்களையும் இன்னும் என் மனக் கண்ணால் கண்டு இன்பக் கடலில் திளைக்கிறேன்.

சென்ற 22-1-'51 திங்கட்கிழமையன்று காலை 9 மணிக்கெல்லாம் தலைமையாசிரியர் சுற்றுலாக் கையேட்டில் குறிப்பிட்ட வண்ணம் நாங்கள் எல்லோ ரும் பள்ளிக்கூட வழிபாட்டுக் கூடத்தில் கூடினோம். எங்கள் பயணத்துக்கு வேண்டிய பெட்டி படுக்கைகளை முன்னாளிலேயே பொருட்காப்புக் குழுவினரிடம்

சேர்த்துவிட்டோம். அவற்றை அவர்கள்முன்னதாகவே புகைவண்டி நிலையத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தனர். சரியாக 9-30 மணிக்கெல்லாம் பிரயாணக் குழுவினர் அனைவரும் அணிவகுத்துப் புகைவண்டி நிலையத்துக்கு ஊர்வலமாகப் புறப்பட்டோம். முன்னே இன்னிசைக்

Courtesy: The Head-Master, The Hindu Theological High School, Madras.

கருவிகள் முழங்க, பின்னே பள்ளிக்கூடத் தேசிய ராணுவப் படையினரும் சாரணரும், அவர்களின் பின்னே மாணவர்கள் தத்தம் குழுத் தலைவர்களுடன் வரிசை கலையாமல் செல்ல, இருபுறமும் ஆசிரியர்கள் தொடர்ந்துவர, ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நாங்கள் வீறுபெற்ற நடையுடன் முகம் மலர நடந்து சென்றோம். ஊர்வலத்தைக் கண்ட பெற்றோரும்

மற்றோரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லோரும் கடற்கரை மின்வண்டியிலேறி எழும்பூர்ப் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம்.

ஆயிரக் கணக்கான நண்பர்களும், அன்னையரும், தந்தையரும், பொதுமக்களும் வந்து எங்களுக்கு வாழ்த்துக் கூறி வழியனுப்பினர். 'சுற்றுப் பிரயாணக் குழுவினர் வாழ்க' என்னும் ஒலி வானைப் பிளந்தது. ஏறக்குறைய முந்நூற்று ஐம்பது பிள்ளைகள் அமர்ந்து செல்வதால் ஒரு பள்ளிக்கூடத்தையே தான் ஏற்றிச் செல்வதாகப் பெருமிதம் கொண்ட புகைவண்டி, 'குப் குப்' பென்று புகையைக் கக்கிய வண்ணம் புறப்பட்டது.

வழிநெடுக வறண்ட காட்சிகளையே பார்த்த நாங்கள் சோழ நாட்டின் எல்லையைக் குறுகியதும் பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சிகளை இருமருங்கும் கண்டு இன்புற்றோம். எங்கணும் பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்ற புல் வெளிகளும், 'சோழவளநாடு சோறுடைத்து', 'சோற்றால் மடையடைக்கும் சோணாடு' என்னும் அவ்வையாரின் அமுதமொழிகளை மெய்ப்படுத்தும் நெல்வயல்களின் இனிய தோற்றமும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்தன.

நாங்கள் இரவு ஏழரை மணிக்குக் குடந்தையை அடைந்தோம். குடந்தைப் பொதுமக்கள் எங்களை வரவேற்பதற்காகப் பல சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். எங்கள் தலைமையாசிரியருக்கு மாலையணிவித்து இன்னிசை முழங்க எங்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். கும்பகோணத்தில் இரு நாட்கள் தங்கினோம். இருநாட்களில் பல அற்புதமான இடங்களையும் காட்சிகளையும் கண்டு களித்தோம்.

முதல்நாள் காலையில் கும்பகோணத்துக்கு அருகில் உள்ள முருகன் திருத்தலமாகிய சுவாமிமலைக்குச் சென்றோம். அங்கு, வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளமுடைய காவிரியாற்றில் நீராடினோம். இருகரையிலும் அடர்ந்த மரஞ்செடி கொடிகளைக் கண்டு மகிழ்ந்

Courtesy: The Head-Master. The H. T. H. School, Madras.

தோம். கங்கையினும் புனிதமாய காவிரியின் போக்கில் உள்ளத்தைப் பறிகொடுத்தோம்.

பின்னர் இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள சுவாமிநாதப் பெருமானை வழிபட்டோம். இது முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்று. முருகனடியவர்கள் திரள்திரளாகப் போந்து வழிபாடு புரிகிறார்கள். மக்கள்,

சிவபெருமானுக்குப் பிரணவ மந்திரத்தின் பொருளைக் குழந்தை முருகன் ஆசிரியர் நிலையிலிருந்து விளக்கியது இத்தலமே யாகுமென்று கூறுகிறார்கள்.

நாங்கள் மீண்டும் குடந்தைக்குச் சென்றோம். இந் நகர் காவிரியாற்றங் கரையில் அமைந்த அழகிய நகர மாகும். இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் கும்பேசுவரர். இறைவியின் பெயர் மங்கள நாயகி. இங்குச் சாரங்கபாணிப் பெருமாள் கோயில், இராமசுவாமி கோயில், சக்கரபாணி கோயில் முதலிய பல தேவாலயங்கள் பார்க்கத் தகுந்தவையாகும். இக் காரணத்தினால் இந்நகரத்தைக் **கோயில் நகரம்** என்று குறிப்பது முண்டு. இராமசுவாமி ஆலயத்தில் உள்ள சிற்பங்களின் வனப்பையும், இராமாயண வண்ணப் படங்களையும் பார்த்து நாங்கள் பண்டைத் தமிழர்களின் கலையாற்றலை நினைந்து மகிழ்ந்தோம். கும்பேசுவரர் கோயிலில் உள்ள கல் நாதசுரம் கருத்தைக் கவருகிறது.

கும்பகோணத்தில் **மகாமகக் குளம்** என்னும் பெயர் பெற்ற குளமொன்று உண்டு. பனிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மாசித் திங்கள் மகநாளில் இந்தியாவில் உள்ள புண்ணிய நதிகள் யாவும் இதிற் கலப்பதாக மக்கள் பாராட்டி அந்நாளில் நீராடுவர். சென்ற மகநாள் 1945-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இக் குளக்கரையைச் சுற்றிலும் தேவாலயங்கள் பல கட்டப் பட்டுள்ளன.

கும்பகோணத்தில் தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழிகளையும் சிறந்த முறையில் பயிற்று வதற்கெனப் பற்பல கல்லூரிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. தொழிற் றுறையிலும் கும்ப

கோணம் மிகவும் முன்னணியில் நிற்பதாகும். கும்ப கோணத்து வெண்கலப் பாத்திரங்கள் சிறந்தவை என்று கேள்விப் பட்டிருப்பாய். மற்றும் செம்பு, பித் தளை முதலிய உலோகங்களாலும் இங்குப் பலவகைப் பொருள்கள் செய்யப்படுகின்றன. மிகச் சிறந்த ஆடை வகைகளும் இங்கே நெய்யப்படுகின்றன. இந் நகரின் சிறந்த விளைபொருள்கள் நெல், தென்னை, வாழை, வெற்றிலை முதலியனவாம்.

இத்தகைய காட்சிகளை யெல்லாம் கண்டு நாங்கள் 23-ஆம் நாள் மாலை தஞ்சைக்குப் புறப்பட்டோம். அங் கும் பொதுமக்கள் எங்களை வாயார உளமார வரவேற் றனர். தஞ்சையில் பலவகை வசதிகளும் ஒருங்கே வாய்ந்த காடார் தோட்டத்தில் நாங்கள் தங்கினோம். நகரசபையின் சார்பில் அதன் தலைவரால் எங்களுக்கு ஒரு வரவேற்பு இதழ் வழங்கப் பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

தஞ்சையில் பார்க்கத் தக்க இடங்கள் பலப்பல உள்ளன. அவற்றுள் முதன்மையாகக் குறிப்பிடத் தகுவது **தஞ்சைப் பெரிய கோவில்.** அங்கு நாங்கள் கண்ட கலைக்காட்சிகளின் எழிலை என்னென்று புகழ் வது? இராசராச சோழனின் கடவுட்பற்றையும், கலையார்வத்தையும் இங்குள்ள சிற்பங்களும் சித்திரங் களும் நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கு கின்றன. இராசராசனால் இவ் வாலயம் கி. பி. பதினோ ராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டதாம். இதற்கு இராசராசேச்சுரம், பிரகதீஸ்வரர் ஆலயம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. 216 அடி உயர முள்ள இதன் கோபுரம் வானத்தைமுட்டுவதுபோன்ற

காட்சியை அண்ணாந்து கண்டு ஆச்சரியப் பட்டோம். பெரிய கோயில் என்னும் பெயருக் கேற்ப இக் கோயி



லும் பெரியது. இக் கோயிலில் உள்ள சிவலிங்கமும் பெரியது; நந்தியும் மிகப் பெரியது. இவ் வாலயத்தில்

வீற்றிருக்கும் இறைவனின் பெயர் **தஞ்சைப் பெரு வுடையார்**: இறைவியின் பெயர் **பெரியநாயகி.** கோயிலின் உயரிய கோபுரத்தின் நிழல் தரையின்மேல் படுவதில்லை. அடியகன்று, நுனி சிறுத்து நாற்கோண வடிவில் அமைந்திருப்பதே இதற்குக் காரணமாகும். கோயிலில் உள்ள மிகப் பெரிய நந்தி பார்வையாளரை வியப்படையச் செய்கிறது. 12 அடி உயரமும், 16 அடி நீளமும், 7 அடி அகலமும், 25 டன் நிறையும் உள்ள இது 400 மைல் தொலைவிலிருந்து கருங்கல்லில் செதுக்கிக் கொண்டுவரப்பட்டதாகக் கூறுகிறார்கள். கோயிற் சுவர்களில் பழங்கால ஓவியங்களும், கல் வெட்டுக்களும் காணப்படுகின்றன.

ஆலயத்தின் அற்புதங்களைக் கண்ட நாங்கள் தஞ்சை அரண்மனையையும் அங்குள்ள சரஸ்வதி மஹால் என்னும் பெரிய நூல் நிலையம், இசைமன்றம் முதலிய இடங்களையும் கண்டு களித்தோம். அரண்மனை பழங்காலக் கட்டடமாகும். இஃது ஐந்து அடுக்குகளைக் கொண்டது. அரண்மனையின் கீழ்த்திசையில் உள்ள கொலு மண்டபத்தில் தமிழரின் பழம் பெருமைகளைக் குறிக்கும் சின்னங்கள் பலவற்றைக் கண்டோம். சரஸ் வதி மஹால் என்னும் நிலையத்தில் இரண்டாயிரத்துக்கு மேலான வடமொழி நூல்கள் கையெழுத்துப் படிக ளாகவும் ஓலைச் சுவடிகளாகவும் காட்சியளிக்கின்றன. ஆயிரக் கணக்கான பழங்காலத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை இங்கே காணலாம். இந் நூல் நிலையத்தில் பற்பல கலை நூல்கள் இருப்பதை யறிந்து நாட்டின் பற்பல விடங்களிலும் வாழும் அறிஞர்கள் இங்கு வந்து அவற்றைப் பயின்று பயன்பெறுகின்றனர்.

தஞ்சைக்கு அண்மையில் உள்ள மாரியம்மன் கோயி லுக்கும் சென்று அங்குக் காணப்படும் ஓவியச் சிறப்புக் களைப் பார்த்து இன்புற்றோம். தஞ்சையின் எழிலை ஒரு நாளில் கண்டு மகிழ்ந்து மறுநாள் வடக்கே ஏழு மைல் தொலைவில் உள்ள திருவையாற்றுக்குச் சென்றோம். திருவையாறு தென்னாட்டுப் புண்ணியத் தலங்களில் தலை சிறந்தது. **தென் கைலாயம்** என்னும் சிறப்புப் பெயரை உடையது. இரு ஊர்களுக்கும் இடையே வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்னும் நான்கு ஆறுகளும், திருவையாற்றின் வடக்கே கொள் ளிடமும் பாய்வதால் இவ்வூர் திருவையாறு எனப் பெயர் பெற்றது. திரு என்பது சிறப்பைக் குறிக்கும் அடைமொழியாகும். திருவையாற்றில் கோயில் கொண்டருளிய இறைவனின் பெயர் **ஐயாறீசன்** என் பதாகும். இறைவியின் பெயர் **அறம் வளர்த்த நாயகி** என்பதாகும். நாவரசர் இத் தலத்தில் கயிலாயக் காட்சியைக் கண்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

திருவையாறு மற்றொரு வகையிலும் சிறப்புடை யது. கர்நாடக இசைக் கர்த்தரான தியாகராஜ சுவாமி கள் தம் பிற்கால வாழ்வை இப்பதியிலிருந்து கழித்தார். அவரது கல்லறை காவிரிக்கரையில் மிகச் சிறந்த அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் தைத் திங்களில் தியாகர் இசைவிழா பத்துநாட்கள் நடை பெறுகிறது. தமிழ் நாட்டின் சிறந்த இசைவாணர்கள் பலரும் இவ்விழாவில் பங்கு கொள்வர். நல்ல வேளை யாக நாங்கள் சென்ற மறுநாளே அந்த விழா துவங்குவ தாக ஏற்பாடுகள் நடைபெற்றன. பல்லாயிரக்கணக் கான மக்கள் அமர்ந்து இசை கேட்கும் வகையில் பரந்த

தொரு பந்தல் வேயப்பட்டிருந்தது. திருவையாற்றில் சரபோஜி மன்னரால் ஏற்படுத்தப்பட்ட அரசர் கல்லூரி யைப் பார்த்து மகிழ்ந்தோம். இவ்வளவையும் கண்டு களித்த நாங்கள் தஞ்சைக்குத் திரும்பினோம்.

மறுநாள் மாலை 8-20 மணிக்கு வண்டியேறினோம். இரவு 7-30 மணிக்குச் சென்னை வந்து சேர்ந்தோம். சென்னையை அடைந்ததும். "அடடா! இதற்குள் திரும்பி விட்டோமே." என்று நாங்கள் வருத்தப் பட்டோம். எங்கள் பயணத்தில் குறைவு ஒன்றுமில்லை. குறிப்பிட்ட நேரங்களில் எல்லா நிகழ்ச்சிகளும் வெற்றியுடன் நிறை வேறின. முதலுதவிக்கென எடுத்துச் சென்ற மருந்துப் பெட்டி முதலிலிருந்தே மூடியது மூடியபடியே இருந்த தென்றால் எங்கள் பயணம் எவ்வளவு இன்பமயமாக இருந்ததென நீயே எண்ணிப் பார். நூற்றுக் கணக்கான மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட ஒரு பெருங் குழுவினரைத் தகுந்த முன்னேற்பாடுகளுடன் அழைத்துச் சென்று நலம் புரிந்த தலைமையாசிரியரை நாங்கள் எல்லோரும் பலபடப் பாராட்டினோம்: அவ ருக்கு நன்றி கூறினோம்.

இவ் வாண்டில் நாங்கள் வரலாற்றுப் புகழ்பெற்ற மதுரை இராமநாதபுரம் போன்ற இடங்களுக்குச் செல்வ தாகத் திட்டமிட்டுள்ளோம். சென்றபின் அவற்றைப் பற்றிய விவரங்களையும் உனக்கு எழுதுவேன்:

உன் அன்புள்ள,
பாரிவள்ளல்.

முகவரி :

திரு. த. புகழேந்தி
33, பெரிய தெரு,
திருவத்திபுரம்.

பயிற்சி

பொருளறிக :

பொன்னுண	எங்களும்	பிரணவம்
கவின்	மடை	சார்பில்
வீறு	புனிதமாய	வீற்றிருக்கும்
பெருமிதம்	பறிகொடு	மருங்கு

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

அணிவகுத்து, கண்கொள்ளாக் காட்சியாக, கண்ணுக்கும் கருத்துக்கும், திரள் திரளாக, பச்சைப் பசேலென.

விடை தருக :

1. சுற்றுலாக் குழுவினரின் புறப்பாடு எவ்வாறு சிறப்புடையது ?

2. சோழ நாட்டின் எல்லையைக் குறுகியதும் சுற்றுலாக் குழுவினர் கண்ட காட்சிகள் யாவை ?

3. சுவாமிமலையின் பெருமைகள் யாவை ?

4. குடந்தையில் காணப்படும் அரிய காட்சிகள் யாவை ?

5. பெரிய கோயிலின் அற்புதங்கள் யாவை ?

6. தஞ்சை அரண்மனையைப் பற்றியும் அங்குள்ள பிற நிலையங்களைப் பற்றியும் ஒரு குறிப்பு எழுதுக.

7. திருவையாற்றின் சிறப்புக்கள் யாவை ?

இலக்கணம் :

பொருள் மாறாமல் வேறு வகையில் மாற்றி எழுதுக.

1. பெற்றோரும் மற்றோரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

2. மாணவர் தத்தம் குழுஉத் தலைவர்களுடன் வரிசை கலையாமற் சென்றனர்.

3. நாங்கள் கண்ட கலைக் காட்சிகளின் எழிலை என்னென்று புகழ்வது !

11. கவிக் குயில்

"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்கள்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி!"

காலஞ்சென்ற கவியரசர் பாரதியார் எதிர்காலம் குறித்துப் பாடிய பாடல்கள் பலவற்றுள் இதுவும் ஒன்று. இப் பாடற் கருத்தை எழுத்துக்கெழுத்து அப்படியே மெய்யாக்கி வாழ்ந்த மாதரசியார் கவி. சரோஜினி தேவியார். காந்தியடிகளால், 'இந்தியாவின் கவிக் குயில்' என்று பாராட்டப்பெற்ற பெருமையுடையவர். பல பட்டங்கள் பெற்றதோடு, சட்டசபையில் வீற்றிருந்து சட்டங்களும் செய்தார். 1947-இல் இந்தியா சுதந்திர நாடானபோது ஐக்கிய மாகாணம் என்னும் உத்தரப் பிரதேசத்துக்குக் கவர்னராகவும் இருந்து ஆணுக்குப் பெண் அறிவில் மட்டுமன்று; ஆட்சி புரிவதிலும் இளைத்தவள் அல்லள் என்பதை மெய்ப்பித்தும் வாழ்ந்தவர் இக் கவியரசியாரே யாவார்.

ஐதராபாத்தில் டாக்டர் அகோரநாத சட்டோபாத்யாயர் என்ற புகழ்பெற்ற பேரறிஞருக்கும், அருங்குணமும் கவிதையாற்றலும் வாய்ந்த வரதசுந்தரி தேவியார் என்ற மாதரசிக்கும் தலைமகளாகச் சரோஜினி அம்மையார் 1879-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதியன்று பிறந்தார். கவியரசியின் சகோதரர்

இருவர். அவர்கள் வீரேந்திரநாதர், கவிஞர் ஹரீந்திர நாதர் என்பவராவர். சரோஜினியைப் போன்றே ஹரீந்திரநாதர் கவிபாடுவதில் பெரும் புகழ் படைத்தவர்: இவர் டெல்லி மத்திய சட்டசபையில் உறுப்பினரா யுள்ளார்.

இளமையில் சரோஜினிக்கு இயற்கைக் காட்சி களின் எழிலைக் கண்டு மகிழ்வதிலும், கற்பனையாகக் கவி பாடுவதிலும் பெரும் பற்றுண்டு. அம்மையார் தம் பனிரண்டாம் வயதில் மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றிபெற்றார். அப்பொழுதே 1300 வரிகள் கொண்ட

ஏரி யுவதி (Lady of the Lake) என்ற ஆங்கிலக் கவிதை ஒன்றும், 2000 வரிகள் கொண்ட ஆங்கில நாடகம் ஒன்றும் எழுதி முடித்தார் என்பது உங்களுக்கு வியப்பாயிருக்கும். நம் தமிழகத்திலும் இளமைக் காலத்தேயே பாடவல்ல திறம்பெற்ற ஞானசம்பந்தர், இராமலிங்க சுவாமிகள், பாரதியார் முதலியவர்களைப் போலக் கவியரசியும் இளம் மேதாவியாய் விளங்கினர்.

பிறகு, மேற்படிப்பிற்காக இலண்டன் அரசர் கல்லூரியிலும், கேம்பிரிட்ஜில் உள்ள பெண்கள் கல்லூரியிலும் சேர்ந்து கல்வி கற்றார். அங்கும் அம்மையார் கவி பாடும் கலையை மறக்கவில்லை. அந் நாட்டாரின் உரிமை உணர்ச்சியையும் அறிவியலையும் அறிந்து வியந்தார். அவ்வாறே தம் நாடும் விளங்கத் தம் கல்விப் பருவம் முடிந்ததும் உழைக்க உறுதிகொண்டார். இவர் கவிதைகளை ஆங்கிலக் கவிகளான சர். எட்மண்டு கோஸ், ஆர்தர் சைமன்ஸ் போன்றார் மனமாரப் பாராட்டி இவரிடம் நட்புங்கொண்டனர்; இந்தியச் சூழ்நிலையை அடிப்படையாக்கிக் கவிதைகள் எழுதுமாறு தூண்டினர். சில நாட்கள் இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினார் கவியரசியார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா—நம்மில்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்று கவியரசர் பாரதியார் பாடினார். 'ஒத்த அறிவுடையோர் ஒரே நினைப்புக் கொள்வர்' என்றொரு பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. அஃதொப்பவே, கவியரசியாரும் சாதிமதபேதச் சழக்கொழிய வேண்டும் என்னும்

கருத்துடையவரா யிருந்தார். தாம் அந்தணர் குலத்தில் பிறந்திருந்துங்கூட, நாயுடு வகுப்பைச் சேர்ந்த டாக்டர் கோவிந்தராஜுலு என்னும் அறிஞர் ஒருவரை மணம் புரிந்து, நாட்டைச் சீர்திருத்த நெறியிற் செலுத்தத் தாமே வழிகாட்டியாக நடந்து காட்டினர்.

"சொல்லுதல் யார்க்கும் எளிது; ஆனால் சொல்லிய வண்ணம் செய்தலே அரிது" என்பது வள்ளுவர் கருத்து. கவியரசியாரோ, சமுதாய நலமே தம் வாழ்வின் பயனாகக் கருதித் தாம் கூறிய சீர்திருத்த நெறியிலேயே வாழ்ந்து வந்தார். பெண்கள் முன்னேற்றம் கருதி அல்லும் பகலும் உழைத்தார். ஐதராபாத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட பஞ்சத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற அகில இந்திய நிதி ஒன்றைத் தம் செல்வாக்கால் திரட்டி உதவினர். காந்தியடிகள் நடத்திய சுதந்திரப் போரில் அம்மையாரும் முழுமூச்சுடன் உழைத்தார். அந் நாட்களில் அம்மையார் ஆற்றிய அரிய சொற்பொழிவுகள் கேட்டாரைப் பிணித்துக் கேளாதவரையும் கேட்கும்படி தூண்டுவதாய் அமைந்திருந்தன. இந்தியாவின் உரிமைப் போரின் உண்மையை ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்குச் சென்று சொற்பொழிவுகள் மூலம் அந்நாட்டார் உணருமாறு செய்தார். நாட்டு விடுதலைப் போரில் பலமுறை சிறை சென்றார். துன்பம் இன்னதென்று அறியாத செல்வக்குடியில் பிறந்து, பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த கவிக்குயில் பல ஆண்டுகள் சிறைப் பறவையாய்க் கிடந்தார். ஏன்? அக் குயிலுக்குச் சுதந்திரத்தில் இருந்த ஆர்வமே காரணம் அல்லவா?

அம்மையார் அரசியல் பணியில் ஈடுபட்டவுடன்

பாடும்பணி கூடாதாயிற்று. எனினும் அவர் பாடிய பாடல்களும், பேசிய பேச்சுக்களும் நமக்குப் புத்தகங்களாக இப்பொழுது கிடைக்கின்றன. கவியரசி சரோஜினியின் பாடல்களில் **காலப் பறவை** (The Bird of Time) **சிதைந்த இறகுகள்** (The Broken wings) **பொன்னிலை வாயில்** (Golden Threshold) என்னும் பகுதிகள் உலகப் புகழ்பெற்றவை. இக் கவிதைகள் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுதத் தேன் துளிகளாகும். நீங்கள் பிற்காலத்தில் இவற்றைத் தவருமல் படித்தல் வேண்டும்.

கவியரசியாய் இருந்த சரோஜினி தேவியார் இந்தியா தன்னுரிமை பெற்ற நாடானதும் புவியரசியாய் ஓராண்டுக்காலம் பாராண்டார். அவர் ஐக்கிய மாகாணக் கவர்னராக நியமிக்கப்பட்டார். முன்னொரு முறை லக்ஷ்மணபுரியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் அம்மையாரும் கலந்து சொற்பெருக் காற்றினர். லக்ஷ்மணபுரியை லக்னௌ (Lucknow) என்றும் கூறுவர். அப்போது அம்மையார் லக்னௌவில் கூடியுள்ள நமக்கு '**லக்னௌ**' (அதிருஷ்டம் இப்போதுதான்—Luck—Now) என்று ஆங்கிலத்தில் சிலேடையும் நகைச்சுவையும் ததும்பப் பேசினர். அந்த லக்னௌ நகரில், 1949-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2-ஆம் நாள் தம் எழுபதாம் வயதில் மாரடைப்பால் பொன்னுடல் நீத்துப் புகழுடம் பெய்தினர். இந்தியா ஒரு சிறந்த தலைவியை இழந்து துயருற்றது. ஆங்கில மொழிக்கும் சிறந்த கவியரசியின் இழப்பு பெரிதாயிற்று. உலகமே அம்மையார் பிரிவுக்கு அழுதது. இவர் பிரிவுத்துயரைப் பொருத தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்,

"வெட்டி முறித்த விறகெனஓர் வீணையினைச்
சுட்டெரித்த பாவியென்று தூற்றுதோ?—சிட்டர்புகழ்
அன்னை சரோஜினியின் ஆவியுண்ட கூற்றமே
உன்னையும் இந்த உலகு"

என்னும் கையறுநிலை பாடி வருந்தினர்.

கவிக்குயில் நம்மைவிட்டுப் பறந்து போனலும் அக் குயிலின் குரல் நமக்குக் கேட்டுக் கொண்டு தானிருக்கிறது. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் குறளை மெய்ப்பித்த கவிக் குயிலின் பாடல்களைப் படித்து இன்புறுவதோடு அவரைப் போலவே தன்னலமற்ற வாழ்வும், பொதுநலச் சேவையும் நம் நோக்கமாகக் கொண்டு நாம் நாட்டுக்கு உழைப்போமாக.

பயிற்சி

பொருளறிக :

பார்	சழக்கு	கூற்றம்
வாய்த்த	ஆர்வம்	கையறுநிலை
எழில்	தன்னுரிமை	இழப்பு
பற்றி	புவியரசி	
மேதாவி	சிட்டர்	

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

அல்லும் பகலும், சீரும் சிறப்பும், பேரும் புகழும், ஈடுபட்ட, தன்னலமற்ற.

விடை தருக :

1. 'கவிக் குயில்' என்று யாரை யார் பாராட்டினர்? அப்படிச் சொன்னது எப்படிப் பொருந்தும்?

2. கவியரசி எந்த ஊரில் பிறந்தார்? அவர் பெற்றோர் யாவர்?

3. சரோஜினி தேவியார் கல்வி கற்ற முறையைப் பற்றி விளக்குக ?

4. கவியரசி 'சாதி மத பேதம் கருதாதவர்' என்பதை அவர் வாழ்க்கையிலிருந்து எப்படித் தெரிந்துகொள்ளலாம் ?

5. கவியரசி நாட்டுக்குச் செய்த தொண்டைப்பற்றிச் சுருக்கிக் கூறுக.

6. கவியரசி எழுதிய சிறந்த நூல்கள் யாவை ?

7. கவிக்குயில் நகைச்சுவைபடப் பேசுமாற்றலுடையவர் என்பதை ஓர் எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

8. கவிக்குயிலின் பிரிவுத் துயரைப் பொறாது தேசிக விநாயகம் பிள்ளை பாடிய பாடலின் கருத்தைச் சுருக்கி வரைக.

9. சரோஜினி தேவியாரின் அருங்குணங்கள் யாவை ?

இலக்கணம் :

1. பின்வரும் சொற்களில் உள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சங்களைத் தனித் தனியே எடுத்தெழுதுக :

பிறந்தார், கண்டு, உண்டு, உழைக்க, சேர்ந்த, உழைத்தார், இறந்து, பொருத.

2. உழைப்போம், பாடினர், திரும்பினர், பிறந்தார்— இவற்றின் பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறுக.

12. குடிசைத் தொழில்கள்

நம் நாட்டில் ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றத்துக்கு அடிப்படையாகும். நாட்டின் பெரும்பாலான மக்கள் கிராமங்களிலேயே வசிக்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் உழவர்கள். மற்றும் தச்சர், கொல்லர், கருமார், குயவர் முதலிய தொழிலாளர்களும் உண்டு. உழவர்கள் எத்துணை உழைத்தாலும் அவர்களுக்குப் போதிய வருவாய் கிடைப்பதில்லை. எனவே அவர்கள் பயிர்த்தொழிலுடன் ஏதேனுமொரு துணைத்தொழிலும் புரிவது இன்றியமையாததாகும். துணைத்தொழில்கள் புரிவதற்கேற்ற மூலப் பொருள்கள் கிராமங்களில் ஏராளமாகக் கிடைப்பதுண்டு. இங்ஙனம் செய்யப்படும் தொழில்கள் இயந்திரங்களின் உதவியின்றி வீட்டில் கையினாலேயே செய்யப்படுகின்றன. இவற்றையே **குடிசைத் தொழில்கள்** என்று கூறுகிறோம். பண்டைக் காலத்தில் நம் நாட்டில் குடிசைத் தொழில்கள் பெருவாரியாகச் செய்யப்பட்டு வந்தன. இயந்திரங்களின் தோற்றத்தினாலும், அந்நியர் ஆட்சியில் ஆதரவு இன்மையாலும், குடிசைத் தொழில்கள் நசித்துவரலாயின. கிராம மக்கள் அவற்றில் அவ்வளவாகக் கவனம் செலுத்தாமையால் தம் தேவைக்குரிய எல்லாப் பொருள்களுக்கும் பிறர் கையை எதிர்பார்க்கலாயினர்.

உழவுத் தொழிலே இந்தியாவில் பெரும்பாலான மக்கள் மேற்கொண்டொழுகும் தொழிலாகும். இத்-

தொழில் ஓராண்டு முழுவதும் நடை பெறுவதில்லை. உழவு ஓராண்டில் ஏழெட்டு மாதங்களே நடைபெறு கிறது. இவ்வாறு தொழிலில்லாத மாதங்களிலும் அவ்வப்போது கிடைக்கும் ஓய்வு நேரங்களிலும் நம் நாட்டு மக்கள் தூங்கியும், வீண் பேச்சுப் பேசியும் தம் பொழுதைப் போக்கி விடுகிறார்கள். இதனால் எவ்வளவு இழப்புண்டாகிறது! இவ்வோய்வுக் காலங்களைப் பாழாக்காமல் கைத்தொழில்களில் ஏதேனும் தொழில் ஒன்றைச் செய்து வருவார்களானால் ஏழ்மையை ஓரளவுக்குக் குறைக்க முடியுமல்லவா?

குடிசைத்தொழில் என்பது ஒருவனுடைய மூலாதாரத் தொழிலுக்குத் தடையாகவும் இருக்கக் கூடாது. இத்தொழிலுக்கு ரூ. 1000, 2000 என்று அதிக முதல் போடும்படி நேர்வதும் கூடாது; உழவனால் தாங்குமளவுக்குக் குறைந்த தொகையாகத்தான் முதல் வைக்க வேண்டும். இத் தொழிலுக்குரிய மூலப் பொருள்களும் கிராமவாசி வாழும் இடத்திலேயே மிகுந்த செலவில்லாமல் ஏராளமாய்க் கிடைக்கக் கூடியனவாயும் அமையவேண்டும். பருத்தி விளையாத இடத்தில் நூல் நூற்றலைக் குடிசைத்தொழிலாக மேற்கொள்ளலாகாது. பனையோலை கிடைக்காத இடத்தில் பனையோலைப் பாய் முடைதலும் விசிறி செய்தலும் குடிசைத் தொழிலாகா. கிராமத்தில் எந்தப் பொருள் ஏராளமாய்க் கிடைக்குமோ அந்தப் பொருளைக்கொண்டு பிற தொழிலுக்கும் இடையூறில்லாமல் செய்யும் தொழிலே குடிசைத் தொழில் என்று கூறப்படும்.

மிகுந்த பயிற்சியின்றியும், எளிதாகவும் குடும்பத்தில் உள்ள பலராலும் செய்யக் கூடியதாகவும், நல்ல வரு

வாய் தரக்கூடியதாகவும் குடிசைத் தொழில்கள் அமை வதே நன்மை தருவதாம். ஒரு பெரிய ஆலையில் நிக ழும் தொழிலுக்கு வேண்டிய பலவேறு சிறு பகுதியான தொழிலை மேற்கொள்ளுவதும் குடிசைத் தொழிலே யாகும். இந்நிலைமை ஜப்பான் தேசத்தில் அதிகமா யுள்ளது.

ஒரு நாடு பெருந் தொழிலுக்கு எவ்வளவு ஊக்கம் தரவேண்டுமோ அவ்வளவு ஊக்கமும் குடிசைத்தொழி லுக்கும் தருதல் அந்நாட்டின் முன்னேற்றத்துக்கு வழி யாகும். ஏனெனில் குடிசைத்தொழிலில், குடிமக்களில் முக்காற் பகுதியினர் ஈடுபடுகின்றார்கள். இதற்கு மாறாகப் பெருந்தொழிலிலோ மிகப் பெருஞ் செல்வர் களும், நடுத்தரச் செல்வர்களுமே ஈடுபடமுடியும். ஆத லால் பலருக்கும் நன்மைபுரிந்து வறுமையைத் தவிர்க்க வல்ல குடிசைத் தொழிலுக்கே தக்க ஆதரவு தருதல் வேண்டும்.

ஆயிரம் பேர் செய்யும் வேலையை ஓரியந்திரம் விரைவில் செய்து முடித்துவிடக் கூடுமாதலால் பலர் பலநாள் வேலையின்றிப் போகவும் இடமுண்டாகிறது. இதனால் வேலை யில்லாத் திண்டாட்டமும் ஏற்படுகிறது. வேலையில்லாத போது வீணாகக் காலத்தைக் கழிக்க வேண்டி வருகின்றது. கல்வியறிவு குறைந்துள்ள நம் நாட்டார்க்குப் பொறிகளை இயக்கும் நெறிகளும் எளி தில் தெரியாது. ஆதலின் எல்லோரும் இன்புற்றிருக்க கும் வழியாவது நாடு முழுவதிலும் பரவலாகச் சிதறிக் கிடக்கும் குடிசைத் தொழிலை ஆதரிப்பதேயாகும். இதையறிந்தே நம்நாட்டுத் தந்தை மகாத்மா காந்தியடி களும் குடிசைத் தொழிலை ஆதரிப்பதையும் தம் திட்டங்

களில் ஒன்றாகச் சேர்த்து உழைத்தார். தாமே சில திட்டங்களை நடைமுறையில் கொண்டுவந்தார். கைராட்டையும் கதராடையும் காந்தியடிகளின் கருத்துக்கு இனியவை என்பதை எவரே அறியாதார்?

இனி, குடிசைத் தொழில்களாக நாம் எவற்றை மேற்கொள்ளலாம் என்று கவனிப்போம். தேனீ வளர்த்தல், சோப்புச் செய்தல், காகிதம் செய்தல், கோழிப் பண்ணை வைத்தல், பாற் பண்ணை வைத்தல், வாத்து, புறா முதலியவற்றை வளர்த்தல், நூல் நூற்றல், பருத்தியில் பஞ்சு பிரித்தல், கொட்டையைப் பிரித்தல், தென்னை பனை மூங்கில் மரங்களைப் பயன் படுத்திச் செய்யக்கூடிய சிறுதொழில்கள், கால்நடை வளர்த்தல், காய்கறித் தோட்டம் அமைத்தல், மட்பாண்டம் வனைதல், சிறுசிறு பொம்மைகளை மண்ணாலும் தவிட்டாலும் மரத்தாலும் உருவாக்குதல், மாட்டுக் கொம்புகளையும் தந்தங்களையும் கொண்டு பொத்தான், சீப்பு, கத்திப்பிடி போன்றனவற்றைச் செய்தல், பூந்தோட்டம் அமைத்தல், சாயத் தொழிற்சாலை நடத்தல், கூடை முடைதல், ஓவியந் தீட்டுதல், ஊறுகாய் வடகம் அப்பளம் முதலிய தயாரித்தல், இலை தைத்தல், கயிறு திரித்தல் முதலியன வெல்லாம் குடிசைத் தொழில்களாக மேற்கொள்ளத் தக்கனவேயாகும். ஆனால் காலமும், இடமும், பொருளும், தொழில் திறமும், பிறவும் அறிந்து தக்கவாறு நடத்துவதே பலன்பெறும் வழியாகும்.

இத்தகைய சிறு கைத்தொழில்களால் சிறந்துள்ள நாடுகள் பல உள. ஜப்பான், ஜெர்மனி, டென்மார்க், பெல்ஜியம் முதலிய நாடுகள், உலையா முயற்சியுடன் ஒரு கொடியையும் வீணாக்காமல் ஓய்வுக்கால வேலையாக

இச் சிறு கைத்தொழில்களை மேற்கொண்டு பலன் மிகப் பெற்றுள்ளன.

இங்குக் கூறிய ஒவ்வொரு சிறு கைத்தொழிலையும் பற்றி நீங்கள் மேல் வகுப்பில் விரிவாகப் படிக்கலாம். இத் தொழில்களில் அதிக வருவாயைத் தரக்கூடியதும், முதலீடும் உழைப்பும் அதிகம் வேண்டாததும் தேனீ வளர்த்தலே எனலாம். இந்நாளில் கல்வி அதிகாரிகளும் கல்வித் திட்டங்களில் குடிசைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றை ஒவ்வொரு மாணவரும் கற்றுப் பயனுறுமாறு ஏற்பாடு செய்துள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

குடிசைத் தொழில் வெற்றிபெற ஊக்கம், உறுதி, உழைப்பு முதலிய குணங்களை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். தேங்காய் நார், மூங்கில், கந்தைத்துணி போன்ற பொருள்களைக் கண்டபடி எறிந்தும் எரித்தும் விடாமல் அவற்றைக் கொண்டு காகிதம் செய்யலாம்; எரு உற்பத்தி செய்யலாம்; இன்னும் முயன்றால் பல வழிகளில் பயன்படுத்தலாம். உழைப்பின் வாராத உறுதிகள் இல்லை. ஆதலால் மேன்மேலும் உழைத்துக் குடிசைத் தொழில்வளம் ஓங்க ஒவ்வொருவரும் பாடுபடுவோமாக.

பயிற்சி

பொருளறிக:

மூலப் பொருள்	நெறி	தவிர்க்க
ஏது	பொறிகள்	முதலீடு

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

ஈடுபடு. மேற்கொள்ள. நடைமுறையில். கணக்கற்ற.

விடை தருக :

1. குடிசைத் தொழில்கள் எங்ஙனம் இன்றியமையாதனவாகும்?

2. 'குடிசைத் தொழில்கள் அவ்வவ் விடங்களிற் கிடைக்கும் மூலப் பொருள்களுக்கு ஏற்றவாறு இருத்தல் வேண்டும்.' ஏன்?

3. இயந்திரத் தொழில்களை ஆதரிப்பதைவிடக் குடிசைத் தொழில்களையே ஆதரிக்க வேண்டுவது ஏன்?

4. நம் நாட்டவர் மேற்கொள்ளக்கூடிய குடிசைத் தொழில்கள் யாவை?

5. குடிசைத் தொழில்களால் மேன்மையடைந்துள்ள நாடுகள் யாவை?

இலக்கணம் :

1. இப் பாடத்தில் முதற் பாராவில் உள்ள பெயர்களை எடுத்தெழுதி அவை இன்னின்ன வேற்றுமை உருபுகளை ஏற்றவை என்பதைக் குறிப்பிடுக.

2. இதனால் எவ்வளவு இழப்புண்டாகிறது!—இதனைப் பொருள் மாறுபடாமல் செய்தி வாக்கியமாக மாற்றிக் கூறுக.

3. ஆதலால் பலருக்கும் நன்மை புரிந்து, வறுமையைத் தவிர்க்கவல்ல குடிசைத் தொழிலுக்கே தக்க ஆதரவு தரவேண்டும்—குடிசைத் தொழில் என்னும் சொல்லை எழுவாயாக அமைத்து இதனைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்துக் கூறுக.

13. நான் சிறுவனாக இருந்தபோது

எனக்கு அப்போது வயது ஆறு இருக்கும். எங்கள் வீடு தெருவின் ஒரு முனையில் இருந்தது. பள்ளிக்கூடம் போய் வந்தவுடனே மாலை வேளையில் விளையாடிய பிறகு வீட்டின் எதிர்ப்பக்கத்தில் சுவர் ஓரமாக உட்காரு வேன். என்னைவிட்டுப் பிரியாமல் பழகிய பையன்

வேணு என்னும் ஒருவன். அவன் என் எதிரே வந்து உட்காருவான். அவன் என்னைப் பார்த்து, "ஏதாவது கதை சொல்லு," என்று கேட்பான். அவனும் என் வயது உள்ளவனே. அவன் என்னைப் பார்த்துக் கதை கேட்டவுடனே, எனக்கே என்னைப்பற்றிப் பெருமை யாக இருக்கும். உடனே எதையாவது சொல்லத் தொடங்குவேன். பெரும்பாலும் நாய், பூனை, கோழி. காக்கை, குள்ள நரி, புலி, கரடி இவைகளைப்பற்றியே கதை சொல்வேன். வேணு என் எதிரே வாயைத் திறந்தபடி கேட்டுக்கொண்டிருப்பான். நான் சலிக்காமல் எதையாவது சொல்வது வழக்கம்.

என் கதையில் முன்பின் தொடர்போ, நிகழ்ச்சிப் பொருத்தமோ ஒன்றும் இராது. அம்மாவும் அக்காளும், பாட்டியும் ஆசிரியரும் சொன்ன கதைகளை எல்லாம் கூட்டிக் குழப்பிப் பொருத்தம் இல்லாமல எதையாவது சொல்லிக்கொண்டிருப்பேன். ஆனால் அந்தப் பையன் எப்படித்தான் பொறுமையாகக் கேட்டானோ தெரிய வில்லை! நாடோறும் சிறிது நேரமாவது கதை சொல்லும் படி கேட்பான்.

என் கதைகளோ முதலும் முடிவும் இல்லாத கதை கள்! வாயில் வந்தபடி, இது அதைக் கடித்தது: அது இதைத் துரத்தியது: அது ஏமாற்றியது: இது ஏமாந் தது என்று நினைத்ததை எல்லாம் சொல்வேன். அத னால் பெரியவர்களைப்போல் நானும் கதை சொல்லுகிற வன் என்னும் செருக்கு எனக்கு இருந்தது.

என் செருக்கு எல்லாம் திடீரென்று இல்லாமற் போயிற்று. ஏழு, எட்டு வயதாக இருந்தபோது, பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளில் வளர்ந்தவர்கள், பேய்,

பிசாசுக் கதைகளைச் சொல்லி என் கற்பனையைக் கெடுத்துவிட்டார்கள். என்னைப் பயங்கொள்ளியாக்கி விட்டார்கள். அவற்றைக் கேட்ட பிறகு நான் விளக்கு வைத்தபின் தெருவில் தலைகாட்டாமல் வீட்டுக்குள் ஒடுங்கிவிட்டேன்.

வீட்டில் தெற்குப் புறத்துத் தாழ்வாரத்தில் இருந்து பார்த்தால் வேப்பமரம், நுணாமரம், நாவல்மரம் ஆகிய வற்றின் தலைகள் நன்றாகத் தெரியும். இருட்டில் தோன்றிய அவற்றின் கிளைகளில் பேய்களும் பிசாசு களும், மரக்கால் பல்லனும், மிடாவிழுங்கியும் இருப்பது போல் எண்ணுவேன். அதோ அவன் தலை, இதோ அவனுடைய கைகள், அதோ கால்கள், இதோ வயிறு என்று இப்படிப்பட்ட கற்பனைகள் வளரும். உடனே, கண்ணை மூடிக் கொண்டு குப்புறப் படுத்துக்கொள் வேன். என் பயத்தைக் கண்ட பாட்டி அந்தத் தெற் குத் தாழ்வாரத்தில் என்னை இருக்கவிடாமல், வடக்குத் தாழ்வாரத்திற்கே அழைத்துக் கொண்டு போய் விடுவாள்.

இல்லாததைக் கற்பனை செய்து கோழையாக அஞ்சி ஒடுங்கியிருந்த அந்த நாட்களை இப்போதும் நினைத்து வருந்துகிறேன். சிறு பிள்ளைகளுக்குப் பேய் பிசாசு முதலியவற்றைப் பற்றிச் சொல்வது எவ்வளவு கெடுதி என்பதை நான் இப்போது நன்றாக உணர் கிறேன்.

*　　　*　　　*

ஒரு நாள் எதிர்வாடையில் மூன்றுவது வீட்டில் ஒரு பையனுடைய பாட்டி இறந்துபோய் விட்டாள். அந்தப் பையனோடு நான் விளையாடுவது வழக்கம்.

அவனுடைய பாட்டி இறந்துபோனபோது அவன் கதறிக் கதறி அழுதான். பாட்டியின் உடம்பைச் சுடு காட்டுக்கு எடுத்துச் சென்றபோது அந்தப் பையன் 'ஓ' என்று அலறி அலறித் தேம்பியதைக் கண்டு நானும் அழுது விட்டேன். மாலையில் இது நிகழ்ந்தது.

வீட்டுக்குத் திரும்பிய பிறகு அன்று இரவு என்னால் சாப்பிட முடியவில்லை. என் பாட்டியும் இறந்து விடுவாளோ என்று கற்பனை செய்து கண்ணீர் விடத் தொடங்கினேன், அழுதேன்; தேம்பினேன். படுக்கையில் படுத்தபடியே அழுது கண்ணீரால் தலையணையையும் சிறிது நனைத்து விட்டேன். பக்கத்திலிருந்த என் பாட்டி இதைத் தெரிந்துகொண்டு. "இனிமேல் நீ சாவு வீட்டுக்குப் போகாதே," என்று சொல்லித் தன் மடிமேல் படுக்க வைத்துக் கொண்டாள். அப்படியே தூங்கி விட்டேன். என் பாட்டி சில ஆண்டுகளுக்கு முன்னர் உண்மையாகவே இறந்து விட்டாள். அன்று நான் சில துளிக் கண்ணீர் விட்டேனே தவிர, அது போல் அழவில்லை. வாழ்க்கையின் அனுபவம் எனக்குக் கல்மனத்தைக் கொடுத்து விட்டது.

*　　　　*　　　　*

சிறிய வயதில் சாதி பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. வீட்டில் உள்ள பெரியோர்கள் என்னைப் பார்த்து, "வேறு யார் வீட்டிலும் சாப்பிடக் கூடாது. தண்ணீரும் குடிக்கக் கூடாது. கடையிலும் கண்டதை வாங்கித் தின்னக் கூடாது," என்று அடிக்கடி சொல்லியிருந்தார்கள். அதனால் எவ்வளவு நீர் வேட்கை எடுப்பினும் பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்குத் திரும்பி வந்த பிறகு தான் தண்ணீர் குடிப்பேன்.

ஒருநாள் ஒரு பையனுடைய வீட்டிற்குப் போயி ருந்தபோது, அவனுடைய அம்மா என் கையில் ஒரு முறுக்குக் கொடுத்தார்கள். "வேண்டாம்," என்று மறுத்து வாங்கிக் கொள்ளாமல் இருந்தேன். வற்புறுத்தி னார்கள். பிடிவாதமாக மறுத்தேன். காரணம் கேட் டார்கள். வீட்டார் சொன்னதைக் கூறினேன். அதைக் கேட்டுச் சிரித்தார்கள். என்னுடைய அம்மாவைப் பற் றிக் கேலியாக பேசினார்கள். அதற்குப் பிறகு அந்த வீட்டுக்குப் பலநாள் போகாமலே நின்று விட்டேன். "ஒன்றும் தெரியாத பையன்," என்று அவனுடைய அம்மாவும் அப்பாவும் என்னைப்பற்றி அடிக்கடி சொல்லி வந்தார்கள். உயர்நிலைப் பள்ளியில் போய்ச் சேர்ந்த வுடன் என்னுடைய அறியாமை எனக்குத் தெரிந்து விட்டது. இப்பொழுது சாதி என்பது பேய் பிசாசு போல் இல்லாத ஒன்று என்னும் உண்மை எனக்கு விளக்கமாகத் தெரிகிறது.

உயர்நிலைப் பள்ளிக்குப் போய் ஐந்தாம் வகுப்பில் படிக்கும்போது வேறு பிடிவாதம் வந்து சேர்ந்தது. ஆசிரியர் ஒருநாள் சுகாதார பாடம் கற்றுக் கொடுத்த போது காப்பி குடிப்பதனால் தீமை உண்டு என்றுஅழுத் தம் திருத்தமாகச் சொன்னார். அன்று முதல் காப்பி குடிக்கும் வழக்கத்தை விட்டு விட்டேன். மறுநாள் வீட்டில் அம்மா காப்பி கொடுத்தபோது, "வேண்டாம்," என்று பிடிவாதமாக மறுத்தேன். ஆசிரியர் சொன்ன காரணத்தைச் சொன்னேன். அம்மாவும் பாட்டியும் சிரித்தார்கள். ஆனாலும் காப்பியைக் குடிக்கவில்லை. அதன் பிறகு இன்றுவரையில் நான் காப்பி குடித்ததே இல்லை. எனக்கு நடத்தப்பட்ட தேநீர் விருந்துகளிலும்

நான் காப்பி குடித்ததில்லை; தேநீரும் குடித்ததில்லை; இவ்வளவு வயதுவரை காப்பி இல்லாமலே காலம் கழித்த பிறகு இனியும் தேவையில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

என்னுடைய ஒன்பதாம் வயதில் ஒரு திருமணக் கூட்டத்தில் குப்பன் என்ற பையனுடன் சேர்ந்து வெற்றிலைப் பாக்குப் போட்டேன். நாக்குச் சிவப்பதைமகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு பெரியவர் என்னிடம் அன்போடு வந்து, " தம்பி! வெற்றிலை போட்டால் படிப்பு வராது; இனிமேல் போடாதே," என்றார். நான் உடனே வாயில் இருந்த வெற்றிலைப் பாக்கைக் கீழே துப்பிவிட்டேன். அதன் பிறகு இன்று வரையிலும் எந்தக் காரணம்பற்றியும் நான் வெற்றிலைப் பாக்குப் போட்டதே இல்லை. அதனால் கெடுதி இல்லை என்பதை இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன்; ஆனாலும் அது தேவை இல்லை என்று எண்ணி விட்டேன்.

காற்றாடி விடுவதில் எனக்கு விருப்பம் மிகுதி. யார் எங்கே காற்றாடிவிட்டாலும் அங்கே நின்று பார்த்துப் பொழுது போக்குவது என் சிறு வயதில் பழக்கம். சிறிது வளர்ந்த பிறகு, நானே காற்றாடி விடவும், காற்றாடி செய்யவும், சூத்திரம் சரியாகப் பார்த்து முடிபோடவும் கற்றுக்கொண்டு தேர்ந்தவன் ஆகிவிட்டேன். காற்றுக் குறைவாக இருந்த நேரத்தில் காற்றாடி அமைதியாகத் தூங்குவதைக் காணுவதில் எனக்கு அளவிலா மகிழ்ச்சி. ஆனால் அந்தக் காற்றாடிக்கும் மேலே, மிக்க உயரத்தில் வானத்தோடு ஒட்டினாற்போல் கழுகுகள் அமைதியாகப் பறக்கும் காட்சியை அடிக்கடி பார்த்து வியப்படைந்

திருக்கிறேன். "அந்தக் கழுகுகள் போல் அவ்வளவு உயரத்தில் நம்மால் பறக்க முடியாதா ?" என்னும் ஏக்கம் எனக்கு அந்த வயதில் உண்டு. இந்த வயதிலும் எனக்கு அந்த ஏக்கம் முற்றிலும் தீரவில்லை என்றே சொல்லவேண்டும்.

— டாக்டர் மு. வரதராசனார்

பயிற்சி

பொருளறிக :

முனை	க்ஷுத்திரம்	மிடா
செருக்கு	தூங்குதல்	
ஏக்கம்	முற்றிலும்	

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

பெரும்பாலும், சலிக்காமல், கூட்டிக் குழப்பி, கதறிக் கதறி, முற்றிலும், அழுத்தம் திருத்தமாக.

விடை தருக :

1. சிறுவனாக இருந்தபோது ஆசிரியர் கூறிய கதைகள் எப்படி இருக்கும்?
2. கதை சொல்வதில் ஆசிரியர் செருக்கடைந்தமைக்குக் காரணம் என்ன?
3. பேய்க் கதைகளைக் குழந்தைகளுக்குக் கூறுவது தகாது என்பதை விளக்கும் நிகழ்ச்சி யாது?
4. வாழ்க்கை அனுபவத்தின் பயன் யாது?
5. இளம் பருவத்திலேயே ஆசிரியர் விலக்கிய பழக்கங்கள் யாவை?
6. 'இந்த வயதிலும் எனக்கு அந்த ஏக்கம் முற்றிலும் தீரவில்லை என்றே சொல்லவேண்டும்.' —இதனை இடஞ்சுட்டி விளக்குக.

இலக்கணம் :

1. இப் பாடத்தில் தலையணை, காற்றாடி, வெற்றிலை முதலிய சொற்கள் வந்துள்ளன. இவற்றைச் சில மாணவர்கள் தலையாணி அல்லது தலகாணி என்றும், காத்தாடி என்றும், வெத்திலை என்றும் கூறுவதுண்டு. இவற்றைச் சரியான முறையில் நீங்கள் எழுத மறக்கலாகாது.

2. சில விளம்பரங்கள் கீழ்வருமாறு எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பிழை நீக்கி எழுதுக.

(i) பிரதி ஞாயிறு தோறும் விடுமுறை.

(ii) உத்திரவன்னியில் உள்ளே வறக்கூடாது.

(iii) வண்டி நிரைந்துவிட்டது.

(iv) இங்கே நயமான வெண்ணை விர்க்கப்படும்.

3. எட்டாம் வகுப்பு மாணவர்கள் சிலர் எழுதிய கட்டுரைக் குறிப்புப் புத்தகங்களிலிருந்து எடுத்துத் திருத்தப்பட்ட சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை நன்கு அறிந்து பிழையின்றி எழுதப் பயில்வது நலம்.

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அடமானம்	அடைமானம்	துளிர்	தளிர்
அதிர்ஷ்டம்	அதிருஷ்டம்	துடங்கு	தொடங்கு
இரன்டு	இரண்டு	எண்ணை	எண்ணெய்
இடை(நிறை)	எடை	என்னமோ	என்னவோ
உசிர்	உயிர்	ஒருவள்	ஒருத்தி
கார்க்கும்	காக்கும்	ஒருக்கால்	ஒருகால்
கேழ்வி	கேள்வி	நாத்தம்	நாற்றம்
சமயல்	சமையல்	முயற்ச்சி	முயற்சி
சிலவு	செலவு	முழுங்கு	விழுங்கு
தாப்பாள்	தாழ்ப்பாள்		

அரும்பொருள் அகராதி

அகவை - வயது
அதிபதி - தலைவன்
அமரர் - தேவர்
அரியேறு - ஆண் சிங்கம்
அரும்பி - மலர்ந்து
ஆணை - கட்டளை
இவர்ந்து - ஏறி
இழப்பு - நஷ்டம்
ஈடுபட்டு - மனத்தைச் செலுத்தி
எங்ஙனம் - எப்படி
எய்தல் - அடைதல்
எழில் - அழகு
ஏக்கம் - மன வருத்தம்
ஏந்தல் - தலைவன்
ஒல்லும் வகை - இயன்ற வகை
ஓம்பி - காத்து
கடத்தி - செலுத்தி
கதிர் - கிரணம்
கவின் - அழகு
கனல் - நெருப்பு
காந்தீயம் - காந்தியின் கொள்கை
கூர்ந்தறிந்து - நுணுகி அறிந்து
கூற்றம் - எமன்
கையறு நிலை - இறந்தோரைப்பற்றிப் பாடும் துன்பப் பாடல்
சழக்கு - வழக்கு, சண்டை
சாதனம் - வழி
சார்பில் - தொடர்பில்
சிட்டர் - தெய்வத் தொண்டர்
சிதை - ஈமம், பிணம் சுடுவதற்காக அடுக்கப்பட்ட விறகுக் குவியல்
சூத்திரம் - விசைக் கயிறு
சூழ்நிலை - சுற்றுப்புற நிலை
சூளுரை - சபதம்
செருக்கு - ஆணவம்
செவ்வன் - ஒழுங்காக
தவிர்க்க - நீக்க
தளபதி - சேனைத் தலைவன்
தன்னுரிமை - சுய உரிமை
தாளாண்மை - முயற்சி
திண்ணியர் - மனவலியுடையவர்
திரள் - கூட்டம்
துஞ்சுதல் - தூங்குதல்

நெறி - வழி
நேர்மை - நடுவு நிலைமை
பறிகொடுத்தல் - ஒன்றின் வசமாதல்
பிணித்தனர் - கட்டினர்
பிரணவம்-ஓம் என்னும் மந்திரம்
புவியரசி - நாட்டின் அரசி
பொதுமை - சமரசத்தன்மை
பொறிகள் - யந்திரங்கள்
பொன்னை - அழகான, சிறந்த
மருங்கு - பக்கம்
மலைத்தல் - வியப்படைதல்
மிடா - பெரும்பானை
முதலீடு - மூலதனம்
முன்றில் - முற்றம்
மூலப்பொருள் - கைத்தொழில் செய்வதற்கு வேண்டிய முதற்பொருள்
மேதாவி - மிக்க அறிவுள்ளவர்
வாக்கு - சொல்
வாய்த்த - பொருந்திய
வாளா - வீணாக
விஞ்சியது - மிகுந்தது
விருது பரிசு
விலா - முதுகெலும்பு
விழுப்பணி - சிறந்த தொண்டு
வீறு - பெருமை
வீற்றிருத்தல் - பெருமை தோன்ற அமர்ந்திருத்தல்
வெற்றுரை - பொருளற்ற சொல்

இளங்கோ வாசகம்

[மூன்றும் புத்தகம் - மூன்றும் படிவம்]

இரண்டாம் பிரிவு

ப. முருகன், M. A.
மாநிலக் கல்லூரி, சென்னை

வித்துவான் தணிகை. உலகநாதன்
இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவழக்காரத் தெரு :: சென்னை - 1

பதிப்புரிமை
முதற் பதிப்பு: நவம்பர், 1953
மறு பதிப்புக்கள்: மே 1954, ஜூன், 1955

Approved by the Madras Text Book Committee for class use Vide Page 119 of Fort. St. George Gazette, supplement to Part I-B, dated 19-5-'54

சக்தி பிரஸ், சென்னை - 1.

முன்னுரை

'இளங்கோ வாசகம்' என்னும் இந் நூல்வரிசை உரிமைபெற்ற நம் மாநில மாணவ மாணவியரின் தமிழ் வளம் கருதி வெளியிடப் பெற்றது. ஒவ்வொரு பாடமும் பன்முறை கூர்ந்து நோக்கி அரசியலாரின் பாடத் திட்டத்தின் சீரிய நோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது.

'புதிய கல்விமுறைக் கேற்ற புதிய புத்தகம் வேண்டும்' என்னும் ஆர்வம் மிக்கது இக் காலம். இந் நிலைக்குத் தகுந்தவாறு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்தம் மனப்போக்கினை நன்கு உணர்ந்து அவர்கள் விரும்பிக் கற்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய கற்பனைகள், கதைகள், உரையாடல், நாடகம், வரலாறு, விஞ்ஞான வளர்ச்சி, வானொலிப் பேச்சு, கடிதம், கைத்தொழில் முதலிய பல துறைப் பாடங்கள் இந் நூல்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அரசியலாரால் குறிப்பிடப்பட்ட குறட்பாக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பியல்பாகும். உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் போதிய அளவிற்கு மேலும் கொடுக்கப்பெற்றுள்ளன. மாணவர்தம் சுவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்யுள், உரைநடைப் பகுதிகளில் ஆசிரியர்கள் தம் விருப்பம்போல் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்நூலில் வரும் தம் பாடல்களையும் பாடச் செய்திகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு வழங்கிய கவிஞர்கட்கும் பதிப்பகத்தினருக்கும் பத்திரிகாசிரியர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

வருங்காலப் பெரியோர்களாகிய மாணவர் உலகத்துக்கு இந்நூல் காணிக்கையாகும். இதனை எங்கள் இனிய தமிழாசிரியத் தோழர்களும், தலைமையாசிரியர்களும், பள்ளிக்கூடத் தலைவர்களும், மாவட்டக் கல்வி ஆணையாளர்களும் அன்புடன் ஏற்று இத்துறையில் எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேம்.

ஆக்கியோர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

எண்		பக்கம்
I.	கடவுள் வாழ்த்து	... 1
II.	நீதிப் பகுதி	
	1. பழமொழி	... 3
	2. அறநெறிச்சாரம்	... 6
	3, புறத்திரட்டு	... 8
III.	கதைப் பகுதி	
	குசேலோபாக்கியானம்	... 12
IV.	வருணனைப் பகுதி	... 16
V.	நாடும் மொழியும்	
	1. நாம் செய்ய வேண்டுவன	... 19
	2. தமிழ் வளர்ச்சி	... 21
VI.	பலவகைப் பாடல்கள்	... 22

உரைநடைப் பகுதி

1.	நமது தலைநகர்	... 28
2.	எங்குமிலாப் பொருள்	... 37
3.	தமிழவேள்	... 47
4.	பேச்சு நயம்	... 54
5.	ஆந்திர நாடு	... 63
6.	இளமுது சூரியர்கள்	... 71
7.	அன்னையின் கண்ணீர்	... 79
8.	நாலும் இரண்டும்	... 88
	அருஞ்சொல் அகராதி	... 95

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

உலகெலாம் கோயில் உடையாய் போற்றி,
உயிரெலாம் உடலாய் உடுத்தாய் போற்றி,
ஒப்புயர் வில்லா ஒருவனே போற்றி,
பன்மையாய் விளங்கும் ஒருமையே போற்றி,
எப்பொரு ளுக்கும் இறைவா போற்றி,
சைவம், வைணவம், சாக்தம், கிறித்தவம்
இஸ்லாம் ஆகிய எம்மதத் திற்கும்
சம்மத மான சாட்சியே போற்றி!
அரன்மால் அயன்குகன் அல்லா பிதாவெனப்
பலமதம் போற்றும் பரமா, வணக்கம்!
அறிவதெல் லாமுன் அருளின் அறிவே!

— சுத்தானந்த பாரதியார்

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாப்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
யுண்டேனும் விளம்பி லுன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலா வல்லியே.

— குமர குருபரர்

குறிப்புரை

1. யோகி சுத்தானந்த பாரதியார் ஒரு துறவி. புதுச்சேரியில் அரவிந்தர் ஆசிரமத்தில் இருந்து பல்லாண்டுகளாகச் சமயப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்தார். பல உரைநடை நூல்களும், பாரத சக்தி போன்ற பெருங் காவியங்களும் இயற்றி யிருக்கிறார்.

மால் - திருமால். அயன் - பிரம்மன். குகன்-முருகன். அரன் - சிவபெருமான்.

2. குமர குருபரர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரிற் பிறந்தார். இவர் 800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார். மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், திருவாரூர் நான்மணி மாலை முதலிய நூல்களும் இவரால் இயற்றப் பெற்றவை.

3. மண்கண்ட - உலகத்தைத் தன்னுள் அடக்கிய வெண்குடை - வெண் கொற்றக்குடை. பண் - சந்தம்.

வினாக்கள்

1. கடவுள் எப்படிப் பட்டவர்?
2. கண்கண்ட தெய்வம் யார்? எப்படி?
3. கலைமகளின் அருளால் பெரும் நன்மை யாது?

பயிற்சி

1. முதற் செய்யுளின் பொருளை உரைநடைப் படுத்தி எழுதுக.

2. அரன்மால், அயன் குகன், சைவம் வைணவம் இவை என்ன தொடர்?

3. பிதா வென, பல்கோடி, கண்டளவில், விளம்பி லுன்போல் - இவற்றைப் பதம் பிரித்துக் கூறுக.

II. நீதிப் பகுதி

1. பழமொழி

தக்காரோ டொன்றித் தமராய் ஒழுகினார்
மிக்காரா லென்று சிறியாரைத் தாம்தேறார் ;
'கொக்கார் வளவய லூர! தினலாமோ
அக்காரம் சேர்ந்த மணல் ? 1

நெறியா லுணராது நீர்மையு மின்றிச்
சிறியார் எளியரா லென்று—பெரியாரைத்
தங்கணோர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று. 2

எமக்குத் துணையவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவர் தாந்தெரிதல் வேண்டா :
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ ? மற்றில்லை
தமக்கு மருத்துவர் தாம். 3

ஆற்றார் இவரென் றடைந்த தமரையும்
தோற்றத்தா மெள்ளி நலியற்க—போற்றான்
கடையடைத்து வைத்துப் புடைத்தக்கால் நாயும்
உடையானைக் கவ்வி விடும். 4

பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமேல் இசை முரலுமூர ! அதுவன்றோ
நாய்மேல் தவிசிடுமாறு. 5

— முன்றுறை அரையனார்

குறிப்புரை

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. ஒவ்வொரு பாடலிலும் பொதுவாக ஒரு பழமொழி எடுத்தாளப்படுவதால் இந்நூலுக்குப் பழமொழி எனப் பெயர் வந்தது. இது 400 செய்யுட்களையுடைய நீதி நூலாகும். இதை இயற்றியவர் முன்றுறை அரையனார் ஆவர்.

1. தமர்-தம்மைச் சேர்ந்தவர்; உறவினர். அக்காரம் - வெல்லம். வெல்லத்தோடு சேர்ந்த மணல் தின்பதற்கு ஆகாதது போல, சிறியார் பெரியாரோடு சேர்ந்தாலும் பெரியவராகார்.

2. நீர்மை - நல்லொழுக்கம். தங்கள் நேர் வைத்து - தங்களுக்குச் சமமாகப் பாவித்து, தகவு அல்ல - அவமதிப்பான சொற்களை. திங்கள் - சந்திரன்.

3. துணையாவர் - நண்பர். மருத்துவர் - வைத்தியர். தெரிதல்-தெரிந்துகொள்ளுதல். மற்று இல்லை-வேறு இல்லை.

4. அற்றார் - வலிமை இல்லாதவர். தோற்ற - பிறருக்கு விளங்குமாறு. நலியற்க - துன்புறுத்த வேண்டா. போற்றான் - காப்பாற்றுதலனாகி. புடைத்தக்கால் - அடித்தால்.

5. ஊரன் - மருதநிலத் தலைவனே, ஆடுஉ முன்னிலை. தவிசு - யானைமேல் இடும் கல்லணை. பொறி - புள்ளி.

வினாக்கள்

1. 'அக்காரம் சேர்ந்த மணல் தினலாமோ?'—இவ்வுவமை எதற்காக எடுத்துக் காட்டப்பட்டது?

2. எது திங்களை நாய் குரைத்தது போன்றது?

3. தமக்கு மருத்துவர் தாமாவது எங்ஙனம்?

4. உறவினரை எள்ளி நலிதல் கூடாது என்பதற்குக் காட்டப்பட்ட உவமைகளை விளக்குக.

5. நாய்மேல் தவிசிடுவதற்கு ஒப்பாவது எது?

பயிற்சி

1. இப்பகுதியில் அடங்கியுள்ள ஐந்து பழமொழிகளையும் எடுத்துக் கூறுக.

2. ஒன்றி, நேர்வைத்து, எள்ளி, நலியற்க — இவற்றைநும் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

3. 'தமக்கு மருத்துவர் தாம்' - இப் பழமொழியை நுமக்குத் தெரிந்த ஏதேனுமொரு நீதிக்கதையின் மூலம் விளக்குக.

4. வளவயல், தகவல்ல, கடையடைத்து, அதுவன்றோ, தவிசிடுமாறு - இவற்றைப் பதம்பிரித்து எழுதுக.

5. இவ் வைந்து செய்யுட்களிலும் உள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சங்களைத் தனித்தனியே எடுத்து எழுதுக.

2. அறநெறிச்சாரம்

இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 1

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையோர் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றா தாகும் ; உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும். 2

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா ;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும் :
சிலகற்றா கண்ணும் உளவாம் பலகற்றார்க்(கு)
அச்சாணி யன்னதோர் சொல். 3

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும் :
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி. 4

பிறர்க்கின்னா செய்தலிற் பேதைமை யில்லை ;
பிறர்க்கின்னா தென்றுபே ரிட்டுத் தமக்கின்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்
பித்து முளவோ பிற? 5

—முனைப்பாடியார்.

குறிப்புரை

அறவழிகளின் சாரமான பகுதிகளைக் கூறும் நூலாகையால் இதற்கு இப் பெயர் வந்தது. இந்நூல் காட்சி, ஒழுக்கம், ஞானம் என்னும் மூன்று பகுதிகளை உடையது. இந்நூலாசிரியராகிய முனைப்பாடியார் இயற்

பெயர் தெரியவில்லை. இவர் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு என்பர்.

1. ஈதல் - உதவியாகக் கொடுத்தல். வித்து - விதை களை. கட்டு - களை பறித்து. எரு அட்டி - எருப் போட்டு. சிறுகாலை - இளம் பிராயத்திலேயே.

2. காய்தல் - சினம் கொள்ளுதல். உவத்தல் - மகிழ்தல். ஆய்தல் - ஆராய்தல். உற்ற - பொருந்திய.

3. பல - பல சாத்திரங்கள். தன்+புகழ் = தற்புகழ். அலர் - பரந்த. கதிர் - கிரணங்கள். காக்கும் - மறைக்கும்.

4. மறுமை - மறுபிறப்பு. இம்மை - இப்பிறப்பு. வினைப்பயன் - முன் செய்த வினையின் பயன். துய்த்தல் - அனுபவித்தல். கரி - சான்று.

5. வித்தி - விதைத்து. பித்து - பைத்தியச் செயல்.

வினாக்கள்

1. அறக்கதிர் ஈனும் பயிரை விளைவிப்பது எப்படி?

2. ஒரு பொருளை ஆராய்வோர் கவனிக்க வேண்டிய விதி யாது? ஏன்?

3. பலவற்றைக் கற்று விட்டோம் என்று ஏன் தற்புகழ்ச்சி யடையக்கூடாது?

4. ஒருவன் தானே தனக்குக் கரியாவது எங்ஙனம்?

5. 'பிறர்க்கின்னா செய்தலின் பேதைமை இல்லை'—ஏன்?

பயிற்சி

1. பைங்கூழ், இன்சொல், எருவட்டி, அச்சாணி, பிறர்க்கின்னா பேரிட்டு—இவற்றைப் பதம் பிரித்துக்கூறுக

2. பித்தும் உளவோ பிற? - இதனைப் பொருள் மாறுதபடி வேறு வகையில் எழுதுக.

3. இரண்டாம் செய்யுளிலிருந்து தொழிற் பெயருக்கு உதாரணங்கள் எடுத்துக் கூறுக.

3. புறத்திரட்டு

அருளுடைமை

தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனாய் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந்து உயர்ந்(து) போகுமே.

— சீவக சிந்தாமணி

புகழ்

ஒருவன திரண்டி யாக்கை யூன்பெய்து நரம்பு போர்த்த
உருவமும் புகழு மென்றாங் கவற்றினுள் ஊழின் வந்து
மருவிய யாக்கை யீங்கே மாய்ந்துபோம்; மற்றை யாக்கை
திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் நிற்கு மன்றே!

— சூளாமணி

பொய்யாமை

கல்வி யின்மையும், கைப்பொருள் போகலும்,
நல்வில் செல்லல்க ளான்நலி வுண்மையும்
பொய்யில் பொய்யொடு கூடுதற் காகுதல்
ஐய மில்லை யதுகடிந் தோம்புமின்.

— வளையாபதி

இன்னா செய்யாமை

இறப்ப நுமக்கடுத்த எவ்வநோ யாவும்
பிறர்க்கும் அஃதாமென்று கொண்மின்—உறக்கருதி
எவ்வா றுமக்குறுதி யெண்ணுதிர்நீ ரெல்லார்க்கும்
அவ்வாறே யெண்ணல் அறம்.

— பாரதம்

இரங்கல்

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
    திரடோளான் மேலுங் கீழும்
எள்ளிருக்கு மிடமின்றி யுயிரிருக்கு மெனநாடி
    யிழைத்த தாலோ
கள்ளிருக்கு மலர்க்கூந்தல் சானகியை வன்சிறையில்
    வைத்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்புகுந்து தடவியதோ
    வொருவன் வாளி?

— இராமாவதாரம்

அன்புடைமை

பேடையைப் பிடித்துத் தன்னைப்
    பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து
    விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
    தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
    வேதத்தின் விழுமி தன்றே.

— இராமாவதாரம்

குறிப்புரை

நம் செந்தமிழ் மொழியில் சங்க காலந்தொட்டுப் பற்பல அறநூல்கள் எழுதப் பெற்றுள்ளன. 15-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய ஒரு புலவர், தமிழ் மொழியிலுள்ள எல்லா நூல்களையும் படித்துணர்தலின் அருமையை யுணர்ந்தவராய், எல்லா இனிய நூல்களிலுமுள்ள நீதி பாடல்களைத் திரட்டினார் என்பர். அத்திரட்டே புறத்திரட்டு என்னும் பெயருடன் வழங்கிவருகின்

றது. புறத்திரட்டு அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என்னும் மூன்று பிரிவுகளை உடையது.

1. அருளுடைமை - பிற உயிர்களிடத்து இரக்கமுடைமை. பரிந்து - அன்பு கொண்டு. ஓம்புமாறு - பாது காத்து வருதலைப்போல். மன்னுயிர் - நிலைபெற்ற பிற உயிர்களை. பொன்னுயிர் - தேவப் பிறவி.

2. மனிதனுக்கு ஊனுடல் புகழுடல் என்னும் இரண்டு உடல்கள் உள்ளன. யாக்கை - உடம்பு. ஊன் - தசை. ஊழ் - விதி. மருவிய - பொருந்திய. திருவமர்ந்து - செல்வம் மிகுந்து. உலகம் ஏத்த - உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் புகழ்ந்து கூற.

3. வளையாபதி என்னும் நூல் இப்போது முழுமையுமாகக் கிடைப்பதில்லை. இதில் பொய் பேசுவதனால் வரும் கேடு கூறப்படுகிறது. கல்வியின்மை - கல்லாமை. கைப்பொருள் - செல்வம். கடிந்து-நீக்கி.

4. இறப்ப - அளவுக்கு மிகுதியாக. எவ்வம்-துன்பம். கொண்மின் - கொள்க. உறக்கருதி - இன்பத்தை யடையக் கருதி. உறுதி - நன்மை.

5. வெள் எருக்கம் சடைமுடியான் - சிவபெருமான். வெற்பு - கயிலாய மலை. கள் - தேன். வாளி - அம்பு. ஒருவன் - இராமன்.

6. பேதை வேடன் - அறிவில்லாத வேடன். பாடு - துன்பம். புள் - பறவை (புறா). வீடு - முத்தி. விழுமிது - பெருமையுடையது. இப்பாடலில் அடங்கியுள்ள கதையினை ஆசிரியரைக் கேட்டுத் தெரிந்து கொள்க.

வினாக்கள்

1. மன்னுயிர் காப்பவன் அடையும் நன்மை யாது?

2. மனிதனின் இரண்டு உடம்புகள் யாவை? அவற்றுள் எது சிறந்தது? ஏன்?

3. பொய்யில் பொய்கலந்தாற் போல்வன யாவை?

4. 'பிறரையும் நம்மைப் போலவே மதித்தல் வேண்டும்.' ஏன்?

5. இராவணன் பெருமையும் சிறுமையும் யாவை?

6. புறவின் அன்புடைமையை விளக்குக.

பயிற்சி

1. பொன்னுயிர், நிற்குமன்றே, திரடோளான், வெள்ளெருக்கு, உள்ளிருக்கும், பாடுறு - இவற்றைப் பிரித்து எழுதுக.

2. கொண்மின், எண்ணுதிர், எண்ணல், மலர்க்கூந்தல் - இச் சொற்களுக்கு இலக்கணம் கூறுக.

3. ஆறும் செய்யுளில் அடங்கிய கதையைச் சுருக்கிக் கூறுக.

III. கதைப் பகுதி

குசேலோபாக்கியானம்

கண்ணனுதவி பெறுமாறு கூறும் சுசீலையை நோக்கிக் குசேலர் கூறுதல்

மைந்தர்கள் தம்மைப் போற்ற
வளநிதி வேண்டும் என்றாய்;
நந்திய பறவை கானம்
நயந்துறை விலங்கு முன்றா
வந்தபல் லுயிர்க்குச் சேம
வைப்புண்டோ; வருவாய் உண்டோ?
எந்திடத் தேனும் போயென்(று)
இரப்பது தானும் உண்டோ? 1

கல்லினுள் சிறுதே ரைக்கும்
கருப்பைஅண் டத்து யிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி அண்ணல்
ஒல்லுநின் மைந்தர்க் காவா
தொழிவனோ; ஒழியான்; உண்மை;
மெல்லியல்! கொண்ட துன்பம்
விடுவிடு; மறந்தும் எண்ணல். 2

வளநிதி படைத்தோம் என்றும்.
வடிவஇல் உடையோம் என்றும்,
அளவில்சேய் ஈன்றோம் என்றும்
அனுபவத் தமைந்தோம் என்றும்

இளமையில் சிறந்தோம் என்றும்
எழில்கலம் உடையோம் என்றும்
உளமகிழ் கூர்வர் சற்றும்
உண்மைநூல் உணர்ச்சி யில்லார்." 3

"சிறியரே மதிக்கும் இந்தச்
செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி
வாயுளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும்
பயில்தரு செவிட ராவர்
குறிபெறு கண்ணு ளாரும்
குருடராய் முடிவர் அன்றே." 4

சுசீலை கூற்று

அந்தணன் உரைத்த மாற்றம்
அனைத்தும்அஞ் செவியில் ஏற்று
நந்தலில் உண்மை ஈதென்(று)
உணர்ந்துதான் நயந்து பெற்ற
மைந்தர்பால் வைத்த ஆசை
மயக்கரு ளாகிப் பின்னும்
புந்தியின் விரும்பிப் பாதம்
போற்றுசின் றிதனைச் சொல்வாள்: 5

"மானிடன் ஒருவன் தனக்கருஞ் செலவம்
வாய்க்கஎன் றனுதினம் முயற்சி
தான்உஞற் றுவனேல் கடவுளும் அதனைத்
தந்தளிக் குறும்: அதா லன்றோ

ஆனபே ரறிஞர் திருவிளை முயற்சி
ஆக்கும்;அம் முயற்சியில் லாமை
ஈனமார் இன்மை புகுத்திடு மாலென்(று)
யாரும்நன் குணர்தர நவில்வார். 6

"வெண்திரை வீசும் கருங்கடற் புடவி
விண்ணகம் பாதலம் இவற்றுள்
மண்டிய உயிர்கள் எவற்றையும் கமலை
மார்பினன் புரப்பனே எனினும்
அண்டர்கள் புகழும் ஐய! நீ உயிர்த்த
அரியமக் களையும்என் றனையும்
பண்டைநூற் கியையப் பாதுகாத் தளித்தல்
பகரும்நின் கடன்" என மொழிந்தாள். 7

— வல்லூர் தேவராசப் பிள்ளை

குறிப்புரை

வல்லூர் தேவராசப் பிள்ளை அவர்கள் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணவர். இவர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர். குசேலோபாக்கியானம் என்பதற்குக் குசேலரைப் பற்றிக் கூறும் ஒரு கிளைக் கதை என்பது பொருள். உப ஆக்யானம் - கிளைக் கதை.

1. நந்திய - மிகுந்த. மூன்று - முதலிய. சேமவைப்பு - செல்வநிதி. வருவாய் - வருமானம்.

2. அண்டம் - முட்டை. துழாய்க்கண்ணி - துளவ மாலை. எண்ணல் - எண்ணாதே.

3. வடிவ இல் - அழகு வாய்ந்த மனைவி. எழில் நலம் - அழகுச் சிறப்பு. உளமகிழ் கூர்வர் - மனத்தில் மிகுந்த மகிழ்ச்சி கொள்வர்.

4. வந்துற்றனன்றே - வந்தபோதே. மூகர் - ஊமை யர். பறி - பொன், காதிலணியும் ஆபரணம்.

5. நந்தல் இல் - கேடில்லாத. அருளாகி - நீங்காதவ ளாகி. புந்தி - அறிவு.

6. வாய்க்க - வாய்க்கட்டும். உஞற்றுவனேல் - செய் வானாயின். ஈனமார் இன்மை - இழிவான வறுமை.

7. திரை - அலை. புடவி - பூமி. கமலை மார்பினன் - இலக்குமியை மார்பிலுடைய திருமால். புரப்பன் - காப் பான். அண்டர்கள் - தேவர்.

வினாக்கள்

1. பிள்ளைகளைக் காப்பாற்றச் செல்வம் சேர்த்து வைத்தல் வேண்டுவதில்லை என்பதைக் குசேலர் எவ்வாறு விளக்கினார்?

2. உண்மை நூல் உணர்ச்சியில்லாரின் தன்மைகள் யாவை?

3. பெருஞ்செல்வம் வந்து அடையின் அதனால் உண் டாகும் தீமைகள் யாவை?

4. 'முயற்சி திருவினை யாக்கும்' என்பதைச் சுசீலை எங்ஙனம் விளக்கிக் கூறினாள்?

5. குசேலரின் கடமை என்னவென்று சுசீலை தெரி வித்தாள்?

பயிற்சி

1. இப்பாடப்பகுதியினை உம் சொந்த வாக்கியங் களில் உரைநடைப்படுத்திக் கூறுக.

2. போற்ற, எந்திடத்தேனும், ஒல்லும், நவில்வார், இயைய—இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

3. 'எந்திடத்தேனும் போயோன்றிரப்பது தானும் உண்டோ?'—இதனைப் பொருள் மாறுதவாறு எதிர்மறை வாக்கியமாக மாற்றிக் கூறுக.

IV. வருணனைப் பகுதி

காலை வானம்

கோழிகூ விற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன் : பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்! 1

சோலை

பறிபடா பசும்புற் பூமி
பட்டுத்தைத் திட்ட பெட்டி!
திறந்தஅப் பெட்டி யெங்கும்
சேர்பனி வைரக் குப்பை!
அறைமணிக் குப்பை யெல்லாம்
அருக்கனின் ஒளிப்பெ ருக்கம்!
பறிபடாப் புற்கள் கண்ணைப்
பறித்திடச் சிறக்கும் சோலை! 2

— கவிஞர் பாரதிதாசனார்

வாடிய மலர்

தேடிவந் தணைந்த புள்ளிச்
சிறுவண்டின் எழிலைக் கண்டோ
பாடிய பாட்டைக் கேட்டோ
உன்னைநீ பறிகொ டுத்தாய்!
ஆடினாய் காற்றில், இன்ப
அசைவினில் திளைத்தாய், சோர்ந்தாய்
வாடிநீ உதிர்ந்தாய்! உன்னை
மக்களேன் நினைப்ப தில்லை? 3

— கவிஞர் வாணிதாசனார்

குறிப்புரை

1. ஆசிரியரைப் பற்றிய வரலாறு முன்னரே கூறப் பட்டது.

மேழி - ஏர். வையம் - உலகம். விரிகதிர்ச் செல்வன் - கதிர் விரி செல்வன் எனக் கூட்டுக, சூரியன். ஆழி - கடல். காட்சி - தோற்றம்.

2. பறிபடா - பறிக்கப்படாத. குப்பை - குவியல்., அருக்கன் - சூரியன்.

3. கவிஞர் வாணிதாசனார் பல்லாண்டுகளாகப் புதுவைக் கல்வே கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்; தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கடலூரைச் சார்ந்தவர்; மொழி. கலை, சமூகம். தொழில்பற்றிய இனிய எளிய கவிதைகள் இயற்றுவதில் வல்லுநர். கவிஞர் பாரதிதாசனாரிடம் நீங்காத அன்புடையவர். பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் என்னும் மும்மொழிப் புலமை உடையவர். புள்ளி - புள்ளிகளை உடைய. பறிகொடுத்தாய் - மயங்கி விட்டாய். திளைத்தாய் - மகிழ்ந்தாய்.

வினாக்கள்

1. காலை வானம் எவ்வாறு மலர்ந்தது?
2. சோலையின் அழகு எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
3. மலர் வாடியதற்குக் கூறப்படும் காரணங்கள் யாவை?

V. நாடும் மொழியும்

1. நாம் செய்ய வேண்டுவன

காலையிலே விழித்தெழுந்து கற்றல் வேண்டும்
கற்றநெறி தவறாதே நிற்றல் வேண்டும் ;
வேலையில்லாத் துன்பத்தைத் தீர்த்தல் வேண்டில்
விவசாயம் கைத்தொழில்கள் போற்றல் வேண்டும்
ஆலைபல ஆங்காங்கே அமைத்தல் வேண்டும் ;
அருமுயற்சி அறிவுடைமை ஆண்மை வேண்டும் ;
மூலையிலே கிடந்துறங்கப் போதிங் கில்லை :
முயற்சியினால் மேல்நாட்டார் மிளிர்தல் காணீர். 1

*   *   *

செய்மொழிகள் பலகற்றே சிறந்திட்டாலும்
செல்வமெலாம் நாடோறும் குவித்திட் டாலும்
தாய்மொழிதான் போற்றாதார்க் குயர்வே யில்லை.
தமிழ்வளர்ப்போம் தமிழ்வளர்ப் போம் தருணமீதே!
நோய்நொடிதாம் உற்றவர்போல் நுணங்கல் வேண்டா
நூல்பலவும் தமிழினிலே நிலவச் செய்வீர் ;
வாய்மையினில், வண்மையினில், வலிமை தன்னில்
வல்லவராய் வாழ்ந்திடலாம் விரைகு வீரே. 2

— பேராசிரியர் மயிலை. சிவமுத்து

குறிப்புரை

பேராசிரியர் மயிலை. சிவ முத்து அவர்களைத் தமிழ்நாடு நன்கு அறியும். இவர் மாணவர்களுக்குரிய இனிய எளிய கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும், எழுதுவதில் வல்லவர். இவர் பல்லாண்டுகளாகச் சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். சென்னை மாணவர் மன்றமும் இவரால் பெரிதும் போற்றப்படுகிறது.

நெறி - வழி. போது - காலம். மிளிர்தல் - செல்வர்க்குடன் விளங்குதல். சேய் மொழி - அயல் நாட்டுமொழி. தருணம் - தக்க சமயம். ஈதே - இதுவே. நிலவ - நிலைபெற. நுணங்கல் - வாடுதல்.

வினாக்கள்

1. மேல் நாட்டாரின் உயர்வுக்குக் காரணம் என்ன?
2. நாடு முன்னேற நாம் செய்யவேண்டுவன யாவை?
3. நாம் எவ்வெத்துறைகளில் வல்லவராதல் வேண்டும்? எங்ஙனம்?

2. தமிழ் வளர்ச்சி

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும் :
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும் :
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும்வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும் :
தமிழ்மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்:
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும் :
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை;
தகத்தகா யத்தமிழைத் தாபிப்போம் வாரீர்! 2

— பாரதிதாசனார்

குறிப்புரை

சுவடி - புத்தகம். எளிமை-வறுமை. நாணுதல்-வெட்க மடைதல். ஊரறியும் தமிழ் - எளிய நடையில் அமைந்த தமிழ். தகத்தகாயத் தமிழ் - புகழொளி நிறைந்த தமிழ்.

வினாக்கள்

1. 'இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்' எப்போது?

2. தமிழ் வளர்ச்சிக்கு நாம் புரிய வேண்டிய தொண்டுகள் யாவை?

VI. பலவகைப் பாடல்கள்

மழைக் குறி

கொங்கு மின்னல் ஈழமின்னல்
கூடி மின்னுதே—ஒரு
  கோடி வானம் பாடிமழை
  தேடி யாடுதே!

எங்குமே கீழ்காற் றடித்துச்
சங்கை யில்லாமல்—இப்போ
  ஏற்றமுள்ள கொம்பு சுற்றிக்
  காற்ற டிக்குதே!

பங்கத்திறைல் தன்வளையை
நண்டடைக் குதே!—கங்கு
பட்டம்பகலி லேசுற்றி
வட்டம் போடுதே!

துங்கச் சந்திரன் பரிவேடம்
போட்டிருக்குதே!—எறும்பு
துழனியோடு பேர்வதைப்பார்
பழனிப் பள்ளிரே! 1

— வேலச் சின்னோவையன்

மருத நிலம்

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ ! 2

— கம்பர்

சிவனுக்கும் தேங்காய்க்கும் சிலேடை

கல்லால் அடியுறலால் கண்மூன்(று) இருப்பதனல்
எல்லோரும் பூசைக(கு) எடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையால கங்கா குலமுத்துச் சாமிமன்னா,
கள் இதழி யான்சிகர்தேங் காய். 3

— அழகிய சொக்கநாதப் பிள்ளை

பத்திரிகை

கடும்புதர் விலக்கிச் சென்று
　　களாப்பழம் சேர்ப்பார் போல
நெடும்புவி மக்கட் கான
　　நினைப்பினிற் சென்று நெஞ்சிற்,
படும்பல நுணுக்கம் சேர்ப்பார்
　　படித்தவர், அவற்றை யெல்லாம்
'கொடும்'என அள்ளி உன்தாள்
　　கொண்டார்க்குக் கொண்டு போவாய்! 4

வானிடை நிகழும் கோடி
　　மாயங்கள், மாநி லத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
　　உட்புறம் வெளிப்பு றத்தே
ஆனநற் கொள்கை, அன்பின்
　　அற்புதம் இயற்கைக் கூத்துத்
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
　　தித்திக்கத் தருவாய் நித்தம்! 5

— பாரதிதாசனார்

பிணியின் பெருமை

எல்லாமித் துணையவெனு மென்புடைய முனிவராய்ச்
செல்லாத விடங்களெலாஞ் சென்றுவரும் சித்தர்களாய்
ஒல்லாத வொருநிலையில் நெடிதிருக்கும் யோகர்களாய்ப்
பல்லாரு மாவருன தருட்கடைக்கண் பற்றிடினே! 6

— கவியரசர் அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

அம்மானை

நாரா யணன் அறியா நாதர்அரு ணேசர்க்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்கம் அம்மானை !
வாரார் சிலைகலைமெய் மாதங்கம் ஆமாயின்
ஆராயுங் காலெடுப்ப தையமன்றோ அம்மானை ?
அன்னம்அறி யார்எடுப்ப தையமோ ? அம்மானை. 7

— திருவருணைக் கலம்பகம்

குறிப்புரை

1. வையாபுரிப் பள்ளு என்னும் நூலிலிருந்து இப் பகுதி எடுக்கப்பட்டுள்ளது. பள்ளு என்பது ஒருவகை நாடகப் பிரபந்தம். இஃது எளிமையும் இனிமையும் கூடியது. வையாபுரிப் பள்ளு என்பது வையாபுரி நாட்டின் நாயகமாக விளங்கும் பழனி முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாடப் பெற்றுள்ளது. இதனை இயற்றியவர் குமார விசையகிரி வேலைச் சின்னோவையன் என்பவர். இவர் ஒரு ஜமீன்தாரர். ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். இவர் கடவுள் பக்தி நிறைந்தவர்.

ஈழம் - இலங்கை. வானம்பாடி - ஒருவகைப் பறவை. சங்கை - அளவு. பங்கம்-சேறு. கங்கு - பருந்து. பரிவேடம் சந்திர சூரியர்களைச் சுற்றிக் காணப்படும் வட்டம்.

2. கம்பர் கவிச் சக்கரவர்த்தி என்று பாராட்டப் படும் சிறப்பு வாய்ந்தவர். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்', 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்பதனால் இவர் பெருமையை அறியலாகும். வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருத நிலம் எனப்படும். தண்டலை - சோலை. விளக்கம் - விளக்கு. குவளை - நீலோற்பல மலர். திரை - அலை. எறிவி - திரை. தேம்பிழி மகரயாழ் - தேனையொத்த இனிய மகர யாழ்.

3. சிலேடை என்பது இரு பொருள்படப் பாடுதல்.

சிவபெருமான்	தேங்காய்
கல்லால் அடிபட்டவர். [சாக்கியநாயனார் வரலாறு]	கல்லின்மேல் அடித்து உடைக்க வேண்டும்.
மூன்று கண்கள் உண்டு.	மூன்று கண்களைப் பெற்றிருக்கிறது.
எல்லோரும் இவரை வழிபடுகின்றனர்.	மக்கள் கடவுள் வழிபாட்டிற்கு இதை எடுத்துக் கொண்டு போகின்றனர்.
பிச்சையின் பொருட்டு இவர் ஓடு எடுத்துச் சென்றார்.	இதன்மேல் கெட்டியான ஓடுகள் இருக்கின்றன.

4. ஆசிரியர் வரலாறு முன்னரே கூறப்பட்டது. நெடும் புவி - பெரிய உலகம். நுணுக்கம் - நுட்பமான செய்திகள். தாள் - செய்தித்தாள்.

5. கவியரசர் அரங்க வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் பல்லாண்டுகளாகத் திருவையாற்று அரசர் கல்லூரியிலும், தஞ்சைக் கரந்தைப் புலவர் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராக இருந்து பணியாற்றியவர். இவர் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், அகநானூறு முதலிய சங்க நூல்களின் சிறிய உரையாசிரியர் ஆவார். இத்துணைய - இவ்வளவு. சித்தர் - மாயம் புரிவோர். ஒல்லாத - இயலாத. பல்லாரும் - பலரும்.

6. கலம்பகம் என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது திருவண்ணாமலையிலுள்ள அருணாஜலேஸ்வரரைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டுள்ளது. திருவருணை - திருவண்ணாமலை. வாரார் - கட்டப்பட்ட சிலை - வில். கலை - ஆடை. மாதங்கம் - சிறந்த பொன். ஐயம் - பிச்சை. அன்னம் அறியார் - பிரமனும்

ஆராய முடியாத சிவபெருமான் (சோறு காணுதவர்). சிலை - மாதங்கம் (பெருமை பொருந்திய தங்கம்). கலை - மாதங்கம் (யானைத் தோலாடை). மெய் - மாது. அங்கம்-(பார்வதியை அங்கமாகக் கொண்டது) எனப் பிரித்துப் பொருள் கொள்க.

வினுக்கள்

1, பள்ளு என்பதன் இலக்கணம் கூறுக.
2. மழைக் குறிகள் யாவை?
3. தேங்காய் எவ்வாறு சிவபெருமானுக்கு ஒப்பாகும்?
4. மருதம் எவ்வாறு விற்றிருக்கும்?
5. பத்திரிகையின் சிறப்புக்கள் யாவை?
6. பிணியின் பெருமைகள் யாவை?
7. 'வாரார் சிலை கலை மெய் மாதங்கம்'

''அன்னமறியார் எடுப்பது ஐயமோ? — இவற்றின் பொருள் நயத்தை விளக்குக.

பயிற்சி

1. வல்லோடு, தண்டலை, தெண்டிரை, கடும்புதர், நெடும்புவி, உட்புறம் — இவற்றைப் பதம் பிரித்துக் காட்டுக.

2. முதற் பாடலில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களை எடுத்துக் கூறுக.

3. 'தண்டலை மயில்களாட' என்னும் செய்யுளின் எழுவாயும் பயனிலையும் யாவை?

4. பத்திரிகைகளின் நன்மைகளைப்பற்றிச் சுருக்கி ஒரு கட்டுரை வரைக.

5. அன்ன மறியார் எடுப்பது ஐயமோ?—இஃது என்ன வாக்கியம்? இதனைப் பொருள் மாறுபடாமல் வேறு வகையில் மாற்றிக் கூறுக.

உரைநடைப் பகுதி

1. நமது தலைநகர்

சென்னை மாநிலத்தின் திலகம் போல் விளங்குவது சென்னை நகரமாகும். இந் நகரமே கீழை நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் போக்குவரவுக்கு நடு நாயகமாக விளங்குவது. இந் நகர் பலதுறையிலும் முன்னேற்றம் பெற்றதொரு சிறந்த வாணிபத் தலமாகும். வானளாவிய மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நிறைந்து, புலவகைக் கலைகளுக்கும் தொழில்களுக்கும் சென்னை தாயகமாக விளங்குகிறது.

சென்னை இந்தியாவின் பெருநகரங்களில் மூன்றுவதாகும். ஒரு காலத்தில் மீன் விளைஞர் பட்டினமாக இருந்த சென்னை, பிற்காலத்தில் ஈடும் எடுப்புமற்ற பெருநகராக மாறியது வியப்புக்குரிய தன்றோ? பல நூற்றுண்டுகட்கு முன்னரே நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாராட்டிப் பாடப்பெற்ற தலங்களாகிய மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் சென்னை நகரைச் சேர்ந்தனவேயாம். இதனை,

"ஊர் திரை வேலை உலாவும் உயர்மயிலைக்
கார்தரு சோலைக் கபாலீச்சுரம்"

என்னும் தேவார அடிகளாலும்,

'நீளோதம், வந்தலைக்கும் மாமயிலை மாஅல்லிக்கேணி'

என்னும் திருவாய்மொழி யடியாலும் நன்கு உணரலாகும்.

இன்றைக்கு ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், சென்னை நகரம் சந்திரகிரி அரசனுடைய ஆட்சியில் அடங்கியிருந்தது. அவன் பெயர் சென்னப்ப நாய்க்கன் என்பதாகும். கிழக்கிந்தியக் கம்பெனியைச் சார்ந்த பிரான்சிஸ் டே என்பவர் அவ்வரசனின் பிரதிநிதியாக ஒரு பாளையக்காரனிடம் உடன்படிக்கை செய்துகொண்டு இங்கே வாணிபத்தின் பொருட்டு ஒரு கோட்டையைக் கட்டினார். ஒப்பந்தப்படி ஆண்டு ஒன்றுக்கு 1200 வராகன் கம்பெனிக்கு வரி செலுத்தி வந்தனர். நாளடைவில் வெள்ளையர் அமைத்த கோட்டையைச் சுற்றிலும் ஊர்கள் ஏற்படலாயின. இங்ஙனம் அமைந்த பட்டணத்துக்குத் தன் பெயரையே வைக்க வேண்டுமெனச் சந்திரகிரி அரசன் விரும்பவே இது 'சென்னப் பட்டணம்' என வழங்கலாயிற்று என்பர். வாணிபத்தின் பொருட்டுச் சிறிது இடம் பெற்ற வெள்ளையர் பிற்காலத்தில் நாட்டையே உரிமை கொண்டு ஆண்ட வரலாற்றை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

பிற்காலத்தில் சென்னை நகரம் ஆங்கிலேயராலும் துருக்கராலும் மதராஸ் என அழைக்கப் பெற்றது. மதராஸ் என்பதற்குப் பெயர்க் காரணங்கள் பலப்பல கூறப்படுகின்றன. சிலர் மதராஸ் என்பது மதில் என்பதின் மரூஉமொழி என்பர். மதில் என்னும் சொல் மதராஸ் என மருவி வருவதற்கு இலக்கண மின்மையின் அது பொருந்தாக் கூற்றேயாம்.

சிலர் பள்ளிக்கூடம் என்னும் பொருளமைந்த மத்ரிஸா என்னும் உருதுச் சொல் மருவி மதராஸ் ஆயிற்றென்பர். பண்டைக் காலத்தே இங்ஙனம்

அழைப்பதற்கேற்ற உருதுப் பள்ளிகள் ஒன்றுமின்மை யால் அதுவும் பொருத்தமின்று. முற்காலத்தில் சிற்றரசர் களுக்கு, தெலுங்கில் 'ஸாமந்த ராஜுலு' என்னும் பெயர் வழங்கி வந்தது. அவர்களுடைய நகரம் மந்த ராஜுப் பட்டணம் என அழைக்கப்பட்டது. பிற்காலத் தில் மந்தராஜுப் பட்டணம் மதராஸ் பட்டணமாயிற்று என்று சிலர் சொல்லுவர்.

ஆங்கிலேயரின் வாணிபம் ஓங்கி வளர்ந்தது. கோட்டை கட்டிய மூன்றே ஆண்டுகளில் சென்னை மிகப் பெரிய வாணிபத் தலமாக மாறிவிட்டது. போர்த் துக்கேசியர் முதலியோர் கோட்டையின் சுற்றுப்புறங் களில் தங்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாணிபம் நடத்தினர். இங்ஙனம் வெள்ளையர் பலர் சேர்ந்து உண்டான நகரம் **வெள்ளையர் பட்டணம்** என அழைக்கப்பட்டது. கோட்டைக்குத் தெற்கில் பல செம்படவர்கள் குடிசைகள் இருந்தன. அக்காலத்தி லேயே மயிலாப்பூர், திருவல்லிக்கேணி என்னும் கிரா மங்களும் விளக்கமுற்றிருந்தன. கோட்டைக்கு வடக்கே உள்ளூர் மக்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் இருந்த நகரம் கறுப்பர் பட்டணமெனப்பட்டது. ஜார்ஜ் மன்னர் சென்னைக்கு வருகை புரிந்தபோது அது **ஜார்ஜ் டவுன்** என்னும் பெயர் பெறுவதாயிற்று.

சென்னையில் பல்லாண்டுகளாகத் தமிழர்களே பெருவாரியாக வாழ்ந்து வந்தார்கள். ஆகையால் இதனை நமது தலைநகர் என்று கூறிப் பூரிப்படைகிறோம். அரசியலாரின் பெரிய அலுவலகங்கள் யாவும் சென்னை நகரத்திலேயே உள்ளன. அவற்றுள் சென்னை சட்டசபை, உயர் நீதிமன்றம், நகரசபை, சென்னைத்

துறைமுகம், பொருட்காட்சி சாலை முதலியவை குறிப்பிடத் தக்கனவாம்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் மேல் 160 அடி உயரமுள்ள கலங்கரை விளக்கமொன்று உண்டு. அதன் ஒளி கடற்பரப்பில் இருபது கல் தொலைவு வீசுகின்றது.

அதன் உச்சியின்மீது ஏறி நின்று நோக்கினால் சென்னையின் தோற்றம் முழுமையும் காணலாம். நீலக் கடலின் முழுத் தோற்றமும் அவற்றில் மிதக்கும் கப்பல்களின் காட்சியும் நம் நெஞ்சை அள்ளும் திறத்தனவாக இருக்கும்.

சென்னைத் துறைமுகம் ஒரு செயற்கைத் துறை

முகம். பெருங்கப்பல்கள் நங்கூரம்' பாய்ச்சி நிலையாக நிற்பதற்கேற்ற வாய்ப்பின்மையால் இங்கே செயற்கைத் துறைமுகம் கட்டப்பட்டுள்ளது. இத் துறைமுகத்தின் மூன்று புறங்களில் சுவர் எழுப்பிக் கடலை ஆழமாக்கி இருக்கின்றனர். இஃது அடிக்கடி மணலால் தூர்ந்து விடுகிறது. ஆகவே அதிக செலவில் இது பாதுகாக்கப் படுகின்றன. துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான பணி



யாளர்களைக் காணலாம். அல்லும் பகலும் பண்டங் களை ஏற்றுமதி செய்வதும் இறக்குமதி செய்வதும் ஓயா மல் நடைபெறும் அலுவல்களாகும்.

சென்னைக் கடற்கரை உலகப்புகழ் பெற்றது. இஃது ஐந்து கல் நீளமுடையது. மாலை நேரங்களில் சென்னை மக்கள் உலாவுவதற்காகக் கடற்கரைக்குச் செல்வர். இன்பமான பொழுதுபோக்குக்கு ஏற்ற இடம் 'மெரினா' கடற்கரை. இது திருவல்லிக்கேணிப் பக்கத்தில்

உள்ளது. மாலையில் இங்கு வீசும் மென்காற்று மக்கள் மனத்திற்கு இன்பம் பயக்கின்றது. மெரினு கடற்கரைக் கெதிர்ப்புறத்தில் சென்னைப் பல்கலைக்கழகம், மாநிலக் கல்லூரி, மேரி ராணி கல்லூரி முதலியன காணலாம்.

சென்னைப் பூங்காவில் உள்ள உயிர்க்காட்சி நிலையம் புதியவராகச் சென்னைக்கு வருவோரின் கண்ணையும் கருத்தையும் கவருவதாகும். அங்குச் சாதாரண பறவை முதல் மிகப்பெரிய வனவிலங்கு ஈருகப் பல வகை உயிரினங்களையும் காணலாம். அதற்கு முன் புறத்தில் உள்ள வெட்டவெளியில் ஆண்டுதோறும் கிறித்துமஸ் விடுமுறையின்போது பொருட்காட்சி நடைபெறுவதுண்டு. அதற்கருகிற்ருன் **மூர் மார்க்கெட்** என்னும் விற்பனை நிலையம் இருக்கிறது. அங்குக் குண்டூசி முதலாக விலையுயர்ந்த கடியாரங்கள் ஈருகப் பல பொருள்களையும் வாங்கலாம். அதன் பக்கத்தில் நகர மன்றம் கூடும் ரிப்பன் கட்டடத்தைக் காணலாம்.

சென்னையில் இரண்டு பெரிய புகைவண்டி நிலையங்கள் உள. அவற்றுள் ஒன்று **சென்ட்ரல் நிலையம்,** மற்ருென்று **எழும்பூர் நிலையம்.** சென்ட்ரல் நிலையத்தினின்று பங்களூர், பம்பாய், ஐதராபாத், நீலகிரி முதலிய இடங்களுக்குச் செல்லலாம். எழும்பூரினின்று தஞ்சை, திருசசி, மதுரை, திருவனந்தபுரம், கொழும்பு முதலிய இடங்களுக்குப் புறப்படலாம். மற்றும் மீனம்பாக்கம் என்னும் ஊரில் உள்ள விமான நிலையத்திலிருந்தும் மக்கள் விமானங்களிலேறி அயலிடங்களுக்குச் செல்லுகின்றனர். இங்ஙனம் நாடோறும் விண்ணிலும் மண்ணிலும் தண்ணீரிலுமாகச் சென்னையிலிருந்து ஆயிரக்கணக்கான பிரயாணிகள் பயணம் செய்கிருர்கள்.

பலவகையிலும் வளர்ச்சியுற்ற சென்னை நகரைச் சுற்றிலும் வணிக வளர்ச்சி கருதிப் பல பேட்டைகள் தோன்றலாயின என முன்னரே கூறினேம். அவற்றுள் பெத்துநாய்க்கன்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, தண்டையார்ப்பேட்டை, தியாகராயநகர், நுங்கம்பாக்கம், கீழ்ப்பாக்கம், சேப்பாக்கம், கோடம்பாக்கம் முதலியவை குறிப்பிடத்தக்கவை. பல்லாவரம், பரங்கிமலை, கிண்டி, முதலிய சிற்றூர்களும் சென்னை நகரைச் சேர்ந்தனவே யாம்.

சென்னைக்குப் பயணம் செய்வோர் எழும்பூரில் உள்ள பொருட்காட்சி நிலையத்தைக் காணத் தவறுவதில்லை. அங்கு வரலாறு, நில நூல், உயிர் நூல், விஞ்ஞானம் போன்ற பலதுறைப் பொருள்களையும் பார்வையிடலாம். பொருட்காட்சி நிலையத்தின் பக்கத்தில் **கன்னிமரா நூல் நிலையம்** என்னும் பெரியதொரு நூலகம் இருக்கிறது. மயிலையில் உள்ள கபாலீஸ்வரர் ஆலயமும் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதிக் கோயிலும் வரலாற்றுப் புகழ் பெற்றவை. அடையாற்றில் 'கலா க்ஷேத்திரம்' என்னும் ஒரு கலை நிலையம் இருக்கிறது. அங்குள்ள இயற்கைக் காட்சிகள் அனைவரையும் இன்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்வனவாகும். நூறு ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து நிற்கும் மிகப் பெரிய ஆலமரமொன்று அங்குள்ளது. சென்னையில் பார்வையிட வேண்டிய இடங்களில் வானொலி நிலையமும் ஒன்றாகும். 'ஜெனரல் ஆஸ்பத்திரி' போன்ற மருத்துவ நிலையங்களும் பற்பல கல்லூரிகளும் காணத் தகுந்தனவேயாம்.

இங்ஙனம் தோற்றத்தாலும், தொழில் வளத்

தாலும், கலை நலத்தாலும் அழகின் ஆலயமாக விளங்கும் சென்னை நகரம் தமிழர்களின் தலைநகராகப் பல்லாண்டுகளாக விளங்கிவருகிறது. தமது தலை நகராகிய சென்னையை மாணவர்கள் தம் வாழ்க்கையில் ஒரு முறையேனும் தவறாது கண்டு களிப்பது நலமாகும்.

பயிற்சி

பொருளறிக :

திலகம்	வினைஞர்	கூற்று
கீழை நாடு	பாளையக்காரர்	அயலிடம்
மேல் நாடு	அலுவலம்	நிலையம்
வானளாவிய	பூங்கா	

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

மாட மாளிகை, தாயகம், இற்றைக்கு, நாளடைவில், குடிகொண்டு, அல்லும் பகலும்.

விடை தருக :

1. மயிலையும் திருவல்லிக்கேணியும் இலக்கியங்களில் எவ்வாறு பாராட்டப்பட்டுள்ளன ?

2. சென்னைக்கு அப் பெயர் வரக் காரணம் என்ன?

3. சென்னை நகரத்துக்கு மதராஸ் என்னும் பெயர் ஏற்படக் கூறப்படும் காரணங்களைச் சொல்லி அவற்றுள் எது பொருத்தமானது என்பதை விளக்குக.

4. வெள்ளையர் பட்டணம், கறுப்பர் பட்டணம் - குறிப்பு எழுதுக.

5. சென்னைக்குப் புதியவராக வருவோர் காணத்தகும் இடங்கள் யாவை ?

இலக்கணம் :

1. சென்னைப் பட்டினம் என்பது சென்னை என வழங்குதல் மரூஉ எனப்படும். இங்ஙனமே மயிலாப்பூர் மயிலை எனவும், தஞ்சாவூர் தஞ்சை எனவும், திருச்சிராப் பள்ளி திருச்சி எனவும் வழங்குதல் காண்க.

2. முதல் பாராவின் முதல் வாக்கியத்தில் உள்ள ஒவ்வோரெழுத்தையும் உச்சரித்துப் பார். ஒவ்வொன்றும் உச்சரிக்கப்படும் இடங்கள் வேறுபாடு அடைவதைக் கவனி. பொதுவாக எழுத்துக்கள் மார்பு, தொண்டை, தலை, மூக்கு என்னும் நான்கு இடங்களில் தோன்றும்.

உயிரெழுத்தும் இடையின எழுத்தும் தொண்டையில் பிறக்கும். மெல்லின எழுத்துக்கள் மூக்கில் பிறக்கும். வல்லின எழுத்துக்கள் மார்பில் பிறக்கும். ஆய்த எழுத்து தலையில் பிறக்கும்.

3. சென்னைக் கடற்கரை உலகப் புகழ்பெற்றது. இஃது ஐந்து கல் நீளமுடையது.—' உலகப் புகழ்பெற்ற ' என்று தொடங்கி இவ்விரு வாக்கியங்களையும் சேர்த்து ஒரு தனிநிலை வாக்கியமாகக் கூறுக.

2. எங்குமிலாப் பொருள்

[பூத்துக் குலுங்கும் ஒரு பூஞ்சோலையில் அழகிய நங்கை ஒருத்தி தன் சிறு மகனுடன் உலாவுகிருள்.]

தாய் : என் கண்ணே, அதோ பார்; எவ்வளவு அழகாக முல்லைக்கொடி மலர்ந்து எல்லையற்ற எழிலுடன் சிரிக்கிறது; உன் பால் மணம் மாருத வெண் பற்களுடன் அவை போட்டி போடுவதா? உன் தளர் நடை காணவே இங்கு இளமான் வந்து நிற்கிறது. பார்த்தாயா? ஏதோ அதன் அவா தீரட்டும். காலிற் சதங்கை 'கலீர் கலீரெ'ன உன் ஈரடியால் நாலடி நடந்து காட்டு. (குழந்தை ஓடுகிறது) போதும் போதும்! ஓடாதே. உன் கால்களில் முள் தைத்துவிடும். இப்படி வா. (மைந்தன் முல்லை மலர்க் கொடியைக் காட்டிப் பறித்துத் தருமாறு கேட்கிருன்.) ஓ! முல்லையா! உனக்கு இல்லாததா? இதோ பறித்து வருகிறேன். எங்கும் போகாமல் இங்கேயே சிறிது நேரமிரு.

[தாய் ஒருபுறமாக மறைகிருள். குழந்தை புதுமையான பல காட்சிகள் தன்னைச் சுற்றி யிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியும் மருட்சியும் கொள்கிருன். மற்ருெரு பக்கம் ஒரு சிறு புதர் உச்சியில் ஒரு புற்றிலிருந்து நல்லபாம்பு படம் எடுத்தாடுகிறது. சிறுவன் அதைப் பிடித்து இழுத்து விளையாடப் பார்க்கிருன். பாம்பு சீறி அவனைத் தீண்டுகிறது. பாலன் இறக்கிருன்.]

(தாய் மலர் பறித்துக் கொண்டு வந்து) அடே கண்ணு, கண்ணு, எங்கேடா போய்விட்டாய்? இதோ பார்; கருமேகச் சுருள் ஒத்த உன் தலை மயிரில், மேகத்திடையே விண்மீன் மலர்ந்தது போல முல்லைப் பூச் சூட்டுகிறேன். என் கண்மணியே, ஓடிவாடா (வராமை கண்டு மனம் பதறுகிருள். சிறுவன் பாம்பு தீண்டப் பெற்று இறந்து கிடப்பது நோக்கிக் கதறுகிருள்.)

ஆ! கெட்டேன் பாவி! என் கண்ணே, உனக்கிதுவா கதி? (சிறுவனைத் தூக்கி அணைத்துக் கொஞ்சுகிருள். கண்ணீர் பெருக்கி ஓலமிடுகிருள்.)

ஐயோ! எங்கும் போகாதே என்று சொன்னேனே! என் கண்ணே! மணியே! குல விளக்கே! என் செய்வேன்!

[மயங்கி விழுகிருள். சிறிதுநேரங் கழித்து மயக்கம் நீங்கி எழுகிருள். குழந்தையை தோளில் தூக்கிக்கொண்டு கால் சென்ற வழியே கண்ணீரும் கம்பலையுமாக நடக்கிருள். சாலையின் ஓரம் ஊர்க் குடிமக்கள் புத்த பகவானின் பெருமையைப் பேசிக்கொண்டு போகிருர்கள். அவர்களில் ஒருமகன் தன் தந்தையைப் பார்த்துக் கூறுகிருன்.]

மகன்: அப்பா, புத்த பகவான் ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் யமுனை நதிக்கரையில் வந்து தங்கியிருக்கிருராம். வாருங்கள் நாம்போய்த் தரிசனம் செய்வோம்.

தந்தை: ஆமாம் தம்பி. அரச இன்பத்தைத் துரிசாகக் கருதி அழகிய மனைவி யசோதரையையும் மழலைமொழி பயிலும் எழிலோவியமாகிய இராகுலன் என்னும் மகனையும் துறந்து நிறைந்த ஞானியாக விளங்

குதல் நம் போன்ற சாதாரண மக்களால் இயலக்கூடியதா? என்ன இருந்தாலும் புத்தர் தெய்வப் பிறப்பே என்பதில் ஐயமில்லை.

மகன் : ஆம், அப்பா. புத்தர் முகத்தை ஒருமுறை பார்த்தாலே போதும். பண்ணிய பாவமெல்லாம் தொலைந்து போகும். கொடுந்தொழில் புரிந்த பிம்பிசார மன்னனையும் பெயர்போன கள்வர் தலைவன் ஏகலோசனனையும் எவ்வளவு எளிதாக நல்லவராக்கினார், பார்த்தீர்களா? இங்கிருந்து ஏழுமைல் தொலைவிருக்கிறது யமுனா தீரம். நாம் விரைந்து போனால்தான் பிற்பகலில் புத்தரைப் பார்க்கவும், அவர் சொற்பொழிவு கேட்கவும் வசதியாயிருக்கும். மேலும், பெருங்கூட்டத்தில் அவர் திருமுகம் காண்பதரிது. முன்னிடம் தேடிக் கொள்வதே நல்லது. வாருங்கள் போவோம். (இருவரும் போகிறார்கள்.)

தாய் : ஆம்! இதுதான் நல்ல வழி. இவர்களோடு நானும் புத்தபிரானைக் கண்டு சரணடைவேன். பலருக்கும் நன்மை செய்த அந்தப் பெருமான் ஏழையாகிய எனக்கும் அருள் செய்வார். (குழந்தையை நன்றாக முன்றானையால் மூடிக்கொண்டு போகிறாள்.)

காட்சி 2

[புத்த பகவான் முடமான ஓர் இளமறியைத் தடவிக் கொடுத்தவாறு போதி மரத்தடியில் வீற்றிருக்கிறார். சீடர்கள் அடுத்துள்ள ஆசிரமங்களில் தத்தம் அறப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தாய் நேராகப் புத்தர் திருவடியில் குழந்தையைக் கிடத்திவிட்டுப் பணிந்து தேம்பித் தேம்பி அழுகிறாள்.]

புத்தர் : தாயே, நடந்த தென்ன? ஏன் கண்ணீர் பெருகிக் கலங்குகிருய்?

தாய் : என் தெய்வமே, முடமான இளமறிக்கு அருள் செய்ததுபோல் இறந்துபோன இச் சிறுவனுக்கும் அருள் செய்வீர். [தேம்புகிருள்.]

புத்தர் : அம்மா, அழாதே. இன்பமும் துன்பமும் எவர்க்கும் உண்டு. நடந்ததைச் சொல். இச்சிறுவன் எவ்வாறு இறந்தான்?

தாய் : எம்பிரானே, இன்று காலை ஒரு சோலையில் பால்மணம் மாருத இச்சிறுவனைத் தரையில் விளையாடவிட்டு மலர் கொய்யப் போனேன். படஅரவை விளையாட்டுப் பொருளெனக் கருதி அதன் வாலினையும் தலையினையும் வயிற்றினையும் வருத்தமெழச் செய்துவிட்டான் போலும்! சிறுவன் குறும்பைப் பொருத அந்த நச்சரவம் தீண்டிவிட்டது. சிறுபொழுதுக்குள் நான் திரும்பிவந்தேன். என் கண்மணி இறந்து கிடப்பதைக் கண்டேன். ஐயா, எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தங்களையே நம்பி வந்துவிட்டேன். காடும், மலையும், மேடும் பள்ளமும், நாடும் நகரமும் கடந்து வந்துள்ளேன். தங்களைக் கண்டு என் துயரையெல்லாம் போக்க வந்துள்ளேன். தாங்களே இத்தரைமீது வாடிய மலர்க்கொடி போல் கிடக்கும் என் மைந்தன் உயிர் பெற்றெழச் செய்தருள வேண்டும். ஏழையேன் என் செய்வேன்! தவஞானியாகிய தாங்களே இப் பாலகனுக்கு மீண்டும் உயிர் தரமுடியும். கடைக்கண் பார்த்தருள வேண்டும்.

[குழந்தையைத் தடவுவதும் புத்தரை வணங்குவதுமாக இருக்கிருள்.]

புத்தர்: தாயே, கவலையை விடு. மனக்கவலையின்றேல் மரணமிலாப் பெருவாழ்வில் வாழலாம். உன் மனக்கவலையை ஒழிக்கிறேன். குழந்தை பிழைக்க ஒரு நல்ல மருந்து உள்ளது. ஆனால்......?

தாய்: ஆனால் என்ன? என் ஆருயிரையே வேண்டுமானாலும் அம் மருந்தின் விலையாகத் தருகிறேன். எங்கே சொல்லுங்கள். இப்போதே கொண்டு வருகிறேன்.

புத்தர்: அன்புப் பெருக்கால் இங்ஙனம் சொல்லி விட்டாய், அம்மா. அம்மருந்து எளிதில் கிடைப்பது அன்று. கிடைத்தால் உன் கண்ணன் திண்ணமாகப் பிழைத்துக் கொள்வான். அவன் மீண்டும் விளையாடக்கண்டு மகிழலாம். [தாய் மகிழச்சியால் பூரிக்கிறாள்] அம்மா, மருந்து ஒன்றும் அப்படி விலையுயர்ந்ததில்லை. கிடைக்கும் இடந்தான் அரியதாயுள்ளது.

தாய்: பெருமானே, தாங்கள் மருந்தைக் கூறுங்கள். உலகில் எங்கிருந்தாலும் கருத்தாகத் தேடிக் கொண்டு வருகிறேன். விரைவில் சொல்லுங்கள்.

புத்தர்: கொழித்தெடுத்த கடுகு ஒன்றரை நாழி கொண்டு வந்தால் போதும்.

தாய்: இவ்வளவுதானே? பெருமானே, இதோ வந்துவிட்டேன். [செல்லத் தலைப்படுகிறாள்: புத்தர் தடுத்து நிறுத்தி]

புத்தர்: அவசரப் படாதே அம்மா, முன்னரே சொன்னேனே! மருந்து எளிது: ஆனால் கிடைக்கும் இடம் அரிது. இடத்தை அறிந்து கொள்ளாமல் போகிறாயே. அக்கடுகு எந் நாளும் சாவே அறியாத வீட்டினில் இருந்து வாங்கி வரவேண்டும். அப்போது

தான் அது பலன் தரும். இதை மறவாமல் அவ்வூ டயில் வாழும் மக்களிடம் கேட்டு வாங்கிக்கொண்டுவா. குழந்தையையும் காட்டிக் கேட்டால் மருந்து விரைவில் கிடைக்கலாம். ஆகவே சிறுவனையும் தூக்கிக் கொண்டுபோ. விரைவில் கிடைக்கவில்லையெனின், நெடுநேரம் கழிந்தாலும் குற்றமில்லை. இன்னும் பல இடங்களில் சென்று தேடியாவது கொண்டுவா. உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நானும் இங்கே காத்திருக்கிறேன். போய் வா, அம்மா.

[தாய் மீண்டும் புத்தரை வணங்கி விட்டு மகனைத் தோளில் கிடத்தியவாறு போகிருள்.]

காட்சி 3

[மகனை இழந்த தாய் வீடு வீடாகச் சென்று யாசிக்கிருள். ஓர் ஏழை வீட்டில்.........]

தாய் : அம்மா, ஏழைக்கு ஏழையரே இரங்குவர்? செல்வர் மனையெல்லாம் சென்று தேடினேன். பல் வகையில் முயன்றும் பலன்தரும் மருந்து கிடைக்க வில்லையம்மா. நீங்களாவது என்மேல் இரங்கியருளும். என் மகன் பிழைக்க நீங்களேனும் ஒன்றரை நாழி கொழித்தெடுத்த கடுகு கொடுத்தருள வேண்டும்.

ஏழைப் பெண்: அப்படியா, அம்மா, இதோ கொண்டு வருகிறேன். புத்தர் கூறிய சொல் சத்திய வாக்கல்லவா?

தாய்: அம்மா, நீங்கள் மிகவும் அருள் உள்ளம் படைத்தவர்கள். ஆனல் இம் மருந்துக்கு ஒரு நிபந்தனை யுண்டு. அருள்கூர்ந்து என்மேல் சினம் கொள்ளாமல் கேளுங்கள். 'சாவிய கடுகுதானும் சாவுரி அளவு

சாவினையறியாத வீட்டில் தந்ததாய் இருத்தல் வேண்டும்,' என்று புத்தர் பிரான் எச்சரித்துள்ளாரம்மா. ஆகவே, உங்கள் வீட்டில் இதற்கு முன் யாரேனும்...?

ஏழைப்பெண் : செத்துப் போயுள்ளவர்கள் எத்தனையோ பேர்! என்ன கேள்வியிது! புத்தபிரான் ஞானியாயிற்றே! அவரா இவ்விதம் சொல்லியனுப்பினார்?

'......விரிநீர் உலகில்
பிறந்தார் மூத்தார் பிணிமோ யுற்றார்
இறந்தார் என்கை இயல்பே அம்மா!'
காலையில் உதித்த கடுங்கதிர்ச் செல்வன்
மாலையில் தளர்ந்து மறைவதும் இலையோ?'

தாய் : உண்டு அம்மா! ஆனால் காலையில் உதித்த கடுங் கதிர் காலையிலேயே மறைந்துபோவதில்லையே! என் மகன் முதுமை வரையிலும் வாழ்ந்திருந்தால் நன்றன்றோ?

ஏழைப் பெண் : ஆம்: ஆனால் கடுங்காற்றால் நல்ல காயும் உதிர்வதுபோல, ஊழ் வினையால் உன் மகன் இறந்து போய்விட்டது வருந்தத் தக்கதுதான்.

அண்டை வீட்டுக்காரி : ஐயோ பாவம்! புத்திர சோகம் மெத்தவும் கொடிது! அம்மா, சாவினை அறியாத வீடு ஏதம்மா உலகில்?

'இறந்தவர் எண்ணிலார் இருப்பவர் சிலரே ;
பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும்
உலகின் இயற்கை ; ஒழித்தலும் எளிதோ?

எனவே மனம் தேறிக் கொள்ளம்மா.

தாய் : நீங்கள் எளிதாய்க் கூறிவிட்டீர்கள். என் மனம் என்ன சொன்னாலும் கேட்க வில்லையே!

உங்கள் அன்புக்கு நன்றி. இன்னும் சில இடங்களில் கேட்டுப் பார்க்கிறேன். இப் பரந்த உலகில் சாவறி யாத வீடு ஒன்று கூடவா கிடைக்காமல் போய்விடும். வருகிறேனம்மா.

[அடுத்த தெருவில் சென்று வேறொரு வீட்டில் யாசிக்கிறாள். அவ்வீட்டினரும் தாய்க்குத் தேறுதல் மொழிகள் செப்புகின்றனர்.]

வீட்டினர் : அம்மா, உன்னிலை எங்களை மிகவும் உருகச் செய்கிறது. இந்தக் கடுகை.

உழுதவர் இந்நாள் உலகில் இல்லை,
விதைத்தவர் அன்றே விண்ணுலகு எய்தினர் !
காத்தவர் காலமும் கழிந்து விட்டது !
அடிமையும் இறந்துநாள் ஐந்தாறுகுது
காலனை எவரே கடக்க வல்லார் ?

இந்தத் தெருவிலும் சரி, நீ வேறு எங்கே போனாலும் சரி. சாவினை யறியாத தனிமனை ஒன்றைக் கூடக் காண முடியாதம்மா. மனந்தேறி மீண்டும் புத்தரிடமே செல். அவர் உன் துக்கத்தின் காரணமும் துக்கம் நீங்கும் வழியும் கூறுவார். போ அம்மா.

[இவ்வாறு தாய் ஊரெல்லாம் அலைந்தும், ஒவ்வொரு மனையும் ஏறி இறங்கியும், எங்கும் சாவினையறியாத வீடே காணுமல் சிறிது மனத் தெளிவு அடைகிறாள். மீண்டும் புத்தர் திருவடியில் வந்து வணங்குகிறாள்.]

தாய் : பெரியீர் ! என் புத்தியைத் தெளிவித்த போதி முனிவரே ! தங்கள் திருவடியே அடைக்கலம்.

எங்கே சென்றாலும் தாங்கள் கூறிய அரிய மருந்து கிடைக்கவில்லை. ஆனால் என் மனக் கவலை நீக்கும் அரிய மருந்தைக் கண்டு கொண்டேன். இனி எனக்கு மகன் கவலையுமில்லை. புத்த சரணமே தக்க புகல் என்று உணர்ந்தேன். உலக இயல்பும் உண்மையும் நேரில் உணர்ந்தேன். **எங்குமிலாப் பொருளைத்** தேடச் செய்த இறைவனே, என்னைத் தங்கள் திருவடித் தொண்டர்களுள் ஒருத்தியாக ஏற்றுக்கொண்டு தங்கள் ஞான வொளியில் எனக்கு மேலும் வழி காட்டுங்கள்.

புத்தர்: அம்மா, எங்குமிலாப் பொருள் தேடச் சென்று நீயும் நான் நினைத்த பொருள்தனைப் பெற்று வந்தாய். நல்லது. உண்மை என்றும் கசப்பாகத்தான் இருக்கும். அனுபவித்தால்தான் மனம் தேறும். இவ்வுலகியற்கை என்றும் மாறாது. இனி நீ உன் மகனை எண்ணித் தளராதே. அங்கமெல்லாம் வாயாக அழுதிட்டாலும் அவன் எழுந்து உன் துயரம் அகற்றல் உண்டோ? உன் மகனை அடக்கம் செய்யப் போ. நாளை வந்து புத்த சங்கத்தில் சேர்ந்து உன் வாழ்வை அற நெறியில் செலுத்திப் பயனுறுவாயாக.

[புத்தர் தாயை வாழ்த்தி விட்டுப் போகிறார். தாயும் தன் சேயை அடக்கம் செய்யச் செல்கிறாள்.]

பயிற்சி

பொருளறிக:

நங்கை	பூரிக்கிறான்	நாழி
ஓலம்	கொழித்த	கதிர்ச் செல்வன்

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

கவீர் கவீரென, எல்லையற்ற, கண்ணீரும் கம்பலையுமாக, தலைப்படுதல், அறநெறி.

விடை தருக :

1. மகன் எவ்வாறு இறந்தான் ?

2. புத்தர் பெருமைகளைப்பற்றித் தந்தையும் மகனும் என்னென்ன பேசிக்கொண்டார்கள் ?

3. மகனை இழந்த தாய் புத்தரிடம் முறையிட்டதென்ன ?

4. இறந்த மகன்உயிர் பெறுவதற்குக் கூறிய மருந்து யாது?

5. தாய் இரந்த வீடுகளில் யாக்கை நிலையாமைப் பற்றி என்னென்ன கூறினார்கள்?

6. எங்குமிலாப் பொருள் எது? அதனால் தாய் எவ்வாறு மனந்தேறினாள் ?

7. முடிவில் புத்தர் தாய்க்குக் கூறிய அறவுரை யாது ?

இலக்கணம் :

1. இப்பாடத்திலிருந்து சுட்டுப் பெயர், வினாப் பெயர்களுக்கு உதாரணங்கள் தருக.

2. முதற்பத்தியில் **உன்ன** எழுவாய்ப் பயனிலை செயப்படுபொருள்களைக் கூறுக.

3. தமிழவேள்

நம் தமிழ் நாட்டில் தமிழ் மக்களின் மொழிப் பற்றையும், நாட்டுப் பற்றையும் வளர்க்கப் பல்லாண்டு கள் பாடுபட்டு இவ்விருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த தமிழ்ப்புரவலர்களில் தலையாயவர் தமிழவேள் த. வே உமாமகேசுவரம் பிள்ளை அவர்களாவர். உமாமகேசுவரர் செந்தமிழ்ப் புரவலர் மட்டு மல்லர்: புலவருமாக விளங்கினார். அவர் தஞ்சையில் **கரந் தைத் தமிழ்ச் சங்கம்** என்னும் பெரியதொரு தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்து தமிழ் ஆய்ந்தார். சங்கத் தின் வாயிலாகப் புலவர் பலரைப் பாராட்டி ஆதரித்து வந்தார்.

உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தஞ்சை நகரத் தின் அங்கமாக உள்ள கருந்திட்டைக்குடியில் 1863-ஆம் ஆண்டில் தோன்றினார். அவர் வேளாளர் மரபைச் சார்ந்தவர். அவர் தந்தையார் **வேம்பப் பிள்ளை** என்னும் உயர்குண உத்தமர். அவர் தஞ்சை ஜில்லா வில் தாசில்தாராகப் பணியாற்றியவர் உமாமகேசு வரர் இளமையிலேயே தம் பெற்றோரை இழந்தார். அவருடைய சிறிய தந்தையார் திரு. வி. சுப்பராயப் பிள்ளை அவர்கள் அவரைக் கண்ணுங் கருத்துமாகக் காத்து வந்தார். தஞ்சையிலேயே கல்வி கற்று பி ஏ. பட்டம் பெற்றார். சிறிது காலம் தஞ்சைக் 'கலெக்டர்' அலுவலகத்தில் வேலை பார்த்தார்.

உமாமகேசுவரருக்கு நெடுநாட்களாகத் தாம் ஒரு வழக்கறிஞராக வேண்டுமென்ற ஆவல் இருந்து வந்தது. எனவே தமது எழுத்தாளர் வேலையினின்று விலகிச்

சட்டக் கல்லூரியிற் சேர்ந்தார். இரண்டாண்டுகளில் **பி. எல்.** என்னும் வழக்கறிஞர் தேர்வில் வெற்றி பெற்ருர். அவர் தம் சொந்த ஊரிலேயே வழக்கறிஞ ராகப் பணியாற்றி வந்தார். வழக்கறிஞர் தொழிலில் அவருக்கிருந்த நுண்ணறிவையும், நாவன்மையையும், நேர்மையையும் கண்ட நீதிபதிகளும் பொதுமக்களும் அவரை மிகவும் பாராட்டினர். பெரும்பாலோர் அவரை **'வக்கீல் ஐயா'** என்று அன்பாக அழைத்து வந்தனர். இன்றும் தஞ்சையில் வக்கீல் ஐயா என்னும் சிறப்புப் பெயர் உமாமகேசுவரரையே குறிக்கின்றது. இதி லிருந்தே அவரது பெருமை புலனுகும்.

முதன் முதலில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நம் வக்கீல் ஐயா அவர்களின் இளவலார் திரு. வே. இராதா கிருட்டிணனவர்களால் நிறுவப்பட்டது. சங்கம் கண்ட துங்கர் சில ஆண்டுகளுக்குள் காலமானுர். அதனுல் சங்கத்தை வளர்க்கும் பொறுப்பு தமிழவேள் அவர் களைச் சார்ந்தது. தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பல துறைகளிலும் வளர்ச்சியுற்றது. அதன் புகழ் மணம் நாடெங்கும் வீசிற்று. அவர் தம் உழைப்பால் சங்கத்தின் அங்கமாகத் தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, புலவர் கல்லூரி, திக்கற்ற மாணவரில்லம், இலவச மருத்துவசாலை, நூல் நிலையம் என்னும் கிளை நிலையங்கள் தோன்றின. அவர் சங்கக் கூட்டம் நடைபெறுவதற்கென ஒரு பரந்த மண்டபத்தைக் கட்டினுர். அதற்குத் **தமிழ்ப்பெரு மன்றம்** எனப் பெயரிட்டார். அங்ஙனமே சங்கத்தை அடுத்துச் **சோழன் பூங்கா, பாண்டியன் நிழல், சேரன் விளை**

யாட்டு வெளி என்னும் இடங்களை அமைத்தார். என்னே இவர்தம் தமிழார்வம்! தமிழ்ப் பொழில் என்னும் உயரிய தமிழ்மாத வெளியீட்டையும் தொடங் கித் தமிழை வளர்த்தார். அவ்வப்போது சங்கத்தில் பல புலவர் பெருமக்களை வரவழைத்துச் சொற் பொழிவுகள் ஆற்றச் செய்தார். ஒவ்வோராண்டும் சங்கத்தின் ஆண்டு விழாவைத் தக்கார் ஒருவரின் தலைமையில் சிறப்புடன் நடத்திவந்தார். தம் இல்லத் துக்கு வரும் புலவர்களை முகம்மலர வரவேற்று அவர் களுக்கு எத்தகைய குறையும் இல்லாமல் எல்லா வசதி களையும் செய்தார். ஒவ்வொருவருடனும் தாமே நேரில் அளவளாவி அவர்களுக்கு மகிழ்ச்சி யூட்டுவார்.

சங்க வளர்ச்சியில் பேரார்வம் கொண்ட தமிழ வேளின் புலமைத்திறனை வியந்து அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தினர் ஒரு சமயம் அவரைத் தமிழ்ப் பேராசிரியராக வந்து பணியாற்றுமாறு அழைத்தனர். வெளியூரிற் சென்று அப்பதவியை ஏற்பதால் தம் சங்கத் தொண்டில் தளர்வு ஏற்படுமென்று உணர்ந்த அண்ண லார் அதற்கு இணங்கவில்லை. அவர் தஞ்சை நகர சபை உறுப்பினராகத் தொடர்ந்து பதினைந்தாண்டுகள் உழைத்தார். அவரது தன்னலமற்ற சேவையைப் பாராட்டிய தஞ்சைப் பொதுமக்கள், அவரைத் தஞ்சை மாவட்டக் கழக உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்தனர். இடை இடையே அவர் அக் கழகத் தலைவராகவும் விளங்கினார். மேலும் அவர் தஞ்சை நில அடைமான பாங்கு, கூட்டுறவுப் பதிப்பகம் முதலிய நிலையங்களும் ஏற்படுத்தி மக்களுக்கு நன்மை செய்தார்.

திருவையாற்றில் சரபோஜி மன்னரின் அறநிலைய

மாக விளங்கிய அரசர் கல்லூரியில் அக் காலத்தில் மாணவர்கட்குக் கற்பிக்கப்பட்டு வந்த வடமொழியுடன் தனித்தமிழ் வகுப்பும் ஏற்படுத்த வேண்டுமென அரும்பாடு பட்டார். தம் நண்பர் சர். பன்னீர் செல்வம் அவர்களின் ஒத்துழைப்பால் தம் கருத்து நிறைவேறப் பட்டுக் களிப்புற்றார். அவரது பெரு முயற்சியினால்தான் இன்றும் அக் கல்லூரியில் பல மாணவர்கள் இலவச உண்டியும் உறையுளும் பெற்றுத் தமிழ் பயின்று வருகின்றனர். தமிழ்ப்புலவர்கள், தமிழில் மட்டுமன்றி ஏனைய கலை, தொழில் முதலிய எல்லாத் துறைகளிலும் வல்லவர்களாக இருக்க வேண்டுமென்னும் ஆர்வம் கொண்ட தமிழவேள் அத்தகைய புலவர்களைத் தோற்றுவிப்பதற்காகச் சங்கத்தின் வெள்ளி விழாவில் ஞானியாரடிகளைக் கொண்டு **'தமிழ்ப் புலவர் கல்லூரி'** யொன்றை நிறுவினார். அதன் வளர்ச்சிக்காகப் பலவாறு முயன்று பொருளீட்டி அக் கல்லூரிக்கு அரசியலாரின் அங்கீகாரமும் பெற்றார். தாம் நிறுவிய கல்லூரியிற் பயின்று தமது கருத்தின்படி வரும் முதல் வித்துவானைப் பார்க்கவேண்டும் என்னும் ஆவல் கொண்டிருந்தார். ஆனால் அந்தோ! அவர் ஆசை நிறைவேறு முன்பே அவர் ஊனுடலை நீத்துப் புகழுடம் பெய்தினார். அவர் நிறுவிய கரந்தைப் புலவர் கல்லூரி இன்றும் தமிழ் மாணவர் பலர்க்கு இருப்பிடமாய் நிலவுகிறது.

தமிழவேள் எவரிடத்தும் தண்ணளிமிக்கவர். தம் உதவியை நாடி வந்தவர்களுக்கு வேண்டுவன புரிந்து அவர்கள் மகிழ்வது கண்டு தாமும் இன்புறுவார். தமக்கு நேர்மை என்று தோன்றிய கருத்தை, எத்தகையோருக்கும் அஞ்சாமல் திறம்படப் போராடி வலியுறுத்

தும் வீரராக விளங்கினர். அவர் விருந்ினரை மன முவந்து உபசரிக்கும் வேளாண்மை கொண்டவர்; துன் பத்தில் தளராத தூய்மையாளர். அவருடைய இடைக் காலத்தேயே தம் வாழ்க்கைத் துணைவியையும் அறி வாற்றல்களில் சிறந்த பஞ்சாபகேசன் என்னும் தம் ஒரே மகனையும் இழந்தார். அக் காலமுதல் தமிழ் வளர்ச்சியிலேயே தம் வாழ்நாளைக் கழித்தார். திக்கற்ற மாணவர் பலரைத் தம் விடுதியிற் சேர்த்து இலவச உண்டியும் உறையுளும் கொடுத்துக் காத்தார். அவர் எல்லோரிடமும் இனிமையாகப் பேசும் இயல்பு வாய்ந்தவர்.

அவரது சமயப் பற்றும் தமிழ்ப் பற்றும் கண்டு வியந்த ஞானியாரடிகள் தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் அவருக்குச் **செந்தமிழ்ப் புரவலர்** என் னும் பட்டம் தந்து சிறப்பித்தார். அவரது பொதுநலப் பணியை உணர்ந்த அரசியலார் அவருக்கு **'இராவ் சாகிப்'** என்னும் பட்டம் வழங்கினர். கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழாவில் தமிழ்ப் பேராசிரியர்கள் பலர் கூடி அவருக்குத் **'தமிழவேள்'** என்னும் பட் டத்தை வழங்கி மகிழ்ந்தனர். பிள்ளையவர்கள் அச் சிறப்புப் பெயருக்குப் பெரிதும் பொருத்தமானவர் என்று தமிழ் மக்கள் அவரை வாயாரப் புகழ்ந்தனர்.

தமிழவேள் அவர்கள் கம்பீரமான தோற்றம் வாய்ந்தவர். அவரது பரந்த மார்பும், புன்முறுவல் தவழும் இனிய முகமும் எல்லோரையும் கவரும் தன்மை வாய்ந்தவை. அவர் எப்போதும் தூய எளிய ஆடையே அணிவார். எப்படிப் பட்டவரிடமும் எளி தாகப் பழகுவார்.

தமிழவேள் 1941-ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் வடநாட்டைச் சுற்றிப் பார்க்கத் தம் நண்பர் திரு. அ. கணபதிப்பிள்ளை அவர்களுடன் புறப்பட்டார். 'வட நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களையும், மக்கள் முன் னேற்றத்துக்கும், மொழி முன்னேற்றத்துக்கும் பாடு படும் பிற நிலையங்களையும், அவற்றின் நடைமுறைகளை யும் நேரில் பார்த்து, தமது அனுபவத்தின் மூலமாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பல துறைகளிலும் வளர்க்க வேண்டும் என்பதே அவரது வடநாட்டுப் பயணத்தின் நோக்கமாகும். வடநாட்டுக்குச் சென்ற தமிழவேள் ஆங்காங்குப் பல அறிஞர்களிடம் அள வளாயினர். கல்கத்தாவில் சிலநாள் தங்கி அங்குத் தமிழின் பெருமையைக் குறித்துச் சொற்பொழிவுகள் ஆற்றினர். கவிஞர் ரவீந்திரநாதரின் சாந்திநிகேதனத் தைக் கண்டு அவரது அருஞ் செயல்களைப் பாராட்டி னர். காசி முதலிய புண்ணியத் திருப்பதிகட்குச் சென்று இறைவனை வழிபட்டார். சாரநாதம் என்னுமிடத்தில் புத்த பிரானின் திருவுருவத்தைக் கண்டு வணங்கினர்.

ஒருநாள் பிரயாகையாற்றில் நீராடி, அரித்துவாரம் செல்லப் புறப்பட்டார். இடையில் அவருக்குச் சிறிது காய்ச்சல் கண்டது. அதனல் அயோத்தியின் அண்மை யில் உள்ள 'பைசாபாத்' என்னும் நிலையத்தில் தங்கி மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்றுவந்தார். அங்கு உடல் நலமுறாமல் மூன்றும் நாள் தம் ஐம்பத்தெட்டாம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தசரதனுக்கு இறுதிக் கடன் நடந்த சரயு நதிக்கரையில் தமிழவேளின் இறுதிக் கடனும் நடந்தது. செந்தமிழ்ப் புலவரின் பிரிவைக் கேள்விப்பட்ட தமிழ் மக்களும் புலவர்களும்

துயர்க்கடலில் மூழ்கினர். தமிழவேள் மறைந்தார். ஆயினும் அவர்தம் தமிழ்த் தொண்டின் சின்னங்கள் இன்னும் நம் நாட்டில் தழைத்து மிளிர்கின்றன.

பயிற்சி

பொருளறிக:

புரவலர்	காவன்மை	துங்கர்
ஆய்ந்தார்	அறநிலையங்கள்	வேள்
அலுவலகம்	உறையுள்	நுண்ணறிவு
பணியாற்றி	தண்ணளி	பொருளீட்டி

வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

கண்ணுங்கருத்துமாக, உண்டியும் உறையுளும், புன்முறுவல் தவழும்.

விடை தருக:

1. உமாமகேசுவரம் பிள்ளை யாரால் எவ்வாறு வளர்க்கப்பட்டார்?
2. 'வக்கீல் ஐயா' என்று பிள்ளையவர்கள் பாராட்டப்படக் காரணம் என்ன?
3. உமாமகேசுவரம் பிள்ளையின் தமிழ்த் தொண்டினைப்பற்றி விளக்குக.
4. பிள்ளையவர்களின் குண நலன்கள் யாவை?
5. பிள்ளையவர்களுக்குத் 'தமிழவேள்' என்று பெயர் வரக் காரணம் என்ன?
6. அவர் பெற்ற பிற பட்டப் பெயர்கள் யாவை?
7. அவர் வடநாட்டு யாத்திரையின் நோக்கம் யாது?
8. தமிழவேள் அவர்களின் அருங்குணங்கள் யாவை?
9. தமிழவேளின் இறுதி வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

4. பேசும் நயம்

"நயம்பட வுரை," என்ருர் ஔவையார். இனி தாகப் பேசுவதையே எல்லோரும் விரும்புவர்.

"இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே"

என்னும் பாடலை நீங்கள் கீழ்வகுப்பில் படித்திருக்கலாம். காலம் அறிந்தும் இடம் கருதியும் கேட்பவர் மகிழுமாறு பேசுதல் பேச்சு நயம் வல்லார்கட்கு இயல்பாகும். பேச்சில் நயம் உண்டாவதற்குக் காரணம், இருபொருள் வருமாறு சிலேடைச் சொற்களை இயைத்துச் சொல்லுதல், கேட்பவர் நினைப்பதற்கு மாருக அவர் ஏற்குமாறு கூறி வியப்பூட்டுதல், சொல்லோசையால் புதிய கருத்துத் தோன்ற வைத்தல், மோனையும் எதுகையும் இயல்பாக வந்து இனிய ஓசை ஏற்படுமாறு பேசுதல், ஆன்ரோர்களின் சிறந்த சொற்பெருக்குகளை மனப்பாடம் செய்து கொண்டு, வாய்ப்பான சமயத்தில் அவற்றைக் கூறிக் கேட்போரை மகிழ்வித்தல் முதலியன பலவழிகளாகும்.

இவ்வாறு சொல் நயமுடையார் சொல்லியபடி உலகம் ஆடும் என்பதை "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிறந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்று வள்ளுவர் விளக்கியுள்ளார். முன்னுட்களில் கிரேக்க தேசத்தில் பேச்சு நயமிக்கவர்களே அரசியலைக் கைப்பற்றி ஆண்டதாகச் சரித்திரம் கூறும். உரோமாபுரியின் மன்னர் மன்னன் **சீசரும்**, அவன் நண்பன் **ஆண்டோனியும்**, கிரேக்க தத்துவ ஞானி **சாக்ரடீஸும்** பேச்சு நயமிக்கவர்கள். நம் நாட்டிலும் தம் பேச்சுத்

திறத்தால் தவறிய அரசர்களையும் பல புலவர்கள் நன்னெறிப்படுத்தியுள்ளனர். அஃதன்றிச் சிலேடைச்சொற்களைப் பலவழியும் பயன்படுத்தி மிகவும் மகிழ்ந்தவர் தமிழரேயாவர். இங்குச் சில எடுத்துக் காட்டுகள் கூறுவோம்.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவர். அவர் பேச்சுநயம்



மிக்க பேரறிஞர்; சிலேடையாகவும் பேசவல்லவர். ஒரு முறை, அவர், தம் நண்பர் ஒருவர் வீட்டுககுச் சென்றிருந்தார். அங்கே இரவு உணவுக்குப் பிறகு அவருடைய நண்பர் அவருக்குக் குடிக்கப் பால் கொண்டு வந்து தந்தார். பால் குவளையைக் கையில் வாங்கிக்

கொண்ட பண்டிதமணி, அதை ஒருமுறை உற்றுப் பார்த்துவிட்டுத் "**திருப்பாற்கடலில் சீனிவாசன் துயில் கொள்ளுகிறன்.**" என்று கூறிச் சிரித்தார். அங்கிருந்த யாவரும் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். உடனே பண்டிதமணி பாலில் எறும்பு விழுந்திருப்பதைக் காட்டி, சிறிய எறும்புக்கு இந்தக் குவளைப்பால் பாற்கடலேயாகும். சீனி என்பது சருக்கரை, பாலுக்கு போடப்படும் சீனியில் வாசம் செய்யும் எறும்பு சீனிவாசன் அல்லவா?" என்று விளக்கினர். எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தனர்.

மற்ருெரு முறை, பண்டிதமணி சென்னையில் ஒரு பெருங் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது பெண்கள் அமர்ந்திருந்த பக்கமிருந்து ஓயாத கூச்சல் ஏற்பட்டது. எவ்வளவு அடக்கியும் ஒலி அடங்கவில்லை. பண்டிதமணி ஒலி பெருக்கியில் "**பெண் மணிகள்** தானே! அவை ஒலித்துக் கொண்டேயிருக்கும்," எனக் கணீரென்று கூறினர். கூட்டத்தார் அனைவரும் நகைத்தனர். பிறகு அமைதி ஏற்பட்டது.

கவியரசர் பாரதியாரைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். அவர் இளமையிலேயே கவியரசி சரோஜினி தேவியைப்போலப் பாடல்கள் எழுதி வந்தார். இதனல் அவர் ஆசிரியர்க்கே அவர்மீது பொருமை ஏற்பட்டது. ஒரு நாள் பாரதியாரை இழிவு படுத்த எண்ணி அவரை அழைத்துப் "பாரதி சின்னப் பயல்" என்னும் ஈற்றடி வருமாறு ஒரு வெண்பாப் பாடும்படி கூறினர். அந்த ஆசிரியரின் பெயர் காந்திமதிநாத பிள்ளை என்பது. உடனே, அவர் பெயரைப் பாட்டிலமைத்துப் பின்வருமாறு முடியும்படி பாடினர் பாரதியார்;

"........காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்."

பார்தி என்பதைப் பார் அதி எனப் பிரித்துத் தன் சொற்றிறத்தால் பாரதியார், தம்மையே இழிவுக் குறிப்புப்படப் பாடியது கண்ட ஆசிரியர் வெட்கித் தலைகுனிந்தார்.

ஒரு தமிழாசிரியர், சிறந்த சொற்பொழிவாளர்: ஒருநாள் எல்லோரும் கூடியிருந்தபொழுது "**என்றும் குறளை இனி ஓதோம்**" என்று பாடத் தொடங்கினார். "திருக்குறள் உலகத்தார் உள்ளத்திலெல்லாம் இடம் பெற்ற பெருமையுடையது. அந்தக் குறளை இப்புலவர் என்றும் இனி ஓதமாட்டோம்," என்கிறாரே என்று யாவரும் கலக்கமடைந்தனர். புலவரை யாவரும் சினந்து நோக்கினர். உடனே புலவர் கூறினார்: "குறள் என்றால் கோள் கூறும் சிறுமை என்றும் ஒரு பொருள் உண்டு; என்றும் புறங்கூறும் சிறுமை விலக்கத் தக்கது அல்லவா? ஆகவே "என்றும் குறளை இனி ஓதோம்" என்று மீண்டும் பாட்டைத் தொடங்கினார். அருகிலிருந்தவர்கள் அனைவரும் அவர் பேச்சு நயத்தினை வியந்து பாராட்டினர்.

வண்டானம் என்னும் ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. அவ்வூரில் முத்துசாமி ஐயர் என்னும் ஓர் அறிஞர் இருந்தார். அவர்தம் பேச்சு நயத்தால் அவருக்குப் பலர் நண்பராயிருந்தனர். அவருள் தம்பிரான் ஒருவர் திருநீறு பூசிய மேனியராய் ஒரு நாள் முத்துசாமி ஐயரைப் பார்த்து, "வண்டானம் இப்பொழுது என்ன செய்கிறது?" என்றார். வண்டானம் முத்துசாமி ஐயர் அவர் குறிப்பறிந்து கொண்டு. "நீங்

கள் சிவப்புத்தேள்," என்று தக்கபடி பதில் கூறினார். வந்தவர் மனம் சுருக்கென்றது. அதை அவர் முகத்தின் மூலம் அறிந்த ஐயர், "என்னையா, நீங்கள் சிவப்புத்தேள் போல் காண்கின்றீர் என்றுதான் உரைத்தேன்," என்றார். செந்தேள் நஞ்சு மிகவுடையது என்பது யாவரும் அறிந்ததே தம்பிரானை அவர் செய்த குறும்பிற்குக் கண்டிப்பதுபோல அவர் சிவ வடிவைப் புகழ்ந்து ஐயர் கூறினார். அவர் பேச்சு நயத்திலீடுபட்ட தம்பிரான் மிக மகிழ்ந்தார்.

வாடைக் காலத்தில் பனி மிகவும் கொடுமையாகத் துன்புறுத்தும். இரண்டு நண்பர்கள் கடும்பனி வீசும் காலத்தில் ஒரு நாளிரவு வயலைக் காக்கச் சென்றிருந்தனர். அவருள் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து "இந்தப் பனிக்காலம் மிகவும் கொடிதப்பா,"என்றான். மற்றவன் உடனே, "இந்தப் பனிக்காலம் மிகவும் இனிது," என்றான். தன் கருத்தை வெட்டிப் பேசியதனால் நண்பன் வருத்தப்படுவதை அறிந்த மற்றவன், "ஏனண்ணா, நான் உங்களை வெட்டிப் பேசவில்லை. வெட்டிப்பேச்சு வேதனைதான் தரும்; உங்கள் கருத்தை நான் ஒட்டியே பேசியுள்ளேன். அப்படியிருக்க ஏன் நீங்கள் என் பேச்சைக் கேட்டதும் முகத்தை சுளிக்கின்றீர்கள்?" என்றான். மூத்தவன் "எங்கே தம்பி நீ அவ்வாறு கூறினாய். நான் பனிக்காலம் கொடிது என்றால் நீ பனிக்காலம் இனிதென்று கூறியது என்னோடு ஒட்டிப் பேசிய பேச்சா ? உனக்குப் பனிக்காலம் இனிதாயிருந்தால் ஏன் போர்வையோடு வந்துள்ளாய்?" என்றான். உடனே இளையவன், "அண்ணா, நீங்கள் தவறாகப் பொருள் கொண்டீர்கள். நான்

இந்தக் கொடுமையான பனிக்கு ஆலமே (விஷமே) மிகவும் இனிது என்று கூறினேன். விஷத்தால் நாம் மயக்கமடைந்து விடுவதால் பனிக்குளிரால் வரும் துன்பம் தெரியாதல்லவா?" என்ருன். மெய்ப் பொருளுணர்ந்த மூத்தவன், "நீ கெட்டிக்காரன்" என்று சிரித்தவாறே இளையவன் முதுகில் தட்டிக்கொடுத்தான்.

ஒரு சமயம் அவ்வையார் மதுரைக்குச் சென்றிருந்தார். அவர் மதுரைத் தெருவில் செல்லும்போது சங்கப் புலவர்கள் சிலர் வாட்டமுற்றிருப்பதைக் கண்டு, "ஐயன்மீர், உங்கள் வாட்டத்துக்கு உற்ற காரணம் என்னை?" என வினவினர். அதற்குப் புலவர்கள், "அம்மையீர், பாண்டியன் எங்களுக்கு நாளை பொழுது சாய்வதற்குள் நான்கு கோடிப் பாடல்களைப் பாடிமுடிக்க வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளான். அரசன் ஆணையை மீறின் ஆவியையே இழக்க நேரும். என் செய்வோம்" என்ருர்கள். அவ்வையார், "சங்கப் புலவீர், இதற்காகவா வருந்துகின்றீர்கள்! இஃதொரு அரிய செயலோ? நான் பாடித் தருகிறேன்; எழுதிக் கொள்ளுங்கள்" என்ருர். அவர் கூறியவை:

மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும். 1

உண்ணீர்உண் ணீரென்(று) உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும். 2

கோடி கொடுத்துக் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும். 3

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநா
கோடாமை கோடி பெறும். 4

இங்ஙனம் சாதுரியமாக அவ்வையார் கூறிய பாடல்களை அரசன் திருமுன் கூறிப் புலவர்கள் இன்புற்றனர். புல் வர்கள் பாடிய பாடல்களைக் கேட்ட பாண்டியன் அவ்வையாரே இங்ஙனம் பாடுவதில் வல்லவர் என்று உய்த்துணர்ந்தான். புலவர்களுக்குப் பரிசளித்ததோடு அவ்வையாரையும் அழைத்துப் பலப்பல பரிசுகள் நல்கிப் பாராட்டினுன்.

இத்தகைய பேச்சு நயம் தமிழ்ச்சங்க இலக்கியங் களிலும் உண்டு. சிலப்பதிகாரத்தின் பெருமை உங்க ளுக்குத் தெரிந்ததே. அதில் மாடலன் என்னும் மறை யவன், பேச்சுநயமிக்கவனுய்ச்சேரன் செங்குட்டுவனைப் பலமுறை மகிழ்வித்துள்ளான். செங்குட்டுவன் வட நாட்டு யாத்திரையை வெற்றியுடன் முடித்துக் கண்ண கிச் சிலையைக் கங்கையில் முறைப்படி நீராட்டியபின் வடநாட்டு மன்னர் அமைத்த மணி மண்டபத்தில் ஒருநாள் திருவோலக்கக் காட்சி வழங்கினுன். அப் போழ்து அங்குவந்த மாடலன் என்றஅந்தமறையவன், “மாதவி என்னும் பெண் காவிரிப்பூம்பட்டினத்துக் கடற் கரையில் பாடிய கானல்வரிப் பாடல், இவ் வடநாட்டுக் கனகவிசயர்தம் முடித்தலையை நெரித்தது வியப்பே. அரசே வாழ்க” என்று இரத்தினச் சுருக்கமாய்ச் சிலப் பதிகாரக் கதையையும், செங்குட்டுவன் வெற்றியையும் உள்ளடக்கிக் கூறினுன். அவன் உட்கருத்து மன்ன னுக்கு உடனே விளங்கவில்லை. “நான் மறையாளா, நீ கூறியது யாது?” என்று வினவினுன் செங்குட்டுவன். மாடலன், “மாதவியின் பாட்டால் கோவலன் மனம் மாறித் தன் மனைவி கண்ணகியோடு மதுரை வந்து கொலையுண்டான். கண்ணகி பாண்டியன் பிழையை

உணர்த்தி மதுரையை எரித்தாள். சேரநாடு வந்து தெய்வமாயினாள்; அத்தெய்வ மாபத்தினிக்குத் தாங்கள் கல் எடுத்துவர வடநாடு வந்து கனகவிசயரை வென்று அவர் தலையில் கல்லேற்றினீர். அதனால், மாதவியின் பாடலே கனகவிசயர் தலைநெரித்திடக் காரணமாயிற்று," என்று விளக்கினான். யாவரும் மாடலனின் மதிநுட்ப மமைந்த பேச்சு நயமறிந்து வியந்து பாராட்டினர். செங் குட்டுவன் மாடலனுக்குப் பல பரிசுகள் வழங்கிச் சிறப் பித்தான்.

மாணவர்களே, பேச்சு நயத்தால் எவ்வளவு இன் பமும் நன்மையும் ஏற்படுகின்றன பார்த்தீர்களா? 'நயம் பட உரை' என்று நம் தமிழ் மூதாட்டி ஏன் கூறினாள் என்பதை இப்பொழுது உணர்ந்து கொண்டிருப்பீர்கள். கிரேக்க நாட்டில் டெமாஸ்தெனிஸ் என்னும் அறிஞன் முதலில் சரியாகப் பேசத் தெரியாது அவமானப்பட் டான். ஆனால் அவன் விடாமல் முயன்றும் பயின்றும் முன்னேற்ற முற்றாற்போலே, நீங்களும் நமக்குப் பேச்சு நயமாய் வருமா என்று பயப்படாமல், முயன்று முன் னேறுங்கள்.

பயிற்சி

பொருளறிக:

இயம்பு	குறளை	ஆலம்
இருநீர்	சிறுமை	திருவோலக்கம்
செப்புதல்	நஞ்சு	கானல்வரி
ஆன்றோர்		

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

ஓட்டிப்பேசு, வெட்டிப்பேசு, சாதுரியமாக, இரத்தி னச் சுருக்கமாக, நயம்பட.

விடை தருக :

1. 'நயம்பட உரை'—இதன் பொருளை விளக்குக.

2. பேச்சு நயம்பட உரைப்பது எவற்றால் ஏற்படும்..

3. கீழ்க்கண்ட தொடரிலுள்ள சொல் நயத்தை விளக்குக.

(i) திருப்பாற்கடலில் சீனிவாசன் துயில்கொள்கிறான்.

(ii) பெண்மணிகள் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

(iii) என்றும் குறளை இனி ஓதோம்.

4. பாரதியார், காந்திமதிநாதப் பிள்ளைக்கு எவ்வாறு பாடம் கற்பித்தார்?

5. 'பனிக்காலம் நன்று' சிலேடைப் பொருளை விளக்குக.

6. அவ்வையார் நான்கு கோடிச் செய்யுட்களைப் பாடியது எங்ஙனம்?

7. மாடலனின் பேச்சு நயத்தைப் புலப்படுத்துக.

5. ஆந்திர நாடு

இந்தியத் துணைக்கண்டம் பண்டைக் காலத்தில் ஐம்பத்தாறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததென அறிகிறோம். அங்கம், வங்கம், கலிங்கம், கோசலம் மகதம், மாளவம், பாஞ்சாலம், ஆந்திரம், தமிழகம் முதலியன இத்தொகையில் அடங்குவனவாம் இந் நாடுகள் முகமதியர் ஆட்சியிலும். ஆங்கிலேயர் ஆட்சியிலும் பல மாறுதல்களை அடைந்து தம் எல்லைகளை இழந்து விட்டன. இந்தியா இந்நாளில் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் நம் சென்னை மாகாணமும் ஒன்று.

சென்ற 1953-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாள் தென்னிந்திய வரலாற்றிலேயே ஒரு இன்றியமையாத நாளாகும். அதற்கு முன்னாள் வரை சென்னை மாகாணத்தில் அடங்கி இருந்த ஆந்திர நாடு மொழி அடிப்படையில் தனி மாகாணமாகப் பிரிந்து கொண்டது. கழிந்த நாற்பது ஆண்டுகளாக ஆந்திரர் கண்டுகொண்டிருந்த கனவு பலித்து விட்டது : ஆந்திர மாகாணம் உருவாகியுள்ளது. சகோதர நாடாகிய ஆந்திர நாட்டைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வது நமக்குற்ற கடமையாகு மன்றோ ?

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம். துளு முதலிய தென்னிந்திய மொழிகளை மொழி வல்லுநர்கள் திராவிட மொழிக் குழுவில் அடக்கிக் கூறுவர். திராவிட மொழிக் குழுவில ஒன்றாய தெலுங்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஆந்திரர்கள் பல

நூற்றுண்டுகளாக இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். கி. மு. 300-ஆம் ஆண்டிலேயே ஆந்திரர்கள் நல்ல நிலையில் ஆண்டு வந்தார்கள் எனச் சிலர் கூறுவர். சந்திர குப்த மௌரியர் காலத்திலேயே ஆந்திரர்கள் தனியாட்சி நடத்திவந்துள்ளனர். ஆந்திர மன்னரிடம் மௌரிய மன்னனின் இராணுவத்தைவிடப் படைப் பலம் மிக்கிருந்ததெனக் கூறப்படுகிறது. ஆந்திர மன்னர்கள் சதவாகன பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டனர். அதனுல் அவர்கள் **சதகர்ணி** என்னும் பட்டத்தைத் தங்கள் பெயருடன் சேர்த்துக் கொள்வது அக்காலத்தே பெரு வழக்காக இருந்தது. ஆந்திர நாட்டை 13-ஆம் நூற்றுண்டில் விஜய நகர மன்னர்கள் ஆண்டனர். ஆந்திர அரசர்கள் அனை வரும் அருங்கலை விநோதர்களாக விளங்கினர். இதன் பயனுகவே ஆந்திரநாடு இந் நாளிலும் கலைகள் பலவற்றிலும் சிறந்து விளங்குகிறது.

சங்ககால முதலே தமிழரும் தெலுங்கரும் நெருங்கிப் பழகி வந்துள்ளனர். முஸ்லீம்களின் படையெடுப்பு நிகழ்ந்த காலங்களில் ஆந்திரர்கள் தஞ்சையில் தங்கி வாழ்ந்திருந்தனர். பின்னுளில் ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் என்னும் கீர்த்தி பெற்ற ஆந்திர அரசர் தமிழகத்தையும் ஆண்டிருப்பதோடு தமிழர் மொழி, கலை, நாகரிகம் முதலியவை வளரப் பல வழியிலும் உதவி இருப்பதாக வரலாற்றில் நீங்கள் படித்திருக்கலாம். சங்கீதத்திலும் சிற்பத்திலும் தமிழர் ஆந்திரர் என்னும் வேறுபாடு இன்றும் இல்லாமலிருப்பதும் தமிழாந்திரர் இணைப்புக்குச் சான்ருகும்.

இக்காலத்தில் ஆந்திர நாடு, பனிரண்டு மாவட்

டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, நெல்லூர், கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, கிருஷ்ணு, குண்டூர், விசாகப் பட்டினம், ஸ்ரீகாகுளம் (காக்கிநாடா), சித்தூர் என்பனவாம்.இந்நாட்டின் தற்காலத் தலைநகர் **கர்நூல்** ஆகும். இதன் எல்லைக்குள் 14 பேரூர்களும், 839 சிற்றூர்களும் உள்ளன. தலைநகரில் 65,000 மக்கள் வாழ்கின்றனர். ஆந்திர நாட்டின் பரப்பளவு ஏறக் குறைய 62,000 சதுரமைல் ஆகும். இங்குச் சுமார் மூன்றரைக் கோடி மக்கள் உள்ளனர். இந்நாட்டுக்கு அண்மையில் உள்ள ஹைதராபாத் நாட்டிலும் தமிழ் நாட்டிலும் தெலுங்கு பேசும் ஆந்திர மரபினர் பல்லாயிரக் கணக்கினர் உளர். ஆந்திர நாட்டில் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்பூர் ஆகிய நான்கு மாவட்டங்களும் வளங்குறைந்தவை. இந் நான்கினையும் **இராயலசீமை** என்பர். இராயலசீமையின் வளத் தைப் பெருக்கவே தலைநகரை கர்நூலில் ஏற்படுத்தி உள்ளனர்.

கோதாவரி, கிருஷ்ணு என்ற இரு பெரு நதிகள் ஆந்திர நாட்டை வளப்படுத்துகின்றன. கோதாவரி இந்நாட்டுள் 225 மைல் நீளம் கிழக்காக ஓடிக் கடலில் கலக்கிறது. மஞ்சிரா, பிரான்ஹிதா, இந்திராவதி சபரி ஆகிய நான்கு துணைநதிகளை உடைய கோதாவரி யின் அழகையும் பரப்பையும், அது செய்யும் பயனையும் கண்ட கவியரசர் கம்பர், "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் (இராம லக்ஷ்மணர்)கண் டார்." என்று இராமாயணத்தில் புகழ்கிறார். கிருஷ்ணு வும் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்தே தொடங்கி

இந் நாட்டில் 120 மைல் நீளம் ஓடி, ஆந்திரத்தை வளம்பெறச் செய்கிறது. கிருஷ்ணு நதியும் வற்ருத நீரை வழங்குகின்றது. இவையன்றி, வடபெண்ணை என்னும் நதி முதலாக இந்நாட்டில் பதினேழு சிற்ருறுகளும் ஓடுகின்றன.

கோதாவரியில் ஓர் அணைக்கட்டும் மூன்று கால் வாய்களும் அமைந்துள்ளன. இதனுல் 8,20,000 ஏக்கர் நிலம் பயிராகிறது கிருஷ்ணுவிலும் ஓரணைக்கட்டு விஜயவாடாவுக் கருகில் கட்டப்பட்டுள்ளது. இரு கால் வாய்கள் மூலம் இதிலிருந்து 9,30,000 ஏக்கர் நிலப் பரப்புக்கு நீர் பாய்கிறது. வட பெண்ணையிலும் ஈரணைகள் உள்ளன. 1,67,500 ஏக்கர் நிலம் இவற்ருல் பயிரிடப் படுகின்றன. கோதாவரியில் இராமபாதசாகரும் கிருஷ்ணுவில் நந்திகொண்டா, புலிச்சிந்தலா, சித்தீஸ்வரம், வம்சதாரா, சபரி, சோமசிலா, துங்கபத்ரா, கண்டிகோட்டா முதலிய பல அணைகளும் நன்கு கட்டப் பட்டவுடன்,இந்நாடு இந்தியாவிலேயே சிறந்த நீர்வளம் நிறைந்த நாடாகவும், உணவு உற்பத்தியில் தலைசிறந்த இடமாகவும் இலங்கும் என்பதில் ஐயமில்லை.

நீர்வள மிக்குள்ளது போலவே ஆந்திராவில் நில வளமும் மிக்குள்ளது. மாங்கனீஸ், மைக்கா, பொன் இரும்பு, கல்நார், செம்பு, நிலக்கரி, எஃகு, குரோமைட் (Chromite) கிராபைட் (Graphite) வைரம், சுண்ணும்பு கந்தகம் (Sulphur), பைரிட்ஸ் (Pyrites) முதலிய விலை மதிப்புடைய உலோகப் பொருள்கள் ஆந்திர நாட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன. புகையிலைக்கும், நெசவுக்கும் இந் நாட்டில் மதிப்பு அதிகம். இராயல சீமை நாடுகள் கம்பள நெசவுக்கும், நெல்லூர் பசுக்

களுக்கும், குண்டூர் புகையிலைக்கும் உலகப் புகழ் பெற்றவை. விசாகையில் கப்பல் கட்டும் தளம் உள்ளது. கடற்கரை நாடுகளில் உப்பளங்களும் உண்டு. இவற்றால் ஆந்திர நாட்டில் தொழிற்சாலைகள் பல உண்டு.

இராஜமஹேந்திரத்திலுள்ள ஆந்திரக் காகிதத் தொழிற்சாலை, கர்நூலில் வனஸ்பதி உற்பத்தி செய்யும் துங்கபத்திராத் தொழிற்சாலை, விஜயவாடாவிலுள்ள சிமெண்டுத் தொழிற்சாலை, குண்டூர் புகையிலை, சணல் தொழிற்சாலை, மசூலிப்பட்டணத்திலுள்ள அறிவியற் கலைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை, கூடூர் நெல்லூர் முதலியவிடங்களிலுள்ள மைக்கா தொழிற்சாலை, ஆதோனியில் உள்ள கம்பளத் தொழிற்சாலை முதலிய பல தொழிற்சாலைகளால் ஆந்திர நாடு தொழில் வளத்தில் சிறந்துள்ளது. வால்டேரில் உள்ள ஆந்திரப் பல்கலைக்கழகம் கல்வியை வளர்க்க உதவுகிறது.

ஆந்திர நாட்டுச் சிற்பக்கலை மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஹம்பியிலுள்ள கல் தேர் மண்டபங்கள், லேபாக்ஷி என்னும் இடத்திலுள்ள வாண ஓவியங்கள், விசாகையில் உள்ள புத்த ஸ்தூபிகள், அமராவதியிலும் ஜக்கையப் பேட்டையிலும் உள்ள புத்தர் கதைகளை விளக்கும் சிற்பங்கள், அஜந்தாக் குகைக்கோயில்கள் முதலியன ஆந்திரக் கலைஞர்களின் கற்பனைக் களஞ்சியங்கள் எனில், அது மிகையாகாது. குண்டூர் மாவட்டத்தில் பலநாடு தாலுக்காவில் கிருஷ்ணா நதிக் கரையில் உள்ள நாகார்ஜுனகொண்டா 1926-ஆம் ஆண்டில்தான் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இந்த இடங்களில் உள்ள கல்வெட்டுக்களி

லிருந்து இது இக்ஷுவாகு அரசர்கள் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுறது. நாகார்ஜுனன் இவ்விடத்தில் வசித்ததாகவும் இங்குப் பல நாடுகளிலிருந்து புத்த சமயத்தினர் வந்து ஒருங்கு கூடினர் என்றும்கல்வெட்டுச் செய்திகளால் அறியலாம். புத்த சமயச் சிற்பங்கள் பலவற்றை இங்கே காண

நாகார்ஜுன கொண்டா புத்த மடாலயச் சிற்பங்கள்
உரிமை: தொல் பொருளாராய்ச்சி இலாகா, சென்னை.

லாம். பத்ராஜலம் ராமதாஸ், திருப்பதி அண்ணமாச்சார்லு, நந்திகாம வெங்கண்ணு முதலிய ஆந்திர இசைவாணர்களாலும், திருவையாறு தியாகராஜ சுவாமிகளாலும் தெலுங்கர்கள் இசைக்கலைக்கும் தெய்வ நெறிக்கும் அளவற்ற தொண்டாற்றியுள்ளனர். லேபாக்ஷி, தாடிபத்ரி, ஹம்பி முதலிய இடங்களில் உள்ள கோயில் மண்டபத் தூண்கள், மதுரையில் உள்ள இசைக் கற்

களைப்போல், பலவேறு குரலிசைக்கும் தன்மை உடையவை. நாடகம், நடனம் முதலிய கலைகளிலும் ஆந்திர நாடு முன்னணியில் உள்ளது.

ஆந்திராவில் பக்தபோதனு, வேமன்னு, கிருஷ்ண தேவராயர் போன்ற சிறந்த கவிஞர்களும் அரசர்களும், அந் நாளில் தோன்றி விளங்கினாற்போல இந் நாளிலும் பல கலைஞர்களும் அறிஞர்களும் உள்ளனர். அவர்களுள் நம் இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் உலகப் புகழ்பெற்ற தத்துவஞானி, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், டாக்டர் பட்டாபி சீதாராமய்யா முதலியோர் சிறந்தவர்கள். ஆந்திர நாட்டின் மேன்மைக்குப் பலர் உழைத்துள்ளனர். அவர்களுள் திரு. தேசபக்த கொண்டா வெங்கடப்பய்யா காந்தியடிகளால் நிரம்பவும் பாராட்டப்பட்டவர். உலகில் கிரிக்கெட் விளையாட்டில் புகழ்வாய்ந்த திரு. ஸி. கே. நாயுடு அவர்களும் ஓர் ஆந்திரரே.

இத்தகைய வளங்கள் எல்லாம் வாய்க்கப்பெற்ற ஆந்திர நாடு, "நாடென்ப நாடா வளத்தன" என்று திருவள்ளுவர் கூறியதற்கு இலக்கியமாக அமைந்துள்ளது. இந்நாட்டுப் பிரிவினை நாளில், நம் இந்திய முதலமைச்சர் கீழ்க்கண்டவாறு இந் நாட்டை வாழ்த்தினர். "...இறுதியாக இப்போது ஆந்திர ராச்சியம் ஏற்பட்டுவிட்டது:......பல நாடுகள் அடங்கிய இந்தியக் குடும்பத்தில் புதிய அங்கத்தினராக வந்துள்ள ஆந்திர ராச்சியத்துக்கு நம் நல்லெண்ணங்களை யெல்லாம் தெரிவித்துக் கொள்வோமாக. அது மட்டுமன்றி இப்புதிய ஆட்சி சிறந்து வாழ்வதற்கு நம்மால் இயன்ற அளவு நாம் உதவி செய்வோமாக."

பயிற்சி

பொருளறிக :

வரலாறு	அருங்கலை விநோதர்	உப்பளம்
மாவட்டங்கள்	சான்றோர்	ஓவியங்கள்
இலங்கும்	கவி	களஞ்சியம்
சான்று	ஐயம்	இசைவாணர்

வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

அருங்கலை விநோதர், கற்பனைக் களஞ்சியம்.

விடை கூறுக :

1. முற்காலத்தில் நம் இந்திய நாடு எத்தனைச் சிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது? அவற்றுள் ஒரு சில நாடுகளின் பெயரைச் சொல்லுக.

2. ஆந்திரர் பண்டுதொட்டே சீரும் சிறப்பும் உடையவர் என்பதை எங்ஙனம் உணரலாம்?

3. ஆந்திர மாகாணம் எத்தனை மாவட்டங்களைக் கொண்டுள்ளது? அவை யாவை? அம் மாகாணத்தின் பரப்பளவு, ஜனத்தொகை என்ன?

4. எப்பகுதிக்கு இராயலசீமை என்று பெயர்?

5. ஆந்திர நாட்டில் ஓடும் ஆறுகள் யாவை? அவைகளுள் சிறப்புடையன எவை?

6. ஆந்திர நாட்டிலுள்ள நீர்பாசன வசதிகள் யாவை?

7. ஆந்திர மாகாணத்தின் நிலவளம் எத்தகையது?

8. அம் மாகாணத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

9. ஆந்திரரின் கலை வளத்தைப் பற்றி எழுதுக.

10. ஆந்திராவில் தலை சிறந்த கவிஞர் யாவர்?

11. ஆந்திர நாட்டை வளமான நாடு என்பது மிகையாகாது—எப்படி?

6. இளமுது சூரியர்கள்

காலையில் கதிரவன் கிழக்கே உதயமாவதைக் கண்டு மகிழாதார் யாருமில்லை. மாலையில் மேற்கே வெயிலோன் மறைவதையும் கண்டு களிக்காதவரும் யாருமில்லை. இவ்விரு கட்சியும் வழங்கும் இயற்கையின் பயன் எல்லையற்றது. காலைச் செங்கதிர் கடுகி நடந்து சாலவும் ஒளிதரும். மாலைப்பொன்கதிர் ஒளியிழந்து யாவர்க்கும் ஓய்வும் அமைதியும் உதவும். காலைக் கதிரவனை இளஞ்சூரியன் என்றும், மாலைக் கதிரவனை முதுசூரியன் என்றும் கூறுவதுண்டு. இவ்விரு கதிர்களும் இணைந்து ஒரே காலத்தில் தோன்றுமானால் அக் காட்சி நம் சிந்தையைக் கிளறும் விந்தையான காட்சியாயிருக்கும். இலக்கிய உலகிலும் இத்தகைய இளஞ்சூரியன் ஒன்றும் முதுசூரியன் ஒன்றும் இணைபிரியாமல் தமிழகம் எங்கும் உலாவித் தமிழர்கள் உள்ளத்திருளகற்றி ஓங்கிய புகழுடன் வாழ்ந்துள்ள வரலாற்றை நீங்கள் அறியின், அச் சூரியர்களின் பாவொளிக் கதிரால் உள்ளக்கிளர்ச்சி பெறுவீர்கள்.

இந்த இரு சூரியர்களும் சோழநாட்டில் ஆமிலந்துறை என்னும் ஊரில் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்குமுன் செங்குந்தர் மரபில் தோன்றினர். மூத்தவரை முதுசூரியன் என்றும் இளையவரை இளஞ்சூரியன் என்றும மக்கள் அழைத்தனர். ஆனால் இவ்விருவரும் உடனபிறந்தவர்கள் அல்லர். அம்மான்சேயும் அத்தை மகனும் ஆய உறவு உடையவர்கள். முதுசூரியர் முடவராய்ப் பிறந்தார். இளஞ்சூரியர் குருட

ராய்ப் பிறந்தார். குருடர் முடவரைத் தோளில் தூக்கிக்கொள்ள, முடவர் வழி கூறிச் செல்வார். இவ்வாறே இவ்விருவரும் எங்கும் சென்று வருவது வழக்கம். இவர்கள் இணைபிரியாத இரட்டைக் கிளவிகள்போல் என்றும் ஒன்ருக வாழ்ந்தனர். கல்வி கற்றுப் பெரியவர்களாய்க் கவி பாடும் திறம் கைவரப் பெற்றனர். சிறு வயது முதலாக இவர்கள் இருவராகவே எங்கும் சென்றதால் இவர்களுக்கு **இரட்டையர்** என்னும் பெயர் ஏற்பட்டது. பின்னுளில் செல்வர்களை யடுத்துக் கவி பல பாடித் தம் வாழ்க்கையை நடத்தினர். குண நலம் சான்ற இவ்விரட்டையர்கள் புலவர் திலகங்களாய் விளங்கியதனுல் **இரட்டைப் புலவர்கள்** என்றும், இறைவனருளால் விரைந்து கவிகள் பாடும் ஆற்றல் பெற்றவராயிருந்ததாலும் சிவ வழிபாட்டில் சிறந்தவராய்த் திகழ்ந்ததாலும் **தெய்வப் புலவர்கள்** என்றும் மக்கள் இவர்களைப் பாராட்டி அழைத்தனர். அற்புதக் கவிஞர்கள் முடவரும் குருடருமாய் இருவரும் கற்பவர் வியக்குமாறு பொற்புறப் பாடுவது அருமையான செயலன்றோ?

இரட்டையர்கள் இறைவனையும் செல்வர்களையும் கண்டு பாடுங்கால் முதலிரண்டடிகளை முடவர் பாடுவர். பின்னிரண்டடிகளைக் குருடர் தொடர்ந்து முடிப்பது வழக்கம். இவ்வாறே இவர்கள் பல தனிப்பாடல்கள் பாடியுள்ளார். **தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம்** முதலிய சிறு காவியங்களைக் கவிச்சுவை மிகப் பாடியுள்ளனர். கலம்பகம் பாடுவதில் இரட்டையர்க்கு இணையில்லை என்று யாவரும் புகழ்ந்தனர். இதனை, "பண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்

கள்" என்னும் செய்யுளடியால் அறியலாம். காஞ்சி புரம் ஏகாம்பர நாதரைப் பற்றியும் **உலா** என்னும் சிறு கவிதை நூல் ஒன்றும் இயற்றியுள்ளனர். கவி காளமேகம் என்ற ஆசுகவிப் புலவரும் இரட்டையர் களின் இனிய நண்பராய் இருந்து பாராட்டி இவர்களை ஊக்கியுள்ளார்: இரட்டையர்கள் நகைச்சுவை ததும்பப் பாடவல்லவர்கள் ; தூய்மையான வாழ்க்கை யுடை யவர்கள்.

ஒருமுறை இரட்டையர்கள் தில்லைப்பதியில் தங்கி யிருந்தனர். அங்கு ஒரு புல்லனை வள்ளல் என்று அறி யாமல் போய் அரியபாடல் ஒன்றால் புகழ்ந்து பாடினர். ஆனால், புல்லன் இரட்டையர் அருமையைத் தெரிந்து கொள்ளாமல் குருடும் முடமும் கூடித் தொந்தரவு தருவ தாய்க் கருதி விரட்டினன். உடனே முடவர் பாடினர் :

"மூடர்முன்னே பாடல் மொழிந்தால் அறிவரோ ?
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா ?

குருடர் இவ்வரைப்பாட்டைத் தொடர்ந்து கீழ்வரு மாறு பாடி முழுப் பாட்டாக்கினர் :

—ஆடகப்பூண்

செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகன் ஆனால் ?

இப்பாடலைக் கேட்ட மூடச்செல்வன் நாணித் தலை குனிந்தான். அங்கிருந்த பிற அறிஞர்கள் இரட்டைய ரைச் சிறப்பித்தனுப்பினர்.

இரட்டையர்கள் கவி காளமேகத்தைப் போல வசை பாடுவதிலும் வல்லவர்கள். காவித் தண்டலம

என்னும் ஒருரில் ஓமளநாதன் என்னும் பெயருடைய பெருஞ் செல்வன் ஒருவனிருந்தான். இரட்டையர்கள் தம் வறுமையால் அவனை அடுத்துப் புகழ்ந்துப் பாடிப் பரிசில் கேட்டனர். ஆனால் ஓமளநாதன் பரிசில் தராமல் இரட்டையர்களை இகழ்ந்து பேசினான். அவன் அண்டை வீட்டுக்காரனும் சேர்ந்துகொண்டு இரட்டையர்களை அவமானப் படுத்தினான். புலவர்கள் மனம் புண்பட்டது. "குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது" என்பது குறள். புலவர்கள் அவர்களை இகழ்ந்து,

"ஒருகாவித் தண்டலம்வாழ் ஓமளநா தன்வீடு
இருகாலும் பற்றி எரிக—அருகாரும்
கம்பத்தான் வீடும் கலந்(து) எரிக; மற்றிவர்கள்
சம்பத்தெல் லாம்ஒழியத் தான்."

என்றொரு வசைப்பாடலை இருவரும் கலந்து பாடினர். அவ்வளவில் புல்லர் வீடுகள் தீப்பற்றி எரிந்து சாம்பலாயின. இதைக் கண்ணுற்ற அவ்வூர் மக்கள் புலவர்களுக்கு வரிசைகள் நல்கிச் சினத்தைத் தணித்தனர்.

ஒரு சமயம் இரட்டையர்கள் திருவண்ணாமலைக்குச் சென்றிருந்தபோது ஆணவமே உருவமான சம்பந்தாண்டான் என்பவன் புலவர்களை மதியாமல் இருந்தான். அவன் அச் சமயம் ஒரு நாவிதனிடம் தலைமயிர்க் கழிவு செய்து கொண்டிருந்தான். அப்போது இரட்டையர்கள் அவ்வழியில் சென்றனர். அவர்கள் அவன் ஆணவம்பிடித்தவன் என்பதை ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்ததால் அவனைப் புகழ்ந்து பாடாமல் சென்றனர். அவன் அவர்களை அழைத்துத் தன்பேரில் "மன்" என்று தொடங்கி "மலுக்கு" என்று முடியும் வண்ணம்

ஒரு வெண்பாப் பாடுமாறு கட்டளையிட்டான் ; அவனை அவமானஞ் செய்யக் கருதி மூத்தவர் :

''மன்னு திருவண்ணு மலைச்சம்பந் தாண்டார்க்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன்?''

என்று பாடினார். அதைத் தொடர்ந்து இளையவர்,

'' மின்னின் இளைத்த இடைமாதர் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.''

என்று கூறினார். நுணலும் தன்வாயால் கெடுவது போலச் சம்பந்தாண்டான் இப்பாடலைக் கேட்டு அவமதிப்புற்றான்.

வழிப்பயணம் செய்கையில் இரட்டையர்கள் ஒரு முறை மதுரையில் தங்கினர் ; அங்குப் பொற்றாமரைக் குளத்தில் நீராடினர். குருடர் துணியை நனைத்துக் கல்லில் துவைத்து வரும்போது அது நழுவி நீரில் தொலைவில் விழுந்து மூழ்கிவிட்டது. அவர் குருடராகை யால் அதனைப் பல இடங்களில் தடவித் தேடினார். குருடரைக் கண்ட அவர் மைத்துனரான முடவர் உறவு முறையால் கேலியாக,

'' அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து நாம் அதனைத்
தப்பினால் நம்மை அது தப்பாதோ ?''

என்று பாடி நகைத்தார். குருடர் உடனே,

—'' அப்படியே

ஆனாலும் கந்தை ; அதிலுமோர் ஆயிரம் கண் ;
போனால் துயர்போச்சு ; போ.''

என்று வறுமையிற் செம்மை தோன்றப் பதிலிறுத்தார். மீண்டும் முடவர்,

" கண்ஆ யிரமுடைய கந்தையே; ஆனாலும்
தண்ணீர் குளிரையுடன் தாங்காதோ?"

என்று கேட்க, அதற்குக் குருடர்,

"........எண்ணாதீர்
இக்கலிங்கம் போனாலென்? ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை!"

என்று சளைக்காமல் பதில் கூறினார். அச்சமயம் இறைவனேவலால் அங்கு வந்த ஒருவன் நீருள் மூழ்கி அவ்வாடையை எடுத்துத் தந்து வேண்டிய உபசாரமும் செய்தான்.

மற்றொரு சமயம் பிள்ளையார் கோயில் ஒன்றில் தம் மூட்டையை வைத்துவிட்டு நீராடித் திரும்பி வந்தனர். வந்து பார்த்தால் மூட்டை களவு போய்விட்டது. இரட்டையர் பிள்ளையாரே தம் பொருளைத் திருடிக் கொண்டதாக எண்ணினர். உடனே வஞ்சப் புகழ்ச்சியாக ஒரு கவிதை பாடினார்கள்.

" தம்பியோ பெண்திருடி; தயா ருடன்பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன்—அம்புவியில்
மூத்தபிள்ளையாரே, முடிச்சவிழ்த்தீர்; போமோநும்
கோத்திரத்துக்(கு) உள்ள குணம்?",

அவ்வேளையில் அங்கு வந்த அவ்வூர்ச் செல்வர் இரட்டையர் பொருளிழந்து தவிப்பதையறிந்து அவர்களுக்கு நிறையப் பொருள் தந்து ஆதரித்து வழியனுப்பினார்.

இவ்வாறு இரட்டையர்கள் பாடிய தனிப்பாடல்கள் பலப்பலவாகும்; அவை படிக்கப் படிக்க இன்பத்தேன் பிலிற்றும் இனிய கவிதைப் பூங்கொத்துக்களாகும். மாணவ மணிகளே, நீங்கள் மேல் வகுப்பில் அவற்றைத் தவறாமல் படித்து மகிழ்வீராக.

பயிற்சி

பொருள் கூறுக :

கதிரவன்	அந்தகன்	பிளிற்றும்
கதிர்	செந்திரு	பதிலிறுத்தார்
கலம்பகம்	சம்பத்து	கலிங்கம்
புல்லன்	நுணல்	சான்ற

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :

எல்லையற்ற, இணைபிரியாமல், ஒருகாலும், இருகாலும், கண்ணுற்ற.

விடை தருக :

1. இளமுதி சூரியர்களின் நட்பை விளக்குக.
2. இவர்களுக்கு இரட்டைப் புலவர்கள் என்றும் தெய்வப் புலவர்கள் என்றும் பெயர்வரக் காரணம் என்ன?
3. இரட்டையர் கலம்பகம் இயற்றுவதில் வல்லவர்கள் என்பதற்குச் சான்று தருக.
4. தில்லைப்பதியில் இரட்டையர்களின் சிறப்பு எவ்வாறு வெளிப்பட்டது?
5. இரட்டையர்கள் வசை பாடுவதிலும் வல்லவர்கள் என்பதைக் காட்டும் நிகழ்ச்சியை விளக்குக.
6. சம்பந்தாண்டான் இரட்டையர்களால் எவ்வாறு அடக்கப்பட்டான்?
7. மதுரையில் பொற்றாமரைக் குளத்தில் இரட்டையருக்குள் நடந்த உரையாடலை நும் சொந்த வாக்கியங்களில் எழுதுக.
8. 'போமோ நும் கோத்திரத்துக்குள்ள குணம்'— இதனை இடஞ் சுட்டி விளக்குக.
9. இப்பாடத்தில் சூரியன் என்னும் பொருளில் வந்துள்ள சொற்களை எடுத்துக் கூறுக.

இலக்கணம் :

தஞ்சைக் கோயிலின் கோபுரம் வானை முட்டும் உயர் முடையது.

இங்ஙனம் வியப்பை உண்டாக்குவதற்காகப் புலவர்கள் இயல்பாக உள்ளத்தை உயர்த்திக் கூறுவதற்கு உயர்வு நவிற்சி யணி என்று பெயர்.

அணி என்பது புலவர்கள் தாம் கூறும் செய்தியை அழகுபடுத்திக் கூறும் முறையாகும்.

அவள் ஒளிமுகம் கண்டு நிலவு நாணம்கொண்டு மேக மண்டலத்தில் மறைந்தது.

நிலவு மேகத்தில் மறையும் இயல்பான செயலை, 'நாணம்கொண்டு மேகமண்டலத்தில் மறைந்தது' எனப் புலவர் தம் குறிப்பை ஏற்றிக் கூறுவதால் இது தற்குறிப் பேற்ற அணியின் பாற்படும்.

யானை சிறிய கண்ணும் பெரிய தலையும் உடையது. இங்ஙனம் முரண்படச் சொற்களை அமைத்து எழுதுவது முரண் அணியாகும்.

7. அன்னையின் கண்ணீர்

திருப்பத்தூர் காரைக்குடியிலிருந்து மதுரை செல்லும் வழியில் இருக்கிறது. இங்கு இருந்த கோட்டையை மருது சகோதரர்கள் முன்பு கும்பினியாரிடமிருந்து கைப்பற்றியிருந்தார்கள். இப்போது அதே கோட்டையில் கும்பினியார் சின்னமருதுவையும் பெரியமருதுவையும் சிவஞானத்தையும் தூக்கிலிட்டார்கள்.

"ஒப்பிலி மருதுபெற்ற, தப்பிலி சிவத்தத் தம்பி
ஊமையன் பேச்சைக்கேட்டுச் சீமையைப் பறிகொடுத்துத்
திருப்பத்தூர்ச் சந்தியிலே தென்னையிலே தொங்கு
றூண்டா."

என ஒரு பாட்டுக்கூட யாரோ ஆங்கில அனுதாபியால் அப்போது பாடப்பட்டது.

சிறிது பட்டாளந்தான் திரண்டு அங்கே
மருதுபாண்டிய னைப்பிடித்து
துரைமகன் சிவஞானத்தையு மொரு
தூக்கு மரத்திலே தான் போட்டார்.

தூக்கிலிடுமுன், "உமக்கு ஏதேனும் இறுதி விருப்பம் உண்டா ?" என்று கும்பினியான் கேட்டதற்குப் பெரிய மருது ஒரு வேண்டுகோள் விடுத்தார். "நான் முள்ளால் கீறியனவும், சொல்லால் கூறியனவும், எள்ளால் இறைத்தனவும் ஆகிய தருமங்கள் அவரவர்களுக்கு விடப்பட வேண்டும்," எனக்கேட்டுக்

கொண்டார். அதன்படி அந்தத் தருமங்கள் விடப் பட்டன. அண்ணன் தம்பி ஆகிய இருவருடைய சவங்களும் காளையார் கோயில் எதிரில் அடக்கம் செய்யப்பட்டன. அவர்களுடைய சந்ததியார் இன்றும் அரண்மனைச் சிறுவயல் கிராமத்தில் வசதியிழந்து அரண்மனைச் சேருவைக்காரர்கள் என்ற பெயருடன் வாழ்ந்து வருகிறார்கள்.

இதன்பின் ஊமைத் துரையையும், அவர் சகோதரனையும் பாஞ்சாலங்குறிச்சியில் பழைய பீரங்கி மேட்டில் மரம் நட்டுத் தூக்கிலிட்டார்கள்.

ஊமைத்துரை கடைசி வரையில் பிடிபடவே இல்லை என்று கூறுவாரும் உண்டு. இன்னும் பலரோ ஊமைத்துரை திண்டுக்கல் மலைமேல் உள்ள வேலில் பாய்ந்து உயிரைப் போக்கிக்கொண்டார் எனக் கூறு வார்கள். நமது கவிஞரோ, காளையார் கோயிலிலிருந்து தப்பிய ஊமைத்துரை கன்னிவாடிக்குப் பக்கத்தில் ஒரு விட்டில் பசிக்கு உணவருந்திப் படுத்திருக்கையில் இவர் வரவைக் கண்ட ஒரு பெண் இவரை ஊமைத் துரையென அறிந்து,

ஊமைத் துரையென்று தானறிந்து மெல்ல
உள்தாழ்ப்பாள் போட்டுக் கதவடைத்து
தாமதஞ் செய்யாமல் அம்பலத்தில் வந்து
சாடை சொன்னாள் அந்த மங்கையுந்தான்.

ஆயிரப் பொன்னிப்போ தாருமென்றாள் எனக்(கு)
ஐந்நூறு ரூபாக்கள் வேண்டாமென்றாள்
வாய்பேசா மன்னவன் ஊமைத்துரை தன்னை
வந்து வளைத்துப் பிடியுமென்றாள்.

ஊரம்பலத்தில் அவள் கூறிப் பரிசு கேட்ட தாகவும், உடனே கும்பினியார் ஓடி நல்ல நித்திரையில் அவ்வரைப் பிடித்து விலங்கிட்டு விட்டதாகவும் கூறு கிறார்கள். ஆனால் இவரும் ஊமைத்துரையைப் பாஞ் சாலங்குறிச்சியில் தூக்கிலிட்டதாகத்தான் கூறுகிறார். வெல்ஷ் துரையும் இதையே உறுதிப்படுத்துகிறார்.

"பார்க்கப் பயமா யிருக்குதென் றுஅந்தப்
பாஞ்சை நகரத்து வைகையிலே.
தூக்கு மரத்திலே தான்போட்டு—இனிக்
கூக்குரல் சத்தம் ஒழிந்ததென்று

பாஞ்சால நாட்டிலே ஊமைத்து ரையாலே
பட்ட பாடுகள் போதுமென்று
மூாஞ்சது தெய்வ மறியுமென்று அங்கே
காஞ்சல்லோ போகுது பட்டாளம்."

தூக்கிலிட்ட இடமாகிய பிரங்கி மேடும், வெள்ளைக் காரர் நினைவாகக் கற்களும் தவிர மற்ற இடங்கள் முழுவதையும் இடித்து உழுது உப்புடன் வரகைக் கலந்து விதைத்தார்கள்: ஆமணக்குச் செடிகளை நட்டார்கள். பூகோளப் புத்தகங்களிலும் தேசப் படத் திலும் பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரே இல்லாமல் அழித்தார்கள். பாஞ்சாலங்குறிச்சி நாட்டைப் பிரித்து அந் நாட்டில் உள்ள ஆறு மாகாணங்களில் நான்கை எட்டையபுரத்தாருக்கும் இரண்டை மணியாச்சிப் பாளையக்காரருக்கும் பரிதானம் வழங்கினார்கள். ஊமைத்துரை மருது முதலியவர்களுடன் சேர்ந்து இணை பிரியாது போரிட்ட எழுபது வீரர்களையும், சின்ன மருது வின் அருமை மைந்தன் பதினெட்டு வயது இளைஞன்

துரைசாமியையும் ஆயுள் தண்டனை விதித்துத் தூத்துக்குடிக்குக் கொண்டுபோய் அங்கிருந்து கடல் கடந்து தவிக்கும்படி பினங்குக்கு அனுப்பி விட்டார்கள்.

இதைப்பற்றி, உடன் இருந்து நிகழ்ச்சிகளை எழுதி வந்த வெல்ஷ் துரை பின்வருமாறு கூறுகிறார் :

"ஏராளமான உயிர்க் கொலைகளுக்கும் கொடுமை களுக்கும் காரணமாயிருந்த இந்தப் போர், பின்னால் உயிர் வாழ்பவர்களுக்குப் பெருமை தராத வகையில் முடிந்தது" இந்தக் கொடுமையில் கும்பினியார் ஈடுபட் டதே தவறு. இப்போரே அநீதியானது என்ற எண் ணத்துடன் சுத்த வீரர்களைத் தூக்கிலிடுவதையும் உள் நாட்டு வீரர்களை ஒண்டவந்த ஆங்கிலேயர் நாடு கடத்து வதையும் பொருமல் உள்ளம் பொருமி ஆங்கில அதி காரியாகிய வெல்ஷ்துரையே இங்ஙனம் எழுதியுள்ளார்.

இதன் பின், கும்பினியார் 1801-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ஆம் நாள் அன்று கவர்னர் லார்டு கிளைவ் பெயரால் ஓர் அறிக்கை வெளியிட்டுத் தென் னாடு முழுவதையும் தங்கள் ஆளுகையின்கீழ்க்கொண்டு வந்தார்கள்.

தூக்கிலிடுமுன் ஊமைத்துரை இறுதியாக ஏதே னும் உரைத்தாரா? அவர் ஒன்றும் சொல்லியதாகத் தெரியவில்லை. அவர் வாய்ச்சொல் வீரரல்லர். அதனால் சொல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது, "இருக்கும் போது சொன்னதையே கேளாத மக்கள் இறக்கும் போது சொல்வதையா கேட்கப் போகிறார்கள்?" என வும் நினைத்திருக்கலாம்; ஏனெனில் கட்டபொம்முவைத் தூக்கிலிட்டபோது தமிழ்நாட்டு மக்களுக்கு ஊமைத் துரை விடுத்த செய்தியில், "என் பேச்சைக் கேளாதவர்

கும்பினியாருக்குப் புல்லும் விறகும் குதிரை முளை யும் சுமப்பீர்கள்" என எச்சரித்துக் கூறினர். அதற்குத் தமிழ்நாடு செவிசாய்த்திருந்தால் தமிழ்நாட்டின் சரித் திரமே வேறுவிதமாக இருந்திருக்கும். முடிவாக, "என் றும் தலைவணங்காத தமிழ்நாடு இன்று ஆங்கிலேயருக்கு அடிபணிந்து விட்டது. நம் சகோதரர் கட்டபொம்மு துரை சென்ற இடத்துக்கே நாமும் செல்வோம்!" என்றும் எண்ணியிருக்கலாம். அந்த ஊமைத்துரை யின் உள்ளம் அப்போது என்ன நினைத்தது என்பதை வாய் படைத்த நம்மால் சொல்ல முடியாது.

ஊமை இறந்தார்; வாயுள்ளவர்கள் அழுதார்கள். ஊமை விடுதலை பெற்ருர்; வாயுள்ளவர்கள் அடிமை யாயினர். இதைக் கண்டாள் தமிழன்னை. எப்பொழு துமே, பெற்றவளுக்கு எந்தப் பிள்ளை ஊனமுடையதோ அந்தப் பிள்ளைமேல் மிகுந்த அன்பிருப்பது இயற்கை அதிலும், இந்தப் பிள்ளையோ ஊமைக் குழந்தை. ஒரு பேச்சுப் பேசியதில்லை. உல்லாசவாழ்வு வாழ்ந்ததில்லை. உலகில் பிறந்த நாள் முதல், இறந்த நாள்வரை தாயின் தொண்டு ஒன்றைத் தவிர வேறு எதையும் செய்த தில்லை. அந்த அருமருந்தன்ன மைந்தன் தன் தாயின் சேவையிலேயே இறந்தவுடன் தமிழ்த் தாய் கலங்கி அழுதாள்; கண்ணீர் வடித்தாள். அந்த ஆண்டில் தாமிர வருணியில் தண்ணீர் ஓடவில்லை. தமிழ்த் தாயின் கண்ணீரே ஆருகப் பெருகி ஓடியது.

தமிழன்னைக்குத் திருநெல்வேலிச் சீமையில் இரண்டு ஊமைகள் பிறந்தார்கள். ஓர் ஊமை பாடினர். மற்ருேர் ஊமை பாடல் பெற்ருர். முதல்வரோ தம்மை மொழிக்கு அர்ப்பணம் செய்தார். மற்றவரோ

தம்மை நாட்டுக்குத் தியாகம் செய்தார். முதல்வர் மொழிக்காக வாழ்வைத் துறந்து துறவியானார். பின்னவர் நாட்டுக்காக வாழ்வு, உயிர் இரண்டையும் துறந்தார். இருவர் புகழும் காசி முதல் கன்னியாகுமரி வரை பரவியது. ஒரு பிள்ளை **குமர குருபரன்**. மற்றொரு பிள்ளை **குமாரசாமி நாயக்கன்**. இத்தகைய குமாரர்களைப் பிரிந்த அன்னை குலுங்கக் குலுங்க எழுபதாண்டுகள் அடிமைச் சிறையில் அலறித் துடித்துக் கொண்டிருந்தாள்.

அதன்பின் 1871-ஆம் ஆண்டில் அந்தப் புண்ணிய பூமியிலே ஒரு சிதம்பரம் அவதரித்தார். பிறகு ஒரு பாரதி தோன்றினார். இருவரும் தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் முந்திய ஊமைகள் செய்த அரிய செயலையே செய்தார்கள். பாஞ்சாலங்குறிச்சி மண்ணின் பழம் பெருமையை எடுத்துக் காட்டினார்கள். திருநெல்வேலியின் பெருமையைத் திரும்பவும் கொண்டு வந்தார்கள். அவர்கள் துவக்கிய முயற்சியில் அன்னை விடுதலை பெற்றாள். இதிலே தமிழன்னைக்கு அளவு கடந்த ஆனந்தமே; ஆனால் அதே சமயத்தில் முன்பு இறந்த பிள்ளைகளையும் அன்னை மறந்துவிட முடியுமா? அவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை நாம் செய்யும் வரை மறக்க முடியாது.

'பாண்டிய தேசம் மிகவாழி ஊமைப்
பட்டத்து ராசன் இனிவாழி'

என நமது கவிஞர் வாழ்த்துப் பாடியிருக்கிறார். அவர் பாட்டு பொய்க்கக் கூடாது என்பதில் ஊமைத்துரையின் மரபினர் வாழ்க்கை வசதியில் நாம் பெருமைப் படும் நிலையில் இல்லை. இதைத் தமிழ் நாடு உணர்ந்து

விரைவில் ஆவன செய்ய முன்வர வேண்டும். இன்று அந்தப் பாஞ்சை நகரம் இருக்கும் இடம் தெரியாமல் அழிந்து கிடக்கிறது. அந்த இடத்தைத் தமிழ் நாட்டின் வீரர்கள்(உள்ளப்) பயிற்சிபெறும் புனித பூமியாக ஆக்க வேண்டும். கட்டபொம்முவைத் தூக்கிலிட்ட இடத்தில் தக்க ஞாபகச் சின்னம் நாட்டவேண்டும். தமிழ்நாட்டின் தலைநகரமாகிய சென்னையம்பதியிலும் சிறந்த முறையில் ஒரு தகுந்த நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும், இவையெல்லாம் நம் அரசும் நாடும் செய்ய வேண்டியவை.

ஆனால் நாம் செய்யவேண்டுவது என்ன? இதைப் படித்த நாம், அன்று கும்பினியார் செய்த அநீதிகளுக்காக இன்றிருக்கும் ஆங்கில நண்பர்களைப் புகைக்க வேண்டுவதில்லை. அன்று காட்டிக் கொடுத்தார்களே என்பதற்காக இன்றிருக்கும் சந்ததியாரை ஏச வேண்டுவதில்லை. அன்று நமது மானத்தைக் காக்கப் போரிட்ட கட்டபொம்முவையும் ஊமைத்துரையையும், பாதர் வெள்ளை, பொட்டிப் பகடை, கறுப்பன் காலடி முதலிய வீரர்களையும் வாழ்த்தி வணங்குவதோடு அவர்கள் காட்டிய வழியில் நாட்டைக் காப்பவர்களாக நின்று புனிதத் தமிழ்நாட்டின் புத்திரர்களாக விளங்குவோமாக. தமிழ் நாட்டின் மானத்தைத் தாயின் மானத்தைப்போல் காப்போமாக. செப்பேடு தந்த செல்வமாகிய கட்டபொம்முவின் தம்பிப் பாடலை 150 ஆண்டுகளுக்கு முன் நமக்காகப் பாடி வைத்த ஊர் பேர் தெரியாத, அந்தக் கவிஞருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வோமாக, வணக்கம்.

'வாழிய செந்தமிழ், வாழ்கநற் றமிழர்,
வாழிய பாரத மணித்திரு நாடு.'

—ஆனந்த விகடன்.

பயிற்சி

பொருளறிக :

சாந்தி	பரிதானம்	அடிமைச்சிறை
இறைத்தல்	பொருமல்	செப்பேடு
அம்பலம்	பொருமி	பதி
சாடை	துறந்து	ஏசுதல்

வாக்கியங்களில் அமைக்க :

செவி சாய்த்தல், அடிபணிந்து, இணைபிரியாது. அருமருந்தன்ன.

விடை கூறுக:

1. மருது சகோதரர்கள் எந்த இடத்தை ஆண்டு வந்தனர்?
2. பெரிய மருதுவின் இறுதி விருப்பம் யாது?
3. சேருவைக்காரர்கள் என்பவர்கள் யாவர்?
4. ஊமைத்துரையைக் காட்டிக்கொடுத்தது யார்? அதற்காக அவன் கேட்ட பரிசு யாது?
5. ஆங்கிலேயர் ஊமைத்துரையை எப்படிச் சிறைப் படுத்தினர்?
6. பாஞ்சாலங்குறிச்சி வீரர்களுக்கு ஆங்கிலேயர் இழைத்த கொடுமைகள் எவை?
7. இக்கொடுமைகளைப் பற்றி வெல்ஷ் துரை கூறுவன யாவை?
8. தமிழ்நாட்டு மக்களுக்கு ஊமைத்துரை விடுத்த இறுதிச் செய்தியை விளக்குக.
9. 'அந்த ஆண்டு தாமிரவருணியில் தண்ணீர் ஓடவில்லை' எப்போது? ஏன்?

10. திருநெல்வேலிச் சீமையில் பிறந்த இரண்டு ஊமைகள் யாவர்? அவர்களால் நாட்டுக்கு உண்டான பெருமை யாது?

11. நம் கடமைகள் யாவை?

இலக்கணம் :

தக்க இடங்களில் தக்க நிறுத்துக் குறிகளை இடுக.

1. நான் முள்ளால் கீறியனவும் சொல்லால் கூறியனவும் எள்ளால் இறைத்தனவும் ஆகிய தருமங்கள் அவரவர்களுக்கு விடப்படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்

2. ஊமைத்துரை விடுத்த செய்தியில் என் பேச்சைக் கேளாதவர்கள் கும்பினியாருக்குப் புல்லும் விறகும் குதிரை முளையும் சுமப்பீர்கள் என எச்சரித்துக் கூறினர்

3. ஊமை இறந்தார் வாயுள்ளவர்கள் அழுதார்கள் ஊமை விடுதலை பெற்றார் வாயுள்ளவர்கள் அடிமையாயினீர்

8. நாலும் இரண்டும்

'ஆலும் வேலும் பல்லுக் குறுதி; **நாலும் இரண்டும்** சொல்லுக் குறுதி' என்னும் பழமொழியின் பொருளை நீங்கள் நன்கு அறிவீர்கள். 'பழகுதமிழ்ச் சொல்லருமை **நாலிரண்டில்'** என்னும் பழமொழியையும் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நாலும்இரண்டும் என்னும் சொற்கள் இரண்டும் முறையே நாலடியாரையும் திருக்குறளையும் குறிப்பனவாகும். சிந்தைக்கும் செவிக்கும் இனியது திருக்குறள். இஃது உலகப் பொது மறை. இஃது எல்லாக் காலத்துக்கும் எல்லாச் சமயத்துக்கும் குலத்துக்கும் பொதுவான நீதிகளைக் கூறுவதாகும். குறுகிய செய்யுட்களால் அரிய செய்திகளைத் தெரிவிப்பதாகும். நாலடியாரும் திருக்குறளுக்கு அடுத்து அதனோடொத்த சிறப்புடையதாக விளங்குகிறது. இவ்விரு நூல்களும் புலவர் பலருக்கும் மேற்கோள் நூல்களாகப் பயன்படுகின்றன. இவ்விரு நூல்களும் ஆங்கிலம், லத்தீன் போன்ற பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் இளமை முதலே இந் நூல்களையும் முறையாகப் பயில்வராயின், அறிவுச் செல்வம் நிரம்பப் பெற்று, அறநெறி வாழ்க்கை நடத்திப் பேரும் புகழும் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. மனிதனுக்கு இன்றியமையாதது **கல்வி**. கல்வியைப் பற்றி இந்நூல்கள் கூறும் கருத்துக்களை இங்குப் படித்து இன்புறுவோம்.

திருக்குறள்

1. கற்றற்குத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்றல் வேண்டும். அங்ஙனம் கற்ற பின்னர் கற்ற நூல்களில் கூறியவாறு நடக்க முயலுதல் வேண்டும்.

2. 'எண்' என்று கூறப்படும் கணக்கு நூலும் 'எழுத்து' என்று கூறப்படும் இலககண இலக்கிய நூல்களும் ஆகிய இவ்விரண்டும் இவ்வுலகத்தில் வாழ விரும்பும் மக்களுக்குக் கண்கள் போன்றவை என்று சான்றோர் கூறுவர்.

3. கற்றறிந்தவர்களே கண்ணுடையவர்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவர். கல்லாதவர்கள் முகத்தில் இரு கண்களைப் பெற்றிருப்பினும் அவை கண்கள் அல்ல. அவர்கள் தம் முகத்தில் இரண்டு புண்களை உடையவர்களே ஆவார்கள்

4. பலரும் இன்புறும் வண்ணம் மக்களிடம் அளவளாவி, 'இனி இவரை மீண்டும் எப்போது காண போம்' என்று நினைந்து வருந்துமாறு அவர்களை விட்டுப் பிரிதல் கல்வியிற் சிறந்த புலவர்களின் தொழிலாகும்.

5. செல்வர்களிடம் வறிஞர்கள் ஏங்கி நின்று பணிவுடன் கேட்டுப் பொருளைப் பெறுவர். அதுபோலக் கல்வியுடையவர்களிடம் கல்லாதவர்கள் அக் கல்வியறிவைப் பெறும் பொருட்டு ஏங்கி நின்று பணிவுடன் கேட்டறிந்து கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் கற்றவரே உயர்ந்தோராவர். அங்ஙனம் கல்லாதவர் பலராலும் கடையராகவே கருதப்படுவர்.

6. மணலில தோண்டிய கிணறு எவ்வளவு இறைக்கின்றேமோ அவ்வளவுக்கு ஏற்ப நீர் சுரக்கும். அதுபோல மக்களுக்கு அறிவானது அவர்கள் எவ்

வளவு படிக்கின்ருர்களோ அந்த அளவுக்கு ஏற்ப விளக்கமடையும்.

7. கல்வியில் சிறந்த ஒருவனுக்கு எந்த நாடும் அவனுடைய சொந்த நாடுபோன்று இன்பம் பயப்பதாகவே இருக்கும். அங்ஙனமே எந்த ஊரும் அவனுடைய சொந்த ஊர் போன்று அவனுக்கு இன்பத்தைத் தரும். இதனை அறிந்திருந்தும் ஒருவன் தான் இறக்கும் வரையில் கல்வி கற்காமலேயே காலங்கழிப்பது என்ன காரணமோ தெரியவில்லை.

8. ஒரு பிறப்பில் ஒருவன் கற்று அதனுல் பெற்ற அறிவானது அவனுக்கு அப்பிறவியோடு இல்லாமல் அடுத்து வரக்கூடிய எழுவகைப் பிறவியிலும் பாதுகாப்பினைத் தரும் தன்மையுடையதாகும்.

9. தாம் இன்புறுவதாகிய கல்வியினுல் உலகத்தாரும் இன்பமடைகின்றனர். அங்ஙனம் தமக்கும் பிறர்க்கும் இன்பம் அளிக்கக் கூடிய பெருமை கல்விக்கிருப்பதால் அத்தகைய கல்வி கற்ற பெரியோர்கள் மேலும் மேலும் விரும்பிக் கற்பர்.

10. ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்விச் செல்வமேயாகும். அதைத் தவிர ஏனைய பொன்னும் மணியுமாய செல்வங்களெல்லாம் சிறந்த செல்வங்கள் ஆகா.

நாலடியார்

1. தலைக் குடுமியின் அழகும், மடிப்புள்ள ஆடையினது கரையின் அழகும், மஞ்சளின் அழகும் அழகாக மாட்டா. மனத்தில், யாம் நற்குணமுடையோ மென்று

காண்கின்ற கோணுதல் இல்லாத் தன்மையால் கல்வி யால் உண்டாகும் அழகே அழகாகும்.

2. கல்வி, இம்மைப் பயனாகிய தத்துவ ஞானத் தைக் கொடுக்கும். பிறருக்குக் கற்பித்தாலும் குறையாமல் மேன்மேலும் வளரும். தம்மைப் புகழால் நெடுந்தூரம் விளக்குமாறு செய்யும். தாங்கள் உயிருள்ளவராக வாழும் வரையில் அழிவதில்லை ஆதலால் யாம் கல்விபோல அறியாமையாகிய நோயை நீக்கும் ஒரு மருந்தை எத்தன்மையான உலகத்திலும் காணவில்லை.

3. தாழ்வாய உவர் நிலத்தில் உண்டான உப்பைப் பெரியோர் விளைகின்ற நல்ல நிலத்தில் உண்டான நெல்லினும் சிறந்ததாகக் கொள்வார்கள். அது போலவே இழிந்த குலத்திற் பிறந்தவர்களானாலும் நூல்களைக் கற்று அவற்றின் பொருளை அறிந்தவர்களை உயர்வாய இடத்தில் வைத்துப் பெருமைப் படுத்துதல் வேண்டும்.

4. கல்வியானது கொள்ளப் பெற்ற இடத்தி லிருந்து பிறரால் கவரப்படமாட்டாது. கல்வியைக் கொள்பவர் தக்கவராகக் கிடைத்து அவருக்கு கொடுத் தால் அதனால் குறைதல் இல்லை. மிகுந்த சிறப்பினாலே அரசர்கள் பொறாமை காரணமாகக் கோபித்தாலும் கல்வியைக் கவரமாட்டார்கள். ஆதலால் ஒருவன் தன் மக்களுக்குச் செல்வம் என்று சேர்த்து வைக்கத்தக்கது கலவிப் பொருளே யாகும்

5. கல்வி கடல்போல் பரந்துள்ளது: கரையற்றது. கற்பவர் ஆயுள்நாள் மிகவும் குறுகியது. அவ் வாழ் நாளிலும் கற்க வொட்டாமல் தடைசெய்யும்.

பிணிகள் பலவாகும். ஆதலால் நீரைப் பிரித்து விட்டுப் பாலை மட்டுமே குடிக்கும் அன்னப் பறவை போல நூல்களின் தன்மைகளைத் தெளிவாக ஆராய்ந்து சாரமானவற்றையே அறிஞர்கள் கற்பார்கள்.

6. தாழ்ந்த குலத்தவனாயினும் மீகாமனைக் கொண்டே ஆற்று வெள்ளத்தைக் கடத்தல் வேண்டும். அதுபோலக் கற்றறிந்தவன் தாழ்ந்த குலத்தவனாயினும் அவனைத் துணையாகக் கொண்டே சிறந்த நூற்பொருளை அறிந்து கொள்ளுதல் வேண்டும். பிறப்பினால் ஏற்படும் பெருமையைவிடக் கல்வியினால் உண்டாகும் பெருமையே சிறந்ததாகும்.

7. குற்றமில்லாத பழமையான நூற் கேள்விகளின் தன்மையை உடையவர்களும், பகைமைக்குணமும் இல்லாதவர்களும், மதிநுட்பம் வாய்ந்தவர்களுமாகிய கற்றறிந்தார் குழுவினுள் கூடியிருந்து இன்புறுதலை விட இன்பம் தருவதாயின் பரந்த தேவருலகைக் காண்போமாக. அஃது கற்றவருடன் கூடி மகிழ்தலினும் இனியதன்றாதலின் நாம் அதைக் காண வேண்டுவதில்லை.

8. நல்ல புத்தகங்களைப் படித்து அவற்றின் பொருளை உணர்ந்தவர்களது நட்பு நுனியிலிருந்து அடிவரையில் கரும்பைத் தின்பது போலத் தொடர்பாக இனிமை மிகும். ஆனால் கற்கும் பண்பில்லாத அன்பற்ற அற்பர்களின் நட்பு, அக் கரும்பை அடியிலிருந்து நுனிவரையில் தின்றாற்போல வரவர இனிமை குறையும் தன்மையுடையதாகும்.

9. பழமையான சிறப்பும் ஒளிபொருந்திய சிற

மும் உடைய பாதிரி மலரை அடைவதால் புதிய பானை ஓட்டானது தன்பாலில் உள்ள குளிர்ந்த நீருக்குத் தான் நறுமணத்தைக் கொடுத்தல் போலத் தாம் படியாதவர்களே யானாலும் படித்தவர்களைச் சேர்ந்து ஒழுகின் அப்பழக்கத்தினால் நாடோறும் நல்லறிவு உண்டாகப் பெறுவர்.

10. அளவு மிகுந்த கல்வித்துறையில் தத்துவ ஞானத்தைக் கொடுக்கும் சாத்திரங்களைக் கல்லாமல் இவ்வுலகத்துக்கே பயன்படும் வேறு புத்தகங்களைப் படிப்பது முழுவதும் கலகலவென்று கூவுமளவே யாம். அவற்றைக் கொண்டு பிறவித் துன்பங்களில் தடுமாறுதலை நீக்கும் தன்மையை அறிபவர் இல்லை. ஆகையால் தத்துவ நூற்பயிற்சிக்கு வேண்டிய அளவு ஏனைய நூல்களையும் கற்றல் வேண்டும்.

பயிற்சி

பொருளறிக:

இலக்கியம்	உவர்நிலம்	குழு
வறிஞர்	சாரம்	எழுமை
ஏற்ப	மதிநுட்பம்	மணி

வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:

வாய்ந்த, அளவளாவி, இம்மை, வாழுமளவும், சாரமான.

விடை தருக:

1. மக்களுக்குக் கண்களாவன யாவை?
2. கண்ணுடையோரும் புண்ணுடையோரும் யாவர்?
3. கல்வியிற் சிறந்த புலவர்கள் தொழில் யாது?
4. கற்றோர் பால் எவ்வாறு கல்வி கற்றல் வேண்டும்?

5 கல்வியின் பயன்கள் யாவை?

6. எது அழியாத செல்வம்? எவை செல்வமாகா?

7. எது அழகாகும்? எவை அழகல்ல?

8. 'உவர்நிலத்தில் தோன்றிய உப்பைச் சான்றோர் நெல்லினும் சிறந்ததாகக் கொள்வர்'—இவ்வுவமையால் விளக்கப்படும் நீதி யாது?

9. தந்தை மகனுக்கென்று வைக்கத் தக்க செல்வம் யாது? ஏன்?

10. 'தாழ்ந்த குலத்தவனாயினும் கற்றவனைக் கொண்டே நூல்களைக் கற்க வேண்டும்'—இதற்குக் காட்டப் பெற்ற உவமையை விளக்குக.

11. கற்றோர் நட்பின் தன்மைகள் யாவை? கல்லார் நட்பு எப்படிப்பட்டது?

12. கல்லாதாரும் எங்ஙனம் நல்லறிவு பெறலாகும்?

இலக்கணம் :

1. வாய்ந்த, நடக்க, பெற்று, சிறந்த, ஏங்கி, ஏற்ப, இல்லாத—இவற்றில் உள்ள பெயரெச்சங்கள் யாவை? வினை யெச்சங்கள் யாவை?

2. பிறப்பினாலுண்டாகும் பெருமையினும் கல்வியினா லுண்டாகும் பெருமை சிறந்தது.—இதனை இரண்டு வாக்கி யங்களாகப் பிரித்துக் கூறுக.

3. ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்விச் செல்வமேயாகும். பொன்னும் மணியும் செல்வம் ஆகா....இவ்விரு வாக்கியங்களைச் சேர்த்து ஒரே வாக்கிய மாக மாற்றிக் கூறுக.

4. இப்பாடத்திலிருந்து உவமை யணிக்கு ஓர் உதாரணம் தருக. உவமையை விளக்குக.

அருஞ்சொல் அகராதி

அந்தகன் - குருடன்
அம்பலம் - வெட்ட வெளி
அலுவலகம் - பணிமனை, காரியாலயம்
அறநிலையங்கள் - தருமச் சாலைகள்
ஆலம் - விஷம்
ஆன்றோர் - பெரியோர்
இயம்பு - சொல்
இருநீர் - பரந்த நீர் (கடல்)
இலக்கியம் - செய்யுளும் உரை நடையுமாகிய நூல்கள்
ஈட்டி-திரட்டி, சம்பாதித்து
உப்பளம் - உப்பு நிலம்
உவர் நிலம் - உப்பு நிலம்
உறையுள் - வசிக்குமிடம்
எழுமை எழு வகைப் பிறப்பு : மக்கள், தேவர், நரகர், மிருகம், பறவை, நீர் வாழ்வன, தாவரம் ஆகியவை.
ஏற்ப - பொருந்த
ஐயம் - சந்தேகம்
ஒப்பிலி - நிகரில்லாதவன்
ஒட்டிப் பேசுதல் - ஆதரித்துப் பேசுதல்
கதிரவன் - சூரியன்
கதிர் - கிரணம்
கதிர்ச் செல்வன் - சூரியன்
கலம்பகம் - தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று
களஞ்சியம் - தொகுதி
கானல்வரி - கடற்கரைப் பாடல்
கீழை நாடு - கிழக்கு நாடு
குழு - கூட்டம்
குறளை - கோள் சொல்லுதல்
கூற்று - சொல்
கொழித்த - புடைத்தெடுத்த
சந்தி - தெருக்கள் கூடுமிடம்
சம்பத்து - செல்வம்
சாடை - குறிப்பு
சாரம் - சத்து
சான்ற - நிறைந்த
சான்று - ஆதாரம்
சான்றோர் - உத்தமர்

சிறுமை - தாழ்வு
செப்பேடு - செப்புப்பட்டயம்
தண்ணளி - கருணை
தாமதம் - காலம் தாழ்த்தல்
திரு - இலக்குமி
திருவோலக்கம் - அரசன் கொலுவிலிருக்கும் காட்சி
திலகம் - நெற்றிக்குறி (மிகச் சிறந்தது)
தூங்கர் - தூய்மையானவர்
நஞ்சு - விஷம்
நாவன்மை - பேச்சு வன்மை
நாவுரி - ஒன்றரை நாழி (நாழி+உரி)
நுணல் - தவளை
பரிதானம் - இலஞ்சம்
பாளையக்காரர் - சிறு நாடுகளின் தலைவர்கள்
பிலிற்றுதல் - சொட்டுதல்
புரவலர் - காப்பவர், ஆதரிப்பவர்
புல்லன் - அற்பன்
பூரித்தல் - மயிர்க்கூச் செறிதல்
பொருமி - பெருமூச்சு விட்டு
மணி - மாணிக்கம், அழகு
மதிநுட்பம் - புத்திக்கூர்மை
மாவட்டம் - ஜில்லா
மீகாமன் - கப்பலோட்டி
முற்றம் - வாயில்
மேல்நாடு - மேற்கு
வறிஞர் - ஏழைகள்
வெட்டிப் பேசுதல் - மறுத்துப் பேசுதல்
வேள் - சிற்றரசர்.